Qb:458w I91
N27
109408

Q6:45 ... N27

அருளும் அன்பும் நிறைந்தொளிரும் தூய இரக்காக்கினிச் சூளையான உமது திரு இருதயத்துக்கு, என் நேச சேசுவே, அன்பின் ஓர் சிறு காணிக்கையாக இப்புத்தகத்தை ஒப்புக்கொடுக்கின்றேன். அன்பாய் இதனைக் கையேற்று ஆசீர்வதித்தருளும்.

*Revised and enlarged edition.*

CUM PERMISSU SUPERIORUM.

Imprimatur:

✠ A. FAISANDIER, S.J.,
*Bishop of Trichinopoly.*

109408

B

No. 4 - OCT 1927 MADRAS

## 2-ம் பதிப்பின் முகவுரை.

தமிழ் நாடெங்கும் — உலகெங்குமே — பிரசியாதிபெற்ற தத்துவபோதகர் எனும் புகழ் நாமம் சூட்டப்பெற்ற தே நொபிலி (Dė Nobili, S. J.) என்ற சேசுசபை சற்குரு இத்தாலியாவிலிருந்து கோவை நகர் வந்திறங்கினது கி. பி. 1606-௵. ஆயின், சத்தியமறைப்போதகராய் அவர் நம் இந்தியாவுக்கு விஜயம் செய்த மூன்றாம் நூற்றாண்டு திகையாநின்ற சுபவருஷமாம் கி. பி. 1906-௵! அவ்விசேஷத்தின் ஞாபகார்த்தமாக, சேசுசபை ஸ்தாபகன் அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருடைய ஜீவிய சரித்திரம் ஒன்று தமிழ்ப்பாஷையில் பிரசுரமாகவேண்டுமென்று வெகு வாஞ்சையுற்றவராய் நம்மை விரும்பிக் கேட்டனர்,—அது சமயம் திருச்சி கலாசாலை சிரேஷ்டராயிருந்த சங். Leo Besse, S. J., என்ற சிங்கராயர் சுவாமியவர்கள். இருவகையில் நமக்கு அருமை ஞானத்தந்தையரான அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரின் ஜீவிய விருத்தாந்தங்களை இலத்தீன் இங்கிலீஷ் பிரஞ்சு பாஷைகளில் பாலியமுதல் ஆவலாக வாசித்து, அநேக விஷயங்கள் நமது சிந்தையிலும் மனப்பற்றுதலிலும் மனோரஞ்சிதமாய் ஊன்றி உருவமைந்திருந்தபோதிலும், ஞான ஜீவியத்தின் சொல்லரிய மகத்

துவ மாட்சிமை நிறைந்தோளிரும் இம்மகாத்துமாவின் அற்புத சரிதையை, அப்பொழுது இன்னும் குருத்தத்துவ தீட்சைபெறாத புல்லறிவாளன் யான் எவ்வண்ணம் எழுதத் துணிவதென்று, வெகுவாய் மனதில் அஞ்சித் திகைத்தோம். ஆயினும், புல்லறிவாளன் மாணிடன் புத்திக்குப் பிரகாசமும் அவன் மனதுக்குத் திடனும் அநுக்கிரகித்தருளும் திவ்விய இஸ்பிரீத்துவானவரின் திருவருட்கிருபையை நம்பி, சிரேஷ்டருடைய ஆவல் நோக்கத்துக்கு இணங்கித் துணிந்த கருமம் அப்பொழுதே முடிவுபெற்றது.

சுமார் இருபது வருஷங்களுக்குமுன் முதல் முதல் பிரசுரமான இப்புத்தகத்தின் இந்த இரண்டாவது பதிப்பில், ஆதியோடந்தம் ஆழ்ந்து பரிசோதித்தும், சரித்திர உண்மை விஷயமாய்த் திருத்தவேண்டிய பிழையாதும் நமக்குத்தென்படவில்லை. ஆனால், வாசிக்கும் நண்பர்களுக்கு அதிக எளிதாக இருக்கும்படி, வாக்கு வசனங்களில் ஆங்காங்கு பல திருத்தங்கள் மாற்றங்கள் செய்திருக்கிறோம். மேலும், முந்தின பதிப்பில் எடுத்துரைக்கத் தவறின சிற்சில விசேஷங்கள் இந்த 2-ம் பதிப்பில் உட்சேர்த்தமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வண்ணம், முந்தின பதிப்பிலும் இப்புதுப்பதிப்பு அதிகச் சிறந்ததாயிருக்கும்படி, நம்மால் இயன்றவாறு நாம் வருந்திப் பிரயாசப்பட்டிருந்தும், வாக்கு வசனங்களில் ஆங்காங்கு இன்னும் குறைகள் காணப்படலாம். அவ்வாறு சொற்சாதுரியக் குறை



வுகள் ஏதேது காணப்பட்டபோதிலும், இச்சரித்திரத்தைக் கவனித்து வாசித்தல், தெய்வச்சாயலாய் நித்திய பேரின்ப தேவ தரிசன ஜீவியமே பரம கதியாக சிருஷ்டித்திரட்சிக்கப்பட்ட மானிடனின் புத்திமனஜீவியத்திற்கு பேறும் பலனும் சுகிர்தமும் தரும் ஞான ஜீவியத்தில் நல்விருத்தி அடைவதற்கு, வெகு உதவியாயிருக்குமென்பது, தேவாநுக்கிரகத்தில் நமது பூரண நம்பிக்கை! இஃதொன்றையே பிரதானமாகக் கருதி இச்சரித்திரத்தை ஆதியில் எழுதத்துணிந்தோம்,—இப்பொழுது நம்மால் இயன்றமட்டும் சீர்திருத்தி இரண்டாவது பதிப்புக்குக் கையளித்தோம். தேவ மகத்துவத்துக்கு உகந்த சிறு பாதகாணிக்கையாயிருப்பதாக!

இங்ஙனம்,

**சேசுசபை, வி. மரிய இஞ்ஞாசியார்.**

(தேன்மேனி—சாத்தூர்),
அர்ச். இஞ்ஞாசியார் திருஸ்தலம்
1927-ம் ௵ ஜூலை-௴, 7-உ.

## முதற்பதிப்பின் முகவுரை.

மனுமக்களைக்கொண்டே மனுக்குலத்துக்கு எண்ணிறந்த நன்மை உபகாரங்களை அளித்தலும், தமக்கு உகந்த ஒரு தாசனைக்கொண்டு தலைமுறை தலைமுறைக்கும் எண்ணிறந்த ஆத்துமாக்களை இரட்சித்தலும், சர்வாதி கர்த்தரது திவ்விய பராமரிப்பின் விசேஷமாம்! இஸ்பானிய தேசத்தில் உயர் குலத்தில் பிறந்து வளர்ந்து, பல வருஷகாலம் தம் உள்ளத்தை ஆட்கொண்டிருந்த வீண்பெருமை எனும் உலக மாய்கையின் பாச பந்தனங்களை, திவ்விய இஸ்பிரீத்துவின் விசேஷ அருட்பிரசாதத்தால், பற்றற அறுத்து நீக்கி, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம் ஒன்றைமாத்திரம் தன் சர்வ சக்தியுடன் நாடித்தேடும் உத்தம தூய தேவ நேசத்துக்கு தம்மை முற்றும் வசீகரம் செய்து, மன்ரேசாவில் ஒரு வருஷகாலம் அருந்தவஞ்செய்து, உன்னத ஞான வரங்களடைந்து, ஆச்சரியமான மனவூக்கமுடன் முப்பது வயதுக்குமேல் பாலகர்களுடன் பாடசாலைக்குப் போய் இலத்தீன் இலக்கணங்கற்று, முப்பத்தேழு வயதில் பாரீஸ் நகருக்குச் சென்று, ஏழு வருஷகாலமாய் அங்கு தத்துவ சாஸ்திரமும் தேவசாஸ்திரமும் பயிற்சி செய்து, உரோமையில் சேசுசபையை ஸ்தாபித்து, பதினைந்து வருஷகால

மாய் அருமையான ஞான விவேக விமரிசையுடன் அச்சபையை ஆண்டு நடத்தி ஸ்திரப்படுத்தி, அறு பத்தைந்தாம் பிராயத்தில் பரமபதவியடைந்த **அர்ச். லொயோலா இஞ்ஞாசியார்** வழியாய் சர்வேசுரன் மனுக்குலத்துக்கு எக்காலத்துக்கும் அளித்துவரும் எண்ணிறந்த வரப்பிரசாதங்கள், ஒவ்வொருவருடைய பேறுபலன்களும் பிரசித்தமாய் அறிக்கையிடப்பட்டு சம்பாவனைபெறும் அந்த **மகாநாளில்**தான் தெரியவரும். அவரால் மனுக் குலத்துக்கு நிகழ்ந்த பேருபகார நன்மைகளுக்கு, அவர் ஸ்தாபித்த **சேசுசபை**யும், அவர் இயற்றித் தந்த '**ஞானமுயற்சிகள்**' என்னும் அற்புத நூலுமே போதுமான திருஷ்டாந்தம்.

பார்த்தொலிசுவாமியார் சொல்லியிருக்கும் பிரகாரம், ஆரியானிகள் என்ற பதிதர்களுக்கு எதிரிடையாக **அர்ச். அத்தனாசியாரை**யும், பெலாஜியர், மனிக்கேயர் என்பவர்களுக்கு எதிரிடையாக **அர்ச். அகுஸ்தீனை**யும், நெஸ்தோரியர்களுக்கு எதிரிடையாக **அர்ச். சிரில்** என்பவரையும், ஆல்பிஜென்ஸர்களுக்கு எதிரிடையாக **அர்ச். பிராஞ்சீஸ்கு அசிஸி** (அர்ச். ஐந்துகாய பிராஞ்சீஸ்கு) **அர்ச். சாமிநாதர்** என்பவர்களையும் திருச்சபைக்குத் தந்தருளிய சர்வேசுரன், லுத்தேர் கல்வீன் முதலிய பதிதர்களுக்கு எதிரிடையாக **அர்ச். இஞ்ஞாசியாரை**த் தந்தருளினார். இதற்கிசைய, லுத்தேர், உவோர்ம்ஸ் (Worms) என்னும் பட்டணத்தில் சங்கமாய்க்

E



கூடிய திருச்சபை ஞான அதிகாரிகளுடைய கட்
டளையைப் பிரசித்தமாய் அவமதித்து மீறி, பதிதக்
கொள்கையில் மூர்க்கமாய் நிலைநின்று, அநேக ஆத்
துமாக்களுக்கு இடறலாகத் துறவற அந்தஸ்தின்
பரிசுத்த வார்த்தைப்பாடுகளை நிந்தித்து தீய புஸ்
தகம் ஒன்று எழுதும்படி, ஆல்ஸ்த்தாத் (Alstadt)
என்ற இடத்தில் ஏகாந்தம் புகுந்த காலத்தில்,
அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் மோன்செராத்
மலை தேவாலயத்தில் கன்னித்தாய் திருக்கரத்தில்
தம்மை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு,
சேசுசபைக்கு மூலாதாரமும் அநேக ஆத்துமாக்
களுக்கு இரட்சணியமுமான '**ஞானமுயற்சிகள்**'
எனும் அற்புத நூலை மன்ரேசா கெபியில் எழுத
ஆரம்பித்தார். லுத்தேர் எழுதின தீய புஸ்தகத்
தால், அநேகர் தேவதுரோகமாய் துறவற வார்த்
தைப்பாடுகளை மீறி வெளியேறினார்களென்றால்,—
சந்நியாசிகள் கன்னியாஸ்திரிகள் மடங்கள் பல
பாழானதென்றால்,—அர்ச். இஞ்ஞாசியார் எழுதின
திவ்விய நூலால், அநேகர் உலகத்தைத் துறந்து
தேவ ஊழியத்துக்குத் தங்களை முற்றும் கையளி
க்க, பாழாய்க் கிடந்த பல மடங்கள் திரும்பச்
செழித்துத் தழைக்கலாயின. அன்றியும், கல்வீன்
பாரீஸ் நகரில் தன் பதித விஷத்தை அநேகர் நெஞ்
சில் கபடமாய்ப் புகட்டி, சீஷர்கள் தேடிக்கொண்
டிருந்த காலத்தில், அதே நகரில் அர்ச். இஞ்ஞாசி
யார், முத். பாபர் இராயப்பர், அர்ச். பிராஞ்சீஸ்கு

சவேரியார் முதலிய நமது முதற்குருமார்களை சர்வேசுரன் பாரிசமாய் இழுத்து, தம் இருதயத்தில் பற்றியெரிந்த தூய தேவசிநேகாக்கினியை அவர்கள் இருதயங்களிலும் பற்றியெரியச் செய்து வந்தார். இன்னும், கொடுங்கோலன் எட்டாவது ஹென்ரி இங்கிலாந்து தேசத்தை அர்ச். பாப்பானவருடைய ஞான அதிகாரத்தினின்று பிரிக்கும்படி, கொடிய இராஜ சட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதை மீறுகிறவர்களுக்கு சிரசாக்கினையென்று பிரசித்தப்படுத்திய அதே வருஷத்தில் (1534), அர்ச். இஞ்ஞாசியார் 'மோமார்த்தர்' என்னும் வேதசாட்சிகள் மலைமேல், துறவற அந்தஸ்துக்கு வேண்டிய மூன்று வார்த்தைப்பாடுகளுமன்றி, நாலாவது வார்த்தைப்பாடாக திருச்சபைத் தலைவருக்கு வீரத்தன்மையான ஓர் விசேஷித்த கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடும் அமைந்த சந்நியாச சபை ஒன்றின் அஸ்திவாரமிட்டார்.

பதித மாய்கையால் ஐரோப்பாவில் விளைந்த தீவினைகளைப் பரிகரித்து, அநேக ஆத்துமாக்களை காத்திரட்சிப்பதற்காக மாத்திரமன்று, இன்னும், அஞ்ஞான இருள் அடர்ந்த அநேக பிரதேசங்களில் சத்தியமறையின் திரு அருள் ஒளி உதயமாய்ப் பிரகாசித்துத் துலங்கச் செய்வதற்காகவும், சர்வேசுரன் அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை உலகத்துக்குத் தந்தருளினார். அப்படி அவர் வழியாய் சத்தியமறையின் அருள் ஒளி அடையும் அதிர்ஷ்டம்



பெற்ற எத்தனையோ இராஜ்யங்களுள், நமது இந்து தேசமும் ஒன்று.

இரட்சண்ணிய ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில், திருச்சபைக்குத் தலைவராயிருந்த அர்ச். பெரிய கிரகோரியார் என்னும் பாப்பானவர் இங்கிலாந்து தேசத்தை எப்பொழுதாகிலும் பார்த்ததியார். ஆயினும் அர்ச். அகுஸ்தீன் என்பவரைத் தெரிந்தனுப்பி, அவர் வழியாய் சத்தியமறை அங்நாட்டில் ஸ்திரம் பெற்று விளங்கும்படி செய்ததினால், அர்ச். அகுஸ்தீன் மாத்திரமல்ல, அர்ச். கிரகோரியாரும் இங்கிலாந்து தேசத்து அப்போஸ்தலரென்று கூறப்படுகிறார். உரோமையில் தம் சிற்றறையிலிருந்து சேசுசபையை ஆண்டு நடத்தி வந்த அர்ச். இஞ்ஞாசியார், நமது இந்துதேசத்தை எப்பொழுதாகிலும் கண்டறியார், நிசம்தான். ஆனாலும் நமது இந்துதேசத்தில், விசேஷமாய் இத்தென்னிந்தியாவில், சத்திய வேதம் விளங்கச் செய்த அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரை சர்வேசுரன் பாரிசமாய்த் திருப்பி, ஞான சேயத்தில் வளர்த்து, நமது நாட்டுக்குத் தெரிந்தனுப்பினவர் அர்ச். இஞ்ஞாசியாரன்றோ? ஆயின், அர்ச். சவேரியார் இந்துதேசத்து அப்போஸ்தலர் என்றழைக்கப்படுகின்றாரேயாகில், அவருடைய அருமைத் தந்தை அர்ச். இஞ்ஞாசியாரும் அவ்விதமே அழைக்கப்படுதல் நியாயமன்றோ? அன்றியும், சேசசபை ஸ்தாபகம்பெற்ற நாள்முதல், இந்நாள் வரை

அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானப் புத்திரர்கள் தொடர்வுபிரியாமல் இந்தியாவில், ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக அபிவர்த்தி செய்து உழைத்துவருதல் யாவருக்கும் தெரிந்த விஷயமே.

இவ்விதம் இந்நாட்டில் எண்ணிறந்த ஆத்துமாக்கள், தலைமுறை தலைமுறைக்கும் சர்வேசுரனுடைய திருவருள் அடைந்து ஆசீர்வதிக்கப்படுவதற்கேதுவாக, தேவதிருவுளத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்தப் பெரிய அர்ச்சியசிஷ்டவருடைய அற்புத சீவிய வரலாறுகளையும்; தேவ அருள் நிறைந்து துலங்கின அவரது தூயாத்துமாவின் சிறந்த இலட்சணங்களையும் எடுத்துரைக்கும் சரித்திரம் யாதேனும் இது காலம் தமிழ்ப் பாஷையில் பிரசுரமாகாதிருந்தது ஓர் பெருங்குறையே.

இக்குறையை ஒருவாறு பரிகரிக்க வேண்டுமென்ற ஆவலினாலும், அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருடைய சீவிய விருத்தாந்தங்களை நன்மனதுடன் வாசித்தறியும் இருதயங்களில் தெய்வ பக்தி, தெய்வ நேசம் வர்த்திப்படையாமற் போகுதல் அருமை என்று, எம் உள்ளத்தில் ஸ்திரமாயிருக்கும் நம்பிக்கையினாலும் தூண்டப்பட்டு, அர்ச்சியசிஷ்டவர் மரணமடைவதற்கு ஒரு வருஷத்துக்கு முன், லூயிஸ் கொன்சாலஸ் என்னும் சுவாமியார் அர்ச்சியசிஷ்டவருடைய சீவியத்தைப்பற்றி அவர் வாய்மொழியாலேயே தாம் அறிந்துகொண்டதை



அறிந்துகொண்டபடி எழுதித் தந்திருக்கும் அருமையான சிறு பிரபந்தத்தையும், ஐரோப்பிய பாஷைகளிலுள்ள வேறு பல சிறந்த சரித்திரங்களையும் கருத்தாய் வாசித்து, ஒவ்வொரு விஷயத்தையும் நம்மாலியன்றமட்டும் திட்டப்படுத்தி, தெய்வசகாயத்தை முன்னிட்டு இச்சரித்திரத்தைத் தமிழில் புதிதாய் எழுதித்தர எத்தனித்தோம். எடுத்த சிரமம் இனிது முடிய அநுக்கிரகம் செய்த நித்திய நேசமாகிய சர்வேசுரன், தமது திவ்விய மகத்துவத்தின் அதிமிக தோத்திரத்துக்கு இப்புத்தகம் அநுகூலமாயிருக்கும்படி கிருபை செய்யவேண்டும்!

F. M. I., S. J.

1906-ம் வருஷம் நவம்பர்-மீ 1உ
சகல அர்ச்சியசிஷ்டவர்களின் திருநாள்.

# பொருள் அடக்கம்.


| அதி. | பொருள். | பக்கம். |
|---|---|---|

முதற்பாகம்.

1 அர்ச். லோயோலா இஞ்ஞாசியார் பிறந்து வளர்ந்தது—அவரது சுபாவ இலட்சணங்கள்-பம்பலூனு கோட்டை மதில் மேல் காயப்பட்டநுபவித்த நெடுநாள் துன்பம்—இந்நாட்களில் தேவ அருட் பிரசாதம் அவர் ஆத்துமத்தில் நிறைவேற்றிய அற்புத மாற்றம்—அநேக வருஷகாலமாய் தம்மை ஆட்கொண்டிருந்த வீண் பெருமை என்னும் உலக பாச பந்தனங்களை அறுத்தெறிந்து, தேவ நேசத்துக்கு தம்மைக் கையளிக்கிறார்—அருமையான அதிர்ஷ்ட வரம்...

2 இஞ்ஞாசியார் லொயோலா மாளிகையை விட்டுப் புறப்படுதல்—தமயன் கார்சியா பிரபு கொண்ட ஐயம்—லொயோலா மாளிகை காலாகாலத்தில் அடைந்த மேன்மை—புண்ணிய சாங்கோபாங்க நெறியில் புதிதாய்ப் பிரவேசித்த போர் வீரர்—பரிசுத்த கன்னிகையை நிந்திக்கத் துணிந்த மகம்மதியன் தப்பிப் பிழைத்தது—மோன்செராத் மலை—அருளப்ப முனிவர்—பொதுப் பாவசங்கீர்த்தனம்—'யுத்தாயுத நோன்பு'—

| அதி. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | "நன்மைசெய்ய விரும்பியும், இன்மை நேர்ந்தது" — மன்ரேசா — அகிநேஸ் பாஸ்காலம்மாள்-தேவதாயார் தரிசனம் —கடுந் தபம்—சுபாவ மேட்டிமையின் நிக்கிரகம் ... ... ... | 29 |
| 3 | மன்ரேசா கெபி—துஷ்ட அரூபியின் பற்பல கபட தந்திரங்கள்-மனச்சோர்வு —(Scruples: ஸ்க்ரூப்ல்ஸ்) என்று சொல்லப்படும் "வீண் சந்தேகம்" என்னும் கொடும் தீ—கடைசியாய் அவர் ஆத்துமம் ஆறுதலும் அமரிக்கையுமடைந்தது—பசாசின் தந்திர மாய்கைகளால் வருந்துபவர்களை நடத்துவதில் தேர்ந்த ஆசிரியன் ... ... | 57 |
| 4 | அற்புத வரங்கள்:—விசுவாச சத்தியங்களை அர்ச்சியசிஷ்டவர் புத்திக்கு துலக்கிக் காட்டிய அற்புத பிரகாசம்—வஞ்சக சர்ப்பத்தின் மாயா ரூபம்—அர்ச். தமதிரித்துவ பரம இரகசியம்—எட்டுநாள் பரவசம்—அகத்தின் அழகு முகத்தில் தோயுட் - அர்ச்சியசிஷ்டவர் மீது ஜனங்கள் இருதயத்தில் உண்டான பூஜித வணக்கம்—அடிக்கடி திவ்வியநற்கருணை அருந்திவரும் வழக்கம் அவரால் திரும்ப ஏற்பட்டது—தபமுயற்சிகளில் அநுபவத்தால் அடைந்த விமரிசை—விவேகம் ... ... | 74 |



| அதி. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 5 | 'ஞான முயற்சிகள்' என்னும் அற்புத நூல் ... ... ... | 90 |
| 6 | இஞ்ஞாசியார் மன்ரேசாவை விட்டுப் புறப்பட்டது—அர்ச்சியசிஷ்டவர் தங் களை விட்டுப் பிரிந்துபோவதை நினைத்து மன்ரேசா ஊரார் பட்ட சிந்தாகுலம்—விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம். என்னும் இம்மூன்று புண்ணியங்களைத் தவிர வேறு துணை ஆதாரம் வேண்டா மென்று தள்ளிவிடுகிறார்—பார்சலோ ணு—இஸபேல் ரோசர் என்னும் சீமாட் டிக்கு அர்ச்சியசிஷ்டவர் அற்புதமாய் அறிவிக்கப்பட்டது-சந்தேக நிவர்த்தி-உரோமை—உரோமையிலிருந்து வேனீ ஸக்குப் போகும் வழியில் பட்ட அவஸ் தைகளும், சர்வேசுரன் அவருக்களித்த விசேஷ ஆறுதல் சகாயங்களும்—மார்க் அந்தோணியோ நித்திரையிற்கேட்ட அற்புத குரற்சத்தம்—கப்பற்கார ருடைய அயோக்கிய நடத்தையைக் கண்டித்தது—கப்பற்காரருடைய சதி ஆலோசனை விழலாய் முடிந்தது— ... ... | 123 |
| | ஜெருசலேம் ... | |
| 7 | இஞ்ஞாசியார் ஜெருசலேமைவிட்டுப் புறப்பட்டது-வேவுகாரனென்று பிடிக் கப்பட்டது-சிறுவர்களுடன் இலத்தீன் பாஷை படிக்க ஆரம்பிக்கிறார்—படிப் புக்கு விக்கினமாக சாத்தான் செய்த | |

அதி. பொருள். பக்கம்.

தந்திரம் — சீர்கேடாயிருந்த கன்னியர்கள் மடம் ஒன்றை சீர்திருத்தியது — அதனால் அவருக்கு நேர்ந்த உபத்திரவங்கள் — மிக்கேல் ரோதிஸ் — ஜாண் பாஸ்கால் ... ... ... 141

8 அல்காலா — அங்கு அவர் நடத்திய தர்மக்கிரிகைகள் - ஓர் வாலிபப் பிரபுவை நல்வழி சேர்த்தது — இடையூறுகள் — வேத விசாரணைக் கர்த்தாக்கள் அர்ச்சியசிஷ்டவருக்கு அநுகூலமாய் செய்த தீர்ப்பு — சிறைக்கூடத்துக்குக் கொண்டு போகப்பட்டது — அதிசய சம்பவம் — அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் — அநீத தீர்ப்பு — சலமான்காவுக்கேகுதல். 159

9 சலமான்கா — அர்ச். சாமிநாதர்சபை மடத்தில் விருந்துக்கழைக்கப்பட்டது — மடாதிபதிக்கும் அர்ச்சியசிஷ்டவருக்கும் நடந்த சம்பாஷணை — கடுஞ்சிறை — பாரீஸ் பட்டணத்துக்கு பயணம் — கலிஸ்தோ முதலியவர்கள் ... 178

10 **பாரீஸ்நகர்-கலாசாலை** — வீரத்தன்மையான பிறர்சிநேகக் கிரிகை — பற்பல துன்பங்கள் — அர்ச்சியசிஷ்டவர் தம் தமயனுக்கு எழுதிய நிருபம் — தேவசாஸ்திரத்தில் அரைவாசித் தேர்ந்தவன் — பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காக அர்ச்சியசிஷ்டவர் பிரயோகித்துவந்த சுகிர்த உபாயங்கள் ... ... 191



அதி. பொருள். பக்கம்.

11 **சேசுசபையின் அஸ்திவாரம்** — அர்ச். இஞ்ஞாசியாருடைய முதல் தோழர்கள் — முத். பாபர் இராயப்பர் — அவர் பட்ட சோதனைகள் — நமது இந்துதேசத்து அப்போஸ்தலராகிய அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் — இஞ்ஞாசியாரை ஒருவன் இரகசியமாய்க் கொல்லத்தேடியது — சவேரியார் இஞ்ஞாசியாரைப்பற்றி தன் தமயனுக்கு எழுதிய கடிதம் — ('Montmartre') என்னும் "வேதசாட்சிகள் மலைமேல்" நடந்த விசேஷம் — முதல் வார்த்தைப்பாடு — இஞ்ஞாசியார் தன் ஜென்ம நாட்டுக்குப் பயணப்படுதல் ... 216

இரண்டாம் பாகம்.

1 இஞ்ஞாசியார் பாரீஸ் நகரத்தைவிட்டு தமது ஜென்ம நாட்டுக்குப் புறப்பட்டது — அரிய தாழ்ச்சி - **ஆஸ்பெய்ஷா ஊரில்** அவர் செய்த நன்மைகள் - புதுமைசெய்யும் வரம் — **பொலோஞாவுக்குப்** போகும் வழியில் நேர்ந்த பெரும் ஆபத்து — **பொலோஞா — வேனீஸ் — டீய்யகோ ஹோஸஸ்** ... ... ... 239

2 பாரீஸிலிருந்த அர்ச். இஞ்ஞாசியாருடைய தோழர்கள் ஒன்பதுபேருடைய பிரயாணம் — அர்ச். சவேரியார் செய்த அருந்தவமுயற்சியும், தேவகிருபாகடாட்சத்தின் அற்புத சகாயமும் — பதித

| அதி. | பொருள். | பக்கம். |
| --- | --- | --- |

மார்க்கத்தாலுண்டான அநீத கொடுமைகள்—தங்கள் அருமைத்தந்தையை திரும்பக் கண்ணோக்கிய மைந்தர்—தம் அருமை மைந்தரைத் திரும்பக் கண்ணோக்கிய தந்தை—குருப்பட்டம்—ஏகாந்த சீவியத்தின்மேலுள்ள மிஞ்சிய பற்றுதலால் ரொதிரிகேஸ் சுவாமியார் பட்ட சோதனை ... ... ... 252

3 பற்பல இடங்களுக்குப் பிரிந்துபோகுதல்-உரோமாபுரிக்கருகில் அர்ச்சியசிஷ்டவர் கண்ட அருமையான அற்புத தரிசனம்—அர்ச்சியசிஷ்டவருடைய ஞானப்புத்திரர்களில் முதல்முதல் பரலோகம் சென்றவர்—பிரிந்துபோனவர்கள் திரும்ப ஒன்று கூடுதல்—கொடிய கலாபம் ... ... ... ... 269

4 **சேசுசபை அர்ச். பாப்பானவருடைய அங்கீகாரம் பெற்று பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது**—ரிபதனீரா-அவருடைய சுபாவ இலட்சணங்கள்—அவர் சேசுசபையில் உட்பட்டது—அர்ச். இஞ்ஞாசியாருடைய நீடிய சாந்தமும், தயை தாட்சணியமும் ... ... ... 286

5 அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபைக்கு **'ஜெனரால்'** (General) என்று சொல்லப்படும் **அதிபதி சிரேஷ்டராகத்** தெரிந்துகொள்ளப்பட்டது— நியமச்சீட்டுகள்—கடைசி வார்த்தைப்பாடு—கொதூரி

K



| அதி. | பொருள். | பக்கம். |
| --- | --- | --- |

யுஸ் சுவாமியார் மரணம்—அர்ச்சியசிஷ்டவர் செய்த ஞானோபதேசம்—அர்ச். சவேரியார் இந்துதேசத்துக்கு அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டது ... ... ... 302

6 அர்ச். இஞ்ஞாசியார் **சேசுசபை ஏற்பாட்டொழுங்குகளை** எழுதிய முறை—அர்ச்சியசிஷ்டவருடைய அநுதின சீவியம்—திவ்விய பூசை—வியாதியஸ்தர் மட்டில் அவர் அன்புற்றெடுத்துவந்த கவலை—அவரிடத்தில் விளங்கின புண்ணியங்கள்—நன்றியறிதல்—தாழ்ச்சி—தேவசிநேகம், பிறர்சிநேகம்—உன்னதமான தேவநம்பிக்கை—என்றும் மலர்ந்த முகம் ... ... ... 324

7 **அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபையில் தம் மக்களை நடத்திவந்த விதம்**—சோதனைப்படுகிறவர்கள்மீது அவருக்குள்ள தயைதாட்சணியம்—விமரிசை நிறைந்த கண்டனை—சில்வேஸ்தர் சுவாமியார்—அர்ச்சியசிஷ்டவர் போதித்துக் கற்பித்துவந்த **புத்தி மனக்கீழ்ப்படிதல்**—அவர் தாமே அதை உத்தமமாய் அநுசரித்துவந்தது—சம்பூரண சுயமன பரித்தியாகம்—லேய்னஸ் சுவாமியார்-ரிபதனீரா—அவர் செய்த முதற் பிரசங்கம்-ஞானசீவியத்தில் அவருக்கு நேர்ந்த பெரும் ஆபத்து ... ... ... 355

| அதி. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 8 | **அர்ச். இஞ்ஞாசியாருடைய முதற்றோழர்களைப்பற்றிய சில விசேஷங்கள்**—சீமோன் ரொதிரிகேஸ் சுவாமியார்—சில காலம் அவரால் அர்ச்சியசிஷ்டவர் அடைந்த வியாகுலம்—முத். பாபர் இராயப்பர் இத்தாலியா, ஜெர்மானியா, இஸ்பாஞ்ஞியா, போர்த்துகால் முதலிய தேசங்களில் செய்த நன்மைகள்—அவருடைய பாக்கியமான மரணம்—அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியார் சேசு சபையில் உட்பட்டது—ஐர்லாந்து தீவுக்கு அனுப்பப்பட்ட நற்றூதர்கள்—திரிதெந்து நகரில் கூடிய திருச்சபை சங்கம்—இந்துதேசத்து அப்போஸ்தலர் இருதயத்தில் அர்ச். இஞ்ஞாசியார் மீதிருந்த வணக்க நேசம்—அப்போஸ்தலருடைய மரணம் ... ... ... | 403 |
| 9 | தமது கையில் ஒப்புவிக்கப்பட்டவர்களை புண்ணிய சீவியத்தில் நடத்துவதில் அர்ச்சியசிஷ்டவரிடம் விளங்கின அருமையான **ஞான விவேகப் பெருந்தன்மை**—சேசுசபையில் **சிலுவை** என்றும் உயர்த்தப்பட்டிருப்பது—பிரான்ஸ தேசத்திலும் இஸ்பாஞ்ஞிய தேசத்திலும் சேசுசபைக்கு நேர்ந்த துன்பங்கள்—மெல்க்கியோர் கானோ—சோர்போன் சாஸ்திரிகள்—ரிபதனீரா சுவாமியார் பெல்ஜிய தேசத்துக்கு அனுப்பப்பட்டது—சேசுசபையாரில் சிலருக்கு திருச்சபையில் ஞான பிரபுத்வம் அளிக்கும்படி செய்யப்பட்ட பிரயத்தனங்கள்—அர்ச்சியசிஷ்டவர் இதுவிஷயத்தில் செய்துவந்த எதிர் பிரயத்தனங்கள் ... | 446 |
| 10 | தேவ தோத்திரத்தை நாடி அர்ச்சியசிஷ்டவர் செய்த **பரோபகாரப் பேருபகாரங்கள்**—'உரோமன் காலேஜ்'—'ஜெர்மன் காலேஜ்'—கலாசாலைகள் விஷயமாய் நேர்ந்த துன்பங்கள்—பெர்னார்து ஒலிவியர்—பால்யர் பிரயோகிக்கும் புஸ்தகங்கள் விஷயத்தில் அர்ச்சியசிஷ்டவர் செய்துவந்த எச்சரிக்கை—அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலம்—மனந்திரும்பின யூதர்களுக்காக ஏற்படுத்திய தர்மசாலை—**ஜெருசலேம்**—பலஸ்தீன் ... ... ... | 478 |
| 11 | அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் விளங்கின மகா ஆச்சரியமான **தேவநேச ஒன்றிப்பு**—ஆத்தும சோதனை—என்றும் தேவசந்நிதியைச் சிந்தித்த ஜீவியம்—உத்தம தேவசிநேகம் அடையும்படி அவர் உண்டுபண்ணி ஜெபித்துவந்த உன்னத ஜெபம்—முகத்தில் துலங்கிய அற்புத காந்தி—தேவநேச ஒன்றிப்பின் மகா ஆச்சரியமான ஓர் அந்தஸ்து—நேசக் கண்ணீர்—நாற்பதுநாள் ஞாபகக் குறிப்புகள்—**அர்ச். தமதிரித்துவம்**— | |

| அதி. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | தேவசிநேகமும் பிறர்சிநேகமும் ஒன்றுக்கொன்று உதவியாயிருத்தல்—பரலோக ஏக்கம் ... ... ... | 504 |
| 12 | அந்தியகாலம்—முடிசூட்டல் ... | 538 |
| 13 | அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் வழியாய்ச் சர்வேசுரன் செய்தருளிய அநேக புதுமைகளில் சிலவற்றின் வரலாறு ... ... ... | 584 |
| முடிவுரை | ... ... ... | 619 |
| | அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருக்கு ஸ்தோத்திரமாக திருச்சபையால் நியமிக்கப்பட்ட பிரார்த்தனை ஜெபம் ... ... | 625 |
| | அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி வேறு ஜெபம் ... ... | 626 |
| | விஷபேதி யகல அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம் ... ... | 627 |
| | இந்துதேசத்திலிருந்த அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் உரோமையிலிருந்த தம் அருமைத் தந்தை அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை உள்ளத்தில் சிந்தித்து செய்த ஜெபம் ... | 628 |
| | அர்ச். இஞ்ஞாசியார் பிரார்த்தனை ... | 628 |
| | அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் பேரில் கீர்த்தனை ... ... ... | 633 |
| | அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருடைய சரித்திரத்தின் பிரதான விஷயங்களின் தெய்திகள். ... ... ... | 635 |



சேசுசபையை ஸ்தாபித்தவரான

அர்ச். லொயோலா இஞ்ஞாசியார்.

# முதற்பாகம்.

## 1-ம் அதிகாரம்.

**அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் பிறந்து வளர்ந்தது—அவரது சுபாவ இலட்சணங்கள்—பம்பலூனா கோட்டை மதில்மேல் காயப்பட்டநுபவித்த நெடுநாள் துன்பம்—இந்நாட்களில் தேவ அருட்பிரசாதம் அவர் ஆத்துமத்தில் நிறைவேற்றிய அற்புத மாற்றம்—அநேக வருஷகாலமாய் தம்மை ஆட்கொண்டிருந்த வீண் பெருமை என்னும் உலகபாச பந்தனங்களை அறுத்தெறிந்து, தேவ நேசத்துக்கு தம்மைக் கையளிக்கிறார்.—அருமையான அதிர்ஷ்ட வரம்.**

### 1491—1522.

அப்போஸ்தலராகிய அர்ச். சின்ன யாகப்பரால் முதல் முதல் ஞானதீட்சை பெற்று, அந்நாள்

முதல் இந்நாள்வரை சத்தியமறை அநுசாரத்தைக் கைவிடாது, இராஜ்ஜியங்களும் இராஜ கோத்திரங்களும் பதித மாய்கையால் மதிமயங்கி திருச்சபையினின்று சிதறுண்டுபோன அக்காலங்களிலும், விசுவாசத்தில் சற்றும் தடுமாறாது ஒரே உறுதியாய் நீடு நிலை நின்று வரும் கத்தோலிக்கு இராஜ வமிசக் கொடி கோத்திர முடிமன்னர்களால் தலைமுறை தலைமுறையாய் ஆளப்பட்டு, திருச்சபைக்கு எக்காலமும் சிறந்ததோர் ஆபரணமாக விளங்கும் நன்னாடாம் **இஸ்பாஞியா** என்ற தேசம். ஐரோப்பாவின் தென்பாகத்தில் அகன்று விரிந்து, சமுத்திரத்துக்கு அக்கரையில் ஆப்பிரிக்காக் கண்டத்தை அடுத்து நோக்கியதுபோல் காணப்படும் இந்த இஸ்பாஞியா தேசமானது திருச்சபையில் பெரிது கொண்டாடப்பட்டுவரும் அர்ச்சியசிஷ்டவர்கள் மகாத்துமாக்கள் ஞான சாஸ்திரிகளில் அநேகரை ஜென்மித்த பூமியாகும். இத்தேசத்தின் வடமேற்குத் திசையில் பிஸ்கேயா (Biscay) குடாக் கடலையடுத்து குயிபுஸ்கோவா (Guipuzcoa) என்னும் அழகிய மலைநாட்டில் **ஆஸ்பெய்ஷியா** (Azpeitia) என்னும் சிறு பட்டணத்தையும், அதற்கருகாமையில் **லொயோலா** என்னும் மாளிகையையும் காணலாம். இதுதான் சேசு சபையை ஸ்தாபித்த **அர்ச். லொயோலா இஞ்ஞாசியார்** பிறந்த இடம். அக்காலத்தில் தோட்டந்துரவுகளால் சூழப்பட்டிருந்த இம்மாளிகை இப்பொழுது



சுற்றிலும் நாற்கோணமாய்க் கட்டப்பட்டிருக்கும் சேசு சபைக் கலாசாலைக் கட்டிடங்களுள் பூஜிதமாய்க் காப்பாற்றப்பட்டு வருகின்றது. மாளிகையின் அடிப்பாகம் கற்கட்டிடம், மேற்பாகம் செங்கற்கட்டிடம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில், மேற்சொன்ன லொயோலா கோத்திரத்தவராகிய **பெர்த்ராம்** (Don Bertram Yanez de Añazy Loyola) என்னும் பிரபுவும், பால்து கோத்திரத்தைச் சேர்ந்த அவரது செல்வ மனையாள் **மரீனா** என்னும் மாது சிரோமணியும் (Doña Marina Saenz de Liconay Balda), புத்திர சந்தானப் பேறாக எட்டு ஆண் மக்களையும், ஐந்து பெண் மக்களையும் பெற்று, மேற்கூறிய மாளிகையில் பாக்கியமாய் வாழ்ந்திருந்தார்கள். ஆண் மக்களுள் எட்டாவதாகிய அர்ச். இஞ்ஞாசியார் கர்த்தர் பிறந்த 1491-ம் ஆண்டில் பிறந்தார்.

பிறந்த குழந்தைக்கு அஸ்பெய்ஷியா பட்டணத்திலிருக்கும் அர்ச். செபஸ்தியார் கோவிலில் ஞானஸ்நானம் கொடுத்து **இனிகோ** (Iñigo) என்று பெயரிட்டார்கள். இந்நாமத்தை அர்ச்சியசிஷ்டவர் பிற்காலத்தில் **இஞ்ஞாசியுஸ்** * (Ignatius) என்பதாக

* அர்ச்சியசிஷ்டவர் எழுதிய கடிதங்கள் சிலதுகளில் இனிகோ (Inigo அல்லது Yñigo) என்றும், சிலதுகளில் இஞ்ஞாசியுஸ் என்றும் கையொப்பம் இருக்கின்றது. அவர் இலத்தின் பாஷையில் எழுதிய கடிதங்களிலெல்லாம் இஞ்

மாற்றிக்கொண்டார். பூர்வீக திருச்சபையில் அந்தியோக்கியா பட்டணத்து மேற்றிராணியாராயிருந்து, 110-ம் ஆண்டில் வேதசாட்சிமுடிபெற்ற அர்ச். இஞ்ஞாசியார்மேல் தமக்குள்ள விசேஷ பக்தியின் நிமித்தம் இப்பெயரைத் தெரிந்து கொண்டதாக, அர்ச்சியசிஷ்டவர் தமது ஞானப் புதல்வன் அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியாருக்கு 1546-ம் வரு எழுதிய ஓர் கடிதத்தில் காணப்படுகின்றது.

லொயோலா இஞ்ஞாசியார் இன்னும் சிறுவனாயிருக்கும்போதே அவர் தாயார் மரீனம்மாள் மரணமானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் குழந்தைப் பருவமுதல் தக்க பிராயம் வருமட்டும், தன் பந்துவாகிய மரியா தேகுயேவரா அம்மாள் வீட்டில் வளர்ந்து வந்ததாகத் தெரிகின்றது. தேவபக்தியில் சிறந்தவளாகிய இந்தம்மாளின் கண்காணிப்பில் வளர்ந்துவந்த இஞ்ஞாசியார் தக்க பிராயமடைந்ததும் தன் பந்துவீட்டை விட்டு பெர்தினந்தரசன் அரண்மனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சில காலம் மற்ற பிரபு மக்களோடு இவரும் ஒருவராய் அரசன் அருகிலிருந்து ஏவல் புரிந்துவந்தார். அங்க வடிவும், புத்திநுட்பமும், பெருந்தன்மையும்

---

ஞாசியுஸ் என்றும், 1546-ம் வரு மட்டும் அவர் இஸ்பானிய பாஷையில் எழுதிய கடிதங்கள் ஏறக்குறைய எல்லாவற்றிலும் இனிகோ என்றும் மற்றவைகளில் இஞ்ஞாசியோ (Ignacio) என்றும் இருக்கின்றது.



உடைய பாலியன் **லொயோலா** அதிசீக்கிரம் யாவராலும் மேன்மையும் அன்பும் பாராட்டப்பட்டுவந்தார். ஆயினும் போர்முகத்தில் வீரசூரமாய் சமர்புரிந்து அரும்புகழ் அடையவேண்டுமென்னும் அவாப்பொங்கியிருந்த இவர் மனம், அரண்மனை சுகசீவியத்தின்மீது பிரியங்கொள்ளவில்லை. இவருக்கு இனபந்துவும், **லொயோலா** கோத்திரத்தின்மேல் வெகு அபிமானமுடையவருமான **அந்தோனியோ மன்ரீக்** என்னும் பிரபு, பெர்தினந்தரசனால் இஸ்பானிய தேசத்தோடு புதிதாய்ச் சேர்க்கப்பட்ட நவார் (Navarre) என்னும் நாட்டை அரசனுடைய பிரதிநிதியாக ஆண்டுவந்தார். புதிதாய்க் கைக்கொள்ளப்பட்ட இந்நாடு இன்னும் போர்க்களமாகவேயிருந்தது. இஞ்ஞாசியார், சுமார் இருபத்தாறு பிராயமாயிருக்கும்போது, அரண்மனை சீவியத்தைவிட்டு நீங்கி, மேற்சொன்ன பிரபுவைச் சேர்ந்து, தன்னை சுத்தவீரனாக்குவதற்கு ஏற்ற பயிற்சிகள் யாவும் குறையின்றி கற்பிக்கப்பட்டு, அவைகளில் விரைவாய் தேர்ச்சியுமடைந்துவந்தார்.

மேலும், கௌரவக்குறைவான எண்ணம் யாதுமின்றி, அக்காலத்தில் சுத்தவீரர்களுக்குள் சாதாரணமாய் வழங்கிவந்ததுபோல், வீரசூரமான அரிய செயல்கள் செய்து, உன்னத பதவியிலிருந்த ஓர் உயர்குல மாதால் நன்குமதித்து புகழப்படவேண்டுமென்னும் பேராவலும் இதுசமயம் லொயோலா உள்ளத்தைக் கவர்ந்துகொண்டிருந்தது.

இவ்விதம் வீண் பெருமை என்னும் உலகமாய்கையில் மயங்கி, தேவ தாசர்களுடைய சுகிர்த நெறியின் ஒளியும் ஒழுக்கமும் மங்கி நின்ற அக்காலத்திலும், மனுஷ சுபாவத்தை ஈனப்படுத்தும் அயோக்கியமானது எதுவும் லொயோலா இஞ்ஞாசியாரிடத்தில் காணப்பட்டதில்லையென்பது திண்ணம். மேலும் சத்திய வேத விசுவாசமும், வேதாபிமானமும், தெய்வ பக்தியும் அக்காலத்திலே முதலாய் அவர் உள்ளத்தை ஆட்கொண்டிருந்ததென்பதற்கும் ஐயமேயில்லை. அர்ச். இராயப்பர்மேல் இவர் வைத்திருந்த விசேஷ பக்தியும், அவரை ஸ்துதித்து இவர் எழுதிய ஒரு நெடுங்காவியமும், வேறு சில சிறு செய்யுட்களும், இதற்கு அத்தாட்சி. யுத்தகாலத்தில் தேவாலயங்கள், சன்னியாசிகள் கன்னியர்கள் மடங்கள், தேவாராதனைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மற்றும் ஸ்தலங்கள், வஸ்துக்கள் எதுவுக்கும் போர்வீரர்களால் அவசங்கை நேரிடாதபடி வெகு விழிப்பாயிருந்ததாகவும், ஓர் சமயம் சில துஷ்டர்கள் கையில் அகப்பட்டு, வெகு ஆபத்துக்குள்ளாயிருந்த ஒரு குருவானவருக்கு சனுவாகப் போய், அவ்வக்கிரமிகள் கையில் நின்று அவரை விடுவித்ததாகவும் ஒருவர் எழுதிவைத்திருக்கிறார்.

தேவ அருட்பிரசாதத்தின் கதிர் இஞ்ஞாசியார் உள்ளத்தை மூடியிருந்த உலக மாய்கையை நீக்கி, அவர் மனதை முற்றும் மாற்றி, அவரிடத்தில் நிறை



வேற்றிய அற்புத செயல்களை விரித்துரைக்குமுன், அவருடைய உருவத்தையும் சுபாவத் தன்மையையும் சொரூபமாய் எடுத்துக்காட்டும் சில விஷயங்களை இங்கு தொகுத்துரைப்பது நன்கென்றெண்ணுகிறோம்.

வளர்த்தியில் லொயோலா இஞ்ஞாசியார் நடுத்தரமான உயரமுடையவர். மிகச் சுறுசுறுப்பும், நன்றாய் வளைந்து துவண்டுகொடுத்து உடனே நேராய் நிமிரும் பிரம்புபோன்ற தேகக்கட்டும், தேக வலிமையும் வாய்ந்தவர். எவ்வித பிரயாசை வருத்தத்துக்கும் பின்னிடாத மனோற்சாகமும், எவ்வித ஆபத்திலும் அஞ்சாத மனோதைரியமுமுடையவர். உயர்ந்து விரிந்த நெற்றியும், செவ்வையாய் வடிவமைந்த இலட்சணங்களுமுள்ள அவரது முகம் மாநிறமாய் மலர்ந்து தெளிந்திருக்கும். கண்கள் எப்போதும் வெகு பிரகாசமாயிருக்கும். அவைகளில் அவர் அகத்தின் தன்மை பிரதிபிம்பத்தில் விளங்கினாற்போல் தோன்றும். நடை உடை பேச்சுகளில் வெகு திருத்தமும் நாகரீகமுமுடையவர். எது காரியத்தையும் புத்திசாலித்தனமாகவும் சமர்த்தாகவும் செய்தல் அவருக்கியல்பாயிருக்கும். புத்தி நுட்பம், சாதுரியம், நேர்மை, உண்மை, பெருந்தன்மை, எவ்விடைஞ்சலுக்கும் பின்வாங்காது கருதியதை ஊக்கமாய்த் தொடர்ந்து செல்லும் மனவலிமை, ஆண்மை இவையெல்லாம் சுபாவமாக அமையப் பெற்றிருந்தார். அருமையான வீரசூரச்

செயல்கள் செய்து, பெரும் புகழும் பிரக்கியாதியும் அடைய வேண்டுமென்னும் பேராவல் ஒன்றே இச் சமயம் அவர் மனதைப் பிரதானமாய் ஆட்கொண்டு நடத்தி வந்தது. பூமி அதிர அடிபெயர்த்து வைத்து கம்பீரமாய் யுத்தத்துக்கேகும் துரகத்தின் மீதோ, அல்லது சிங்காரமாய் நடனம் செய்து பந்தயம் ஓடும் மட்டக் குதிரையின் மீதோ செவ்வையாய் வீற்றிருந்து, பார்ப்போர் வியந்து கொண்டாட அவைகளை சாதுரிய சாமார்த்தியமாய் நடத்துவது அவருக்கு மகா ஆனந்தமாயிருக்கும். ஈனம், இழிவு என்று தமக்கு தோன்றுவதைத் துவேஷித்துத் தள்ளிடுவார். மேன்மை, மகிமை என்று தோன்றுவதை ஆவலுடன் தேடிச்செய்வார். சிற்சில சமயங்களில் போர் வீரர்களுக்குள் கலகம் நேரிட்டபோது, தன் உயிருக்கு ஆபத்தாயிருந்தாலும், அதைப் பாராது, சிரமமெடுத்து அக்கலகங்களை அமர்த்தினார். வெகு மேட்டிமையும் உரோச குணமுமுடையவர் என்றாலும், தன் கோபத்தை யடக்கி, தனக்கு இடர் செய்தவனை இலகுவில் மன்னித்துவிடுவார். வேத விசுவாசத்துக்கடுத்த பரிசுத்த காரியங்கள்மட்டில் வெகு பயபக்தியுடையவர். இவைகளைப்பற்றி மகா வணக்கத்துடன் பேசுவார். தேவ தூஷணமான வார்த்தை எதுவும் தன் காதிற் கேட்க சகியார். உயிர் பெரிதல்ல, உண்மையே பெரிதென்ற விரதம் பூண்ட சத்தியவந்தன். புகழாசையேயன்றி, பொருளாசை அவர்



மனதைக் கவர்ந்ததில்லை. இயல்பிலேயே உதார குணம் அமையப்பெற்றவர்.

இவ்வளவு மாட்சிமையான இலட்சணங்களையுடைய இவ்வாத்துமா உலக வீண் மகிமையின் அநித்தியத்தை உணர்ந்து நித்திய கடவுளின் திவ்விய நேசத்துக்கு தன்னை முற்றும் கையளிக்கும் காலம் அடுத்து வந்தது.

**பெர்தினந்தரசன்** சிங்காசனம் ஏறுமுன், இஸ்பானியா தேசத்தின் வடபாகமாகிய **நவார்** என்னும் நாடு தனி இராச்சியமாய், தனி அரசனால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் 1512-ம் ௵ பெர்தினந்தரசன் இவ்விராச்சியத்தை மூன்றாம் ஜாண் என்னும் அதன் அரசன் கையிலிருந்து பிடுங்கி, தன் தேசத்தோடு சேர்த்துக்கொண்டார். முன்னமே சொன்னதுபோல், தன் பெயரால் அதை ஆண்டுவரும்படி அந்தோனியோ மன்ரீக் என்னும் பிரபுவை தேசாதிபதியாக நியமித்தார். சிங்காசனத்தைவிட்டுத் துரத்தப்பட்ட அரசனோவென்றால், பிராஞ்சு தேசத்தரசனை சரணமாக அடைந்து, தான் இழந்துபோன இராச்சியத்தைத் திரும்பக் கைப்பற்றும்படி சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். 1516-ம் ௵ பெர்தினந்தரசன் காலமாகி, அவரது குமாரன் ஐந்தாம் கார்லூஸ் என்னும் இளவரசர் தந்தையின் சிங்காசனத்தில் ஏறினார். இராச்சியம் பறிகொடுத்த ஜாண் அரசன் இதுதான்

சமயமென்று பிராஞ்சுக்காரர் உதவியால் படையெடுத்து வந்தார். ஆனால் அபஜெயமடைந்து திரும்ப வேண்டி நேர்ந்தது. ஆயினும் இஸ்பாஞிய தேசம் சில காலமாய் உட்கலகங்களால் பலவீனப்பட்டு சிறுமை அடைந்து சீர்குலைந்திருந்தது. இதை உணர்ந்து ஜாண் என்பவருடைய சந்ததியாராகிய ஹென்ரி என்பவர் திரும்பவும் பிராஞ்சுக்காருடைய சகாயம் பெற்று, அதிசீக்கிரம் நவார் நாட்டிலுள்ள பம்பலூனா என்னும் பட்டணத்துக் கருகாமையில் வந்து முற்றுகை போட ஆரம்பித்தார். யுத்தத்துக்கு வேண்டிய படைகள் சேகரிப்பதற்காக தேசாதிபதி இவ்விடத்தை விட்டுப் போகவேண்டியதாயிருந்தது. தான் திரும்பிவருமட்டும் பட்டணத்தைக் காக்கும்படி மற்ற சேனைத்தலைவர்களோடு லொயோலா இஞ்ஞாசியாரையும் ஒருவராக இவர் நியமித்துப் போனதாகத் தெரிகின்றது.

பட்டணத்தின் மதில்கள் அறை குறையாகக் கட்டப்பட்டிருந்தன. பட்டணத்தைக் காக்க நிறுத்தப்பட்டிருந்த இராணுவமோ வெகு சீர்கேடான ஸ்திதியிலிருந்தது. பீரங்கி, துப்பாக்கி முதலிய யுத்தத் தளவாடங்களும் குறைவாகவேயிருந்தன. இதுவுமன்றி பட்டணவாசிகளின் மனம் பெரும்பாலும் தங்களை முன் ஆண்டுவந்த இராஜ வம்சத்தார் பக்கமாகவே சார்ந்திருந்தது. பிராஞ்சுக்காரருக்கு பட்டணவாசலை உடனே திறந்துவிட ஆத்



திரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதைக்கண்ட இஸ்பாஞிய இராணுவ உத்தியோகஸ்தர்களுள் பெரும்பான்மையோர் அவதைரியமடைந்து பட்டணத்தைவிட்டு அகன்றுபோகத் தலைப்பட்டார்கள். தேசாதிபதி திரும்பிவருமட்டும் எதிரிகளுக்குப் பின்வாங்காமல், பட்டணத்தை எவ்விதமும் காத்து நிற்கவேண்டுமென்னும் தீர்க்கெண்ணம் கொண்டிருந்த லொயோலாவுடைய பெருந்தன்மைக்கு, இவர்களுடைய நடத்தை சற்றும் பொருந்தவில்லை. இவர்கள் நடத்தை சுத்தவீரர்களுக்குத் தகாத கோழைத்தனமென்று, அதைத் தம் உள்ளத்தில் கண்டித்து துவேஷித்தார். துவேஷித்து, தம்மோடு ஒருமனமாயிருந்த சில வீரர்களோடு பம்பலூனா கோட்டையை அடைந்து, கோட்டைத் தலைவனையும் மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி, பகைவரிடத்தில் சமாதானம் கோருவதைவிட்டு, போர்முகத்தில் அவர்களை எதிர்த்து நிற்கும்படி தூண்டினார். சத்துருக்களோ கோட்டையைப் பலமாய் தாக்கி சண்டை தொடுத்தார்கள். இஞ்ஞாசியார் அஞ்சா நெஞ்சராய் கோட்டை மதில்மேல் நின்று, தமது வீராவேசத்தால் தமது உடன் வீரர்கள் நெஞ்சிலும் உரோசம் வருவித்து, சத்துருப் படையணிகள் அத்தனையும் எதிர்த்து போர்புரிந்தார். மதில்கள் சன்னம் சன்னமாய் இடிபட்டுத் தகர்ந்து வீழ்ந்தன. லொயோலா வீரருடைய நெஞ்சுத் துணிவுமாத்திரம் சற்றும் விழவில்லை. மனமக்

கள் அனைவரையும் நடுத்தீர்க்கும் நீதிபராகிய நித்திய கடவுளை ஒரு நிமிஷம் உள்ளத்தில் தியானித்தார். தம் ஆத்துமாவிடத்தில் கணக்குக் கேட்டார். தன் பாவங்களை நினைத்து மனஸ்தாபப்பட்டார். குருவானவர் அருகிலில்லை. என்ன செய்வார்? அருகில் நின்ற ஒரு போர் வீரரிடத்தில் தன் மனதை உறுத்திய மாசுகளை சங்கீர்த்தனம் செய்தார். * சர்வேசுரனைப்பார்த்து மன்னிப்புக் கேட்டார். அதன்பின், கதறி முழங்கும் சிங்கம் போல், மேன்மேலும் அதிக வீராவேசமாய் பகைவரை எதிர்த்து நின்றார். ஆனால் சத்துருக்கள் பிரயோகித்த பீரங்கிக்குண்டினால் ஒரு கால் முறிந்து, மறு கால் வெகுவாய் காயப்பட்டுக் கீழே விழுந்தார். இவர் விழவே கோட்டையைக் காத்து நின்ற இஸ்பானிய இராணுவத்தார் தைரியமும் வீழ்ந்துபோயிற்று. கோட்டையை பிராஞ்சுக்காரருக்குக் கையளித்தார்கள். இது சம்பவித்த 1521-ம் ௵ மே-௴ 21-ம் தேதியாகிய அன்று

* சத்திய விசுவாசம் ஸ்திரமாய் இருதயத்தில் பதியப்பெற்றிருந்த அக்காலத்துக் கிறீஸ்தவப் போர்வீரர்களுள் பலர் போர்க்களத்தில் மரணம் எதிர்நிற்கும்போது, குருக்கள் அருகிலில்லாவிடில், தங்கள் தோழர்களுடன் பாவ அறிக்கை செய்துகொள்ளுவார்கள். இப்படி பாவ அறிக்கையிடுவது இருதய மனஸ்தாபத்துக்கு அநுகூலமும் அடையாளமுமான ஓர் தபக்கிரிகையேயன்றி, பச்சாத்தாபம், பாவசங்கீர்த்தனமென்று சொல்லப்படுகிற தேவதிரவிய அநுமானமல்லவென்றறிக.



தானே, பிராஞ்சு சேனை கோட்டைக்குள் பிரவேசஞ்செய்து எல்லாம் கைவசப்படுத்தின.

ஜெயங்கொண்ட பிராஞ்சுக்காரர் இஞ்ஞாசியாரை யுத்தத்தில் அகப்பட்ட ஓர் கைதியைப் போல் நடத்தவில்லை. அவரிடம் விளங்கிய அஞ்சாத் தைரியத்தையும், மன ஊக்கத்தையும் கண்டு அதிசயித்து, அவர் காயங்களைக்கட்டி, வெகு மரியாதையோடு இரு வாரமாக அவருக்குத் தங்களாலான சிகிச்சையெல்லாம் செய்தனர். இராணுவ உத்தியோகஸ்தர்களும் அடிக்கடி அவரைச் சந்தித்து, அவருடைய சுகக்ஷேமங்களை விசாரித்து உபசரித்து வருவார்கள். இஞ்ஞாசியாரோ காயங்களால் வெகு நோவுற்று படுத்த படுக்கையாயிருந்தாலும், அவர்களைக் கண்டதும் முகம் மலர்ந்து, அவர்களுடன் உற்சாகமாய் வார்த்தையாடுவார். அவர்களை விட்டுப்பிரியும் நாள் வந்தபோது, தன் வாள், கேடயம், தலைச்சீரா முதலியவைகளைத் தமது ஞாபகக்குறியாக அவர்களுக்குக் கொடுத்தார். சுமார் இரண்டு வாரமானபின் ஓர் சிவிகையில் பதனமாய் லொயோலா மாளிகைக்குக் கொண்டுபோகப்பட்டார்.

தந்தை பெர்த்ராம் பிரபு காலமாகி, தமையன் **மார்ற்றின் கார்சியா** (Don Martin Garcia de Loyola) கோத்திரத்தின் தலைவராய் குடும்ப சகிதம் லொயோலா மாளிகையில் வாசஞ்செய்து

கொண்டிருந்தார். இவர் தன் தம்பியின் காயங்களைப் பரிசோதித்து சிகிச்சை செய்யும்படி இரண வைத்தியர்கள் பலரைத் தீவிரமாய் வரவழைத்தார்.

பிரயாணத்தாலுண்டான உலைவினாலேயோ, அல்லது பிராஞ்சு இராணுவத்தில் காயங்களைக் கட்டிய போது நேர்ந்த ஏதோ பிசகினாலேயோ என்னமோ, முறிபட்ட எலும்பு செவ்வையாய்ப் பொருந்தவில்லையென்று காணப்பட்டது. திரும்ப அவ்வெலும்பை ஒடித்து, வேறு சிகிச்சை செய்தாலன்றி, மற்றப்படி இவ்வாலிபப் போர்வீரர் மரணபரியந்தம் முடவராயிருக்கும்படி நேரிடுமென இரண வைத்தியர்கள் கூறினார்கள். மரணபரியந்தம் முடவராயிருக்கவா! உலகின்கண் மிக்க கீர்த்தி பெற்றிலங்கவேண்டுமென்னும் அவாப்பொங்கியிருந்த இவ்வாலிபப் பிரபு இக்குறையை எங்ஙனம் சகிப்பர்! ஆனால் முறிவுபட்டு பொருந்தின எலும்பை செவ்வையாய்ப் பொருந்தச் செய்யும்படி, அதைத் திரும்பப் பலவந்தமாய் ஒடிப்பதென்றால் அற்ப சொற்பமான வாதையல்லவே! மகா கொடிய உபாதனையாச்சே! என்றாலும், எது விஷயத்திலும் மனவலிமை குன்றாத இஞ்ஞாசியார் சற்றுந் திகையாமல் அதற்கும் உடன்பட்டார். ஆனால் முன்னமே போர்முகத்தில் பட்ட காயங்களால் வெகு பலவீனப்பட்டு மெலிவுற்றிருந்த அவர் சரீரம் நவமான இக்கொடிய வாதனையை எவ்விதம் தாளக்கூடும்! வேதனை மிகுதியால் அகோர ஜுரங்கண்டது.



ஊணுறக்கம் குறைந்து பலவீனம் அதிகரித்தது. மரணம் அணுகிவந்ததாகக் காணப்பட்டது. அர்ச். இராயப்பர் சின்னப்பர் திருநாளுக்கு முந்தின நாள், ஜுரம் சற்றும் தணியவில்லை; அவஸ்தையானார். கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் வேண்டுமென்று கேட்டு, அவைகளைப் பெற்று அமரிக்கையாய் மரணத்துக்கு எதிர்பார்த்திருந்தார். நடுச்சாமத்துக்குள் நோயாளியின் ஸ்திதியில் அநுகூலமான மாற்றம் ஏதேனும் கண்டாலன்றி, மரணம் நிச்சயமென வைத்தியர்களும் தீர்த்தார்கள்.

நடுச்சாமத்துக்குள் மெய்யாகவே ஓர் மாற்றம் நேரிட்டது. ஆனால் வைத்தியர்கள் நினைத்த மாதிரியான மாற்றமன்று. அப்போஸ்தலர்களுக்குத் தலைவரான அர்ச். இராயப்பர் தமது பக்தனுக்கு அன்றிரவில் தரிசனையாகி, அவர் மனதைத் தேற்றி அவருக்கு சீக்கிரம் ஆரோக்கியம் உண்டாகுமென்று வாக்களித்தார். அதுமுதல் வியாதியஸ்தருடைய நிலைமை வரவர சீர்பட்டு, பலவீனம் நீங்கி, காயங்களும் அதிசீக்கிரம் குணமாயின.

ஆபத்து நீங்கி சொஸ்தமடைந்தார், நிசந்தான். ஆனால் அவர் காலிலிருந்த ஊனம் இன்னும் முழுதும் நீங்கவில்லை. முறிந்த எலும்பு இன்னும் செவ்வையாய்ப் பொருந்தாமல், ஒருபாகம் முழங்காலுக்குக் கீழ் சற்றே நீண்டிருந்தமையால், ஒரு கால் மறு காலைவிட சற்று குறுகியதாயிருந்

தது. ஆனதால் நடக்கும்போது கொஞ்சம் நொண்டி நொண்டி நடக்கும்படி நேரிட்டது. தன் அங்கவடிவைப் பெரிதாய் மதித்திருந்த ஓர் உயர் குல வாலிபர், அவ்வங்க வடிவு சீர்குலைந்து, நாலு பேர்முன் நொண்டி நொண்டி நடக்கும்படியாச்சுதே! இந்த நிர்ப்பாக்கியத்துக்கு யாதோர் பரிகாரமில்லையா? "குணமான காயத்தைத் திரும்பத் திறந்து, பிதுங்கியிருக்கும் எலும்பை அறுத்தெடுத்தால் ஒருவேளை முடம் நீங்கக்கூடும். ஆனால் அவ்விதம் செய்வதால், முன்னிலும் எண்மடங்கு அதிகக் கொடிய வாதைக்குள்ளாக வேண்டியிருக்கும்" என, வைத்தியர்கள் எச்சரித்துச் சொன்னார்கள். தாமதமின்றி அவ்விதமே செய்ய இஞ்ஞாசியார் அவர்களைக் கட்டாயப்படுத்தினார். வைத்தியர்கள் கையில் கருவியெடுத்து எலும்பை நறுக்குவதில் முயற்சியாயிருந்த அக்கொடிய நேரமெல்லாம், யாராகிலும் தம்மைப் பிடிக்கவாவது கட்டவாவது இஞ்ஞாசியார் சம்மதித்தவரல்ல. நினைக்க முதலாய் பயங்கரமான இவ்வபூர்வ வாதையை, சற்றும் அசையாமல், கண்முதலாய் சிமிட்டாமல் சகித்துக்கொண்டார். இதோடு இம்சை முடியவில்லை. வலது கால் இன்னும் இடது காலைவிட குறுகியதாய் இருப்பதைக்கண்டு, ஓர்வகை இருப்பு யந்திரத்தைப் பிரயோகித்து, பலநாள் தினசரி அதை பலவந்தமாய் இழுத்துவிடப் பிரயாசைப்பட்டார்கள். இவ்வாதைக்கும் லொயோலா பின்வாங்க



வில்லை. ஆயினும் இத்தனை பாடுகளால் வந்த பலன் சொற்பமே. ஆயுள் நாளெல்லாம் இஞ்ஞாசியாருடைய வலதுகால் இடது காலைவிட சற்று குறுகியதாகவேயிருந்தது. நடக்கும்போதும் கிஞ்சித்து தாங்கித் தாங்கியே நடக்கவேண்டி நேர்ந்தது. "ஐயோ! வீண் பெருமைக்காக, ஓர் வேதசாட்சியின் உபாதைகளை அநுபவிக்கலானேனே" என்று அர்ச்சியசிஷ்டவர் பிற்காலத்தில் மனம் நொந்து புலம்புவார். ஆனால் "வீண் பெருமைக்காக இத்தனை வாதைகளை மனப்பூரணமாய்க் கையேற்றுக் கொண்ட நான், சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகவும், ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காகவும், இவைகளிலும் அதிக நிர்ப்பந்தங்கள் அநுபவிக்கவேண்டாமோ" என்று சிலுவையின் பாதையில் அதிமிக உற்சாகமாய் நடந்துவருவார்.

தாமே வலியத்தேடிக்கொண்ட இந்நூதன நோவுகளால், இஞ்ஞாசியார் நெடுநாள் படுத்த படுக்கையாயிருக்கும்படி நேரிட்டது. இந்நாட்களை அவர் போக்கினதெவ்விதம்? தனிமையாயிருந்த நெடுநேரங்களில் அவர் சிந்தனை நினைவுகள் சென்றவாறென்ன? முன்போல் உலகபோங்காகவே சென்றன. அவர் மனதைக் கவர்ந்திருந்த உயர்குல மாதின்கண் பிரியப்படுவதற்கு சிறந்த வழியாதென யூகிப்பதில் வெகுநேரம் மனோமுயற்சியாய் இருப்பார். ஏற்கனவே தாம் போர்க்கோலமணிந்து, மகா சாதுரிய சாமார்த்தியமாய் தூர

கத்தை நடத்தி யுத்தத்துக்கேகுவதுபோலவும்,
யுத்தஞ்செய்து சத்துருவை வென்று வெற்றிக்
கொடி கையிலேந்தி நிற்பதுபோலவும், இவருக்கு
நிகரான வீரன் இவ்வையகத்தில் யாவன் என சகல
ரும் ஆர்ப்பரித்து தம்மை மெச்சிக் கொண்டாடுவது
போலவும், இக்கோலமாய் மேற்சொன்ன உயர்குல
மாது சமுகம் செல்ல, அவள் மனமகிழ்ந்து தமது
வீரசூரத்தனத்தை வியந்து பாராட்டுவதுபோல
வும், நெடுநேரம் மனோராஜ்ஜியஞ் செய்வார். அர்ச்.
இராயப்பர் அவருக்குத் தரிசனையானது, தேவ
அருட்பிரசாதத்தின் அருணோதயம்போலிருந்த
தென்றாலும், இஞ்ஞாசியார் உள்ளத்தை மூடி
யிருந்த உலக மாய்கை அதனால் கலைந்து நீங்க
வில்லை. இத்தரிசனமும் அதனாலுண்டான அற்புத
ஆரோக்கியமும் சர்வேசுரன் தமக்குச் செய்த ஓர்
விசேஷ சகாயமென்றெண்ணி, அதற்காக நன்றி
யறிந்த ஸ்தோத்திரம் செய்துவந்தார். ஆனால்
இலௌகிக சிந்தனைகளை மாய்த்து, தேவதாசர்க
ளுடைய சுகிர்த ஜீவியத்தில் பிரவேசிக்கவேண்டு
மென்ற எண்ணம், அவர் உள்ளத்தில் இன்னும்
உதயமாகவில்லை.

ஆயினும், வல்லவன் கையில் புல்லும் ஆயுதமென,
பரலோக காட்சியாலும் திரும்பாத இஞ்ஞாசியார்
மனதை, மனிதர் புத்திக்கு அற்பமாய்த் தோன்
றும் வேறோர்வகையால் திருப்ப சர்வ வல்லபர்
திருவுளமானார். மனோராஜ்ஜியம் செய்து சலித்தி



ஓய்ந்த நேரங்களில் வாசிப்பதற்கு போர்வீரர்களின்
வீரசூரச் செயல்களை வருணித்தெழுதிய 'அமா
தீஸ்' (Amadis de Gaule) என்றதோர் விநோத
கதைப் புத்தகத்தைக் கொண்டுவரும்படி கேட்
டார். எவ்வித சம்பத்தும் வைபவமும் நிறைந்த
அம்மாளிகையில், ஏதோ தெய்வச்செயலாய், இப்
புத்தகம் இத்தருணம் கிடையாமற் போயிற்று.
அதற்குப் பதிலாக, கர்த்தூசிய சபையைச் சேர்ந்த
லுடோல்ப் (Ludolph) என்பவரால் எழுதப்பட்ட
சேசுக்கிறீஸ்துநாதருடைய திருச்சரித்திரமும்,
அர்ச்சியசிஷ்டவர்களுடைய விருத்தாந்தங்களை
எடுத்துக் கூறிய வேறோர் பிரபந்தமும் கொண்டு
வந்து கொடுத்தார்கள்.

துவக்கத்தில் நேரப்போக்குக்கென்று அவை
களைத் திறந்து வாசித்தார். ஆனால் வாசிக்க
வாசிக்க வாசகப் பொருளில் பிரியங்கொண்டார்.
வேறு நினைவுகள், வேறு பற்றுதல்கள் மனதில்
உதித்தன. ஒருநேரம் தொடர்ந்து வாசிப்பார்.
மறுநேரம் வாசிப்பதை நிறுத்தி, வாசித்த விஷயங்
களை ஞாபகப்படுத்தி யோசனை செய்வார். தேவ
தாசர்கள் தேவசிநேகத்தால் தூண்டப்பட்டு இயற்
றிய அருந் தவங்களையும், வீரத்தன்மையான வேறு
ஞானக்கிருத்தியங்களையும் மனதில் தியானித்து
ஆச்சரியமுற்று, தம் ஆத்துமாவோடு வார்த்தை
யாடுவார். "அர்ச். (ஐந்துகாய) பிரான்சீஸ்கு
செய்ததை நானும் ஏன் செய்யக்கூடாது? அர்ச்.

சாமிநாதரைப்போல் நானும் ஏன் நடக்கக்கூடாது?" எனப் பலவாறாய்த் தன்னைத்தானே வினவிக் கேட்பார். ஆகிலும் சமயத்துக்குச் சமயம் அவரை அறியாமல் உலக சம்பந்தமான பழைய சிந்தனைகள் வந்து குறுக்கிடவே, புதிதாய் உதயமான ஞானச்சிந்தனைகளை மறந்து, முன்போல் வீண் மனோராஜ்ஜியம் செய்வார். இவ்விதம் லொயோலாவின் மனம், ஓர் சமயம் சர்வேசுரனுடைய பரிசுத்த சிநேகத்தையும், ஓர் சமயம் உலக வீண் பெருமையையும் நாடிய சிந்தனைகளில் ஊசலாடிக்கொண்டிருந்தது. என்றாலும், இவ்விருவகை சிந்தனைகளால் அவர் ஆத்துமாவில் உண்டான ஓர் வேற்றுமை வர வர அதிக துலக்கமாய் அவர் புத்தியில் பட்டது.

**உலக வீண் பெருமையை நாடிய சிந்தனைகள்,**—இவைகள் அவர் மனதைக் கவர்ந்திருக்கும் அந்நேரங்களில் வெகு இன்பமாயிருக்கும். ஆனால் அகன்றுபோனவுடனே, அவர் ஆத்துமா, பாலைவனம்போல், காய்ந்து வறண்டு, திருப்தியற்று அமைதியற்று, மனதில் ஏதோ இருண்ட மேகம் அடர்ந்து வந்ததுபோல், சலிப்பும் சஞ்சலமும் மிஞ்சியிருக்கும். **சர்வேசுரனை நாடிய சிந்தனைகளோவெனில்,**—இவைகள் உள்ளத்தைக் கவர்ந்திருக்கும் சமயங்களில் மாத்திரமன்று, அவைகள் அகன்றபின்புங்கூட, ஆத்துமா சமாதானத்தில் அமர்ந்து வாக்குக்கெட்டாத ஞான ஆறுதலும்,



பேரின்பமுமடைந்து மகிழ்ச்சியுற்றிருக்கும். இவ்விசேஷத்தை இஞ்ஞாசியார் ஓர்நாள் கூர்ந்து கவனித்து அதில் புத்தியை நிறுத்தி சிந்திக்கலானார். **"அவர்களுடைய கனிகளைக்கொண்டு அவர்களை அறிவீர்கள்"** என்றுரைத்தார் தேவசுதன். ஆயின் இஞ்ஞாசியாரும் தமக்குள் பின்வருமாறு யோசிக்கலானார்.—இலௌகீக சிந்தனை ஆசைகள் அந்நேரந்தான் மதுரமாய் தித்திக்கும் கனிபோல் மனோகரமாயிருக்கின்றன; அடுத்த க்ஷணம் அவைகளால் மனதில் விளைவது அந்தகாரக் கவலையும் கலக்கமும் சஞ்சலமும் வேதனையுமே! ஒரு நிமிஷம் இன்பம், மறு நிமிஷம் கசப்பு! இலௌகீகப்பற்றாசையை வெறுத்த ஞான சிந்தனைகளோவெனில், அப்பொழுதும் பிற்பொழுதும் சதா மனதில் அமைதியான ஒரு ஆறுதலையும் திடனையும் தருகின்றனவே! இவ்வித்தியாசத்தின் காரணமென்னவென்று பரிசோதித்தறிய முயன்றார். நேர்மையான எண்ணமுடன் தன்னால் இயன்றதைச் செய்யும் மாணிடனை சர்வேசுரன் கைவிடார். மெய்யையும் பொய்யையும் பகுத்தறிந்து, பொய்யைத்தவிர்த்து, மெஞ்ஞான சித்தி அடைவதற்கு, சத்தியசரூபியாகிய இஸ்பிரீத்துசாந்துவானவரே அந்த மாணிடன் புத்திக்குப் பிரகாசமும், அவன் மனதுக்குத் திடனுமாய் வந்துதவுவார். தெய்வீகமாய் அருளப்படுகிற இந்தப் பிரகாசமும் இந்தத் திடனுந்தான் தேவாநுக்கிரகப்பிரசாதம் என்று சொல்லப்படும். இவ்வறாக்

கிரகப்பிரசாதத்தின் தெருள் ஒளியால் லொயோலா
ஞானத்தெளிவடைந்து, ஆதியில் இன்பமாயிருந்து,
அதன்பின் சஞ்சலத்தை உண்டுபண்ணும் இலௌ
கிக சிந்தனைகள் அந்தகாரத்தில் அரசாளும் கெட்ட
அரூபியின் மாய்கையால் வருகின்றனவைகள் என்
றுணர்ந்தார். முன்னும் பின்னும் மனதில் ஞானப்
பிரகாசத்தையும், ஞான ஆறுதலையும் தரும் பர
லோக சிந்தனைகளோ, சமாதானத்தின் அரசனாகிய
சர்வேசுரனுடைய திவ்விய இஸ்பிரீத்துவால்
வருகின்றவைகள் எனத் துலக்கமாய் அறிந்து
கொண்டார். இச்சத்தியம் அவர் புத்தியின்கண்
புலப்பட்டதும், நெடுநேரம் மயக்கங்கொண்டிருந்த
வன் மயக்கம் தெளிந்தெழுந்திருப்பதுபோல்,
லொயோலா இஞ்ஞாசியாரும் தம் ஆத்துமத்தி
லிருந்த மயக்கம் தெளிந்து, புது ஜீவியங்கொண்
டெழுந்தார். இதுகாலம் தம் சிந்தையில் குடி
கொண்டிருந்த இலௌகிக எண்ணம் பாசம் பற்
றெல்லாம் நிசிதமென்றுணர்ந்தார். உலக வீண்
பெருமைகளை வெறுத்துத் துறவியாய் சர்வேசுர
னுடைய சிநேகம் ஒன்றையே நாடி, தேவ ஊழியம்
செய்தல் எவ்வளவோ மேன்மை என்று நினைக்க
லானார்.

ஆயினும் சர்வேசுரனுக்குத் தன்னை முழுதும்
கையளிக்குமுன், இஞ்ஞாசியார் தன்னோடுதானே
யுத்தம் செய்து வெற்றியடையவேண்டியிருந்தது.
தேவ கிருபையின் ஓர் விசேஷ வரத்தாலன்றி,



நெடுநாள் அவரை ஆட்கொண்டிருந்த உலக பாச
புந்தனங்களை திடுதிப்பென்று ஒரு க்ஷணத்தில்
அறுத்தெறிவதென்றால் சாத்தியப்படுமா? மேலும்
மனுக்குலத்தின் ஜென்ம சத்துருவாகிய நரக சர்ப்
பம் இதுசமயம் சும்மாயிருக்குமா! "உலகத்தைத்
துறந்து தவக்கோலம் பூண்டால் மற்றவர்கள்
என்ன நினைப்பார்கள்? பம்பலூனா கோட்டையை
சத்துருக்கள் கைப்பற்றிக்கொண்டதால், நாலுபேர்
முன் தலைநிமிர்ந்து நடமாட வெட்கப்பட்டு, திடீ
ரென்று ஏதோ பக்தி மிகுந்தவன்போல் தபசியாகி
விட்டான் என்று சொல்லமாட்டார்களா?" என்
னும் பலவித நினைவுகள் அவர் மனதை அலைக்கழிக்
கத் தலைப்பட்டன. ஆனால் படையணியில் மனோ
ஊக்கம் தளராத போர்வீரர், இஞ்ஞான யுத்தத்தி
லும் திடனாய்ப் போர்புரிந்து ஜெயங்கொண்டார்.
பழைய சிந்தனை ஆசைகளையெல்லாம் பற்றற
அறுத்து நீக்கினார். சர்வேசுரனுக்குத் தன்னை முழு
தும் மனப்பூர்வமாய்க் கையளித்தார். பிரயாணம்
செய்வதற்கு வேண்டிய பலன் வந்ததும், உலகத்
தைத் துறந்துவிடுவதாகத் தீர்மானம் செய்தார்.
அதுமுதல் அவர் மனம் தேவ தோத்திரத்துக்கு
அடுத்தவைகளைச் சிந்திப்பதிலும் ஆசிப்பதிலும்
நிலைவரம்பெற்றது.

துறவறத்தில் எவ்வகையான ஜீவியத்தைத்
தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவருக்கு இன்
னும் திட்டமாய்த் தெரியவில்லை. மனுக்குலத்தை

மீட்க மனுஷாவதாரமெடுத்து, சிலுவையில் உயிர் விட்ட திவ்விய சுதன்மேலுள்ள நேசப்பெருக்கத்தால், அவர் எண்ணம் **ஜெருசலேம்** பட்டணத்தை நோக்கிச் சென்றது. சௌக்கியம் வந்ததும், அவ்விடத்துக்கு திருயாத்திரையாய்ப் போகத் தீர்மானித்தார். தன் பாவங்களை நினைத்து பட்ட மனஸ்தாபத்தாலும், அதிலும் அதிகமாய் தேவசிநேகத்துக்காக வீரத்தன்மையான கிரிகைகள் செய்யவேண்டுமென்னும் ஆசையாலும், கடின தவம் செய்து, தன் சரீரத்தை உபாதித்து, உலகத்தின்கண் மறைந்திருக்க ஆவலுற்றிருந்தார். ஏற்கனவே கசையால் தம்மை அடித்துக்கொள்ளத் துவக்கியிருந்தார். அருந்தவப் பிரீதியால், அவர் மனம் **கர்த்தூசியர்** சபையை நாடிச்சென்றது. திருயாத்திரை போய் வந்ததும் அதில் உட்பட எண்ணமும் கொண்டிருந்தார். ஆனால், **சேசு** என்ற திருநாமத்தை விருதாகவும், '**சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம்**' என்றதை விரதமாகவும்கொண்டு, திருச்சபையின் ஞான நன்மைக்காக அயராது போர்புரியும் படையணி என நவமாய் ஒரு துறவற சபையை ஸ்தாபிக்க லொயோலா இஞ்ஞாசியாரைத் தெரிந்துகொண்ட பரமகர்த்தர், அவர் கர்த்தூசியர் சபையில் உட்படத் திருவுளமாகவில்லை. ஆயினும் ஆயுள் பரியந்தம் அர்ச். இஞ்ஞாசியார் கர்த்தூசியர் சபைமேல் வெகு அன்பு வைத்திருந்தார். இன்றைக்கும் இவ்விரு சபையாருக்குள் ஒரு விசேஷ நட்புண்டு.



இஞ்ஞாசியார் இவ்வித எண்ணமுற்றிருக்கையில் ஓர் விசேஷம் சம்பவித்தது. ஓர் இராத்திரி அறையிலிருந்த தேவமாதாவின் படமுன் முழந்தாளிட்டு வெகு உருக்க நேசத்தோடு அக்கன்னித்தாயின் கரங்களில், தன்னை சேசுநாதர்சுவாமிக்கு முழுதும் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து, ஜெபித்துக்கொண்டிருந்தபோது, திடீரென மாளிகை எங்கும் பலமான ஓர் அதிர்ச்சி உண்டாயிற்று. அதனால் அறையின் பலகணிக் கண்ணாடிகள் உடைந்து போயின. சுவரிலும் ஓர் பிளப்பு உண்டாகி, இந்நாள்மட்டும் இவ்விசேஷத்துக்கு அத்தாட்சியாயிருக்கின்றது. இது இயற்கையான பூகம்பத்தால் நிகழ்ந்ததென்று சொல்ல இடமில்லை. ஏனெனில் லொயோலா மாளிகை ஒன்று தவிர வேறெவ்விடத்திலும் அன்று இவ்வதிர்ச்சி உண்டாகவில்லை. இஞ்ஞாசியார் செலுத்திய காணிக்கை தேவ மகத்துவத்துக்கு உகந்ததென்று காண்பிக்கும் ஓர் அடையாளமாக, தேவ திருவுளத்தின் அற்புத செயலால் இது சம்பவித்ததா? அல்லது விருதிழந்து வெகுளிகொண்ட நரகப்பேயினங்களின் வீண் வெருட்டுதலா இது? நிச்சயமாய்த் தெரியவில்லை. எப்படியிருந்தாலும், இவ்வதிர்ச்சியால், லொயோலா மனம் தான் கொண்ட தீர்மானத்தில் முன்னிலும் அதிக உறுதியடைந்ததேயன்றி, சற்றும் அதிர்ந்து நடுங்கவில்லை.

மெல்லிய புஷ்பம்போன்ற கற்பு என்னும் சிறந்த புண்ணியம் ஒருபோதும் வாடாது காப்பாற்றுதல் கூடுமாயிருக்குமோ, என்னமோவென்று இஞ்ஞாசியார் இதுசமயம் சற்று அச்சமுற்று, அமலோற்பவ கன்னிகையின் சகாயத்தைக் கெஞ்சி மன்றாடி வந்ததாகத் தோன்றுகின்றது. பரிசுத்த கன்னிகையோவெனில் இது விஷயத்தில் அவருக்கு மகா அருமையான ஓர் வரம் பெற்றுக்கொடுக்கக் கிருபை புரிந்தாள். ஓர் நாள் இரவில் இஞ்ஞாசியார் வழக்கம்போல் ஜெபம் செய்துகொண்டிருக்கும்போது, அமலோற்பவ மாதா திருக்குழந்தையைக் கையிலேந்திய மாதிரியாய் அவருக்குத் தரிசனையானாள். தரிசனையான மாதா திருவாய் மலர்ந்து பேசவில்லை. ஆனால் தாயின் அத்தியந்த அன்பு நேசத்தோடு தமது தாசனை சற்றுப்பொழுது கண்ணுற்று நின்றாள். திவ்விய குழந்தை சேசுவும் அவனை அளவற்ற அன்புடன் கடாட்சித்தார். ஆ! கருணை பொழியும் அத்திரு நேத்திரங்களின் தன்மையை என்னென்று சொல்லலாம்! பரிசுத்த சோதிமயமான அக்காட்சியை இஞ்ஞாசியார் கண்குளிரப் பார்த்தார். தூய தேவசிநேகப் பெருக்கத்தால் இருதயம் தாவித்துடிக்க, ஒப்பில்லா அழகு சோபனம் வாய்ந்த அவ்விரு வதனங்களையும் கூர்ந்து நோக்கினார். நோக்கவே, அவருடைய ஆத்துமா முன்னில்லா அருட்பிரகாச தீட்சைபெற்றது. கண்களின் மாய்கைகளினாலன்றோ மானிடன் அநேக



சமயங்களில் நெறிதவறி நடக்கின்றான். அமலோற்பவ இராக்கினியையும், அவதரித்த திருச்சுதனையும் தரிசித்த லொயோலாவின் கண்கள் அன்றுமுதல் உலக மாய்கையின் மயலினின்று விடுபட்டன. பரலோக காட்சியால், இகலோக இன்பங்களை இருதயம் வென்றது. ஆதாமின் மக்களை சாதாரணமாய் அலைக்கழித்து சிந்தை குலையச்செய்யும் ஐம்புல மாய்கை அன்றே அவரைவிட்டு அகன்றது. அன்றுமுதல் ஆயுள்காலமெல்லாம், கற்பு என்கிற புண்ணியத்தில் ஓர் அசரீரியைப்போல் இருக்கும் உன்னத வரம்,—ஆ! மகா அருமையான அதிர்ஷ்டவரம்பெற்றார்!

இத்தரிசனத்துக்குப் பின் இஞ்ஞாசியார் பரலோக ஏக்கம் கொண்டவர்போல், நட்சத்திரங்கள் துலக்கமாய்ப் பிரகாசிக்கும் இராக்காலங்களில், வானத்தை ஏறெடுத்துப் பார்த்த பார்வையாய் நெடுநேரமிருப்பார். தேகம் இன்னும் பூரண சொஸ்தமடையாததால், இன்னும் சில நாள் மாளிகையில் தங்கியிருக்க நேர்ந்தது. இந்நாட்களை இஞ்ஞாசியார் வீண்போக்கவில்லை. அடிக்கடி ஆத்தும சோதனை செய்வார். ஜெபத்திலும் ஞானவாசகத்திலும் வெகுநேரம் அமர்ந்திருப்பார். சமயோஜிதமாய் அடுத்தவர்களோடு ஞான காரியங்களைப் பற்றி சம்பாஷிப்பார். வாசித்தவைகள் மனதில் நன்றாய்ப் பதியும்படி, பிரதான விஷயங்களை ஓர் புத்தகத்தில் திருத்தமான அட்சரங்களில் எழுதி

வந்தார். சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்கியங்களையும் கிரிகைகளையும், பொன்னிறமான அட்சரங்களிலும், தேவதாயாரைக் குறித்தவைகளை நீல நிறத்திலும், அர்ச்சியசிஷ்டவர்களைச் சார்ந்த விஷயங்களை வேறு நிறங்களிலும் எழுதிவந்தார். லொயோலா மாளிகையை விட்டுப் போகும்போது அர்ச்சியசிஷ்டவர் தம்மோடு எடுத்துக்கொண்டு போன பொக்கிஷம் இப்புத்தகம் ஒன்றுதான்.

## 2-ம் அதிகாரம்.

இஞ்ஞாசியார் லொயோலா மாளிகையை விட்டுப் புறப்படுதல்—தமையன் கார்சியா பிரபு கொண்ட ஐயம்—லொயோலா மாளிகை காலாகாலத்தில் அடைந்த மேன்மை—புண்ணிய சாங்கோபாங்கநெறியில் புதிதாய்ப் பிரவேசித்த போர்வீரர்—பரிசுத்த கன்னிகையை நிந்திக்கத் துணிந்த மகம்மதியன் தப்பிப் பிழைத்தது—மோன்செராத் மலை—அருளப்பமுனிவர்—பொதுப் பாவ சங்கீர்த்தனம்—'யுத்தாயுத நோன்பு'—"நன்மைசெய்ய விரும்பியும், தின்மை நேர்ந்தது"—மன்ரேசா—அகினேஸ் பாஸ்காலம்மாள்—தேவதாயார் தரிசனம்—கடுந்தபம்—சுபாவ மேட்டிமையின் நிக்கிரகம்.

### 1522.

சர்வேசுரனுடைய திவ்விய அருளால் தம் உள்ளத்தில் நிகழ்ந்த விசேஷங்களையும், தம் உற்றார் உறவினரை விட்டகன்று தேவ ஊழியத்துக்கு தம்மைமுழுதும் கையளிக்கத் தாம் கொண்டிருந்த எண்ணம் யாவையும் இஞ்ஞாசியார் இரகசியமாகவே வைத்திருந்தார். ஆயினும் அகத்திலுள்ளது முகத்தில் தெரியுமென்றபடி அவர் முகத்தில்

துலங்கிய ஓர் வேற்றுமை, பேச்சுவார்த்தைகளில் விளங்கிய வித்தியாசம், முன் பெரிதென்று மதித்து போராவல்கொண்டிருந்தவைகள்மட்டில் இப்போது அவர் காண்பித்த துவேஷம், செய்துவந்த நெடுஞ் செபம், ஞானவாசகம் முதலியவைகளைக் கவனித்த அவர் தமையன் கார்சியா பிரபும், மற்றும் பந்துமித்திரர்களும், இஞ்ஞாசியார் முன்னிருந்த இஞ்ஞாசியாரல்ல, ஏதோ அந்தரங்க எண்ணம் கொண்டிருக்கிறொன யூகித்து, ஐயமுற்றிருந்தார்கள். ஆகிலும் தங்கள் சந்தேகத்தைத் தற்சமயம் வெளியிடுவது யுக்தமல்லவென்று ஒன்றும் அறியாதவர்கள்போலிருந்தனர்.

1522-ம் வருஷம் வசந்தகாலம் அடுத்து வந்தது. பிரயாணம் செய்வதற்குப் போதுமான பலமும் வந்தது. உடனே இஞ்ஞாசியார் தம் தீர்மானத்தை நிறைவேற்றத் தீவிரித்தார். பம்பலூனு பட்டணத்தைக் காக்கும்படி தம்மைப் பொறுப்பாய் நியமித்தப்போன தேசாதிபதி மன்ரீக் பிரபுவைக் கண்டு மரியாதை செய்யும்படி பயணப்பட்டுப் போவதாக சொல்லி, அண்ணனிடத்தில் விடைகேட்டார். இதல்ல பயணத்தின் பிரதான கருத்து, பிரதான கருத்து வேறேயென்றுணர்ந்த கார்சியா பிரபு, தாம் கொண்டிருந்த சந்தேகத்தை வெளியிட்டு, பற்பல நியாயங்களை எடுத்துரைத்து, தம்பி மனதை மாற்ற பிரயத்தனப்பட்டார். பம்பலூனு கோட்டையில் நேரிட்ட துன்பத்தால் ஒருவேளை மனதில்



ஆயாசம் பிறந்திருக்கலாம். அப்படியிருந்தபோதிலும் அதை அகற்றிவிட்டு முன்போல் உலகில் வீரசூரச் செயல்களை நாடிச் செய்து கீர்த்திபெற்று, லொயோலா கோத்திரத்தின் பாரம்பரையான பெருமையைக் காப்பாற்றி நிலைநிறுத்துதல் அவர் கடமை என வற்புறுத்திச் சொன்னார். தமையன் உரைத்த வார்த்தைகளின் ஞானம் பூலோக ஞானத்துக்கு மேலெழும்பவில்லை. என்றாலும், அவைகளில் நேர்மையான சகோதரநேசம் விளங்கியது.

“ அன்பிற்குமுண்டோ வடைக்குந் தாழார்வலர்
புன்கணீர் பூசறரும் ”

என்ற வள்ளுவர் வாக்கியப்படி: அகத்திலுள்ள அன்பை அடைத்துவைக்க ஒரு தாழ்ப்பாளுமுண்டோ? கண்களில் ததும்பும் கண்ணீர்த்துளிகளே அதனை அறிக்கையிடுமென்றே! அன்பின் முகத்தே, அனலைக்கண்ட மெழுகுபோல், இருதயம் உருகும் சுபாவமுடையவர் லொயோலா இஞ்ஞாசியார். ஆனதால் சகோதர வாஞ்சையால் தமையன் உரைத்த அன்பு மொழிகளைக்கேட்டுக் கண்கலங்கா திருந்திருப்பாரா, என்ன! கண் கலங்கியது; மனம் அங்கலாய்த்தது. என்றாலும், தேவதிருவுளமென்றுணர்ந்து செய்த தீர்மானத்தில் அவர் நெஞ்சம் தத்தளிக்கவில்லை. லொயோலா கோத்திரத்துக்கு அபகீர்த்தியான எதுவும் தாம் செய்யப்போகிறதில்லையென்று சாதுரியமாய்த் தமையனுக்கு சமாதானம் சொல்லி, மாளிகையைவிட்டுப் புறப்பட்

டார். இஞ்ஞாசியார் புறப்பட்டுப் போகட்டும்,
பிறகு அவரைப் பின்தொடர்ந்து செல்லலாம். இப்
போது அவர் விட்டகன்ற லோயோலா மாளிகை
யைப்பற்றி சில வார்த்தை சொல்லவேண்டும்.

. சர்வேசுரன்பேரால் இஞ்ஞாசியார் விட்டகன்ற
லொயோலா மாளிகை வெகு அருமையான
அதிர்ஷ்டம் அடைந்தது. இதிலும் மிக்க மேன்மை
யும் வலிமையும் பொருந்தி நின்ற அநேக மாளிகை
கள் இருந்த இடமும் தெரியாமற்போயின.
இதுவோ துவக்கத்தில் சொன்னதுபோல், இந்நாள்
வரைக்கும் பூஜிதமாய்க் காப்பாற்றப்பட்டு வரு
கின்றது.

இஞ்ஞாசியார் நெடுநாள் நோக்காடாயிருந்த
அறை, அங்கு நடந்தேறிய தேவ வரப்பிரசாதத்
தின் அத்தனை அற்புத செயல்களால், விசேஷமாய்
திவ்விய குழந்தையைக் காத்தேந்திய பரிசுத்த
கன்னிமாதாவின் தரிசனையால், ஓர் அற்புத புனிதம்
அடைந்ததாகக் காணப்பட்டது. அதில் ஜனங்கள்
குடியேறியிருந்த காலத்தில், தூய சிந்தனையுடைய
பக்திமான்கள் அங்கு நித்திரைபோனால், இரவில்
கண் விழித்திருக்க அவர்கள் இருதயம் சுயேச்சை
யாகவே சுகிர்த சிந்தனைகளையும் தெய்வ பக்தியை
யும் நாடி ஞான மனோகரமுற்றிருக்குமாம். தெய்வ
பயமற்றவர்களும், துர்ச்சிந்தையுள்ளவர்களும்
அங்கு நித்திரைபோனால், இரவில் வீடு அஸ்திவார
மட்டும் அதிர்ந்து நடுங்க, வெகு பயங்கரமான



மாயா ரூபங்களைக் கண்டு அவர்கள் நெஞ்சம் திகி
லடையும் என்பதாக பாரம்பரையாய்ச் சொல்லி
வருகிறார்கள். மாளிகையின் மேற்றளத்திலிருக்கும்
அந்த அறை இப்போது சர்வேசுரனுக்கும், அவர்
தாசன் அர்ச். இஞ்ஞாசியாருக்கும் ஒப்புக்கொடுக்
கப்பட்ட சிறந்ததோர் சிறிய கோவிலாயிருக்கின்
றது.

நாலாபக்கங்களிலுமிருந்து திரளான ஜனங்கள்
இவ்விடத்துக்கு திருயாத்திரையாகச் செல்லுகிறார்
கள். சுமார் இருநூற்று அறுபது வருஷங்களுக்கு
முன் ஒருவர் எழுதியதை இங்கெடுத்துச் சொல்ல
லாம்: "வருஷமுழுதும், முக்கியமாய் அர்ச்சியசிஷ்
டவர் பிறந்த திருநாளன்று, தங்கள் நாட்டில் உதித்
தவரும், தங்களுக்கு பாதுகாவலருமானவருடைய
நாமத்தைக் கொண்டாட கணக்கற்ற ஜனங்கள்
திருயாத்திரையாக அங்கு வழிநடந்து செல்லுவ
தைக் காணலாம். காடு முரடான செங்குத்துப்
பாறைகள் நிறைந்த இடுக்கமான பாதைகளைப் பின்
றொடர்ந்து, ஐந்து மாகாணத்து ஜனங்கள் யாத்
திரை செல்லுதல், கண்ணைக்கவர்ந்து மனதை உரு
கச்செய்யும் நவமானதோர் காட்சியாயிருக்கும்.
வனங்கள் அடர்ந்து, ஏகாந்தமே குடியாயிருக்கும்
இப்பிரதேசங்களில், பக்தியுள்ள இத்திருயாத்
திரைக்காரர்கள் இராகமாய் ஜெபமாலை ஜெபித்து
செல்லும் குரற்சத்தம் இன்னிசைபோல் தொனித்
தொலிக்கும். இடைக்கிடையே அர்ச். இஞ்ஞாசி

யாரை ஸ்துதித்து அவர்கள் பாடும் உருக்கமான கீர்த்தனைகளைக் கேட்போர் மனம் தேவ பக்தியால் பற்றியெரியும். திரள்திரளாய் வந்துகூடும் அத்தனை ஜனங்களுக்கு மாளிகைக் கோவிலில் இடம் பற்றாததால், திறந்த மைதானமே கோவிலாக வெட்ட வெளியில் திவ்விய பூசை செய்து ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. தமது தாசன் நாமத்தை மகிமைப்படுத்துவதற்காக, சர்வேசுரன் அங்கு கொடுத்தருளும் வரப்பிரசாதங்களுக்கும் புதுமைகளுக்கும் கணக்கில்லை. இவைகளிலெல்லாம் அதிக ஆச்சரியமானதேதெனில், நெடுங்காலப் பாவப் பழக்கத்தால் மனங்கடினப்பட்டுப்போன பாவிகள் வேடிக்கைப் பிரியத்தால் அங்கு வருவார்கள். வந்ததும் இப்பரிசுத்த ஸ்தலத்தினின்று ஏதோ ஓர் திவ்விய சக்தி புறப்பட்டு அவர்கள் இருதயத்தில் தாவினாற்போல், மனமிளகி குருவானவர் பாதத்தில் மனஸ்தாபக் கண்ணீர்சொரிந்து, ஆத்தும சுத்திகரமடைந்து திரும்புவார்கள். இத்திருநாள் கொண்டாடப்படும் எட்டுத்தினங்களில் திவ்விய சற்பிரசாதம் அருந்துபவர்கள் பதினையாயிரத்துக் கதிகம்." இவ்வாறு அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரம் ஒன்று எழுதிய பார்த்தோலி (Bartoli, S.J.) என்னும் சேசுசபைக் குருவானவர் சொல்லியிருக்கிறார். இக்காலத்தில் அங்கு பிரமாண்டமான ஓர் தேவாலயம் கட்டப்பட்டிருப்பதால், மைதானத்தில் திவ்வியபூசை செய்யும் வழக்கம் நின்று



போயிற்று. வட்டவடிவமாய் குறுக்களவில் 131 அடியும், உயரத்தில் 200 அடியுமுள்ள இத்தேவாலயத்தின் உட்புறம் பற்பல வர்ண சலவைக் கற்களால் வெகு அலங்காரமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அநேக வருஷங்களுக்குமுன் துவக்கிய வேலை, 1888-ம் வருஷந்தான் முற்றும் முடிவு பெற்றது.

இவ்விதம், இஞ்ஞாசியார் உலகத்தை வெறுத்து தேவ ஊழியத்தில் பிரவேசித்ததால், லோபோலா கோத்திரத்துக்கு மகிமைக்கேடல்ல, என்றுமில்லா மகிமைப் பிரக்கியாதியே கிடைத்தது. இது நிற்க, மாளிகையைவிட்டுப் புறப்பட்ட இஞ்ஞாசியார் எங்கு சென்றார்?

தேசாதிபதி மன்ரீக் பிரபு அப்போது வாசமாயிருந்த நவாரத் என்னும் பட்டணத்தை நோக்கியே குதிரைமீதேறிச் சென்றார். அவர் சகோதரர்களில் ஒருவரும், இரு ஊழியர்களும் அவருடன் சென்றார்கள். வழியில் ஓர்நாத் என்னும் ஊரில் வசித்த தன் சகோதரி வீட்டில் சற்று தங்கி, அருகாமையிலிருந்த தேவமாதா ஆலயத்தில் ஓர் இராமுழுதும் ஜெபத்திலமர்ந்திருந்தார். கூடப்போன அவர் சகோதரன் இவ்வூரில் நின்றுவிட்டார். நவாரத் ஊரைச்சேர்ந்த தேசாதிபதி அரண்மனையில் உபசரிக்கப்பட்டு சிலநாள் அங்கு தங்கியிருந்தார். அதன்பின் தேசாதிபதியிடம் விடை

பெற்றுக்கொண்டு, கூட வந்த இரு ஊழியர்களையும் லொயோலா மாளிகைக்குத் திரும்பிப் போகச் சொல்லிவிட்டு, தனியே **மோன்சேராத்** என்னும் மலையை நோக்கிப் பயணம் செய்தார். அம்மலைமேலிருக்கும் தேவதாயார் ஆலயத்தைச் சந்தித்து, அங்கிருந்து ஜெருசலேமுக்கு திருயாத்திரையாய்ப் புறப்பட்டுப் போகலாமென்று எண்ணியிருந்தார்.

வழியில் அவர் இருதயம் சர்வேசுரனுக்கு உகந்த ஊழியம் செய்யவேண்டுமென்னும் பேராவலால் பற்றியெரிந்துகொண்டிருந்தது. இதற்காக அருந்தவம் செய்யத் தீர்மானித்தார். இத்தவ முயற்சிகளில் பாவத்தண்டனையின் பரிகாரத்தை அவர் அவ்வளவாய்க் கருதவில்லை; தேவ மகத்துவத்துக்குப் பிரியப்படவேண்டுமென்பதையே பிரதானமாய்க் கருதியிருந்தார். தன் சீவியத்திலுள்ள குற்றங் குறைகள்மீது அவர் உள்ளத்தில் அத்தியந்த துவேஷமும், மனஸ்தாபமும் குடிகொண்டிருந்தது. என்றாலும், கிறீஸ்துநாதருக்காக உன்னத காரியங்களைச் செய்யவேண்டுமென்கிற ஆவல் அவருள்ளத்தில் எவ்வளவு வேகமாய்ப் பற்றியெரிந்ததென்றால், தாம் எண்ணிய தவமுயற்சிகளில் தம் பாவத்தைப்பற்றிய சிந்தனை சொற்பமாகவே யிருந்ததாக இஞ்ஞாசியார் தாமே தம்மைப்பற்றி சொல்லியிருக்கிறார். இன்னின்ன அர்ச்சியசிஷ்டவர்கள் இன்னின்ன தபசு செய்தார்கள் என்று அவர் ஞாபகத்துக்கு வரும்போது, தாமும்



அதுபோல் இன்னும் அதிலும் அதிகக் கடினமான தபசு செய்வதெப்படி என்பதே அவருக்கு ஏகக் கவலையாயிருக்கும். இவ்விதம், முன் உலக மகிமையை மிதமிஞ்சி நாடியிருந்த இஞ்ஞாசியார், இப்போது அதை முற்றும் வெறுத்து நீக்கி, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்தையே தன் முழு மன சக்தியோடு நாடித்தேடி வந்தார். “**சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக**” (Ad Majorem Dei Gloriam) இதுவே இனிமேலாக ஆயுள்பரியந்தம், இஞ்ஞாசியாருடைய விருதெழுத்தும், அவர் சிந்தனை கிரிகைகளுக்கெல்லாம் உயிர்போலுமிருந்தது.

ஞானமார்க்கத்தில் இப்பொழுதுதான் புதிதாய்ப் பிரவேசிக்கிறார். இஞ்ஞாசியார் இதுகாலம் போர் வீரராயிருந்தவர்; உலக மன்னர்களுக்காகப் போர் புரிந்து அருமையான வீரச்செய்கைகள் செய்து, உலகின்கண் அரும்புகழ்பெற ஆசித்திருந்தவர். இப்பொழுதோ அந்த இலௌகிக எண்ணங்களை முற்றும் வெறுத்து, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம் ஒன்றையே கருதி, சர்வேசுரனுக்காக வீரத்தன்மையான செயல்கள் புரிய ஆசிக்கிறார். காயப்பட்டு மாளிகையில் நோவாயிருந்த நாட்களில் அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரப் புத்தகம் ஒன்றை வாசித்திருந்தார். அப்புத்தகத்தில் அவர் வாசித்த விஷயங்களில் அர்ச்சியசிஷ்டவர்கள் இயற்றிய நானாவித அருந்தவக் கிரிகைகள்தான் தற்சமயம் லொயோலா மனதில் துலக்கமாய்ப் பதிந்திருந்தன.

ஆகையால் கடுந்தவம் முதலிய வீரத்தன்மையான வெளிக் கிரிகைகளிலேயே தற்சமயம் கண்ணும் கவலையுமாயிருந்தார் நமது லொயோலா இஞ்ஞாசியார். உயிராலன்றோ உடலுக்கு க்ஷேமம்! உயிரின்றி உடலுக்கு வாழ்வேது?—மேன்மையேது? வெறும் பிரேதமேயாகும்! தேவதாசர்கள் புரியும் ஜெபம் தவம் மற்றும் கிரிகைகள் யாவுக்கும் உயிராக இருந்து, அவைகளை அர்ச்சித்து தேவ மகத்துவத்துக்கு உகந்தவைகளாகச் செய்வது, அவர்களுடைய உள்ளரங்க உத்தம ஞான ஜீவியமன்றோ! இவ்வுள்ளரங்க ஞான ஜீவியம் லொயோலா கண்களுக்கு இன்னும் மங்கலாகவேயிருந்தது. மனத்தாழ்ச்சி, பொறுமை, சாந்தம், உத்தம தேவசிநேகம், பிறர்நேசம் முதலிய புண்ணியங்களின் உயர் தன்மையை அவர் இன்னும் நன்றாய் அறியவில்லை. ஞான மார்க்கத்திலும் மேடு பள்ளங்களுண்டு, காடு கரடுகளுண்டு, இருள் மருள்களுண்டு; அவனவன் சுபாவக்குணத்தால் வழிதப்பியோ, மிதந்தப்பியோ போகக்கூடிய இடர்களுண்டு; சதி செய்யும் சாத்தான் மாய்கைகளும் பலவுண்டு. இவைகளிலெல்லாம் இடரலின்றி, பதன நிதானமாய் நடப்பதற்கு அதி அவசியமான ஞான விவேகம், விமரிசை, நடுவுநிலை முதலிய புண்ணியங்களைப்பற்றி, தற்சமயம் அவர் அறிந்திருந்ததுவும் சொற்பமே. திடுதிப்பென்று எல்லாம் ஒரு நொடியில் செய்து முடிப்பது, தேவ வரப்பிரசாதத்தின் தன்மையல்லவே.



ஒவ்வொரு மானிடனுக்குமுள்ள சுபாவ அமைப்பையும், இயற்கை செயற்கைக் குணங்களையும் அநுசரித்து, ஏற்ற தருணங்களில் அறிவைத் துலக்கி மனதைத் தூண்டி ஏவி நடத்துவதே சாதாரணமாய் தேவாநுக்கிரகப் பிரசாதம் இயற்றும் அருட்செயல். தேவ ஏவுதலுக்கு ஆத்துமம் எவ்வளவு உதாரமாய், எவ்வளவு துரிதமாய்க் கீழ்ப்படிகின்றதோ, அவ்வளவுக்கதிகமாய் ஞானத்தெளிவும் உறுதியுமடையும். விரைவாய் அர்ச்சியசிஷ்டதனத்தில் அதிகரிக்கும். இஞ்ஞாசியாரிடத்திலும் இவ்விதமே சம்பவித்தது. இதற்கத்தாட்சியாக இப்பயணத்தில் நடந்த ஒரு வர்த்தமானத்தை இங்கெடுத்துச்சொல்லலாம்.

அவர் வழியே செல்லுகையில் மகம்மதியன்* ஒருவன் குதிரைமேல் சவாரியாய் அவரோடு வந்து சேர்ந்தான். செல்லுவதெவ்விடம் என, ஒருவர் ஒருவரை வினவி சம்பாஷித்துக்கொண்டு போகையில், தான் செல்லுமிடம் மோன்சேராத் மலைமேலிருக்கும் பரிசுத்த கன்னிகையின் திரு ஆலய

* ஆப்பிரிக்காவின் சில நாடுகளினின்று வந்த அரபிக்குல மகம்மதியர்கள் ஓர் காலத்தில் (கி. பி. 712-ம் ஆண்டுக்குப் பின்) இஸ்பாஞிய தேசத்தின் பெரும்பாகத்தை ஜெயித்து ஆண்டுவந்தார்கள். கிறீஸ்துவர்கள் இம்மகம்மதியர்களை அடக்கி, தங்கள் தேசத்தைத் திரும்பத் தங்கள் கைவசப்படுத்த சுமார் எட்டு நூற்றாண்டுகள் சென்றன. 1492-ம் ஆண்டில் தான் இஸ்பாஞிய தேசத்தில் மகம்மதியர் அரசாட்சி முற்றும் ஒழிந்தது.

மென்று இஞ்ஞாசியார் சொன்னார். கிறீஸ்துநாதருடைய மாதா கன்னிமைக்கு யாதொரு பழுதின்றி கிறீஸ்துவைக் கர்ப்பந்தரித்தாளென்பது மெய்தான்; ஆனால் அதன் பின்பும் அவள் கன்னிகையாயிருந்தாளோவென்பது சந்தேகமென்றான் மகம்மதியன். லொயோலா இஞ்ஞாசியார் உடனே கோபங்கொண்டு, அவிசுவாசி சொன்னதை மறுத்து, தனக்குத் தெரிந்த பல நியாயங்களை எடுத்துரைத்து, அவனோடு வாக்குவாதம் செய்தார். அவைகளுக்கெல்லாம் மகம்மதியன் சற்றும் இணங்காமல், தன் எண்ணத்தில் மூர்க்கமாய் நிலைநின்றான். ஆனால் அகம் சினந்திருந்த இஞ்ஞாசியாரின் முகத்திலும் பேச்சிலும் விளங்கிய வேற்றுமையைக்கண்டு, அதிகமாய் வார்த்தை கலந்தால் கைகலக்க நேரிடுமென்றஞ்சியோ என்னமோ, சிறிதுபொழுதுக்குள் திடீரென்று குதிரையை முன்னுக்குத் தட்டி அப்பாற் சென்றுவிட்டான். அவிசுவாசி அப்பாற் சென்றதும், இஞ்ஞாசியார் உள்ளத்தில் ஓர் கொடும்போர் நிகழ்ந்தது. என்ன! பரிசுத்த கன்னிகையை நிந்திக்கத் துணிந்த பாதகனை அப்பொழுதே சிட்சியாமல் விட்டுவிட்டது யோக்கியமா? பரலோக இராக்கினிக்கு அவன் செய்த நிந்தையைத் தீர்க்க, அவனை வாளுக்கு இரையாக்கியிருக்கவேண்டாமா? என்று, அவர் மனம் சந்தேகமுற்று வருந்தலாயிற்று. மகம்மதியன்மேல் அவர் உள்ளத்தில் பொங்கிய கோபம் இவ்வளவு அவ்வளவென்றல்ல. தாமதமின்றி



குதிரையைத் தட்டிவிட்டு, பரிசுத்த கன்னிகையை நிந்தித்தவனைப் பின்றொடர்ந்து, அவனை வாளால் தண்டிக்க மனம் ஆத்திரப்பட்டது. ஆனால் அப்படிச் செய்வது சர்வேசுரனுக்கு ஏற்குமோவென்னும் சந்தேகமும் அவர் மனதை வருந்தச்செய்தது. நெடுநேரம் தம்மோடு தர்க்கித்தும் தாம் செய்யவேண்டியது யாது, எது நீதி, எது அநீதி என்று அவருக்குத் தெளிவாய்ப் புலப்படவில்லை. தம்மால் கூடாததை சர்வேசுரன் கையில் விட்டுவிடுவதென்று தீர்மானித்து, நவமானதோர் உபாயமெடுத்தார். வழி இருமார்க்கமாய்ப் பிரியும் ஓரிடத்தைச் சமீபித்து வந்ததும், கடிவாளத்தைத் தளரவிட்டு, குதிரையைத் தன் போக்கிலே போகவிட்டுவிட்டார். இருமார்க்கங்களில் மகம்மதியன் சென்றது எதுவென்று முன்னமே அவன் வாயால் அறிந்திருந்தார். அம்மார்க்கத்தில் குதிரை செல்லுமேயாகில், அவிசுவாசியைத் தேடிப்பிடித்து அவன் உயிரை மாய்க்கிறது; அதைவிட்டு வேறு மார்க்கத்தில் சென்றால், அவனை சும்மா போகவிட்டுவிடுகிறது என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டார். மகம்மதியன் சென்ற மார்க்கம் அகலமாகவும் செவ்வையாகவுமிருந்தது. இரண்டாவது மார்க்கமோ ஏற்றமான மலைப்பாதையாகவிருந்தது. என்றாலும் குதிரை செவ்வையான பாதையைவிட்டு, மலைப்பாதையில் ஏறிச் சென்றது. மகம்மதியனும் தப்பிப்பிழைத்தான்.

இஞ்ஞானியார் கைக்கொண்ட இவ்வுபாயம் தன்னிலே ஆட்சேபனைக்கும் ஆபத்துக்கும் இடமானதென்றாலும், தமது தாசனுடைய இருதய நேர்மையை அறிந்த சர்வேசுரன் அவருடைய அறியாமைக்கிரங்கி, பெரும் ஆபத்தினின்று அவரைக் தற்காக்கத் திருவுளமானார்.

மோன்செராத் மலையடிவாரத்திலிருந்த ஒரு பெரிய ஊரில் சேர்ந்ததும், ஜெருசலேமுக்கு யாத்திரை போகும்போது அணிந்துகொள்ளுவதற்கென்று, பரும்படியான சாக்குத் துணியால் செய்யப்பட்ட ஓர் அங்கியும், இடைக்கச்சையாக ஓர் பெருங் கயிறும், அந்நாட்டில் துடைப்பங்கள் செய்வதற்கு உபயோகப்படும் ஓர்வகைத் தும்பினால் செய்யப்பட்ட இரு பாதரட்சையும், திருயாத்திரைக்காரர்கள் சாதாரணமாய்க்கொண்டு திரியும் ஓர் ஊன்றுகோலும், ஓர் சுரைக்குடுக்கையும் சேகரித்துக்கொண்டார். இவைகளையெல்லாம் குதிரையின் சேணத்தில் கட்டிவைத்துக்கொண்டார். இகலோக காரியங்களை முற்றும் மறந்தவராய், சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகத் தாம் செய்ய ஆசித்திருக்கும் உன்னத காரியங்கள்மேலேயே ஆழ்ந்த சிந்தனையாய், மலைமேலிருக்கும் தேவமாதாவின் கோவிலை நோக்கி குதிரையை நடத்திச் சென்றார்.

(Mont Serrat) **மோன் சொராத்** என்னும் பெயரைத் தமிழ்ப்படுத்தினால்: **“கருக்குவாள்மலை”** என்று சொல்லவேண்டியிருக்கும். இப்பெயருக்கிசைய உச்சியில் பற்கள்போல் அடுக்கடுக்காய் சிகரங்கள் அமையப்பெற்ற இந்த மலை தூரத்துப்பார்வைக்கு பிரமாண்டமானதோர் கருக்குவாள் போலவே தோன்றும். மலைச்சாரலில் அரைவாசிக் கதிகத்தொலை ஏறிச்சென்றால், எதிரே கிடுகிடு பாதாளமும், பிரமாண்டமான சுவர்போல் வளர்ந்தோங்கிய மலையும், இவைகளுக்கிடையில் சிறியதோர் மேடைபூமியையும் காணலாம். இவ்விடத்தில்தான் பிரசித்திபெற்ற திருயாத்திரை ஸ்தலமாகிய தேவமாதா ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது. அதற்கருகாமையில் மலைச்சிகரங்களுக்குள், பறவைக்கூடுபோல் அர்ச். ஆசீர்வாதப்பர் சபை சன்னியாசிகள் மடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் சுமார் நூற்றறுபது சன்னியாசிகள் இம்மடத்தில் வசித்து வந்தனர். தற்காலம் அங்கிருப்பவர்கள் தொகை சொற்பந்தான். இதற்கும் உயரத்திலிருக்கும் செங்குத்தான கொடுமுடிகளில், ஆங்காங்கு துண்டுதுண்டாய் முனிவர்கள் வசிக்கும் பதின்மூன்று குடிசைகளும், அவைகள் ஒவ்வொன்றை அடுத்து ஒவ்வொரு விசேஷ அர்ச்சியசிஷ்டவர்கள் பெயர்கொண்ட சிறு கோவில்களும் இருந்தன. இவைகளுள் வெகு உச்சத்தில் கட்டப்பட்டிருக்கும் ஒரு குடிசையும், அதைச்சேர்ந்த சிறு கோவிலும் பச்சாத்தாபக் கள்ளனாகிய **அர்ச். தீஸ்மாஸ்** என்பவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, **அர்ச்.**

தீஸ்மாஸ் குடிசையென்று அதற்குப் பெயர் வழங்கி
வந்தது. மடத்து சன்னியாசிகளுக்குள் அதிக
ஏகாந்தத்தையும் அருந்தவத்தையும் விரும்பியவர்
கள், மடாதிபதியின் அனுமதிபெற்று, அங்கு
சென்று ஒவ்வொருவர் ஒவ்வொரு குடிசையில்
புகுந்து,தனிவாசம் செய்வார்கள்.

இஞ்ஞாசியார் திருயாத்திரையாய் வந்த இது
சமயம் மேற்சொன்ன தீஸ்மாஸ் குடிசையில்
**ஷானேன் அருளப்பர்** (Juam Shanones) என்று
ஒரு குரு முனிவர் வாசமாயிருந்தார். அவர் அர்ச்
சியசிஷ்டதனத்தில் உயர்ந்த மகாத்துமா. பிறந்து
வளர்ந்து குருப்பட்டம் பெற்றது பிரான்சு தேசம்.
32-ம் பிராயத்தில் இத்திருஸ்தலத்தைத் தரிசிக்க
வந்தவர், அங்கிருந்த சன்னியாசிகளுடைய சுகிர்த
ஒழுக்கத்தைக்கண்டு மனம் உவந்து, அவர்கள் சபை
யில் பிரவேசித்தார். தாம் மரணமடைந்த எண்
பத்தெட்டாம் பிராயம்வரை புண்ணியசாங்கோ
பாங்க நெறியில் சற்றும் தளராது முன்சென்று,
மடத்து சன்னியாசிகளுக்கும் முனிவர்களுக்கும்
மேல்வரிச்சட்டம்போல் துலங்கிவந்தார். இஞ்
ஞாசியார் மோன்செராத்தில் சேர்ந்ததும், நெடு
நேரம் ஜெபம்செய்து, ஆத்துமத்தை நன்றாய்
ஆராய்ந்து சோதித்து, தன் பாவங்களையெல்லாம்
ஓர் சீட்டில் எழுதி வெகு மனஸ்தாபப் பெருக்
கத்துடன், இக்குரு முனிவரிடத்தில் பொதுப்
பாவசங்கீர்த்தனம் செய்தார். செய்து முடிய



மூன்று நாள் சென்றது. தன் எண்ணங்கள் கருத்து
கள் யாவையும் இக்குருவிடத்தில் வெளிப்படுத்தி
னார். தமது குதிரையை மடத்துக்குத் தானமாக
வும், வாளையும் சரிகையையும் தேவமாதாவின் பீட
முன் காணிக்கையாகவும் விட்டுப்போக அவரு
டைய சம்மதமும் பெற்றுக்கொண்டார்.

1522-ம் வருஷம் மார்ச்சு-மீ பரிசுத்த கன்னி
மரியாயிக்கு கபிரியேல் சம்மனசு மங்களவார்த்தை
சொன்ன திருநாளுக்கு முந்தின நாள் அன்று இரா
விருட்டில், ஒரு பிச்சைக்காரனை வெகு இரகசிய
மாய்த் தேடிப்பிடித்து, தாம் அணிந்திருந்த விலை
யுயர்ந்த வஸ்திரங்களையெல்லாம் அவன் கையில்
பதனமாய் நழுவ விட்டுவிட்டு, மலையடிவாரத்தில்
சேகரித்து வைத்திருந்த சாக்கு அங்கியைத் தரித்
துக்கொண்டார். கையில் ஊன்றுகோலும் பிடித்
துக்கொண்டார். இந்தக் கோலமாய் அகமகிழ்ந்து
முகம் மலர்ந்தவராய், தேவதாயார் பீடமுன்
சென்றார். முற்காலத்தில் "**சுத்தவீரன்**" என்னும்
மகிமைப் பட்டத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட
கிறீஸ்துவப் போர்வீரன், அப்பட்டத்தையும்,
அதற்குரிய வாளும், விருதும் பெற்றுக்கொள்
வதற்கு முந்தினநாள் உபவாசமாயிருந்து இராமுழு
வதும் நித்திரையின்றி தேவாலயத்தில், பீடத்துக்கு
முன் போர்க் கவசமணிந்து நின்று, தான் கைக்
கொள்ளப்போகும் மேன்மையான அந்தஸ்தின் கட
மைகளை வீரத்தன்மையாய் நிறைவேற்றுவதற்கு,

தேவ ஆசீர்வாதத்தை மன்றாடி, ஓர்வகை “**யுத்தாயுத நோன்பு**” அநுசரிப்பான் என்பதாக, முன் புத்தகங்களில் வாசித்தறிந்ததை நினைவுகூர்ந்தார். சேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த விரஞக கன்னித்தாயார் கரத்தில் தம்மை சேர்த்து ஒப்புக்கொடுத்து, ஏற்கனவே அதற்குரிய கோலமும் அணிந்துகொண்ட இஞ்ஞாசியார் தாமும் அதுபோல்,—அதிலும் அதிக ஞானார்த்தமான ஓர் “**யுத்தாயுத நோன்பு**”—அநுசரிக்க ஆசித்தார். அதற்காக, திவ்விய சுதன் மனிதனாய் அவதரித்த சுப செய்தியைக் கொண்டாடத் திருச்சபை ஆயத்தமாயிருக்கும் அன்றிரவில், தமது வாளையும் சுரிகையையும் தேவதாயார் பீடமுன் தொங்கவைத்துவிட்டு, ஒருசமயம் முழங்காலிலிருந்தும், ஒருசமயம் எழுந்து நின்றும், இவ்விதமாய் இராமுழுதும் ஜெபத்தில் செலவழித்தார்.

அதிகாலையில் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டு, திருநாளுக்கு வரும் ஜனங்களில் யாரும் தம்மை அறிந்துகொள்ளாதபடி, தீவிரமாய் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். பார்சலோனா நகருக்கு நேராய்ச்செல்லும் சாலையைவிட்டு, ஜனப்புழக்கமில்லாத வேறு மார்க்கமாய் உற்சாகமுடன் வழிநடந்து சென்றார்.

அவர் சந்தோஷம் அதிசீக்கிரம் துக்கமாக மாறிற்று, சுமார் மூன்று மைல் தூரம் போகுமுன் ஒரு



வன் அவரைப் பின்தொடர்ந்து ஓட்டமாய் ஓடிவந்து, “ஒரு பிச்சைக்காரனுக்கு விலையுயர்ந்த சில வஸ்திரங்கள் நீர் தானமாகக் கொடுத்ததுண்டோ? நீதிஸ்தர்கள் அவன் சொல்லுவதை நம்பமாட்டாமல், அவனைச் சிறையில் அடைக்கப்போகிறார்கள்” என்று ஆத்திரமாய் வினவினான். தன் நிமித்தம் குற்றமில்லாத ஓர் ஏழை துன்பத்துக்குள்ளாகலாச்சுதேயென்று கண்களில் நீர் ததும்ப, மனவருத்தமுற்றார். பிச்சைக்காரனுக்கு தீங்கு நேரிடாதபடி, விலையுயர்ந்த வஸ்திரங்களை அவனுக்கு கொடுத்தது தாமே என்று உடனே ஏற்றுக்கொண்டார். ஆனால் “ஐயா, நீர் யார்? எவ்விடம்? பேரென்ன” என்று ஆச்சரியத்தால் திகைத்து அவன் கேட்ட கேள்விகளுக்கு பதில் ஒன்றும் உரையாமல், “நன்மை செய்ய விரும்பியும், அவனுக்கு தின்மை செய்யும் நிர்ப்பாக்கிய பாவியாயிருக்கிறேனே” என்று தம்மைத்தாமே நொந்துகொண்டு வழியே சென்றார்.

துறைமுகப்பட்டணமாகிய பார்சலோனாவைச் சேர்ந்து; அங்கிருந்து கப்பலேறி ஜெருசலேமுக்கு யாத்திரைபோகும் கருத்தோடு இஞ்ஞாசியார் மோன்செராத் மலையைவிட்டுப் புறப்பட்டதாகத் தோன்றுகின்றது. அப்பட்டணத்துக்கு நேராய்ச் செல்லும் பெரிய சாலை வழியாய்ச் சென்றால் தமக்கு அறிமுகமானவர்கள் யாரையாகிலும் சந்திக்கும்படி நேரிடலாமென்றஞ்சி, வேறோர் மார்க்கத்தைத்

தெரிந்துகொண்டார். அவர் தெரிந்துகொண்ட இப்பாதையோவென்றால் மன்ரேசாவை நோக்கிச் சென்றது. அர்ச்சியசிஷ்டவருடைய அருமையான நண்பர்களிலொருவரான **ஜான்பாஸ்கால்** என்பவர், அர்ச்சியசிஷ்டவரைப்பற்றி தாம் அறிந்தவைகளை ஞாபகக்குறிப்பாக எழுதிவைத்தார். அதன்மூலியமாக, இஞ்ஞாசியார் மன்ரேசா போய்ச் சேர்ந்த விபரங்கள் தெரியவருகின்றன. இவருடைய தாயார் அகிநேஸ் பாஸ்கால், தெய்வ பக்தியுள்ள விதவை. வாடிக்கையாய் வசிக்கும் பார்சலோனா பட்டணத்தைவிட்டு, ஏதோ அலுவலாய் மன்ரேசாவுக்கு வந்து அங்கு சிலகாலம் தங்கியிருந்தாள். அடிக்கடி மோன்செராத் மலைத் தேவாலயத்தைப்போய் தரிசித்து வருவாள். மங்களவார்த்தைத் திருநாளான அன்றையதினமும் தேவாலயத்தைத் தரிசித்து, தானும் தன் மகனும், வேறு சிலருமாகத் திரும்பி வருகையில், ஏழைப் பரதேசிகோலமாய் ஒருவர் தாங்கித் தாங்கிப் பிரயாசையாய் நடந்து போவதைக் கண்டாள். அவர் முகம் மலர்ந்து தெளிந்து பெருந்தன்மையும் அன்பும் வாய்ந்திருந்தது. அவர் கண்களின் ஒளியில் ஓர் விசேஷ அருளும் தூய்மையும் துலங்கியது. தங்குவதற்கு சமீபத்தில் நோயாளிகள் சாலை ஏதாகிலும் உண்டாவென்று வெகு மரியாதையாய் பாஸ்காலம்மாளை அவர் கேட்டார். அந்தம்மாள் அவரைக் கண்ணுற்றதும், ஓர் அர்ச்சியசிஷ்டவரைக் கண்ணுற்றாற்போல்,



அவர்மீது அத்தியந்த வணக்கமும் அனுதாபமும் உடையவளானாள். சமீபமான நோயாளிகள் சாலை மன்ரேசாவில்தான் உண்டு; நாங்களும் அவ்வூருக்குத்தான் போகிறோம், எங்களோடு வந்தால், உமக்கு யாதொன்றும் குறையிராதபடி பார்த்துக்கொள்ளுகிறோம் என்று அவரை உபசரித்து அழைத்தாள். பரதேசியும் நன்றியறிந்த மனதுடன் அதற்கிணங்கினார். பிரயாணிகள் அவருக்காக தங்கள் நடையைத் தளர்த்தி மெதுவாய்நடந்து அவரைத் தங்களோடு அழைத்துச் சென்றார்கள். அர்ச். பிரகாசியம்மாள் பெயர்கொண்ட நோயாளிகள் சாலையில் அவருக்குத் தங்கியிருக்க இடமும் திட்டம்செய்து கொடுத்தார்கள். அகிநேஸ் பாஸ்காலம்மாள் தன் வீட்டிலிருந்து அவருக்குப் போசனம் அனுப்பி வைத்தாள்.

ஒருவரும் தம்மைப் பெரிதாய் எண்ணிப் பாராட்டப்படாதென்று அவர் எவ்வளவுதான் ஆசித்திருந்தும், அவர் மன்ரேசாவில் காலெடுத்து வைத்ததும், ஊரெங்கும் அவரைப்பற்றி பெரும்பேச்சு உண்டாயிற்று. அவருடைய வஸ்திரங்களைத் தானமாகப் பெற்ற அப்பிராணி பிச்சைக்காரனுக்கு நேர்ந்த சங்கடத்தால், அவர் உயர்குலத்தில் பிறந்தவரென்றும், சர்வேசுரனுக்காக உலகத்தை வெறுத்து பரதேசிக்கோலம் பூண்டவரென்றும் வெளியாயிற்று. இவ்விஷயத்தையும் வேறு சில விஷயங்களையும் ஆதாரமாகக்கொண்டு, மதியூகிகள் தங்கள் ஊரில்

தோன்றிய பரதேசியைப்பற்றி அதிசயங்கள் அனேகம் கூறத் தலைப்பட்டார்கள்.

சுமார் ஒரு வருஷகாலம் மன்ரேசா இஞ்ஞாசியாருக்கு வாசஸ்தலமாயிற்று. சற்று வழித்தங்கி, சுருக்காய் பார்சலோனா துறைமுகத்துக்குப் புறப்பட்டுப்போக வேண்டுமென்றல்லோ, இஞ்ஞாசியார் மன்ரேசாவுக்கு வந்தார். அப்படியிருக்க, அவ்வளவு காலம் அங்கு தாமதிப்பானேன்? சிலுவையில் மரித்த நாதன்மேலுள்ள சிநேகப்பெருக்கத்தால் அவர் பாடுபட்ட திருஸ்தலங்களைப்போய்த் தரிசிக்க மிக்க தாகமுற்றிருந்தார். என்றாலும், பாடுபட்ட நாதனுக்காக கடுந்தவம் செய்ய அதிலும் அதிக தாகமுற்றிருந்தார். அப்படித் தபம் செய்வதற்கு மன்ரேசா தகுந்த இடமாகக் காணப்பட்டதால், அதிகநாள் அங்கு தாமதிக்கத் தீர்மானித்தாராக்கும். அது எப்படியிருந்தாலும், அர்ச்சியசிஷ்டதனத்தின் உன்னத கொடுமுடியை நோக்கி, தமது தாசனை நடத்திவந்த தேவ திருக்கரம் ஞானஜீவியத்தின் அஸ்திவாரத்தை அவர் உள்ளத்தில் ஸ்திரமாய்ப் பதிப்பதற்கு மன்ரேசாவை முதற் பள்ளிக்கூடமாகத் தெரிந்துகொள்ளத் திருவுளமாயிற்று. இத்தேவ திருவுளத்தை பரிசுத்த கன்னிகை அவருக்குப் புதுமையாக அறிவித்ததாகவும் தோன்றுகின்றது. மன்ரேசாவுக்கு சமீபமாய் வரும்போது ஊருக்குள் செல்லுமுன் அங்கிருந்த ஓர் தேவாலயத்துக்குள் போய், நெடுநேரம் செபம் செய்தார்.



அவ்விடத்தில் தேவதாயார் அவருக்குத் தரிசனையாகி, மனதைத் தேற்றி, தவம் செய்ய அவர் போகவேண்டிய கெபியைக் குறித்துக் காட்டியதாகவும், இராவிருள் அடுத்து வந்தும் இஞ்ஞாசியார் வெளியே வராததால் கோவில்பிள்ளை ஆத்திரம் மிஞ்சி, நேரமாச்சுதென்கிற அடையாளமாக இறவு கோவில்களை பலமாய்க் குலுக்கியபோது, "போ, இஞ்ஞாசி, போய் உனக்கு நியமிக்கப்பட்டதைச் செய்து முடி" (Marchate Ignacio, y cumple destino) என்று ஓர் இனிய குரற்சத்தம் கேட்கப்பட்டதாகவும், பாரம்பரையாய்ச் சொல்லுகிறார்கள்.

மன்ரேசாவில் சேர்ந்த அன்றுதானே இஞ்ஞாசியார் தாம் ஆசித்திருந்த அருந்தவ சீவியத்தை ஆரம்பித்தார். அகிநேசம்மாள் அவருக்கு அனுப்பி வைத்த நல்லுணவை நோயாளிகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டார். அன்றன்றைக்கு வேண்டிய போசனத்தை அன்றன்று பிச்சையெடுத்து புசிக்கத் தீர்மானித்தார். ஞாயிற்றுக்கிழமை தவிர, மற்ற நாட்களில் தினம் ஒருவேளைமாத்திரம் புசிப்பார். மாம்சபோசனம், திராட்சை இரசம் முதலியவைகளை யாராகிலும் வலியக்கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளார். வெறும் அப்பமும், தண்ணீரும் தமக்குப் போதுமென்றிருந்தார். ஆயினும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாராகிலும் திராட்சை இரசம் கொடுத்தால், அதில் கொஞ்சம் அன்று ஏற்றுக்

கொள்ளுவார்; அன்று கொஞ்சம் கீரை முதலியவைகளும் சேர்த்துக்கொள்ளுவார். இதிலே முதலாய் சொகுசு மிஞ்சிப்போகாதபடி, தூசியையும் சாம்பலையும் தெளித்துக்கொள்ளுவார். முன்சொன்ன சாக்குத்துணிதான் அவருக்கு வஸ்திரம். தலையில் தொப்பியும், காலில் பாதரட்சையும் அணிந்தவரல்ல. சரீரத்தை ஓயாமல் குத்தி உபாதிக்கும்படி, உட்சட்டையாக மயிரொட்டியாணமும், இடையில் இருப்பு முள்ளொட்டியாணமும் எப்போதும் தரித்திருப்பார். சில சமயங்களில் இருப்பு முள்ளொட்டியாணத்துக்குப் பதிலாய் ஒருவகை முட்பூண்டைக்கொண்டு அவர் தாமே செய்த ஒட்டியாணம் ஒன்றைப் பிரயோகித்துக்கொள்ளுவார். இவ்வொட்டியாணம் இந்நாள்மட்டும் அவ்விடத்திலுள்ள ஓர் குடும்பத்தில் பூஜிதமாய்க் காப்பாற்றப்பட்டு வருகின்றது. சொற்பநேரம்தான் நித்திரை கொள்ளுவார். ஜெபம் செய்ய நடுச்சாமத்தில் எழுந்திருப்பார். சகிக்கக்கூடாத கடுங்குளிர் காலத்திலே முதலாய், வெறுந்தரையே அவருக்கு படுக்கை; ஓர் கல், அல்லது மாக்கட்டைதான் தலையணை. தினம் மும்முறை இருப்புச் சங்கிலிக் கசையால் இரத்தம் வரத் தம்மை அடித்துக்கொள்ளுவார். நித்தம் திவ்விய பூசை கண்டு, ஞாயிற்றுக்கிழமைதோறும் தவறாமல் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டு வருவார். பூசைநேரத்தில் சாதாரணமாய் சேசுக்



கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளின் வரலாற்றை வாசித்துவருவார். அடிக்கடி தேவாலயங்களைச் சந்தித்து வருவதுமன்றி, தினம் ஏழுமணிநேரம் முழங்காலிலிருந்து ஜெபம் செய்வதென்று தனக்குத்தானே கண்டிப்பான ஓர் ஒழுங்கு ஏற்படுத்திக்கொண்டார். மீதி நேரங்களில் வைத்தியசாலையில் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்துவருவார்.

இத்தொகைப்பட்ட இவ்வெளித் தபசுகளைவிட, அதிக வியப்புக்குரியது அவர் அநுசரித்துவந்த உள் தபசே. தாட்டிக மேட்டிமையும், யாவரும் தன்னைப் புகழ்ந்து பாராட்டவேண்டுமென்னும் பேராசையும், மகிமைப் பிரியமும் மிஞ்சியிருந்த தமது சுபாவத்தை அடக்கி ஒடுக்கி, திவ்விய குரு சென்ற சிலுவைப்பாதையில் அதை நடத்தத் தீர்மானித்தார். இதற்காக, சுபாவ எண்ணங்கள் பற்றுதல்களுக்கு நேர் விரோதமாய் நடக்கிறது,— சுபாவம் இச்சிப்பதை அதற்குக் கொடுக்கிறதில்லை, இனியதை நாடினால் கசந்ததைத் தேடிக் கொடுக்கவேண்டும், புகழ்ச்சியை நாடினால் இகழ்ச்சியை, பெருமையை நாடினால் சிறுமையைத் தேடவேண்டும் என்று தனக்குள் ஒரு நிபந்தனை செய்துகொண்டார். உயர்குலத்தில் பிறந்து, உயர்குலமாக்களோடு சீவித்து, பேச்சிலும், நடை உடை யாவற்றிலும் வெகு நாகரீகமும் திருத்தமுமாயிருந்தவர், இப்போதோ வேணுமென்று பிச்சைக்காரர்களோடு கலந்து புழங்குகிறார். அவர்களைப்போல்.

கொச்சையாய்ப் பேசுகிறார். சுரக்குடுக்கை கையிலேந்தி பிச்சை கேட்கிறார். அடர்த்தியாய் வளர்ந்து குவிந்து தொங்கிய தமது தலைமுடியை பார்வைக்கு அந்தமாக வெட்டி சீப்பிட்டுத் திருத்துவதில் முன் வெகு ஜாக்கிரதையாயிருந்தவர் இப்போது தலைமுடியும் தாடியும் தன்போக்கிலே காடு போல் வளர்ந்து சடைபிடிக்க விட்டுவிட்டார். கை நகங்களை முதலாய் வெட்டினவரல்ல. மனிதர் கண்முன் தம்மைத் தாழ்த்தக்கூடியதெதுவோ அதையெல்லாம் மனவூக்கமாய்த் தேடிச் செய்தார். சரித்திரத் துவக்கத்தில் நாம் கண்ட லோயோலா இஞ்ஞாசியார் இவர்தானா! இப்பொழுது அவரிருக்கும் கோலத்தைக்கண்டு கேடுகெட்ட பிச்சைக்காரர்கள் முதலாய் நகைத்துப் பரிகசிக்கத் தலைப்பட்டார்கள். அவரைக் கண்டால் தெருப்பிள்ளைகளெல்லாம் "சாக்குத்துணிப் பண்டாரத்தைப் பாருங்கோ, சாக்குத்துணிப் பண்டாரத்தைப் பாருங்கோ" என்று ஓலமிட்டு அவர் பிறகே ஊர்வலம் வருவார்கள். அவரோவென்றால், முன்னொருநாள் ஜெருசலேம் தெருவீதியில் பைத்தியகாரனைப்போல் நிந்தித்துப் பரிகசிக்கப்பட்ட நாதனை உள்ளத்தில் சிந்தித்து, அவர்மேலுள்ள நேசத்தால் தான் ஆசித்துத் தேடியது கைகூடிவந்ததென்று அகமகிழ்ந்து சந்தோஷிப்பார்.

மேலும் அழையாமலும் நிந்தை அவமானங்கள் அவரைத் தேடிவந்தன. தூர்த்தன் ஒருவன் இஞ்



ஞாசியாரை மன்ரேசாவில் கண்ட நாள்முதல் காரணமின்றி அவரைப் பகைத்துவந்தான். 'இந்தப் பரதேசி ஒரு கள்ளஞானி' என்று ஊரெல்லாம் தூற்றுவான். தினந்தோறும் அர்ச்சியசிஷ்டவரைப் பின்றொடர்ந்து பரிகாசமாக அவர் நடக்கிறது போல் நடந்து காட்டுவான். அவர் அசைகிறது போல் அசைவான். தலையை ஆட்டி, முகத்தைச் சுழித்து, பல்லைக்கடித்து, கண்ணைச்சிமிட்டி குறும் பார்வைகள் பார்த்து ஊமைக்கூத்தாடி வானரக் கோரணிகள் பல செய்வான். இவைகள் செய்து சலித்ததும், வாயில் வந்தபடி வெகு அவதூறாய் அவரை நிந்திப்பான். மகா உரோசகுணமுள்ள உயர்குலப் பிரபுவும் சுத்தவீரருமான லொயோலா இஞ்ஞாசியாருக்கு, இம்மனிதனுடைய அற்ப நடத்தை எவ்வளவோ சகிக்கக்கூடாத இமிசையாயிருந்திருக்க வேண்டுமென்று சொல்லவும் தேவையா? ஆயினும் இவ்விழிகுண மனிதன்மேல் அவர் கிஞ்சித்தேனும் கோபங்கொண்டவரல்ல.

அகத்தில் கடும் போரின்றி இலகுவாய் ஜெயங்கொண்டாரென்று எண்ணவேண்டாம். ஓயாமல் போராடித்தான் ஜெயிக்கவேண்டியிருந்தது. விசேஷமாய் ஓர் சமயம், தாம் அநுசரித்துவந்த ஜீவியத்தின்மேல் சொல்லிமுடியா வெறுப்புற்று மனந்தத்தளிக்கலானார். அணிந்திருந்த சாக்குத்துணி, அருந்திவந்த உணவு, பிச்சைக்காரர்களுடைய துப்புரவற்ற வழக்கங்கள், அவர்களுடைய

அற்ப நடத்தைகள், நோயாளிகளுடைய அருவருப்பான பிணிகள், இவையெல்லாம் அவருக்கு மகா அரோசிகமாயிருந்தன. சாத்தானும் பல கபடநியாயங்களால் அவரை அவதைரியப்படுத்தப் பிரயத்தனப்பட்டது. ஆனால் தேவவரப்பிரசாதத்தின் உதவியால் மன உறுதி விடாமல், சாத்தானையும், சாத்தானுக்குச் சனுவாயிருந்த தம் சுபாவத்தையும் ஒருமிக்க ஜெயிப்பதென்று தீர்மானித்து, மகா அருவருப்பான பிணிகளால் வருந்தும் நோயாளிகள் மத்தியில் விரைவாய்ச்சென்றார். சென்று, நெடுநேரம் அவர்கள் மத்தியில் அமர்ந்து அவர்களுக்குப் பணிவிடை புரிந்தார். சோதனையும் அகன்றது.

இவ்வித சீவியத்தில் சுமார் நாலுமாதகாலம் சென்றது. சர்வேசுரனுடைய திவ்விய இஸ்பிரீத்துவினால் தூண்டி நடத்தப்பட்ட அவர் ஆத்துமா அதிக ஏகாந்தத்தையும், அதிக உத்தமமான நேச ஐக்கியத்தையும் நாடியது. மனிதர் கண்ணுக்கு மறைந்து தனிவாசம் செய்வதற்குத் தகுந்ததோர் இடமும் அவருக்குத் தென்பட்டது. ஆங்கு சர்வேசுரனுடைய திவ்விய இஸ்பிரீத்துவானவர் அவர் ஆத்துமாவில் நிகழ்த்திய ஆச்சரியங்களை என்னென்று சொல்லலாம்!

---

## 3-ம் அதிகாரம்.

### மன்ரேசா (தொடர்ச்சி.)

மன்ரேசா கெபி—துஷ்ட அரூபியின் பற்பல கபடதந்திரங்கள்—மனச்சோர்வு—(Scruples: ஸ்க்ரூப்ல்ஸ்) என்று சொல்லப்படும் "வீண் சந்தேகம்" என்னும் கொடும் தீ—கடைசியாய் அவர் ஆத்துமம் ஆறுதலும் அமரிக்கையுமடைந்தது—பசாசின் தந்திரமாய்கைகளால் வருந்துபவர்களை நடத்துவதில் தேர்ந்த ஆசிரியன்.

மன்ரேசா ஊரிலிருந்து சுமார் ஐந்நூறு அடி தூரத்திலிருக்கும் ஓர் பள்ளத்தாக்கில் கற்பாறையில் சுபாவமாய் அமையப்பெற்றதோர் கெபியைக் காணலாம். ஏறக்குறைய இருபத்தாறு சாண் நீளமும், எட்டுச்சாண் அகலமும், சராசரி பதினொரு சாண் உயரமுமுள்ளது. பாறையிலிருக்கும் ஒரு பிளப்புவழியாய்ப் பார்த்தால் மோன்சேராத் மலைத் தேவாலயம் தலையில் தோன்றும். அடர்த்தியாய் வளர்ந்து மூடிய காட்டுச்செடிகளுக்குள் மறைந்திருந்த இக்கெபி அங்கிருந்ததாக முதலாய் அநேகருக்குத் தெரியாதிருந்தது.

இக்கெபிலை இஞ்ஞாசியார் தமது வாசஸ்தலமாக்கி முன்னிலும் இருமடங்கு அதிக ஜெபமும் தவமும் செய்ய ஏற்பட்டார். சில சமயங்களில் இராமுழுதும் ஜெபத்தியானம் செய்து, மூன்று நாள், நாலுநாள் பரியந்தம் யாதொன்றும் புசியாதிருப்பார். இவ்வருந்தவங்களால், தேகம் மெலிந்து முகம் சுண்டி வெளுத்துப்போயிற்று. பலவீனம் மிகுதியால் அடிக்கடி மூர்ச்சையாய்ச் சோர்ந்து விழுவார். மிஞ்சின உபவாசத்தால் ஜீரணசக்தி சீர்குலைந்து, வயிற்றில் அகோர நோவுகளும் உற்பத்தியாயின.

சரீரமாத்திரமேயன்று, ஆத்துமமும் சொல்லிமுடியா உபாதைக்குள்ளாயிற்று. இதுவரை தாம் பிரவேசித்த புதுசீவியத்தில் சாதாரணமாய் அமரிக்கையும் ஞான ஆறுதலும் உற்சாகமுமுற்றிருந்தார். ஆனால் தேவ ஊழியத்தை அண்டிப்போகிற எந்த ஆத்துமமும் ஒரு சமயமில்லாவிட்டால் வேறோர் சமயம், ஒருவகையிலில்லாவிட்டால் வேறோர் வகையில் சோதனை என்னும் நெருப்பில் உழன்று வருந்தியல்லவோ, தூய்மையும் துலக்கமும் அடையவேண்டியிருக்கின்றது! அப்படியிருக்க, அர்ச்சியசிஷ்டதனத்தில் உன்னதகொடுமுடியை அடைந்து, பிற்காலத்தில் எண்ணிறந்த ஆத்துமாக்களுக்கு ஞான ஜீவியத்தில் தேர்ந்த வழிகாட்டியும் ஆசிரியனுமாயிருக்கும்படி தேவ திருவுளத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட லொயோலா இஞ்ஞாசியார் சில



காலம் இவ்வித தந்திர மாய்கைகளில் உழன்று அனுபவம் அடையும்படி அத்தேவ திருவுளம் விட்டுவிட்டதென்றால், அதில் ஆச்சரியமென்ன! பட்டனுபவியாதவர்களுக்கு, இவ்வித தந்திர சோதனைகளின் தன்மை முதலாய் இன்னதென உணர்ந்துகொள்ளுவது அசாத்தியமாயிருக்கும். ஏனெனில் இவ்வித ஆத்துமாக்களைக் கெடுக்க, சாத்தான் பல சமயங்களில் தன் துர்க்கந்த இருண்ட சுபாவத்தை மறைத்து, பிரகாச சம்மனசு வேஷம் பூண்டு, வெகு கபட சாதுரியமாய், நன்மையைப் போதிக்கிறதாக நடித்து, தின்மையை விதைக்கத் தேடும்.

ஓர்நாள் தேவாலயத்துக்குள் பிரவேசிக்கும் தருணத்தில், முன்காரணமின்றி திடீரென அவர் ஆத்துமம் கலங்கி அவதைரியமுற்றது. "ஒருவேளை எழுபது வருஷகாலம் சீவிக்கவேண்டியிருக்கலாம். அவ்வளவு காலம் இவ்வருந் தவசீவியத்தில் நீ எவ்விதம் நிலைத்திருக்கப்போகின்றாய்?" என ஏதோ ஓர் அந்தரங்க வாக்கியம் உள்ளத்தில் சப்தித்தாற்போல் அவருக்குத் தோன்றியது. ஆனால் இது சதிசெய்யும் சத்துருவின் மாய்கையென்றறிந்த இஞ்ஞாசியார், உடனே: "நீச அரூபியே, நான் இன்னும் ஒரு மணி நேரம் உயிரோடிருப்பேனென்று வாக்குறுதி கொடுக்க உன்னால் கூடுமோ?" என்று சொல்லி சோதனையை ஜெயித்தார்.

இதற்குப்பின் ஒருசமயம் அவர் ஆத்துமம் ஜெபத்தியானத்திலும் மற்றும் ஞான முயற்சிகளிலும் சற்றும் பிரீதியின்றி காய்ந்து வரண்டு சலிப்புற்றிருக்கும். ஒருசமயம் தன்மேல் அழுத்திக்கொண்டிருந்த பளுவான பாரத்தை யாரோ சடுதியில் எடுத்தெறிந்தாற்போல, சலிப்பெல்லாம் நீங்கி, ஆறுதலும் சந்தோஷமுமுற்றிருக்கும். இவ்விசேஷத்தைக்கண்டு இஞ்ஞானியார் ஆச்சரியப்பட்டு: "ஆ என்ன நூதன சீவியமிது!" என்று தமக்குள் சொல்லிக்கொள்ளுவார்.

வேறோர் சமயம் அகோர காய்ச்சல்கண்டு மரணம் அடுத்திருப்பதாக எண்ணி அதற்கு ஆயத்தம் செய்ய ஆரம்பித்தார். அதுவேளை பார்த்து, சாத்தான் அவரை அகங்காரம் எனும் படுகுழியில் விழத்தாட்ட வெகு கபட தந்திரம் செய்தது. "இத்தனை அருந்தவங்கள் செய்தபின் மரணத்துக்கு அஞ்சுவானேன்? சர்வேசுரன் சமுகத்தில் நான் ஏற்கனவே நீதிமானென்பதற்கு ஐயமென்ன? என் மரணம் ஓர் அர்ச்சியசிஷ்டவருடைய மரணமாயிருக்குமென்பதற்கு சந்தேகமேது?" என்று தற்செருக்கு நிறைந்த எண்ணம் அவருள்ளத்தில் உதித்தது. இஞ்ஞானியார் உடனே திடுக்கிட்டு தன் முழுமன சக்தியோடு அதை எதிர்த்துப்போராடினார். தன் பாவங்களை ஒவ்வொன்றாய் ஞாபகப்படுத்தி, இத்தனை பாவங்களைச்செய்த நீசப்பாவியாகிய நான் பரலோகத்துக்குப் பாத்திரமாயிருப்ப



தெப்படி? என்று தம் இருதயத்தில் தாழ்ச்சியைப் பிறப்பிக்கப் பிரயாசைப்பட்டார். திரும்பத்திரும்ப, வீண் கர்வசிந்தனை வீறுகொண்டெழும்பும். திரும்பத்திரும்ப இஞ்ஞானியார் மன ஊக்கமாய் அதையெதிர்த்துப் போராடுவார். அகோர சுரத்தால் பட்ட அவஸ்தையைவிட, இச்சோதனையை ஜெயிக்க அவர் பட்ட அவஸ்தையே அதிகக்கொடிதாயிருந்தது. சுரம் சற்றே தணிந்து, தற்சமயம் மரண ஆபத்து நீங்கியிருப்பதாகக் காணும்போது, அருகிலிருப்பவர்களைப்பார்த்து திரும்பத் தான் மரண ஆபத்திலிருப்பதாகக் கண்டால்: "பாவி, நீ சர்வேசுரனுக்குத் துரோகமாகச் செய்த பாவங்களை நினைத்துக்கொள்" என்று உரத்த சத்தமாய் அடிக்கடி சொல்லும்படி, சர்வேசுரன்மேல் அவர்களுக்குள்ள சிநேகத்தைக் குறித்து, அவர்களைக் கெஞ்சிக்கேட்பார். ஆயினும் அர்ச்சியசிஷ்டவர் தாமே தம்மைப்பற்றி சொல்லியிருக்கிறபடி, இவ்வித சோதனையை முற்றும் ஜெயித்தடக்க இன்னும் இரண்டு வருஷம் சென்றது.

பாவமென்பதைப் பற்றற வெறுத்து, தேவ இஷ்டப்பிரசாதத்தைத்தன் உயிரிலும் பன்மடங்கு அதிகமாய்க்கருதி, இருதய பரிசுத்ததனத்தைக் காப்பாற்றுவதில் வெகு கவலையாயிருக்கும் சில ஆத்துமாக்களை சிலகாலம் கொடுமையாய் உபாதிக்கும் கொடும் தீ ஒன்றுண்டு. பாவம் செய்த ஆத்துமம் மனச்சாக்ஷியின் கண்டனத்தால் படும் மனக்

குத்தைப்போல் இதுவும் மனதைக் குத்தி உபாதிக்குமென்றாலும், மனக்குத்து என்கிற பெயர் இதற்குச் செல்லவே செல்லாது. ஐரோப்பிய பாஷையில் இதை "Scruples" "ஸ்க்ரூப்ல்ஸ்" என்பார்கள். தமிழில் இதை எப்படி சொல்லலாம்? வீண் சந்தேகம், மனக்கலக்கம் என்போமா? மனச்சாக்ஷிக்கடுத்த இரு காரியங்களில், எது உண்மையென்று தெளிவாய்த் தெரியாததால், உள்ளத்தில் உண்டாகும் தத்தளிப்பு என்போமா? எப்படிச் சொன்னாலும் பட்டனுபவித்தவர்களுக்கும் ஞானஜீவியம் நன்றாய் அறிந்தவர்களுக்குமன்றி, மற்றவர்களுக்கு இதன் தன்மை எளிதில் புலப்படாது. ஆயினும் இதைப்பற்றிப் பேசுவதற்கு ஒரு பெயர் வேண்டியிருப்பதால், "**வீண் சந்தேகம்**" என்னும் வார்த்தையை அதற்காக இங்கு பிரயோகிப்போம். "பாவமல்லாததைப் பாவமென்று மனதாரத் தீர்மானித்துக்கொள்ளுதல்: உதாரணமாக, சிலுவை அடையாளமாய்க் கிடந்த வைக்கோல்மேல் தற்செயலாய்க் கால்பட்டதால், தான் பாவம் கட்டிக்கொண்டதாக சுய புத்தியாய் தீர்மானித்துக் கொள்ளுதல் வீண் சந்தேகம் என்று சாதாரணமாய்ச் சொல்லுவார்கள். ஆனால் இது அறிவுக் குறைச்சலால் உண்டாகும் ஓர் தப்பான தீர்மானமேயன்றி, மெய்யான வீண் சந்தேகமல்ல. அச்சிலுவைமேல் கால்பட்டபின், அல்லது வேறாயாதாவது நினைத்தபின், அல்லது சொன்னபின்,



அல்லது செய்தபின், பாவம் செய்ததாக என்னையன்றியும் நினைவு வருகின்றது. இன்னொரு பக்கத்தில் பாவம்செய்யவில்லையென்றும் தோன்றுகிறது; சந்தேகமுமிருக்கின்றது,—(அதாவது: ஒருவேளை பாவம்செய்தேனோவென்று அச்சமாயிருக்கின்றது) —சந்தேகமுமில்லை என்பதால் மனதில் கலக்கமுண்டாகின்றது. இதுதான் சத்துருவின் சற்பனையால் உண்டாகும் மெய்யான "**வீண் சந்தேகம்**" என்று இஞ்ஞாசியார் தாமே இதன் தன்மையை விபரித்தெழுதி, இவ்வித ஸ்திதியிலிருக்கும் ஆத்துமாக்கள் அநுசரிக்கவேண்டிய வகையையும் கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆனால் பிறருக்குக் கற்றுக்கொடுக்குமுன், மன்ரேசா கெபியில் தாமே தம் ஆத்துமத்தில் அதன் குணாகுணங்களைப் பரீட்சித்தறியவேண்டியதாயிற்று.

மோன்செராத்தில் எவ்வளவோ கவலையாய் ஆத்தும சோதனைசெய்து பொதுப்பாவசங்கீர்த்தனம் செய்திருந்தும், இப்போது இதைச் சொல்லவில்லை, அதைச் சொல்லவில்லையென்று வீண் சந்தேகம் அவர் உள்ளத்தில் மொய்த்தெழும்பியது. அதனால் அவர் ஆத்துமம் வெகு சஞ்சலமுற்றது. அப்படி முன் சொல்லவில்லையென்று தோன்றினவைகளைத் திரும்பத்திரும்ப பாவசங்கீர்த்தனத்தில் சொல்லியும், அவர் ஆத்துமம் அதனால் அற்பமும் சமாதானம் அடையவில்லை. ஞானகாரியங்களில் அனுபவமுள்ளவர்களிடத்தில் ஆலோசனை கேட்

டார். அதிலும் அவருக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. அவ்வூர் பெரிய கோவிலில் பிரசங்கம்பண்ண வந்திருந்த ஒரு குருவானவரிடம் ஆலோசனை கேட்டார். அவர் ஞாபகத்துக்கு வரக்கூடியதையெல்லாம் திரும்ப எழுதி, திரும்ப பொதுப்பாவசங்கீர்த்தனம் செய்யும்படி சொன்னார். இஞ்ஞாசியார் அவ்விதமே செய்தார். இப்படிச் செய்தபின்பும் சந்தேகங்கள் ஒழிந்தபாடில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தன. கடந்துபோன ஜீவியத்தைப்பற்றிய எதுவையும் பாவசங்கீர்த்தனத்தில் இனிமேல் சொல்லவேண்டாமென்று தன் ஆத்தும குருவானவர் சேசுநாதர்சுவாமி பேரால் தனக்குக் கட்டளையிடுவாரேயாகில், தன் சந்தேகங்கள் தீர்ந்து போகக்கூடுமென்று சில சமயங்களில் அவருக்குத் தோன்றும். அப்படி அவர் கட்டளையிடவேண்டுமென்னும் ஆசையும் அவருக்கு இருந்தது. ஆனால் தாமாக ஆத்தும குருவானவருக்கு இவ்வித ஆலோசனை கொடுக்கத் துணியவில்லை.

இஞ்ஞாசியார் ஒன்றும் சொல்லாதேபோனாலும், யாதாகிலும் பாவமென்று தெளிவாய்த்தெரிந்தாலன்றி, மற்றப்படி கடந்துபோனவைகளைப்பற்றி ஒன்றும் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லவேண்டாமென்று ஆத்தும குருவானவர் அவருக்குக் கற்பித்தார். ஆனால் மஞ்சட்காமாலை நோயால் வருந்துகிறவனுக்கு சகலமும் மஞ்சள் நிறமாகவே-



தோன்றும். அதுபோல் தற்சமயம் அவர் ஆத்துமா இருந்த அந்தஸ்தில், சகலமும் அவருக்குப் பிரத்தியட்சமாய்ப் பாவம்போல் தோன்றியதால், இக்கட்டளையாலும் அவர் அமைதியடையவில்லை. இது காலமெல்லாம் வழக்கமாய்ச் செய்துவந்த நெடுஞ்செபம், தவம், மற்றும் ஞானமுயற்சிகளில், சற்றுங் குறைத்தவரல்ல;—மேன்மேலும் அதிக மனஊக்கமாகவே அவைகளைச் செய்துவந்தார். இதினாலும் அவருக்கு ஆறுதல் உண்டாகவில்லை. ஆறுதலின் ஊற்றாகிய திவ்விய சற்பிரசாத விருந்துமுதலாய் அவருக்கு ஆறுதல் தரவில்லை. அதற்கு விரோதமாய் பல சமயங்களில் திவ்விய சற்பிரசாதம் அருந்த பீடத்தை அணுகிப்போகும்போதே, எங்கே யூதாஸைப்போல் தேவதுரோகம் கட்டிக்கொள்ளப் போகிறேனோவென்னும் பயங்கரமான நினைவு அவர் உள்ளத்தில் பளிச்சென்று உதிக்கும். அதினால் மனக்கிலேசம் மிஞ்சி வெகுவாய் தத்தளித்து வருந்துவார். இவ்விதம் பலமாதம் சென்றது. ஓர்நாள் தம்மை உபாதித்த சிந்தாகுலத்தைத் தாங்கமாட்டாமல், சர்வேசுரனை நோக்கி: " ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யத் தீவிரியும்; ஏனெனில், மனிதனிடத்தில் எனக்கு உதவியில்லை, எந்த சிருஷ்டியிடத்திலும் எனக்கு ஆறுதலில்லை. இவ்வாறுதல் எங்கு கிடைக்குமென்று தெரிந்தால், அதைத் தேடி அடைய எவ்விதப் பிரயாசைக்கும் பின்வாங்கமாட்டேன். ஆண்டவரே, எங்கே என்று

காண்பித்தருளும். என் ஆத்துமா அமைதி அடைய, தேவரீர் ஓர் நாய்க்குட்டியைமுதலாய் எனக்கு வழிகாட்டியாகக் காண்பித்தால், அதையும் பின்செல்ல ஆயத்தமாயிருக்கிறேன்'' என்று அபயமிட்டார். ஆனால் இவ்வேளை சர்வேசுரன் தமது முகத்தைத் திருப்பிக்கொண்டாற்போல் அவருக்குத் தோன்றிற்று. சுரக்காய்ச்சல்போல், அவர் மனதை உபாதித்த சிந்தாகுலம் நாளுக்குநாள் அதிகரித்தது. அவநம்பிக்கை என்னும் கொடிய சோதனையும் அவர் ஆத்துமத்தில் தாவி, அவரை அலைக்கழிக்கத் தலைப்பட்டது.

இச்சமயம் இஞ்ஞாசியார் அர்ச். சாமிநாதர் சபைச்சன்னியாசிகள் மடத்தின் மேல்மாடத்தில் ஓர் அறையில் தங்கியிருந்ததாகத் தெரியவருகின்றது. அவ்வறையிலிருந்த ஒரு பலகணி வழியாய் தலைகுப்புற விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள அவநம்பிக்கையால் அடிக்கடி பலத்த சோதனை உண்டானதால், மனந்திடுக்கிட்டு வெகுவாய் வருந்தினார். "ஆண்டவரே! தேவரீருக்குப் பொருந்தாத இத்துரோகத்தை ஒருபோதும் செய்யமாட்டேன்'' என்று உரத்த சத்தமாய்த் திரும்பத் திரும்பச் சொல்லி, சோதனையோடு போராடிவந்தார். வெகுகாலமாய் சர்வேசுரனிடத்தில் தான் மன்றாடியதை அடையும்படி, வனவாசி ஒருவர் எடுத்த உபாயம் இத்தருணம் அவர் ஞாபகத்



திக்கு வந்தது. அவ்வனவாசி தன் மன்றாட்டை சர்வேசுரன் கேட்டுத் தந்தருளுமட்டும், பலநாள் ஒன்றும் புசியாமல், சுத்த உபவாசமாயிருந்தார். தானும் அவ்விதமே செய்யத் தீர்மானித்து, ஒரு ஞாயிற்றுக்கிழமைதுவக்கி மறு ஞாயிற்றுக்கிழமை மட்டும், அன்னபானம் முற்றும் நீக்கி, சுத்த உபவாசமாயிருந்தார். மறு ஞாயிற்றுக்கிழமை பாவசங்கீர்த்தனம் செய்யப் போனபோது, தாம் அநுசரித்துவரும் உபவாச விரதத்தைப்பற்றி ஆத்தும குருவானவரிடத்தில் சொன்னார்,—ஆத்தும குருவிடத்தில் எதுவிஷயத்திலும் திறந்த இருதயமுடையவராயிருந்தார். குருவானவர் உடனே உபவாசத்தை நிறுத்திப் போசனம் அருந்தும்படி கட்டளையிட்டார். இஞ்ஞாசியார், இன்னும் சில தினம் விரதத்தை விடாதிருக்க ஆசித்திருந்தாலும், ஆத்தும குருவுக்கு உடனே கீழ்ப்படிந்தார். அன்றும் அதற்கு மறுநாளும் அவர் ஆத்துமத்தில் அமைதியும் ஆறுதலுமிருந்தது. ஆனால் மூன்றாம் நாள் பழையபடி, முந்தின பாவசங்கீர்த்தனங்களைப்பற்றிய சந்தேகங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் மொய்த்தெழும்பி அவரை உபாதித்தன. திரும்பப் பொதுப்பாவசங்கீர்த்தனம் செய்வது அவசியமென்றெண்ணலானார். இவ்வித சஞ்சல வருத்தங்களால், தான் கையேற்றுக்கொண்ட ஜீவியத்தின் மேல் வெகு சலிப்பும் ஆயாசமும் அவருக்குண்டாயிற்று.

தூக்கமயக்கத்தினின்று ஒருவனைத் தட்டியெழுப்புவதுபோல், சர்வேசுரன் நமது தாசனை வீண் சந்தேக மயக்கத்தினின்று தட்டி எழுப்பத் திருவுளமானார். நல்ல அரூபி, கெட்ட அரூபி என்னிரு வகை அரூபிகளால் நமதாத்துமத்தில் எழும்பும் சிந்தனை பற்றுதல்களைப் பகுத்தறிவதில், தேவவரப் பிரசாதத்தின் உதவியால் ஏற்கனவே லொயோலா மாளிகையில் அவர் சற்று அநுபவம் அடைந்திருந்ததாகக் கண்டிருக்கிறோமல்லவா? அவ்வநுபவத்தைக்கொண்டு, கெட்ட அரூபி தம் ஆத்துமத்தில் பிரவேசித்து அதை அலைக்கழிப்பதற்கு பிரயோகித்த உபாயங்களை ஆராய்ந்து பரிசோதிக்கலானார். பரிசோதித்து இனிமேலாகக் கடந்துபோனதை ஒருபோதும் பாவசங்கீர்த்தனத்தில் சொல்வதில்லையென வெகு ஞானத்தெளிவோடு தீர்மானஞ் செய்தார். அதுமுதல் வீண் சந்தேகமும் மற்ற சோதனைகளும் அவரைவிட்டு அகன்றன. வீண் சந்தேகம் முதலிய சோதனைகளால் வருந்துபவர்களைக் குணமாக்குவதில் தேர்ந்த ஆசிரியனுமானார்.

வெகுகாலத்துக்குப்பின், 1536-ம் வருடம், ஜூன் மாதம் 18-ம் தேதியில் வெனீஸிலிருந்து பார்சிலோனாவில் வசித்த ரோஜா தெல்லா தெரேசம்மாள் என்ற கன்னியாஸ்திரிக்குத் தேறுதலாக அர்ச்சிய சிஷ்டவர் எழுதிய ஓர் கடிதத்திலிருந்து சில விஷயங்களை இங்கெடுத்துரைக்கலாம். மன்ரேசாவில் அவர் தம் ஆத்துமாவில் பட்டநுபவித்தறிந்தவை



கள் இதில் சுருக்கமாய் விளங்கும். அவர் எழுதுவது:

“நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய வரப்பிரசாதமும், அவரது நித்திய நேசமும் நம்மோடு என்றும் இருப்பதாக!” * * * *

“நமதாண்டவராகிய சர்வேசுரனுக்கு ஊழியம் செய்ய விரும்பி துவக்குகிறவர்கள்மட்டில் சத்துரு சாதாரணமாய் செய்யும் சற்பனை யாதெனில், வருத்தங்களையும், இடையூறுகளையும் அவர்கள்முன் திரளாய் எழுப்பிவிடும்,—இவர்களைச் சிதைக்க சத்துரு பிரயோகிக்கும் முதல் ஆயுதம் இதுவென்று சொல்லலாம். உன் பந்துக்கள், சிநேகிதர்கள், திரவிய சம்பத்தெல்லாம் விட்டு, இவ்வளவு கடின தவத்தில் உன் ஆயுள்நாளெல்லாம் எவ்விதம் சீவிக்கப்போகிறாய்? சற்றும் மன ஆறுதலில்லாத இத்தனிவாசத்தை எங்ஙனம் நீ தாங்கப்போகிறாய்? இவ்வளவு ஆபத்தெல்லாம் என்னத்துக்கு? வேறு வழியாய் நீ இரட்சணியம் அடையக்கூடாதா? என்று, சத்துரு ஒவ்வொருவருக்கும் போதிக்கும். பற்பல கஷ்ட வருத்தங்களை மனதில் காண்பித்து, மனுஷர் சாதாரணமாய் சீவிப்பதிலும் நாம் அதிக காலம் சீவிக்கவேண்டியிருப்பதுபோல் தோற்றுவிக்கும். அதேசமயத்தில், தம்மையண்டி ஊழியஞ் செய்பவர்களுக்கு ஆண்டவர் வழக்கமாய்க் கொடுத்தருளும் அதிமனோகரம்நிறைந்த ஞானசந்

சேர்க்கும், ஞான ஆறுதல் முதலியவைகளை நமது சிந்தையிலிருந்து அகற்றிவிடும்."

"சேசுக்கிறீஸ்துநாதருடைய ஊழியத்தில் புதிதாய்ப் பிரவேசித்த தாசன், தன் சிருஷ்டிகராகிய கர்த்தரோடு அன்பதரிதப்பட மனப்பூரணமாய்ச் சம்மதித்து, மேற்சொன்ன விக்கினங்களையெல்லாம் ஜெயித்தால், உடனே சத்துரு வேறோர்வகை ஆயுதத்தைக் கையாடி அவனைச் சிதைக்கப் பிரயத்தனப்படும். அதாவது, அகங்காரம் அல்லது வீண் பெருமையைக்கொண்டு, தன்னிடத்தில் வெகு நன்மைத்தனம் அர்ச்சியசிஷ்டத்தனம் இருப்பதாக எண்ணும்படி சிந்தையை எழுப்பி, புண்ணிய சாங்கோபாங்கத்தில் அவன் மெய்யாகவே இருக்கும் படியைவிட அதிக உன்னதமான படியில் அவனைத் தூக்கிவைக்கும். சேசுக்கிறீஸ்துநாதருடைய ஊழியன் (மாற்றான் தொடுத்துவிடும்) இப்பாணத்தாலும் சிதைபடாது, தன்னைத்தானே தாழ்த்தி, ஒடுக்கி, சத்துரு எழுப்பிவிடும் தற்பெருக்கான எண்ணத்தைத் அபேக்ஷித்து; எதிர்த்து நின்றால், அப்போது பொய்த்தாழ்ச்சி என்னும் மூன்றாம் வகை ஆயுதத்தைச் சத்துரு பிரயோகிக்கும். * * * சர்வேசுரன் தனக்கு செய்தருளிய வரப்பிரசாதங்கள், தன்னுடைய நற்கிரியைகள், நல்ல பிரதிக்கினைகள், ஆசைகளில் எதையாகிலும்பற்றிப் பேசும்படி நேரிட்டால், தன்னைப்பற்றி நன்மையானதைப் பேசுவதினால்தான் ஏதோ வீண்பெருமைக்கு இடம்



கொடுப்பதாக எண்ணி, சிந்தை கலங்கும்படி செய்யும். சர்வேசுரனிடத்திலிருந்து தான் பெற்ற வரப்பிரசாதங்களால், தனக்காகிலும் மற்றவர்களுக்காகிலும் யாதொரு பிரயோசனமுமுண்டாகாதபடி, அவன் அவைகளைப்பற்றி என்றும் பேசாதிருக்கத்தக்கதாக சர்வ பிரயத்தனம் பண்ணும்."

"ஆனதால் சத்துரு செய்யும் உபாயத்தைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அது நம்மை உயர்த்தூக்கி வைத்தால், நாம் நமது பாவங்களையும் நிற்பாக்கியங்களையும் எண்ணி, நம்மைத்தானே தாழ்த்திக்கொள்ளவேண்டும். அது நம்மைத் தாழ வீழ்த்தி அவதைரியப்படச்செய்தால், ஆண்டவரிடமிருந்து நாம் பெற்றிருக்கும் நன்மை உபகாரங்களை எண்ணி, அவர் நம்மை இரட்சிக்க எவ்வளவு அன்பு எவ்வளவு வாஞ்சையாய் காத்திருக்கிறாரென்பதையும் சிந்தித்து, அவர்மீது மெய்யான நம்பிக்கை வைத்து தைரியமடையவேண்டும். * * * * சத்துரு சர்வேசுரனுடைய நீதியை என்முன் எடுத்துக்காண்பிக்கின்றதோ, உடனே நான் அவருடைய தயை இரக்கத்தை அதன்முன் எடுத்துக் காண்பிப்பேன்; அவருடைய தயை இரக்கத்தை எடுத்துக் காண்பிக்கின்றதோ, அதற்கு விரோதமாய் நான் அவருடைய நீதியை எடுத்துக் காண்பிப்பேன்." *

"பரிசுத்தமும் பிரயோசனமுமான நற்காரியங்களைப்பற்றி முதலாய் பேசத்துணிவற்றுப்போகும்

படியானவிதமாய், மெய்யான தாழ்ச்சியைக் கொண்டு நம்முள்ளத்தில் பிஞ்சின பயத்தைப் பிறப்பித்தபின், இதிலும் அதிமிகக்கேடான வேறோர் வகைப் பயத்தைத் தூண்டிவிடும். அதாவது நாம் நமது கர்த்தரை விட்டகன்று, துரோகியைப்போல் வெறுத்துத் தள்ளப்பட்டிருப்பதாக நினைத்து அஞ்சி வருந்தும்படி செய்யும். * * * இவ்விஷயம் இன்னும் அதிகத் தெளிவாய் விளங்கும்படி, சத்துரு பிரயோகிக்கும் வேறோர் சதிமானத்தை வெளிப்படுத்துகிறேன். பாவங்களின் கனத்தை எண்ணாமல், பாவம் செய்துவரும் பரும்படியான மனச்சாட்சியுடைய ஒருவனை அது கண்டால், அவன் கண்ணுக்கு அற்பப்பாவம் ஒன்றுமில்லாததுபோலவும், சாவானபாவம் அற்பப்பாவம்போலவும், மகா துரோகமான சாவானபாவங்கள் சொற்பக் காரியம்போலவும் தோன்றும்படி தன்னால் இயன்றதெல்லாம் செய்யும். அதற்கு விரோதமாய் நுட்பமான மனச்சாட்சியுடைய ஒருவனைக் கண்டால், இப்பேர்ப்பட்டவன் சாவானபாவத்தை மாத்திரமல்ல, அற்பப்பாவங்களையுமுதலாய் தன்னால் கூடிய ஜாக்கிரதையுடன் விலக்கி நீக்குவதையும் மேலும் ஓர் சொற்பக்குற்றத்தின் நிழலாவது, மாசு, கறை என்னப்பட்ட எதுவாவது தன் ஆத்துமத்தில் தாவாதபடி வெகு பிரயாசப்படுவதையும், சத்துரு பார்த்து, கிஞ்சித்தும் பாவமல்லாததை, அவன் கண்முன் பாவமாகத் தோற்றுவிக்கும்.



உத்தமமானவைகளை மாசுள்ளவைகளாகக் காணும்படி செய்யும்; இவ்விதமாய் அவன் மனச்சாட்சி கலங்கித் தத்தளிக்கும்படி செய்ய கடும் பிரயத்தனப்படும். நம்மைப் பாவத்தில் விழத்தாட்டவும், நமது ஆத்துமத்தில் கலக்கத்தை எழுப்பி நம்மை உபத்திரவப்படுத்தவுமே சாத்தான் இப்படி செய்கின்றது. அநேக சமயங்களில், ஆத்துமம் பாவத்துக்குச் சம்மதிக்கும்படி செய்யக்கூடாதே போனாலும், அப்படி எப்போதாவது செய்யக்கூடுமென்கிற நம்பிக்கை முதலாய் அற்றுப்போனாலும், குறைந்த பட்சம் அதைத் துன்பப்படுத்தவாகிலும் பிரயாசைப்படும்."

துஷ்ட அரூபியின் உபாய தந்திரங்களைப்பற்றி இன்னும் அதிக விரிவாய் இக்கடிதத்தில் சொல்லியிருக்கிறார். அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக் கூறினால், இப்புத்தகம் அதிகமாய் விரியும்.

இருளில் அரசாட்சிசெய்யும் துஷ்ட அரூபி தேவதாசனைக் கெடுக்கும்படி வியர்த்தமாய்ச் செய்த கபட தந்திரங்களைத் தானே இதுமட்டும் பிரதானமாய் எடுத்துரைத்தோம். பரிசுத்த சோதிப்பிரகாசமான திவ்விய இஸ்பிரீத்துவானவர் தமது தாசன் புத்திக்குத் தெளிவாகவும், மனதுக்குத் தேற்றரவாகவும் திடனாகவும் அளித்த அற்புத வரங்களைப் பற்றி அதிகமாய் இன்னும் சொல்லவில்லையே.

## 4-ம் அதிகாரம்.

அற்புத வரங்கள் :—விசுவாச சத்தியங்களை அர்ச்சியசிஷ்டவர் புத்திக்கு துலக்கிக்காட்டிய அற்புத பிரகாசம்—வஞ்சக சர்ப்பத்தின் மாயா ரூபம்—அர்ச். தமதிரித்துவப் பரம இரகசியம்—எட்டுநாள் பரவசம்—அகத்தின் அழகு முகத்தில் தெரியும்—அர்ச்சியசிஷ்டவர்மீது ஜனங்கள் இருதயத்தில் உண்டான பூஜிதவணக்கம்—அடிக்கடி திவ்விய நற்கருணை வாங்கும் வழக்கம் அவரால் திரும்ப ஏற்பட்டது—தபமுயற்சிகளின் அநுபவத்தால் அடைந்த விமரிசை—விவேகம்.

லொயோலா மாளிகையில் கன்னித்தாய் காட்சியில் இருந்து தன் சேசுநாதருடைய ஊழியத்துக்கு தம்மை நேர்ந்து ஒப்புக்கொடுத்த இஞ்ஞாசியார், அரைகுறையாகத் தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை. அன்றுதானே தன் சுயமனதை முற்றும் பரித்தியாகம் செய்துவிட்டார். எவ்வித பிரயாசைக்கும் எவ்வித கஷ்ட வருத்தங்களுக்கும் அஞ்சிப் பின்வாங்காமல், சகலத்திலும் தன்னைத்தானே ஜெயித்து,



சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம் ஒன்றையே கருதி, அவர் இருச்சித்தம் ஒன்றையே தேடிச் செய்து முடிப்பதென்று ஊக்கமான தீர்மானஞ் செய்து, தேவ மகத்துவத்துக்குத் தகனபலியாகத் தம்மைக் கையளித்தார். இதனால்தான், முன்சொன்னதுபோல், பாவாக்கினையின் பயங்கரத்தைவிட, சர்வேசுரனுடைய திருநாமம் ஸ்துதிக்கப்படவேண்டும் என்ற தேவசிநேகத்தினால் தூண்டப்பட்டு, அருந்தவம் செய்தார். இவ்வளவு மனநேர்மையும், உதாரமும், ஊக்கமும், "நீதியின்மேல் பசிதாகமுள்ள" ஆத்துமம் உன்னத அர்ச்சியசிஷ்டதனம் அடையாமற்போனால், அதுவே ஓர் புதுமையாயிருக்கும் என்னலாம். ஆசாபாசங்களைப் பின்சென்று தம்மைவிட்டகன்று ஓடிப்போகும் ஆத்துமத்தை முதலாய் அளவற்ற அன்புடன் பின்தொடர்ந்து **"நித்திய நேசமாக உன்னை நேசித்தோம், ஆனதால் இரக்கமுற்று உன்னை (நம்மண்டை) இழுத்தோம்"** (ஜெரேமியாஸ் XXXI, 3) என்று உருகி அழைக்கின்றார் நித்திய நேசமாகிய கடவுள். அப்படியிருக்க, தமது இருச்சித்தத்தை அறிந்து நிறைவேற்ற அடங்காப் பசிதாகமுடன் தம்மை அண்டித் தாவி வரும் ஆத்துமாமீது பராமுகமாயிருப்பாரா? இப்பேர்ப்பட்ட ஆத்துமாக்களுக்கு அவர் தாமே வழிகாட்டியும் ஆசிரியனுமாயிருந்து, புண்ணிய சாகோபாங்க நெறியில் அவர்களைக் கைபிடித்து நடத்துவார்.

இஞ்ஞாசியார் அர்ச்சியசிஷ்டதனத்தில் அதிவிரைவாய் வர்த்திப்படைந்தாரென்பதும், ஞானசீவியத்தில் மனிதர் உதவியால் அவர் அறிந்தவைகளோ சொற்பமென்பதும் திண்ணம். ஒரு பாடத்தைக் கற்பித்து, இவ்விதம் படிப்படியாய் மாணாக்களுக்கு கல்விபுகட்டும் நல்ல ஆசிரியனைப்போல், சர்வேசுரனும் தமது ஆத்துமத்தை நடப்பித்து வந்ததாக இஞ்ஞாசியார்தாமே தம்மைப்பற்றி நிச்சயித்துச் சொல்லியிருக்கிறார். ஆயினும் சர்வேசுரன் அவர் உள்ளத்தில் நிறைவேற்றிய அற்புதங்களை அவர் பெரும்பாலும் இரகசியமாக வைத்திருந்தமையாலும், அவைகளை ஞாபகக் குறிப்பாக அவர் எழுதிவைத்திருந்த காகிதங்களை மரணத்துக்குமுன் நெருப்பிலிட்டு எரித்து போட்டமையாலும், அவைகளைப்பற்றி தெரியவந்திருப்பது சொற்பமே.

மன்ரேசாவுக்கு ஒரு மைலுக்கு அப்பாலிருந்த ஒரு தேவாலயத்தில் இஞ்ஞாசியார் ஒருநாள் ஜெபம் பண்ணப்போனார். கருத்தெல்லாம் ஜெபத்தியானத்தில் வைத்தவராய், சற்று இளைப்பாறும்படி வழியிலிருந்த ஓர் நீரோடை ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆழமாய் ஓடிச்சென்ற ஜலப்பிரவாகத்தைக் கூர்ந்து உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவர் மனத்தின்கண் ஓர் அற்புத பிரகாசம் அருளப்பட்டது. விசேஷ தரிசனம் ஒன்றும் அவர் பார்க்கவில்லை. ஆனால் அவர் உள்ளத்தில் சுவா



லித்து அறிவைத் துலக்கின அவ்வற்புத பிரகாசத்தால், அவருடைய ஆத்துமா பரவசமாகி ஒரு க்ஷணத்தில் விசுவாசப் பரம இரகசியங்களைச் சார்ந்த அநேக சத்தியங்களையும், ஞான சாஸ்திரங்களுக்கடுத்த பல விஷயங்களையும் வெகு தெளிவாய் கிரகித்தறியலாயிற்று. எவ்வளவு தெளிவாகவென்றால், அன்றுமுதல் சகலமும் தமது கண்ணுக்கு நவமாக்கப்பட்டு, தாமே வேறு மனுஷனாக்கப்பட்டு, புத்தியென்னும் தத்துவம் வேறொன்று தமக்குக் கொடுக்கப்பட்டாற்போலக் காணப்பட்டதென்றும், தன் ஆயுள்காலமெல்லாம் தாம் சர்வேசுரனிடமிருந்தடைந்த ஞான ஒளிவு, உணர்த்துதல், தாமே பிரயாசப்பட்டுக் கற்றறிந்த சாஸ்திரம் முதலியவை எல்லாம் ஒன்று கூட்டினாலும், அவைகளெல்லாம் இதற்கு ஈடாகமாட்டாதென்றும் அர்ச்சியசிஷ்டவர்தாமே கோன்சால்வெஸ் சுவாமியாருக்குச் சொன்னார். அப்படிச் சொல்லும்போது அவருக்கு வயது அறுபத்திரண்டு.

சர்வேசுரன் கிருபையாய்த் தந்தருளும் விசேஷ ஞானப்பிரகாசம், ஞான ஆறுதல் முதலியவைகளால் தைரியமும் சந்தோஷமும் அடைந்திருக்கும் ஆத்துமத்தில் கலக்கத்தை உண்டாக்க, சாத்தான் சமயங்களில் வேஷம் மாறி, ஏதோ பிரகாசரூபமெடுத்து வருவதுண்டென்று, பிற்காலத்தில் போதித்த இஞ்ஞாசியார், தாமே ஏற்கனவே மன்ரேசாவில் அதைப் பரீட்சித்தறியலானார்.

மேற்சொன்ன அற்புத ஒளியடைந்ததும், தேவ நேச மனோகரம் நிறைந்தவராய், அருகிலிருந்த ஒரு பெரிய சிலுவைமுன் போய் முழந்தாளிட்டு தேவ மகத்துவத்துக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்யத் துவக்கினார். அப்போது முன்னமே சிலகாலமாய் அவரை ஏய்க்கத்தேடிய ஓர் மாயாரூபம் திரும்பவும் சந்நிதியில் அவர் கண்முன் வந்து நின்றது. அதாவது: நோயாளிகள் சாலையில் சேவித்து வரும் போது பிரகாசமான ஓர் விநோத ரூபம் சமயா சமயங்களில் அவர்முன் தோன்றும். சற்றேற சர்ப்ப சாயலாய், தகதகவென காந்தி வீசி ஜொலிக்கும் கண்களைப்போன்ற பல புள்ளிகளையுடையதாய்ப் பார்வைக்கு வெகு அலங்காரமாயிருக்கும். ஆனால் அதைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பது இஞ்ஞாசியாருக்கு அந்நேரம் வெகு சந்தோஷமாயிருக்கும். அது மறைந்துபோனதும், அவர் மனதில் சஞ்சலமுண்டாகும். அதன் சுபாவம் இன்னதென இதுமட்டும் அவருக்குத் தெரியாதிருந்தது. ஆனால் இப்போது சிலுவைக்கு முன், இம்மாயா ரூபம் அவ்வளவு அழகாய்க் காணவில்லை. அதைக் கண்ணுறுகுவதில் சந்தோஷத்துக்கு பதிலாய் அவர் உள்ளத்தில் வெறுப்பு உண்டாயிற்று. இதனால் இத்தோற்றம் வஞ்சக சர்ப்பத்தின் மாய்கையெனத் தெளிவாய் அறிந்துகொண்டார். பிறகாலங்களிலும் பல தடவை இம்மாயா ரூபம் அவர் கண்முன் வந்து நின்றதுண்டு. ஆனால் அது மாய்க்க



போகும்படிசெய்ய, அவர் தம் கைக்கோலை ஓங்குவது போதுமாயிருந்தது.

அர்ச். தமதிரித்துவத்தின்மேல் இஞ்ஞாசியார் உள்ளத்தில் ஓர் விசேஷ பக்தி உற்பத்தியாகி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. அநுதினம், ஏகக்கடவுள் மூவாட்களாயிருப்பதை சிந்தித்து, பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்ற இம்மூவாட்கள் ஒவ்வொருவருக்கும் முறைமுறையாய் விசேஷ பக்தி செலுத்தியபின், இம்மூவாட்களும் ஒரேஒரு கடவுளாயிருப்பதையும் சிந்தித்து, அர்ச். தமதிரித்துவத்துக்குப் பொதுவாகவும் விசேஷ பக்தி செலுத்திவருவார். திரித்துவமாயிருக்கிற ஏகக் கடவுளைப் பரகதியில் என்றென்றைக்கும் முகமுகமாய் தரிசித்து சேவிப்பதிலன்றோ, அர்ச். திரித்துவத்தின் சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மானிட ஜீவாத்துமாவின் நித்திய பேரின்ப பாக்கியம் அடங்கியிருக்கின்றது! பரலோகத்திலே முதலாய் இவ்வதியுன்னத பரம இரகசியத்தைத் தரிசிக்கவும் கண்டுபிடிக்கவும், ஆத்துமாவுக்கு இயற்கையான புத்தியின் பிரகாசம் போதாது. ஆனதால் "மகிமைப் பிரகாசம்" (Lumen Gloriæ) என்று சொல்லப்படும் சுபாவத்துக்கு மேற்பட்ட ஒரு அற்புதவரத்தை சர்வேசுரன் இரட்சிக்கப்பட்ட ஆத்துமத்தின் கண் பொழியவிட்டு, அதை இத்திவ்விய தரிசனத்துக்கு திராணியுள்ளதாக்குகின்றார். அப்படியிருக்க இக்கண்ணீர்க் கணவாயில் நமது புத்தியின் சுபாவ

சக்தியைக் கொண்டு இவ்வுன்னத பரம இரகசியத்
தில் ஏதாகிலும் கண்டுபிடிக்கக் கூடுமதெப்படி?
ஆயினும் அளவில்லாக் கருணைநிறைந்த சர்வேசுரன்
இகலோகத்திலும் ஓரோர் சமயங்களில் தமக்குகந்த
பரிசுத்தவான்கள் சிலர் உள்ளத்தில், பளிச்சென்று
ஒளி வீசி மறையும் மின்னலைப்போல், ஓர் அற்புத
பிரகாசக்கதிரை ஒளிரவிட்டு, மலை உச்சியில் மோயீ
சனுக்கு வாக்குத்தத்தத்தின் நாட்டை தொலையில்
காண்பித்ததுபோல், இப்பரிசுத்த ஆத்துமாக்களுக்
கும் இவ்வுன்னத பரம இரகசியத்தைச் சற்றே
துலக்கிக்காட்டுவார். இத்திவ்விய திருஷ்டியால்
ஆத்துமத்தில் பிரவாகமாகும் பேரின்ப நேசப்பெ
ருக்கத்தை எதற்கு இணையிடலாம்? இகலோகத்தில்
இதற்கு இணையானது ஒன்றுமேயில்லை.

ஓர்நாள் இஞ்ஞாசியார் அர்ச். சாமிநாதர் சபைச்
சன்னியாசிகள் மடத்தின்படியில் முழந்தாளிட்டுப்
பரிசுத்த கன்னிகையின் சங்கீதமாலை ஜெபித்துக்
கொண்டிருந்தார். அப்பொழுது ஓர் திவ்விய பிர
காசக் கதிர் அவர் புத்தி மனசக்திகளையெல்லாம்
ஊடுருவி சுவாலிக்க, அவர் ஆத்துமா பரவசமாகி
வாக்குக்கெட்டாத் தெளிவடங்கிய ஒரு திருஷ்டாந்
தத்தால், அர்ச். தமதிரித்துவப்பரம இரகசியத்தை
சுபாவ சக்தியைக்கடந்த ஒரு ஞான திருஷ்டியால்
விசேஷித்தறியும் பரம வரம் பெற்றது. இவ்
விசேஷ ஞான அறிவால் உள்ளத்தில் பொங்கி
யெழும்பிய பேரின்ப நேசப்பெருக்கத்தை அடக்க



மாட்டாமல், வெகு நேரம் பெருமூச்செறிந்து
ஆனந்தபாஷ்பம் சொரிந்தவண்ணமாகவேயிருந்
தார். அன்று முழுவதும் இப்பரம இரகசியத்
தைப்பற்றியல்லாது, வேறெதுவைப்பற்றியும்
அதிகமாய்ச் சம்பாஷித்தவரல்ல. கேட்போர்
உள்ளம் ஆச்சரியமுற்றுருக, பற்பல உவமை உவ
மானங்களைக்கொண்டு தம் மனதின் கண் அற்புத
மாய் அறிந்ததை மற்றவர்களுக்கு சொல்லிக்காட்
டப் பிரயாசப்பட்டார். அன்றுமுதல் ஆயுள்பரியந்
தம் தமதிரித்துவத்தை நோக்கி ஜெபிக்கும்போ
தெல்லாம், அவர் இருதயத்தில் வெகு மனோகர
உருக்க நேச பக்தி உண்டாகும். இத்திவ்விய தரி
சனத்தால், பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்
னும் திரித்துவத்தின் மூவாட்களுடன் அவர் ஆத்து
மாவில் நிகழ்ந்த தேவசிநேக ஐக்கியத்தை என்
னென்று சொல்லலாம்! இத்தரிசனத்தில் அர்ச்.
திரித்துவ பரம இரகசியத்தைப்பற்றி தாம் அறிந்த
வைகளை வாக்கினால் கூடுமானமட்டும் விரித்தெழுதி
வைத்திருந்தார். ஆனால் சிற்சில பாகங்கள் தவிர,
மற்றதெல்லாம் அர்ச்சியசிஷ்டவருடைய தாழ்ச்சி
யால் நெருப்புக்கு இரையாய்ப்போயின.

வேறோர்சமயம், சர்வேசுரன் உலகத்தை சிருஷ்
டித்த விதத்தையும் கிரமத்தையும் விசேஷித்தறி
யும் வரமும் அவருக்கு அருளப்பட்டது.

முன்சொன்ன மடத்துக்கோவிலில் ஓர்நாள்
பூசைநேரத்தில், திவ்வியநற்கருணை எழுந்தேற்றம்

பண்ணப்பட்டபோது, ஏதோ வெண்மையான பிர
காசக் கதிர்கள் மேலேயிருந்து இறங்கிவந்தாற்
போல் அவருக்குப் புலப்பட்டது. இத்தரிசனத்
தைச் சார்ந்த மற்ற விபரங்கள் பிற்காலத்தில்
அவர் ஞாபகத்துக்கு வராதேபோயிற்றென்றாலும்,
ஒரு விஷயம் அவருக்கு நிச்சயமாயிருந்தது.
அதாவது: திவ்விய சற்பிரசாதத்தில் சேசுக்
கிறீஸ்துநாதர் மெய்யாகவே இருக்கும் விதம் அவர்
புத்தியில் அன்று தெளிவாய் உணர்த்தப்பட்டது.
மேலும் மனுஷாவதாரம் எடுத்த நாதனை அடிக்கடி
வெகு நேரமளவாய்த் தரிசிக்கும் பாக்கியமும்
பெற்றார். மன்ரேசாவில் மாத்திரம் சுமார் நாற்
பது தடவை சேசுக்கிறீஸ்துநாதர் தமக்குத் தரி
சனையானதாக அர்ச்சியசிஷ்டவர்தாமே சொல்லி
யிருக்கிறார்; பரிசுத்த கன்னிகையும் ஒரோர் சம
யங்களில் அவருக்குத் தரிசனையானாள். இத்தரி
சனங்களிலெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதரும், அவர்
திருத்தாயாரும் வெண்மையான ஓர் அற்புத ஒளி
யால் அவர் புத்தியின் கண்ணுக்குத் தெளிவாய்
புலப்பட்டார்களேயன்றி, அவர் சரீரக்கண்களுக்கு
அவர்களுடைய அவயவங்கள் தோன்றவில்லை.

நோயாளிகள் சாலையில் அவர் இருந்த அறை
யின் ஜன்னல் வழியாய் ஓர் சனிக்கிழமையன்று
தேவாலயத்தில் நடந்த அந்திகால ஜெபத்தைப்
பின்சென்று ஜெபித்துக்கொண்டிருந்தபோது, திடீ
ரென்று பரவசமாகி மறு சனிக்கிழமை அதே நே




எட்டுநாள் பரவசம்.





மட்டும் அப்படியே பேச்சுமூச்சின்றி மரணமானவர்போலிருந்தார். மார்பில் கைவைத்துப் பார்த்தபோது வெகு இலேசாய் இருதய துடிப்பிருப்பதாகத் தென்பட்டது. அல்லாவிடில் ஒருவேளை ஏற்கனவே அவரை அடக்கம் செய்திருப்பார்கள். எட்டாம்நாள் சுகமாய் நித்திரைசெய்து விழித்தவர்போல் கண்களைத் திறந்து "ஆ சேசுவே! சேசுவே!" என்று மெதுவாய்ச் சொன்னார். அக்னேஸ் பாஸ்கால் அம்மாளும் அவள் குமாரன் ஜான் பாஸ்கால் என்பவரும் இவ்விசேஷத்துக்கு கண்கண்ட சாட்சிகள். "இவ்விசேஷம் அதிசயத்துக்குரிய விதமாய் என் ஞாபகத்திலிருக்கின்றது. அப்பொழுது எனக்குப் பதினாறு அல்லது பதினேழு வயதிருக்கும். அவரை (இஞ்ஞாசியாரை) இந்த ஸ்திதியில் கண்டதும், ஓட்டமாய் என் தாயாரிடம் போய், நமது அர்ச்சியசிஷ்ட போதகர், மரணமாய்ப்போனாரென்று சொன்னேன்" என ஜான் பாஸ்கால் இது சம்பவித்து முப்பத்தொன்பது வருஷங்களுக்குப்பின் சொன்னார்.

இவ்வெட்டுநாள் பரவசத்தில் தம் ஆத்துமத்தில் நடந்தது இன்னதென திட்டமாய் ஒருவருக்கும் ஒருபோதும் வெளியிட்டவரல்ல. ஆயினும், திருச்சபைக்குதவியாக அவர் ஏற்படுத்தவேண்டுமென்று சர்வேசுரன் திருவுளமாயிருந்த சேசுசபையின் கதியும், அதின் பிரதான அம்சங்களும் இப்பரவசத்தில் அறிவிக்கப்பட்டதாக, அவரோடு ஜீவித்து

வந்த சேசுசபை முதற்குருக்கள் தீர்க்கமாய் எண்ணியிருந்தார்கள். மேலும் அவர் சேசுசபை ஏற்பாட்டாகமத்தை எழுத ஆரம்பித்தபோது, இன்னின்ன விஷயம் எதற்கென்று யாராகிலும் அவரை வினவினால், "மன்ரேசாவில் அதை அறிந்தேன்" என்று உத்தாரம் சொல்லுவார். அங்கு ஒருமணிநேர ஜெபத்தியானத்தில், உலகிலுள்ள சகல சாஸ்திரிகளிடத்திலும் தாம் கற்றறியக்கூடியதைவிட அதிகம் அறிந்துகொண்டதாகவும், நாம் விசுவசித்துவரும் தேவ சத்தியங்களை வேதாகமங்கள் படிப்பியாதேபோயிற்றென்றாலும், வேதத்துக்காக உற்சாகமாய் தம் உயிரைக் கொடுக்க அங்கு தாம் அறிந்துகொண்டவைகளே தமக்குப் போதுமென்பதாகவும், அர்ச்சியசிஷ்டவர் பிற்காலத்தில் **லேய்ன்ஸ்** சுவாமியாருக்குச் சொன்னார்.

இவ்வளவு அருந்தவம்நிறைந்த பரிசுத்த சீவியத்தாலும், உன்னத வரங்களாலும் சர்வேசுரனோடு மேலான ஐக்கியம்பெற்ற அவராத்துமாவில் சுடர்விட்டெரிந்த தேவ இஷ்டப்பிரசாத திருவிளக்கின் பிரதிபிம்பம்போல், அவரது முகத்திலும், ஓர் சோதிமயம்,—பரலோக சம்பந்தமான ஓர் காந்திப் பிரபை—துலங்கியதென்றால் ஆச்சரியமென்ன! அவர் வாக்குக் கிரிகைகள் யாவற்றிலும் அத்தேவ இஷ்டப்பிரசாதத்தின் அருட்சுவாலை தாவி வீசினாற்போல், ஓர் விசேஷ புனிதமும், மானிடர் இருதயங்களை ஊடுருவிச்செல்லும் ஓர் விசேஷ சக்தியும் வல்



லமையும் விளங்கியதென்றால் ஆச்சரியமென்ன! இதனால், யாதாமோர் குருசடி அல்லது வேறு திருஸ்தலங்கள்முன் அவர் ஜெபஞ்செய்யப் போவதைக் கண்டதும், காந்தத்தைக்கண்ட இரும்புபோல், வெகுஜனங்கள் சற்றுத்தூரத்தில் மௌனமாய் அவரைப் பின்றொடர்ந்து சென்று அவரைக் கண்ணோக்கிநிற்பார்கள். ஏதோ ஞானோபதேசம் சொல்ல அர்ச்சியசிஷ்டவர் அவர்களைநோக்கித் திரும்பினால், உடனே எல்லாரும் கும்பலாய் அவரை அணுகிப்போய், அத்தியந்த பக்தி விநயத்தோடு அவர் வாய்மொழியைக் கேட்டு, தங்கள் பாவங்கள்மேல் அதிக வெறுப்பும் மனஸ்தாபமும், சர்வேசுரன்மேல் அதிக உருக்க நேசமுமுடையவர்களாய்த் திரும்புவார்கள்.

அர்ச். பிரகாசியம்மாள் நோயாளிகள்சாலை அக்காலத்தில் இருந்த ஸ்தலத்தின்முன் ஓர் குருசடியையும், அதனருகே ஓர் சிறு கற்பாறையையும் காணலாம். இஞ்ஞாசியார் இப்பாறைமேல் நின்று, வேறோர் ஸ்நாபக அருளப்பரைப்போல், திரளாய்க் கூடிய ஜனங்களுக்கு வேதசத்தியங்களை விவரித்து ஞானோபதேசம் செய்துவந்ததாகச் சொல்லுகிறார்கள். சொன்ன உபதேசங்களால், விசேஷமாய் வேதத்தின் பிரதான சத்தியங்களை உள்ளத்தில் சிந்தித்துத் தியானிக்கும்படி செய்ததால், அநேகர் பாவ வழியைவிட்டு நல்வழியடைந்தார்கள். பலர் உலகத்தை வெறுத்து துறவற சீவி

யத்தில் பிரவேசித்தார்கள். புண்ணிய சாங்கோபாங்கத்தில் வர்த்திப்படைய ஆவலுற்றிருந்த சில ஆத்துமாக்கள் அவரைத் தேடிப்போய், ஞானக் காரியங்களைப்பற்றி அவரிடத்தில் தனியே சம்பாஷித்து, அவர் ஆலோசனையைக்கேட்டு நடந்தார்கள். அக்காலத்தில் அடிக்கடி திவ்வியநன்மை வாங்கும் வழக்கம் கிறீஸ்துவர்களுக்குள் வர வரத் தளர்ந்துபோயிருந்தது. பக்திமான்கள்முதலாய் வாரத்துக்கொருதடவை திவ்விய சற்பிரசாதம் அருந்திவருவதைக் காண்பது அபூர்வமாயிருந்தது. ஆனால் இஞ்ஞாசியாருடைய நற்போதனையால் உயர்குல சீமாட்டிகளுக்குள்ளேமுதலாய் அநேகர் ஞாயிற்றுக்கிழமைதோறும் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்வியநன்மை வாங்கிவந்தார்கள். அதனால் சிலர் இவர்களுக்கு (Las Inigistas) அதாவது: "**இஞ்ஞாசியார் சபையார்**" என்று பட்டப் பெயரிட்டார்கள்.

இத்தருணம், சர்வேசுரன் தமக்குக் கிருபையாய்த் தந்தருளிய ஞான வரங்களை பிறர் ஆத்தும நன்மைக்காக தாராளமாய்ப் பிரயோகிப்பதற்குத் தாம் அணிந்திருந்த அருந்தவக்கோலம் விக்கினமாயிருப்பதாக அநுபவத்தால் அறிந்துகொண்டார். ஆதலால் தமது தவமுயற்சிகளைச் சற்று மட்டுப்படுத்தி, அதிக விமரிசையாயிருக்க ஆரம்பித்தார். மேலும் இரவில் நித்திரை செய்ய ஆயத்தமானதும், ஆச்சரியத்துக்குரிய அநேக ஞானசிந்தனை



களும் பற்றுதல்களும் அவர் உள்ளத்தில் திரளாய் மொய்த்தெழும்பும். அதனால் அவர் நித்திரைக்குக் குறித்திருந்த அந்த சொற்பநேரத்திலும், பெரும் பாகம் தூக்கமின்றியிருப்பார். "நான்முழுவதும் சர்வேசுரனோடு சம்பாஷிப்பதில் செலவழித்தேனல்லவா; அப்படியிருக்க இப்போது நித்திரையைக் கெடுக்க வரும் இச்சிந்தனைகள் மெய்யாகவே நல்ல அரூபியிடமிருந்து வரக்கூடுமோ," என்று தனக்குள் சந்தேகித்து யோசிக்கலானார். யோசிக்கவே, இச்சிந்தனைகளில் நேரத்தைப் போக்காமல், குறித்த நேரமெல்லாம் நித்திரை செய்வதே உத்தமமென்று அவருக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது. அன்றுமுதல் அவ்விதமே செய்தார்.

மாரிகாலம் துவக்கினதும், இஞ்ஞாசியார் திரும்பவும் கடின வியாதியாய் விழுந்தார். வியாதியில் அவருக்கு யாதொன்றும் குறைவின்றி ஜாக்கிரதையாய் விசாரித்துவரும்படி ஊர் அதிகாரிகள் பெரேரா (Ferrera) என்றொருவரை பொறுப்பாக நியமித்து, அவர் இல்லிடத்துக்கு வியாதிக்காரரை அனுப்பிவைத்தார்கள். அவரை ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவராக மதித்துப் பாராட்டிவந்த அவ்வூர் ஜனங்களும், உயர்குல சீமாட்டிகள் அநேகரும் அவருக்கு அச்சமயத்தில் இராப்பகலாய்ச் செய்து வந்த ஒத்தாசையும் உபசாரமும் இவ்வளவு அவ்வளவென்றல்ல. வியாதி தீர்ந்தபின்பும் வெகு பலவீனமாயிருந்தார். மாரிகாலக் குளிரும் அகோ

ரமாயிருந்தது. இக்காரணங்களை முன்னிட்டு தேகத்துக்குச் சற்றே சூடுகொடுக்கக்கூடிய வஸ்திரங்களும், தலைக்குல்லாவும், பாதரட்சையும் தரித்துக் கொள்ளும்படி வெகுவாய் மன்றாடினார்கள். சாம்பல் நிறமான இரண்டு உடுப்பும், அதே நிறமான ஒரு குல்லாவும் கட்டாயத்தின் நிமித்தம் ஏற்றுக் கொண்டார்.

மன்ரேசாவிலிருந்த காலமெல்லாம், இஞ்ஞாசியார் தம் முதல் ஆத்தும குருவும் அருமை நண்பருமாகிய மோன்செராத்து மலை அருளப்பமுனிவரை மறந்துபோகவில்லை. சமயத்துக்குச் சமயம் அவரைப்போய்ச் சந்தித்து, தமதிருதயத்தை அவரிடத்தில் தாராளமாய்த் திறந்து பேசிவருவார். முனிவரோவென்றால், இஞ்ஞாசியாரைத் தமது உள்ளத்தில் பூஜிதமாய் எண்ணிவந்ததுமன்றி, லொயோலா இஞ்ஞாசியார் சத்திய திருச்சபையைக் காக்கும் ஓர் வீரனாயிருப்பாரென்று மற்றவர்களுக்குச் சொல்லியும் வந்தார்.

சர்வேசுரன் தமக்களித்த எண்ணிறந்த அற்புத வரப்பிரசாதங்களைப்பற்றி தாம் எழுதிவைத்திருந்த ஞாபகக்குறிப்புகளை அர்ச்சியசிஷ்டவர் மரணத்துக்குமுன் சுட்டெரித்துப்போட்டாரென்றாலும், தாம் உண்டாக்கிய ஒரு சிறு பிரபந்தத்தைத் தமது ஞானப்புதல்வர்களுக்கு பிதிரார்ஜிதப் பொக்கிஷமாக விட்டுப்போயிருக்கின்றார். கணக்கற்ற ஆத்து



மாக்களைத் துஷ்ட சத்துருவின் கையினின்று பறித்துப் பரலோக இராச்சியம் சேர்க்கவும், கணக்கற்ற ஆத்துமாக்கள் உள்ளத்தில் உத்தம தேவசிநேக அக்கினியை மூட்டிப் புண்ணிய சாங்கோபாங்க நெறியில் அவர்களை நடப்பிக்கவும், சர்வேசுரன் தமது தாசன் அர்ச். இஞ்ஞாசியாரைக்கொண்டு திருச்சபைக்குத் தந்தருளின "ஞான முயற்சிகள்" என்னும் இவ்வற்புத நூலைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லுவதவசியம்.

## 5-ம் அதிகாரம்.

### 'ஞான முயற்சிகள்' என்னும் அற்புத நூல்.

"**ஞான முயற்சிகள்**" என்னும் இச்சிறு பிரபந்தமானது, அருமையான புத்தி தீட்சணியமும், ஆழ்ந்த சிந்தனையும், நுண்ணறிவும் சுபாவமாய்க் கொண்டு, தம் உள்ளத்தில்தானே நிகழ்ந்த தேவ திருவுளத்தின் எண்ணிறந்த விசேஷ சம்பவங்களால் ஞானசீவியத்தில் மகானுபவியாய் விளங்கின ஒரு மகாத்துமா, திவ்விய இஸ்பிரீத்துவின் ஓர் விசேஷ அருட்பிரகாசத்தின் உதவியால் இயற்றித்தந்த அற்புத நூல் என்னலாம். இயல்பாகவே அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரிடத்தில் புத்தி என்னும் தத்துவம் எவ்வளவோ சிறந்த இலட்சணங்கள் அமைந்துளதென்று இச்சரித்திரத்தின் துவக்கத்தில் சொன்னதைக்கொண்டு விளங்கும். அவர் பாம்பலூனாவில் காயம்பட்டு சர்வேசுரன் பாரிசமாய்த் திரும்பின நாள்முதல், அவரை எய்த்துக் கெடுக்க துஷ்ட அரூபி பிரயத்தனப்பட்டுச் செய்த அந்தரங்க மாய்கைகள் எத்தனை, எத்தன்மையானவைகள் என்றும், அவைகளால் அவர் தம் ஆத்துமாவில் பட்ட கொடிய கிலேசம், சஞ்சலம் எம்



மாத்திரமென்றும் முன்னமே சொல்லியாயிற்று. மாணாக்கனுக்கு வெகு விவேகமாய் கல்வியூட்டும் ஓர் நல்லாசிரியனைப்போல், திவ்விய இஸ்பிரீத்துவானவர் அவர் உள்ளத்தில் போதித்துப் புகட்டிய உன்னத தேவ ஞானமும், பொழிந்த ஞானப்பிரகாசமும் அற்புத வரங்களும் எப்பேர்ப்பட்டவைகளென்றும், முந்தின அதிகாரங்களில் சொன்னதற்கு மேல் அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. அர்ச்சியசிஷ்டவரோவென்றால், ஞானசீவியத்தில் தமக்கு நிகழ்ந்த ஒவ்வொரு விசேஷங்களிலும், அவைகள் வந்தவழி தெரியாது போகட்டுமென்றிருக்கவில்லை. அவைகளின் குணதோஷங்களைப் பரீட்சித்தாராய்ந்து, அவைகளைக்கொண்டு, நம் ஆத்துமத்தை நாடி என்றும் முயற்சியாயிருக்கும் நல்ல அரூபி, கெட்ட அரூபி, என்றிவ்விரு அரூபிகளின் செயல்களைப் பகுத்தறிந்து, தேவ பராமரிப்பின் கிருபையிருந்த நீதி நியமனங்களை ஆழ்ந்து தியானித்து வந்தார். இவ்விதம் அநுபவ ஞானத்தைக் கொண்டும், அதிலும் விசேஷமாய், திவ்விய இஸ்பிரீத்துவின் அருள் ஞானத்தைக்கொண்டும், ஞான முயற்சிகள் என்ற இவ்வரிய நூலை இஞ்ஞாசியார் எழுத ஏற்பட்டார். "வேதாகம விஷயங்களைக்கொண்டும் ஞானஜீவியத்தின் அநுபவத்தைக்கொண்டும் வரையப்பட்ட நூல்" என்று, இந்த ஞான முயற்சிகளை நன்கு மதித்து ஆசீர்வதித்த மூன்றாம் பவுல் என்னும் பாப்பானவர் கூறியிருக்கிறார். அர்ச்சிய

சிஷ்டவர் இஸ்பாஞ்ஞிய பாஷையில் எழுதியதை இலத்தீன் பாஷையில் மொழிபெயர்த்த அவருடைய காரியதரிசி பொலாங்கோ என்னும் சுவாமியார்: "ஏட்டில் படித்த சாஸ்திரத்தைக்கொண்டல்ல. திவ்விய இஸ்பிரீத்துவின் அருட்பிரகாசத்தைக்கொண்டும், சுபாவாநுபவ ஞானத்தைக் கொண்டும், ஆத்துமாக்களைப் பரீட்சித்தறிந்த ஞானத்தைக்கொண்டும் எழுதப்பட்ட நூல்" என்று மேற்படி இலத்தீன் மொழிபெயர்ப்பின் முகவுரையில் குறித்திருக்கிறார். "ஞானத்துக்கு இருப்பிடம்" என்றும், தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற உரோசாப் புஷ்பம்" என்றும் அழைக்கப்படும் பரலோக இராக்கினியும் சமயத்துக்குச் சமயம் அவருக்குத் தரிசனையாகி ஒத்தாசை செய்துவந்ததாக அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது ஒரு வீண் அபிப்பிராயமன்று. இதற்கு ஆதாரவான சான்றுகள் பலவுண்டு. இப்பொழுது திருச்சபையை ஆளும் நமது ஞானபிதா பதினொன்றாம் பத்திநாதர் 1922-௵ டிசம்பர்-மீ 3-உ எழுதிய அப்போஸ்தொலிக்கு நிருபத்தில்: "லொயோலா இஞ்ஞாசியார் மன்ரேசா கெபித்தனிவாசத்தில், கர்த்தருக்காக எவ்விதம் யுத்தம் செய்யவேண்டுமென்று, தேவதாயிடத்தில் கற்றுக் கொண்டார். சேசுக்கிறீஸ்துநாதருடைய உத்தம வீரன் அநுசரிக்கவேண்டிய அதி நிச்சயமான சட்டநூலை அந்த தேவதாயின் கரங்களிலிருந்து பெற்றுக்



அர்ச். இஞ்ஞாசியார் மன்ரேசா கெபியில்
"ஞான முயற்சிகளை" எழுதியது.



கொண்டதுபோல் பெற்றுக்கொண்டார். இஞ்ஞாசியாருக்குத் தெய்வீகமாய் அருளப்பட்டதாகச் சொல்லப்படும் ஞான முயற்சிகளைக்குறித்து இங்கு சொல்லுகிறோம்" என்று கூறியிருக்கிறார்.

ஆச்சரியமான இச்சிறு பிரபந்தத்தின் தன்மையை எவ்விதம் விவரித்துரைக்க! எவரும் சாதாரணமாய் எடுத்து வாசிக்கவும், படிக்கவும் உண்டாக்கப்பட்ட புஸ்தகமன்று இது! யாதோர் கதியைக் கருதி, அதை அடையும்படி சரீர அவயவங்களைக்கொண்டு பிரயாசையெடுத்து முயற்சி செய்வதுபோல்,—அப்படியே பர்வதத்தின் உச்சியில் போய்ச் சேர விரும்புகிறவன் வெகு பிரயாசையுடன் தொத்திப் பற்றி ஏறிச் செல்வதுபோல், போர்வீரன் போர் முனையில் சத்துருவை எதிர்த்து, யுத்தம் செய்யும் திராணி அடையும்படி பற்பல தேகப் பயிற்சி அப்பியாசங்கள் செய்வதுபோல்,—நமது ஆத்துமமும் ஓர் கதியைக் கருதி அதனை அடையும்படி ஞாபகம், புத்தி, மனம் முதலிய தன் தத்துவங்களைக்கொண்டு பிரயாசை எடுத்துச் செய்யவேண்டிய சில விசேஷ முயற்சிகள் அடங்கிய திவ்விய நூலாம் இது. இதனால் தான் அர்ச். இஞ்ஞாசியார்: "மனிதனானவன் ஒழுங்கற்ற யாதோர் பற்றுதலினால் தூண்டப்பட்டு ஒரு காரியத்துக்கு) தன்னைத் தீர்மானியாமல், தன்னைத்தானே ஜெயித்து, தன் சீவியத்தைச் சீர்ப்படுத்துவதற்கு

உதவியான ஞான முயற்சிகள்," *என்று இப்புஸ் தகத்துக்குப் பெயரிட்டிருக்கிறார்.

---

* 'ஞானமுயற்சி' என்று நமது தமிழ்ப்பாஷையில் ஓர் புஸ்தகம் வழங்கிவருகின்றது. வெகுகாலத்துக்குமுன் அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானப் புத்திரர்களில் ஒருவ ரால் எழுதப்பட்ட இப்புஸ்தகம் 'ஞான உணர்த்துதல்' 'அநித்திய நித்திய வித்தியாசம்' 'நன்றுப் நினை' முதலிய புஸ்தகங்களைப்போன்ற ஓர் சிறந்த பிரபந்தமே யன்றி, இங்கு சொல்லப்படுகின்ற "ஞான முயற்சிகள்" என்னும் அற்புத நூலன்று.

மேலும் "அர்ச். இஞ்ஞாசியார் தியானங்கள்" என்றும், "அர்ச். இஞ்ஞாசியார் ஞானத்தியானங்கள்" என்றும் சேசுசபைச் சுவாமிமார்களால் எழுதப்பட்ட வேறிரண்டு புஸ்தகங்களுமுண்டு. இவைகள் அர்ச். இஞ் ஞாசியார் உண்டாக்கிய அற்புத நூலிலுள்ள பிரதான தியா னங்கள் பல விரித்துரையாக எழுதப்பட்ட புஸ்தகங்களே யன்றி, இவ்வற்புத நூல் உள்ளபடி பூரணமாய் மொழி பெயர்க்கப்பட்டவைகளன்று. இப்புஸ்தகங்களைக்கொண்டு அர்ச். இஞ்ஞாசியாருடைய அற்புத நூலின் தன்மையை யும் சக்தியையும் அறிந்துகொள்ளுவது அரிது. காலஞ் சென்ற சேசுசபை சந்தியாகப்பர் சுவாமியவர்கள் எழுதிய மன்ரேசா என்னும் புத்தகமும் மேற்கூறிய ஞான உணர்த் துதல் முதலிய புத்தகங்களைப்போல் எழுதப்பட்ட ஒரு சிறந்த நூலேயன்றி, 'ஞான முயற்சிகள்' என்ற நூலா காது.

இவ்வற்புத நூலை அர்ச். இஞ்ஞாசியார் தமது சுயபாஷை யாகிய இஸ்பானிய பாஷையில் எழுதினார். முற்றும் அர்ச் சியசிஷ்டவர் கையால் எழுதப்பட்ட மூல பிரதி ஒன்றும் அகப்படாதேபோயிற்றென்றாலும், அவர் கையால் ஆங் காங்கு திருத்தப்பட்ட பிரதி ஒன்று இந்நாள்மட்டும் உரோ மையில் காப்பாற்றப்பட்டு வருகின்றது.



அழிவுக்குரிய சடவஸ்துவாம் சரீரம். புத்தி மனது என்னும் தத்துவங்களையுடைய என்றும் அழியாத ஞான வஸ்துவாம் ஜீவாத்துமம். இவ் விரண்டும் ஏகபந்தனமாய் ஒன்றிக்கப்பட்டு, நித் திய கடவுளின் சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட நர ஜென்மமாம் மானிடன். தேவ திருவுளத்தின் ஒரு விசேஷ கிருபையால், படைப்புண்ட வஸ்துக்க ளின் சுயதத்துவ சத்துவத்தைக் கடந்த தேவ இஷ்டப்பிரசாதம் என்னும் பரம வரத்தால், நர ஜென்மத்துக்கு அதன் சுபாவ நியமிப்புப்படி அமையவேண்டிய பதவிக்கும் அதிமேலான ஒரு பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறான் இந்த மானி டன். இதனால், சர்வ வல்லபரை: "அப்பா! பிதாவே!" என்றழைத்து, அவருடைய "சுவீகா ரப் பிள்ளையாய்", அவருடைய "தெய்வீக சுபா வத்துக்குப் பங்காளியாய்", இம்மையில் அவரை ஸ்துதித்து சேவித்து, மறுமையில் சந்ததம் அவரை முகமுகமாய்த் தரிசித்து சேவிக்கும் நித்தியா னந்த நித்திய ஜீவியத்துக்காக உருவாக்கப்பட்டவ னும் இந்த மானிடன். ஆனால், அந்தோ! இம் மானிடன் தன் உயர் கதியையும் பதியையும் எண் ணாமல் ஊதாரிப்பிள்ளையைப்போல் தன் தந்தை வீட்டை விட்டகன்று, நெறி தவறி உருமாறி அலை கின்றான்! உலகம், பசாசு, சரீரம் என்னும் மூவகை சத்துருக்களின் மாய்கையால் மதிமயங்கி, பரம கதி அடைவதற்குத் [illegible] [illegible]னாகமாத்திரம்

அமைக்கப்பட்டிருக்கும் இப்பிரபஞ்ச நன்மைகள்,— இவைகள் தான் தனக்கு பரம கதி, நித்திய பாக்கியம் என்றாற்போல்,—இவைகளில் மனம் மூழ்கி, நாடவேண்டிய நன்மையை நாடாது, நாடத்தகாததை நாடி, செய்யவேண்டிய கருமத்தை செய்யாது, செய்யத்தகாததைச் செய்து, சீர்குலைந்து அலைக்கழிக்கப்படுகின்றான். கிரமந்தப்பின பற்றுதல்கள், ஆசாபாசங்கள் மிஞ்சி மேற்கொண்டதால், பரம கதி அடைவதற்கு அத்தியாவசியமான தேவ இஷ்டப்பிரசாதம் என்னும் திருவிளக்கு ஏற்கனவே முற்றும் அவிந்து, உள்ளத்தில் அந்தகார இருள் அடர்ந்து, தான் இருக்கும் நிர்ப்பாக்கிய ஸ்திதியைத் தானே உணர்ந்துகொள்ளாதிருக்கின்றனாக்கும். அல்லது இத்திருவிளக்கு வெகு தளர்ச்சியாய் மங்கி எரிந்து எக்ஷணத்திலும் அவிந்துபோகும் ஆபத்திலிருக்கின்றதாக்கும். தேவ கிருபையால் ஒருவேளை இத்திருவிளக்கு ஸ்திரமாய் எரிகின்றதென்றாலும், சிருஷ்டிகள்மீது அவன் இன்னும் வைத்திருக்கும் கிரமந்தப்பின சிற்சில பற்றுதல்களால் மாசணுகி, சிருஷ்டி கர்த்தர்மீது வைக்கவேண்டிய நிர்மலமான உத்தம தேவ சிநேகத்தின் சுடர் சற்றே பிரகாசம் மங்கியிருக்கின்றதாக்கும். இவர்களெல்லாம் தங்களை ஆட்கொண்டிருக்கும் கிரமந்தப்பின பற்றுதல்களால் மோசம் போகாதபடி, அவைகளை அறுத்து நீக்கி, மனத்தூய்மை அடைந்து, தங்கள்மட்டில் சர்வேசுரனுடைய திருச்



சித்தம் இன்னதெனத் தேடி அறிந்து, அச்சித்தத்தின்படி தங்கள் ஜீவியத்தை ஒழுங்குபடுத்துதல் அவசியம்.

இதற்காக, இவர்கள் பிரபஞ்ச அலுவல் கவலைகளை எல்லாம் சிலகாலம் ஒழித்து, கூடுமானால் தங்கள் பந்துஜனங்கள் நண்பர்களையும், தாங்கள் வசிக்கும் இல்லிடத்தையுமே விட்டகன்று, வேறோரிடம் சென்று, எங்கும் பிரசன்னராய் இருக்கும் நித்திய கடவுளை உள்ளத்தில் சிந்தித்து, ஐம்புலனை அடக்கி, மௌனங்காத்து, ஏகாந்தத்தில் அமர்ந்திருக்கும்படி அர்ச். இஞ்ஞாசியார் விரும்பி அழைக்கிறார். அழைத்து:

"நமது கர்த்தராகிய சர்வேசுரனை ஸ்துதித்து வணங்கி அவருக்கு ஊழியம் செய்து, இவ்வழியாய்த் தன் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்ளும்படியாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். பூமிமீதுள்ள மற்றப் பொருட்கள் அனைத்துமோவெனில் மனிதன் நிமித்தமாகவும், அவன் சிருஷ்டிக்கப்பட்டதற்குக் காரணமான கதியைக் கருதி நடக்க உதவியாகவுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் தன் கதியை அடைவதற்கு எம்மட்டு அவைகள் உதவுகின்றனவோ அம்மட்டுத்தான், மானிடன் அவைகளை உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்றும், எவ்வளவுக்குத் தடையாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவைகளை

அகற்றிவிடவேண்டும் என்றும் விளங்குகின்றது. ஆனதால் படைப்புண்ட சகல வஸ்துக்களும்,—அவைகள் நமது மனச்சுயாதீன இஷ்டத்துக்கு விலக்கமின்றி கையளிக்கப்பட்டமட்டுக்கும்,—அவைகள்மீது நாம் நடுவுநிலை உடையவர்களாயிருப்பது அவசியம். அதெவ்வாறெனில், நம்மைப் பொறுத்தமட்டும் வியாதியைவிட சௌக்கியத்தையும், தரித்திரத்தைவிட ஐசுவரியத்தையும், இகழ்ச்சியைவிட புகழ்ச்சியையும், சுருங்கிய ஆயுளைவிட நீடிய ஆயுளையும், இவ்விதமே மற்றெல்லா விஷயங்களிலும் ஒன்றைவிட ஒன்றை அதிகமாய் விரும்பாதிருந்து நாம் சிருஷ்டிக்கப்பட்டதற்குக் காரணமான கதியை அடைவதற்கு அதிக அநுகூலமானவைகளைமாத்திரமே ஆசித்துத் தெரிந்துகொள்ளக்கடவோம்'' என்னும் சத்தியத்தை முதல் முதல் அவர்களுக்கு எடுத்துரைத்து அதை அவர்கள் புத்தியில் நிறுத்தி, தேவ சன்னிதியில் ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்கிறார். இம் முதல் முயற்சி பின்வரும் முயற்சிகள் யாவுக்கும்,—மேலும் எவ்வித நல்லொழுக்கத்துக்கும், உத்தமதனத்துக்கும்—மூலாதாரமும் அஸ்திவாரமுமாய் இருப்பதால், இதற்கு மூல சத்தியம் என்றும், அஸ்திவாரம் என்றும், அர்ச். இஞ்ஞாசியார் பெயரிட்டிருக்கிறார்.

கிறீஸ்துவர்கள்மாத்திரமன்று, புத்தி யோசனையுள்ள மானிடன் எவனும், எத்திறத்தான் எச்சமயத்



தானாலும், அகத்தியம் ஒப்புக்கொள்ளவேண்டிய தத்துவமான சத்தியமாகும் மேற்சொன்ன மூலாதாரம் எனும் சத்தியம். பனிக்குபோல் துலங்கும் இச்சத்தியத்தில் ஐயம், ஆட்சேபனை யென்பதற்கு கிஞ்சித்தும் இடமில்லை. இதனைத் தேவ சன்னிதியில் ஆழ்ந்தமர்ந்து சிந்திக்கிற மனிதன், நித்திய ஞானமாகிய கடவுள் நியமித்த கிரமத்தைத் தலைகீழாக மாற்றி, தன் பரமகதியாகிய சிருஷ்டிகளைவிட்டு, பரமகதிக்குத் துணைக்கருவிகளாக மாத்திரம் கொடுக்கப்பட்ட சிருஷ்டிகளே சதமென்றெண்ணி நடக்கும் மதிகேட்டை உணராதிருக்கமாட்டான். மதிகெட்ட இந்த நடத்தையால் மனுஷசுபாவம் ஈனப்பட்டு, சீர்குலைந்து, ஆத்துமம் மாசுபட்டு தெய்வத்துக்கு வெறுப்பாய்ப் போவதைப் பொதுவில்மாத்திரமல்ல, தனக்குள் தானே கண்கூடாய்க் கண்டுணர்ந்து, ஏற்கனவே உள்ளம் நாணி வருந்துகிறான். ஏற்கனவே பாவத்தின் நீசத்தை எண்ணி, அதை வெறுத்து நீக்கி, தன் சீவியத்தைச் சீர்திருத்த ஆசிக்கிறான். சர்வேசுரன் நியமித்து விதித்த மேற்சொன்ன ஒழுங்குக் கிரமத்தை மீறி நடப்பதே பாவமன்றி, பாவமென்றால் வேறென்ன? தன் பாவங்களின்மேல் துவேஷமும் மனஸ்தாபப் பெருக்கமும் மேன்மேலும் அதிகரிக்கும்படி, பாவத்தின் குரூர அவலட்சணத்தையும், அதனால் விளையும் எண்ணிறந்த தின்மைகளையும், தேவ மகத்துவத்துக்கு நேரிடும்

நிந்தை அவமானத்தையும், இருஷ்டாந்தமாய் மெய்ப்பித்துக்காட்டும் சம்மனசுக்களுடைய பாவத்தையும், ஆதாம் ஏவாள் செய்த பாவத்தையும், ஒரே ஒரு சாவான பாவத்தைச் செய்து, அதோடு மரித்து, நித்திய கேட்டுக்குள்ளான யாதாமொருவனுடைய நிர்ப்பாக்கிய முடிவையும் ஒவ்வொருவனும் தானே செய்த பாவங்களையும், பாவத்தால் நிந்திக்கப்பட்ட தேவ நீதியின் கோபாக்கினி குமுறி எரியும் நித்திய நரகக் குழியையும், முறைமுறையே ஞாபகத்துக்கு வருவித்து கூர்ந்து தியானிக்கும்படிச்செய்கிறார். இப்படி பல தியானங்கள் செய்து, தன் சீவியத்தை நுணுநுணுக்கமாய் ஆராய்ந்து, ஆத்தும சோதனைசெய்து பொதுப்பாவசங்கீர்த்தனம் பண்ணி மனத்தூய்மையும், மனச்சமாதானமும் அடைந்து, இனிமேல் பரிசுத்தமாய் சீவிப்பேனென்று உறுதியான தீர்மானம் செய்துகொள்ளுவதே இம்முதல் வார * முயற்சிகளின் பிரதான பலன்.

இப்படித் தூய்மை அடைந்து தேவ இஷ்டப்பிரசாதத் திருவிளக்கு திரும்ப சுடர்விட்டெரியும் ஆத்துமம், முன் யூதேயா நாடெங்கும் அமிர்த மொழி பொழிந்து சுற்றித்திரிந்த அவதரித்த திவ்விய சுதனைத் தன் கண்முன் கண்டாற்போல் எண்

* அர்ச். இஞ்ஞாசியார் தமது "ஞான முயற்சிகளை" நாலு வாரமாக, அதாவது நாலு பிரதான பாகமாக வகுத்திருக்கிறார்.



ணித் தியானிக்கும்படிச் செய்கிறார். இதற்காக, தேவ தோத்திரத்தை நன்கு கருதி யுத்தத்துக் கேகும் இகலோக அரசன் ஒருவர் உவமையை முதலில் எடுத்துக் கூறுகிறார்.

இகலோகத்தரசன் ஒருவர், "நமது கர்த்தராகிய சர்வேசுரனாலேயே தெரிந்துகொள்ளப்பட்டவர். சகல பிரபுக்களும் கிறீஸ்துவர்களும் தம்மைச் சங்கித்து, தமக்குக் கீழ்ப்படியப்பெற்றவர், வெகு சற்குண தயாளசீலர், மிக்க வல்லபம், மகத்துவம், மகிமைப்பிரதாபம் பொருந்திலங்கிய யௌவன சம்பன்னர்,— இவ்வரசன் தமது பிரஜைகள் அனைவரையும் நோக்கிச் சொல்லுகிறார்: "அவிசுவாசிகளுடைய நாடு முழுமையும்போய் ஜெயங்கொள்ள நான் தீர்மானித்திருக்கிறேன். என்னுடன் வர விரும்புகிறவன், நான் உண்ணும் உணவையே அவனும் உண்டு, நான் பருகும் பானத்தையே அவனும் பருகி, நானணியும் உடையே அவனும் அணிந்துகொள்ள சம்மதப்பட்டிருக்கவேண்டும். மேலும் நான் வருந்திப் பிரயாசப்படுவதுபோல், அவனும் வருந்திப் பிரயாசப்படவேண்டும், நான் இராக்கண் விழித்திருப்பதுபோல், அவனும் இராக்கண் விழித்திருக்கவேண்டும். இப்படிச் செய்வானாகில், பிரயாசை வருத்தங்களில் அவன் என்னுடன் பங்காளியாயிருந்ததுபோல் நா[illegible] ஜெயத் திலும், என்னுடன் பங்கா[illegible] திவ்விதம் வசனித்[illegible]கின்றார். இவ்[illegible]

107408

நயாளரும் தர்மகுணமும் நிறைந்த அரசனுக்கு நல்ல பிரஜைகள் சொல்லவேண்டிய மாறுத்தர மென்ன? இப்பேர்ப்பட்ட அரசனுடைய விண்ணப்பத்துக்கு எவனுகிலும் காதுகொடாதிருந்தால் அவன் சமஸ்த ஜனங்களாலும் எவ்வளவோ இகழ்ந்து நிந்திக்கப்படத்தக்கவனுவான்! போர்முகத்தில் புறங்காட்டி ஓடும் வீரமற்ற கோழை நெஞ்ச சேவகனென்றல்லோ சொல்லவேண்டும்!

உவமையாய்ச் சொல்லப்பட்ட இவ்வநித்திய அரசனை அறிகுறியாகக்கொண்டு, இவ்வுவமையின் உவமேயமாய் விளங்கும் நமதிருதய நித்திய அரசனுகிய சேசுக்கிறீஸ்துநாதரை நாம் சிந்தையில் நிறுத்தித் தியானிக்கும்படிச் செய்கிறுர். இத்திவ்விய அரசன் விரும்பி அழைக்கும் திருக்குரலொலியை உள்ளத்தில் கேட்டு, அவரைப் பின்சென்று அவரோடு தரித்திரமும் துன்பமும், நிந்தை நிர்ப்பந்தமும் அநுபவிக்க ஆசையாயிருப்பவன் யார்? நமக்கு 'உண்மையும், வழியும், ஜீவனுமாயிருக்கும்' நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதரை பரம்பரம் அறிந்து நேசித்து, மேன்மேலும் நெருங்கிய ஐக்கியமாய் அவரைப் பின்சென்று நடக்கும்படி, அவர் மனுஷருய் அவதரித்ததுமுதல், அவர் சிலுவையில் மரணமடைந்ததுமட்டும் அவர் ஜீவியத்திலுள்ள பிரதான விஷயங்களை ஒவ்வொன்றுய்த் தியானிக்கும்படி செய்கிறுர். இரண்டாம் மூன்றும் வார முயற்சிகள் என்று சொல்லப்படும் இத்தியானங்



களுக்கு, மேற்கூறியபடி இகலோகத்தரசனை உவமையாகக்கொண்டு, சதாகால அரசனும் சேசுக்கிறீஸ்துநாதரைத் தியானிக்கும் இம்முதல் முயற்சி அஸ்திவார முயற்சியாகும். இதையும் இதைப் பின்றொடர்ந்துவரும் மற்ற தியானங்களையும் கவனம் கரிசனமுடனே செய்யும்போது உத்தம ஞான ஜீவியம் இன்னதென்று ஆத்துமாவின்கண் புலப்படும். மானிடன் இருதயத்துக்கு உத்தம ஞான ஜீவியம் கிறீஸ்துநாதருடைய ஜீவியமே!—கிறீஸ்துநாதருடைய நினைவு வாக்குக் கிரிகைகளே! கிறீஸ்துநாதர் நினைத்ததுபோல் நினைக்கவும், அவர் சம்பாஷித்ததுபோல் சம்பாஷிக்கவும், அவர் கிரிகைகள் செய்ததுபோல் கிரிகைகள் செய்யவும், அவர் நேசித்ததை நேசிக்கவும், அவர் வெறுத்ததை வெறுக்கவும், இவ்விதமே சகலத்திலும் கிறீஸ்துநாதரைப்போல் ஜீவித்து, கிறீஸ்துநாதரே தன் இருதயத்தில் ஜீவிக்குமாறு கிறீஸ்துநாதருடைய ஜீவியத்தைத் தன் ஜீவியமாக்க மானிடன் கற்றுக்கொள்ளுதல்,—ஆ! இதுதான் உத்தம ஞான ஜீவியம்! இவ்வுத்தம ஞான ஜீவியத்தை நன்குணர்ந்தன்றோ: "கிறீஸ்துநாதரோடு சிலுவையில் அறையப்பட்டவனுயிருக்கிறேன். நான் ஜீவிக்கிறேன்; ஆனுலும் நானல்ல; கிறீஸ்துநாதர்தான் என்னில் ஜீவிக்கிறுர். நான் இப்போது சரீரத்தில் ஜீவிக்கிறதோ, இது என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ சுதனைப்

பற்றும் விசுவாசத்தினால் ஜீவிக்கிறேன்" * என்றுரைத்தார் உத்தம ஞானஜீவி அர்ச். சின்னப்பர். இந்த ஞான ஜீவியத்தை ஆத்துமத்தில் புகட்டுவதற்காகவே லொயோலா இஞ்ஞாசியார் ஆரம்பத்திலேயே வெகு கவலையுடன், கிறீஸ்துநாதரை நம திருதயங்களின் சாசுவத அரசனாக எடுத்துக் காண்பிக்கிறார். காண்பித்துப் பின்வரும் ஒவ்வொரு தியானத்திலும், ஐம்புலனால் ஒரு நற்பொருளின் குணகுணங்களை நாம் ஸ்பரிசித்தறிந்து விரும்புவது போல், 'சகல இருதயங்களுக்கும் அரசும் அவைகளுக்கு மத்தியஸ்தானமுமாயிருக்கும்' இத் திரு இருதயத்தின் தெய்வீகாமனுஷீக ஜீவியத்தையும், அத்தியந்த அன்பு நேசம் ஆவல் நோக்கத்தையும், மானிடன் தன் ஆத்துமாவின் உட்புலன்களால் உணர்ந்தறிந்து உள்ளத்தில் நேசித்துக் கண்டு பாவிக்கத் தூண்டுகிறார். மேலும், நிலைமையான ஒரு அந்தஸ்தோ அலுவலோ தெரிந்துகொள்ளுதல் அல்லது ஏற்கனவே தெரிந்துகொண்ட அந்தஸ்தின் கடமைகளை நிறைவேற்றும் விதம், தன் ஆவலைத் தூண்டுகின்ற இன்னின்ன விஷயங்களில் அநுசரிக்க வேண்டிய ஒழுங்குக்கிரமம், தன் மனதைச் சஞ்சலப்படுத்துகிற இன்னின்ன விஷயங்களில் தான் போகவேண்டிய வழி, இது முதலான பற்பல விஷயங்களில் தேவசித்தம் இன்னதென்று இத்தியானங்களில் புத்திக்கு அதிக துலக்கமாய் விளங்

* கலாத்தியர் 2-ம் அதி., 19-20 வச.



கும். அதனால் மனதுக்கும் அதிக திடன் உண்டாகும். துறவற ஜீவியத்துக்கோ, குருப்பட்டத்துக்கோ ஒருவன் அழைக்கப்பட்டிருந்தால், இந்தத் தியானங்களில் அந்தத் தேவ அழைப்பு அவனுக்கு மறைவுதலாயிராது,—ஏதோ ஒருவகையாய் அவன் சிந்தைக்கு அது தெளிவாகும்.

ஆனால் எச்சமயத்தையும்விட இச்சமயத்தில் மிக விழிப்பாயிருக்கும் சாத்தானுடைய சர்ப்பனைகளைப் பகுத்தறிந்தகற்றி, நமது கர்த்தர் சேசுக்கிறீஸ்துநாதர் பாரிசம் ஸ்திரமாய் நெருங்கி நிற்பதற்கு உதவியாக: "இரு விருதுக்கொடிகள்,—உன்னத சேனாதிபரும் நமது ஆண்டவருமாகிய கிறீஸ்துநாதருடையது ஒன்று; ஒன்று நமது மனுஷ சுபாவத்தின் ஜென்ம சத்துருவாகிய லூசிப்பேருடையது" என்ற ஆச்சரியமான ஓர் தியானத்தை மேற்சொன்ன முயற்சிகளுக்கிடையே அர்ச். இஞ்ஞாசியார் இசைத்துக் கொடுத்திருக்கிறார். லொயோலா இஞ்ஞாசியாருடைய புத்தி தீட்சணியமும், நுண்ணறிவும், திவ்விய இஸ்பிரீத்துவானவரின் மாணாக்கராயிருந்து மன்ரேசாவில் அவரடைந்த ஞான விவேகத்தெளிவும், இத்தியானத்தில் எவர்க்கும் நன்றாய் விளங்கும். இத்தியானத்தின் முதற்பிரிவில்: 'குழப்பம் குடியிருக்கும் நகர்' என்றர்த்தங் கொடுக்கும் பபிலோன் நகரில் விஸ்தாரமான ஒரு மைதானத்தில், கரும்புகை மண்டி யெரியும் அக்கினியாற் சூழப்பட்ட உயர்ந்ததோர் ஆசனத்தில்,

பார்க்கப் பயங்கரமான கோரக் குரூரரூபமாய், அகங்காரமே உருவெடுத்து வந்தாற்போல பசாசுகளுக்கெல்லாம் தலைவனான லூசிபேர் வீற்றிருக்கின்றதாகவும், வீற்றிருந்து தன்முன் மொய்த்து நிற்கும் எண்ணிறந்த பேய்களைப்பார்த்து, அவைகள் உலகமெங்கும் போய் மனுக்குலத்தோரனைவரையும் வஞ்சித்துக் கெடுப்பதற்குவேண்டிய கபட தந்திரங்கள் இன்னதென அவைகளுக்குப் போதிப்பதாகவும் சிந்தித்து தியானிக்கும்படி செய்கிறார். சாத்தானுடைய துர்க்கந்த இருண்ட சுபாவத்தையும், பழியும் பாதகமும் பதிவிருக்கும் அதன் கொடிய நெஞ்சத்தையும், கண்ணுக்கு அதி நன்மைகளாகக் காண்பிக்கின்றவைகளில் மறைந்திருக்கும் உயிர்கொல் விஷத்தையும், ஒவ்வொருவனும் இதில் கண்கூடாய்க் கண்டுணர்ந்துகொள்ளுவான். மறுபிரிவில்: "சமாதானபுரி" என்றர்த்தங்கொடுக்கும் 'ஜெருசலேம் மாநகரில்" விஸ்தாரமானதோர் மைதானத்தில் தாழ்ந்ததோரிடத்தில் மிக்க அன்பு அழகு சொரூபமாய் சர்வலோகத்துக்கும், நமதிருதயங்களுக்கும் கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துநாதர் வீற்றிருப்பதாகவும், தம்மைச் சூழ்ந்து நிற்கும் அப்போஸ்தலர்கள் சீஷர்களை நோக்கி அவர்கள் உலகமெங்கும் போய் மனுமக்கள் யாவரையும் இரட்சித்து பரகதி சேர்ப்பதற்கு செய்யவேண்டிய சுகிர்த உபாயம் யாதென்று அவர் திருவாய்மலர்ந்து போதிப்பதாகவும் சிந்தித்து



தியானிக்கும்படி செய்கிறார். இப்பிரிவில் அர்ச். இஞ்ஞாசியார் ஒடுக்கத்திலிருக்கும் ஒவ்வொருவனும் அவதரித்த வார்த்தையானவருடைய பாரிசத்தில் நின்று, அத்தியந்த சாந்தமும் தாழ்ச்சியும், மனுமக்கள்மீது அளவற்ற நேசப்பெருக்கமும் நிறைந்த அவரது திரு இருதயத்தைக் கண்முன் கண்டாற்போல் கண்டுணர்ந்து, சிநேக வாஞ்சையுடன் அவர் திருச்சிலுவையைக் கைப்பற்றி அவரை அண்டி நெருங்கிப் போகும்படி செய்கிறார்.

தேவசுதன் கன்னித்தாய் திருவுதரத்தில் அவதரித்துப் பிறந்தது முதல், அவர் திருப்பாடுகள் மட்டும் நடந்த விஷயங்களை ஒவ்வொன்றாய் இரண்டாம் வாரத்தில் தியானித்தபின், மூன்றாம் வாரத்தில் சேசுநாதருடைய திருப்பாடுகளைத் தியானிக்கும்படி செய்கிறார். "நான் பாடுபடுவதற்கு முன் இந்தப் பாஸ்காவை உங்களோடுகூட உண்ண ஆசைமேல் ஆசையாயிருந்தேன்" என்றுரைத்து, சேசுநாதர் கடைசி இராப்போசனம் செய்த அசனசாலையில் அவரை நாம் கண்டு, தமது திருக்கரங்களால் சீஷர்களின் பாதங்களைக் கழுவினதையும், கரைகாணாத அன்பால் அவர் இயற்றிய உன்னத சற்பிரசாதக் கிரிகையையும் தரிசித்து, அவருடைய திருமுகத்தோற்றம், திருக்கண்ணோட்டம், அருள் நோக்கம், கை, மெய், அசைவு எல்லாம் கவனித்து, அவர் திருவாய் அமிர்த மொழிகளையும்

அசன முடிவில் கண்களை உயர்த்தித் தமது பிதாவை நோக்கி அவர் செய்த உன்னத ஜெபத்தின் குரலொலியையும் கேட்டு மனதுருகி,-அவருடன் அவர் உதிரவேர்வை வேர்த்த பூங்காவில் புகுந்து, தாங்கொண்ணுத் துயரால் தள்ளாடி மண்ணில் முகம் பதிய குப்புற விழுந்த அவர் திருமேனியையும் அவர் பட்ட அகோர அவஸ்தையையும் கண்ணுற்று மனதில் துக்கித்துப் பரிதவித்தவர்களாய், அவர் பாடுபட்ட ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒவ்வொரு விஷயத்திலும் அவரைப் பின்றொடர்ந்து திரிந்து, அவருடன் சிலுவைப்பாதையில் நடந்து, கல்வாரி மலைக்கேகி, வியாகுல வாளால் ஆத்துமம் ஊடுருவப்பட்டு நின்ற மாதாவுடன் சிலுவை அடியில் நின்று, சிலுவையில் தொங்கும் நாதன் திருமேனியின் காயங்களைக் கண்ணோக்கி, நமது பாவங்களின் நிமித்தம் கர்த்தர் தமது திருச்சரீரத்திலும் ஆத்துமாவிலும் பட்ட பாடுகளை நாமும் நமதிருதயத்தில் பட்டுணர்ந்து உள்ளுடைந்து பிரலாபித்து, கிறீஸ்துநாதரை அதிகமதிகமாய் சிநேகித்துப் பின்செல்லுவதே, இந்தத் தியானங்களால் நாம் அடைய வேண்டிய பிரதான பலன். இவ்விதம் சேசுநாதருடைய திருப்பாடுகளைத் தியானித்து சிந்தாகுலப்பட்டு வருந்திய ஆத்துமா, நான்காம் வார முயற்சிகளில், ஜெயசீலராய் உயிர்த்தெழுந்து சோதிப்பிரகாச சொரூபனாய் தமது திருத்தாயாருக்கும் சீஷர்களுக்கும் தரிசனையாகி அவர்கள் மனதைத் தேற்



றித் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி ஒட்டோலகராய்ப் பரலோகத்துக்கெழுந்தருளின நாதனைக் கண்ணுற்றுத் தியானித்து, அவருடன் அகமகிழ்ந்து ஆனந்தித்து ஞான ஜீவியத்தில் உற்சாகமும் ஊக்கமும் அடையும்.

கடைசியாய், சிருஷ்டிகள்மீதுள்ள ஒழுங்கற்ற பற்றுதல்களை அறவே நீக்கி, தன் சிருஷ்டிகர்த்தருக்கு உத்தமமானவிதமாய் தன்னைக் கையளித்து ஊழியம் செய்யக் கற்றுக்கொள்ளும்படியாய், இது காலம் பிரயாசப்பட்டு முயற்சி செய்துவந்த ஆத்துமம், இகலோக பாசபந்தனங்களையெல்லாம் ஒருமிக்க முறித்தெறிந்து, அவைகளுக்கு மேலாகத் தாவி எழும்பி, தன் சிருஷ்டிகர் பாதத்தில் போய் வீழ்ந்து, தன் சுயாதீனத்தையும், தன் ஞாபகம், புத்தி, மனசக்திகள் யாவையும், இன்னும் ஏதேது தனக்குண்டோ அதனையெல்லாம், தன்னையுமே முழுதும் பரிசுத்த தேவசிநேக அக்கினியில் தகனப்பலியாக தேவமகத்துவத்துக்கு ஒப்புக்கொடுக்கும்படி, அத்தேவசிநேக அக்கினியை இருதயத்தில் மூட்டுவதற்காக, சொல்லரிய மாட்சிமை நிறைந்த ஓர் தியானத்தை தமது ஞான முயற்சிகளுக்கு முடிவு சிறப்பாக அர்ச். இஞ்ஞாசியார் இயற்றித் தந்திருக்கிறார். இவ்வுன்னத தியானத்தை என்னென்று சொல்லலாம்! மோட்சவாசிகள் சுகித்தநுபவிக்கும் நித்திய பேரின்ப தரிசனத்தின் முன்சுவை என்னலாம்.

மேலும், ஆத்தும இரட்சணியமும், அர்ச்சியசிஷ்டதனமுமடைவதற்கு நமது சொந்தப் பிரயாசம் அத்தியாவசியம் என்றாலும், அது மாத்திரம் போதாதே. சர்வேசுரன் தமது சுய தயையினால் கொடுத்தருளும் தேவ வரப்பிரசாதத்தின் அநுக்கிரகமும் அகத்தியம் வேண்டியதல்லோ. இதை நன்குணர்ந்த அர்ச். இஞ்ஞாசியார், ஓர் பக்கத்தில் மேற்சொன்ன முயற்சிகளில் நாம் நமது புத்தியையும் மனதையும் ஊன்றி, நம்மால் இயன்றமட்டும் ஊக்கமாய் அவைகளைத் தொடர்ந்து செய்வதற்கு உதவியாகவும், இன்னொரு பக்கத்தில் தேவ வரப்பிரசாதத்தின் அநுக்கிரக சகாயத்தை ஏராளமாய் அடைந்துகொள்ளுவதற்கு அநுகூலமாகவும், வெகு உசிதமான அநேக ஒழுங்குகளும் சட்டதிட்டங்களும் ஏற்படுத்தியிருக்கிறார். அன்றியும், சகலத்திலும் தேவ மகத்துவத்துக்கு உகந்தவர்களாய் நடந்து, ஞான சீவியத்தில் வர்த்திப்படைய விரும்புகிறவர்களுக்கு ஒடுக்ககாலத்தில் மாத்திரமல்ல, ஆயுள்பரியந்தம், அநுதினமும், பிரயோசனமாயிருக்கும்படி, தனி ஆத்துமசோதனை, பொது ஆத்தும சோதனை, ஜெபம், தபம், ஓர் அந்தஸ்து, அழைவல், அல்லது வேறோர் பிரதான காரியத்தைத் தெரிந்துகொள்ளும் விதம், வீண் சந்தேகம், நல்ல அரூபி கெட்ட அரூபிகளால் உண்டாகும் வெவ்வேறு சிந்தனை பற்றுதல்களை அதிக நன்றாய்ப் பகுத்தறியும் வகை, முதலியவைகளைப்பற்றி அருமையான



ஞானத்தெளிவுடன் பற்பல ஒழுங்குகளும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

இந்த ஞான முயற்சிகளைப் பூரணமாய்ச் செய்து முடிக்க நாற்பதுநாள் அல்லது ஒரு மாதமாகிலும் செல்லும். என்றாலும், பத்து நாள் எட்டு நாள் ஒடுக்கங்களிலேமுதலாய் மேற்சொன்ன நான்கு வார முயற்சிகள் யாவையும் சுருக்கமாய்ச் செய்து திரளான நன்மையடையலாம். மூன்று நாள் ஒடுக்கங்களில் சாதாரணமாய் முதல்வார முயற்சிகள் மாத்திரங் கொடுக்கப்படும்.

இவ்வற்புத நூல் எழுதப்பட்டு சுமார் முன்னூற்று எண்பது வருஷங்களாகின்றன. இந்த முன்னூற்று எண்பது வருஷங்களாய் இதனால் திருச்சபையில் விளைந்துவரும் ஞான நன்மைகள் எண்ணிறந்தவை. இதனால் எத்தனையோ ஆத்துமங்கள் பரமகதியும், அர்ச்சியசிஷ்டதனமும் அடைந்து வருகிறார்களென்று உலக முடிவில்தான் தெரியவரும். சேசுசபையை அர்ச். இஞ்ஞாசியார் சிந்தையில் உருவாகச்செய்து, சன்னியாச பாலத்துவம்முதல் மரணபரியந்தம் அச்சபையோர் ஒவ்வொருவரையும் தங்கள் சபையின் கதிக்கும் கருத்துக்கும் இசைந்தபடி உருவாக்கிவரும் உத்தம சாசனம் இதுவே. பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காகவும் அர்ச்சியசிஷ்டதனத்துக்காகவும், அவர்கள் ஓயாமல் கைக்கொண்டு பிரயோகித்துவரும் உத்தம

கருவியும் இதுவே. இதனைக்கொண்டு அர்ச். இஞ்ஞாசியார் தாமே ஆத்துமாக்களுக்கு செய்துவந்த ஆச்சரியமான நன்மைகளும், அதனால் அவருக்கு நேரிட்ட துன்பங்களும் உபத்திரவங்களும் இச்சரித்திரத்தில் போகப்போக விளங்கும்.

நெடுநாட் பாவிகள் இந்த ஞான முயற்சிகளைச் செய்து, பாவ மார்க்கத்தை விட்டகன்று சன்மார்க்கத்தில் நடந்து வருவதையும், இலௌகிக மகிமை பெருமை திரவிய சம்பத்துகளில் பேராவலுற்றிருந்தவர்கள் முதலாய் அதையெல்லாம் வெறுத்து நிந்தை அவமானம் தரித்திரம் முதலியவைகளை ஆசையாய்த் தேடித் துறவறத்தில் பிரவேசிப்பதையும் கண்டு, இதில் ஏதோ பில்லிசூனியம் இருக்க வேண்டும், ஏதோ மாய வித்தையால் இஞ்ஞாசியார் மனிதர் புத்தியை மாறாட்டி மயக்கி வருகிறாரென்று கல்விமான்களுக்குள்ளே முதலாய் சிலர் தப்பாக எண்ணி இஞ்ஞாசியாருக்கு நெருக்கிடை உண்டுபண்ணப் பிரயத்தனப்பட்டார்கள். பில்லிசூனியமுமில்லை மாயவித்தையுமில்லை! "சகல மானிடரும் இரட்சிக்கப்படவேண்டுமென்று சித்தமாயிருக்கிற"* சர்வ ஜீவதயாபர சர்வேசுரன், தன்னாலியன்றதை முயன்று செய்யும் நல்ல மனதுடையோரைக் கைவிடார் என்ற சத்தியந்தான் கண்கண்ட திருஷ்டாந்தமேயன்றி வேறல்ல! அர்ச். இஞ்ஞாசியார்

* 1 திமோத். ii, 3.



கருத்துப்படி தங்கள் மனது சுயாதீனம் யாவையும் தங்கள் சிருஷ்டிகராகிய கர்த்தருக்குத் தாராளமாய் ஒப்புக்கொடுத்து, வெகு உதாரப் பெருந்தன்மையுடன் இம்முயற்சிகளைத் துவக்கி அமர்ந்து ஊக்கமாய்ச் செய்கிறவர்கள் உள்ளத்தில், திவ்விய இஸ்பிரீத்துவானவர் பொழிந்தருளும் ஞானப்பிரகாசத்தையும், புகட்டும் ஞானவுறுதி தைரியத்தையும் அறியாததால், சிலர் முன் சொன்னபடி பில்லிசூனியமென்றும் மாய வித்தையென்றும் பிதற்றினார்கள். மெய்யாகவே இவ்வற்புத நூலின் தன்மையை யோசித்துப் பார்க்கில் நல்ல மனதோடு இதிலடங்கிய முயற்சிகளைச் செய்கிறவர்கள், அதினால் ஓர் பலனும் அடையாதேபோனால், அதுவே ஓர் ஆச்சரியமாயிருக்கும்,—பார்த்தோலி சுவாமியார் சொல்லியிருப்பதுபோல், அதுவே ஓர் புதுமை என்னலாம்!

இவ்வற்புத நூலைப் பரீட்சித்தறிந்தவர்களெல்லாம் இதை ஒரு அருமையான பொக்கிஷமாக மதித்துப் பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள்:—

மூன்றாம் பவுல் (Paul III) என்னும் பாப்பானவர், அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாருடைய விண்ணப்பத்தின்பேரில், இந்நூலை ஆதியோடந்தம் வெகு நுட்பமாய்ப் பரிசோதித்து: "இந்த ஞான சாதனங்கள் ஞான முயற்சிகளை முழுமையும், இவைகளில் அடங்கிய ஒவ்வொரு விஷயங்களையும், நாமே

தீர்க்கமாய் அறிந்து, அப்போஸ்தோலிக்க அதிகாரத்தால் அங்கீகரித்து மனம் உவந்து ஆசீர்வதிக்கின்றோம்" என்று 1548-ம் ௵ ஜூலை-௴ 31-௳ திருச்சபைக்கு அளித்த அப்போஸ்தோலிக்க நிருபத்தில் கூறியிருக்கிறார். மேலும் 'தெய்வ பக்தியைப் புகட்டும் புனித நூல்' என்றும் 'விசுவாசிகள் ஞான ஜீவியத்தில் பயிர்ச்சியும் தேர்ச்சியும் அடைவதற்கு மகா அநுகூலமான சுகிர்த நூல்' என்றும் மனதாரப் புகழ்ந்து, உலகமெங்கும் கிறீஸ்துவர்கள் ஆண் பெண் அனைவரும் இந்த ஞான முயற்சிகளைப் பிரயோகித்துவரும்படி வெகு வாஞ்சையுடன் வற்புறுத்தித் தூண்டுகின்றார், மேற்படி அப்போஸ்தோலிக் நிருபத்தில். இது போலவே நெடுகவும் பல பாப்புமார்கள் இந்த ஞான முயற்சிகளைப் புகழ்ந்து ஆசீர்வதித்து வந்திருக்கிறார்கள்.

**அர்ச். கார்லூஸ் பொரோமேயோ,** கர்தினாலும், மிலான் பட்டணத்து அதிமேற்றிராணியாருமாயிருந்து 1584-ம் ௵ காலஞ்சென்றவர். தாமே இந்த ஞான முயற்சிகளை அடிக்கடி பிரயோகித்து வந்ததுமன்றி, தமது அதிமேற்றிராசனத்தில் குருப்பட்டத்துக்குப் படிக்கிறவர்கள் குருப்பட்டம் பெறுமுன் முதல் வார முயற்சிகளையாகிலும் அகத்தியம் செய்யவேண்டுமென்று கற்பித்தார். ஓர் நாள் ஒரு பெரிய பிரபு தமது புத்தகசாலையை அவருக்குக் காண்பித்தபோது, "என்னிடத்திலும்



ஒரு புத்தகசாலையுண்டு. மிகச் சிறியது; இந்தப் புத்தகமே அந்தப் புத்தகசாலை" என்று **ஞான முயற்சிகள்** என்ற நூலை அவருக்குக் காண்பித்து: இந்தப் புத்தகம் உலகிலுள்ள மற்றப் புத்தகங்களை விட எனக்கு அதிகப் பிரயோஜனமாயிருந்ததென்று கூறினார்.

மேற்றிராணியாரும் வேத சாஸ்திரியுமான **அர்ச். பிரான்ஸிஸ்கு சலேசியார்,** 1622-ம் ௵ காலஞ்சென்றவர்: இப்புத்தகத்தில் எத்தனை அட்சரங்கள் உண்டோ அத்தனை ஆத்துமாக்கள் இதனால் இரட்சணியம் அடைந்தார்கள் என்றார்.

**ஜப்பான்** தேசத்தில் ஓர் கொடிய வேதகலாபனை நெருங்கி வந்தபோது, விசுவாசிகள் திரளாய் சேசுசபைக் குருக்களிடத்திற் போய் தங்களுக்கு ஞான முயற்சிகளைப் போதிக்கும்படி மன்றாடினார்கள். ஒடுக்கத்திலிருந்து ஞான முயற்சிகளைச் செய்த பின், வாளுக்கும் அக்கினிக்கும் கொதிக்கும் கெந்தக நீருக்கும் வேறு எவ்வித நிஷ்டூர உபாதைகளுக்கும் அஞ்சா நெஞ்சர்களாய் வேதத்துக்காக உயிரைக் கொடுத்தார்கள்.

அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் காலமுதல் இக்காலம் வரை கத்தோலிக்குத் திருச்சபையில் அர்ச்சியசிஷ்டவர்களும் வேத சாஸ்திரிகளும் மகாத்துமாக்களும் ஞான முயற்சிகள் என்னும் இந்த அற்புத நூலை நன்கு மதித்துப் புகழ்ந்து

எழுதியவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துரைக்க ஏற்பட்டால், அதுவே ஒரு பெரிய பிரபந்தமாக முடியும்.

கத்தோலிக்கு திருச்சபையை விட்டுப் பிரிந்திருக்கும் பதிதர்களுக்குள்ளே முதலாய் சிலர் இந்நூலை ஆராய்ச்சி செய்து, அரும்புகழ் கூறியிருக்கிறார்கள். "ஏதோ ஒரு மேலான மானதக் காட்சியால் மானிடன் நெஞ்சில் நிகழும் ஆசாபாச அமளி அமராட்டங்களைக் கண்ணோக்கி, மனிதர் சுபாவத்தை ஊடுருவி அறியும் அநுபவ சித்தி உடைய ஒருவராலன்றி மற்றெவராலும் எண்ணவும் கருதவும் கூடியதன்று இந்த ஞான முயற்சிகள்" என்பதாக பிரபலியம் பெற்ற பிரபு மக்காலே (Lord Macaulay) எனும் பதித ஆசிரியர் எழுதியிருக்கிறார். ஆங்கிலிக்கன் பாதிரியாராகவிருந்து பிற்பாடு கத்தோலிக்கு திருச்சபையில் உட்பட்ட ஆர்பி ஷிப்லி என்றொருவர் இன்னும் ஆங்கிலிக்கராயிருக்கும்போதே இந்த ஞான முயற்சிகளைப் பெரிது பாராட்டி ஆங்கிலிக்கன் சபையார் உபயோகத்துக்காக இங்கிலீஷில் மொழிபெயர்த்தார். * இந்த மொழி பெயர்ப்பின் முகவுரையில் ஞான முயற்சிகளின் அருமையையும் அபூர்வ சக்தியையும் எடுத்துக் காண்பிக்கிறார். கத்தோலிக்குத் திருச்சபையில் தேவானுக்கிரகத்தால் நிலைபெற்றிருக்கும் துற

* Spiritual Exercises of St. Ignatius of Loyola by the Rev. Orby Shipley, M. A., London, 1870.



வற ஜீவியத்தைத் தாங்களும் கண்டுபாவிக்க அந்தோ! அத்துவானப் பிரயத்தனப்படும் ஆங்கிலிக்கன் பாதிரி கூட்டத்தார் சிலர் இந்த ஞான முயற்சிகளைப் பெரிது பாராட்டி வருகிறார்கள்.

ஆனால், நண்பர்காள், பற்பல விஷப்பிணிகளால் உபாதிக்கப்படுகின்றவனுக்கு, அப்பிணிகளைத் தீர்த்து, அவன் தேகத்தில் திரும்ப நல்ல இரத்தம் சுரந்தோடி உலாவச்செய்யும் கைகண்டதோர் மாமருந்தின் அருமையை விரித்துரை செய்தாலென்ன? அதனை அவன் தன் கையால் ஸ்பரிசித்து, கண்ணுற் கண்டுகொள்ளும்படி செய்தாற்றானென்ன? அதன் குணாகுணங்களை நன்றாயறிந்த ஒரு வைத்தியன் விதிக்கும் முறைப்படி அதை உட்கொண்டு, சொன்ன பத்தியங் காத்தாலன்றி, மற்றப்படி அதனால் உண்டாகும் நன்மையை அவன் உணர்ந்துகொள்ளானல்லோ?

இவ்வற்புத நூலின் அருமைபெருமையை எவரையும்விட அதிக நன்றாய் அறிந்திருந்த அர்ச். இஞ்ஞாசியார், அல்காலாவிலும் பாரீஸிலும் தமக்கு ஆத்தும குருவாயிருந்த எம்மானுவேல் தே மியோனா என்பவருக்கு, வேனீஸிலிருந்து 1586-ம் ௵ நவம்பர்-௴ 16-ம் ௳ எழுதின ஓர் கடிதத்தின் பிரதான பாகத்தை இவ்வதிகாரத்துக்கு முடிவுரையாக இங்கு மொழிபெயர்த்துத் தருகின்றோம். இந்தக் குருவானவர் தமக்குக் காண்பித்த அன்புக்கும்,

செய்த உபகாரங்களுக்கும் அவருக்கு வெகுவாய் நன்றி கூறி அர்ச்சியசிஷ்டவர் எழுதுகிறார்:

“நீர் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு நான் ஏதாகிலும் பிரதி உபகாரஞ் செய்வதற்கு ஞான முயற்சிகளை நீர் ஒருமாதகாலம் உமது விருப்பப்படியே நான் குறித்திருப்பவரிடத்தில் செய்யும்படி கோருவதைவிட வேறு வழி இம்மையில் நானறியேன். இதற்குள்ளாக அவைகளை நீர் செய்து முடித்தாயிற்றென்றால், அது விஷயத்தைப்பற்றி தயவுசெய்து எனக்கு எழுதும்படி நமதாண்டவராகிய சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் அவைகளைச் செய்திராவிட்டால், அவைகளைச் செய்யும்படி அவருடைய (நமதாண்டவருடைய) நேசத்தையும் அவர் நமக்காகக் கையேற்றுக்கொண்ட நிர்ப்பந்தமான மரணத்தையுங் குறித்து உம்மை மன்றாடுகிறேன். அவைகளைச் செய்த நிமித்தம் நீர் எப்போதாகிலும் மனம் நோகும்படி நேரிடுமேயாகில், நீர் எனக்கு விதிக்கும் தண்டனையை மனப்பூரணமாய் ஏற்றுக்கொள்ளுகிறேன்; அன்றியும் எனக்கு ஞானங் கற்றுக்கொடுத்த ஞானவான்களை நான் அவமதித்துப் பரிகாசம்பண்ணுகிறவனாக உம்மால் எண்ணப்படவும் உடன்படுகிறேன். * * * என்னாலியன்றமட்டும் இதற்கு உம்மை நான் கட்டாயப்படுத்தவில்லையென்று திவ்விய கர்த்தர் ஓர் நாள் என்னைக் கடிந்துகொள்ளாதிருக்கும்படி, இரு



தரம், மூன்றுதரம், இன்னும் எத்தனைதரம் என்னாற் கூடுமோ, அத்தனை தரம், நமதாண்டவராகிய சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக, நான் முன்னமே சொன்னதை நீர் செய்யும்படி மன்றாடுகிறேன். ஏனெனில் ஒவ்வொருவனும் தான்தானே (புண்ணிய சீவியத்தில்) வர்த்திப்பதற்கென்கிலும், அல்லது மற்றவர்களுக்காக வேண்டிய உதவி ஒத்தாசை ஞான நன்மைகளை அடைந்துகொள்வதற்கென்கிலும், அதிசிரேஷ்டமானதென்று நான் எண்ணவும் உணரவும், கண்டுபிடிக்கவும் கூடுமானது எதுவோ, அதுவெல்லாம் ‘ஞானமுயற்சிகளில்’ அடங்கியிருக்கின்றது. உமது சொந்த நன்மைக்கு அவைகள் அவசியமென்று நீர் உணர்ந்துகொள்ளாதேபோனாலும், மற்றவர்களுக்கு ஞான நன்மை செய்வதற்கு நாம் நினைக்கக்கூடியவைகளுக்கெல்லாம் மேலாக, அவைகள் உமக்கு உதவியாயிருக்குமென்று கண்டுகொள்ளுவீர். * *”

1567-ம் ௵ பிறந்து 1622-ம் ௵ மரணமடைந்த **அர்ச். பிரான்சீஸ்கு சலேசியார்** தாம் இயற்றிய **தேவ சிநேக வியாக்கியானம்** என்ற சிறந்த பிரபந்தத்தில் 12-ம் புத்தகம் 8-ம் அதிகாரத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: “தங்கள் ஜீவியத்தைச் சீர்திருத்தித் தேவ சித்தத்தைப் பின்சென்று நடக்க ஆசித்து, இதற்காகத் தங்கள் மனதைத் தூண்டி ஆழ்ந்து தியானித்துத் திடமான பிரதிக்கினைகள் செய்துகொள்வதற்காக, சிலநாள் தனி

வாசமாயிருந்து பற்பல ஞான முயற்சிகள் செய்யும் சுகிர்த வழக்கம், பூர்வீகக் கிறீஸ்துவர்களுக்குள் சாதாரணமாய் வழங்கி வந்தது. ஆனால் நாளாவட்டத்தில் இந்த வழக்கம் தளர்வுற்று அநேகமாய்க் கைவிடப்பட்டிருந்தது. சர்வேசுரனுடைய மகா தாசன் லொயோலா இஞ்ஞாசியார் இச்சுகிர்த வழக்கத்தை நமது பிதாக்கள் காலத்தில் திரும்ப ஸ்தாபித்தார்".—இக்காலத்திலோ, உலகமெங்கும் பட்டணங்களிலும் பட்டிகளிலும் துறவறத்தோர்க்குள்ளும் இல்லறத்தோர்க்குள்ளும் ஞான ஒடுக்கங்கள் என்றும், தியானப்பிரசங்கங்கள் என்றும் வெகுவாய் வழங்கிவருகிறதைப்பார்க்கலாம். இதற்கென்று அநேக இடங்களில் வெகு பொருட்செலவு செய்து விசேஷ கட்டிடங்களும் விசேஷ ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. 1917-ம் ௵ திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளன்று 15-ம் ஆசீர்வாதப்பர் எனும் பாப்பானவர் கட்டளையால் சமஸ்த திருச்சபைக்கும் ஆக்கியாபித்து விதிக்கப்பட்ட திருச்சபைப் **புதுச்சட்டப் பிரமாணத்தில்** ஞான ஒடுக்கம், ஞான முயற்சிகளைப்பற்றி ஆறு சட்டங்கள் வரையப்பட்டிருக்கின்றன. 126-ம் சட்டத்தில் மேற்றிராசனக் குருக்கள் மூன்று வருஷத்துக்கொருவிசையாகிலும் மேற்றிராணியார் செய்யும் திட்டப்படி சில தினங்கள் ஒரு சந்நியாசமடத்திலோ வேறு பக்திக்குரிய இடத்திலோ அமர்ந்து ஞான முயற்சிகள் செய்யக்கடவார்களென்றும்;



541-ம் சட்டத்தால்: துறவறசபையில் உட்பட விரும்புகிறவர்கள் நவசன்னியாசம் துவக்குமுன் பூர்த்தியாக எட்டு நாளாகிலும் ஞான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும்; 571-ம் சட்டத்தால்: நவசன்னியாசம் முடிந்து வார்த்தைப்பாடு கொடுக்குமுன் சரிவர எட்டுநாளாகிலும் ஞான முயற்சிகள் செய்யவேண்டுமென்றும்; 595-ம் சட்டத்தால்: துறவற சபையார் யாவரும் வருஷந்தோறும் ஞான முயற்சிகள் செய்யுமாறு சிரேஷ்டர்கள் கவனிக்கவேண்டுமென்றும்; 100-ம் சட்டத்தால்: குருப்பட்டத்துக்குப் படிக்கிறவர்கள் 'தோன்ஸூரா என்ற தலைப்பட்டமும் முதல் நான்கு சிறு பட்டங்களும் பெறுமுன் பூரணமாய் மூன்று நாளாகிலும், மீதியான பெரிய பட்டங்கள் பெறுமுன் பூரணமாக ஆறு நாளாகிலும் ஞான முயற்சிகள் செய்யக்கடவார்களென்றும்; 1367-ம் சட்டத்தால்: குருமடத்தில் படிக்கிறவர்கள் யாவரும் வருஷந்தோறும் சில தினங்கள் தொடர்ச்சியாய் ஞான முயற்சிகள் செய்யும்படி மேற்றிராணிமார்கள் கவனிக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டங்களை அநுசரிப்பதற்கு, அர்ச். இஞ்ஞாசியார் இயற்றிய ஞான முயற்சிகளைத் தான் செய்யவேண்டுமென்று நியந்தனையில்லை—வேறு வகை ஞான முயற்சிகளையும் பிரயோகித்துக் கொள்ளலாம். ஆனாலும் இவ்வித சட்டங்கள் திருச்சபையில் ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணமும் தூண்டு

தலும் லொயோலா இஞ்ஞாசியாருடைய ஞான முயற்சிகளின் அநுபவப் பரீட்சையே என்று சொல்லுதல் கிஞ்சித்தும் உண்மைக்கு விரோதமாயிராது. மேலும் எங்கும் இப்பொழுது சாதாரணமாய்க் கையாடப்பட்டுவருவது இந்த ஞான முயற்சிகளே—இவைகளே அதிகத் தகுந்தவைகளென்று பொதுப்பட ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இப்பொழுது திருச்சபைக்குத் தலைவராயிருக்கும் 11-ம் பத்திநாதர் 1922-ம் ௵, டிசம்பர்-௴ 3-ம் ௳ எழுதிய அப்போஸ்தோலிக்கு நிருபத்தால், சகல ஞான முயற்சிகளுக்கும் பரலோக பாதுகாவலராக அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நியமித்திருக்கிறார்.

## 6-ம் அதிகாரம்.

இஞ்ஞாசியார் மன்ரேசாவைவிட்டுப் புறப்பட்டது—அர்ச்சியசிஷ்டவர் தங்களை விட்டுப் பிரிந்துபோவதை நினைத்து மன்ரேசாவூரார் பட்ட சிந்தாகுலம்—விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் இம்மூன்று புண்ணியங்களைத் தவிர வேறு துணை ஆதாரம் வேண்டாமென்று தள்ளிவிடுகிறார்—பார்சலோனா—இஸபேல் ரோசர் என்னும் சீமாட்டிக்கு அர்ச்சியசிஷ்டவர் அற்புதமாய் அறிவிக்கப்பட்டது—சந்தேக நிவர்த்தி—உரோமை—உரோமையிலிருந்து வேனீஸுக்குப்போகும் வழியில் பட்ட அவஸ்தைகளும், சர்வேசுரன் அவருக்களித்த விசேஷ ஆறுதல் சகாயங்களும்—மார்க் அந்தோனியோ நித்திரையிற் கேட்ட அற்புத குரற்சத்தம்—கப்பற்காரருடைய அயோக்கிய நடத்தையைக் கண்டித்தது—கப்பற்காரருடைய சதி ஆலோசனை விழலாய் முடிந்தது—ஜெருசலேம்.

### 1523.

இஞ்ஞாசியார் மன்ரேசாவுக்கு வந்து ஏறக்குறைய பத்துமாதமாயிற்று. முன்சொன்னது

போல் ஊராரெல்லாம் அவரை ஓர் அர்ச்சியசிஷ்டவராகப் பாராட்டி, அவர்மீது வெகு சங்கையும் அன்பும் வைத்திருந்தார்கள். ஆனால் மகிமை கீர்த்தியையல்ல, கிறீஸ்துநாதர் மேலுள்ள நேசத்தால் அவர் மாதிரிகையாய்ச் சகலராலும் இகழ்ந்து நிந்திக்கப்படவே ஆவலுற்றிருந்த அர்ச்சியசிஷ்டவருக்கு இதுவெல்லாம் பெருந்துன்பமாயிருந்தது. ஆயினும் அவர் ஆசித்த நிந்தை அவமானங்கள் அவருக்கு கிடையாமற் போகவில்லை. தின்மையில் பிடிவாதமாய் மனம் ஊன்றிய தீயோர், நல்லோருடைய சுகிர்த ஜீவியத்தை எங்ஙனம் சகிப்பர்? துன்மார்க்கத்தில் மூர்க்கமாய் நிலைநின்ற சில துஷ்டர்கள், இஞ்ஞாசியாருடைய மாசற்ற ஜீவியத்தையும், அவரால் நல்வழி சேர்ந்த அநேகருடைய சுகிர்த ஒழுக்கத்தையும் சகியாதவர்களாய், அநீதமாய் பல அவதூறுகளை எங்கும் தூற்றி, அவருடைய பெயரை மாசுபடுத்த பிரயத்தனம் செய்தார்கள். அர்ச்சியசிஷ்டவரை மாத்திரமேயன்று, அவரை ஆதரித்துவந்த நல்ல ஜனங்களையும் பகைத்து, அவர்கள் பெயரையும் அநீதமாய்க் கெடுக்க வழிதேடினார்கள். அர்ச்சியசிஷ்டவருக்கு எது விஷயத்திலும் ஒத்தாசை செய்வதில் யாவருக்கும் முன்னின்ற அகிநேஸ் பாஸ்காலம்மாள்மேல் விசேஷமாய் இவ்வக்கிரமிகள் சினந்து சீறி விழுந்தார்கள். இஞ்ஞாசியாரோ, தன்னை நினைத்தல்ல, தன் நிமித்தம் தம் நண்பர்களுக்கும் உபகாரிகளுக்



கும் நேர்ந்த உபத்திரவங்களை நினைத்து மனம் வெம்பி, வெகுவாய் கஸ்திப்பட்டு, இனி மன்ரேசாவில் அதிக காலம் தாமதிக்கப்படாதென்று தீர்மானித்தார். மேலும் தாம் நியமித்திருந்த ஜெருசலேம் திருயாத்திரையை நிறைவேற்ற ஆவலும் அவர் உள்ளத்தில் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வந்தது.

1523-ம் ௵ ஜனவரி-௴ இஞ்ஞாசியார் மன்ரேசாவைவிட்டு பார்சலோனா என்னும் துறைமுகப் பட்டணத்தை நோக்கிப் பயணப்பட்டார். தம் நண்பர்களுடைய கட்டாயத்தாலும், உடுபாவனையிலும் தவ முயற்சியிலும் மனிதர் கண்ணுக்கு மிஞ்சின விபரீதம் நல்லதல்லவென்று அநுபவத்தால் அவரே அறிந்திருந்தமையாலும், மன்ரேசாவுக்கு வரும்போது தாம் அணிந்திருந்த கோலத்தை மாற்றி, எளியவர்களுக்குரிய ஓர் சாதாரண வஸ்திரமும், பாதரட்சையும், தொப்பியும் அணிந்து கொண்டார். கழுத்தில் ஓர் பெரியஜெபமாலையும் தரித்துக்கொண்டார். ஊராரில் பெரும்பான்மையோர், விசேஷமாய் அகிநேஸ் பாஸ்காலம்மாளும் வேறு சிலரும், தங்கள் நடுவே உடலெடுத்துவந்து சிலகாலம் ஜீவித்த ஓர் தேவதூதன்போலிருந்தவர் தங்களை விட்டுப்பிரிந்துபோகிறதை நினைத்து, வியசனமுற்று, கண் கலங்கி பிரலாபித்தார்கள். பலர் யாத்திரையில் அவருக்குத் துணையாக ஜெருசலேம் மட்டும் அவருடன் செல்ல விரும்பி ஆயத்தப்பட்

டார்கள். வேறு ஆதாரம் ஒன்றுந் தேடாமல் சர்வேசுரன் ஒருவரை மாத்திரமே நம்பியிருப்பது அதிகமேலான உத்தமதனமென்றெண்ணியிருந்த இஞ்ஞாசியார் அதற்கு சம்மதிக்கவில்லை. இலத்தீன் பாஷையாவது, இத்தாலியா பாஷையாவது தெரியாததால், தனியே சென்றால் பிரயாணத்தில் வெகு சங்கடங்கள் நேரிடுமாக்கும். ஆனதால் ஒருவனையாகிலும் துணையாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று வெகுவாய் மன்றாடினார்கள். இன்னான் அதற்குத் தகுந்தவனென்று ஒருவனைக் குறித்துக் காட்டி, அவன் நற்குணத்தையும் சாமார்த்தியத்தையும் வெகுவாய் மெச்சிப்பாராட்டினார்கள், அவன் துணையால் வரும் சகாயங்களை எடுத்துரைத்தார்கள். இஞ்ஞாசியாரோவென்றால், விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் தேவசம்பந்தமான மூன்று புண்ணியங்களைத்தவிர வேறு ஆதாரம் தமக்கு வேண்டாமென்று சாதித்துவிட்டார். துணையாக ஒருவனிருந்தால் பசிக்கும்போது அவனிடத்தில் ஏதாகிலும் கேட்கவேண்டிவரும்; ஓர் ஆபத்து நேரிட்டால் அவன் உதவியைத்தேட வேண்டியிருக்கும்; இவ்விதமாய் அவனை ஆதாரவாகவே நம்பி அவன் மீது பற்றுதல் வைக்கும்படி நேரிடும்; இதுவெல்லாம் தேவ சம்பந்தமான இம்மூன்று புண்ணியங்களின் பரிபூரண மாட்சிமையை மாசுபடுத்தும் ஓர் குறையாயிருக்கும் என்றெண்ணினார். அதே



காரணத்தைப்பற்றி, வழிச்செலவுக்கென்று அவர்கள் கொடுக்க விரும்பின பணத்தையும், போஜன பதார்த்தங்களையும் வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

பார்சலோனாவில் சேர்ந்து, கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்படும் நாளை எதிர்பார்த்து சுமார் இருபதுநாள் அங்கு தாமதிக்கவேண்டி நேரிட்டது. இந்நாளெல்லாம் யாத்திரைக்கு வேண்டியவைகளை சேகரிப்பதிலல்ல, ஜெபத்தியானம் செய்வதிலும், கைதிகளையும் நோயாளிகளையும் சந்திப்பதிலும், தாமே பிச்சையெடுத்து தரித்திரர்களுக்கு உதவி செய்வதிலும், பக்திமான்களைத்தேடி அவர்களோடு ஞான காரியங்களைப்பற்றி சம்பாஷிப்பதிலும் அலுவலாயிருந்தார். அந்நகரில் பலர் அவரோடு அறிமுகமாகி, நீடியகாலம் அவருக்கு உபகாரிகளும் நண்பர்களுமானார்கள். அவர்களுக்குள் இஸபேல் ரோசர் என்னும் ஓர் உயர்குல சீமாட்டிக்கு அவர் அற்புதமாய் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஓர்நாள் தேவாலயத்தில் பீடத்தருகில் சிறுவர்களோடு அவரும் உட்கார்ந்து பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தார். தற்செயலாய் அவரைக்கண்ணுற்ற இசபேலம்மாள் அவர் சிரசைச் சுற்றிப் புதுமையான ஓர் பிரகாசம் வீசுவதைக்கண்டு ஆச்சரியமடைந்தாள். அதேசமயத்தில் "அவரை உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோ" என்று அவள் உள்ளத்தில் ஓர் சத்தமும் கேட்கப்பட்டது.

வீடுபோய்ச் சேர்ந்ததும் சம்பவித்த விசேஷத்தை
கணவனிடத்தில் சொல்லி, அவர் சம்மதம்பெற்று
தேவாலயத்தில் தான்கண்ட பரதேசியை அசனத்
துக்கழைத்தாள். பரதேசி சர்வேசுரனைப்பற்றிப்
பேசும்போது அவர் வாக்கிலும் முகத்திலும் விளங்
கிய தேவசிநேக உருக்கத்தைக்கண்டு, அவளும்
அவள் புருஷனும் ஆச்சரிய பிரமையடைந்தார்கள்.
துறைமுகத்தில் அப்போது நின்ற ஒரு சிறு கப்ப
லில் யாத்திரை செல்ல அவர் கருதியிருப்பதாக
அறிந்து, அக்கப்பலிலேறிப்போவது ஆபத்தென்று
தடுத்து, அதிசீக்கிரம் அவ்விடம்வரும் ஓர் பெரிய
கப்பலுக்குக் காத்திருக்கும்படி செய்தாள். அவள்
அவ்விதம் தடுத்தது திருவுளச்செயலென்றே
சொல்லவேண்டும். ஏனெனில் இச்சிறு கப்பல்
துறைமுகத்தை விட்டுச் சற்றுத்தூரம் போகுமுன்
கடும் புசலில் அகப்பட்டு, பார்சலோனா நகரத்தார்
கண் காண கடலில் அமிழ்ந்தி, கப்பலிலிருந்தவர்
களெல்லாம் சமுத்திரத்துக்கு இரையானார்கள்.

பெரிய கப்பல் மாலுமி சர்வேசுரன் திருநாமத்
துக்குத் தோத்திரமாகக் கப்பற் கூலியின்றி, இஞ்
ஞாசியாரை ஏற்றுக்கொள்ள உடன்பட்டான்.
ஆனால் பிரயாணத்துக்குவேண்டிய உணவு கை
யோடு கொண்டுவருவது அவசியமென்றான். தேவ
பராமரிப்புக்குத் தன்னை முற்றும் கையளித்து, முன்
கவலையைத்தள்ளி, அன்றன்று வேண்டிய போச
னத்தை அன்றன்று பிச்சையெடுத்து புசிப்பதெனத்



தான் செய்துகொண்ட தீர்மானத்துக்கு இசை
பொருந்துமோ என்னமோவென்று சந்தேகமுற்றார்;
தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி அங்கு
தமக்கு ஆத்தும குருவாயிருந்தவரிடத்திற்போய்,
புண்ணிய சாங்கோபாங்கமடைய, தான் கொண்டி
ருந்த அளவற்ற ஆவலையும், சகலத்திலும் சர்வேசு
ரனுடைய தோத்திரம் ஒன்றையே தான் கருதிச்
செய்து வருவதையும் முதல்முதல் அவருக்கு அறி
வித்து, அதன்பின் தற்சமயம் தம் மனதிலிருக்கும்
சந்தேகத்தையும் அதன் காரணத்தையும் விவரித்
துச் சொல்லி, அவர் ஆலோசனையைக் கேட்டார்.
பிரயாணத்துக்கு வேண்டிய உணவை பிச்சை
யாகக் கேட்டு வாங்கிக்கொண்டு போக வேண்டு
மென ஆத்துமகுரு தீர்த்தார். இஞ்ஞாசியார் அவ்
விதமே செய்தார்.

பிச்சை கேட்கப்போன இடத்தில் ஓர் சீமாட்டி
அவர் யாத்திரைசெல்வது எவ்விடமென்று வினவி
னாள். இத்தருணத்திலும் இஞ்ஞாசியார் உள்ளத்
தில் ஓர் சந்தேகம் உதித்தது. ஜெருசலேமுக்
கென்று சொன்னால் வீண் பெருமையாயிருக்கு
மென்று ஐயப்பட்டார்; ஆனதால் சற்றுநேரம்
தனக்குள் யோசித்து, இத்தாலியாவிலிருக்கும்
உரோமாபுரிக்குப்போய், அங்கிருந்து ஜெருசலே
முக்குப்போக எண்ணங்கொண்டிருந்ததால், தன்
மனதுக்கு விரோதமின்றி, இத்தாலியாவுக்கும் உரோ
மாபுரிக்கும் போகிறதாக மறுத்தாரம் சொன்னார்.

இதைக் கேட்டதும் "உரோமாபுரிக்கா! நல்லது; அங்கு போகிறவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாய்த் திரும்பி வருகிறார்களோ எனக்குத் தெரியாது" என அச்சீமாட்டி சுடுசொல்லாகச் சொன்னாள். அதாவது உரோமாபுரிக்குப் போகிறவர்களில் அநேகர் வீண்வேடிக்கையைநாடி அங்கு போவதால், அங்குள்ள திரு ஸ்தலங்களைச் சந்தித்தனால், அவர்கள் நல்லவர்களாய்ப் போகிறதில்லை என்னும் கருத்தாக இப்படிச் சொன்னாள்.

இவ்விசேஷத்தை இஞ்ஞாசியார்தாமே சொல்லியிருக்கிறார். பார்த்தோலி சுவாமியார் சொல்லும் ஓர் விசேஷமும் இதைச்சேர்ந்ததென்றே நினைக்க வேண்டியிருக்கின்றது. அதாவது:

செப்பிலா என்றொரு உயர்குல சீமாட்டியிடம் இஞ்ஞாசியார் யாத்திரைக்காக பிச்சை கேட்கப் போனார். வீட்டிலிருக்க மனமில்லாமல், நாலுபேரிடத்தில் யாசகம்செய்து நாடோடியாய்த் திரிந்தலையும் தன் குமாரன் ஒருவனை நினைத்து மனம் புண்ணாயிருந்தாள் இந்தம்மாள். இவள் இஞ்ஞாசியாரைக் கண்ணுற்றதும், அவர் முகத்தில் துலங்கிய மேன் பிறப்பின் இலட்சணங்களையும், அணிந்திருந்த பரதேசிக் கோலத்தையும் கண்டு, இவரும் நிர்ப்பாக்கியனான தன் மகனைப்போல தாய் வீட்டை விட்டோடிய ஓர் நாடோடிதானென்று நிச்சயித்து, மனங்கொதித்துக் கோபமாய் அவரை உதறிப் பேசி-



-னாள். இஞ்ஞாசியாரோவென்றால் சற்றும் வியசனங்கொள்ளாமல் மலர்ந்த முகமாய் அவளுக்கு வந்தனம் செய்து, என்னைப்போல் பெரும்பாவி உலகில் கிடையாதென்று வெகு தாழ்மையுடன் சொன்னார். இவ்வரிய தாழ்ச்சியையும் சாந்தத்தையும் கண்ட அந்த அம்மாள் உடனே மனமிளகி குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்டு, அன்று முதல் அவரை ஓர் அர்ச்சியசிஷ்டவராக மதித்து வந்தாள். பிற்காலத்தில் அவருக்கு வெகு உபகாரஞ் செய்து வந்ததுமன்றி, அவர் புத்திமதியைப் பின்சென்று புண்ணியநெறியில் ஒழுகிவந்தாள்.

சேகரித்த உணவை யெடுத்துக்கொண்டு கப்பலிலேறுமுன் தம்மிடமிருந்த சில வெள்ளி நாணயங்களைத் தேவ திருவுளம்போல் யாருக்காகிலும் கிடைக்கட்டுமென்று கடற்கரையில் வைத்துவிட்டு, சிந்தாத்திரையாய் ஐந்துநாள் பிரயாணம் செய்து, இத்தாலியாவிலிருக்கும் கயேத்தா என்னும் துறைமுகத்தில் போயிறங்கினார். அங்கிருந்து உரோமாபுரியை நோக்கி கால்நடையாய்ப் புறப்பட்டு, வழியில் பசியாலும் பலவீனத்தாலும், தங்கத் தகுந்த இடங் கிடையாமையாலும் வெகு துன்பப்பட்டு குருத்துஞாயிறன்று உரோமாபுரி போய்ச் சேர்ந்தார். உரோமையில் அர்ச். பாப்பானவரைச் சந்தித்து, ஜெருசலேமுக்கு திருயாத்திரை போக அவருடைய அநுமதியும் ஆசீர்வாதமும்

பெற்று, அங்குள்ள திருத்தலங்களைச் சேவித்து பின் ஒன்பதாம்நாள் வெனிஸை நோக்கிக் கால்நடையாகவே பயணப்பட்டார். கையில் பணமின்றி வெனிஸில் கப்பலேறுவது அசாத்தியமென்று உரோமையிலிருந்த அவர் தேசத்தார் சிலர் நிச்சயித்துச் சொன்னதால், கப்பற் கூலிக்கென்று அவர்கள் கொடுத்த பணத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் மூன்றுநாள் செல்லுமுன், முன்போல் சந்தேகம் அவர் மனத்தை உறுத்தத் துவக்கிற்று. முன்னெச்சரிக்கையாகப் பணத்தை ஏற்றுக்கொண்டது, தேவ பராமரிப்பில் தாம் வைக்கவேண்டிய பூரண நம்பிக்கைக்குப் பொருந்தாததோர் குறையென்றெண்ணிக் கஸ்திப்பட்டார். ஆனதால் அந்தப் பணத்தை வைத்திருப்பது சரியல்லவென்று, வழியில் தென்பட்ட பிச்சைக்காரர்களுக்கும் தரித்திரர்களுக்கும் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொடுத்து விட்டார்.

எங்கும் ஓர் வகைக் கொள்ளைநோய் பரவியிருந்ததால் பிரயாணிகள்மட்டில் இராஜாங்கத்தார் வெகு கண்டிப்பான கட்டுப்பாடுகள் செய்திருந்தார்கள். இஞ்ஞாசியாரோ நடைதளர்ந்து முகம் இரத்தப் பசையற்று வாடி வெளுத்துப்போயிருந்தார். ஆனதால் அவர்மீது சந்தேகமுற்று ஜனங்கள் தங்கள் வீடுகளில் அவருக்கு இடங்கொடுக்கப் பயப்பட்டார்கள். இதனால் வெனிஸ் போய்ச் சேருமட்டும் வெட்டவெளியில் அல்லது திறப்பான [illegible]களில்



இராக்காலம் போக்கவேண்டியிருந்தது. ஓர்நாள் விடியற்காலம் ஒருவன் அவரைக் கண்டதும், இவர் கொள்ளைநோய் பிடித்தவரென்றெண்ணி, இவன் பிடித்து ஓட்டமாய் அவரை விட்டகன்று போய் விட்டான். ஆயினும் சிற்சில சமயங்களில் அவரைப்போலொத்த சில பிரயாணிகள் அவருடன் வழிநடந்து செல்லுவார்கள். இவர்கள் முதலாய் அநேகமாய், இரா விருட்டி வருவதைக் கண்டதும் அவரால் தங்களுக்கும் தங்க இடம் அகப்படாமற் போகுமோவென்றஞ்சி, விரைவாய் முன்னடந்து அவரைத் தனிமையாய்விட்டுப் போய்விடுவார்கள். வெனிஸுக்குச் சற்றுத் தூரத்தில் வரும்போது, சௌக்கியச் சீட்டின்றி நகருக்குள் பிரவேசிக்க விடமாட்டார்களென்று எதிரே வந்த ஒருவன் சொன்னான். இஞ்ஞாசியார் கூட வந்தவர்களெல்லாம் அச்சீட்டைச் சம்பாதித்துக்கொள்ளுவதற்காக, அடுத்த பட்டணத்துக்குத் துரிதமாய்ச் சென்றார்கள். இஞ்ஞாசியாரோவென்றால், பலவீனம் மிகுதியால் அவர்களோடு தொடர்ந்துசெல்ல முடியாதவராய், இரவில் ஓர் வெட்டவெளியில் யாரும் மனிதர் துணையின்றி, தனிமையாயிருந்தார்.

இத்தொகைப்பட்ட இக்கட்டு துன்பங்களால் [illegible]. நான் அவர் [illegible] சற்றும் [illegible] [illegible] தரித்து [illegible] [illegible] [illegible] முன்னெருநாள் பாரசீ[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

தையில் எண்ணி ஆறுதலடைந்திருந்தார். நம
தாண்டவரும் இவ்வேளையில் தமது தாசனுக்கு தரி
சனையாகி அவர் மனதைத் தேற்றி தைரியப்படுத்தி
னார். மறுநாள் சௌக்கியச் சீட்டைப்பற்றி கவலை
யின்றி வேனீஸ் நகருக்குள் பிரவேசித்தார். அவ
ரோடு வந்த பிரயாணிகளையெல்லாம் வெகு நுணு
நுணுக்கமாய்ப் பரிசோதனைசெய்த உத்தியோகஸ்
தர்கள், இஞ்ஞாசியாரைமாத்திரம் கேள்வியொன்று
மின்றி நகருக்குள் போக விட்டுவிட்டார்கள்.
இதைக் கண்டு மற்றப்பிரயாணிகள் வெகு ஆச்சரி
யப்பட்டார்கள். சர்வவல்லபர் ஏதோ அற்புத
மாகத் தமது தாசன் அவ்வுத்தியோகஸ்தர்கள்
கண்களுக்குப் புலப்படாதிருக்கும்படி செய்தன
ரோ என்னமோ!

வேனீஸில் சேர்ந்த அன்று, இராத்தங்க வேறி
டம் அகப்படாததால், ஓர் சந்தை வீதியில் படுத்
துக்கொண்டார். இராஜாங்கத்தின் பிரதான
ஆலோசனை சங்கத்தாரிலொருவராய் உயர்ந்த உத்
தியோகத்திலிருந்த மார்க் அந்தோனியோ த்ரேவி
சானோ என்னும் பக்திமான் அன்றிரவில் நித்திரை
செய்யும்போது: “நமது பிரிய தாசன் அதோ சமீ
பத்தில் கல்தரையில் படுத்திருக்க, நீ சுகமே கட்
டிலில் நித்திரை செய்கின்றாயோ?” என, நயந்து
முறையிடும் ஓர் குரலொலி கேட்டுத் திடுக்கிட்
டெழுந்தார். அச்சமும் ஆச்சரியமும் மேலிட்ட
வராய் உடனே ஊழியக்காரர் சிலரைக் கூட்டிக்



கொண்டு அங்குமிங்கும் தேடிப்பார்த்து, சந்தை
வீதியில் படுத்திருந்த இஞ்ஞாசியாரைக்கண்டு, தன்
மாளிகைக்கு அவரை அழைத்துக்கொண்டுபோய்
வெகுவாய் உபசரித்தார். ஆனால் பரிசுத்த தரித்தி
ரத்தை ஆவலாய் நாடியிருந்த இஞ்ஞாசியார், மாளி
கையில் தங்கியிருக்க மனமில்லாமல் மாளிகையை
விட்டு, வழக்கம்போல் வீடு வீடாய்ப் பிச்சை
யெடுத்து சீவித்துவந்தார். சைப்பிரஸ் தீவுக்கு
புதிதாய் நியமிக்கப்பட்ட தேசாதிபதியை ஏற்றிக்
கொண்டுபோவதற்குத் துறைமுகத்தில் கப்பல்
ஒன்று ஆஜராய் நின்றது. இஸ்பானிய தேசத்தா
னாகிய வேனீஸ் வர்த்தகன் ஒருவருடைய முயற்சி
யால் இஞ்ஞாசியார் இந்தக் கப்பலில் இடம்பெற்று,
1523-ம் ௵ ஜூலை-௴ வேனீஸைவிட்டுப் புறப்
பட்டார்.

கப்பலில் அநேகருடைய பேச்சும் நடத்தையும்
வெகு அயோக்கியமும் அக்கிரமமுமாய் இருந்த
தைக் கண்டு, இஞ்ஞாசியார் மனம் நொந்து, அவர்
களால் தேவ மகத்துவத்துக்கு நேரிடும் நிந்தை
யைச் சகிக்கமாட்டாமல், வெகு கோபமாய் அவர்
களைக் கண்டித்துப் பேசினார். அத்துஷ்டர்களோ
தங்கள் அக்கிரமங்களில் மூர்க்கராய், அவரைப்
பகைத்தார்கள். மனிதர் சஞ்சாரமில்லாத ஓர் தீவில்
அவரைத் தள்ளிவிடவேண்டுமென்று தங்களுக்குள்
சதி ஆலோசனை செய்துகொண்டு, அத்தீவை நோக்
கிக் கப்பலை நடத்தினார்கள். கப்பலிலிருந்த சில

இஸ்பாணியர் இதை அறிந்து இஞ்ஞாசியாரை எச்சரித்தனர். அதனால் அவர் அஞ்சி மௌனமாயிருந்தவரல்ல. முன்போலவே தைரியமாய், அக்கசடர்களுடைய துர்ப்பாஷையையும் துர்ச்செய்கைகளையும் கண்டித்துவந்தார். சேசுநாதரும் பலதடவை அவருக்குத் தரிசனையாகி அவரை உறுதிப்படுத்திவந்தார். துஷ்டர்களுடைய கொடிய சிந்தனையோ விழலாய்ப்போகும்படி சர்வேசுரன் திருவுளமானார். எனெனில் அத்தீவின் சமீபத்தில் வந்ததும், பெருங்காற்றெழும்பவே, கப்பல் சைப்பிரஸ் தீவைநோக்கி விரைவாய்ச் சென்றதேயன்றி, அப்பாழுந்தீவை அண்டிப்போகவில்லை.

சைப்பிரஸில் இறங்கினதும், தமக்கு முன் வெனிஸிலிருந்து புறப்பட்ட திருயாத்திரைக் கப்பல் முப்பது மைலுக்கப்பால் சலாமிஸ் என்ற துறைமுகத்தில் தங்கி நிற்பதாகக் கேள்விப்பட்டார். சர்வேசுரன் மேலுள்ள நேச நம்பிக்கையைத்தவிர வேறுதாரமின்றி கரைமார்க்கமாய் அவ்விடம் சென்றார். அக் கப்பலிலேறி ஆகஸ்ட்-மீ 31-உ, அதாவது வெனிஸை விட்டுப்புறப்பட்ட நாற்பத்தியெட்டாம் நாள்—சீரியா நாட்டுக்கரையில் ஜாப்பா என்னும் துறைமுகத்திலிறங்கி, ஜெருசலேமாகரை நோக்கிப் பயணப்பட்டார். முன்னொருகாலத்தில் அவதரித்த வார்த்தையானவருடைய திருப்பாதம் பட்டு, திருக்குரலொலி கேட்டு, ஐயோ! அவரது திரு இரத்தமுமுண்டு அர்ச்சிக்கப் பெற்ற அப்



பதியில் செப்டெம்பர்-மீ 4-உ மத்தியான வேளையில் காலெடுத்துவைத்தார். அத்திருநகரின் மதில்கள் தொலையில் அவர் கண்களுக்குத் தென்பட்டதுமே, அவர் உள்ளம் தேவநேசப் பெருக்கத்தால் பொருமிப் பதைபதைத்தது. நமதாண்டவர் நடமாடித் திரிந்த தெரு வீதிகளில் நடந்து திருஸ்தலங்களைக் கண்ணுற்றபொழுதோ, உள்ளத்தில் பொங்கி எழும்பின தேவசிநேகப் பிரவாகத்தை தாங்கமாட்டாதவராய், கண்களில் நீர்ததும்ப ஆண்டவரை வாழ்த்தி ஸ்துதித்தார். ஜெருசலேமில் தங்கி அங்குள்ள திருஸ்தலங்களை சேவிக்கும்போதெல்லாம், இத்தேவநேசப் பெருக்கம் குறையாமல் அவர் உள்ளத்தை மேற்கொண்டிருந்தது. ஒவ்வொரு தடவையும் வெகு பக்தி உருக்கத்தோடு, இத்தலங்களின் தரையை முத்திசெய்வார். இத்திருஸ்தலங்களில் அவதரித்த நாதன்மீது அவர் இருதயத்தில் அதிகரித்த நேசவாஞ்சை எவ்வளவென்று எட்டுநாள் பத்துநாள் ஒடுக்கத்திலிருந்து, அவர் இயற்றிய "ஞான முயற்சிகளை" செய்பவர்களுக்கு சந்தேகமற விளங்கும்.

அளவற்ற ஆவலோடு தான் நாடிவந்த ஜெருசலேம் நகரை விட்டு நீங்க இஞ்ஞாசியாருக்கு மனம் சம்மதிக்கவில்லை. அங்குதானே ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக உழைத்து, சர்வேசுரனுக்குச் சித்தமானால், வேதத்துக்காக அங்கு தன் இரத்தத்தைச் சிந்தவும் எண்ணி தீர்மானித்தார்

செய்தார். இஞ்ஞாசியாருடைய எண்ணமும் தீர்மானமும் திருஸ்தலங்களின் பரிபாலர்களாக நியமிக்கப்பட்டிருந்த அர்ச். ஐந்துகாய பிரான்ஸீஸ்கு சபை அதிசிரேஷ்டருக்குத் தெரியவந்தது. மேற்படி அதிசிரேஷ்டர் உடனே இஞ்ஞாசியாரை வரவழைத்துப் பட்சமாய்ப் பேசி, திருயாத்திரைக்காரர் அநேகர் துருக்கர் கையில் அகப்பட்டுக் கொலையுண்டு சாகிறார்கள் அல்லது அடிமைகளாகக் கொண்டுபோகப்படுகிறார்கள், ஆகையால் நீர் அதிசீக்கிரம் இவ்விடத்தை விட்டுப் போகவேண்டுமென்றார். அதற்கு இஞ்ஞாசியர் "இங்கிருப்பது பாவமென்று சொல்லிக் கட்டளையிட்டாலொழிய, மற்றப்படி இவ்விடத்தைவிட்டு நான் போவதில்லை" என்று ஒரே தீர்மானமாய்ச் சொன்னார். "ஆம்! நமது கட்டளையை மீறி இங்கிருப்பது பாவமாகத்தானிருக்கும், எனெனில் திருயாத்திரைக்காரர்களை நிறுத்திக்கொள்ளவும், இவ்விடத்தைவிட்டுப் போகும்படி கட்டாயம் செய்யவும், கீழ்ப்படியாதவர்களை திருச்சபையிலிருந்து விலக்கவும், அர்ச். பாப்பானவர் நமக்கு அதிகாரமளித்திருக்கிறார்" என்று அதிசிரேஷ்டர் சொல்லி, அவ்வதிகாரப் பத்திரத்தை எடுத்துக்காட்டப்போனார். இஞ்ஞாசியாரோவெனில், உடனே கீழ்ப்படிந்து, உங்கள் வாக்கே போதும், பத்திரத்தைப் பார்க்க அவசியமில்லையென்று சொல்லி, மறுநாள் ஜெருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போக ஆயத்தப்பட்டார்.



புறப்பட்டுப் போகுமுன் ஒலிவேத் மலையில் ஆண்டவர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருஸ்தலத்தைத் திரும்ப சந்திக்கவேண்டுமென்னும் ஆவல் மிகுதியால் அம்மலைமேல் ஏறிப்போனார். மகம்மதியன் ஒருவனுடைய துணையின்றி அங்கு செல்வது அக்காலத்தில் மகா ஆபத்து. ஆனால் இஞ்ஞாசியார் எந்த ஆபத்துக்கும் அஞ்சாதவராய் தனியே சென்று, காவற்காரனுக்குத் தன் கத்தியைக் கைக்கூலிகொடுத்து, அத்திருஸ்தலத்தைச் சேவித்துத் திரும்பினார். அங்கு ஓர் கல்லின்மேல் பதிந்திருக்கும் அடிச்சுவடு, ஆண்டவர் அக்கல்லின்மேல் நின்று பரலோகத்துக்கு ஆரோகணமானபோது பதிந்ததென்று பாரம்பரையாய் எண்ணி வருகிறார்கள். இஞ்ஞாசியார் திரும்பி வந்தபின், அவ்வடிச்சுவடு எத்திசையை நோக்கியிருக்கிறதென்று நன்றாய்க் கவனிக்கவில்லையெனக் கண்டு, இன்னொருதரம் தனியே மலைமேல் ஏறிப்போய்க் காவற்காரனுக்கு தமது கத்தரிக்கோலை கைக்கூலிகொடுத்து, தமது ஆசையைத் தீர்த்துக்கொண்டார். மகம்மதியர்களுடைய கொடுமையால் கிறீஸ்துவர்களுக்கு நேரிடும் ஆபத்தின் நிமித்தம் அவர்மேல் கண்ணாயிருந்த அர்ச். பிரான்சீஸ்கு சபை சன்னியாசிகள், அவர் தனிமையாய் அங்கு சென்ற விபரமறிந்து கிலேசமுற்று அவரைத் தேடிப்பார்க்கும்படி ஓர் ஊழியக்காரனை அனுப்பினார்கள். இவன் இஞ்ஞாசியார் மலையைவிட்டிறங்கி

கருணையைக் கண்டுற்றதும், வெகு கோபாவேசமாய்ப்பேசிக் கையிலிருந்த தடியை ஓங்கி அதட்டி, மூர்க்கத்தனமாய் அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனன். இஞ்ஞாசியார் சாதுவாய் அவன் மனம்போல் தன்னை இழுத்துக்கொண்டு போக விட்டுவிட்டார். மடம்போய்ச் சேருமட்டும், அந்த மூரட்டாத்துமா பிடித்த பிடியை விடவில்லை. ஆனல் அச்சேரமெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதர் தம் முன் நடந்துபோவதைத் தரிசனத்தில் தெளிவாய்க் கண்டு வெகு ஞான ஆநந்தமடைந்தார்.

## 7-ம் அதிகாரம்.

இஞ்ஞாசியார் ஜெருசலேமைவிட்டுப் புறப்பட்டது—வேவுகாரனென்று பிடிக்கப்பட்டது—சிறுவர்களுடன் இலத்தீன் பாஷை படிக்க ஆரம்பிக்கிறார்—படிப்புக்கு விக்கினமாக சாத்தான் செய்த தந்திரம்—சீர்கேடாயிருந்த கன்னியர்கள் மடம் ஒன்றை சீர்திருத்தியது—அதனால் அவருக்கு நேர்ந்த உபத்திரவங்கள்—மிக்கேல் ரோதிஸ்—ஜூவான் பாஸ்கால்.

### 1524—1526.

மறுநாள் இஞ்ஞாசியார் ஜெருசலேமைவிட்டுப் புறப்பட்டார். துறைமுகத்தில் மூன்று கப்பல்கள் வெனிஸுக்கு யாத்திரைசெய்ய ஆயத்தமாயிருந்தன. அவைகளுள் ஒன்று துருக்கருடையது; இன்னொன்று வெகு பழசான சிறு கப்பல், கவலைக்கிடமாய் வெகு ஈன ஸ்திதியிலிருந்தது; மூன்றாவது கப்பலோவெனில் வலிமையும் திராணியுமுள்ள பெரிய கப்பல். பிரயாணிகள் பெரும்பாலும் இப் பெரிய கப்பலிலேயே ஏறிச் சென்றார்கள். இஞ்ஞாசியார் ஓர் அர்ச்சியசிஷ்டவராகும், சர்வேசுரன் நாமத்தால் அவரை கப்பற் கூலியின்றி ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று அநேகர் இக்கப்பற்றலை

வனிடத்தில் அவருக்காக சிபாரிசு செய்தார்கள்.
அவனோவென்றால் அதற்குச் சம்மதியாமல், அர்ச்சி
யசிஷ்டவரானால் தண்ணீர்மேல் நடந்து சமுத்
திரத்தைக் கடக்கட்டும், அமிழ்ந்துபோகமாட்டா
ரென்று பரிகாசம் பண்ணினான். சிறு கப்பற்றலை
வனோவெனில், சர்வேசுரன் நாமத்தால் அவரைச்
சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான். சர்வே
சுரனும் அவனை ஆசீர்வதித்தார். ஓர்நாள் காலை
மூன்று கப்பல்களும் ஒரே சமயத்தில் பாய்விரித்து
துறைமுகத்தைவிட்டு சிந்தாத்திரையாய்ப் புறப்
பட்டன. ஆனால் அன்று சாயங்காலம் ஓர் கடும்
புசல் எழும்பவே, துருக்கருடைய கப்பல் அதோ
கதியாய் நடுக்கடலிலமிழ்ந்தி பிரயாணிகளெல்லாம்
மடிந்தார்கள். பெரியகப்பல் சைப்பிரஸ் தீவுக்கரு
கில் அலைகளால் பாறையில் மோதப்பட்டு உடைந்து
சேதமாய்ப் போயிற்று. தேவகிருபையால் பிர
யாணிகள் உயிரும் உடைமைகளும் காப்பாற்றப்
பட்டன. இஞ்ஞாசியாரை ஏந்திச்சென்ற சிறு
கப்பலோவெனில், நெடுநேரம் புசலின் கொடுமை
யால் அலைக்கழிக்கப்பட்டதென்றாலும், யாதொரு
மோசமின்றி க்ஷேமமாய் 1524-ம் [illegible] ஜனவரி-மீ
வேனிஸ் நகர் துறைமுகம் போய்ச்சேர்ந்தது.
மாரிகாலமானதாலும், அணிந்திருந்த வஸ்திரங்க
ளோ வெகு தரித்திரக்கோலமாயிருந்தமையாலும்,
இந்தசமயம் இஞ்ஞாசியார் வெகு வருத்தம் அநுப
வித்தார்.



ஜெருசலேமிலிருப்பது தேவ சித்தமல்லவென்று
அறிந்ததுமுதல், சர்வேசுரனுடைய தோத்திரத்
துக்காக இனிமேல் தாம் செய்யவேண்டியதென்ன
வென்பதே அவர் சிந்தனையாயிருந்தது. ஆத்துமாக்
கள் இரட்சணிய அலுவலில் அதிக அநுகூலமாய்
உழைப்பதற்கு, சாஸ்திரப்பயிற்சி அவசியமென
நாளுக்கு நாள் அதிக தெளிவாய் உணர்ந்துகொண்
டார். இதற்காக பார்சலோனாவுக்கு திரும்பிப்
போகிறதென்று தீர்மானித்து, ஜினோவா துறை
முகத்தில் கப்பலேறும்படி கால் நடையாய்ப் புறப்
பட்டார்.

இச்சமயம் வட இத்தாலியாவில் இஸ்பானியருக்
கும் பிராஞ்சுக்காரருக்கும் யுத்தம் ஆரம்பித்து,
ஆங்காங்கு சில இடங்களில் பிராஞ்சுக்காரரும், சில
இடங்களில் இஸ்பானியரும் பாளையம் இறங்கியிருந்
தார்கள். வழியில் இஸ்பானிய இராணுவத்தார்
சிலர் அவரைக்கண்டு உபசரித்து, அவர் போகும்
வழியில் எதிரிப்பட்டாளம் பாளையமிறங்கியிருந்த
தால், அவ்வழியை விட்டு வேறுவழியாய்ப்
போகும்படி மன்றாடினார்கள். இஞ்ஞாசியாரோ
சற்றும் அஞ்சாதவராய், தன் வழியே சென்றார்.
சற்றுதூரம் செல்லுமுன், இஸ்பானிய பட்டாளத்
தைச் சேர்ந்த சில காவற்சேவகர் அவரை வேவு
காரனெனப்பிடித்து, ஒரு சிறு அறையில் அடைத்து
பல கேள்வி கேட்டார்கள். கடிதம் ஏதாகிலும்
அவரிடம் உண்டோவென்றறியும்படி அவர் உடுப்பு

கவியெல்லாம் சோதித்தார்கள். சந்தேகத்துக்கேதுவானதொன்றும் இல்லாதபோதிலும், அவருடைய மேற்சட்டையை யெடுத்துவிட்டு, சேனைத் தலைவன்முன் அவரை இழுத்துக்கொண்டுபோனார்கள். இக்கோலமாய் மூன்று பிரதான தெருக்கள் வழியாகக் கொண்டுபோகப்பட்டார். முன்னொருநாள் ஜெருசலேம் தெருவீதியில் ஓர் பயித்தியக்காரனைப்போல் ஆகடியமாய் இழுத்துக்கொண்டு போகப்பட்ட நமதாண்டவரை இஞ்ஞாசியார் இருதயத்தில் சிந்தித்து அகமகிழ்ந்து ஆனந்தித்தார். ஆயினும் அவர் ஜெயித்தடக்கியிருந்த லொயோலா வீரருடைய பழைய கம்பீர மேட்டிமை ஒரு நிமிஷம் திரும்ப உயிர்த்துவந்தாற்போலிருந்தது. சேச நாதர்வாயிலை அதிகமதிகமாய்க் கண்டுபாவிக்கவும், தம் மேன்பிறப்பை மறைக்கவும், தமக்கு இயல்பாயுள்ள திருத்தத்தையும் சாதுரியத்தையும் வேணுமென்றே விலக்கி, வெகு சாதாரண மனிதர்களைப்போல் பேசப் பழகியிருந்தார். தற்சமயம் இப்படி சாதாரணமாய்ப் பேசுவதைவிட்டு, உயர்குல மக்களுக்குரிய ஆசாரமுறையோடும் திருத்தத்தோடும் சேனைத் தலைவன்முன் பேச அவருக்கு ஆசை உண்டானது. ஆனால் அது சத்துருவின் சோதனையென்று உடனே அறிந்து, அதற்கு முற்றும் நேர்விரோதமாய் நடப்பதென்று தீர்மானித்துக்கொண்டார். தலைவன் முன்வந்ததும், ஆசாரம் ஒன்றும் செய்யாமல் சும்மா நின்றார். அவன்



கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த மறுமொழிகொடாமல், பாக்கபரக்க விழித்துக்கொண்டு கொச்சையாய் இழுத்து இழுத்துப் பேசினார். இதைக்கண்டு சேனைத் தலைவன் காவற்சேவகர்களைக் கடிந்து "பைத்தியகாரனை இவனை இங்கு ஏன் கொண்டுவந்தீர்கள்? இவனுக்கு சொந்தமானவைகளைக் கொடுத்து, சீக்கிரம் இவனைப் போகவிடுங்கள்" என்று கடுகடுத்துச் சொல்லி அப்புறம் போனான். சேனாபதி வார்த்தையைக்கேட்டு இஞ்ஞாசியார் மீது கோபங்கொண்ட சேவகர்கள் அவரை நன்றாய் அடித்துத்தான் போகவிட்டார்கள்.

பார்சலோனாவில் சேர்ந்ததும் தம் கருத்தை நிறைவேறத் தீவிரித்தார். தன் சுயபாஷையில் வாசிக்கவும் எழுதவும் கற்றிருந்தவரேயன்றி, இலத்தீன் பாஷை இன்னும் படித்தவரல்ல. பார்சலோனாவில் எரோனிமோ என்னொருவர், ஓர் பாடசாலையில் பாலர்களுக்கு இலத்தீன் இலக்கணம் கற்பித்துவந்தார். இஞ்ஞாசியாரும் இப்பாலர்களோடு சேர்ந்து பள்ளிக்கூடத்துக்குப் போய், இலத்தீன் படிக்க ஆரம்பித்தார். அகினெஸ் பாஸ்காலம்மாள் தன் வீட்டில் ஓர் அறையை அவருக்கு தங்கிடமாகக் கொடுத்தாள். இசபேல் ரோசரம்மாளும் அவருக்குப் பல சகாயஞ் செய்து வந்தாள். அந்தோ! லொயோலா இஞ்ஞாசியாரைப் பாருங்கள்! உயர் கோத்திரத்தில் பிறந்து கம்பீரப் போர்வீரராயிருந்து உலகத்தை வெறுத்து உன்னத ஞான

வரங்கள்பெற்றுப் பல இடங்களுக்கு யாத்திரை போய், கடைசியாய் இப்பொழுது சுமார் முப்பது பிராயத்தில் பத்துவயது பாலர்களோடு பள்ளியில் அமர்ந்து பாடம் படிக்கிறார்! இவ்வபூர்வ மனஊக்கத்தை என்னென்று சொல்ல!

ஆதிமுதல் அவர்மீது கண்ணாயிருந்த தீய சத்துரு நயமானதோர் மாய்கையால் அவரை வஞ்சிக்க வழிதேடிற்று. அவர் பாடம்படிக்க ஆரம்பித்ததும், பரகதியே திறக்கப்பட்டாற்போல், மகா ஆச்சரியமான ஞானப்பிரகாசமும் ஞானமனோகரமும் அவர் உள்ளத்தில் மொய்த்தெழும்பும். சிந்தனை பற்றுதலெல்லாம் சர்வேசுரனை நோக்கித் தாவிச் செல்லும். இதனால் பாடம் படிப்பதை மறந்து நேரமெல்லாம் பரவசமாயிருப்பார். உதாரணமாக, "Amo, Amas, Amat" (ஆமோ, ஆமாஸ், ஆமாத்) அதாவது "நான் சிநேகிக்கிறேன், நீ சிநேகிக்கிறாய், அவன் சிநேகிக்கிறான்" என்னும் வினைச்சொல்லுக்கு, இலக்கண விதிப்பிரகாரம் விகுதி மாற்றிப் பாடம் பண்ணும்போதெல்லாம், இருதயத்தில் தேவசிநேகம் பொங்கினவராய், பாடம் படிக்கும் முயற்சியைவிட்டு, தேவசிநேக முயற்சி செய்வார். இதனால் படிப்புக்கு வெகு விக்கினம் நேரிடுவதைக்கண்டு, இஞ்ஞானியார் இவ்விசேஷத்தைப்பற்றி சந்தேகமுற்று, "திவ்விய பூசை காணும்போதாவது, ஜெபத்தியானம் செய்யும்போதாவது, உண்டாகாத இந்நூதன ஞான



சிந்தனைகளும், தியானயோகமும், பாடம் படிக்க ஆரம்பித்ததும் மனதை இவ்விதம் பலவந்தமாய்க் கவர்ந்துகொள்ளுவானேன்" என்று ஆராய்ந்து யோசிக்கலானார். திவ்விய இஸ்பிரீத்துவின் பாடசாலையில் கற்றறிந்த ஞானத்தின் உதவியால், இது கெட்ட அரூபியின் சற்பனையென்று அதிசீக்கிரம் அறிந்துகொண்டார். உடனே அதை எதிர்த்து ஜெயிக்கத் தீர்மானித்தார். சற்றுநேரம் ஜெபஞ்செய்து தேவ உதவியை மன்றாடினபின், தன் உபாத்தியாயரைச் சமீபத்திலிருந்த தேவமாதா கோவிலுக்கு அழைத்துக்கொண்டுபோய், தான் இதுகாலம் படிப்பில் விர்த்திப்படையாமற்போனதின் காரணத்தை நேர்மையாய் அவரிடத்தில் வெளிப்படுத்தி மன்னிப்புக் கேட்டார். இனிமேலாகப் பாடத்தில் அதிகக் கருத்தூன்றிப் படிப்பதாக உறுதிமொழியும் கொடுத்தார். மேலும் இனிமேல் படிப்பில் அஜாக்கிரதையாயிருப்பதாகக் கண்டால், தன் வயதையும் அந்தஸ்தையும் பாராமல், மற்ற மாணாக்கர்களில் எவனையும் சிட்சிப்பதுபோல், தன்னையும் தாட்சணியமின்றி சிட்சிக்கவேண்டுமென்று மன்றாடினார். அன்றுமுதல் இலத்தீன் பாஷையைக் கற்றறிவதில் அதிவிரைவாய்த் தேர்ச்சியடைந்தார். அதன்பின் ஒரோர் சமயத்தில் படிப்பின் நிமித்தம் ஞானவறட்சியும் மனச்சோர்வும் நேரிட்டாலும், அதனால் படிப்பில் வைத்த மனஊக்கத்தை விட்டவரல்ல. சர்வேசுர

னுடைய அதிமிக தோத்திரத்துக்காக இவ்விதம் வருந்திப் படித்த இஞ்ஞாசியார், பிற்காலத்தில் சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டராயிருக்கும் போது, 1554-ம் ௵ ஜூலை-௴ 28-௳ எழுதிய ஓர் நிருபத்தில் சொல்லுகிறார்: "கல்விப் பயிற்சியில் புத்தியைச் செலுத்திவருவதால், தேவபக்தியில் உருக்கமான பற்றுதல்கள் வறட்சியடையக் கூடும். என்றாலும், சர்வேசுரனுடைய தோத்திரம் ஒன்றைமாத்திரம் கருதிப் படித்து வந்தால், அந்த படிப்பே உச்சிதமான ஓர் பக்திக் கிருத்தியமாயிருக்கும்."

இவ்விதம் கல்வியில் மனம் ஊன்றிப் படித்து வந்த இஞ்ஞாசியார், ஜெபதபமுயற்சிகளில் சற்றும் அஜாக்கிரதையாயிருக்கவில்லை. கிறீஸ்துநாதர் அநுசாரத்தை வாசிப்பது அவருக்கு அத்தியந்த மதுரமாயிருக்கும். இப்புத்தகத்தின்மீது ஜீவபரியந்தம் விசேஷ பிரீதிவைத்திருந்தார். இரவில் நித்திரையை விட்டெழுந்து நெடுநேரம் ஜெபத்தியானம் செய்வார். அச்சமயங்களில் நடந்த சில விசேஷங்களை, கதவின் ஓர் துவாரம் வழியாய்க் குறிப்பாய்க் கண்டறிந்த அகினேஸ் பாஸ்காலம்மாள் மகன் ஜான் பாஸ்கால் என்பவர், அர்ச்சியசிஷ்டவர் மரணமான பின், தான் சொல்வது உண்மையென்று சத்தியம் செய்து வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் சொல்லுவது: "இஞ்ஞாசியார் கண்களை உயர்த்தி வானத்தைப் பார்த்த பார்வையாய் சற்றுநேரம் நின்றபின்,



ஒருசமயம் மகா பூஜித வணக்கத்தோடு தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து, ஒரு சமயம் கரங்களை சிலுவையடையாளமாக விரித்து, ஜெபந்துவக்குவார். சிலசமயங்களில் அர்ச்சியசிஷ்டவரிடத்தில் நின்று புறப்படுவதாகத் தோன்றும் ஓர் திவ்விய பிரகாசத்தால் அறை நிறைந்திருக்கும். சில சமயங்களில் ஜெபம் செய்துகொண்டிருந்தபடி பூமியை விட்டு இரண்டடிக்குமேல் உயர்த்தப்பட்டிருக்க: "ஆ! ஆண்டவரே! மனிதர்கள் தேவரீரை அறிவார்களேயாகில்" என்றாவது "இவ்வளவு நிர்ப்பாக்கிய பாவியாகிய என்னைச் சகித்துக்கொண்டிருக்கிற தேவரீர், எவ்வளவோ அளவற்ற நன்மைத்தனமாயிருக்கவேண்டும்" என்றாவது பிரலாபித்துச் சொல்லுவார்."

தேக பலன் வெகுவாய்க் குறைந்து, பல சுகக்கேடுகள் உண்டாயிருந்ததின் நிமித்தம் தாம் வழக்கமாய்ச் செய்துவந்த கடுந்தபசை சிலகாலம் மட்டுப்படுத்தியிருந்தார். ஆனால், திருயாத்திரை போய்த் திரும்பிவந்தபின் இச்சுகக்கேடுகள் நீங்கிப்போனதால் மன்ரேசாவில் செய்துவந்த அருந்தவ முயற்சிகளைத் திரும்பத் துவக்க ஆசித்தார். பழைய உடுபாவனைகளை மாற்றி, குருக்கள் உடையைப்போன்ற ஓர் கறுப்பு உடையை அணிந்துகொண்டாரென்றாலும், அதனுள் சரீரத்தை ஓயாமல் குத்தி உபாதிக்கும் மயிரொட்டியாணமும் அணிந்துகொண்டார். பாதரட்சையை விட்டுவிடவில்லை. ஆனால் பாதரட்-

சையின் அடிபாகத்தை கொஞ்சம் கொஞ்சமாய்
பிய்த்தெறிந்துவிட்டார். இவ்விதம் மனிதர் கண்
ணுக்குப் பாதரட்சை அணிந்தவராகவும், காரியத்
தில் பாதரட்சை இல்லாதவராகவும் இருந்தார்.
வருத்தம் அநுபவிக்கிற பாக்கியமும், அவ்வருத்
தத்தை மற்றவர்கள் கண்ணுக்கு மறைக்கும் பாக்
கியமும் கிடைத்ததென்று அகமகிழ்ந்தார். தங்க
இடமளித்த அகிநேசம்மாள், அவருக்கு போஜன
மளிக்கவும் ஆவலுற்றிருந்தாள். ஆனால் ஆத்தும
குரு கண்டிப்பாய்க் கட்டளையிடுமட்டும், அவர்
அதற்குச் சம்மதியாமல் பிச்சை எடுத்தே புசித்து
வந்தார்.

இஞ்ஞாசியார் இருதயத்தில் வேகமாய்ப் பற்றி
யெரிந்த தேவசிநேக அக்கினியும், அதன் கூட்டுற
வாகிய பிறர்சிநேக அக்கினியும் அவரைச் சும்மா
யிருக்கவிடவில்லை. மேன்மேலும் தாவியெழும்பி,
சுவாலித்து நாலா பக்கமும் பரவி அடுத்ததை
யெல்லாம் தன் மயமாக்குவது அக்கினியின் குண
மன்றோ! இஞ்ஞாசியார் இருதயத்தில் சுடர்விட்
டெரிந்த தேவசிநேக அக்கினிச் சுவாலையின் அனல்,
அவரை அண்டினவர்கள் இருதயங்களிலும் உறைக்
காமற் போனதில்லை. அவரைத் தங்கள் இல்லிடத்
தில் ஆதரித்து வந்த அகிநேஸ் பாஸ்காலம்மாளுக்
கும், அவள் குமாரன் ஜான் என்பவருக்கும் இப்
பாக்கியம் விசேஷமாய்க் கிடைத்தது. ஒரு தேவ
தூதன்போல் இவர்கள் வீட்டில் தங்கியிருந்த பர



தேசியின் பரிசுத்த ஒழுக்கமும், தேவசிநேக மய
மான அவர் வாய்மொழிகளும், நல்ல குடும்பத்
தாரும் தேவ பக்தியுள்ள நற்குணசாலிகளுமான
இவர்கள் புண்ணியத்தில் வர்த்திப்பதற்கு, தேவ
திருவுளத்தின் ஓர் விசேஷ வரப்பிரசாதமாயிருந்த
தென்று சொல்லவும் தேவையா? அப்போது பதி
னெட்டு பிராயமாயிருந்த ஜான் பாஸ்கால் தான்
கண்டதையும் கேட்டதையும் மரணபரியந்தம் மறந்
தவரல்ல. "ஆ! நமது வீட்டில் வசித்த அந்தப்
பரிசுத்தவானை, அவ்வளவு சாந்தம் நிறைந்த அம்
மகாத்துமாவை,—என் கண்ணால் நான் கண்டது
போல, நீங்களும் கண்டிருப்பீர்களேயாகில், அவர்
காலடிபட்ட தரையையும், அவர் தங்கியிருந்த
அறைச் சுவர்களையும் முத்தத்தின்மேல் முத்தமிட்டு
பூஜிப்பீர்கள்" என்று பிற்காலத்தில் தன் மக்களைப்
பார்த்து அடிக்கடி பெருமூச்செறிந்து சொல்லு
வார். "ஐயோ! ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டவ
ரோடு பேசிப்புழங்கி ஜீவிக்கும் அதிர்ஷ்டம் பெற்
றிருந்தும், அதனால் அடையவேண்டிய பலனை
அடையாமற்போனேனே" என்று பிரலாபிப்பார்.

இஞ்ஞாசியாருடைய புண்ணியங்களால் பாஸ்
கால் குடும்பம் மாத்திரம் சுகிர்தம் அடைந்த
தென்று எண்ணவேண்டாம். அவருடைய தர்ம
நடக்கை பார்சலோனா நகர் முழுதும் தெரிந்திருந்
தது. மன்ரேசாவில் எப்படியோ, அப்படியே

இங்கும் அநேக புண்ணியாத்துமாக்கள் அவரைத் தேடி, அவரோடு பக்திக்கடுத்த விஷயங்களைப் பற்றி சம்பாஷித்து, ஞான நெறி ஜீவியத்தில் மேன்மேலும் அதிக சுறுசுறுப்படைந்து வந்தார்கள். சிலரோவென்றால் அநீதமாய் அவரைப் பகைத்து துன்பப்படுத்தியும் வந்தார்கள். தேவ உதவியை மன்றாடி அவர் பட்ட பிரயத்தனத்தால் பாவ வழியில் நடந்த அநேகர் மனந்திரும்பி, தங்கள் சீவியத்தை சீர்திருத்தினார்கள்.

பட்டணத்தின் மதிலுக்கு வெளியே, அர்ச். சாமிநாதசபைக் கன்னியர்கள் மடம் ஒன்றிருந்தது. '**பரிசுத்த சம்மனசுக்கள் மடம்**' என்று அதற்குப் பெயர். சர்வேசுரனுக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்ட கன்னியர் வசிக்கும் மடம், நிர்ப்பாக்கியமாய் கட்டுப்பாடு சீர்குலைந்து, அயோக்கியரான சில வாலிபர்களுக்குத் திறந்திருந்ததால், வரவர அங்கு தேவபக்தி தளர்ந்து, இலௌகீகமும், சிந்தனையற்ற நடக்கைகளும் உட்புகுந்தன. ஆனதால் இம்மடம் ஜனங்களுக்கெல்லாம் பெருந் துர்மாதிரிகையாகவும், அநேக ஆத்துமாக்களுக்கு இடறலாகவும் இருந்தது. இதை அறிந்த இஞ்ஞாசியார் வெகுவாய் மனம் நொந்து, இத்தின்மையை நிவர்த்தி செய்ய முயற்சியெடுத்தார். இதற்காக தினம் மடத்துக் கோவிலுக்குப்போய், திவ்விய சற்பிரசாதம் முன் நெடுநேரம் உருக்கமாய் மன்றாடிவருவார். அவர் செய்த நெடுஞ்செபம், அவரிடத்தில் விளங்



கின உசித அடக்கவொடுக்கம், சற்பிரசாதப்பெட்டியை ஏறெடுத்துப்பார்த்த பார்வையாயிருந்த அவர் முகத்தில் சுவாலித்த புனித அருள், பெருமூச்சுடன் அவர் சிந்திய கண்ணீர், இவையெல்லாம் அக்கன்னியாஸ்திரிகளுக்கு ஓர் விநோத காட்சியாயிருந்தது. இம்மகாத்துமா யாரென்று விசாரிக்கத்துவக்கினார்கள். அவர் ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவரென்று கேள்வியுற்று, ஏதோ விநோதப் பிரியத்தால் அவரைக்கண்டு பேச ஆசித்து, மடத்துக்கு அவரை வரவழைத்தார்கள். அவர் ஆவலாய் எதிர்பார்த்திருந்த சமயம் கடைசியாய் வந்தது. "**ஞான முயற்சிகளை**" உண்டுபண்ணின தேவசிநேகம் மிகுந்த இஞ்ஞாசியார், இக்கன்னியர்கள்முன் எவ்விதம் பேசியிருந்திருப்பாரென்று, இதை வாசிக்கும் நண்பர்களே, நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். அக்கினிமயமான அம்புகள்போல், அவர் வார்த்தைகள் அவர்கள் இருதயத்தில் தைத்தன. தாங்களிருந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியை நினைத்து, உள்ளம் நாணி, ஐயோ! சர்வேசுரனுக்கு துரோகம் செய்தோமேயென்று மனஸ்தாபப்பட்டார்கள். ஒருநாளல்ல பலநாள் இஞ்ஞாசியார் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்குப் புத்தி சொல்லி வந்தார். பாழ்நிலம் திரும்ப வேலியடைத்து திருத்தப்பட்டு, மனஸ்தாபக் கண்ணீருண்டு செழித்து சுகந்த பரிமளம் வீசும் புஷ்பங்கள் வாழும் பூங்காவனம் போலானது.

முன் அதைப் பாழாக்கிய துஷ்டர்கள், இனி மேல் அங்கு நுழைய வழியில்லையென்று கண்டு, அதற்குக் காரணமாயிருந்த இஞ்ஞாசியார்மீது சினந்து விழுந்தார்கள். இருதரம் அவரை வழிமறித்து அடித்து பயமுறுத்தினார்கள். அர்ச்சியசிஷ்டவர் அதற்கெல்லாம் அஞ்சாது, கன்னியாஸ்திரிகளை மேன்மேலும் நன்னெறியில் உறுதிப்படுத்தி வந்தார். இதைக்கண்டு அந்தத் துஷ்டர்கள் நிஷ்டூரமாய்ப் பழிவாங்க தீர்மானித்தார்கள். அவர்களுடைய ஏவுதலால் இரு மகம்மதியர்கள் பதுங்கியிருந்து, இஞ்ஞாசியாரும், பக்திமானான ஒரு குருவானவரும் மடத்தில் ஆத்தும இரட்சணிய அலுவல் நிறைவேற்றி திரும்பி வரும்போது, அவர்கள் மேல் விழுந்து, அவர்களை நொறுங்க அடித்து குற்றுயிராய் விட்டுப்போனார்கள். குருவானவர் சில தினத்துக்குள் மரணமானார். அவ்வழியே சென்ற ஒரு நல்ல மனிதன் மூர்ச்சையாய்க்கிடந்த இஞ்ஞாசியாரைத் தன் வாகனத்தின்மேல் பதனமாய்த் தூக்கிவைத்து, அகிநேசம்மாள் வீடு கொண்டு போய்ச் சேர்த்தான். முப்பதுநாள் பரியந்தம் அவர் பட்ட உபாதை இவ்வளவு அவ்வளவென்றல்ல. பிழைப்பாரென்பது சந்தேகமாகத்தானிருந்தது. இவ்வித ஸ்திதியிலிருந்தாலும், ஆத்தும குரு கட்டளையிட்டதின்மேல்தான், மயிரொட்டியாணத்தை எடுத்துவிட சம்மதித்தார். அடித்தவர்கள் யாரென்று அறியக்கூடிய விஷயங்கள்



யாதொன்றும் வெளியிட்டவரல்ல. முப்பதாம் நாள் எல்லாம் முடிந்ததென்று, கடைசி தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றினார்கள். ஆனால் தேவகிருபையால் அன்றுமுதல் சுகவிருத்தி கண்டு, மூன்று வாரம் சென்றபின் படுக்கையை விட்டெழுந்தார். நடக்க பலம் வந்ததும், திரும்பக் கன்னியர்கள் மடத்துக்குப்போகப் புறப்பட்டார். தாய்போல அவரைத் தன் வீட்டில் ஆதரித்துவந்த அகிநேசம்மாள் கிலேசமுற்று, அவரைத் தடுக்க பிரயாசப்பட்டாள். ஆனால் உத்தம தேவசிநேகம் நிறைந்த பிறர்சிநேகத்துக்கு, பயம் என்பதுமுண்டோ? சற்றும் அஞ்சாமல் முன்போல் கன்னியாஸ்திரிகளைச் சந்தித்து, நன்னெறியில் அவர்களைத் திடப்படுத்திவந்தார். மேற்சொன்ன துஷ்டர்களால் திரும்ப அவருக்கு தீங்கொன்றும் நேரிடவில்லை. ஆனால், பிறர்சிநேகம் மேலிட்டிருந்த அவர் இருதயத்துக்கு மகா இன்பகரமான ஓர் விசேஷம் நேரிட்டது. மடத்திலிருந்து திரும்பிவரும்போது, அவரை நிஷ்டூரமாய்ப் பகைத்தவர்களில் பிரதானமான ரீபோர என்ற ஒரு வர்த்தகன் மனஸ்தாபப்பட்டு, அவர்முன் முழந்தாளிட்டு தன் அக்கிரமத்தை அங்கீகரித்து பொறுத்தல் கேட்டான். மேலும் பாவமார்க்கத்தை விட்டு விலகி, தன் நடத்தையைச் சீர்திருத்துவதாக உறுதியான வாக்கும் கொடுத்தான்.

இஞ்ஞாசியாருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைக் கண்டு அனேகர் அவரைப் பின்சென்று, அவருக்கு துணைவர்களாக விரும்பினார்கள். அவர்களில் மூன்று பேரை மாத்திரம் அவர் ஏற்றுக்கொண்டார். கலிஸ்தோ என்பவர் அவர்களில் ஒருத்தர். ஆகிலும் சேசுசபைக்கு அஸ்திவாரமாகத் தேவ திருவுளத்தால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இவர்களல்ல ;—இவர்களெல்லாம் இடையில் வந்து இடையில் போனவர்களே !

மிக்கேல் ரோதீஸ் என்றொருவர் அர்ச்சியசிஷ்டவருக்கு சீஷனாக ஆசித்தார். இஞ்ஞாசியார் அவரை நோக்கி: “நீ என்னைப் பின்செல்லமாட்டாய்; ஆனால் உன் மக்களில் ஒருவன், தேவ அநுக்கிரகத்தால் நான் ஏற்படுத்தப்போகும் சன்னியாச சபையில் பிரவேசிப்பான்” என்றுரைத்தார். இத்தீர்க்கதரிசனம் சொன்ன பதினாறும் அல்லது பதினேழாம் வருஷம், சேசுசபை, அர்ச். பாப்புவின் அங்கீகாரம் பெற்று பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது. மேற்சொன்ன மிக்கேல் ரோதிஸ் என்பவருடைய கடைசி புத்திரன் இச்சபையில் உட்பட்டு, துறவற ஒழுக்கத்தில் சிறந்து விருத்தாப்பியராய்க் காலம்பண்ணினார். மகன் தன் கருத்தை தந்தைக்கு அறிவித்தபோது, தந்தை அநேக வருஷங்களுக்குமுன் இஞ்ஞாசியார் சொன்ன தீர்க்கதரிசனத்தை நினைவுகூர்ந்து, அன்றுதான் அதை மகனுக்கு அறிவித்



தார். அது நிறைவேறப்போகிறதை நினைத்து இருவரும் அகமகிழ்ந்தார்கள்.

நமது ஜாண் பாஸ்கால் என்பவரும் அர்ச்சியசிஷ்டவரைப் பின்செல்ல ஆசித்தார். ஆனால் அவர் இல்லற வாழ்க்கையிலிருப்பது தேவசித்தமென்று இஞ்ஞாசியார் சொன்னார். “வெகு புண்ணியவதியான ஒரு பெண்ணை விவாகம் செய்து அநேக குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் தகப்பனாவாய். அவர்களால் உனக்கு வெகு கஸ்தியும் துன்பமுமுண்டாகும். இத்துன்பமெல்லாம் சர்வேசுரன் உன்மேல் வைத்திருக்கும் அன்பின் நிமித்தமும், உன் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் அனுப்பப்படும்” என்று அர்ச்சியசிஷ்டவர் அவருக்கு அறிவித்தார். அப்படியே சகலமும் நிகழ்ந்தது. அவருடைய மூத்த குமாரன் செவிடும் ஊமையுமாய்ப் பிறந்தான். இரண்டாவது குமாரன் இருபத்திரண்டு வயதில் புத்தி கலங்கி பைத்தியகாரனானான். மூன்றாவது குமாரன் தாறுமாறாய் நடந்து, ஓர்நாள் தகப்பன் கண்முன் திடீரென்று தரையில் விழுந்து மரித்தான். நாலு குமாரத்திகளில், விவாகப் பிராயமாயிருந்த மூன்று பேருக்கு சீதனம் கொடுக்க வகையில்லாமற்போயிற்று. விருத்தாப்பிய காலத்தில் வெகுவாய்க் கடன்பட்டு, அட்டதரித்திரத்துக்குள்ளானார். ஆனால் “இத்துன்பமெல்லாம் சர்வேசுரன் உன்மேல் வைத்திருக்கும் அன்பின் நிமித்தம் அனுப்பப்படும்” என்று அர்ச்

சியசிஷ்டவர் சொன்ன உறுதிமொழி, மரணபரியந்தம் இப்புண்ணியாத்துமாவுக்கு ஒரு பரம ஆறுதலாக இருந்தது. மேலும் இஞ்ஞாசியார் தாம் உயிரோடிருந்த காலமெல்லாம் தம் நேச ஜாண் பாஸ்காலை மறந்துபோகவில்லை. தகப்பனுக்குரிய அன்போடு அவருக்கு அடிக்கடி கடிதம் எழுதி, அவர் மனதைத் தேற்றி வந்தார். மரணமான பின்பும் மறந்துபோகவில்லை.

மன்ரேசா ஊராரைப்போல், பார்சலோனு நகரத்தாரும் இஞ்ஞாசியார் தங்களை விட்டுப் பிரிந்துபோவதைப்பற்றி கஸ்தியுற்றிருந்தார்கள். பல வருஷங்களுக்குப்பின் இஞ்ஞாசியாருடைய உடன்பிறந்தார் மக்களில் ஒருவராகிய அரவோஸ் (Araoz) என்னும் சேசுசபை சுவாமியார் இப்பட்டணத்துக்கு வந்தபோது, அர்ச்சியசிஷ்டவருடைய சுகக்ஷேமங்களை விசாரிக்கும்படி நாள்முழுதும் ஜனங்கள் அவரிடம் வந்துகொண்டேயிருந்தார்கள்.

## 8-ம் அதிகாரம்.

அல்காலா—அங்கு அவர் நடத்திய தர்மக்கிரிகைகள்—ஓர் வாலிபப் பிரபுவை நல்வழி சேர்த்தது—இடையூறுகள்—வேத விசாரணைக் கர்த்தாக்கள் அர்ச்சியசிஷ்டவருக்கு அநுகூலமாய் செய்த தீர்ப்பு—சிறைக்கூடத்துக்குக்கொண்டுபோகப்பட்டது—அதிசய சம்பவம்—அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார்—அநீத தீர்ப்பு—சலமான்காவுக்கேகுதல்.

## 1526—1527.

இஞ்ஞாசியார் பார்சலோனுவில் சிலகாலம் இலத்தீன் படித்தபின், உயர்ந்த சாஸ்திரங்களைக் கற்றறிவதற்காக அவ்விடத்தை விட்டு, 1526-ம் ௵ ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில் அல்காலா பட்டணத்துக்குச் சென்றார். கலாசாலையில் படிப்பு ஆரம்பிக்க இன்னும் மூன்றுமாதமிருந்தது. வழக்கம்போல் ஜெபதபத்திலும், பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காக பிரயாசையெடுத்து உழைப்பதிலும் இந்நாட்களைச் செலவழித்து வந்தார்.

இஞ்ஞாசியார் உலகத்தை வெறுத்து தேவ ஊழியத்தில் பிரவேசித்த நாள்முதல் அவர் மரணகால

மட்டும், அவருடைய அர்ச்சியசிஷ்ட சீவியத்தைக் கண்டு அவரை வந்தித்து நேசித்துவந்தவர்களும் அநேகர், அநீதமாய் அவரைப் பகைத்து நிந்தித்தவர்களும் அநேகர். ஏற்கனவே பல திருஷ்டாந்தங்களை இச்சரித்திரத்தில் கண்டிருக்கிறோம்.

அல்காலாவில் வந்து பன்னிரண்டு நாளாகுமுன், ஒரு குருவானவரும் அவரோடு வேறு சிலரும் இஞ்ஞாசியார் பிச்சையெடுத்து சீவிப்பதைக் கண்டு, அவரைப் பலவாறாய்ப் பரிகாசஞ்செய்து நிந்தித்தார்கள். அதையெல்லாம் அர்ச்சியசிஷ்டவர் மகா தாழ்ச்சியோடு சகித்துக்கொண்டார். இதைக் கண்டு, நோயாளிகள்சாலை விசாரணைக்கர்த்தாவான லோப் தேசா என்பவர் அர்ச்சியசிஷ்டவர் மேல் மனமிரங்கி, அவரை அழைத்துக்கொண்டு போய் உபசரித்து, நோயாளிகள்சாலையில் அவருக்குத் தங்கியிருக்க இடமும் கொடுத்தார். பிற்காலத்தில் இக்கனவானுடைய புத்திரன் அல்போன்சோ தேசா என்பவர் சேசுசபையில் உட்பட்டார்.

பார்சலோனாவில் இஞ்ஞாசியாரைப் பின்சென்ற கலிஸ்தேர்வும், மற்றிரண்டு துணைவர்களும் அல்காலாவுக்கு வந்துசேர்ந்தார்கள். இவர்களோடு நாலாவதாக வேறொருவரும் சேர்ந்துகொண்டார். இஞ்ஞாசியாரும் அவரைச் சேர்ந்த இந்நாலு துணைவர்களும் ஒரே மாதிரியாய் மங்கல்நிறமான அங்கியும்,



அதே நிறத் தொப்பியும் அணிந்து, சேசுக்கிறீஸ்து நாதரைப்பற்றி தரித்திரர்களாய்ப் பிச்சையெடுத்து சீவித்து வந்தார்கள். ஏழைகள்மேல் வெகு இரக்கமுடையவராயிருந்த இஞ்ஞாசியார், தாமே தரித்திராயிருந்தாலும், தானம் வாங்கி அவர்களுக்கு உதவி செய்துவருவார். விசேஷமாய், ஓர் காலத்தில் செல்வத்தில் வாழ்ந்து, ஏதோ துன்பத்தால் வறுமைப்பட்டு பிறர் உதவியைக் கேட்க நாணியிருப்பவர்களையும், ஆதரவற்ற நோயாளிகளையும், வெகு இரகசியமாய்த் தேடிப்போய் உதவி செய்வார். தேவபக்தி நிறைந்த மொழிகளால், அவர்கள் மனதைத் தேற்றி, அவர்கள் ஆத்துமத்துக்கும் நன்மை செய்வார். முன் லொயோலா மாளிகையில் இஞ்ஞாசியாரை அறிந்திருந்த ஒரு வர்த்தகன் மார்த்தின் சயேஸ் என்பவர் தற்சமயம் ஏதோ அலுவலாய் அல்காலாவுக்கு வந்திருந்தார். அங்கு அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க ஆசித்தார். ஓர்நாள் அவர் தனிமையாய் ஓரிடத்துக்குச் செல்வதைக் கண்டு, அவருக்குத் தெரியாமல் அவரைப் பின்தொடர்ந்து போனார். இஞ்ஞாசியார் ஓர் சிறு இல்லிடத்துக்குள் புகுந்து, சற்றுநேரத்துக்குள் வெளியே வந்து தன் வழியே திரும்பிப் போனார். அர்ச்சியசிஷ்டவர் தலைமறைந்ததும், வர்த்தகன், குடிசைக்குட் சென்று, அங்கு ஒரு வியாதிக்காரி படுத்தபடுக்கையாய் இருப்பதைக் கண்ணுற்று, சற்றுமுன் இங்கு

வந்தவர் யாரென்று வினவினார். "அவர் யாரோ எனக்குத் தெரியாது! ஆனால் அவர் ஒரு அர்ச்சிய சிஷ்டவராக இருக்கவேண்டும். தினம் தவறாமல் இங்குவந்து எனக்கு உதவிசெய்து ஆறுதல் சொல்லிப் போகிறார்" என்று வியாதிக்காரி சொன்னாள். "அப்படியானால், நாளை அவர் இங்கு வரும்போது, அவருக்காகிலும் மற்றவர்களுக்காகிலும் வேண்டிய சகாயம் சந்தோஷமாய்ச் செய்யக் காத்திருக்கும் ஒருவரை உனக்குத் தெரியுமென்று சொல்லவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். அப்படியே மறுநாள் அவள் சொன்னாள். தன் மேன்பிறப்பும், சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி இரகசியமாய் தான் செய்துவந்த பிறர்சிநேகக் கிரிகையும் வெளியானதென்று இஞ்ஞாசியார் கஸ்திப்பட்டு: "சகோதரி, இதுமட்டும் நான் உனக்கு உதவி செய்துவந்தேன்; இனிமேலாக சர்வேசுரன் உனக்கு வேறுவழியாய் உதவிசெய்வார். அவர் கையில் உன்னை விட்டுவிடுகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டார். அன்றுமுதல் திரும்ப ஒருபோதும் அவ்விடத்துக்கு சென்றவரல்ல.

ஆனால் இஞ்ஞாசியாருடைய சாஸ்திரப் பயிற்சியைப்பற்றி என்ன? அதிசீக்கிரம் எல்லாம் படித்து முடிக்கவேண்டுமென்னும் ஆவலினாலோ, அல்லது அக்கலாசாலையில் சாஸ்திரம் கற்பிக்கும் முறை அவ்விதமிருந்ததினாலோ என்னமோ, நியாயசாஸ்திரம் தத்துவசாஸ்திரம் தேவசாஸ்திரமெல்லாம் ஒரு



ஒழுங்கு கிரமமின்றி ஒரே சமயத்தில் கற்றறிய முயன்றார். அதனால் சாஸ்திரப்பயிற்சியில் அவர் இங்கு அவ்வளவாய் விர்த்தியடையவில்லையென்று தோன்றுகின்றது.

ஆயினும் பத்திக்குரிய ஞானசம்பாஷணை, ஞானோபதேசம், விசேஷமாய் ஞான முயற்சிகளைக் கொண்டு சற்றும் சோர்வின்றி கலாசாலையிலும், மற்றவிடங்களிலும் செய்துவந்த ஆத்தும இரட்சணிய அலுவலில், யாவரும் வியக்கத்தக்க அநுகூலம் கிடைத்தது. "இவைகள் வழியாய் திரளான பேர் ஞானகாரியங்களை அறிந்து, அவைகள் மேல் பிரீதி வைத்ததால், சர்வேசுரனுக்கு அதிக தோத்திரம் உண்டானது" என்று அவரே சொல்லியிருக்கிறார். இவ்விடத்திலும், நெடுநாள் பாவப் பழக்கத்தால் மனம் கடினப்பட்டுப் போயிருந்த அநேகரை நல்வழிக்குத் திருப்பினார்.

அக்காலத்தில் சில சமயங்களில் வழங்கிவந்த சீர்கேடான ஓர் வழக்கத்தால், குருப்பட்டமில்லாதிருந்தும் திருச்சபையில் உயர்ந்த ஸ்தானத்தைக் கைக்கொண்டிருந்த வாலிபப்பிரபு ஒருவர் இருந்தார். இவர் கலாசாலையில் நெறிகெட்ட சில வாலிபர்களோடு சேர்ந்து தன் அந்தஸ்துக்கு மாத்திரமல்ல, மனுஷ சுபாவத்துக்கே பங்கமாக அயோக்கியமாய் நடந்துவந்தார். தேவதுரோகமும், அநேகர் கெட்டுப்போகிறதற்குக் காரணமு

மாயிருந்த இவ்வாலிபருடைய நடத்தையைத் திருத்த இஞ்ஞாசியார் தீர்மானித்தார். இதற்காகத் தேவ அநுக்கிரகத்தை மன்றாடி, அவருடைய வாசஸ்தலத்தைத் தேடிப்போய், அத்தியாவசியமான ஓர் விஷயத்தைப்பற்றி அவரிடம் தனித்துப் பேசவேண்டுமென்று கேட்டார். மற்றவர்கள் அகன்றுபோனதும், இஞ்ஞாசியார் வெகு தைரியமாய் அவ்வாலிபருடைய நடத்தையைக் கண்டித்தார். அவருடைய நடத்தையால் தேவ மகத்துவத்துக்கும், பரிசுத்த திருச்சபைக்கும் நேரிடும் நிந்தையையும், அவர் ஆத்துமத்துக்கும் பிறர் ஆத்துமத்துக்கும் வரும் கேடுகளையும் எடுத்துரைத்து, பாவ வழியை விட்டுத் திரும்பி, ஜீவியத்தைச் சீர்திருத்தும்படி சர்வேசுரன் நாமத்தால் வற்புறுத்திச் சொன்னார். வாலிபரோ கோபாவேசமாய் முழங்கி, அர்ச்சியசிஷ்டவரை வாயில் வந்தபடி திட்டி, அக்ஷணமே அவ்விடத்தைவிட்டுப் போகும்படி அலட்டினார். அச்சமயம் அர்ச்சியசிஷ்டவர் என்ன சொன்னாரோ, தேவ வரப்பிரசாதம் வாலிபருடைய ஆத்துமத்தில் என்ன அற்புதத்தை நிறைவேற்றியதோ, நடுத்தீர்வைநாளில்தான் தெரியவரும். ஆனால் எஜமான் கோபமாய் முழங்கும் சத்தத்தைக் கேட்டு கதவண்டை ஓடிவந்த ஊழியர்கள், சற்றுப் பின் உள்ளே சென்றபோது, வாலிபப்பிரபு முற்றும் வேறு மனிதனாய், வெகு ஆசாரத்தோடு இஞ்ஞாசியாருடன் வார்த்தையாடிக்கொண்



டிருப்பதையும், தம்மோடு அவரும் அசனம் செய்யும்படி, அவருக்கு ஓர் ஆசனம் தயார் செய்யும்படிக் கட்டளையிட்டதையும் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அன்றுமுதல் அவ்வாலிபர் தம் ஜீவியத்தைத் திருத்தி, இஞ்ஞாசியாரைத் தன் தந்தையைப்போல் மதித்து நேசித்து வந்தார்.

இதுபோல் இன்னும் வேறனேகர் பாவமார்க்கத்தை விட்டுத் திரும்பினார்கள். அநேகர் ஓயாமல் இஞ்ஞாசியாரைத் தேடிப்போய், அவரோடு சம்பாஷித்து அதிக பக்திமான்களாய், அதிக ஜெபதபம் செய்துவந்தார்கள். சிலர் உலகத்தை வெறுத்து துறவறத்தில் பிரவேசித்தார்கள். இதைக் கண்டு அல்காலா நகரத்தார் அவர்மீது சமுசயமுற்றார்கள். "இப்பரதேசியும் அவர் தோழர்களும் ஒரே மாதிரியான உடையணிந்து திரிவானேன்? வாரந்தோறும் திவ்விய நன்மை வாங்குவானேன்? இன்னும் குருப்பட்டம் பெறாத இவர் மற்றவர்களுக்குப் போதிக்க ஏற்பட்டதேது? மனிதர் மனதை இப்படித் தன் கைவசப்படுத்தித் திருப்ப, இவ்வளவு ஆச்சரியமான சக்தி இவருக்கு எங்கிருந்து வந்தது? வெகு பேரை ஓர் அறையில் கூட்டிவைத்து மௌனங்காக்கச்செய்து, பல நாள் பரியந்தம் வேளைக்கு வேளை அவர்களைச் சந்தித்து, ஏதோ அவர்களுக்கு இரகசியத்தில் போதித்து வருவானேன்?" எனப் பலவாறாய் அவரைப்பற்றிப் பிரஸ்தாபித்துப் பேசத் தலைப்பட்டார்கள். அவர்

கற்பித்து வந்த ஞான முயற்சிகளின் தன்மையையும் கருத்தையும் அறியாமல், அவர் ஏதோ மந்திரஜால மாயவித்தையால் மனிதர் புத்தியை மாறுடச் செய்து, அவர்கள் மனதைக் கைவசப்படுத்தி வந்ததாக எண்ணினார்கள். சாமானிய ஜனங்கள் மாத்திரமன்று, கல்லுணர்ச்சியும் நற்கருத்துமுடைய சில பெரியோர்கள் முதலாய் அவர்மீது தப்பான எண்ணம் கொள்ளலானார்கள்.* அவருடைய தோழர்களில் ஒருவர் ஓர்நாள் திவ்விய நன்மை வாங்கப் போனபோது, "எட்டு நாளைக்கு முன்தான் நன்மை வாங்கினதால் இன்று நன்மை கிடையாது" என்று குருவானவர் சொல்லிவிட்டார். இஞ்ஞாசியாருக்கு நன்மை கொடுத்தாரென்றாலும், மனமின்றி வருத்தத்தோடுதான் கொடுத்தார்.

காரியம் இதோடு நிற்கவில்லை. பற்பலவகையான பதிதவிஷம் வெகு கபடமாய் எங்கும் பரவி ஆத்துமாக்களைக் கெடுத்துவந்த காலம் அது! ஆகையால் (Inquisitors இன்குவிஸிற்றர்ஸ்) என்று சொல்லப்படும் வேத விசாரணைக்கர்த்தாக்கள் வெகு விழிப்பாயிருந்து, சத்திய வேதானுசாரத்துக்கு ஒவ்வாதவைகளை போதிப்போரை நன்றாய்ப் பரிசோதித்து, வெகு கண்டிதமாய்ச் சிட்சித்து வந்தார்கள். அந்த ஞான அதிகாரிகள் அல்காலாவில் நடந்தவைகளை ஒன்றுக்கு நாலாகக் கேள்விப்

* இக்காலத்திலும் அவ்விதம் எண்ணுவோர் பலருண்டு.



பட்டு, அவ்விடம் வந்து சகலத்தையும் நுணுநுணுக்கமாய் ஆராய்ந்து பரிசோதித்தார்கள். இஞ்ஞாசியாருடைய ஜீவிய ஒழுக்கத்திலும் போதனையிலும், சத்தியவேதானுசாரத்துக்கு விரோதமானது யாதுமில்லையென்று கண்டு, அவர் இதுகாலம் நடந்துவந்ததுபோல் இனிமேலும் நடந்துவருவதைப்பற்றி ஆக்ஷேபனையில்லையென்று தீர்த்தார்கள். என்றாலும், அவரும் அவருடைய தோழர்களும் இன்னும் யாதொரு சந்நியாச சபையைச் சேர்ந்தவர்களல்லவென்பதால், ஒரே வகை நிறமான உடை அணிவதை விட்டுவிடவேண்டுமென்று விதித்தார்கள். இஞ்ஞாசியார் அக்கட்டளைக்கு உடனே கீழ்ப்படிந்தார்.

இதன்பின் சிலகாலம் அமரிக்கையாயிருந்தது. ஆனால் ஓர் நாள் இஞ்ஞாசியார் வெகு வியாதியாயிருந்த கலிஸ்தோவைப் போய்ப் பார்த்து, தம் வாசஸ்தலத்துக்குத் திரும்பி வந்ததும், ஒரு சேவகன் வாசலில் வந்து நின்று, அவரைத் தன்னோடு வரும்படி சொல்லிக் கூட்டிக்கொண்டுபோய், காவலில் வைத்து, மேலாவிலிருந்து உத்தரவு வருமட்டும் அவ்விடத்தைவிட்டுப் போகப்படாதெனக் கட்டளையென்றான்.

அல்காலா நகர்வீதியில் இஞ்ஞாசியார் அவ்விதம் சிறைக்கூடத்துக்கு நடத்திக்கொண்டு போகப்பட்டபோது, பதினேழு பிராயமுள்ள வெகு மாட்

இமை தங்கிய வாலிபப்பிரபு ஒருவர் அநேக பிர
புக்கள் சேவகர்கள் பரிவாரமுடன், ஆரவாரமாய்
அவ்வழி சவாரி சென்றார். கைதியும், அவரைக்
காவல் செய்துகொண்டுபோன சேவகரும், பரி
வாரத்துக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார்கள்.
கவிழ்ந்த பார்வையாய் ஒதுங்கி நின்ற கைதியைக்
கண்டதும், வாலிபப்பிரபுவின் மனம் ஏதோ திடுக்
கிட்டு சலனமடைந்தது. குதிரையை நிறுத்தி,
நிர்மலமாய் மலர்ந்து தெளிந்து பெருந்தகைமையும்
கௌரவமும் வாய்ந்திருந்த அக்கைதியின் முகத்
தை சற்றுநேரம் கண்ணுற்று நின்றார். திடீரென்று
கைதியும் எதிட்டுப் பார்க்கவே, இருவர் கண்களும்
சந்தித்தன ;—ஒருவர் ஒருவர் முகத்தைக் கூர்ந்து
நோக்கினர். அக்ஷணமே அவ்வாலிபப் பிரபுவின்
இருதயம் சொல்லரியதோர் பூஜித நேச வாஞ்சை
யுடன் கைதியை நோக்கி தாவிச் சென்றது. இவ்
வாலிபப் பிரபு யாவராயிருக்கலாம்! இஸ்பானியா
தேசத்தில் இராஜவம்சத்தில் பிறந்தவர். **காந்தியா**
(Gandia) நாட்டின் சுதந்தரக் கர்த்தா. **கத்த
லோனியா** (Catalonia) நாட்டின் இராஜப் பிரதி
நிதி. **கார்லோஸ்** அரசனுக்கும் இஸபெல்லா இராக்
கினிக்கும் இனபந்து. இவர்களால் மிகவும் அன்பு
பாராட்டப்பட்டு, இராஜ்யமெங்கும் வெகு கீர்த்திப்
பிரதாபம் பெற்று, புண்ணியவதியான தமது
செல்வப் பாரியாள் **லேயோனோரா** அம்மாள் மரண
மானபின், உலக மகிமை, பெருமையெல்லாம் தூசி



யென்று வெறுத்து, அர்ச். இஞ்ஞாசியார் கையில்
தம்மைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து சேசு
சபையில் உட்பட்டு, **லேய்னஸ்** சுவாமியாருக்குப்
பின் அர்ச். இஞ்ஞாசியார் ஸ்தானத்தில் சேசுசபைக்
கெல்லாம் அதிபதி சிரேஷ்டராயிருந்து, இச்சபை
யின் வர்த்திப்புக்காக வெகு வாஞ்சை ஊக்கமுடன்
உழைத்த **அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார்***தான்

* 1510-ம் ௵ அக்டோபர்-௴ 28-௳, இஸ்பானிய
தேசத்தில் பிறந்த அர்ச் பிரான்சிஸ்கு போர்ஜியார், பாலிய
முதற்கொண்டே பாவத்தைத் துவேஷித்து தர்மநெறியில்
நடந்துவந்தார். திரவியசம்பத்து மகிமை கீர்த்திகளிலல்ல,
அவைகளைத் தமக்களித்த நித்திய கடவுளின் திவ்விய நேசத்
திலேயே தமது இருதயத்தை நிறுத்தி, சகலத்திலும் அவ
ருக்குகந்தபடி நடக்கப் பிரயாசப்பட்டுவந்தார். தமது
சுகிர்த புண்ணியங்களால், இல்லறவாழ்க்கையில் யாவருக்
கும் மேல்வரிச்சட்டம்போலிருந்தார். என்றாலும், சர்வே
சுரன் தமது தாசனை இன்னும் அதிக உன்னத ஞான சீவி
யத்துக்கு அழைக்கத் திருவுளமானார். 1539-ம் ௵ மே-௴
1-௳ ஐந்தாவது சார்லஸ் அரசனுடைய பத்தினியாகிய
இசபெல்லா இராக்கினி மரணமடைந்தாள். சிறந்த வடி
வழகும், சற்குணமும், தேவபக்தியும், போர்ஜியார் குடும்
பத்தின்மீது அளவற்ற அன்புமுடைய இவ்விராக்கினியின்
மரணமானது, ஏற்கனவே பிரான்சிஸ்கு போர்ஜியாருக்கு
உலக வாழ்வின் அநித்தியத்தை எடுத்துரைக்கும் தூதன்
போலிருந்தது. மரித்தவள் சரீரத்தை க்ஷேபிப்பதற்கு இராஜ
க்ரானடா (Granada) என்னும் பட்டணத்தில் இராஜ
குடும்பத்துக்கென்று கட்டப்பட்டிருந்த கல்லறைக்குக்
கொண்டுபோகவேண்டியிருந்தது. பிரேதத்தை பக்தோ

இந்த வாலிபப்பிரபு. அல்காலா நகர் வீதியில் அன்று அவர் கண்ட காட்சியும், கைதியாக நடத்திக்கொண்டு போகப்பட்ட இஞ்ஞாசியார்மீது அப்போது அவர் இருதயத்தில் ஏதோ புதுமையாய்ப் பற்றியெழும்பிய நேச வாஞ்சையும் ஜீவ பரியந்தம்

---

பந்துடன் அவ்விடம் கொண்டுபோய்ச் சேர்த்து, ஆசாரப்படி சகலமும் ஒழுங்காய் செய்துமுடிக்கும்படி, அரசன் தனக்கு கிட்டின பந்துவும் உற்ற நண்பருமாகிய போர்ஜியாரை விரும்பிக் கேட்டார். அரசன் விரும்பியபடி சகலமும் பிரமாணிக்கமாய் நிறைவேற்ற போர்ஜியார் தீவிரித்தார். வழிநெடுக ஒரு நிமிஷமுதலாய் பிரேதப்பெட்டியை விட்டகன்றவரல்ல. பிரேதப்பெட்டியை நோக்கிய கண்ணும், நித்திய சர்வேசுரனை சிந்தித்த இருதயமுமாகவே பிரயாணம் செய்தார். குறித்த இடம் போய்ச்சேர ஐந்து நாள் சென்றது. பிரேதத்தை கல்லறைக்குள் இறக்குமுன், "மரித்தடக்கம் பண்ணப்படப்போகிறவன், ஐந்தாவது சார்லஸ் அரசனுடைய பத்தினி இஸபெல்லா இராக்கினிதான்" என்று பிரான்சிஸ்கு போர்ஜியார் அங்கு கூடியிருந்த கர்தினால், மேற்றிராணிமார், குருக்கள், பிரபுக்கள் சபைமுன் சத்தியம் செய்து சொல்லி, அவ்வுறுதிமொழியடங்கிய ஓர் பத்திரத்தில் தமது கையொப்பமும் வைக்கவேண்டியிருந்தது. ஆனால் பெட்டி திறக்கப்பட்டதும், சரீரம் இருந்த பயங்கரமான விகார ரூபத்தையும், அதினின்று புறப்பட்ட துர்க்கந்தத்தையும் சகிக்கமாட்டாமல், யாவரும் பின்வாங்கி நின்றார்கள். போர்ஜியார்மாத்திரம், மனம் திடுக்கிட்டாலும், நின்ற ஸ்தலத்தைவிட்டசையாமல், பிரேதத்தை நன்றாய் உற்றுநோக்கி, "இதுதானா உலகவாழ்வு" என, இகலோக வாழ்வின் அநித்தியத்தை, மரித்த இராக்



அவர் உள்ளத்தில் அழியாத அட்சரம்போல் பதிந்திருந்தது. கைதியாய் நின்ற இஞ்ஞாசியார் வாலிபப்பிரபுவை முதல் முதல் கண்ணுற்ற அக்ஷணமே, அவர் தாம் ஸ்தாபிக்கப்போகும் சேசுசபையில்

---

கினியின் முகத்தில் கண்காட்சியாகத் தரிசித்தவராய், முகம் வெளுத்து உள்ளம் வெம்பி நின்றார். சர்வேசுரனும் தமது வரப்பிரசாதக் கதிர்களை அவர் ஆத்துமாவில் பொழியவிடவே, அக்ஷணமே அவர் இருதயம் உலகத்துக்கு மரித்தது.........காலஞ்சென்ற இராக்கினியின் முகம் இதுதானென்றுசொல்ல அவருக்கு துணிவு வரவில்லை. ஆதலால் முன்சொன்னபடி சத்தியம் செய்யவாவது, கையொப்பம் வைக்கவாவது உடன்படாமல், தான் இராப்பகலாய் பிரேதப்பெட்டிக்குக் காவலாயிருந்து, அதைவிட்டு ஒருபோதும் அகன்றதில்லையென்று மாத்திரம் சொன்னார். மறுநாள் முத்திப்பேறுபெற்ற அவிலா அருளப்பர் சுவாமியார்: "மாம்சமெல்லாம் புல், அதன் மகிமையெல்லாம் மைதானத்தின் புஷ்பத்துக்குச் சமானம். புல் உலர்ந்துபோயிற்று, புஷ்பமோ விழுந்துபோயிற்று," என இசையாஸ் தீர்க்கதரிசி சொன்ன வாக்கியத்தை எடுத்துரைத்து, மரித்த இராக்கினியைப்பற்றி பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கம் பிரான்சிஸ்கு போர்ஜியார் உள்ளத்தை ஆட்கொண்டிருந்த பரிசுத்த சிந்தனைகளின் எதிரொலிபோலிருந்து, உலகவாழ்வின் அநித்தியத்தை அதிக பிரத்தியட்சமாய் அவருக்கு விளக்கிக் காட்டிற்று. தம்மனைவி தமக்குமுன் மரிக்கும்படி நேரிட்டால், அவள் மரணத்துக்குப்பின் தான் யாதோர் சன்னியாச சபையில் உட்படுவதாக, கிரானடா பட்டணத்தை விட்டுப்போகுமுன், சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்தார்.

ஓர் நாள் பிரவேசிப்பாரென்று தீர்க்கதரிசனமாய் அறிந்துகொண்டதாக சொல்லுகிறார்கள். அதெப்படியிருந்தாலும், அர்ச். பிரான்சிஸ்கு போர்ஜியார் சேசுசபையில் உட்படுவதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னமே, அவ்விசேஷம் அர்ச். இஞ்ஞாசியாருக்குத் தீர்க்கதரிசனமாய் அறிவிக்கப்பட்டிருந்ததென்பது நிச்சயமாய்த் தெரிந்த விஷயம்.

அதே வீதியில் வசித்த சாஸ்திரியார் ஒருவர் தன் வீட்டின் சன்னல் வழியாய் மேற்கூறிய சம்பவத்தைக் கண்ணோக்கி நின்றார். இவரும் பிற்காலத்தில் சேசுசபையில் உட்பட்டார். ஒருநாள் இவர் அர்ச். பிரான்சிஸ்கு போர்ஜியாரைப் பார்த்து, மேற்சொன்ன விஷயத்தை நினைவுகூர்ந்து, "எவரும் வியந்து வந்தனை செய்யக் கம்பீரமாய் சவாரிசென்ற அவ்வாலிபர்,—காந்தியா நாட்டதிபதியின் மூத்த குமாரனும், இஸ்பானிய தேசத்துப் பிரபுக்களின் பெருமையுமாயிருந்தவர்—அன்று ஓர் அநீத நியாய சபையால் சிறைப்படுத்தப்பட்டுக் கைதியாக நின்றவர் கையில், ஓர்நாள் தன்னை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுப்பாரென்று யாரப்போது நினைத்திருக்கக்கூடும்!" என்று ஆச்சரியமுற்றுரைத்தார்.

சிறைச்சாலையிலும் இஞ்ஞாசியாரை அநேகர் தேடி வந்தமையால், அங்கேயும் ஞான உபதேசம் சொல்லவும் ஞானத்தியானங்கள் கொடுக்கவும் அவருக்கு சமயங்கிடைத்தது. திரவியமும் செல்



வாக்குமுள்ள சிலர் அவரை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு, தாங்களே வேண்டிய முயற்சி எடுப்பதாகச் சொல்லி, அவர் சம்மதம் கேட்டார்கள். சேசுநாதர்சுவாமிக்காகச் சிறையில் வைக்கப்பட்டது பெரும் பாக்கியமென்றெண்ணியிருந்த இஞ்ஞாசியார் அதற்கு சம்மதிக்கவில்லை. "சர்வேசுரனுடைய சிநேகத்துக்காக நான் இங்கு வந்திருக்கிறேன். அவருக்கு சித்தமாகும்போது, அவரே என்னை விடுவிப்பார்" என்று சொன்னார். வந்தவர்களெல்லாம் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைக்கண்டு சர்வேசுரனை ஸ்துதித்துக்கொண்டு போனார்கள். வேதாகமங்களை நன்றாய்ப் படித்தறிந்த சாஸ்திரியான நவேரோஸ் என்னும் பக்திமான் அவரைக்கண்டு பேசித்திரும்பும்போது, "அர்ச். சின்னப்பரை சிறையில் கண்டேன்" என்றுரைத்தார்.

பதினேழு நாளாகியும், அவரை சிறையில் வைத்த காரணம் யாதென்று ஒருவரும் சொல்லவுமில்லை, அது என்னவென்று அவர் கேட்கவுமில்லை. கடைசியாய், அவரைக் காவலில் வைக்கும்படி கட்டளை கொடுத்த அதிகாரி வேறொரு உத்தியோகஸ்தனோடு சிறைச்சாலைக்கு வந்து அவரிடத்தில் வாக்குமூலம் கேட்டார். பற்பல கேள்விகள் கேட்டபின், "தாயும் மகளுமாகிய இன்னின்னாரைத் தெரியுமோ?" என்று வினவினார். தெரியுமென்று இஞ்ஞாசியார் சொன்னதும், "அவர்கள் இப்பட்

டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகுமுன், அவர்கள் அப்படி போகிறதாக நீர் அறிந்திருந்தீரோ?" என்றார். அது எனக்குத் தெரியாதென்று இஞ்ஞாசியார் தீர்மானமாய்ச் சொன்னார். "நல்லது, உம்மைக் காவலில் வைத்தது இது விஷயமாகத்தான்" என்று அதிகாரி உரைத்து, முடிவு ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்.

சங்கதி யாதெனில், உயர்குலத்தாரான ஒரு தாயும் அவள் மகளும்—இருவரும் விதவைகள்—அர்ச்சியசிஷ்டவருடைய போதனையைக்கேட்டு ஞான சீவியத்தில் பற்றுதல் வைத்து நடந்துவந்தார்கள். ஊர் ஊராய்த்திரிந்து நோயாளிகள் சாலையில் நிர்ப்பாக்கியருக்கு சர்வேசுரன் திருநாமத்தைக் குறித்து பணிவிடை செய்துவரவேண்டுமென்னும் விமரிசையற்ற ஆவல் அவர்கள் மனதில் குடிகொண்டிருந்தது. இஞ்ஞாசியாரிடத்திலும் இதைப்பற்றி சிலசமயங்களில் பேசியிருந்தார்கள். அவரோவென்றால், அது ஒருபோதும் தகாது, இன்னும் இளமைப்பிராயமாயிருக்கும் தன் மகளை தன் இனபந்துக்கள் காவலைவிட்டு, அன்னிய ஊர்களுக்கு கூட்டிக்கொண்டு திரிவது விவேகமல்லவென்று எப்போதும் தடுத்துக்கொண்டே வந்தார். ஆனால் தபசுகாலம் முடிவாகிவரும் சமயத்தில், இஞ்ஞாசியாரிடத்திலாகிலும், வேறு யாரிடத்திலாகிலும் ஒன்றும் சொல்லாமல், இரகசியமாய் திருயாத்திரைக்காரரைப்போல் உடுபாவனை



யணிந்து, ஒரு ஊழியக்காரி தவிர வேறு துணையின்றி கால்நடையாய் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். இவர்களுடைய பந்துக்கள் இஞ்ஞாசியார்தான் இதற்கு காரணமென்று தப்பாக எண்ணி கோபங்கொண்டு அவரைச் சிறையில் வைக்கும்படி வழிபண்ணினார்கள்.

தாயும் மகளும் திரும்பிவர ஐந்து வாரம் சென்றது. அவர்கள் திரும்பிவந்து கொடுத்த வாக்குமூலத்தில், இஞ்ஞாசியாருடைய வாக்குமூலத்துக்கு விரோதமானதொன்றுமில்லையென்று கண்டபின்தான், அவரை சிறையினின்று விடுவித்தார்கள். மேலும் இஞ்ஞாசியாருடைய ஜீவிய ஒழுக்கத்திலும், போதனையிலும் ஆக்ஷேபனைக்கிடமானது யாதேனுமில்லையென்று முன் வேத விசாரணைக் கர்த்தாக்கள் தீர்த்ததுபோல், இந்நடுவர்களும் தீர்த்தார்கள். ஆனால் அவரும் அவர் துணைவரும் நிறை அங்கி அணிவதைவிட்டு, மாணாக்கரைப்போல சாதாரண உடை தரித்துக்கொள்ள வேண்டுமென்று கட்டுப்பாடு செய்தார்கள். அன்றியும் நாலு வருஷம் வேத சாஸ்திரம் படித்து முடியுமுன், ஞானசம்பாஷணை ஞானபோதகம் யாதொன்றும் செய்யக்கூடாதென்று, முன் வேதவிசாரணைக் கர்த்தாக்கள் கொடுத்த அனுமதிக்கு விரோதமாய், இவர்கள் கண்டிப்பான நிபந்தனை செய்தார்கள். இந்நிபந்தனை இஞ்ஞாசியாருக்கு நியாயமாகத் தோன்றவில்லை. ஏற்கனவே, சிறைச்சாலையில்

வாக்குமூலம் கேட்க வந்திருந்தவர்: "உமது சம்பாஷணைகளில் நூதன பேச்சுக்களை அகற்றுவீராகில், நமக்கு அதிக சந்தோஷமாயிருக்கும்" என்று சொன்னபோது: "கிறீஸ்துவர்களுக்குள் சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி சம்பாஷிப்பது நூதன பேச்சென்றெண்ண நானொருபோதும் துணியேன்" என்று உறுதியாய் மரியாதையுடன் இஞ்ஞாசியார் உத்தாரம் சொல்லியிருந்தார்.

நடுவர்கள் கட்டாயப்படி வேறுவகையான வஸ்திரம் வாங்க இஞ்ஞாசியாருக்கும் அவர் தோழர்களுக்கும் ஐவேசில்லாததால், பிறர்சிநேகம் நிறைந்த லூசேனா என்றொரு குருவானவர் அவர்களுக்காக யாசகம் செய்ய ஆரம்பித்து, லோப்பஸ் தே மென்டோசா என்ற கனவானிடம்போய் ஏதாகிலும் கொடுக்கும்படி கேட்டார். ஏதோ காரணமாக இஞ்ஞாசியார்மேல் குரோதம் வைத்திருந்த இவன் அவர் பெயரைக் கேட்டதும், அவரைத் திட்டி: "அவர் அக்கினியில் சுட்டெரிக்கப்பட பாத்திரவான்: அப்படியல்லாவிட்டால் நானே அக்கினிக்கிரையாகக்கடவேன்" என்று கோபாவேசமாய்ச் சபித்தான். கேட்டவர்களெல்லாம் திடுக்கிட்டார்கள். அரசனுக்கு ஓர் குழந்தை பிறந்த சுபசெய்தி அன்று அல்காலாவில் தெரிய வந்ததால், அவ்விசேஷத்தைக்கொண்டாட நகரெங்கும் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். லோப்பஸ் வாணவேடிக்கை நடக்கும் ஸ்தலத்தை மேற்பார்த்துக்



கொண்டிருந்தான். குவியலாய்க் கிடந்த வெடிமருந்தில் தற்செயலாய் நெருப்புப் பற்றிக்கொள்ள, அவன் அவ்வகோர அக்கினியில் அகப்பட்டு நிற்பாக்கியமாய் மாண்டான்.

சர்வேசுரனைப்பற்றிப் பேசவும், பிறர் ஆத்துமத்துக்கு உதவிசெய்யவும் உத்தரவில்லாத இடத்தில் இருக்க மனமின்றி, ஆத்தும இரட்சணிய அலுவலைத் தாராளமாய் நிறைவேற்றுவதற்காக, அல்காலாவை விட்டு சலமான்கா என்னும் பட்டணத்துக்குப் போக இஞ்ஞாசியார் தீர்மானித்தார். அவருடைய துணைவர்கள் அவருக்கு முன்னமே அங்கு போய்ச் சேர்ந்தார்கள்.

## 9-ம் அதிகாரம்.

*சலமான்கா—அர்ச். சாமிநாதர் சபை மடத்தில் விருந்துக்கழைக்கப்பட்டது—மடாதிபதிக்கும் அர்ச்சியசிஷ்டவருக்கும் நடந்த சம்பாஷணை—கடுஞ்சிறை—பாரீஸ்பட்டணத்துக்கு பயணம்—கலிஸ்தோ முதலியவர்கள்.*

### 1527.

சலமான்காவில் சேர்ந்ததும், இஞ்ஞாசியார் அங்கிருந்த கலாசாலையில் சாஸ்திரப் பயிற்சி செய்து வந்ததுமன்றி, முன்போல் ஆத்துமாக்களுக்கு உதவிசெய்யும் முயற்சிகளையும் உற்சாகமாய்ச் செய்துவந்தார். அப்பட்டணத்தார் ஏற்கனவே அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப் பற்றி கேள்வியுற்றிருந்தார்கள். ஆனதால் அவர் பரலோக காரியங்களைப்பற்றி சம்பாஷிப்பதைக் கேட்க கும்பல் கும்பலாய் வந்தார்கள்.' குருக்கள் முதலாய் அவருக்கு சிஷ்ஷரானார்கள். அவருடைய ஞான போதகங்களைப்பற்றி எங்கும் பெரும் பேச்சாயிற்று. அல்காலாவில் சம்பவித்ததுபோல், இங்கும் அவர்மீது சமுசயம் உண்டாயிற்று. துன்பமும் நெருங்கிவந்தது.

அங்கு வந்த சிலதினங்களுக்குப்பின், ஓர் ஞாயிற்றுக்கிழமையன்று, அப்பட்டணத்திலிருந்த அர்ச்.



சாமிநாதர் சபை சன்னியாசிகள் அவரைத் தங்கள்
மடத்தில் அசனத்துக்கு வரவழைத்தார்கள்.
அழைத்தபடியே இஞ்ஞாசியார் மடத்துக்குச்
சென்றார். கலிஸ்தோ என்பவரும் அவர் கூடப்
போனார். இதுசமயம் கலிஸ்தோ இருந்த கோலம்
மகா விகாரம். அல்காலாவிலிருந்து புறப்படும்
போது அவருக்குக் கொடுக்கப்பட்ட புது வஸ்
திரத்தை பிறர் சிநேகத்தால் ஓர் எளிய குரு
வானவருக்குக் கொடுத்துவிட்டார். தற்சமயம்
அவர் தரித்திருந்த உடுப்புகள் மிகவும் கட்டையா
யிருந்தன. ஆளோ உயரத்தில் வெகு நெட்டை.
அவர் அணிந்திருந்த தொப்பியும் பாதரட்சைகளும்
வெகு விசேஷமாகத்தானிருந்தன. இக்கோல
மாய்ச் சென்ற கலிஸ்தோ, மடத்து சன்னியாசி
களுக்கெல்லாம் ஓர் விநோத காட்சியாயிருந்தார்.
ஒருவர் இஞ்ஞாசியாரைப்பார்த்து, உமது சிநேகன்
இக்கோலமாயிருப்பானேனென்று கேட்டார்.
இஞ்ஞாசியார் கலிஸ்தோ செய்த பிறர் சிநேகக்
கிரிகையை அவருக்கு அறிவித்தார். ஆனால் சன்னி
யாசியாருக்கு அக்கிரிகை அவ்வளவாய் உருசிக்க
வில்லைபோலும். "தனக்கு மிஞ்சித்தான் தானம்"
என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டார்.

போசனமானதும், தற்காலம் மடாதிபதியா
யிருந்த ஓர் சன்னியாசியாரும் வேறு சில சன்னி
யாசிகளும் இஞ்ஞாசியாரை கோவில்போலிருந்த
ஓர் இடத்துக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

இஞ்ஞாசியாருடைய சுகிர்த ஒழுக்கத்தையும், அப்போஸ்தலர்களைப்போல் ஆத்துமாக்களுக்கு அவர் செய்துவரும் நன்மையையும்பற்றிக் கேள்வியுற்று தாங்கள் வெகு சந்தோஷமடைந்திருப்பதாகவும், இது விஷயத்தைப்பற்றி அதிக விபரமாய் அவர் வாயினின்றே அறிய ஆவலுற்றிருப்பதாகவும் மிக்க மாதுரியமாய்ச் சொல்லி: “நீர் இதுகாலம் கற்ற சாஸ்திரம் என்ன?” என்று மடாதிபதி வினவினார். தாம் கற்றது சொற்பமே என்று இஞ்ஞாசியார் உத்தாரம் சொன்னார்.

**மடாதிபர்**:—“அப்படியானால் நீங்கள் பிரசங்கம் பண்ண ஏற்பட்டதெவ்விதம்?”

**இஞ்ஞாசியார்**:—“நாங்கள் பிரசங்கம் பண்ணுகிறதில்லை, ஆனால் ஞான காரியங்களைப்பற்றி ஜனங்களோடு சாதாரணமாய் சம்பாஷித்து வருகிறோம்.”

**மடாதிபர்**:—“ஞான காரியங்கள் என்றீரே,—அதென்ன? அவைகளைப்பற்றித்தான் அறிய விரும்புகிறோம்.”

**இஞ்ஞாசியார்**:—“ஓரோர் புண்ணியத்தைப் பற்றி, ஜனங்கள் அதை நேசிக்கும்படி, புகழ்ந்து பேசுகிறோம்; அல்லது ஓரோர் துர்க்குணத்தைப் பற்றி, ஜனங்கள் அதை அருவருத்துத் தள்ளும்படிக் கண்டித்துப் பேசுகிறோம்.”

**மடாதிபர்**:—“என்ன! சாஸ்திரம் படியாதவர்களென்று சொல்லுகிறீர்கள். ஆயினும் பாவங்களை



யும் புண்ணியங்களையும்பற்றிப் பேசத்துணிகிறீர்கள்! ஒன்றில் நீங்கள் சாஸ்திரம் கற்றவர்களாயிருக்கவேண்டும், அல்லது திவ்விய இஸ்பிரீத்துவால் படிப்பிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும்; மற்றப்படி இவ்விஷயங்களைப்பற்றிப் பேசுவது கூடுமான காரியமல்ல. நீங்களோ சாஸ்திரம் கற்றவர்களல்ல, ஆகையால் திவ்விய இஸ்பிரீத்துவால் படிப்பிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். திவ்விய இஸ்பிரீத்து உங்களுக்கு படித்துக்கொடுத்ததென்ன?” என்று மடாதிபதி தர்க்கமுறையாய்த் தீர்த்துச் சொன்னார்.

காரியத்தைக் கருத்தாயறியாத இவ்வகை நியாயம் இஞ்ஞாசியாருக்கு அவ்வளவாய் உருசிக்கவில்லை. சற்றுநேரம் மௌனமாயிருந்து, தர்க்கம் பண்ணுவதில் பிரயோசனமில்லையென்று கண்டு: “இவைகளைப்பற்றி அதிகமாய் பேசத்தேவையில்லை” என்றார்.

“என்ன! ஏராஸ்மஸூம், மற்றவர்களும் அநேக தப்பறைகளை உலகத்தில் தூவிவரும் இக்காலத்தில், நீர் போதித்துவருவது இன்னதென்று வெளிப்படுத்தமாட்டேனென்பதெப்படி?” என மடாதிபதி அழுத்திக்கேட்டார்.

இஞ்ஞாசியாரோவெனில்—“சுவாமி! என்னிடத்தில் கேள்விகேட்க அதிகாரமுள்ளவர்கள் சமுகத்திலன்றி, மற்றப்படி நான் இதுமட்டும் சொன்

னதுக்குமேல் வேறொன்றும் சொல்லப்போகிற தில்லை," என்று ஒரே தீர்மானமாய்ச் சொன்னார்.

"நல்லது! இங்கு காத்திரும், எல்லாம் சொல்லும்படி செய்ய சுலபமான வழியுண்டு" எனச் சொல்லி, மடத்துக் கதவுகளையெல்லாம் நன்றாய் அடைத்துப் பூட்டிவைக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு, மடாதிபதியும் அவர் கூட இருந்த சன்னியாசிகள் இருவரும் வேதவிசாரணைக் கர்த்தாக்களைக் கண்டு பேசும்படி துரிதமாய்ச் சென்றார்கள்.

இஞ்ஞாசியாரும் அவர் சீஷனும் சன்னியாச மடத்தில் கைதிகளானார்கள். ஓயாமல் தம்மைப் பார்க்க வந்துகொண்டிருந்த சன்னியாசிகளோடு, இஞ்ஞாசியார் தாராளமாய் வார்த்தையாடி, ஞான காரியங்களைப்பற்றி தாராளமாய் சம்பாஷித்துக் கொண்டு வந்தார். அதிசீக்கிரம் சன்னியாசிகளுக் குள்ளேயே அவரைப்பற்றி அபிப்பிராயம் இரண்டு பட்டது. அநேகர் சர்வேசுரனுடைய இஸ்பீரித்து வானவர் மெய்யாகவே அவரோடிருப்பதாக நம்பி, அவர்மீது வெகு அன்பு பாராட்டினார்கள். மற்றவர்கள் அதற்கு விரோதமாய், இன்னும் அவர்மீது சமுசயமுற்றிருந்தார்கள்.

மூன்றுநாளானபின் இருவரும் சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்களை அடைத்து வைத்த அறை பழயகாலத்துக் கட்டிடம். வெகு காலம் மனிதர் வாசமின்றி அசுத்தமடைந்து துர்க்



கந்தமாயிருந்தது. ஓர் இருப்புச் சங்கிலியின் ஒரு நுனியில் இருவர் காலையும் மாட்டி, மறு நுனியை அறை நடுவிலிருந்த ஒரு தூணில் கட்டினார்கள். இவ்வித நிலைமையில் சரீரம் படும் வாதை இவ்வளவென்று சொல்லத் தேவையில்லை! ஒருவர் காலை சற்றே அசைத்தால், மற்றவர் காலும் அகத்தியம் அசைவுபடும். ஒருவர் ஓர் அடி பெயர்த்துவைத்தால், மற்றவரும் அகத்தியம் அவரோடு இழுபட வேண்டும். கைதிகள் இருவரும் இரவெல்லாம் நித்திரையின்றி, சங்கிலி கயிறுகளால் கட்டுண்ட நாதன் சாயலாய் வாதை அநுபவிக்கும் பாக்கியம் கிடைத்ததே என்று மனமகிழ்ந்து, சர்வேசுரனை ஸ்துதித்து தோத்தரித்துக்கொண்டிருந்தார்கள். மறுநாள் அவர் சிறையில் அடைபட்ட செய்தி கேட்டு, வெகுபேர் அவரைப் பார்க்கவந்து, படுக்கை, போசனம் முதலியவைகள் கொடுத்து வெகு உபசாரம் செய்தார்கள். அல்காலா சிறைக் கூடத்தில் செய்ததுபோல், இங்கும் வெகு ஞான நன்மை செய்ய அவருக்கு வழி கிடைத்தது.

அவர்களை சிறையில் வைக்கும்படி கட்டளை கொடுத்த வேத விசாரணைக் கர்த்தா அவர்களை தனித்தனியே வினவி சோதித்தார். இஞ்ஞாசியார் தாம் உண்டாக்கின ஞான முயற்சிகள் என்னும் நூலையும், மற்றும் தாம் எழுதியவைகளையும் பரிசோதிக்கும்படி அதிகாரி கையில் மனப்பூரணமாய் ஒப்புவித்தார். சிலநாள் சென்றபின் மேற்சொன்ன

வேத விசாரணைக் கர்த்தாவும், சாஸ்திரிகளான வேறு மூன்று நடுவர்களும் இஞ்ஞாசியாரைத் தங்கள்முன் வரவழைத்தார்கள். இந்நாலுபேரும் ஞான முயற்சிகளை ஆராய்ந்து பார்த்திருந்தார்கள். நாலுபேரும் கைதியிடத்தில் பல கேள்விகள் கேட்டார்கள். ஞான முயற்சிகளைப்பற்றிமாத்திரமல்ல, அர்ச். தமதிரித்துவம், திவ்விய சுதனுடைய மனுஷாவதாரம், தேவநற்கருணை முதலிய பரம இரகசியங்களை வியாக்கியானித்து சொல்லும்படியும் கேட்டார்கள். இஞ்ஞாசியார் தாம் சாஸ்திரம் அவ்வளவாய்ப் படிக்கவில்லையென்றும், இது விஷயங்களில் சாஸ்திரிகள் போதிப்பது தமக்குத் தெரியாதென்றும், ஆனால் சகலத்திலும் தாம் சத்திய திருச்சபையின் போதனைக்கு முற்றும் பணிந்திருப்பதாகவும் சொல்லி பரம இரகசியங்களை ஒவ்வொன்றாய் விரித்துரைக்க ஆரம்பித்தார். மன்ரேசாவில் சத்திய சுரூபியாகிய இஸ்பிரீத்து சாந்துவின் அற்புத பிரகாசத்தால் இப்பரம இரகசியங்களை உள்ளத்தில் உய்த்துணர்ந்த இஞ்ஞாசியார், தற்சமயம் எவ்விதம் பேசியிருந்திருப்பாரென்று உத்தேசித்துக்கொள்ளலாம். நடுவர்களெல்லாம் ஆச்சரிய பிரமிப்படைந்தார்கள். அவர் சொன்னவைகளெல்லாம் சத்திய திருச்சபையின் போதனைக்கு அணுவளவும் பேதகமின்றி, ஆதியோடந்தம் சரியொத்திருந்தது. எதிலாகிலும் அவர் வாக்கை ஆட்சேபித்துப் பேச அவர்களுக்கு வகையில்லாமற்



போயிற்று. அதன்பின் வேத சட்டதிட்டங்களைப்
பற்றி வெகு நுட்பமான ஓர் கேள்வி கேட்டு,
அதற்கு விடைகொடுக்கும்படி கட்டாயம்பண்ணி
னார்கள். அதற்கும் தகுந்த பதிலுரைத்தார்.
பின்பு பத்துக்கற்பனைகளில் முதல் கற்பனையைப்
பற்றி, ஜனங்களிடத்தில் சாதாரணமாய் சம்பா
ஷித்துவருவதுபோல், ஞான சம்பாஷணை செய்யும்
படி கேட்டார்கள். அதுவும் சரியாய்ச் செய்தார்.

ஒருவிஷயத்தைப்பற்றி மாத்திரம் நடுவர்கள்
ஆட்சேபிக்கத் தலைப்பட்டார்கள். அதாவது: நினை
வினால் கட்டிக்கொண்ட ஓர் பாவம் எப்போது
சாவானபாவமாயிருக்கும், எப்போது அற்பப்பாவ
மாயிருக்கும் என்று பகுத்தறிவதற்கு உதவியாக,
இஞ்ஞாசியார் தமது ஞான முயற்சிகளில் உசிதமான
ஒரு ஒழுங்கு எழுதிக்கொடுத்திருக்கிறார். இன்னும்
வேதசாஸ்திரம் நன்றாய்க் கற்றறியாதவர் மனச்
சாக்ஷிக்கடுத்த விஷயத்தை இவ்விதம் நிர்ணயித்
தெழுதியது சரியல்லவென்றார்கள். அதற்கு இஞ்
ஞாசியார்: "நான் அதில் சொல்லியிருப்பது ஒன்
றில் உண்மையாயிருக்கவேண்டும், அல்லது தப்பித
மாயிருக்கவேண்டும். தப்பிதமானால், அது தப்பித
மென்று தீர்த்து சொல்லுங்கள்" என்று நடுவர்
களையே வினவிக்கேட்டார். அது தப்பிதமென்று
சொல்ல அவர்கள் துணியவில்லை.—அவர்களும்
துணியவில்லை, எக்காலத்திலும் எவரும் துணிய
வில்லை!

இஞ்ஞாசியாருடைய நடக்கையிலும் போதனையிலும் ஆட்சேபனைக்கிடமானது ஒன்றுமில்லையென்று இந்நவேர்கள்முன் பட்டப்பகலிலும் வெட்டவெளியாய் விளங்கியது. என்றாலும் மாசற்றவரை பழையபடி சிறையறையில் அடைத்தார்கள். முன்சொன்ன கொடுஞ் சங்கிலியை முதலாய் எடுத்துவிடவில்லை. “நீங்கள் இவன்மேலே சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் இவனிடத்தில் காணவில்லை....ஆதலால் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன்” என்று மாசற்ற திவ்விய சுதன் மேல், மதிமயங்கிய பிலாத்துஸ் செய்த தீர்ப்புப் போலாயிற்று.

பிற்காலத்தில் கர்தினாலான பிரான்சிஸ்கு மென்டோசா என்பவர் அர்ச்சியசிஷ்டவரை சந்தித்து, அவர் இருந்த ஸ்திதியைக்கண்டு மனமிரங்கி, இப்படி சிறையிலிருப்பது உமக்கு மிகவும் வருத்தமாயிருக்க வேண்டுமேயென்று அநுதாபப்பட்டார். அதற்கு இஞ்ஞாசியார்: “சர்வேசுரன்மேலுள்ள சிநேகத்தின் நிமித்தம் சங்கிலிகளால் கட்டப்பட எனக்கிருக்கும் ஆவலைத் தீர்க்க, இந்த சலமான்கா நகரிலுள்ள கைவிலங்கு கால்விலங்கு சங்கிலிகளெல்லாம கொண்டுவந்தாலும் போதாது” என்றார். சில கன்னியாஸ்திரிகள் அவருக்கு கடிதம் எழுதி, “நீர் இவ்வளவு துன்பப்படுவதைப்பற்றி எங்களுக்கு வெகு பரிதாபமாயிருக்கிறது. உம்மை அநீதமாய் நிந்தைப்படுத்தின துஷ்டர்கள்மேல்



நாங்கள் மிகவும் கோபமாயிருக்கிறோம்” என்றார்கள். “கிறீஸ்துநாதருடைய சிலுவையில் மறைந்திருக்கும் அளவற்ற பொக்கிஷங்களை நீங்கள் மூடலாய் இவ்வளவு நேரம் அறியாதிருப்பதைப்பற்றி ஆச்சரியப்படுகிறேன்” என்று அர்ச்சியசிஷ்டவர் அவர்களுக்கு பதிலெழுதினார்.

இருபத்திரண்டுநாள் சிறையிலிருந்தபின், கடைசியாய் தீர்ப்பு சொல்லப்பட்டது. இத்தீர்ப்பினால் இஞ்ஞாசியாரும் அவர் துணைவரும் தங்கள் ஜீவியத்திலும் போதனையிலும் குற்றமற்றவர்களென்று விடுதலையாக்கப்பட்டார்கள். ஆயினும் அல்காலாவில் சம்பவித்ததுபோல் இங்கும் நடுவர்கள் செய்த ஒரு நிபந்தனையால், பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காகத் தாராளமாய் உழைத்துவருவது அசாத்தியமாயிருந்தது. இதை நன்றாய் உணர்ந்த இஞ்ஞாசியார் சிறைக்கூடத்தைவிட்டு வெளியே வந்ததும், சர்வேசுரன் கையில் எல்லாம் ஒப்படைத்துவிட்டு, இனி தான் செய்யவேண்டுவதென்னவென்று ஆலோசிக்கலானார். ஆதியிலிருந்த தேவபக்தி தேவசிநேகம் தளர்ந்து மெலிந்து, கட்டுப்பாடும் நல்லொழுக்கமும் சீர்குலைந்திருக்கும் சன்னியாச சபை எதையாகிலும் சீர்திருத்திப் பூர்வீக நன்னிலைமைக்குக் கொண்டுவருவதென்றால், மகாமகாப் பிரயாசையான காரியம். அப்படி அதை சீர்திருத்த ஏற்படுபவர் சாதாரணமாய் அநேகரால் அநீதமாய் விரோதித்து நிந்திக்கப்பட்டு, பலவித கஷ்ட

நெருக்கிடைக்கெல்லாம் ஆளாகவேண்டியிருக்கும். இது விஷயத்தை இஞ்ஞாசியார் நன்றாய் அறிந்திருந்தார். அல்காலாவில் கன்னியர்மடத்தை சீர்திருத்தியபோது இதை சுவைபார்த்துமிருந்தார். சிலுவையில் மரித்த திவ்விய சுதன்மேலுள்ள அத்தியந்த நேசத்தால், நிந்தை நிர்ப்பந்தங்களை ஆவலாய்த் தேடிக்கொண்டிருந்தார். இவைகள் தமக்கு மிகுதியாய்க் கிடைக்குமென்னும் நம்பிக்கையால், பூர்வீக ஒழுக்கம் தளர்ந்திருக்கும் சன்னியாச சபை ஒன்றில் உட்பட்டு, அதை சீர்திருத்துவதில் பிரயத்தனப்பட்டுழைக்க ஆசித்தார். ஆயினும் இவ்விஷயத்தில் தேவசித்தம் யாதென்று அவருக்கு இன்னும் தெளிவாய் விளங்கவில்லை. ஒரு விஷயம் மாத்திரம் அவருக்குத் தற்சமயம் தெளிவாயிருந்தது. அதாவது: நடுவர்கள் விதித்த நிபந்தனையின் நிமித்தம், சலமான்காவில் ஆத்துமாக்களுக்கு தாராளமாய் நன்மைசெய்ய வழியில்லாமையால், அவ்விடத்தைவிட்டு அகன்றுபோகவேண்டுமென்பதே.

மேலும் இஸ்பாஞ்ஞியதேசத்தில் இதுகாலம் தாம் பரீட்சித்தறிந்தவைகளைக் கொண்டு, சர்வேசுரன் தமக்களித்திருக்கும் எண்ணிறந்த விசேஷ வரப்பிரசாதங்களை அவருடைய திவ்விய மகத்துவத்தின் அதிமிக தோத்திரத்துக்காக பிரயோகிப்பதற்கு தேவதிருவுளம் தெரிந்துகொண்ட இடம் இஸ்பாஞ்ஞிய தேசத்திலல்ல, வேறு இராஜ்ஜியத்திலென்று



நன்குணர்ந்துகொண்டார். பிராஞ்சுதேசத்திலுள்ள பாரீஸ் பட்டணத்தின் பேர்போன கலாசாலை பல காரணங்களைப்பற்றி அவர் கருத்துக்கிசைந்த இடமாகத் தோன்றியது. ஆனதால் இஸ்பாஞ்ஞியதேசத்தின் எல்லையைக் கடந்து பாரீஸ் பட்டணத்துக்குப்போகத் தீர்மானித்து, சிலதினத்துக்குள் கால்நடையாய்ப் பிரயாணப்பட்டார். அவருடைய நண்பர்கள் அவர் அங்கு போகாதபடி தடுக்க எவ்வளவுதான் பிரயத்தனம் செய்தும், அவர்களால் கூடவில்லை.

இதுகாலம் இஞ்ஞாசியாருடைய துணைவர்களாயிருந்த கலிஸ்தோவும், வேறு மூவரும் இஸ்பாஞ்ஞிய தேசத்திலேயே நின்றுவிட்டார்கள். இவர்கள் திரும்ப இஞ்ஞாசியாரைத் தேடினதில்லை. சில காலம் வெகு ஆவலாய் புண்ணிய சாங்கோபாங்க நெறியை நாடியிருந்த கலிஸ்தோ, அதைக் கைநெகிழவிட்டு, பொருளாசையால் இருதரம் அமெரிக்காவுக்குப்போய் வெகு தனவானாய், ஆனால் தெய்வபக்தி இழந்தவராய் சலமான்காவுக்கு திரும்பிவந்தார். மற்றை மூவர்களில் ஆர்த்தியாகா என்பவர் பிற்காலத்தில் மேற்றிராணியாராக அபிஷேகம் பண்ணப்பட்டு அமெரிக்கா கண்டத்துக்கு அனுப்பப்பட்டார். வியாதியாய் மெக்சிக்கோ பட்டணத்தில் தங்கியிருந்தபோது, ஊழியர்களுடைய அஜாக்கிரதையினால் நஞ்சுண்டு மரணமடைந்தார். இவர் அர்ச். இஞ்ஞாசியாருடைய துணைவராக கிலிற்

காதேபோனாலும், அவர்மீது எப்போதும் வெகு வணக்கமுடையவராயிருந்தார். ஜான் என்பவர் சன்னியாச சபையில் பிரவேசித்து நன்மரண மடைந்தார். மூன்றாவதாகிய கேசரீஸ் என்பவருடைய சீவியம் வெகு நிர்ப்பாக்கியம்.

ஆனால் தமது தாசனை கைபிடித்து நடத்திய தேவ இரக்கம் மேற்சொன்னவர்களுக்குப் பதிலாய் வேறு துணைவர்களைப் பாரீஸ்நகரில் தெரிந்தெடுக்க திருவுளமாயிற்று. இவர்களோ ஜீவபரியந்தம் அவருக்குப் பிரமாணிக்கமாயிருந்தார்கள்.

## 10-ம் அதிகாரம்.

பாரீஸ்நகர்-கலாசாலை—வீரத்தன்மையான பிறர்சிநேகக் கிரியை—பற்பல துன்பங்கள்—அர்ச்சியசிஷ்டவர் தம் தமயனுக்கு எழுதிய நிருபம்—தேவ சாஸ்திரத்தில் அவர் வாசித் தேர்ந்தவன்—பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காக அர்ச்சியசிஷ்டவர் பிரயோகித்துவந்த சகிர்த உபாயங்கள்.

### 1528—1532.

1528-ம் வருஷம், பெப்ரவரி-மீ, அர்ச். இஞ்ஞாசியார் பாரீஸ்நகர் வந்து சேர்ந்தார்.

பற்பல வகைக் கல்விக்கலைக்கியானங்களுக்கென்று கட்டப்பட்டிருந்த ஐம்பது பிரதான கட்டிடங்களும், தூரத்திலிருந்து வரும் மாணாக்கர்கள் தங்கியிருப்பதற்காக ஏற்பட்ட வேறுசில கட்டிடங்களும், தோட்டந்தரவுகளும், மாணாக்கர்கள் உலாவவும் தேகப்பயிற்சி செய்யவும் நியமிக்கப்பட்ட விஸ்தாரமான மைதானங்களும், மற்றும் நானாவித ஸ்தலங்களும் அமையப்பெற்ற பாரீஸ்நகர் கலாசாலை, அதுவே ஒரு பெரும் பட்டணம் போலிருந்தது. அக்காலத்தில் அந்நகரின் பேர்பாதி இக்கலாசாலையேயென ஒரு வித்துவான் எழுதியிருக்கிறார். பன்னீராயிரம் (12000) முதல்

பதினாறாயிரம் (16000) மாணாக்கர் இக்கலாசாலையில் கல்வி கற்றுவந்தனர். இலக்கண இலக்கிய முதல் எவ்வித கல்வியும் சாஸ்திரமும் இங்கு கற்பிக்கப்பட்டு வந்ததுமன்றி, சாஸ்திரங்கள் அனைத்துக்கும் இராக்கினியென முடி சூட்டப்பட்டிருக்கும் **தேவசாஸ்திரமும்**, தேவசாஸ்திரத்துக்கு தொண்டுபுரியும் அடியாள் என்றழைக்கப்படும் **தத்துவசாஸ்திரமும்** பிரதானமாய் அபிமானிக்கப்பட்டு வந்தன. ஆயினும் உலகத்தின் பற்பல பாகங்களிலிருந்து வாலிபர்கள் திரளாய் மொய்த்துக் கூடிவசித்த இக்கலாசாலையில், தகுந்த கட்டுப்பாடும் கண்காணிப்பும் இல்லாதிருந்தமையால், மாணாக்கர்களுள் சிந்தனையற்று நெறி பிசகிய நடத்தைகள் அநேகமிருந்தன. லுத்தேர், கால்வீன் முதலியவர்கள் தூவிய பதித விஷமும் சிலர் நெஞ்சத்தில் பதுங்கி மறைந்திருந்து, சமயம்பார்த்து பலரை வஞ்சித்துக் கெடுத்துவந்தது. தேவதோத்திரத்துக்கும், தங்கள் ஆத்தும இரட்சணியத்துக்கும் அடுத்த விஷயங்களில் கருத்தும் கரிசனமும் அவர்களுக்குள் வெகு குறைவாயிருந்தது. இஞ்ஞானியாருக்கு சாஸ்திரம் புகட்டிய இக்கலாசாலை, அவர் வழியாகவும், பிற்காலத்தில் அவருடைய ஞானப் புதல்வர்கள் வழியாகவும் சீர்திருத்தமும் சுகிர்தமும் பெற சர்வேசுரன் திருவுளமானார்.

இஞ்ஞானியார் பாரீஸ்நகரில் சேர்ந்ததும், தமது தேசத்தவர்களான சில மாணாக்கர்கள் அமர்ந்



திருந்த விடுதியில் தங்கி, கலாசாலையில் கல்வி கற்றுவந்தார். தாம் பாரீஸில் க்ஷேமமாய் வந்து சேர்ந்து, கலாசாலையில் படித்துவரும் விபரத்தை பார்சலோனாவிலிருந்த அகினேஸ் பாஸ்காலம் மாளுக்குக் கடிதமூலமாய்த் தெரிவித்தார்.

## சேசு (JHUS)

நமது கர்த்தர் கிறீஸ்துநாதருடைய உத்தம சமாதானம் தங்கள் ஆத்துமத்தில் தங்கி வாசம் செய்வதாக!

நமது கர்த்தராகிய சர்வேசுரனை முன்னிட்டு தாங்கள் எப்பொழுதும் என் மட்டில் காண்பித்த அன்பு பட்சத்தையும், செய்துவந்த உபகாரங்களையும் நினைத்து, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு நான் செய்த பிரயாணத்தைப்பற்றித் தங்களுக்கு எழுதுவது என் கடமையென்று எண்ணுகிறேன். கிருபாநமதாண்டவராகிய சர்வேசுரனுடைய கடாட்சத்தால், வழியில் மழைமாரித் துன்பமின்றி, பெப்ரவரி-மீ இரண்டாந்தேதி இந்தப் பாரீஸ் பட்டணத்தில் க்ஷேமமாய் வந்துசேர்ந்தேன் * * * ஜாணிடத்தில் நான் அவனைப்பற்றி அருமையாய் விசாரித்ததாகச் சொல்லவும். தன்னைப் பெற்றவளுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும், அவன் கடன் திருநாட்களைப் பக்தியாய் அநுசரித்துவரவும் வேண்டுமென்று சொல்லவும். அப்படி செய்வானாகில்

பூலோகத்திலும் பரலோகத்திலும் பாக்கியசாலியாயிருப்பான். * * * * *

பாரீஸ், 1528-ம் ௵ மார்ச்சு-௴ 3-ம் ௳

நன்மைத்தனத்தில் வறிஞனை இனிகோ.

(YNIGO)

தகுந்த அஸ்திவாரமின்றி உயர்ந்த சாஸ்திரங்களைப் படிக்க ஏற்பட்டதாலும், ஒரு பொருளை நன்றாய்க் கற்றறியுமுன், வகுப்புத்தொகுப்பின்றி பல பொருட்கள்மேல் புத்தியை செலுத்தி எல்லாம் ஒரே காலத்தில் படித்துத் தீர்க்க முயன்றதாலும், தாம் இது காலம் படிப்பில் அவ்வளவாய் விர்த்திப் படையவில்லையென்று கண்டுகொண்டார். ஆனதால் எல்லாம் திரும்பத் துவக்கிப் படிக்கத் தீர்மானித்து, மறுபடியும் சிறுவர்கள் பாடசாலையில் சேர்ந்து, சிலகாலம் அவர்களோடு இலக்கண இலக்கியம் கற்றுவந்தார்.

இவ்விடத்திலும், உபத்திரவம் அவரை அணுகிவராதாமதிக்கவில்லை. பார்சலோனாவிலிருந்து அவருடைய உபகாரிகள் அவருடைய செலவுக்காக கொஞ்சம் தொகை அனுப்பியிருந்தார்கள். இத்தொகையை தம்மோடு வசித்த தம் தேசத்தான் ஒருவனிடத்தில் நம்பிக்கையாகக் கொடுத்து வைத்திருந்தார். அவனோ அதைத் தன் மனம்போல் செலவுசெய்துவிட்டு, உத்தரிக்க வகையற்றவனானான். இஞ்ஞாசியார் கையில் வேறு பணமில்லாது



தால் பிச்சையெடுத்து சீவிக்கவும், தாம் அமர்ந்திருந்த விடுதியைவிட்டு கலாசாலைக்குத் தலையிலிருந்த ஓர் நோயாளிகள் சாலையில் புகலிடந்தேடவும் அவசியமாயிற்று. இவ்வாறு பிச்சையெடுப்பதில் வெகுநேரம் சென்றது. மேலும், "பொழுது விடியுமுன் வெளியே போகப்படாது, அந்திகால மணி அடிக்குமுன் ஸ்தலம் வந்து சேரவேண்டும்" என்று அந்நோயாளிகள் சாலையில் ஒரு சட்டமிருந்தது. இதனால் படிப்புக்கு வெகு விக்கினம் நேரிட்டது. இதற்கென்ன செய்யலாமென்று இஞ்ஞாசியார் யோசித்தார். எளிய மாணாக்கர்களுள் அநேகர் கலாசாலை ஆசிரியர்களுக்கு குற்றேவல்புரியும் ஊழியர்களாக அமர்ந்து அவர்களுடைய சம்ரட்சணைக்குள்ளிருந்து படித்துவந்தார்கள். இவ்வித சீவியம் சாஸ்திரப் பயிற்சிக்கும், தாழ்ச்சி கீழ்ப்படிதல் முதலிய புண்ணிய பயிற்சிக்கும் அநுகூலமென்றுகண்டு, தாமும் யாதாமொரு ஆசிரியருக்கு ஊழியனாக ஆசித்தார். தனக்கு ஏவலிடும் எஜமானை சேசுக்கிறீஸ்துநாதராகவும், தன் உடன் மாணவர்களை அப்போஸ்தலர்களாகவும் பாவித்து நடப்பேனென்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால் அவர் எவ்வளவுதான் பிரயாசையெடுத்த போதிலும் ஒருவரும் அவரை ஊழியனாக ஏற்றுக்கொள்ள உடன்படவில்லை. வேறுவழியில்லாமையால் சர்வேசுரனை நம்பி, வேனிற்கால விடுமுறை வந்ததும் பெல்ஜியம் (Belgium) என்னும் இராஜ

யத்துக்குப்போனார். அங்கு வசித்த தமது தேசத்து வர்த்தகர்களிடத்தில் யாசகம்செய்து, அந்தப் பணத்தைக்கொண்டு மறு விடுமுறைமட்டும் காலக்ஷேபம் செய்துவந்தார். இருவருஷம் இப்படிசெய்து மூன்றாவது வருஷம் இங்கிலாந்து தேசத்துக்குப்போய் யாசகம் செய்தார்.

இதுகாலமெல்லாம் தாம் அநுசரித்துவந்த கடுந்தவ முயற்சிகளையும், ஆத்துமாக்களுக்கு உதவி செய்வதையும் விட்டுவிடவில்லை. முன்னிலும் அதிக ஊக்கமாகவே இவைகளை நடத்தி வந்தார். வெகு புத்தி சாமார்த்தியமுள்ள தே காஸ்த்ரோ (De Castro) என்பவரும், வேறிருவரும், இஞ்ஞாசியாருடைய ஞான முயற்சிகளைச் செய்து, தரித்திரராய் சேசுக்கிறீஸ்துநாதரைப் பின்செல்லத் தீர்மானித்தார்கள். புஸ்தகமுதற்கொண்டு தங்களுக்கிருந்த யாவையும் ஏழைகளுக்களித்துவிட்டு, இஞ்ஞாசியாரோடுகூட நோயாளிகள் சாலையில் அடைக்லம் புகுந்தார்கள். இதைப்பற்றி கலாசாலை எங்கும் பெரும் பேச்சாயிற்று. இம்மூவரும் இஸ்பாஞியர்களானதால், அங்கிருந்த மற்ற இஸ்பாஞியர்களுக்கு இது சற்றும் பொருந்தவில்லை. இவர்கள் செய்தது இவர்களுடைய குடும்பத்துக்கும், தங்களுக்கும், தங்கள் தேசத்துக்கும் ஈனமென்றெண்ணி, இவர்களுடைய மனதை மாற்ற பல பிரயத்தனம் செய்தார்கள். செய்த பிரயத்தனமெல்லாம் வியர்த்தமாய்ப் போனதால், சிலர் ஆயுதந்தரித்து



இவர்களைப் பலவந்தமாய் இழுத்துக்கொண்டு போனார்கள். தே காஸ்த்ரோ என்பவர் சில வருஷங்களுக்குப்பின் கர்த்தூசியர் சபையில் பிரவேசித்தார்.

முன் இஞ்ஞாசியாரோடு அறிமுகமாயிருந்த ஒருவர், அவர் யாசகம்செய்து ஜீவித்துவருவது லொயோலா கோத்திரத்தின் கீர்த்திக்கு ஈனமென்றும், ஆனதால் அவர் அப்படி செய்வது அநீதமென்றும் முறையிட்டார். "உலகம் என்ன சொல்லும்! இவருடைய பந்துக்களுக்கு இவரை சம்ரட்சணைசெய்ய ஐவேசற்றுபோச்சுது! எனப் பழித்துச்சொல்லாதா" என்று வாக்குவாதம் செய்தார். இஞ்ஞாசியார் அதை மறுத்துப் பல நியாயங்களை யெடுத்துச் சொன்னார். அவைகளை அவர் ஏற்றுக்கொள்ளவில்லையென்று கண்டு, வேறோர் உபாயம் தேடினார். அதாவது: "கிறீஸ்துநாதர்மேலுள்ள நேசத்தால் உலகத்தை வெறுத்துவிட்ட ஓர் பிரபு மகன் இடத்துக்கிடம் பிச்சை இரந்து திரிந்தால், அது அவன் கோத்திரத்துக்கு அபகீர்த்தியாயிருக்குமா?" என மனச்சாக்ஷி சம்பந்தமான கேள்வியாக தேவ சாஸ்திரத்தில் தேர்ந்த சில சாஸ்திரிகளிடத்தில் கேட்டார். அவர்களெல்லாம் அப்படிச் செய்வதால் யாதொரு அபகீர்த்தியில்லை என்று ஒருவாய் ஒரு மொழியாய் பதிலளித்தார்கள்.

மேற்சொன்ன தே காஸ்த்ரோ முதலியவர்
களும், வேறநேகரும் இகலோக நன்மைகளில்
பற்றுதலிழந்து, புண்ணிய சாங்கோபாங்கநெறி
யில் பிரவேசித்ததற்கு இஞ்ஞாசியார் காரணமா
யிருந்ததால், அநேகர் இருதயங்களில் அவர்மீது
கோபமும் குரோதமும் கொதித்துப் பொங்கிக்
கொண்டிருந்தது. அவரைப்பற்றி அநீதமான
முறைப்பாடுகளும், அபாண்டமான கட்டுக்கதை
களும் எங்கும் மலிந்திருந்தன. அர்ச்சியசிஷ்டவரு
டைய இருதயமோவென்றால், பிறர் சிநேகம் மிகுந்த
தாய், தனக்கு தின்மை செய்பவர்களுக்கு நன்மை
செய்யவே ஆவலுற்றிருந்தது.

அவருடைய பணமெல்லாம் செலவுசெய்து,
அதைத் திரும்ப செலுத்தாமற்போன வாலிபன்
ரூவன்பட்டணத்தில் வியாதியாய் விழுந்து, யாரும்
உதவியின்றி வெகு அவஸ்தைப்படுவதாகக் கேள்வி
யுற்றார். உடனே அவனுக்கு உதவியாய்ப்போகத்
தீவிரித்தார். வாலிபனுடைய ஆத்துமநன்மைக்காக
தேவகிருபையை அடையும்படி, தபசாகக் காலில்
பாதரட்சையின்றி நடந்துபோகவும், ரூவன்பட்ட
ணம்போய்ச் சேருமட்டும் அன்னபானம் ஒன்றுந்
தொடாமல் சுத்த உபவாசமாயிருக்கவும் ஆசித்
தார். ஆனால் இவ்விதம் செய்வது சர்வேசுரனை
சோதிக்கிறதாயிருக்குமோவெனும் சந்தேகத்தால்
வெகுவாய்க் கிலேசப்பட்டார். மறுநாள் காலமே
எழுந்திருந்தபோது மேற்சொன்ன சந்தேகம்



திரும்பிவர, கிலேச மிகுதியால் அவர் தேகம் நடுக்
கங்கொண்டது. கிலேசப்பட்டுக்கொண்டே சூரி
யன் உதயமாகுமுன் பாரீஸைவிட்டுப்புறப்பட்டார்.
சுமார் பத்துமயில் தூரம் சென்றதும், மேற்சொன்ன
கிலேசம் சன்னம் சன்னமாய் நீங்கி அவர் ஆத்துமம்
ஞான அமரிக்கையும் உற்சாகமும் அடைந்தது.
ஞான மனோகரமிகுதியால் வழி நெடுக சர்வேசுர
னோடு சத்தமாய் சல்லாபம் செய்துகொண்டு
போனார். இரு இராத்திரி வழியில் தங்கி மூன்றாம்
நாள் ரூவன் போய்ச்சேர்ந்தார். இந்நாட்களெல்
லாம் தாம் செய்த தீர்மானப்படி சுத்த உபவாச
மாகவேயிருந்தார். வியாதிக்காரனுக்கு வேண்டிய
ஒத்தாசையெல்லாம் செய்துவிட்டு உடனே பாரீ
ஸுக்குத் திரும்பினார்.

வீரத்தன்மையான பிறர் நேசத்தால் தூண்டப்
பட்டு, மேற்சொன்னபடி இஞ்ஞாசியார் பாரீஸை
விட்டுப் புறப்பட்டுப்போனார். பாரீஸில் அவரை
விரோதித்திருந்தவர்களோ, இதுதான் சமய
மென்று அவருக்குத் தீங்கிழைக்க வழிதேடினார்
கள். இந்த இஞ்ஞாசியார் பில்லி சூனியத்தால்
மனிதர் புத்தியை மயக்குகிறவர், அபத்தங்களைப்
போதிக்கிறவர், நீதிவிசாரணைக்கும் தண்டனைக்கும்
பயந்து ஒழிந்தோடிப்போய்விட்டார் என்றிவ்வாறு
கட்டுரையாக வேத விசாரணைக் கர்த்தாக்களிடத்
தில் பிராது பண்ணினார்கள். அவர்களும் அவரைப்
பற்றி விசாரணைசெய்ய ஏற்பட்டார்கள். பாரீஸில்

சேர்ந்ததும், இஞ்ஞாசியார் இவைகளைப்பற்றி கேள்வியுற்று, தாமதியாமல் நேராய் விசாரணைக் கர்த்தாக்களின் தலைவரிடம் சென்று, தன் படிப்புக்கு விக்கினம் நேரிடாதிருக்கும்படி விசாரணையை சீக்கிரம் முடிக்கும்படி பிரார்த்தித்தார். அர்ச்சியசிஷ்டவரைக் கண்ணுற்றதும், அதிகாரிக்கு அவர்மீதிருந்த ஐயமெல்லாம் தீர்ந்துபோயிற்று. அவருக்கு விரோதமாய் சொல்லப்பட்டவைகளில் ஒன்றும் உண்மையல்லவென்றுணர்ந்து, துவக்கியிருந்த விசாரணையை முதலாய் நிறுத்திவிட்டார்.

சுமார் ஒரு வருஷகாலம் இலக்கண முதலியவைகள் கற்றபின், 1529-ம் ௵ அக்டோபர்-௴ தத்துவ சாஸ்திரம் படிக்க ஆரம்பித்தார். முன் பார்சலோனாவில் சம்பவித்ததுபோல், இங்கும் சாஸ்திரப்பயிற்சி செய்யும் நேரத்தில் திடீரென்று திரளாய் மொய்த்தெழும்பிய பரலோக பேரின்பகரமான ஞான சிந்தனை ஞான பற்றுதல்களால், கல்விப்பயிற்சிக்கு வெகு விக்கினம் நேரிட்டது. முன்போலவே இத்தடவையும் இவ்வகை சோதனையை ஜெயித்தார்.

கருத்தெல்லாம் ஊன்றி தத்துவ சாஸ்திரம் படிக்க வேண்டியிருந்தமையால், முன்போல் ஆத்துமாக்களுக்கு நன்மைசெய்வதில் வெகுநேரம் முயற்சியாயிருப்பது சாத்தியப்படவில்லை. ஆயினும் தம்மோடு அன்னியோன்னியமாயிருந்த சிலரு



டைய புண்ணிய வர்த்திப்பைப்பற்றி வெகு கவலையெடுத்துவந்தார். மற்ற மாணாக்கர்களோடும் சமயம் கிடைக்கும்போது ஞானக்காரியங்களைப் பற்றி சம்பாஷித்து வந்தார். இதனால் மாணாக்கர்களுக்குள் தேவபக்தி நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. அநேகர் தேவதிரவிய அநுமானங்களை அடிக்கடி பெற்றுவந்ததுமன்றி, ஜெபத்தில் முன்னிலும் அதிகநேரம் செலுத்திவந்தார்கள். சாஸ்திரம் கற்பித்துவந்த ஓர் ஆசிரியருக்கு இது பொருந்தவில்லை. இப்பக்திக் கிருத்தியங்கள் சாஸ்திர அபிவிருத்திக்கு இடையூறென்றெண்ணினார். இதற்கெல்லாம் காரணம் இஞ்ஞாசியார்தானென்று, அவர்மீது வெகு மனத்தாங்கல் கொண்டார். என்னசொல்லியும் இஞ்ஞாசியார் அசையாதிருப்பதைக்கண்டு, அவ்வித்தியாசாலையின் தலைவரிடத்தில்போய் இஞ்ஞாசியாரேதுவால் மாணாக்கர்கள் சாஸ்திரப் பயிற்சியில் அஜாக்கிரதையாகி வருகிறார்களாக்குமென்று முறையிட்டார். கலாசாலையில் பொது நன்மைக்கு இடறலான பெருங்குற்றம் செய்பவர்களுக்கு பிரசித்தமாய் விதிக்கப்படும் தண்டனையை இஞ்ஞாசியாருக்கும் விதிப்பதென்று தீர்மானித்தார்கள். அத்தண்டனையின் தன்மையாவது: பகற்போசனமானதும், ஒரு மணி அடிக்கப்படும். உடனே, உபாத்திமார் மாணாக்கர்களனைவரும் குறிக்கப்பட்ட ஓர் ஸ்தலத்தில் கூடுவார்கள். உபாத்திமார் இருவரிசையாக நின்று குற்றவாளி

யின் முதுகில் பிரம்பால் அடிப்பார்கள். இத்தண்டனையால் உண்டாகும் நோவு எவ்விதமிருந்தாலும், அதனால் நேரும் அவமானம் இவ்வளவென்று சொல்லத்தேவையில்லை. ஒருதடவை இத்தண்டனைக்குள்ளானவன் திரும்ப அவ்வித்தியாசாலையில் தலைநிமிர்ந்து திரியத்துணியான்.

எல்லாம் இரகசியமாகவே ஏற்பாடாகிவந்தாலும், தாம் இவ்வித தண்டனைக்கு குறிக்கப்பட்டிருப்பதாக இஞ்ஞாசியார் தமது நண்பர் சிலர் மூலமாய் அறியலானார். லொயோலா வீரருடைய நெஞ்சம் ஓர் நிமிஷம் சினந்து துடித்தது. சிங்கத்தகைமையான அவரது சுபாவத்தின் ஜென்ம உரோசமும், கம்பீர மேட்டிமையும் ஓர் நிமிஷம் அவர் உள்ளத்தில் சலனம் செய்தெழும்பியது. ஆனால் மறு நிமிஷம் அதையெல்லாம் ஜெயித்தடக்கி சேசுக்கிறீஸ்துநாதருக்காக வரவிருந்த நிந்தை நிர்ப்பந்தத்தை சந்தோஷமாய் மனதில் ஏற்றுக்கொண்டார். திரும்பத் தலைகாட்டிய தமது சுபாவ மேட்டிமையை அடக்கிவிட்டார். இத்தண்டனையால் தமது பெயர் கெட்டுத் தமக்கு எவ்வளவோ அபகீர்த்தியும் அவமானமும் நேரிடும் என்ற பயத்தையும் உரோசத்தையும் நிராகரித்துவிட்டார். கிறீஸ்துநாதரை இருதயத்தில் தியானித்து, நிந்தைப்பட ஆசித்தார். ஆனால் வேறொரு யோசனை அவர் மனச்சாட்சியிலேயே வந்து குறுக்கிட்டது. தம்மையண்டித் தம்மிடம்



நம்பிக்கை வைத்து ஞான ஜீவியத்தில் பிரவேசித்திருக்கும் அநேகர் இதனால் இடறல்பட்டுப் பின்னிடுவார்களேயென்று யோசித்தார். விரோதிகளின் கருத்தும் இதுவேயன்றோ? ஆகையால் சற்றுநேரம் தேவ சன்னிதியில் ஆலோசித்தார்; திவ்விய இஸ்பிரீத்துவைப் பிரார்த்தித்தார். பிறர் ஆத்துமத்துக்கு இடறலாயிருக்கும் இத்தண்டனையை அகற்ற முயற்சியெடுப்பது தமது கடமையென்று மனச்சாட்சியில் தீர்க்கமாய் உணர்ந்துகொண்டார். ஆனதால் மணி அடிக்குமுன் தலைவரிடத்தில் சற்று தனித்துப்பேசும்படி விடை கேட்டார். இஞ்ஞாசியார் தலைவரிடத்தில் என்ன சொன்னாரோ தெரியாது. ஆனால் அவர் இஞ்ஞாசியாரை அன்போடு கைகொடுத்தழைத்துச் சென்று அவர்முன் முழந்தாளிட்டு தாம் அவருக்குச் செய்ய எத்தனமாயிருந்த நிந்தையை மன்னித்து, தமக்காக சர்வேசுரனை மன்றாடும்படி பிரார்த்தித்தார். அன்றுமுதல், இத்தலைவர் இஞ்ஞாசியார்மீதும், அவர் ஏற்படுத்திய சேசுசபைமீதும் வெகு அன்புள்ளவரானார்,

லொயோலா மாளிகையை விட்டுப் பிரிந்தநாள் முதல் இதுகாலமெல்லாம், இஞ்ஞாசியார் தம் உறவினருக்கு கடிதம் ஒன்றும் எழுதினதில்லையாவென்று கேட்கலாம். 1532-ம் ௵, ஜூன்-௴, அதாவது அவ்விடத்தைவிட்டு நீங்கி பத்துவருஷத்துக்குப்பின்—தம் தமயன் மார்த்தீன் கார்சியா

என்பவருக்கு கடிதம் எழுத ஆரம்பித்ததாக தெரிய
வருகின்றது. ஒரு கடிதத்தில் அவர் சொல்லுவது:

### சேசு (JHS)

“நமதாண்டவராகிய (சேசுக்) கிறீஸ்துவின் வரப்
பிரசாதமும் நேசமும் நம்மோடு என்றென்றைக்கும்
இருப்பதாக! * * * * * *

“இவ்வளவு காலம் நான் தங்களுக்குக் கடிதம்
ஒன்றும் எழுதாதிருந்து, இப்பொழுது எழுதின
தைப்பற்றித் தாங்கள் வெகு சந்தோஷப்படுவதா
கச் சொல்லுகிறீர்கள். இதைப்பற்றி ஆச்சரியப்பட
வேண்டாம். ஆழமாய்ப்பட்ட காயத்தைக் குண
மாக்குவதற்கு முதலில் ஒருவகை மருந்தும், பிறகு
வேறொருவகை மருந்தும், அதன்பின் மூன்றாவது
ஒரு மருந்தும் பிரயோகிக்கிறார்கள். அதுபோல்
நான் தெரிந்துகொண்ட இந்த ஜீவியத்தின் ஆரம்
பத்தில் ஒருவகைப் பத்தியம் காப்பது எனக்கு
அவசியமாயிருந்தது. கொஞ்சகாலம் சென்றபின்,
அவ்வித பத்தியத்தைத் தவிர்த்துவிடுவதால்
மோசமிராது:—மோசமில்லையென்று என் மனதில்
நான் உணர்ந்துகொண்டேன். * * *

இது நிற்க: ஐந்தாறு வருஷங்களுக்குமுன் தங்
களுக்கு நான் பலமுறை எழுதியிருந்திருப்பேன்.
ஆனால் இருவிஷயங்கள் தடையாய் நின்றன.
முதலாவது எனது படிப்பும், பிரபஞ்சக்காரியங்
களிலல்ல (ஞானக் காரியங்களில்) நான் அநுஷ்



டித்து வந்த பற்பல முயற்சிகளுமே ஓயாமல் ஒரு
விக்கினமாயிருந்தன. இரண்டாவது: எனது
பந்துக்களுக்கு நான் எழுதுங் கடிதங்கள் நமதாண்
டவராகிய சர்வேசுரனுடைய ஊழியத்துக்கும்
தோத்திரத்துக்கும் ஏதாகிலும் அனுகூலமாயிருக்கு
மோ? இரத்தப் பாந்தவத்தால் எனக்கு உற்றார்
உறவினராயிருக்கிறவர்கள் ஞானப் பாந்தவத்தாலும்
எனக்கு உறவினராகி நீடூழி நிலைநிற்கும் நித்திய
நன்மைகளை நாடுவதில் நாம் ஒருவருக்
கொருவர் ஒத்தாசையாயிருப்பதற்கு ஏதாகிலும்
பிரயோஜனப்படுமோ?-என்றெண்ணவும் கருதவும்
எனக்கேதுவில்லாதிருந்ததுவே இன்னொரு கார
ணம். நான் இங்கு கூறுவது உண்மை, அதாவது:
எந்த அளவு ஒருவன் நமது கர்த்தராகிய சர்வேசுர
னுடைய ஊழியத்தையும் தோத்திரத்தையும்
நாடித் தேடுகின்றானோ, அந்த அளவுதான் இம்மை
யிலே முதலாய் அவன்மீது எனக்குள்ள நேசம்
அதிகரிக்கின்றது. ஏனெனில், எந்த வஸ்துவை
யானாலும் சர்வேசுரன் நிமித்தம் அதை நேசியாமல்,
அந்த வஸ்துவின் நிமித்தமே அதை நேசிக்கின்றவன்
சர்வேசுரனைத் தன் இருதயத்திலிருந்து நேசிக்கிற
தில்லை. இருபேர்,—ஒருவர் நமக்கு உறமுறைப்
பாத்தியமுடையவர் மற்றவர் அப்படியில்லாதவர்,
—இவ்விருவரும் ஒரே அளவாய் நமது கர்த்தராகிய
சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்துவருகிறார்க
ளென்று வைத்துக்கொள்ளுவோம். இவ்விருவரில்

ஒருவர் நம்மைப் பெற்ற தகப்பன். அப்படியானால் பெற்ற தகப்பனை அப்படித் தகப்பனல்லாதவரைவிட அதிகமாய்க் கருதி சிநேகிக்க வேண்டும். ஒருவர் நமக்கு உபகாரி, உறவினர், நண்பர் அல்லது அறிமுகமானவர். இப்பேர்ப்பட்டவரை அப்படி யாதும் உடந்தையில்லாதவரை விட அதிகமாய் நேசிக்கவேண்டும். இதுவே நமது கர்த்தராகிய சர்வேசுரனுடைய திருச்சித்தம். (தேவ திருவுளத்தால்) தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களை, அவர்களுக்குக் கீழ்ப்பதவியிலிருக்கும் மற்ற அர்ச்சியசிஷ்டவர்களைவிட, அதிகமாய் வந்தித்து வாழ்த்தி நேசித்து வருகிறோம். இதற்குக் காரணமென்ன? அப்போஸ்தலர்கள் நமது கர்த்தராகிய சர்வேசுரனை அவ்வளவு அதிகமதிகமாகச் சேவித்து அதிகமதிகமாக சிநேகித்து வந்ததே காரணம். ஏனெனில் நித்திய சீவியம் அடைவதற்கு அத்தியாவசியமான தேவ இஷ்டப் பிரசாதம் சிநேகம் என்று சொல்லப்படும். நமது கர்த்தராகிய சர்வேசுரனை அவரைப் பற்றியும், மற்ற சகல வஸ்துக்களையும் அவர் நிமித்தம் நாம் சிநேகிப்பதே மேற்சொன்ன சிநேகமாகும். மேலும் தேவ சங்கீதங்களைப் பாடியவர் உரைத்தபடி: சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்டவர்களிடத்திலும் சர்வேசுரனையே நாம் ஸ்துதிக்கவேண்டும். தங்கள் இருதயத்திலும் நமது பந்து மித்திரர்கள் இருதயங்களிலும் உத்தமமான இந்த சிநேகத்தின்



*சம்பூரணமும் நமதாண்டவராகிய சர்வேசுரனுடைய ஊழியத்திலும் தோத்திரத்திலும் கூடுதலான ஊக்கமும் உண்டாகவேண்டுமென்பதே எனது பேராவல், இன்னும்—இவ்வாறு சொல்லப் பொருந்துமானால்—எனது பேராவலிலும் பேராவல். இப்படியிருந்தால், நான் உங்களை அதிகமதிகம் சிநேகிக்கவும் உங்களுக்கு ஊழியம் செய்யவும் தூண்டுதலாயிருக்கும். ஏனெனில் எனது எஜமானுடைய ஊழியர்களுக்கு ஊழியஞ் செய்தல் எனக்கு ஜெய விருதும் மகிமையுமாம். உங்கள் மட்டில் எனக்குள்ள நேர்மையான அன்பும் கபடமற்ற யதார்த்த மனமுமே இவ்விதம் பேசவும் எழுதவும் வற்புறுத்தி விரித்துரைக்கவும் என்னைத் தூண்டுகின்றது. இதுபோலவே மற்றவர்களும், இலௌகீக வீண் பெருமையாலல்ல யதார்த்தமான தாழ்ச்சியால் தூண்டப்பட்டு, எனக்குப் புத்திசொல்லி வற்புறுத்தி என் குறைகளைக் கண்டிக்கவேண்டுமென்று உண்மையாகவே ஆசித்து விரும்புகிறேன்.

“தனக்குப் பிற்காலம் தன் பெயரும் கியாதியும் இந்த மண்ணுலகில் நீடித்திருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், கட்டிடங்கள் கட்டி சுவர்களை நீட்டிப் பெருக்குவதிலும், பூஸ்திதி ஆதாயங்களை அதிகரிப்பதிலுமேயே, மானிடன் தன் வாழ்நாளெல்லாம், இராத்தூக்கமும் கெட்டு, ஏக்கமும் கவலையுமாயிருத்தல்,—இதைப்பற்றி குற்றங்கூற நான் அருகனல்ல,—ஆனாலும், இவ்வித ஜீவியத்தைப்

புகழ்ந்துகொள்ள என்றாற் கூடாது. ஏனெனில் அர்ச். சின்னப்பர் * உபதேசிக்கிறபடி: பிரபஞ்ச வஸ்துக்களை உபயோகித்தும் உபயோகியாதவர்கள்போலவும், அநுபவித்தும் அநுபவியாதவர்கள் போலவும், மனைவியுள்ளவன் மனைவியில்லாதவன் போலவும் இருக்கவேண்டும். ஏனெனில் இவ்வுலகின் கோலம் சீக்கிரம் கடந்துபோகின்றது. தங்கள் ஜீவிய காலத்தில் எப்பொழுதாவது, அல்லது இப்பொழுதாகிலும், இவ்விதமாகத் தங்கள் மனதில் சிந்திக்கும்படி நேர்ந்திருந்தால், நமது கர்த்தராகிய சர்வேசுரனுடைய தோத்திரத்தையும் சிநேகத்தையும் முன்னிட்டுத் தங்களை மன்றாடுகிறேன்: பரலோகத்தில் மகிமையடையவும், நம்மை நடுத்தீர்க்கும் நீதிபராகிய கர்த்தர்முன் மேன்மையும் கியாதியும் சம்பாதிக்கவும் தங்களால் இயன்றமட்டும் எவ்விதத்திலும் பிரயாசப்படுங்கள். கர்த்தரோவெனில் உலக சம்பத்துக்கள் தங்களுக்கு ஏராளமாய்க் கொடுத்திருக்கின்றார். அவைகளைக்கொண்டு நித்திய சம்பத்துக்களைத் தேடிக்கொள்ளுங்கள். தங்கள் மக்களுக்கும் ஊழியர்களுக்கும் உறமுறையோருக்கும் நன்மாதிரியாயிருந்து, நற்புத்தி கற்பியுங்கள். ஒருவனுக்கு நல்லவார்த்தை சொல்லுங்கள். குற்றம் செய்தவனை நீதியாகத் தண்டியுங்கள். ஆயினும் கோபதாபமின்றி, ஒருவனுக்கு உங்கள் வீட்டில் உபசரணை செய்யுங்கள்; வேறொரு

* 1 கொரிந்தியர் 7-ம் அதி, 29–31 வச.



வனுக்கு பணமோ பொருளோ கொடுத்துதவுங்கள். ஆதரவற்ற அநாத பிள்ளைகளுக்கும் தரித்திரர்களுக்கும் உபகாரங்கள் செய்வதில் கை சுருங்க வேண்டாம். நமது கர்த்தராகிய சர்வேசுரன் இவ்வளவு தாராளமாய் தனக்குத் தந்தருள தான் பெற்றுக்கொண்டவன், தானே ஈகையில்லாதிருக்கலாகாது. எவ்வளவுக்கு அதிகமாய் இந்த ஜீவியத்தில் பிறருக்கு நாம் நன்மைசெய்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாய் மனரம்மியமும் மனச்சமாதானமும் கண்டடைவோம். தாங்களோ, நீங்கள் வசிக்கும் நாட்டில் வெகுவாய் நன்மை செய்யக்கூடுமென்பதால், நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதருடைய சிநேகத்தைக் குறித்து, திரும்பத் திரும்பத் தங்களை மன்றாடுகிறேன்: இங்கு சொன்னவைகளையெல்லாம் இருதயத்தில் கருதித் தியானிப்பதுமல்லாமல், கிரிகையினாலும் நிறைவேற்றுவதற்குத் தங்கள் மனதை வசப்படுத்த அதி ஊக்கமுடன் பிரயாசப்படுங்கள். ஏனெனில் மனங்கொண்டு பிரயாசப்படுவோருக்குக் கடினமானதொன்றுமில்லை,—விசேஷமாய் நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதருடைய சிநேகத்தின் நிமித்தம் பிரயத்தனப்படும் விஷயங்களில் இது நிச்சயம்.

"* * * * நமது பந்துக்கள் ஒவ்வொருவரும், இந்தக் கடிதம் தனக்கே எழுதப்பட்டதாகப் பாவித்துக்கொள்ளவும்." * * * *

இங்ஙனம்,

நன்மையில் வதிருனை,

இனிகோ.

அர்ச்சியசிஷ்டவர் தமது தமயனுக்கு எழுதிய மேற்சொன்ன நிருபத்தை வாசிக்க நண்பனே, அவர் சொன்னவைகளை நீயும் சற்றே உன் இருதயத்தில் தியானிப்பாயாக! "தன் கர்த்தராகிய சர்வேசுரனை ஸ்துதித்து வணங்கி அவருக்கு ஊழியம் செய்து, இவ்வழியாய்த் தன் ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்ளும்படியாக மனிதன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறான். பூமிமீதுள்ள மற்றப்பொருட்கள் அனைத்துமோவெனில் மனிதன் நிமித்தமும் அவன் சிருஷ்டிக்கப்பட்டதற்குக் காரணமான கதியைக் கருதி நடக்க உதவியாகவுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்று ஞான முயற்சிகள் என்னும் நூலில் லொயோலா இஞ்ஞாசியார் வரைந்து கொடுத்திருக்கும் மூலாதார சத்தியத்தின் வியாக்கியானத்தை இதில் கண்டுகொள்ளுவாய். தேவ சிநேகமும், தேவ சிநேகத்தில் ஜென்மித்து தேவ சிநேகத்தினின்று இணைபிரியாதிருக்கும் பிறர் சிநேகமுமில்லாத மானிடன் ஜீவியம், அந்தோ! பாழான ஜீவியமே! தேவ சிநேகமும் பிறர் சிநேகமும் உயிரும் உடலும்போலுமாம்! ஒன்றின்றி ஒன்று நிலையாது; ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்கலாகாது. உயிரின்றி உடல் நிலைக்குமோ? உடல்வதை உயிர்வதையேயாகுமன்றோ? உயிரும் உடலுமென ஒரே பொருள்போலிருக்கும் இந்தத் தேவ சிநேகமும் பிறர் சிநேகமும் ஒரே வார்த்தையில் சிநேகம் என்று சொல்லப்படும். ஞான ஜீவியத்துக்கு



ஜீவன் இந்த சிநேகமே; மானிடனுடைய நினைவு வாக்குக்கிரிகைகளுக்குத் தேவ முத்திரையிட்டு, தேவலோகத்துக்கு உரிமையாக்குவது இந்த சிநேகமே. ஆத்துமாவில் இந்த சிநேகம் தாழ, அர்ச்சியசிஷ்டதனமும் தாழும்; அது உயர, அர்ச்சியசிஷ்டதனமும் உயரும்; அது மாண்டுபோனால், இரட்சணியத்துக்கு அவசியமான அர்ச்சியசிஷ்டதனமும் மாண்டுபோம். இந்த சிநேகம் லொயோலா இஞ்ஞாசியார் புத்தியில் ஏற்கனவே எவ்வளவு துலக்கமாகவும், அவர் இருதயத்தில் எவ்வளவு தூய்மையாகவும் உயர்வாகவுமிருந்ததென்று மேற்சொன்ன நிருபத்தால் அறிந்து கொள்ளுவாய், நண்பனே. இந்த சிநேகமின்றி நமது வாழ்நாள் வீண் நாளே; ஆஸ்திபாஸ்தி மகிமை பெருமையெல்லாம் அநர்த்தமே!

பார்சலோனாவிலிருந்து அகினேஸ் பாஸ்காலம்மாளும், இசபேல் ரோசல்லம்மாளும் அர்ச்சியசிஷ்டவருக்கு கடிதம் எழுதிவந்தார்கள். அவரும் அவர்களுக்குப் பதிலெழுதிவந்தார். இசபேலம்மாள் வியாதியாயிருந்து வெகு நோவு அநுபவிப்பதாகக் கேள்விப்பட்டு, அர்ச்சியசிஷ்டவர் அந்தம்மாளுக்கு 1532-ம் ௵, நவம்பர்-௴, 10-ம் ௳ எழுதிய கடிதத்தில், வேண்டிய ஆறுதல் சொன்னபின், "வியாதியாய் விழுந்து எழுந்திருக்கும் தேவ ஊழியன், தேவ சாஸ்திரத்தில் அரைவாசி தேர்ந்த சாஸ்

திரியாய், தன் ஜீவியத்தை நமது கர்த்தராகிய சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கிசைவாக சீர்ப்படுத்தி நடப்பிக்கும் தர்ம நூலில் பரீட்சை கொடுத்தவனாய் எழுந்திருக்கிறான்" என்று சொல்லுகிறார்.

1533-ம் ௵, மார்ச்சு-௴, 13-ம் ௳, வெகு வருத்தமான ஓர் பரீட்சையில் அநுகூலமடைந்து, அதற்குரிய நிச்சயபத்திரமும் பெற்றுக்கொண்டார். ஒருவருஷத்துக்குப்பின், 1534-ம் ௵, மார்ச்சு-௴ 14-ம் ௳, எம் ஏ (M. A.) என்று சொல்லப்படும் உயர்ந்த பரீட்சையில் தேர்ந்து கலைஞானப் பண்டிதர் என்னும் பட்டமடைந்தார். அப்போது அவருக்களிக்கப்பட்ட நிச்சயப்பத்திரம் இந்நாள்மட்டும் காப்பாற்றப்பட்டு வருகின்றது.

இச்சமயத்தில் இஞ்ஞாசியாருக்கு வயது சுமார் நாற்பத்துநாலாயிருந்திருக்கவேண்டும். இந்தப் பிராயத்தில், இளமையில் முதலாய் கற்றறிவதற்கு கடினமான சாஸ்திரங்களில், தேவ தோத்திரத்தையும் ஆத்துமாக்கள் இரட்சண்ணியத்தையும் முன்னிட்டு, புத்தியை ஊன்றி உழைத்து அருமையான வெற்றியடைந்த அவரது மனவூக்கத்தையும், அவர் உள்ளத்தில் பற்றியெரிந்த தேவசிநேகத்தின் வேகத்தையும் என்னென்று சொல்ல!

• ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக இவ்விதம் வருந்தி சாஸ்திரப்பயிற்சிசெய்த இஞ்ஞாசியார்,



ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கான வழிதேடுவதிலும் அரிய யுக்தியுடையவராயிருந்தார். நன்னெறி தவறி துர்மாதிரிகையாய் நடந்த ஒரு குருவானவரைத் திருப்ப, அவரெடுத்த உபாயமாவது: அவருக்காக சர்வேசுரனை உருக்கமாய் மன்றாடின பின், அவரைத் தேடிப்போய் அவர் பாதத்தில் முழந்தாளிட்டு, தன் ஜீவியகாலமெல்லாம் தான் ஏதேது பாவங்களைச் செய்ததுண்டோ அவைகளையெல்லாம் ஆதியோடந்தமாய் அளவற்ற துக்க மனஸ்தாபமுடன் அவ்விடத்தில் அறிக்கையிட்டு பாவசங்கீர்த்தனம் செய்தார். கடந்துபோன குற்றங்கள்மீது இவர் கொண்டிருந்த துவேஷத்தையும், மனஸ்தாபப் பெருக்கத்தையும் கண்ட அந்தக் குருவானவர், தன் பாவங்களை நினைத்து பச்சாத்தாபமுற்றார். தன் ஆத்துமம் தேவ சமுகத்திலிருக்கும் நிர்ப்பாக்கிய அந்தஸ்தை இஞ்ஞாசியாருக்கு அறிவித்து, அவர் ஆலோசனையைக் கேட்டார். இஞ்ஞாசியாரோவென்றால், அவரை சிலநாள் ஒடுக்கத்திலமர்ந்திருக்கச்செய்து, தமது ஞான முயற்சிகளை அவருக்குப்போதித்தார். முன் துர்மாதிரிகையாய் நடந்து வந்தவர் யாவருக்கும் நன்மாதிரிகையான சற்குருவானார்.

வேறோர் திருஷ்டாந்தமாவது:—தன் ஆத்துமத்துக்கடுத்த விஷயங்களில் வெகு அஜாக்கிரதையாயிருந்த ஓர் சாஸ்திரியார் கிரகத்துக்கு இஞ்ஞாசியார் ஓர்நாள் போகும்படி நேரிட்டது. அச்சமயம்

சாஸ்திரியார் (Billiards)* 'பிலியர்ட்ஸ்' என்று சொல்லப்படும் ஓர்வகை மேஜைப் பந்தாட்டம் விளையாடிக்கொண்டிருந்தார். இஞ்ஞாசியாரைக் கண்டதும் அவரை உபசரித்து, மரியாதையினிமித்தமோ, அல்லது தமாசாகவோ தன்னுடன் விளையாடும்படி அழைத்தார். இஞ்ஞாசியார் துவக்கத்தில் சம்மதிக்கவில்லை. என்றாலும் சாஸ்திரியார் மேன்மேலும் விரும்பிக்கேட்க, தம் உள்ளத்தில் உண்டான ஏதோ ஓர் பரலோக ஏவுதலைப் பின்சென்று, "நான் தோர்வை அடைந்தால், ஒரு மாத காலம் நான் உமக்கு ஊழியனாயிருந்து நீர் இடும் வேலைகள் யாவும் செய்துவருகிறேன். நான் ஜெயித்தாலோ நீர் நான் சொல்லும் ஒரே ஒரு காரியமாத்திரம் செய்தால் போதும்; அதுவும் உமக்கு நன்மையாகத்தானிருக்கும்" எனப் பந்தயங்கூறினார். நல்லது என்று சாஸ்திரியார் சம்மதிக்க, இருவரும் விளையாட ஆரம்பித்தனர். இஞ்ஞாசியார் கெலித்தார். தோர்வு அடைந்த

* மேற்பாகம் அதி ஒப்பரவான கற்பலகையால் அமைக்கப்பட்டு, நேர்த்தியான பசுமை நிறத்துணியால் மூடப்பட்டிருக்கும் ஓர் பெரிய மேஜைமேல் தந்தத்தாற் செய்யப்பட்ட மூன்று பந்துகளிருக்கும். விளையாடுகிறவர்கள் கையில் இவ்விளையாட்டுக்கென்று செய்யப்பட்ட ஓர்வகை நீண்ட குச்சியிருக்கும். இவர்கள் மேஜையைச்சுற்றி நின்று இக்குச்சியால் பந்துகளை ஓர் ஒழுங்குப்பிரகாரம் நாலூக்காய் அங்கும் இங்கும் தட்டி விளையாடுவார்கள்.



சாஸ்திரியார், ஜெயங்கொண்டவர் பந்தயப்படி என்ன கேட்கப்போகிறாரோவென்று ஐயமுற்று நின்றார். இஞ்ஞாசியார் வேறொன்றும் கேட்கவில்லை. சிலநாள் ஒடுக்கத்திலிருந்து தமது ஞான முயற்சிகளை செய்யும்படி மாத்திரம் கேட்டார். அர்ச்சியசிஷ்டவர் முன்சொன்னதுபோல், இது சாஸ்திரியாருக்கு நன்மையாகவே முடிந்தது. அதுமுதல் அவர் தன் ஜீவியத்தை ஒழுங்குப்படுத்தி, நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டு நடந்துவந்தார்.

## 11-ம் அதிகாரம்.

**சேசுசபையின் அஸ்திவாரம்.**—அர்ச். இஞ்ஞாசியாருடைய முதல் தோழர்கள்—முத். பாபர் இராயப்பர்—அவர் பட்ட சோதனைகள்—நமது இந்துதேசத்து அப்போஸ்தலராகிய அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார்—இஞ்ஞாசியாரை ஒருவன் இரகசியமாய்க் கொல்லத்தேடியது—சவேரியார் இஞ்ஞாசியாரைப்பற்றி தன் தமயனுக்கு எழுதிய கடிதம்—('Montmartre') என்னும் "வேத சாட்சிகள் மலைமேல்" நடந்த விசேஷம்—முதல் வார்த்தைப்பாடு—இஞ்ஞாசியார் தன் ஜென்ம நாட்டுக்குப் பயணப்படுதல்.

## 1530—1535.

1530-ம் ௵ பாரீஸ் கலாசாலையில் அர்ச் இஞ்ஞாசியாரோடு ஒரே அறையில் இருபத்துநாலு வயதுள்ள ஓர் வாலிபர் வசித்துவந்தார். இவர்தான் அர்ச்சியசிஷ்டவருடைய ஞானப் புத்திரர்களில் முதல்வரான முக்திப்பேறுபெற்ற பாபர் இராயப்பர்,—பிராஞ்சு தேசத்திலுள்ள சவாய் (Savoy) என்னும் மலைநாட்டில் 1506-ம் ௵ ஏப்பிரல்-௴ 13-ம் ௳ பிறந்தவர். அவருடைய மாதாபிதாக்கள்



ஐசுவரியவான்களல்ல. ஆனால் நல்லொழுக்கத்திலும் தேவபக்தியிலும் சிறந்தவர்கள். இவர்களுக்குப் புதல்வனாய், அருளப்பட்ட இந்த பாபர் இராயப்பர் பாலியப் பிராயத்திலேயே எவ்வளவு பரிசுத்த உத்தமராய் நடந்துவந்தாரென்றால், உடலெடுத்து வந்த ஓர் தேவதூதன்போல் மற்றவர்களுக்குக் காணப்பட்டார். அவருக்கு இன்னும் ஏழுவயதாகுமுன்னே, பெரியோரும் சிறியோரும் அவரை ஒரு அர்ச்சியசிஷ்டவர் என்று சொல்லிவந்தார்கள். ஓர் கல்மேலேறி நின்று, மழலைச்சொல்லால் அவர் போதிக்கும் தேவசிநேகம் நிறைந்த மொழிகளைச் சிறியோரும் பெரியோரும் மிக்க அன்பு வணக்கத்துடன் செவிகொடுத்துக் கேட்பார்கள். நாள்தோறும் தன் தந்தையின் ஆடுகளை மலைக்குன்றுகள் அடர்ந்த வனாந்தரங்களுக்குக் கொண்டுபோய் மேய்த்துவருவார். ஏகாந்தத்தில் தன் சிருஷ்டிகரைத் தேடவும், அவரோடு ஜெபத்தியானத்தில் சம்பாஷித்து நெருங்கிய ஐக்கியமாகவும், இப்பாலியனுக்கு இது நல்ல சமயமாயிருந்தது. ஏற்கனவே வாரத்தில் இருதரம் ஒரு சந்தியிருக்கவும், வேறு சில தபசுகள் செய்யவும் பழகிக்கொண்டார். இவ் விஷயங்களையும், மேலும் பல விஷயங்களையும் யோசித்துப்பார்க்கில், சிறுபமுதற்கொண்டே பாபர் இராயப்பர் திவ்விய இஸ்பிரீத்துவின் ஒரு விசேஷ அருளால் நடத்தப்பட்டுவந்தாரென்றுதான் நிதானித்துச் சொல்லவேண்டியிருக்கின்றது.

இவர் வெகு புத்திக்கூர்மையுடையவராக விளங்கினாரென்றாலும், விவசாயஞ்செய்து அன்றன்றுள்ள எங்களப்பமென்று காலக்ஷேபம் பண்ணிவந்த அவருடைய தாய்தந்தையர் அவரைக் கல்விமானாக்கக் கருதவில்லை. ஆனால் இகலோக மந்தையையல்ல, சேசுக்கிறிஸ்துநாதருடைய ஞானமந்தையைக் காத்துப் பரிபாலிக்கும்படி, தேவதிருவுளத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட இப்பாலியனுடைய இருதயம் கல்வியின்மீது அத்தியந்த ஆவல்கொண்டு தாவிச்சென்றது. கண்ணும் கண்ணீருமாய் ஓயாமல் அவர் கேட்டுவந்த மன்றாட்டுக்கிரங்கி, அவர் தாய்தந்தையர் அவரை ஒரு சிறு பாடசாலைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு பிராஞ்சிலக்கணமும், இலத்தீன் இலக்கணமும் கற்றபின், அதிலும் உயர்ந்த படிப்புள்ள ஒரு பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். ஆங்கு தேவபக்தியில் சிறந்த ஒருவர் நமது இராயப்பருக்கு உபாத்தியாயராக அமைந்தார். ஏதோ காலக்ஷேபத்துக்கென்று உபாத்திமைத் தொழில் செய்துவந்தவரன்று. தம்மிடம் கல்வி பயிலும் மாணாக்கர் நன்னெறியிலும் பயிற்சியடைய வேண்டுமென்று கருத்தும் கவலையுமுடையவர். தேவபயமும், தேவபக்தியும், புனித ஒழுக்கமும், புனித ஒழுக்கத்துக்கு அஸ்திவாரமான நற்சிந்தனை நற்பற்றுதல்களும் தமது மாணாக்கர் இருதயத்தில் ஸ்திரமாய் வேரூன்றச்செய்யவேண்டுமென்ற ஆவல் நோக்கமுடையவர். புத்தியும் பத்தியும் இயல்



பாய்க்கொண்ட பாபர் கல்விப்பயிற்சியிலும், புண்ணியப்பயிற்சியிலும் மேன்மேலும் வர்த்தித்துவந்தார். ஒரு சம்மனசைப்போல் பரிசுத்தராய் இருக்க வேண்டும் என்னும் ஆசை, திவ்விய இஸ்பிரீத்துவின் வரப்பிரசாதத்தால், அவர் இருதயத்தை எவ்வளவு ஆட்கொண்டிருந்ததென்றால், பன்னிரண்டு வயதிலேயே என்றென்றைக்கும் கற்புடையவனாயிருப்பேன் என்று சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்தார். அவர் தாமே தமது ஞாபகக்குறிப்பில் இவ்விசேஷத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பாடசாலையை விட்டதும் தத்துவசாஸ்திரமும் தேவசாஸ்திரமும் கற்றுக்கொள்ளுவதற்காக, பாரீஸுக்கு வந்து, 1530-ம் வருஷம் தத்துவசாஸ்திரத்தில் கடைசிப் பரீட்சைகொடுத்து, அதற்குரிய நிச்சயபத்திரமும் வெகுமதியும் பெற்றுக்கொண்டார்.

இதே வருஷம் (1530-ம் வருஷம்) அர்ச்சியசிஷ்ட இஞ்ஞாசியார் தத்துவசாஸ்திரம் படிக்க ஆரம்பித்தபோது, பாபர் தேவசாஸ்திரம் படிக்க ஆரம்பித்தார். முன் சொன்னதுபோல் இருவரும் ஒரே அறையில் வசித்துவந்தார்கள். இஞ்ஞாசியார் தத்துவ சாஸ்திரத்தில் தமக்குத் தெளிவாய் விளங்காதவைகளை பாபரிடத்தில் கேட்டுப் படிப்பார். மேலும், விடுமுறைகளில் தாம் எடுத்துவந்த யாசகப் பணத்தைக்கொண்டு, ஏழையாயிருந்த பாபருக்கு உதவிசெய்து வருவார். தேவசிநேகமே உயிராய்க்கொண்டிருந்த இவ்விரு ஆத்துமாக்கள் அதி

சீக்கிரம் ஒருவரோடொருவர் அன்னியோன்னிய சிநேகமானார்கள்.

வாலிபர்கள் அதிசீக்கிரம் ஆத்துமத்தில் மாசுபட்டுக் கெட்டுப்போவதற்கேதுவான எவ்வித சோதனையும் துன்மாதிரியும் நிறைந்த பாரீஸ் கலாசாலையில், பாபர் இராயப்பருடைய ஆத்துமம் தேவ தயையின் ஓர் விசேஷ அனுக்கிரகத்தால், தூய பளிங்குபோல் மாசற்றிருந்தது. என்றாலும், காரிருள் மேகம்போல், பரிசுத்த ஆத்துமத்துக்கு மகா வேதனையான பல தோற்றங்களும் நினைவுகளும் சிந்தையில் மொய்த்தெழும்பி, அவர் ஆத்துமத்தை வெகுவாய்ச் சஞ்சலப்படுத்தி அலைக்கழிக்கத் தலைப்பட்டன. இவ்வகைத் தோற்றங்களுக்கும் நினைவுகளுக்கும் அவர் எள்ளளவேனும் சம்மதம் கொடுத்தவரல்ல; தன் முழுமனச் சக்தியோடு ஊக்கமாய் உடனுக்குடனே, அவைகளை அரோசித்துத் தள்ளிவந்தார். ஆயினும் ஏதோ கொடிய துஷ்டமிருகங்கள் தன்மேல் கர்ச்சித்துப் பாயவருவதை எதிரே கண்ட சிறுவனைப்போல், இவைகளால் சொல்லிலடங்காக் கிலேசமும் கலக்கமுமுற்று வருந்தினார். மேலும் வீண் சந்தேகமும் இதுசமயம் அவர் ஆத்துமத்தை சஞ்சலப்படுத்திவந்தது. தன் உயிரினும் எண்ணிறந்த மடங்கு தமக்கு அதிக அருமையான கற்பு என்னும் பரிசுத்த புண்ணியத்துக்கு எங்கு மோசம் வந்துவிட்டதோ, அல்லது வரப்போகின்றதோ என்ற ஐயமும் பயமும் கொடுந் தீப்போல்



இப்பரிசுத்த வாலிபர் நெஞ்சத்தை இராப்பகலாய் உபாதித்தது. இதனைச் சகிக்கமாட்டாதவராய், மனுஷ சஞ்சாரமில்லாத ஒரு வனத்துக்குச் சென்று வனவாசியாய்ப்போக முதலாய் ஆசித்தார். மனுஷர் முகத்தைக் காணக்கூடாத இடத்தில் மேற்சொன்ன தோற்றங்களும் நினைவுகளும் ஒருவேளை நீங்கிப்போகக்கூடுமென்று எண்ணினார். இதுவுமன்றி கல்விப்பயிற்சியில் வீண் பெருமை, போசனப்பிரியம், பிறர்மீது வீண்சமுசயம், ஆத்திரம், எரிச்சல் முதலிய பல சோதனைகளும், தேவநேசத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட இவ்வுத்தம வாலிபர் ஆத்துமத்தைத் துன்பப்படுத்திவந்தன.

இவைகளையெல்லாம் இஞ்ஞாசியாரிடத்தில் சொல்ல, கூச்சத்தால் வெகுகாலம் நாவெழாதிருந்தார். ஆனால் அவர்மீது மேலான எண்ணமும் நம்பிக்கையும் நேசமும் நாளுக்குநாள் அதிகரித்துவந்தமையால், ஓர் நாள் அவரிடத்தில் தம் உள்ளத்தில் நிகழ்ந்த சகலத்தையும் தாராளமாய் எடுத்துச் சொன்னார். கைதேர்ந்த வைத்தியன் பரிசோதித்துப் பார்த்த நோய்போல், நெடுநாளாய் பாபர் ஆத்துமத்தை உபாதித்துவந்த நோய் அன்று முதல் குணப்படத்துவக்கி, இரு வருஷத்துக்குள் முற்றும் தீர்ந்துபோயிற்று. அதன்பின் நாற்பது நாள் ஒடுக்கத்திலிருந்து இஞ்ஞாசியாருடைய ஞான முயற்சிகளைச் செய்து, 1584-ம் வருஷம் ஜூலை-மீ குருப்பட்டம் பெற்றார்.

இதுசமயம், இஞ்ஞாசியார் தம் மனத்தின்கண் சன்னம் சன்னமாய் உருவாகிவந்த எண்ணங்களில் சிலவற்றை அவருக்கு வெளியிட்டார். சில தோழர்களுடன் ஜெருசலேமுக்குப்போய் வேதம் போதிக்க அவர் கொண்டிருந்த கருத்தை பாபர் இராயப்பர் கேட்டதும், "**சீவியமோ மரணமோ, நானுமுமைப் பின்செல்லுவேன்!**" என்று அத்தியந்த பற்றுதல் வாஞ்சையுடன், அர்ச்சியசிஷ்டவருக்கு வாக்குறுதி கொடுத்தார். இஞ்ஞாசியாரும் அகமகிழ்ந்து சர்வேசுரனை ஸ்துதித்தார்.

பாபர் இராயப்பரைப்போல் ஒரே வருஷத்தில், ஏறக்குறைய ஒரே தேதியில், (1506-ம் ௵ எப்பிரல்-௴ 7-௳) பிறந்து அவரோடு பாரீஸ் கலாசாலையில் ஒரே வகுப்பில் தத்துவசாஸ்திரம் பயின்று, ஒரே தினத்தில் கடைசிப் பரீட்சையில் தேர்ந்து, அவருடன் எப்போதும் அன்னியோன்னிய நேசராயிருந்த வாலியர் ஒருவரிருந்தார். இவர்தான் "**சிந்து வாழ்வோர் பிதா**" என்று ஸ்துதிக்கப்படும், நமது நாட்டின் அப்போஸ்தலராகிய **அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார்**. லொயோலா இஞ்ஞாசியாரைப்போல், இவரும் இஸ்பாஞிய தேசத்தில் உயர்ந்த கோத்திரத்தில் பிறந்தவர். பேராண்மையும், புத்திக்கூர்மையும், சாஸ்திரப்பயிற்சியில் அளவற்ற ஆவலும் கருத்துமுடையவர்; பிறரிடத்தில் வெகு அன்பும், சாதுரியமும், உதாரமுமுள்ள குணசீலன்; ஈனமென்பதைத் துவேஷித்து, மேன்மையானவை



களையே அவாவித்தேடும் பெருந்தகைமை வாய்ந்த இதயன். மனநேர்மையிலும் மனத்தூய்மையிலும், இவரை பாபர் இராயப்பருக்கு இணையிடலாம். ஆனால் இவருடைய சிந்தனை பற்றுதல்களெல்லாம் உலக போங்காகவே இருந்தன. பெரிய சாஸ்திரியெனப்பெயர்பெற்று, பிரக்கியாதி அடையவேண்டுமென்னும் பேராவல் ஒன்றே அவர் உள்ளத்தைப் பிரதானமாய்க் கவர்ந்திருந்தது. இவருடைய சுபாவ இலட்சணங்களும், லொயோலா இஞ்ஞாசியாருடைய சுபாவ இலட்சணங்களும், ஒன்றுக்கொன்று எவ்வளவோ பொருத்தமும் உறவுமுள்ளதென்று இவைகளைக்கொண்டு நிதானித்துக்கொள்ளலாம்.

1531-ம் ௵ இஞ்ஞாசியார் தத்துவ சாஸ்திரம் படித்துக்கொண்டிருந்தபோது, சவேரியார் தத்துவ சாஸ்திரம் படித்து முடித்து வெகு திறமையோடு அதைப் பிறருக்கு கற்பிக்கும் ஆசிரியனாயிருந்தார். இவ்வளவு சிறந்த இலட்சணங்கள் அமைந்த இவ்வாத்துமா, இகலோக மகிமையை வெறுத்து சர்வேசுரன் பாரிசமானால், தேவ மகத்துவத்துக்கு எவ்வளவோ அதிமிக தோத்திரமுண்டாகுமென நன்குணர்ந்த இஞ்ஞாசியார், அவர் நட்பை அடையப் பிரயத்தனம் பண்ணிவந்தார். ஆனால் இஞ்ஞாசியாருடைய மேன் பிறப்பையும், சுபாவ பெருந்தகைமையையும், சகலத்திலும் அவர் இருதயத்தை ஆட்கொண்டு நடத்திவந்த தேவ

அருள் ஞானத்தையும் இன்னும் அறியாது, அவர் அணிந்திருந்த கேவலமான வெளிக்கோலத்தையும், மகிமையை அலட்சியம் செய்து நிந்தை அவமானங்களையே அவர் பிரியமாய்த் தேடிவந்ததையும் கண்ணுற்ற சவேரியார், அவர் மீது வெறுப்புற்று, அவரோடு சகவாசமாயிருப்பது தனக்கு ஈனமென்றுற்போல் ஒதுங்கி நடந்துவந்தார். தன் சுபாவ மேட்டிமையை முற்றும் வென்று, சகலத்திலும் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம் ஒன்றையே கருதி நடந்துவந்த லொயோலா, இதனால் மனத்தாங்கல் கொண்டு பின்வாங்கவில்லை. சவேரியாரிடத்தில் என்றும் மாறா அன்புடையவராய், அவருடைய சாஸ்திரத் திறமையைப் புகழ்ந்துபேசி, அவர் பெயர் மேன்மேலும் பிரக்யாதி அடையும்படி தாமே முயற்சி செய்துவந்தார். அவர் வெகு சாதுரியசாமார்த்தியமாய் சாஸ்திர சித்தாந்தங்களை வியாக்கியானித்துச் செய்யும் உபந்நியாசங்களை வியந்து கேட்பதற்கு, தாமே மாணாக்கர்களை சேகரித்துக் கொண்டுவிடுவார். மென்குணமுடைய சவேரியார் இருதயம், இஞ்ஞாசியார்மீது இன்னும் தாழ்ந்த எண்ணமும் வெறுப்புமுற்றிருக்கக்கூடுமோ? இல்லை! இல்லை! இதற்குப்பின் அதிசீக்கிரம் இஞ்ஞாசியாருடன் மனங்கலந்த நண்பரானார்.

அக்கலாசாலையிலேயே, வெளிவேஷத்தில் உத்தம விசுவாசிகள்போலும், உள்ளத்திலோ பதித விஷம் நிறைந்தவர்களாகவும் இருந்த சிலருடைய



சகவாசம் கபடமறியாத இவ்வாலிபருக்கு தீங்காய் முடிந்திருக்கலாம். ஆனால் ஓர் தாயைப்போல் அவர்மீது கவலையெடுத்து, அவரை எச்சரித்துப் பாதுகாத்துவந்த இஞ்ஞாசியாருடைய நட்பால், அவ்வித ஆபத்துக்குத் தப்பித்துக்கொண்டார் சவேரியார் இருதயத்தை முற்றும் சர்வேசுரன் வசமாக்கும்படியாய்: "உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டாலும், தன் ஆத்துமத்தை இழந்துபோனால் வரும் பிரயோசனம் என்ன!" என்கிற வேதவாக்கியத்தை இஞ்ஞாசியார் அடிக்கடி எடுத்துரைத்து, அதன் சாரம் அவர் மனதில் நன்றாய் உறைக்கும்படியானவிதமாய்ப் பேசிவருவார். சவேரியார் இவ்வார்த்தைகளை மனதில் தரித்து சிந்திக்கலானார். சிந்திக்கச் சிந்திக்க அவர் மனமும் வேறுபட ஆரம்பித்தது. ஆயினும் கடைசி வெற்றியடையுமுன், அவர் நெடுநாள் தம்மோடு தம் உள்ளத்தில் போராடவேண்டியிருந்தது. தேவவரப்பிரசாதத்தின் உதவியால் போராடி ஜெயித்து, தேவ ஊழியத்துக்குத் தம்மை முழுதும் கையளித்து, இஞ்ஞாசியாரைப் பின்செல்லுவதாக வாக்குக்கொடுத்தார். சாஸ்திரம் படிப்பதிலும், அதைப் பிறருக்குப் படித்துக்கொடுப்பதிலும் அலுவலாயிருந்ததால், ஞான முயற்சிகளை ஒழுங்காய்த் தொடர்ந்து செய்ய அவருக்குச் சாவகாசம் கிடைக்கவில்லை. என்றாலும் ஒழிந்த நேரங்களில் அவைகளைச் செய்து, தேவசிநேக வர்த்திப்படைந்துவந்தார்.

சவேரியார் இஞ்ஞாசியாருடன் இவ்விதம் நெருங்கிய பந்தனமானது, அவர் தேசத்தவர்கள் சிலருக்கு பொருந்தவில்லை. இவர்கள் இஞ்ஞாசியாரை அநீதமாய்ப் பகைக்கலானார்கள். மிக்கேல் நவாரோ என்றொருவன்,—சவேரியாரிடத்தில் பலதரம் சகாயம் பெற்றவன்,—சுவேச்சையாகத்தானோ, அல்லது பிறர் துர்ப்போதனையினாலோ என்னமோ, இஞ்ஞாசியாரை உயிர் மாய்க்கத் தீர்மானித்தான். இதற்காக ஓர் நாள் இரவில் அர்ச்சியசிஷ்டவர் தம் அறையில் தனிமையாய் இருக்கும் சமயம் பார்த்து, ஜன்னலுக்கு நேரே ஓர் ஏணியைச் சாத்தி, குத்துவாளுடன் பதனமாய் ஏறிச்சென்றான். ஆனால்: "நிர்ப்பாக்கியனே, எங்கு செல்லுகின்றாய்; என்ன செய்ய கருதியிருக்கின்றாய்?" என்றோர் அசரீரி வாக்கு சப்திக்கக்கேட்டு, மனந்தடுமாறி அர்ச்சியசிஷ்டவர் பாதத்தில் போய் வீழ்ந்து, உண்மையைச் சொல்லி பொறுத்தல் கேட்டான். கேட்குமுன்னமே பொறுத்தல் கொடுக்கப்பட்டது. இந்த நவாரோ சிலகாலம் மனந்திரும்பினவனாகக் காணப்பட்டான். ஆயினும் அவன் முற்றும் மனந்திரும்பினவனல்ல. சில வருஷங்களுக்குப்பின் உரோமாபுரியில் இவன் அர்ச். இஞ்ஞாசியாருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்ல, நியாயாசனமுன் வந்து நிற்பதைக் காண்போம்.

மேலும் பிரான்சீஸ்கு சவேரியாருடைய தமயன் ஆஸ்பில்குவேத்து (Aspilcueta) என்பவர்



லொயோலா இஞ்ஞாசியாரைப்பற்றி விபரீதமாய்க் கேள்விப்பட்டு, இப்பேர்ப்பட்டவரோடு நமது சகோதரன் அன்னியோன்னிய நட்பாயிருக்கிறானே யென்று, மிக மனவருத்தமுற்று முறையிட்டதாகத் தெரியவருகின்றது. சில காலத்துக்குப்பின் இஞ்ஞாசியார் பாரீஸ் நகரத்தைவிட்டு தமது ஜென்ம நாட்டுக்குப் புறப்பட்டபோது, சவேரியார் தமது தமயனுடைய முறைப்பாட்டுக்கு, (1535-ம் வருஷம், மார்ச்சு-மீ 25உ) பதிலெழுதி, அதை அர்ச்சியசிஷ்டவர் கையிற் கொடுத்தார். அர்ச்சியசிஷ்டவர் அதைத் தாமே ஆஸ்பில்குவேற்று பிரபு சமுகம் நேரில் கொண்டுபோய்க் கொடுக்க உடன்பட்டார். இக்கடிதத்தின் ஓர் பாகத்தை இங்கெடுத்துச் சொல்வது நன்கென்றெண்ணுகிறோம். சில அயோக்கியர் சொன்ன பொய்களை நம்பி தமயன் படும் மனவருத்தத்தை நினைத்து, தாம் வெகு கஸ்திப்படுவதாகச்சொல்லி அவர் எழுதுகிறார்:

"லொயோலா இஞ்ஞாசியாருடன் நான் அறிமுகமாகும்படி நமது கர்த்தர் எனக்கருளிய உன்னத சகாயத்தைத் தாங்கள் தெளிவாய் அறிந்துகொள்ளும்படி, இக்கடிதத்தில் சத்தியமாகவே தங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் எனக்கு செய்திருக்கும் உபகாரங்களுக்கெல்லாம், பிரதி உபகாரம் செய்தல் என்னுயுள்காலமெல்லாம் சென்றாலும், என்னாற்கூடுமான கருமமல்ல. எனக்குப் பணம் அவசியமாயிருந்தபோது, தம் கையிலிருந்தோ, அல்

லது தம் சினேகிதர்களைக்கொண்டோ, அநேக
தடவை உதாரமாய் எனக்கு உதவி செய்துவந்தவர்
அவரே. அன்றியும் சில கெட்ட மனிதர்களுடைய
சகவாசத்தை நான் முற்றும் அகற்றி, அகல இருந்த
தற்கு காரணமும் அவரே. அநுபவக்குறையினால்,
இவர்கள் எத்தன்மையானவர்களென்று நான்
அறிந்துகொள்ளக் கூடாதவனாயிருந்தேன். ஆனால்
அவர்கள் தங்கள் நெஞ்சகத்தில் மறைத்துவைத்
திருந்த பதித விஷம் பாரீஸ் நகரெங்கும் பரவி
யிருக்கும் இச்சமயத்தில், அவர்களோடு அப்போது
அற்ப சொற்பமாக முதலாய் நட்பாயிருந்திருப்பது
எனக்கு கிஞ்சித்தும் பிரியமாயிருந்திராது.
லொயோலா இஞ்ஞாசியார் எனக்குச் செய்த உப
காரம் இதொன்றுதானென்றிருக்கட்டும். இதற்கு
முதலாய் உரிய பிரதிநன்றி செய்ய, எக்காலம் என்
னால் கூடுமோ அறியேன். அவர் என்னைப் பாது
காத்துவந்திருக்கிறான், வெளிவேஷத்தில் புண்
ணியவான்கள்போலும், உள்ளத்திலோ, அவர்க
ளுடைய நடத்தையால் தெரியவந்திருப்பதுபோல்,
பதிதத்தனம் நிறைந்தவர்களாகவுமிருந்த சில மனி
தர்களோடு நான் ஒருபோதும் யாதொரு சகவாச
மும் வைத்துக்கொள்ளவில்லை; அவர்களோடு
நட்பு பாராட்டவுமில்லை.''

''ஆனதால் என்னை எவ்விதம் ஏற்றுக்கொள்ளு
வீர்களோ, அவ்விதமே, நேசர்களிலெல்லாம் என்
பிராணநேசராகிய இவரையும் தாங்கள் ஏற்றுக்



கொள்ளவேண்டுமென்று தங்களைப் பிரார்த்திக்கி
றேன். அவர் எனக்குச் செய்த நன்மைகளின்
ஙிமித்தம், அவருக்கு நான் எவ்வளவோ கடமைப்
பட்டவனாயிருக்கிறேன் என்பதை மறந்துபோக
வேண்டாம். அவருக்கு அபகீர்த்தியாக தங்களி
டம் சொல்லப்பட்டவைகள் உண்மையாயிருக்குமே
யாகில், அவர் தங்களை நம்பி தங்கள் கிரகத்தில்
காலெடுத்துவைக்கத் துணிவாரா? குற்றவாளி,
தான் யாருக்கு மனத்தாங்கல் வருத்துவித்தானோ,
அவன் கையில் தன்னை ஒப்புக்கொடானல்லோ!
லொயோலா இஞ்ஞாசியாருக்கு விரோதமாய் தங்
களிடம் சொல்லப்பட்டவைகள் முற்றும் பொய்
யென்று, அவர் நடத்தையிலுள்ள இந்த ஒரு
விசேஷத்தைக்கொண்டே தாங்கள் பிரத்தியட்ச
மாய் அறிந்துகொள்ளலாம். அவர் எத்தன்மை
யானவரென்று இப்பொழுது நான் தங்களுக்கு அறி
வித்தேனாகையால், இத்தருணத்தைக் கைநழுவ
விடாமல், அவரிடத்தில் தங்கள் இருதயத்திலுள்
ளதையெல்லாம் தாராளமாய்த் திறந்து சொல்லி
வார்த்தையாடும்படி, தங்களை என்னாலியன்றமட்
டும் வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்
வாய்மொழிகள் யாவையும் பூரண விசுவாசமுடன்
ஏற்றுக்கொள்ளுங்கள். அவருடைய சம்பாஷணை
கள், அவர் சொல்லும் புத்திமதிகள் யாவும் எவ்வ
ளவு உத்தமமானவைகளென்று தாங்களே கண்டு
கொள்வீர்கள். ஏனெனில் இவர் மகா உன்னத

மான தேவ பக்தியும் தேவ அருளுமுடையவர்; ஜீவியத்தில் வெகு பரிசுத்தர். நான் கேட்டுக் கொண்ட பிரகாரம் தாங்கள் செய்யும்படி தங்களை திரும்பவும் ஆவலோடு பிரார்த்திக்கிறேன்."

இவ்விதம் எழுதிய அர்ச். பிரான்சிஸ்கு சவேரியார் இருதயம், அர்ச். இஞ்ஞாசியார்மீது எற்கனவே எவ்வளவோ பூஜித நேசம் நிறைந்ததாயிருந்ததென்று இதனை வாசிக்கும் எவர்க்கும் கண்கூடாய்த் துலங்கும்.

நெடுநாள் தேவாநுக்கிரகத்தை மன்றாடி, நெடுநாள் பிரயாசப்பட்டு, சவேரியார் மனதைத் தேவ ஊழியத்தில் திருப்பினார் லொயோலா இஞ்ஞாசியார். ஆனால் அல்காலா நகர் கல்விசாலையிலிருந்து இருவாலிபர், இஞ்ஞாசியாரைக் கண்ணுற் கண்டவர்களல்லவென்றாலும், வதந்தியினால் அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவருக்குத் தோழர்களாக விரும்பி, அவரை வலியத்தேடி பாரீஸுக்கு வந்தார்கள். இவர்களில் டியேகோ லெய்னஸ் (Diego Lainez) என்பவர் இருபத்தொரு பிராயமும், அல்போன்சோ சல்மரோன் (Alfonso Salmeron) என்பவர் பத்தொன்பது பிராயமுமுடையவர்களாயிருந்தார்கள். இருவரும் எற்கனவே தத்துவ சாஸ்திரத்தில் வெகு தேர்ச்சியடைந்திருந்தார்கள். பாரீஸில் சேர்ந்ததும் இஞ்ஞாசியாரைக் கண்டு



பேசி, அவரிடத்தில் தங்களை ஒப்புவித்து, ஞான முயற்சிகளை செய்து, தங்கள் நிர்மானத்தில் ஸ்திரப்பட்டார்கள்.

இஞ்ஞாசியாருடைய ஐந்தாவது தோழர் நிக்கோலாஸ் போபாதில்லா (Nicholas Bobadilla) என்பவர். எளிய குடும்பத்தில் பிறந்தவர். இஸ்பாஞிய தேசத்திலுள்ள வல்லதோலித் (Valladolid) என்னும் பட்டணத்தில் சிலகாலம் வெகு திறமையோடு தத்துவ சாஸ்திரம் கற்பித்துவந்த பின், தேவசாஸ்திரம் படிக்க ஆசித்து, பாரீஸ் கலாசாலைக்கு வந்தார். வறுமையின் நிமித்தம், பலதரம் அவர் இஞ்ஞாசியாருடைய உதவியைக் கேட்கும்படி நேரிட்டது. இஞ்ஞாசியார் தாமே யாசகமெடுத்து அவருக்கு சந்தோஷமாய் உதவி செய்து வந்தார். ஆறாவதாக இஞ்ஞாசியாரை அண்டி வந்தவர் சீமோன் ரோதிரிகேஸ் (Simon Rodriguez) என்பவர். உயர்குலத்தில் பிறந்தவர். சம்மனசுக்குரிய பரிசுத்த ஒழுக்கமும், உருக்கமான தேவபக்தியும் நிறைந்தவர்.

சிறந்த இலட்சணங்களையுடைய ஜெரோம் நாதால் (Jerome Nadal) என்றொருவரை தமது தோழராக்க இஞ்ஞாசியார் சர்வபிரயத்தனப்பட்டும் கூடாமற்போயிற்று. ஆயினும் பத்துவருஷத்துக்குப்பின் இவரும் இஞ்ஞாசியார் கையில் தம்மை ஒப்புவித்தார்.

தத்துவசாஸ்திரப் பயிற்சி செய்துகொண்டே இஞ்ஞாசியார் தேவ தோத்திரத்துக்காக மேற் சொன்னவைகளை யெல்லாம் நிறைவேற்றிவந்தார். தத்துவசாஸ்திரம் முடிந்து, 1534-ம் ஹு தேவ சாஸ்திரம் ஆரம்பித்தார்.

இதுகாலம் இஞ்ஞாசியார் தமது தோழர்களுக்கு, தம் கருத்துகளை முற்றும் திறந்து சொல்லவில்லை. அல்காலாவிலும், சலமான்காவிலும், பாரீஸுக்கு வந்த துவக்கத்திலும் நேரிட்ட உபத்திரவங்களால், வெகு விமரிசையாய் காரியங்களை நடத்தக் கற்றுக் கொண்டார். ஒவ்வொருவருக்கும் தாம் சொன்னவைகளை, ஒவ்வொருவரும் இரகசியமாக வைத்திருக்கும்படி செய்தார். ஆனதால் முன்சொன்ன ஆறு பேரும் இஞ்ஞாசியாரை தங்கள் தந்தையைப்போல் சங்கித்து நேசித்து, ஒரு குடும்பத்துப் பிள்ளைகளைப்போல் தங்களுக்குள் அன்னியோன்னிய நேசமாயிருந்தாலும், தாங்களெல்லாரும் ஓர் சன்னியாச சபையின் அஸ்திவாரமாக இஞ்ஞாசியார் கருத்தில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று, அவர்கள் இன்னும் நினைக்கவில்லை. தகுந்த சமயம் பார்த்து இஞ்ஞாசியார் அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் தனித்துப்பேசி, தமது கருத்துகளை அதிக விபரமாய்ச்சொல்லி, அவர்கள் ஆலோசனையைக் கேட்டார். அவர்களுக்குள் அபிப்பிராயம் வெவ்வேறாயிருக்கக்கண்டு, தாங்கள் செய்யவேண்டிய தின்னதென்று தெளிவாய் தீர்மானித்துக்கொள்ளு



வதற்கு ஆயத்தமாக ஒவ்வொருவரும் உபவாசமாயிருந்து, விசேஷ செபம் செய்து சர்வேசுரனை மன்றாடி வரவேண்டுமென்று விரும்பினார். கடைசியாய் குறிக்கப்பட்ட ஓர் தினத்தில், ஆறுபேரும் இஞ்ஞாசியார் முன் ஒன்று கூடிவந்தபோது, ஒருவர் ஒருவரைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். ஒவ்வொருவரும் தத்தம் உள்ளத்தில் தனியே யோசித்து தீர்மானித்துக்கொண்டு வந்ததுபோல், மற்றவர்களும் அபிப்பிராயமாயிருக்கக்கண்டு, எல்லோரும் ஒருமனப்பட்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கி சர்வேசுரனை ஸ்துதித்தார்கள்.

பாரீஸ் நகரத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில், "வேதசாட்சிகள் மலை" எனப் பொருள்தரும் மோம்மார்த்ர் (Montmartre) என்றோர் மலையிருக்கின்றது. இம்மலைமேல் கட்டப்பட்டிருந்த ஒரு சிறு கோவிலுக்குள், 1534-ம் ஹு, ஆகஸ்ட்-மீ தேவமாதா மோட்சத்துக் கெழுந்தருளின திருநாளன்று காலை இஞ்ஞாசியாரும் அவருடைய தோழர்களும் சென்றார்கள். அவர்களுக்குள் குருப்பட்டம் பெற்றிருந்த பாபர் இராயப்பர் திவ்விய பூசை ஆரம்பித்து, பூசைகாண்பவர்களுக்கு நன்மை கொடுக்கும் நேரம் அணுகிவந்ததும், திவ்விய சற்பிரசாதத்தைக் கையிலேந்தி, இஞ்ஞாசியாரையும் மற்றவர்களையும் எதிர்நோக்கி, திரும்பி நின்றார். முதல்முதல் இஞ்ஞாசியாரும், அவருக்குப் பின் மற்றவர்கள் ஒவ்வொருவரும் முறைமுறையே பீடத்தை

அண்டிப்போய்: தரித்திரமும், விரத்தத்துவமும் அநுசரிக்கவும், குறிக்கப்பட்ட சமயம் வந்ததும் ஜெருசலேமுக்குச் சென்று ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக உழைக்கவும், ஜெருசலேமிலிருக்க உத்தரவு கிடையாதபட்சம், உரோமாபுரிக்குப் போய் அர்ச். பாப்பானவருக்குத் தங்களைக் கையளித்து, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக அவர் நியமிக்கும் அலுவலை கையேற்றுச் செய்துவரவும், ஒவ்வொருவரும் உடன்பட்டிருப்பதாக 'வார்த்தைப்பாடு' கொடுத்தார்கள்.—"நாங்களெல்லோரும், சர்வேசுரன்மேல் ஏகசிந்தனையாய், கோவில் தளத்தில் முழங்காலிலிருந்து ஒவ்வொருவரும் தத்தம் இடத்தை விட்டு அசையாமல், யாவருக்கும் கேட்கக்கூடிய தெளிவான குரலில் வார்த்தைப்பாடுகளை உச்சரித்தோம்: அதன்பின் திவ்விய நன்மை வாங்கினோம்" என்று சிமோன் றொதிரிகேஸ் எழுதி வைத்திருக்கிறார். பாபர் இராயப்பரும் மேற்சொன்ன விஷயத்தைக் குறித்துத் தந்திருக்கிறார்.

இவ்விதம், 1534-ம் ௵, ஆகஸ்ட்-௴, 15௳, சேசுசபைக்கு மாதாவும் இராக்கினியும் என்றழைக்கப்படும் பரிசுத்த கன்னிகை மோட்சத்துக்கெழுந்தருளின சுபநாளன்று அருணோதயத்தோடு சேசுசபையும் பூவுலகில் உதயமானதென்று சொல்லலாம். ஆயினும் பூரண உதயமாகி, தன் கிரணங்களை எங்கும் பரப்பி சோதிமயமாய்ப் பிரகாசிக்கும் ஆதித்தனைப்போல், சேசுசபையும் முற்றும் உருவா



கித்துலங்கி, உலகெங்கும் பரம்ப இன்னும் சிலகாலம் செல்லவேண்டியிருந்தது.

அன்று இஞ்ஞாசியாரோடு இவ்வார்த்தைப்பாடு கொடுத்த அவருடைய ஆறு தோழர்களும், அதிசீக்கிரம் அவரைப் பின் சென்ற கோதூரியுஸ் Codure), க்லௌத் லுஜே (Claude La Jay), பாஸ்கேஷியுஸ் (Paschasius) என்னும் வேறு மூன்று தோழர்களும், ஆக ஒன்பது பேரும் லொயோலா இஞ்ஞாசியாரைச் சுற்றி சேசுசபையின் அஸ்திவாரக் கற்கள்போலிருந்தார்கள். இவ்வொன்பதுபேரில் ஒருவராகிலும் தவறிப்போகவில்லை.

'வேதசாட்சிகள் மலை' மேல் நடந்த இவ்விசேஷத்துக்குப் பின், இஞ்ஞாசியாரும் அவருடைய தோழர்களும் தங்களுக்குள் முன்னிலும் பதின்மடங்கு அதிக அன்னியோன்னிய நேசமாய் ஜீவித்து வந்தார்கள். சமயத்துக்குச் சமயம், எல்லோரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி தேவபக்தி தேவ தோத்திரத்துக்கடுத்தவைகளைப் பற்றி தங்களுக்குள் கலந்துபேசி வருவார்கள். புண்ணிய சாங்கோபாங்க நெறியை ஆத்துமத்துக்குத் துலக்கிக்காட்டுவதற்கு, வேதாகமங்களும், விசேஷமாய் புதிய ஏற்பாடும், அவைகளுக்குப்பின் 'கிறீஸ்துநாதர் அநுசாரம்' என்று சொல்லப்படுகிற சிறு புஸ்தகமுமே சிரேஷ்டமானவைகளென்று இஞ்ஞாசியார் மதித்திருந்தார். அவர் தோழர்களும் அவர் கருத்துப்

யடி அவைகளையே பிரதானமாய் பிரயோகித்துவந் தார்கள். எவ்விஷயத்தையும் தேவசந்நிதியில் சீர் தூக்கி நிதானித்துச் செய்துவந்த இஞ்ஞாசியார் யாவரும் பாரீஸில் இன்னும் இரண்டு வருஷமிருந்து, சாஸ்திரம் படித்து முடித்தபின் தான், வார்த் தைப்பாட்டின்படி ஜெருசலேமுக்குப பிரயாணப் படவேண்டுமென்று தீர்மானித்தார். ஆனால் ஒவ் வொரு வருஷமும் மேற்சொன்ன வார்த்தைப் பாட்டை அதே தினத்தில், அதே ஸ்தலத்தில் யாவரும் புதுப்பித்து வரவேண்டுமென்று விரும் பினார்.

இதற்குப்பின் ஜெபதப முயற்சிகளில் இஞ்ஞாசி யார் முன்னிலும் இருமடங்கு அதிக சுறுசுறுப்புள் ளவரானார். அவர் அநுசரித்து வந்த கடும் உப வாசத்தினாலோ என்னமோ, சமயத்துக்குச்சமயம் ஓர் வகை கொடிய வயிற்றுநோவால் உபாதிக்கப் பட்டு வந்தார், ஓர்நாள் இந்நோவு பதினாறு பதி னேழு மணிநேரமளவாய் நீடித்திருந்தது. இந் நோவு மிகுதியால் காய்ச்சலுண்டாகி வியாதியாய் விழுந்தார். ஔஷதங்களால் யாதொரு பிரயோ சனமும் சித்திக்கவில்லை. தன் ஜென்ம நாட்டில் சிலகாலம் போய் வசித்தல் சௌக்கியத்துக்கு அநு கூலமாயிருக்குமென்று வைத்தியர்கள் அபிப்பிரா யப்பட்டார்கள். அவருடைய தோழர்களெல்லாம் வைத்தியர்கள் சொன்னபடி செய்ய அவரை வருந்தி மன்றாடினார்கள். மேலும் சவேரியார், லேய்னஸ்,



சால்மரோன் என்பவர்கள் தங்கள் ஜென்ம நாட் டில் குடும்ப விஷயமாய் சில காரியங்களை ஒழுங்கு பண்ணவேண்டியிருந்தது. தங்கள் பந்துக்களைத் தாங்களே நேரில் சந்தித்து தங்கள் கருத்துகளை அவர்களுக்கு வெளியிட இவர்கள் அஞ்சியிருந்த மையால், இவர்கள்பேரால் இஞ்ஞாசியாரே போய் எல்லாம் ஒழுங்குபண்ணுவது உத்தமமெனத்தோன் றியது. இதுவுமன்றி தன் ஜென்ம நாட்டுக்கு ஒரு தரமாகிலும் திரும்பிப்போக வேறோர் முகாந்தரம் இஞ்ஞாசியார் உள்ளத்திலிருந்ததாக, பின் வருப வைகளைக்கொண்டு விளங்கும். திடீரென்று நேர்ந்த ஓர் துன்பத்தால், குறித்த பயணத்தை சிலநாள் நிறுத்திவைக்கவேண்டியதாயிற்று.

இஞ்ஞாசியார் ஏதோ ஓர் இரகசிய சபையை ஏற் படுத்தி வருவதாகவும், அவர் கையில் ஏதோ ஓர் புஸ்தகம் இருப்பதாகவும், அதில் சத்தியவேதவிசு வாசத்துக்கு ஒவ்வாத தப்பறைகள் இருக்கக்கூடு மென்பதாகவும், லவுரேன்ஸீயுஸ் என்னும் வேத விசாரணைக் கர்த்தாமுன் முறைப்பாடு கொண்டு வரப்பட்டது. இஞ்ஞாசியார் விசாரணைக் கர்த்தா வைத் தேடிப்போய், உடனே காரியத்தை விசா ரித்து முடிவுசெய்ய வேண்டுமென்று மன்றாடி னார். அவரோவெனில் விரோதிகள் சொன்ன முறைப்பாட்டில் தாம் ஒன்றும் நம்பவில்லையென்று சொல்லி, அவர்கள் குறித்துப்பேசிய புஸ்தகத் தைத் தமக்கு காண்பிக்கும்படி கேட்டார். ஞான

முயற்சிகள் என்னும் தமது சிறு பிரபந்தத்தை இஞ்ஞாசியார் உடனே அவர் கையிற்கொடுத்தார். விசாரணைக்கர்த்தா அதைப் பார்வையிட்டு வெகு சந்தோஷமடைந்து, தாம் அதைப்பார்த்து ஓர் பிரதி செய்துகொள்ள இஞ்ஞாசியாரிடத்தில் விடைகேட்டார். இஞ்ஞாசியார் அதற்கு சந்தோஷமாய்ச் சம்மதித்தார். லோயோலா இஞ்ஞாசியாருடைய சீவியத்திலும், போதனையிலும், அவர் தோழர்களுடைய சீவியத்திலும், அவர் எழுதிய "ஞானமுயற்சிகள்" என்னும் புஸ்தகத்திலும், சத்தியவேதாநுசாரத்துக்கு ஒவ்வாததொன்றுமில்லை என்னும் தாற்பரியமுள்ள பத்திரம் ஒன்று சில சாட்சிகள் முன் தமது கையொப்ப முத்திரையோடு மேற்சொன்ன விசாரணைக்கர்த்தா எழுதிக்கொடுத்தார்.

இப்பத்திரம் கைப்பற்றியதும், இஞ்ஞாசியார் தமது ஜென்ம நாட்டுக்குப் பயணப்பட்டார். புறப்படுமுன் தமது தோழர்களை பாபர் இராயப்பர் பராமரிப்பில் ஒப்புவித்துவிட்டு, அவர்களெல்லாரும் 1537-ம் ௵, அதாவது இரண்டு வருஷத்துக்குப் பின், அர்ச். சின்னப்பர் மனந்திரும்பின திருநாளன்று, பாரீஸ் நகரத்தைவிட்டு வேனீஸ் நகரத்துக்கு வரவேண்டுமென்றும், அதற்குள்ளாக தாமும் வேனீஸ் நகரத்துக்குப் போய் அங்கு அவர்களுக்கு எதிர்பார்த்திருப்பதாகவும் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

---

# இரண்டாம் பாகம்.

## 1-ம் அதிகாரம்.

இஞ்ஞாசியார் பாரீஸ் நகரத்தைவிட்டு தமது ஜென்ம நாட்டுக்குப் புறப்பட்டது—அரிய தாழ்ச்சி—ஆஸ்பெய்ஷா ஊரில் அவர் செய்த நன்மைகள்— புதுமை செய்யும் வரம்—பொலோஞாவுக்குப் போகும் வழியில் நேர்ந்த பெரும் ஆபத்து— பொலோஞா — வேனீஸ்—டியேகோ ஹோஸஸ்.

## 1535—1536.

1535-ம் ௵ மார்ச்சு ௴ 25௳, இஞ்ஞாசியார் பாரீஸ் நகரத்தைவிட்டுப் புறப்பட்டார். பலவீனத்தின் நிமித்தம் குதிரைமீதேறிச் சென்றார். லொயோலா மாளிகைக்கு சில மைல் தூரத்தில் வரும்போதே, அவர் வரும் செய்தி அவர் அண்ணன் எவ்விதமோ கேள்வியுற்று, தானும் தன் மற்ற சகோதரர்களும் பந்துக்களும் சேவகர்களுடன் பரிவாரமாய்ச் சென்று அவரை மகிமையோடு அழைத்துவர விரும்பினார்கள். ஆனால் இஞ்ஞாசியார் தாழ்ச்சியினால் ஆரவாரத்துக்கஞ்சி தன் ஊரில் காலெடுத்து வையாமல் அப்புறம் போனாலும் போய்விடலா

ரென்று பயந்து, அப்படிச்செய்யாமல் அவரைச் சந்தித்தழைத்து வரும்படி இரு குதிரை வீரர்களை மாத்திரம் அனுப்பினார்கள். இஞ்ஞாசியாரோவென்றால் அவர்களோடு தன் தமயன் மாளிகைக்குப் போவதற்குப் பதிலாய் நோயாளிகள் சாலையில் தங்கி, வீடு வீடாய் பிச்சையெடுத்து, பிச்சைக்காரர்களோடு ஒன்றாய் உட்கார்ந்து போசனம் செய்து வந்தார். அவர் அண்ணனும் மற்ற பந்துக்களும் அவ்வூர் குருக்களும் மாளிகைக்கு வரும்படி அவரை எவ்வளவுதான் விரும்பி மன்றாடியும், அவர் அதற்கிணங்கவில்லை. "சேசுக்கிறீஸ்துநாதரைப் பற்றும் நேசத்தால் தரித்திரனான எனக்கு தரித்திரர் வசிக்கும் இல்லிடமே தகுந்த வாசஸ்தலம்" என்று சொல்லிவிட்டார். அவர்கள் அனுப்பிவைக்கும் நல்ல போசனங்களை வியாதியஸ்தர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிடுவார். அவர் அண்ணன் மனைவியுடைய கட்டாயத்தால் ஒருநாள் லொயோலா மாளிகையில் தங்கியிருக்க உடன்பட்டார்.

நோயாளிகள் சாலையில் அநேகர் அவரைக்கண்டு பேச வருவார்கள். இவர்களெல்லாம் தேவசிநேகம் நிறைந்த அவருடைய ஞான சம்பாஷணையைக் கேட்டு, இருதயத்தில் புனித சிந்தனையுடையவர்களாய்த் திரும்பிப் போவார்கள். தினம் சிறுவர்களுக்கு ஞான உபதேசம் சொல்லிக் கொடுக்க ஆவலாயிருந்தார். அவருடைய அண்ணன் பெர்த்ராம்பிரபு ஞான உபதேசத்துக்கு ஒருவரும்



வரமாட்டார்களென்று தடுத்துச் சொன்னார்.
"ஒரே ஒரு பிள்ளை மாத்திரம் வந்தாலும் எனக்கு
திருப்திதான்" என்று சொல்லி, ஞான உபதேசம்
ஆரம்பித்தார், சிறுவர்கள் மாத்திரமல்ல, பெரி
யோர்களுக்குள்ளும் அநேகர் தினம் தவறாமல் வந்
தார்கள். அவர்களோடு பெர்த்ராம் பிரபுவும் வந்
தார். விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைகளிலேயும்,
திருநாட்களிலேயும் அவர் போதகத்தைக் கேட்க
பல மைல் தூரத்திலிருந்துமுதலாய் ஜனங்கள் வரு
வார்கள். அவர் செய்த முதல் போதகத்தால்,
அவர் இருதயத்தில் குடிகொண்டிருந்த அத்தியந்த
தாழ்ச்சியைக்கண்டு யாவரும் வியப்படைந்தார்கள்.
வாலிபத்தில் தாம் செய்த குற்றங்களால் மற்ற
வர்களுக்கு வந்திருக்கக்கூடிய துர்மாதிரிகையை
நினைத்து தாம் ஓயாமல் மனம் நொந்து தினம் சர்
வேசுரனிடத்தில் பொறுத்தல்கேட்டு வருவதாக
வும், தமது நாட்டாரிடத்திலும் பொறுத்தல்கேட்டு
தம்மால் கூடிய பரிகாரம் செய்யவேண்டுமென்கிற
ஆசை, தாம் செய்த பயணத்துக்கு ஓர் விசேஷ
காரணமென்றும் வெளிப்படுத்தினார். "மேலும்
குற்றமில்லாத ஒருவருக்கு நான் செய்த அநீதத்
துக்கு பரிகாரம்செய்வதற்காக, நான் இங்கு திரும்பி
வருவது எனக்கு ஓர் கடமையாயிருந்தது" என்று
சொல்லி, கூட்டத்தில் நின்ற ஒருவரைக் குறித்துக்
காட்டி சொல்லுவார்: "அதோ நிற்கிறாரே, அவர்
என் நிமித்தம்,—நானும் என்னோடு சேர்ந்த சிலரு

மாய் ஓர் தோட்டத்தில் பழங்களை மிகுதியாய் திருடினதற்காக,—சிறையில் அடைக்கப்பட்டு, அபராதமும் கொடுக்கலானார். அவர் குற்றவாளியல்ல, நானே குற்றவாளி என்று சகலரும் இப்போது அறிந்துகொள்ளுங்கள்! அவருக்குச்செய்த அநியாயத்துக்குப் பரிகாரமாக, இதோ நாலு பேரறிய எனக்குச் சொந்தமான இரண்டு பயிர் நிலங்களை முழுதும் அவருக்கு சுதந்தரமாகக் கையளித்துவிடுகிறேன்" என்றார்.

அருமையான இத்தாழ்ச்சியைக்கண்டு சகலரும் அவர்மீது மேலான எண்ணமும் பேரன்புமுடையவர்களாய், அவர் சொல்லும் நற்புத்திகளுக்கு காது கொடுத்து அவைகளின்படி நடக்க தீவிரித்தார்கள். பரிசுத்ததனத்துக்கு ஒவ்வாத துர்மாதிரியான ஓர் கெட்ட வழக்கம் அந்நாட்டுப் பெண்பிள்ளைகளுக்குள் அக்காலத்தில் வழங்கிவந்தது. இஞ்ஞாசியார் அதைக் கண்டித்து, நகர அதிகாரிகளுடைய உதவியைக்கொண்டு விலக்கம் செய்தார். சீட்டு முதலிய சூதாட்டங்களால் வெகு தின்மை விளைந்துவந்தது. இஞ்ஞாசியாருடைய போதனையால் நகர அதிகாரிகள் முயற்சியெடுத்து, ஒருவரும் சூதாடப்படாதென்று கண்டிப்பான நிபந்தனை செய்தார்கள். வேறு சில தீய வழக்கங்களையும் கண்டித்து விலக்கம் செய்தார். இதுவுமன்றி நன்மை பயக்கும் சில சுகிர்த வழக்கங்களையும் ஏற்படுத்தினார்.



ஒருகாலத்தில் நல்ல ஸ்திதியிலிருந்து வறுமைப்பட்டு பிச்சையெடுக்க நாணியிருப்பவர்கள்மீது இஞ்ஞாசியார் என்றும் கருத்தாய், இரகசியத்தில் அவர்களுக்கு உதவிசெய்து வருவதை முன்னமே கண்டிருக்கிறோமல்லவா? தமது சொந்த ஊராகிய ஆஸ்பெய்ஷா பட்டணத்தில், இப்பேர்ப்பட்டவர்களைத் தேடி முற்றும் இரகசியத்தில் அவர்களுக்கு சகாயம் செய்துவரும்படியாக, தமது பிதிரார்ச்சித சொத்தின் வரும்படியை ஊரில் முகான்மையான சிலர் கையில் ஒப்புவித்து அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்தார். "**பிச்சையெடுக்க நாணியிருக்கும் தரித்திரருக்கு உதவி செய்யும் சபை**" என்று பிற்காலத்தில் இத்தாலியா தேசத்தில் ஸ்தாபகம் பெற்ற சபைக்கு, ஆஸ்பெய்ஷா பட்டணத்தில் இஞ்ஞாசியார் ஸ்தாபித்த இச்சிறு சபையே அஸ்திவாரமாம். தினம் மத்தியான வேளையில் கோவில் மணியடித்து, மணிச்சத்தம் கேட்டதும், சாவான பாவத்தோடிருக்கும் நிர்ப்பாக்கிய ஆத்துமாக்களுக்காக சகலரும் வேண்டிக்கொள்ளும் வழக்கமும் ஏற்படுத்தினார். உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக இரவில் விசேஷ ஜெபங்கள் செய்து வரும் வழக்கம் வரவரத் தளர்ந்து போவதாகக் கண்டு, அதை ஸ்திரப்படுத்தினார்.

அவருடைய மன்றாட்டால், அவர் தமயன் பெர்த்ராம் பிரபு ஞாயிற்றுக்கிழமைதோறும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக்குறித்து பன்னிரண்டு எளிய

வர்களுக்கு லொயோலா மாளிகையில் போசனங் கொடுக்க உடன்பட்டார்.

இதற்கு ஐந்து வருஷங்களுக்குப் பின் 1541-ம் வருஷம் உரோமாபுரியிலிருந்து இஞ்ஞாசியார் தமது ஊராருக்கு வெகு பட்சத்தோடு ஒரு நெடுங் கடிதம் எழுதினார். அதில் தாம் அவர்களோடிருக்கும்போது, தமது வார்த்தையைக் கேட்டு தீய வழக்கங்களை ஒழித்து, மேற்கூறிய நல்ல வழக்கங்களை உற்சாகமாய் கையேற்றுக்கொண்டதை நினைத்து, தாம் சந்தோஷிப்பதாக சொல்லுகிறார். அடிக்கடி திவ்வியநன்மை வாங்கிவரவேண்டுமென்றும், அதற்குத் தூண்டுதலாக "**திவ்விய சற்பிரசாத சபை**" என்று உரோமாபுரியில் அர்ச். சாமிநாதர் சபை சந்நியாசக் குருக்களில் ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு புது சபையை, அவர்களும் தங்களுக்குள் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டுமென்றும் விரும்பிக்கேட்கிறார். அவர்கள் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவினிடமாய் உற்சாகமும் திடனும் அடையும்படி, அவர்களுக்காக அர்ச். பாப்பானவரிடத்திலிருந்து இரண்டு மூன்று விசேஷ பலன்களடங்கிய அதிகாரப்பத்திரமொன்று பெற்று அனுப்பியிருக்கிறதாகவும் சொல்லுகிறார். இஞ்ஞாசியார் விருப்பப்படி மேற்சொன்ன சபை ஆஸ்பெய்ஷா பட்டணத்து ஜனங்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நாள் வரைக்கும் இச்சபை அங்கு நீடித்திருக்கின்றது.



தன் சொந்த ஊரில் இஞ்ஞாசியார் தேவதோத் திரத்துக்காக இவ்விதம் முயற்சியெடுத்து உழைத் துவரும்போது, சர்வேசுரன் அவருக்கு புதுமை செய்யும் வரம் கொடுக்க சித்தமானார். நாலுவருஷ காலமாய் பசாசு ஆவேசமாயிருப்பதாக எண்ணப் பட்டிருந்த ஒரு பெண் பிள்ளையை அவர்முன் கொண்டுவந்தார்கள். தாம் இன்னும் குருப்பட்டம் பெறாததால், திருச்சபை ஆசாரப்படி அவளை மந்தி ரிக்க தமக்கு அதிகாரமில்லையென்று சொன்னார். ஆனால் அவளுக்காக சற்று ஜெபித்துக்கொண்டு, அவள் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந் தார். அவளும் சௌக்கியமடைந்தாள். காக்கை வலிப்பால் வெகுகாலமாய் உபாதிக்கப்பட்டு வந்த ஒருவனையும் அவ்விதமே நெற்றியில் சிலுவை வரை ந்து சொஸ்தமாக்கினார். க்ஷயரோகத்தால் உடல் மெலிந்து மரணத்துக்கெதிர்பார்த்திருந்த ஒரு எளிய பெண்பிள்ளை அவருடைய வேண்டுதலால் பூரண ஆரோக்கியமடைந்து, நன்றியறிதலாக சில கனிகளை அவருக்குக் கொண்டுவந்து கொடுத்தாள். இஞ்ஞாசியார் அவ்வெளியவளின் சிறு காணிக் கையை வேண்டாமென்று சொல்லவில்லை. அவை களையெடுத்து நோயாளிகள் சாலையிலுள்ள ஆதர வற்ற வியாதியஸ்தருக்குப் பகிர்ந்துகொடுத்தார்.

ஆஸ்பெய்ஷாவுக்கு வந்த துவக்கத்தில் சில காலம் நல்ல சௌக்கியமாயிருந்தார். ஆனால்

மிஞ்சின பிரயாசையால் திரும்பவும் வியாதியாய் விழுந்தார். அப்போது முதலாய் நோயாளிகள் சாலையை விட்டு தன் கோத்திரத்து மாளிகைக்குப்போக உடன்பட்டவரல்ல. ஆனால் அவர் பந்துக்களில் இரு சீமாட்டிகள் நோயாளிகள் சாலைக்கு வந்து, அவரை அருமையாய் விசாரித்து, இராப்பகலாய் அவருக்கு ஒத்தாசை செய்துவந்தார்கள். வியாதிக்காரர் நித்திரை செய்துவந்த அறையில் இராமுழுதும் ஓர் விளக்கெரிந்துகொண்டிருப்பது நன்மையாயிருக்குமென்று மேற்சொன்ன இரு சீமாட்டிகளும் உத்தேசித்து, அதற்காக ஓர் விளக்கேற்றி வைக்கப்போனார்கள். இஞ்ஞாசியார்: அது அவசியமில்லை, தமக்கு யாதேனும் குறைவுபட சர்வேசுரன் விட்டுவிடமாட்டாரென்று சொன்னார். நடுச்சாமத்தில் பெ மூச்சும் பிரலாபமும் கேட்டு, அடுத்த அறையில் நித்திரைசெய்துகொண்டிருந்த இச்சீமாட்டிகள் என்னமோ ஏதோவென்று திடுக்கிட்டு வியாதிக்காரர் அறைக்குள் ஓடிவந்தார்கள். இஞ்ஞாசியாரோவெனில், குவித்த கரமும் பரலோகத்தை ஏறெடுத்துப் பார்த்த பார்வையுமாய் முழந்தாளிட்டு பரவசமானவர்போலிருப்பதையும், அவர் முகம் வெகு காந்தியாயிருப்பதையும், அவரைச் சுற்றிலும் திவ்வியமான ஓர் பிரகாசம் துலங்குவதையும் கண்ணுற்று. ஆச்சரியப் பிரமையடைந்தார்கள். இஞ்ஞாசியாரைப்பற்றிய இவ்விசேஷங்களும், இன்னும் வேறுபல விசேஷங்களும் ஆஸ்



பெய்ஷா ஊராருக்குள் இந்நாள்வரைக்கும் வாடிக்கைப் பேச்சாய் வழங்கிவருகின்றன.

மூன்றுமாதகாலம் தமது ஜென்ம ஊரிலிருந்த பின், தமது தோழர்களுடைய காரியங்களை ஒழுங்குபண்ணுவதற்காக பிரயாணப்பட்டுப்போக தீவிரித்தார். அவருடைய பந்துக்களும், ஊர்ஜனங்களும், குருக்களும் ஒன்றுகூடி அவர் தமது ஜென்ம ஊரிலேயே யிருந்து துவக்கின நன்மைகளைத் தொடர்ந்து செய்துவரும்படி மன்றாடினார்கள். இஞ்ஞாசியாரோ வென்றால் தேவதிருவுளம் தம்மை அழைக்கும் இடம் வேறே என்று அவர்களுக்கு உத்தாரம் சொன்னார். தேவ பராமரிக்கை தவிர, வேறு துணை ஆதாரம் ஒன்றுமின்றி கால்நடையாய் பிரயாணம் செய்ய தீர்மானித்திருந்தார். ஆனால் அவர் அண்ணன் அவரோடு வெகுவாய் வாதாடினதால், அவரும் வேறு பந்துக்களும் வழியனுப்பும்படி அந்நாட்டு எல்லைமட்டும் தம்மோடு வரவும், அதுவரை தாம் குதிரைமேல் ஏறிச்செல்லவும் உடன்பட்டார். எல்லையில் சேர்ந்ததும் குதிரையை விட்டிறங்கி, தன் அண்ணனிடத்திலும் மற்ற பந்துக்களிடத்திலும் விடைபெற்று கால்நடையாய்ப் பிரயாணம் செய்தார். அர்ச்சியசிஷ்டவர் ஏறிச்சென்ற குதிரைக்கு ஏதோ ஒரு அதிர்ஷ்டம் கிடைத்துவிட்டது. ஏனெனில் அன்றுமுதல் அதின்மேல் ஒருவரும் சவாரி செய்யப்படாதென்

றும், ஒரு வேலைக்கும் அதை உட்படுத்தப்படாதென்றும் தீர்த்து, அது தன்னிஷ்டம்போல் ஒரு தோப்பில் திரிய விட்டுவிட்டார்களாம்.

தம் தோழர்களுடைய விஷயங்களை ஒழுங்குபடுத்தினபின், வாலென்ஸியாவெனும் துறைமுகப் பட்டணத்துக்குப் போய், அங்கிருந்து இத்தாலியா தேசத்திலுள்ள ஜினோவா என்னும் பட்டணத்துக்குப் பிரயாணமாகக் கப்பலேறினார். யாத்திரையில் கடல் கொந்தளித்து பெரும் புசலெழும்பி கப்பற் சுக்கானும், பாய்மரமும் சேதமாய்ப்போக, பிரயாணிகளெல்லாம் மரணத்துக்கஞ்சி அபயசத்தமிட்டு பிரலாபித்தார்கள். இஞ்ஞாசியார் மாத்திரம் அமரிக்கையாய் மரணத்துக்கு எதிர்பார்த்திருந்தார். "சர்வேசுரன் எனக்களித்த எண்ணிறந்த வரப்பிரசாதங்களைத் தகுந்தபடி அவருடைய அதிமிகத் தோத்திரத்துக்காகப் பிரயோகியாமற் போனேனே" என்னும் கஸ்தி ஒன்றுதவிர, கலக்கம் பயம் முதலிய எதுவும் அற்பமும் அவர் உள்ளத்தில் எழும்பினதில்லை. தேவ கிருபையால் உயிர்ச்சேதமின்றி, கப்பல் ஜினோவா துறைமுகம் சேர்ந்தது. அங்கிருந்து பொலோஞாவெனும் பட்டணத்தை நோக்கி கால்நடையாய்ப் புறப்பட்டார். வழியில் பல துன்பத்துக்குள்ளானார். ஓர்சமயம் வழிதப்பி தாம்பட்ட அவஸ்தையை அவர்தாமே விவரித்துச் சொல்லியிருக்கிறார்.



பொலோஞாவுக்குப் போவதற்கு 'ஆப்பினைன்' என்னும் மலைக்கணவாய்களைக் கடந்துபோகவேண்டியிருந்தது. ஓரிடத்தில் வழிதப்பி, ஓர் நீரோடை ஓரமாய் சென்ற ஒத்தடிப் பாதையைப் பின்பற்றி நடந்தார். பாதை செங்குத்தாயிருந்ததால், வெகு பிரயாசப்பட்டு ஏறிச் செல்லவேண்டியிருந்தது. போகப்போகப் பாதை ஒடுங்கிக்கொண்டே வந்தது. சற்றுத்துலை சென்றதும் முன்னுக்குப் போவதும் மகா பிரயாசையாயிருந்தது, வந்தவழியே திரும்புவதென்றாலும் அதுவும் அசாத்தியமாயிருந்தது. கையிலகப்பட்ட செடிகளையும் கொடிகளையும் பற்றிப் பிடித்து அத்தியந்த பிரயத்தனப்பட்டார். இந்நேரமெல்லாம் ஒவ்வொரு க்ஷணமும் மரணம் அடுத்துவந்தாற்போலிருந்தது. ஏனெனில் சற்றே கால் கை சறுக்கினால், அடியில் பாதாளமாய் ஓடிய நீரோடையில் விழும்படி நேரிட்டிருக்கும். இவ்வாபத்தினின்று தாம் தப்பித்தது தேவ கிருபாகடாட்சத்தின் ஓர் புதுமையென்று அவருக்குத் தோன்றினது. இவ்வாபத்துக்குத் தப்பித்து, இளைத்துக் களைத்து, வழிநடந்து சென்றவர் பொலோஞா பட்டணத்தை அணுகிவரும்பொழுது, கால் தவறி சேறும் சகதியும் நிறைந்த ஒரு பள்ளத்தில் விழுந்து, மகா பரிதாபகோலமாய் பட்டணத்துக்குள் சென்றார். தெருக்களில் அவரைக்கண்ட அநேகர் அவரை நகைத்து பரிகாசம் செய்தார்கள். பட்டணம் முழுதும் வீடுவீடாய்ப்போய். பிச்சை

கேட்டார். இவ்வளவு பரிதாபக்கோலமாயிருந்த இவர்மீது இப்பட்டணத்தாருடைய இருதயங்கள் என்னவோ கடினப்பட்டுப்போயின. பசிக்களையினாலும், பட்டவருத்தங்களாலும் குளிராலும் வியாதியாய் விழுந்தார். தேவாதீனமாய் அங்கு வசித்த இஸ்பானிய தேசத்தார் சிலர் இரக்கமுற்று அவருக்கு இவ்விடமும் போசனமும் தந்து, ஒரு வாரமாக அவரை ஆதரித்துவந்தார்கள். அதற்குப் பின் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு 1535-ம் வருஷக் கடைசியில் வெனீஸ் நகர் வந்துசேர்ந்தார்.

இங்கு பாரீஸ் நகரில் துவக்கிய தேவ சாஸ்திரத்தைத் தொடர்ந்து படித்துவந்ததுமன்றி, ஒழிந்த நேரத்தில் தமது ஞான முயற்சிகளை போதிப்பதிலும், வேறுவிதமாகவும் ஆத்துமாக்களுக்கு சகாயம் செய்வதிலும் முயற்சியாயிருந்து, ஒப்பந்தப்படி தமது தோழர் வரவை எதிர்பார்த்திருந்தார். ஞான முயற்சிகளைச் செய்தவர்களுக்குள் மூன்றுபேர் அவர் கருத்துக்கிசைந்து அவருக்குத் தோழரானார்கள். அவர்களுள் டியேகோ ஹோசஸ் (Diego Hoses) என்பவர் ஒடுக்கத்திலிருந்து ஞான முயற்சிகளைச் செய்ய விருப்பங்கொண்டிருந்தார். ஆனால் அவைகளுக்கு விரோதமாய் சிலர் பேசக்கேட்டு, அவைகளில் விசுவாசத்துக்கு ஒவ்வாத போதனைகள் எதிலும் இருக்குமோ என்னமோவென்று அஞ்சியிருந்தார். மோசம்போகாதபடி ஒருவர்



கொடுத்த ஆலோசனையைப் பின்சென்று, தம்மோடு வேத வியாக்கியான புஸ்தகங்கள் சிலது கொண்டுவந்திருந்தார். ஆயினும் சில முயற்சிகள் செய்துமுடியுமுன், அவர் கொண்டிருந்த தப்பான எண்ணம் சூரியனைக்கண்ட பனிபோல் தானாய் ஒழிந்துபோயிற்று. சேசுசபையில் முதல்முதல் பரலோகபிராப்தியானவர் இவர்தான்.

## 2-ம் அதிகாரம்.

பாரீஸிலிருந்த அர்ச். இஞ்ஞாசியாருடைய தோழர்கள் ஒன்பதுபேருடைய பிரயாணம்—அர்ச். சவேரியார் செய்த அருந்தவ முயற்சியும், தேவ கிருபாகடாட்சத்தின் அற்புத சகாயமும்—பதிதமார்க்கத்தாலுண்டான அநீத கொடுமைகள்—தங்கள் அருமைத் தந்தையை திரும்பக் கண்ணோக்கிய மைந்தர்—தம் அருமை மைந்தரைத் திரும்ப கண்ணோக்கிய தந்தை—குருப்பட்டம்—ஏகாந்த சீவியத்தின்மேலுள்ள மிஞ்சின பற்றுதலால் ரோதிரிகேஸ் சுவாமியார் பட்ட சோதனை.

## 1536—1537.

பாரீஸ் நகரில் தேவ சாஸ்திரம் படித்துக்கொண்டிருந்த பாபர், சவேரியார் முதலியவர்கள் செய்ததென்ன? 1537-ம் ௵ ஜனவரிமாசக்கடைசியில் யாவரும் பாரீஸ் நகரைவிட்டுப் புறப்பட்டு வேனிஸுக்குவந்து இஞ்ஞாசியாரிடம் போய்ச்சேரவேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததல்லவா? ஆனால் பிராஞ்சுக்காரருக்கும் இஸ்பானியருக்கும் யுத்தம் ஆரம்பித்திருந்தமையால், தாம



தித்தால் பிரயாணத்துக்கு விக்கினம் நேரிடுமென்பதைப்பற்றி, குறித்த தெய்திக்கு முன்னமே 1536-ம் ௵ நவம்பர்-௴ 15-ம் ௳ பாரீஸ்நகரை விட்டுப் புறப்பட்டார்கள். ஆயினும் தடையின்றி புறப்படவில்லை. சாஸ்திரப் பயிற்சியிலும் சகிர்த ஒழுக்கத்திலும் மாட்சிமையுடைய இவர்களால் பாரீஸ் கலாசாலையிலும் நகரிலும் வெகு ஞான நன்மை நல்கி வந்தது. விசேஷமாய்ப் பெருந்தன்மையும், சாந்தமும் மதுரகுணமும், சாதாரண சம்பாஷணைகளிலும் போதனைப் பிரசங்கங்களிலும் வெகு சாதுரியத் திறமையும் உடைய பாபர் இராயப்பர், மேன்குலத்தாருக்குள்ளும், நாகரீகமும் சீர்மையுமடைந்தவர்களுக்குள்ளும், நன்மை செய்வதில் வெகு செல்வாக்குடையவராயிருந்தார். ஞான முயற்சிகளை நடத்துவதிலோ, அவைகளை உண்டாக்கின இஞ்ஞாசியாருக்குப் பிறகு, பாபர் இராயப்பருக்கு இணையானவர் கிடையாது. அவரால் அநேகர் பாவவழியை விட்டுத் திரும்பி நன்மாதிரிகையாய் நடந்து வந்தார்கள். ஆனதால் இவர்களைப் பாரீஸில் நிறுத்திக்கொள்ளும்படி அநேகர் முயன்றார்கள். விசேஷமாய் கல்வியிலும் புண்ணியத்திலும் மிகச்சிறந்த ஒருவர்: பிராஞ்சு தேசத்தில் நீங்கள் செய்துவரும் நிச்சயமான நன்மையைக் கைநெகிழவிட்டு, நிச்சயமற்ற நன்மைக்காக வேறொரு தேசத்தை நாடிப்போவது மனச்சாட்சிக்கே பொருந்தாத காரியமாக்கும்

என்று பாபர் இராயப்பரோடு வாதாடினார். இதனால் இஞ்ஞாசியார் தோழர்கள் மனம் சற்றாகிலும் தத்தளியாதிருந்திருக்கக் கூடுமா? ஆயினும் பாரீஸ் நகரில் உற்பவமான சேசுசபை பாரீஸ்நகரிலல்ல, சத்திய திருச்சபையின் இராஜதானியாகிய உரோமை நகரில் உருவாக வேண்டுமென்று தேவதிருவுளமிருந்தமையால், இவர்களெல்லாம் இஞ்ஞாசியாரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் ஒருமனப்பட்டு உறுதியாயிருந்து, பயணத்துக்கு ஆயத்தம் செய்தார்கள்.

எல்லாரும் ஒரே சமயத்தில் பாரீஸைவிட்டுப் புறப்படுவது யுக்தியாகக் காணவில்லை. ஆனதால் சிலர் ஒருசமயத்திலும், சிலர் வேறுசமயத்திலும் புறப்பட்டு, பாரீஸுக்கு சற்றுத் தூலையிலிருக்கும் மோ என்னும் பட்டணத்தில் ஒன்றுகூடி பிராஞ்சு தேசத்தைக் கடந்து, ஜெர்மானியா ஸ்வித்சர்லாந்து முதலிய தேசங்கள் வழியாய் இத்தாலியாவுக்கு ஒன்பதுபேரும் ஒருங்குடன் பிரயாணஞ் செய்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் ஜெபமாலையை உடுப்புக்குமேல் கழுத்தைச்சுற்றி அணிந்துகொண்டார்கள். கையிற்பிடித்த ஊன்றுகோலும், தோளில் தொங்கிய ஓர் பையில் வேதாகம புஸ்தகமும் வேறு சில புஸ்தகங்களும், அவசியமான செலவுக்கென்று ஓர் சொற்ப தொகையும் தவிர, வேறொன்றும் அவர்கள் தங்களோடு கொண்டுபோகவில்லை. எங்கும் வியாபித்து, எல்லாம் ஆண்டு நடத்தி பரா



மரித்துவரும் தேவ திருச் சந்நிதானத்தை இருதயத்தில் உணர்ந்து சிந்தித்தவர்களாய், வெகு அடக்கவொடுக்கத்துடன் பிரயாணம் செய்தார்கள். பலவீனத்தால் நடை தளர்ந்தவர்கள் முன்செல்ல, மற்றவர்கள் அவர்களைப் பின்றொடர்ந்து, இருவர் இருவராய் வழிநடந்து சென்றார்கள். ஒருநேரம் ஜெபித்துக்கொண்டு போவார்கள்; ஒருநேரம் ஞானக்காரியங்களைப்பற்றித் தங்களுக்குள் சம்பாஷிப்பார்கள்; ஒருநேரம் பக்திக்குரிய கீர்த்தனைகளைப் பாடுவார்கள். பாபர் இராயப்பரையன்றி, லேஜே என்பவரும், பாஸ்கேஸியுஸ் என்பவரும் குருக்களாயிருந்தார்கள். தினம் கூடுமானபோது இவர்கள் திவ்வியபூசை செய்வார்கள். மற்றவர்கள் பூசைகண்டு திவ்விய சற்பிரசாதம் உட்கொள்ளுவார்கள். இவ்வொன்பதுபேரும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளைப்போல் தங்களுக்குள் அன்னியோன்னிய சகோதர நேசமுடையவர்களாயிருந்தார்கள். ஒருவர் ஒருவருக்கு ஊழியஞ்செய்வதே அவர்களுக்கு பேரானந்தமாயிருந்தது.

பயணத்தில் அவர்கள்பட்ட துன்பங்களும் பல; சர்வேசுரன் அவர்களுக்குச் செய்த விசேஷ சகாயங்களும் பல. பயணத் துவக்கத்தில் நமது இந்துதேசத்து அப்போஸ்தலருக்கு நேரிட்டதை இங்கெடுத்துச் சொல்லவேண்டும். பிராஞ்சிஸ்கு சவேரியாருடைய இருதயம் மகா உதார குணமும் பெருந்தன்மையும் பொருந்திய இருதயம். ஒரு

தடவை சர்வேசுரன் பாரிசமாய்த் திரும்பியபின், ஒருதடவை தேவசிநேக அக்கினி அதில் பற்றிய பின், அத்தேவசிநேக அக்கினியில் முற்றும் தகன பலியாவதே அதன் இயல்பாயிருந்தது. இதனால் தாம் முன்செய்த சொற்ப குற்றங்களுக்கும் கடுந் தவஞ்செய்ய ஏற்பட்டார். சிறந்த தேகவலிமையுடைய இவர் கலாசாலையில் மற்ற வாலிபர்களோடு பந்தயம் ஓடுவதிலும் வேறு விளையாட்டுகளிலும் பிரீதியாயிருந்தார். அதில் ஏதோ மிஞ்சின சந்தோஷம் அநுபவித்ததாக எண்ணி, அதற்காகத் தம்மைத் தண்டிக்கும்படி நவமானதோர் உபாயமெடுத்தார். அதாவது: முடிச்சுகளுள்ள ஒரு கயிற்றை காலில் நன்றாய் இறுகக்கட்டிக்கொண்டு நடந்தார். ஐந்து நிமிஷம் இதைப் பரீட்சித்துப் பார்த்தால், இதனால் சரீரத்திலுண்டாகும் நோவு எத்தன்மையானதென்று ஒருவாறு அறிந்துகொள்ளலாம். ஐந்து நிமிஷமல்ல, சிலநாள் பரியந்தம் சவேரியார் இவ்வித உபாதையை உற்சாகமாய் தேவ மகத்துவத்துக்கு ஒப்புக்கொடுத்து வழி நடந்து சென்றார். மனவூக்கம் தளரவில்லை என்றாலும், நோவு மிகுதியால் சரீரபலம் தளர்ந்து, ஓர் நாள் நடக்க சக்தியற்று வழியில் சோர்ந்து விழுந்தார். காரணம் என்னவென்று சோதித்துப் பார்க்கும்பொழுது, கயிறு கட்டிய இடத்தைச் சுற்றி சதை அகோரமாய் வீங்கி, கயிறு உள்ளுக்கும், சதை மேலாகவும் ஆகிவிட்டதாகக் காணப்



பட்டது. அதைக் கண்டு அவர் தோழர்கள் பட்ட வியாகுலம் இவ்வளவு அவ்வளவென்றல்ல. அபேத்தனருக்கு வெகு பத்தனமாய் அவரைத் தூக்கிக் கொண்டுபோய் ஒரு வைத்தியரிடத்தில் காண்பித்தார்கள். வைத்தியர் பார்வையிட்டு, சதையை அறுத்தாலன்றி கயிற்றையெடுப்பது கூடாத காரியம், அப்படிச் செய்தாலோ நரம்புகளும் அறுபடும். ஆனதால், தேவ உதவியன்றி வேறுதவி இல்லையெனச் சொன்னார். யாவரும் தேவ உதவியை வெகு நம்பிக்கையோடு இரந்து மன்றாடினார்கள். அன்றிரவு அர்ச்சியசிஷ்டவர் நன்றாய் அயர்ந்து நித்திரை செய்தார். காலமே கண்விழிக்கும் பொழுது கயிறு தானாகத் தெறித்துத் தரையில் விழுந்துகிடக்க, வீக்கமும் நோவும் முழுதும் நீங்கி, கால் சௌஸ்தப்பட்டிருப்பதைக்கண்டு எல்லாரும் அத்தியந்த பக்தி உருக்கமாய் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்தார்கள்.

லுத்தேராலும் மற்றும் வேத துரோகிகளாலும் ஜெர்மானியா, ஸ்வித்ஸர்லாந்து முதலிய தேசங்கள் பெரும்பாலும் சத்தியமறை தவறி, புதிதாய் எழும்பின பதித மாய்கையில் மூழ்கியகாலம் இதுவே. வழிகெட்ட ஆங்காங்கு முன் அனுதினம் திவ்விய பூசைப்பலி நிறைவேறிவந்த சிறந்த தேவாலயங்களும் திருத்தலங்களும் பதிதருடைய அநீத கொடுமையால் பாழாய்க் கிடப்பதையும், சர்வேசுரனையும் அவர் திருத் தாயாரையும் அர்ச்சியசிஷ்டவர்களை

யும் ஸ்துதிப்பதற்காக அங்கு கூடும் பக்தியுள்ள விசுவாசிகளுக்குப் பதிலாய் எவ்வித அவிசுவாசிகளும் அக்கிரமிகளும் அங்கு கூடி சங்கைக்கேடாய் மனம்போல் பேசி சிரித்துவருவதையும் கண்ணுற்ற இத்தேவதாசர்கள் மனம் எவ்வளவோ புண்ணாய் நொந்து வருந்தியிருக்கவேண்டும்! அநேக இடங்களில் பதிதர்கள் இவர்களை நிந்தித்து உபத்திரவப் படுத்தினார்கள். பதிதப் பாதிரிகள் வீம்பு பாராட்டி இவர்களோடு வேதவிஷயமாய் தர்க்கம் செய்ய வருவார்கள். ஒவ்வொரு தடவையும் தோல்வியடைந்து திரும்புவதே இப்பாதிரிகளுக்குக் கிடைத்த லாபம்! இப்படித் தோல்வியடைந்தவர்கள் சில சமயங்களில் வெகுளிகொண்டு பிரயாணிகளைப் பலவிதமாய் துன்பப்படுத்துவார்கள். ஒரு நாள் சாயுங்காலம் காண்ஸ்ற்றன்ஸ் என்னும் பட்டணத்துக்கு பதினாறு மைல் துலையில் ஓரிடத்தில் தங்கியிருந்தார்கள். ஒருகாலத்தில் கத்தோலிக்குக் குருவாயிருந்து, தற்காலம் பதித பாதிரியாய்ப் பெண்சாதி பிள்ளைகளோடு குடும்ப சுகிதமாய் வசித்துவந்த ஒருவர், இவர்கள் கழுத்திலணிந்திருந்த ஜெபமாலையைக்கண்டு நகைத்து, அநேக ஜனங்கள் சூழ்ந்துநிற்க, டம்பமாய் தர்க்கிக்க ஆரம்பித்தார். அதிசீக்கிரம் லேய்னஸ் என்பவர் பாதிரியார் புதிதாய்க் கைக்கொண்ட மார்க்கத்தின் அபத்தமும், தேவதுரோகமாய் அவர் கைநெகிழ்ந்த பரிசுத்த கத்தோலிக்குத் திருமறையின் உண்மை



யும் தெளிவாய் விளங்கச் செய்தார். பாதிரியாரோ வென்றால் தர்க்கத்தை இடையில் நிறுத்தி, போசனம் செய்தபின் திரும்பவும் தர்க்கிக்கலாமென்று சொல்லி, பிரயாணிகளையும் தம்மோடு போசனத்துக்கழைத்தார். பிரயாணிகள் தர்க்கத்துக்கு உடன்பட்டார்களேயன்றி, போசனத்துக்கு உடன்படவில்லை. பாதிரியார் போசனவேளையில் திராட்சை இரசம் அப்ரிமிதமாய்ப் பருகி, நியாய முறைப்படி தர்க்கம் செய்வதற்குப் பதிலாய் கடுங்கோபங்கொண்டு வாயில்வந்தபடி பேசி, எல்லாம் நாளைக் காலை பார்த்துக்கொள்ளுகிறேனென்று அவர்களைப் பயமுறுத்தி அப்புறம்போய்விட்டார். பக்கத்திலிருந்த சிலர் அவர்களைப் பார்த்து உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகிறதே புத்தி, தாமதித்தால் ஒருவேளை துன்பம் வரக்கூடுமென்று எச்சரித்துச் சொன்னார்கள். பிரயாணிகள் இராத்தங்கி காலையில் புறப்பட்டுப் போவதுதான் நல்லதென்றெண்ணி சர்வேசுரன் கையில் தங்களைமுழுதும் ஒப்புவித்து நித்திரை செய்தார்கள். மறுநாள் அருணோதயத்தில் வெகு அழகிய முகமுடைய ஒருவர்,—சுமார் முப்பது பிராயமிருக்கலாம்,—பிரயாணிகள் அருகில் வந்து தன்னைப் பின்சென்று வரும்படி அடையாளம் செய்தார். பாதை ஒன்றுமில்லாத ஓர் மார்க்கமாக ஏறக்குறைய பத்துமயில்தூரம் அவர்களுக்குமுன் வழிகாட்டி நடந்தார். அவரைப் பின்தொடர்ந்து

ஒன்பதுபேரும் பிரயாசையின்றி நடந்தார்கள்.
ரஸ்தாப்பாதை வந்துசேர்ந்ததும், அவர்களைவிட்டு
அகன்றுபோனார். இவர் யாராயிருக்கலாம்?
தமது தாசர்களை ஆபத்தினின்று இரட்சிக்க சர்வே
சுரனால் அனுப்பப்பட்ட ஓர் வானதூதனா? அல்லது
பிரயாணிகள் இருந்த ஆபத்தான நிலைமையை
யறிந்து மனதிரங்கி அவர்களுக்குச் சகாயமாய்
வந்த ஓர் தர்மிஷ்ட மனிதனா?

பதிதர்களுக்கு இவர்களைக் காண்பது பகடியா
யிருந்தாலும் மெய்மறையில் உறுதியாயிருந்த கத்
தோலிக்கு கிறிஸ்துவர்களுக்கு இவர்களைக் காண்
பதோ பேரானந்தமும் ஆறுதலுமாயிருந்தது.
ஓர்நாள் ஓர் ஊருக்கருகில் வரும்போது, அவர்களைக்
கண்ணுற்ற ஓர் ஸ்திரீ உடனே முகம் மலர்ந்து சந்
தோஷித்தவளாய், பிரயாணிகள் கிட்டவந்து
அவர்கள் கழுத்தில் தொங்கிய ஜெபமாலையையும்
பாடுபட்ட சுரூபத்தையும் முத்திசெய்து, ஜெர்
மானிய பாஷையில் என்னென்னமோ வெகு
உருக்கமாய்ச் சொன்னாள். பிரயாணிகளுக்கு அப்
பாஷை தெரியாததால், அவள் சொன்னதின்ன
தென்று அவர்களுக்கு விளங்கவில்லை. பிறகு
சற்றே நிற்கும்படி அவர்களுக்கு சைகைசெய்து,
விரைவாய்ப்போய், சின்னபின்னமாய் உடைபட்ட
சில சிறு சுரூபங்கள், சிலுவைகள், ஜெபமாலை
மணிகள் முதலியவைகளைக் கை நிறையக் கொண்டு
வந்து அவர்களுக்குக் காண்பித்து, கண்களில் நீர்



ததும்ப முன்போல் ஜெர்மானிய பாஷையில்
ஏதோ வெகு பரிதாபமாய்ப் புலம்பினாள். பதிதர்
களுடைய அநீத கொடுமையால் சர்வேசுரனுக்கும்
அவருடைய அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் செய்யப்
பட்ட நிந்தையை நினைத்து மனம் நொந்து, அதற்
குப் பரிகாரமாக ஒன்பதுபேரும் தரையில் முழந்
தாளிட்டு அத்தியந்த வணக்கத்தோடு அத்துண்டு
களை முத்திசெய்தார்கள். அதைக்கண்டு அந்தப்
புண்ணிய ஸ்திரீ ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சர்
வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்
தாள்.

அதற்குப்பின் பிரயாணிகளுடன் ஊருக்குள்
சென்று, ஊரைப்பார்த்து சொல்லுவாள்: "உலக
மெல்லாம் லுத்தேர் போதனையைக் கையேற்றுக்
கொண்டதாக்கும்; உரோமான் கத்தோலிக்கு
வேதம் இருந்த இடமும் தெரியாமல் போய்விட்ட
தாக்குமென்று பிதற்றி என்னை ஏய்க்கப்பார்த்தீர்
களே. இதோ இவர்கள் யாரென்று பாருங்கள்!
நீங்கள் சொன்ன பொய்களை நான் நம்பாததால்
என்னைப் பைத்தியம் பிடித்தவளென்று ஊரை
விட்டு துரத்தினீர்களே. பைத்தியம் பிடித்தது
யார், நானா, நீங்களா?"—என்று விசுவாசியான
இந்தப் பெண்பிள்ளை விசுவாச துரோகிகளான
அவ்வூராரைக் கண்டித்துரைத்தாள். ஊராரெல்
லாம் ஒருமிக்க மதிமயங்கி சத்திய திருச்சபையைப்
பழித்து லுத்தேர் ஏற்படுத்திய நூதன மார்க்கத்

தைப் பின்சென்றார்களென்றாலும், இந்த எளிய பெண்பிள்ளைமாத்திரம் விசுவாசத்தில் உறுதியாயிருந்தாள். அதன் நிமித்தம் ஊரார் அவளை விரோதித்து துன்பப்படுத்தி, பைத்தியகாரியென்று அவளை ஊரைவிட்டு துரத்தினார்கள். வசிக்க வேறிடம் கிடையாததால், ஊருக்கு அப்பால் கொள்ளைநோய் பிடித்தவர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த ஓர் வைத்தியசாலையில் அடைக்கலம் புகுந்தாள்.

பிரயாணிகள் ஐம்பத்துநாலுநாள் கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்து, 1537-ம் ௵ ஜனவரி-௴ 6-ம் ௳ வேனீஸ் வந்து சேர்ந்தார்கள். வெகு காலமாய் தங்கள் அருமைத் தந்தையைவிட்டுப் பிரிந்த மைந்தர் திரும்ப அத்தந்தையைக் கண்டது போல், இவ்வொன்பதுபேரும் இஞ்ஞாசியாரைக் கண்டு சந்தோஷித்தார்கள். வெகுகாலமாய் தம்மை விட்டுப் பிரிந்த தம் அருமை மைந்தர்களைத் திரும்பக் கண்ணுற்ற தந்தைபோல், இஞ்ஞாசியாரும் தந்தையின் அன்பு ஒளிரும் நேத்திரங்களால் அவர்களைக் கண்ணோக்கி அகமகிழ்ந்து சர்வேசுரனை ஸ்துதித்தார். இவ்வன்னியோன்னிய நேச சந்தோஷத்தில், பிரயாணிகள் பயணத்தால் உண்டான களைப்பை மறந்துவிட்டார்கள். வேறு மூன்று பேர் தங்களோடு சேர்ந்திருப்பதையும் அறிந்து ஆனந்தித்தார்கள்.



ஜெருசலேமுக்குப் பிரயாணப்பட இன்னும் சமயம் வரவில்லை. அதுமட்டும் நோயாளிகள் சாலைகளில் தங்கி, சரீர சம்பந்தம் ஆத்தும சம்பந்தமான பிறர்சிநேகக் கிரிகைகளை வெகு சுறுசுறுப்போடு செய்துவந்தார்கள். கல்வி கலைக்கியானத்தில் மிகத்தேர்ந்த இவர்கள்,—சிலரோ மேன்குலத்தில் பிறந்தவர்கள்,—தேவசிநேகம் பிறர் சிநேகத்தால் தூண்டப்பட்டு, மனிதர் கண்ணுக்கு மகாத் தாழ்மையான அலுவல்களை வெகு ஆவலாய்த் தேடிச்செய்வதையும், அருவருப்பான எவ்வித இரணமும் புண்ணுமுடைய பிணியாளிகளைத் தங்கள் கரங்களால் கழுவி, அவர்கள் அண்டையிலிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்துவருவதையும் கண்ணுற்ற நகர் அதிகாரிகளும் ஜனங்களும் ஆச்சரியப் பிரமையடைந்தார்கள். இஞ்ஞாசியாரிடத்தில் விளங்கின வீரதத்துவமான புண்ணியங்களை அவருடைய தோழர்களும் கண்டுபாவிக்கப் பிரயாசப்பட்டார்கள். விசேஷமாய் சவேரியார் தம் ஞானப் பிதாவைப் பின்சென்று தன் சுபாவத்தை ஜெயிக்கும்படியாக நோயாளிகளுடைய இரணங்களில் வாய்வைத்து உறிஞ்சியதாகச் சொல்லுகிறார்கள்.

சுமார் பத்து வாரம் சென்றபின், தபசுகால நடுவில் ஜெருசலேமுக்குப் பிரயாணப்பட்டு, அதற்கு முன் அர்ச். பாப்பானவருடைய ஆசீர்வாதமும் அநுமதியும் பெற்றுக்கொள்ளும்படி உரோமா

புரிக்கு கால் நடையாகப் புறப்பட்டு வெகு வருத்
தத்தோடு பலநாள் பயணஞ்செய்து அங்குபோய்
சேர்ந்தார்கள். இஞ்ஞாசியார் மாத்திரம் அவர்
களோடு போகவில்லை. சில காரணங்களைப்பற்றி,
தாம் அச்சமயம் உரோமாபுரிக்குப் போவது தகுதி
யல்லவென்று எண்ணியிருந்தார்.

மூன்றாம் பவுல் (Paul III) என்பவர் இது சம
யம் பாப்பானவராய்த் திருச்சபையை வெகு திற
மையோடு ஆண்டு வந்தார். சிறந்த கல்விமானான
இந்த பாப்பானவர் கல்விமான்கள்மீது விசேஷ
அபிமானமுடையவராயிருந்தார். கல்விமான்கள்
கல்விப்பொருளைப்பற்றித் தங்களுக்குள் கலந்து சம்
பாஷித்து தர்க்கம் செய்வதைக் கேட்பது அவருக்
குப் பேரானந்தமாயிருக்கும். பாபர், சவேரியார்,
லேய்னஸ் முதலியவர்கள் அவர் சமுகம் சென்ற
தும், சாஸ்திரப் பயிற்சியிலும் புண்ணியப் பயிற்சி
லும் அவர்கள் மிகத் தேர்ந்தவர்களாயிருப்பதைக்
கண்டு களிகூர்ந்து, அவர்களோடு பட்சமாய் வார்த்
தையாடி, "இவ்வளவு கல்வித்திறமையும் அதற்
கிணையாக அமைந்த இவ்வளவு தாழ்ச்சியையும்
கண்டு ஆனந்த சந்தோஷம் அடைந்தோம்"
எனக் கூறினார். பிரயாணிகள் ஜெருசலேமுக்குச்
செல்ல பரிசுத்த பிதாவின் அநுமதியும் ஆசீர்வாத
மும் கேட்டார்கள். "சந்தோஷமாய் உத்தாரம்
தருகின்றோம். ஆனால் நீங்கள் போவீர்களென்பது



மாத்திரம் சந்தேகம்" என்றார். ஜெருசலேமைக்
கைப்பற்றியிருந்த துருக்கருக்கும், கிறீஸ்தவர்
களுக்கும் அதிசீக்கிரம் யுத்தம் நேரிடுமென்று
அறிந்திருந்ததினால் அப்படிச் சொன்னார். மேலும்
இஞ்ஞாசியாரும் இன்னும் குருப்பட்டம் பெறாத
மற்றவர்களும், தங்களுக்கு இஷ்டமான கத்தோ
லிக்கு மேற்றிராணியாரிடத்தில் குருப்பட்டம்
பெற்றுக்கொள்ளலாமென்று, யாவரிலும் வயதில்
சிறியவராயிருந்த அல்போன்சோ சால்மரோன்
என்பவர் இருபத்துமூன்று வயதில் குருப்பட்டம்
பெறலாமென்றும் உத்தாரமளித்தார். இதற்குப்
பின் ஒன்பதுபேரும் வேனீஸுக்கு திரும்பிவந்து
சேர்ந்தார்கள்.

இஞ்ஞாசியாரும், அவரோடு இன்னும் குருப்பட்
டம் பெறாத அவருடைய தோழர்கள் ஆறுபேரும்,
1537-ம் ௵ ஜூன்-௴ 17-ம் ௳ சப்டீக்கன்
பட்டமும், டீக்கன் பட்டமும், 24-ம் ௳ அர்ச்.
ஸ்நாபக அருளப்பர் பிறந்த திருநாளன்று குருப்
பட்டமும் பெற்றார்கள். முதல் பூசைசெய்வதற்கு
ஆயத்தமாக இரண்டுமூன்று பேராய்ப் பிரிந்து
வேனீஸ் நகரைவிட்டு தனிவாசத்துக்கு தகுந்த
இடங்களைத் தேடிச்சென்றார்கள். இஞ்ஞாசியார்
பாபர் லேய்னஸ் என்பவர்களோடு, வாசலுக்கும்
ஜன்னலுக்கும் கதவொன்றுமின்றி பாழாய்க்கிடந்த
ஒரு மடத்தில் ஏகாந்தம் புகுந்தார். ஜெபதபத்
தில் விசேஷ கருத்தாயிருந்தாலும், பிறர் ஆத்தும

இரட்சணிய அலுவலை விட்டுவிடவில்லை. இத்தனிவாசம் இஞ்ஞாசியாருக்கு வேறோர் மன்ரேசா போலிருந்தது.

லூஜே என்பவரோடு அந்தோனியோ என்ற ஓர் முனிவரை அடைந்து அவர் குடிசையில் தனிவாசம் செய்துவந்த ரொதிரிகேஸ் என்பவர் அவ்விடத்தில் வியாதியாய் விழுந்தார். முனிவர் வியாதிக்காரருக்கு தம்மால் கூடிய ஒத்தாசையெல்லாம் பட்சத்தோடு செய்துவந்தார். ஆனால் நாளுக்குநாள் வியாதி அதிகரித்தது. அவரை வந்து பார்த்த வைத்தியர் வியாதி குணமாவது அசாத்தியமென்று சொன்னார். இஞ்ஞாசியாரோ ஓர்வகை உட்காய்ச்சலால் வெகு பலவீனப்பட்டிருந்தாலும், இது செய்தி கேள்வியுற்றதும் உடனே பாபரை தம்மோடு அழைத்துக்கொண்டு வியாதிக்காரரைப் போய்ப்பார்க்கத் தீவிரித்தார். எவ்வளவு விரைவாய் நடந்துசென்றாரென்றால், பாபருக்கு அவரைத் தொடர்ந்து நடப்பது அசாத்தியமாயிருந்தது. தாராளமாய் ஜெபம்பண்ணுவதற்காக இஞ்ஞாசியார் ஒருதடவை நின்ற சமயம்பார்த்து, பாபர் எட்டி நடந்து அவரண்டை வந்துசேர்ந்தார். அப்போது ஜெபம் செய்துகொண்டிருந்த அர்ச்சியசிஷ்டவர் முகத்தில் ஓர் விசேஷ ஒளி துலங்குவதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். ரொதிரிகேஸ் மரணமடையமாட்டார் என்று இஞ்ஞாசியார் பாபுருக்கு வழியில் சொன்னார். இஞ்ஞாசியாரைக் கண்டது



முதல் வியாதிக்காரரும் ஆரோக்கியமடையத் துவக்கினார்.

ஆரோக்கியமடைந்து, முனிவர் குடிசையை விட்டு நீங்கினபின், ரொதிரிகேஸ் சுவாமியார் சிலநாளாகத் திருப்தியற்று துக்கசாகரத்தில் அமிழ்ந்தினவராகக் காணப்பட்டார். பிறர் ஆத்தும இரட்சணியத்தை முன்னிட்டு எவ்வகை மனிதரோடும் பேசிப்புழங்கிவருவதில் சாதாரணமாய் நேரிடும் பற்பல கவலை பராக்குகளைப்பற்றி, அச்சீவியத்தின்மேல் அவர் உள்ளத்தில் வெறுப்புண்டாயிற்று. உலக சந்தடியை விட்டகன்று, ஏகாந்தத்தில் அமரிக்கையாய் சர்வேசுரனைத்தேடித் தியானயோகமாயிருக்கும் சீவியத்தின்மீது அவருக்கு நாட்டமாயிருந்தது. ஆனதால் இஞ்ஞாசியாரை விட்டு நீங்கி முன்சொன்ன முனிவரோடு தனிவாசம் செய்வதென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, ஓர்நாள் ஒருவருக்கும் தெரியாமல் முனிவர் வசித்த இடத்தை நோக்கிச்சென்றார். ஆனால் ஆயுதந்தரித்த ஓர் மனிதன் சினந்த முகமாய் தனக்கெதிரே வருவதாக எண்ணி சற்றுத் திகைத்தார். ஆயினும், தைரியம் விடாமல் முன்னுக்குப்போகப் பிரயத்தனப்பட்டார். அப்போது, தோன்றிய ரூபம் தன்னை எதிர்த்து வருவதாகக் கண்டு திகிலடைந்து வந்தவழியே ஓட்டம்பிடித்தார். அவர் ஓடிப்போவதைப் பார்த்தவர்கள் ஏன் இப்படி ஓடுகிறாரென்று ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் நடந்த

தெல்லாம் அறிந்திருந்த இஞ்ஞாசியார் ஓடிவருகிறவரைப் போய்ச் சந்தித்து புன்சிரிப்புடன் "அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்" என்கிற வேத வாக்கியத்தைச் சொல்லி, அவரை அழைத்துக்கொண்டு போனார்.

மற்ற இடங்களில் சம்பவித்ததுபோல், வேனீஸிலும் விரோதிகள் அநீதமாய் இஞ்ஞாசியாரையும் அவர் போதனையையும் குற்றப்படுத்தத் தேடினார்கள். ஆனால் பாரீஸ் பட்டணத்தில் ஞான அதிகாரிகள் செய்ததுபோல், இங்கும் விசாரணைசெய்த வேத விசாரணைக் கர்த்தா: இஞ்ஞாசியாருடைய சீவியத்திலும் போதனையிலும் ஆட்சேபனைக்குரியது யாதுமில்லையென்று விரித்துரையாய் 1537-ம் ௵ அக்டோபர்-௴ 13-ம் ௳ தமது கையொப்ப முத்திரையோடு தீர்ப்புப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்.

இஞ்ஞாசியாரும் ரொதிரீகேஸ் சுவாமியாரும் தவிர, புதிதாய் குருப்பட்டம் பெற்ற மற்றவர்களெல்லாம் முதற் பூசை செய்து முடித்தார்கள். ரொதிரீகேஸ் சுவாமியார் மறுவருஷம் முதற்பூசை செய்தார். இஞ்ஞாசியார் குருப்பட்டம் பெற்றபின், ஒரு வருஷகாலம் ஆயத்தம் செய்துதான் முதற்பூசை செய்வதென்று தீர்மானித்திருந்தார். ஒரு வருஷம் சென்றதும் இன்னும் ஆறுமாதகாலம் தாமதம் செய்து 1538-ம் ௵ கர்த்தர் பிறந்த திருநாளன்று உரோமாபுரியில் முதற்பூசை செய்தார்.

---

## 3-ம் அதிகாரம்.

பற்பல இடங்களுக்குப் பிரிந்துபோகுதல்—உரோமாபுரிக்கருகில் அர்ச்சியசிஷ்டவர் கண்ட அருமையான அற்புத தரிசனம்—அர்ச்சியசிஷ்டவருடைய ஞானப் புத்திரர்களில் முதல்முதல் பரலோகம் சென்றவர்—பிரிந்துபோனவர்கள் திரும்ப ஒன்று கூடுதல்—கொடிய கலாபம்.

### 1537—1538.

கிறீஸ்தவர்களுக்கும் மகம்மதியர்களுக்கும் உண்டாயிருந்த யுத்தத்தின் நிமித்தம், ஜெருசலேமுக்குப் போகக்கூடவில்லை. ஆகையால் சிலகாலம் வேனீஸில் தங்கியிருந்தபின், இஞ்ஞாசியாரும் அவர் தோழர்களும் இத்தாலியா தேசத்தின் பற்பல பாகங்களுக்கு இரண்டு மூன்று பேராய்ப் பிரிந்துபோய், அப்போஸ்தலர்கள் பாவனையாய் பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காக முயற்சி செய்து உழைக்கத் தீர்மானித்தார்கள். இஞ்ஞாசியார், பாபர் லேய்னஸ் என்பவர்களோடு உரோமாபுரிக்குப் போகத் தீர்மானித்தார். பிரிந்து போகுமுன், ஒவ்வொருவரும் அநுசரிக்கவேண்டிய அப்போஸ்தல ஜீவியம் எத்தன்மையானதாயிருக்க

வேண்டுமென்று எல்லாரும் தங்களுக்குள் கலந்து
பேசி திட்டம் பண்ணிக்கொண்டார்கள். நீங்கள்
யார், எச்சபையைச் சேர்ந்தவர்கள் என்று கேட்
போருக்கு என்ன சொல்லுவதென்று தோழர்கள்
இஞ்ஞாசியாரைக் கேட்டார்கள். "சேசுசபை
யைச் சேர்ந்தவர்கள்" என்று சொல்லுங்களென
இஞ்ஞாசியார் அவர்களுக்குரைத்தார். கொம்பா
னியா (Compania) என்று இஞ்ஞாசியார் பிர
யோகித்த இஸ்பாஞிய சொல்லுக்கு சரியாய்ப்
பொருந்திய தமிழ்ச்சொல் 'சபை' என்பதல்ல,
'படைஅணி' என்பதாம்; அதாவது 'ஓர் தள
கர்த்தன் கீழ் யுத்தத்துக்கேகும் படைஞர் வகுப்பு'
என்றர்த்தமாகும். ஆனதால் சேசுசபை என்று
இப்போது சாதாரணமாய் வழங்கிவரும் சொல்லை
அர்ச். இஞ்ஞாசியார் கருத்துப்படிப் பதம் பிரித்
தால் 'சேசுவின் படையணி' அதாவது 'சேசுக்
கிறிஸ்துநாதரைத் தளகர்த்தனாகக் கொண்டு ஞான
யுத்தத்துக்கேகும் படைஞர் வகுப்பு' என்று சொல்ல
வேண்டும். பல விஷயங்களை, விசேஷமாய் அர்ச்
சியசிஷ்டவர் இயற்றிய ஞான முயற்சிகள் என்னும்
அற்புத நூலில், "கிறீஸ்துநாதருடைய இராச்சிய
பாரம்" என்றும், "இரு விருதுக்கொடிகள்" என்
றும் பெயருள்ள தியானங்களின் தன்மையை
ஆராய்ந்துபார்க்கில், மேற்சொன்ன சேசுசபை என்
னும் நாமம் இஞ்ஞாசியாருக்கு ஏற்கனவே மன்
ரேசாவில் சர்வேசுரனுடைய ஓர் விசேஷ வரந



னாளியால் அறிவிக்கப்பட்டதென்று சொல்ல
நியாயமுண்டு.

சகலமும் திட்டம் செய்துகொண்டபின், இஞ்
ஞாசியார் முன்சொன்ன இரு தோழர்களோடு,
உரோமாபுரிக்குப் புறப்பட்டார். பிரயாணத்தில்
அவருடைய தோழர்கள் இருவரும் தினம் திவ்விய
பூசை செய்து வந்தார்கள். தாழ்ச்சியினால் முதற்
பூசை செய்வதற்கு இன்னும் ஆயத்தம் செய்து
கொண்டிருந்த இஞ்ஞாசியார் அவர்கள் செய்த
பூசையைக்கண்டு திவ்விய நன்மை வாங்கிவந்தார்.
உரோமாபுரிக்கு ஆறு மயில் தூரத்தில் லா ஸ்தோ
ர்த்தா (La Storta) என்னும் சிற்றூரில் இஞ்ஞாசி
யார் ஓர் தேவாலயத்தைக்கண்டு, அதற்குள் போய்
செபம் பண்ணினார். செபத்தில் பரவசமாகி, பிதா
வாகிய சர்வேசுரனையும், அவர் ஏகசுதன் சேசுக்
கிறீஸ்துநாதரையும் மகா அற்புதமான ஓர் காட்சி
யில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார். சேசுக்கிறீஸ்து
நாதர் திருச்சிலுவையை உயரமாய்க் காத்திலேந்தி,
தமது திவ்விய பிதாவின் பாரிசத்தில் வீற்றிருந்
தார். பிதாவோவென்றால், இஞ்ஞாசியாரைத்
தமது திருச்சுதன் அருகில் நிறுத்தி "இவனை நீர்
உமது ஊழியனாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று
நாம் சித்தமாயிருக்கிறோம்" என சுதனுக்கு உரைத்
தார். சுதன் தேவ மகத்துவத்தின் அளவற்ற
அன்புபொழியும் தமது திருநேத்திரங்களை
ஞாசியார்மீது திருப்பி: "நீ நமக்கு ஊழியம்

செய்ய விரும்புகிறோம்" என்றருளினார். மேலும்:
"உரோமையில் உன்னோடிருப்போம்" என்று உறுதி
வாக்கும் அளித்தார். இவ்விசேஷங்களை இஞ்ஞாசி
யார் அச்சமயத்தில் லேய்னஸ் சுவாமியாருக்கும்,
வெகுகாலத்துக்குப்பின் கொன்சாலஸ் சுவாமியா
ருக்கும் அறிவித்தார். லேய்னஸ் சுவாமியார் தாம்
கேட்டறிந்ததை எழுதிவைத்தார். அன்றியும் அர்ச்
சியசிஷ்டவர் காலஞ்சென்றபின், அவருக்குப் பதி
லாய்ச் சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டராயிருந்த
போது, ஓர் நாள் உரோமையில் கூடியிருந்த சேசு
சபை சுவாமிமார்கள்முன், மேற்கூறிய விசேஷங்
களை எடுத்துரைத்தார்.

இத்தரிசனத்தில் பிதாவாகிய சர்வேசுரன் சுத
னாகிய சர்வேசுரனுக்குத் தன்னை மெய்யாகவே
தோழனாகக் கையளித்தாரென்று எவ்வளவு தெளி
வாய் இஞ்ஞாசியார் உள்ளத்தில் பதிந்திருந்ததென்
றால், இதைப்பற்றி சந்தேகப்பட தாம் துணிந்த
தில்லையென்று அவரே நிச்சயித்துச் சொல்லியிருக்
கிறார். இத்தரிசனத்தில் திவ்விய பிதா தமது
திருச்சுதன் பாரிசத்தில் அவரை நிறுத்தினபோது,
அவர் ஆத்துமத்தில் பிரவாகமான தேவசிநேகப்
பெருக்கத்தையும் பரலோக பேரின்ப மனோகரத்
தையும் யாரால் கண்டுபிடிக்கக்கூடும்! அவர் ஆத்
துமம் அப்போது எவ்வித ஸ்திதியிலிருந்ததோ,
அதே ஸ்திதியில் அதற்குப் பின்னும் சில சமயங்க
ளில் திவ்வியபூசை நேரத்தில் இருந்ததாக அர்ச்சிய



சிஷ்டவர் தாமே ரிபதேனீரா சுவாமியாருக்குச்
சொன்னார். சேசுசபை உருவாகும்பொழுதே,
அச்சபைக்கு ஞானத்தந்தையாகத் தெரிந்துகொள்
ளப்பட்ட அர்ச். இஞ்ஞாசியார்மீது இவ்வளவு
விசேஷ அன்பு பாராட்டிய நித்திய கடவுள் அச்
சபையின்மீதும் அச்சபையார்மீதும் என்றென்றைக்
கும் வைத்திருக்கும் காருண்ய நேசம் எத்தன்மை
யானதாயிருக்கவேண்டும்!

இஞ்ஞாசியார் உரோமாபுரியில் மோன்தே கசீ
னோ (Monte Casino) என்னும் மலைமேலிருக்கும்
மடத்தில் நாற்பது நாளாய் ஓர்த்திஸ் என்றொருவ
ருக்கு தமது "ஞான முயற்சிகளை" போதித்துவரும்
போது, பற்பல இடங்களில் ஆத்தும இரட்சணிய
அலுவலில் முயற்சியாயிருந்த தமது தோழர்களில்
ஹோசஸ் என்பவர் அகோர வியாதியாயிருப்பதா
கக் கேள்வியுற்று, அவருக்காக வெகு உருக்கமாய்
சர்வேசுரனைப் பிரார்த்தித்து வந்தார். அப்
போது தமது ஞானப்புதல்வருடைய ஆத்துமம்
சோதிமயமாய்ப் பிரகாசிக்க, சம்மனசுக்களால்
மோட்சத்துக்கு கூட்டிக்கொண்டு போகப்படுவ
தைக் காட்சியிற்கண்டு ஆனந்தபாஷ்பம் சொரிந்து
அத்தியந்த ஆறுதலடைந்திருந்தார். சில தினங்
களுக்குப்பின் தேவாலயத்தில் ஓர் குருவானவர்
பூசை ஆரம்பித்து பாவசங்கீர்த்தன மந்திரத்தில்
"சகல அர்ச்சியசிஷ்டவர்களுடனேயும்" என்கிற
வார்த்தைகளை உச்சரிக்கும் தருணத்தில், இஞ்ஞாசி

யார் தமது ஞானப்புதல்வன் ஹோரகஸ் பரலோக வாசிகளோடு பேரின்ப பாக்கியம் அநுபவிப்பதைக் கண்டார். இக்காட்சியை அடிக்கடி நினைவுகூர்ந்திருந்தாரோ, அல்லது இக்காட்சியைத் திரும்பத் திரும்பக் கண்ட பாக்கியத்திருந்தாரோ, பல நாளாய் இஞ்ஞாசியார் ஞானானந்தக் கண்ணீர் சிந்தி வந்தார்.

சவேரியார், போபாதில்லா என்பவரோடு, இஞ்ஞாசியார் முன் வெகு அன்பப்பட்ட போலோஞா பட்டணத்துக்கேகி, தமது ஞானத்தந்தை தம்மை உரோமைக்கு வரவழைக்குமட்டும், அங்கேயே ஆத்துமாக்களுக்காக சுறுசுறுப்பாய் உழைத்துவந்தார். நல்லுணவு, நல்லிளைப்பாற்றியின்றி, மிஞ்சின பிரயாசை யெடுத்து உழைத்துவந்ததாலும், செய்த கடின தபசினாலும், காய்ச்சலுண்டாகி சில மாத காலம் வெகு நோவு அநுபவித்தார். சொல்லரிய மதுரம் நிறைந்த பிறர்சிநேகத்தால், மற்றவர்களுடைய ஆத்துமங்களுக்கு நன்மை செய்வதில் வெகு செல்வாக்குடையவராயிருந்தார்.

மூன்றாம் பவுல் என்னும் அர்ச். பாப்பானவர் இஞ்ஞாசியாரை பட்சமாய் ஏற்றுக்கொண்டு, பாபர் லேய்னஸ் என்பவர்களை 'சாப்பியன்ஸா' என்னும் கலாசாலையில் வேதசாஸ்திரம் கற்பிக்கும் உத்தியோகத்துக்கு நியமித்தார். இஞ்ஞாசியார் தேவாலயங்களிலும், தெருவீதிகளிலும் பிரசங்கித்தும், சிலருக்குத் தமது ஞான முயற்சிகளைப் போதித்தும்



வந்தார். தினம் திரளான ஜனங்கள் அவர் பிரசங்கத்தைக் கேட்கக் கூடிவருவார்கள். அவர் இருதயத்தில் பற்றியெரிந்தத் தேவ சிநேக அக்கினியில் பழுக்கக் காய்ச்சப்பட்ட அம்புகள்போல், அவருடைய வாய்மொழிகள் கேட்போர் இருதயங்களை ஊடுருவிச் சென்றன.

உரோமையில் இஞ்ஞாசியாரை அதிசீக்கிரம் நன்குமதித்து, அவரோடு நெருங்கிய நண்பரானவர்களில், கர்தினாலாயிருந்த காஸ்பார் கோந்தாரினி என்பவர் ஒருவர். சிறந்த சற்குணமும், வெகு தேவபக்தியும் உடைய இவர் இஞ்ஞாசியாரை மேன்மை பாராட்டிப் பேசினதைக் கேட்டிருற்ருன், முன் பாரீஸ் நகரில் அர்ச்சியசிஷ்டவருக்கு விரோதியாயிருந்த ஓர்ற்றிஸ் என்பவர் இப்போது அவர்மேல் நல்லெண்ணம் கொண்டு, காசினோ மலைமேல் நாற்பது நாளாய் அவருடைய ஞான முயற்சிகளை விரும்பிச் செய்தார். செய்தபின் தன் ஆயுள் நாளெல்லாம் தான் கற்றறிந்து மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்த ஞானத்திலும் அதிக ஞானம் இக் நாற்பது நாளில் கற்றுக்கொண்டதாகச் சொன்னார். நாற்பது நாள் ஒடுக்கத்தில் இந்த ஓர்ற்றிஸ் என்பவர் ஓர் சமயம் மனதில் வெகு சஞ்சலம் சலிப்புற்றிருக்கக்கண்டு, அவரை உற்சாகப்படுத்த இஞ்ஞாசியார் ஒரு உபாயம் எடுத்தார். அவர் குலுங்கக் குலுங்கச் சிரித்து சந்துஷ்டியடையுமட்டும், அங்கும் இங்கும் தாண்டிக் குதித்து வேடிக்கையாக

அவர்முன் நடன நாட்டியம் ஆடினார். ஆ! அர்ச்சியசிஷ்டவர்களுடைய பிறர்சிநேகத்தை அளவிட நம்மால் இயலாது. இந்த ஓர்ற்றிஸ் சேசுசபையில் உட்பட வெகுவாய் ஆசித்தார். ஆனால் அது தேவசித்தமல்லவென்று இஞ்ஞாசியார் தடுத்துவிட்டார்.

1538-ம் வருடம், கர்த்தர் உயிர்த்த திருநாளுக்கு முன், இஞ்ஞாசியார் தமது தோழர்களையெல்லாம் உரோமாபுரிக்கு வரவழைத்தார். இவர்களெல்லாம் கூடி வசிப்பதற்கு தாராளமான ஓர் வாசஸ்தலம் வேண்டியிருந்தது. தேவகிருபையால் இதுவும் அவர்களுக்குக் குறைவுபடவில்லை. அர்ச். பாப்பானவர் அரண்மனையில் உத்தியோகமாயிருந்த **கோடாசியோ** என்னும் கனவானுடைய உதார சகாயத்தால் விஸ்தாரமான ஓர் வீடு கிடைத்தது. சிலகாலம் இஞ்ஞாசியாரும் அவருடைய தோழரும் எதிரிடையின்றி அமரிக்கையாய் ஆத்துமாக்களுக்கு நன்மை செய்துவந்தார்கள். அதன்பின் இதற்குமுன் சம்பவித்தவைகளிலும் அதிகக்கொடியதான நெருக்கிடையொன்று கார்மேகம்போல் அடர்ந்துவந்தது.

லுத்தேரைப்போல், அர்ச். அகுஸ்தீன் சபைக் குருவாயிருந்து, லுத்தேருடைய புத்தி போதனையை இரகசியத்தில் ஏற்றுக்கொண்டு உள்ளத்தில் பதிதனாயிருந்த **அகுஸ்தீரே** என்றொருவர் வெளிவேஷத்தில் உத்தம விசுவாசிபோல் நடித்து, வெகு கபட சாதுரியமாய் பதிதக் கொள்கைகளை பிரசங்கங்களில் மறைபொருளாக உணர்த்தி வந்தார்.



அவருடைய பிரசங்கங்களைக் கேட்ட லேய்னஸ்,
சால்மரோன் என்பவர்கள், பாலில் கலந்த நஞ்
ணிய விஷம்போல், பிரசங்கியின் சாதுரிய வார்த்
தைகளில் மறைந்திருந்த பதித விஷத்தையும், அந்
நிர்ப்பாக்கிய குருவின் வஞ்சக உட்கருத்தையும்
விரைவில் அறிந்துகொண்டார்கள். அறிந்து
கொண்டு இரகசியமாய் அவரைத்தேடி, நயந்து
அவருக்கு நற்புத்தி சொன்னார்கள். அந்த நிர்ப்
பாக்கிய குருவோவென்றால் அவர்களுக்கு காது
கொடுக்கவில்லை. அவர்கள் சொன்ன நற்புத்தியை
இகழ்ந்து பரிகசித்தார். ஆனதால் விசுவாசிகள்
மோசம் போகாதபடி, தாங்கள் செய்த பிரசங்
களிலெல்லாம் லுத்தேருடைய போதனைகளின்
அபத்தத்தைப் பிரசித்தமாய் விளங்கப்பண்ணினார்
கள். கள்ள வேஷம் பூண்ட அகுஸ்திரே இதைக்
கண்டு கோப வெறி கொண்டு, தன் வாய்ச்சாலகத்
தால் இஞ்ஞாசியாருக்கும், அவருடைய தோழர்
களுக்கும் அபகீர்த்தி வருவிக்கத் தேடினார்.

"லொயோலா இஞ்ஞாசியார் மெய்ப்பன் வேஷம்
தரித்த ஒனுயாக்கும், அர்ச்சியசிஷ்டவரைப்போல்
வெளிக்கோலமெடுத்து ஐரோப்பாவின் பிரதான
பற்பல கலாசாலைகளில் அநேக ஆத்துமாக்களை
ஏய்த்துக் கெடுத்தவராக்கும். பாரீஸ், சலமான்கா,
வேனீஸ் முதலிய இடங்களில் மரண தண்டனைக்கு
தீர்வையிடப்பட்டவர், அவ்விடங்களிலிருந்து தப்
பித்து ஓடி இங்கு வந்திருக்கிறாராக்கும்" எனப்

பலவாறாய் பிரசங்க மேடையினின்றே சற்றும் இளைகயாமல், இஞ்ஞாசியாரை ஓர் பிரிவினைக்காரராகத் தீர்த்துப் பேசினார். இவ்வநீத பிரசங்கிக்கு சஹவாக, அங்கு வசித்த இஸ்பானிய தேசத்தாராகிய சிலர், இஞ்ஞாசியார்மேல் எவ்வித அபாண்டங்களையும் கட்டியுரைத்து, அவர் பெயரை மாசுபடுத்த முயற்சி செய்துவந்தார்கள். முன் பாரீஸ் கலாசாலையில் அர்ச்சியசிஷ்டவரைக் கொலைசெய்ய எத்தனித்து, ஏதோ ஓர் அசரீரி வாக்கால் திகிலடைந்து, அர்ச்சியசிஷ்டவர் பாதத்தில் போய் வீழ்ந்து பொறுத்தல் கேட்ட மிக்கேல் நவாரோ என்பவன்,—இவன்தான் அகுஸ்தினோ கருதிய பாதக சதியோசனையை நிறைவேற்ற முதல சாட்சியாக முன்னுக்கு வந்தான். இந்த சற்குணனுக்குக் கூட்டாளிகளாக ஏற்பட்டார்கள் வேறு மூன்று ஆசாமிகள்,—பேத்ரோ தே காஸ்ற்றில்லோ, பிரான்சீஸ்கு மூடெரு, பறேரா என்ற புண்ணிய சிகாமணிகள்.

இதுசமயம் அர்ச். பாப்பானவர் உரோமையிலில்லை. பிராஞ்சரசன் 1-ம் பிரான்சீஸ், இஸ்பாஞிய அரசன் 5-ம் கார்லூஸ், இவர்களோடு கலந்து யோசித்து, துருக்கர்களுடைய கொடுமையை அடக்குவதற்கு ஒரு ஏற்பாடு செய்யும்படியாக நீஸ் என்னும் பட்டணத்துக்குப் போய்விட்டார். இன்னும் சிசுவாயிருந்த சேசுசபைக்கு இன்றியமையா ஆதாரவாயிருந்த 3-ம் பவுல் எனும் பாப்பானவர்



உரோமையை விட்டகன்றிருப்பது தங்களுக்கு வாய்த்த அதிர்ஷ்டமென்று, சதிகாரர்கள் தங்கள் சதிமானத்தைத் துணிந்து நடத்தினார்கள். நகரெங்கும் இஞ்ஞாசியார்மீது அவதூறு விதைப்பதில் அதிக தைரியமடைந்தார்கள். இதுவுமன்றி, உரோமைநகர் அதிபதி கோன்வேர்சீனி எனும் கர்தினாலுடைய நியாயாசனமுன், மிக்கேல் நவாரோ வாதியாக வந்துநின்று இஞ்ஞாசியார்மேல் சட்டமுறைப்படி பிராது தாக்கல் செய்தான். இஞ்ஞாசியார்மீது யாதும் குற்றமில்லாதிருந்தால், எவனாகிலும் இவ்விதம் நியாய சபையில் பிராது கொடுக்கத் துணிந்து வருவானோ? ஏதேர் இஞ்ஞாசியார் ஒரு கள்ள ஞானியாகத்தானிருக்கவேண்டும்; சொல்லப்பட்ட விஷயங்கள் ஏதோ உண்மையாகத்தானிருக்கவேண்டுமென்று பலரும் நம்பலானார்கள். சற்றுத்தூரம் சிந்தாத்திரையாய் சென்ற சேசுசபை சிறுபடகு, அந்தோ! அகோரப் புசற்காற்றால் அடிபட்டு அலைமோதி அதோகதியாய் ஆழ்கடலில் அமிழ்ந்து அழிந்துபோகிறாப்போல் காணப்பட்டது.

அகுஸ்தினோ இயற்றிய இந்த அக்கிரம சூழ்ச்சியால், நகரவாசிகள் இருதயங்களில் இஞ்ஞாசியார் மீதும் அவர் தோழர்கள் மீதும் சந்தேகமும் துவேஷமும் உற்பத்தியாயின. சத்திய திருச்சபைக்காக தமது இரத்தத்தைச் சிந்த அளவற்ற ஆவல் கொண்டிருந்த லொயோலா இஞ்ஞாசியார், “என்

கண்ணுக்கு வெள்ளையாய்த் தோன்றுவது கறுப்பு என சத்திய திருச்சபை தீர்த்தால், அது கறுப்புத் தான் என்று விசுவசிக்க எப்போதும் ஆயத்தமா யிருக்கவேண்டும்'' என்று எழுதிப் போதித்துவந்த இந்நிர்மல உத்தம விசுவாசி, சத்திய திருச்சபை யின் இராஜதானி நகராகிய உரோமைநகரிலேயே, ஆத்துமாக்களை வஞ்சித்துக் கெடுக்கும் பிரிவினைக் காரனென்றும், பில்லி சூனியக்காரனென்றும், அப்பா! பெரும் பாதகனென்றும், எண்ணவும் கூறவும் பட்டார். சாமானிய ஜனங்கள் மாத்திரமே யன்று, உன்னத ஸ்தானத்திலிருந்த கார்தினல்மார் களுக்குள்ளே முதலாய் சிலர் அவரை ஒரு கள்ள ஞானியாக எண்ணி வெறுக்கலானார்கள். அவ ருடைய நண்பர்களிலும் அநேகர் அவரை விட் டகன்றார்கள். இஞ்ஞாசியாரோவென்றால், லா ஸ்தோர்த்தாவென்னும் ஊரில் தமக்குத் தெரிசன மான கிறீஸ்துநாதர் கரத்தில் உயர்த்தப்பட்டிருந்த திருச்சிலுவையை உள்ளத்தில் சிந்தித்து, எப்போ தும்போல் மலர்ந்த முகமாய், கலக்கமற்று அமைதி யாயிருந்தார். "உரோமையில் உனக்கு அநு சாரணையாய் உன்றேடிருப்போம்'' என்ற திருவாக்கு ஓயாமல் அவர் செவியில் சப்தித்துக்கொண் டிருந்தது. இவ்வபாண்டங்களால் நிகழ்ந்த நிந்தை யும் துன்பமும் தம்மை மாத்திரம் அணுகினதா யிருந்தால், சிலுவையில் உயிர்விட்ட கிறீஸ்துநாத ரின் தாசனுக்கு அது ஓர் பெரும் பாக்கியமென்று



அகமகிழ்ந்து ஆனந்தித்து, மௌனமாய் இருந் திருப்பார். ஆனால் சில அக்கிரமிகளோதுவால், அநேக ஆத்துமங்கள் இடறல்பட்டு, சர்வேசுர னுடைய அதிமிக தோத்திரத்துக்கு வெகு விக்கி னம் நேர்ந்திருந்தமையால், நியாயஸ்தலத்துக்குப் போவது தமது கடமையென்றுணர்ந்தார். மேற் சொன்ன நகராதிபதி கார்தினல் கோன்வேர்சீனி என்பவரிடமே நேரிற் சென்று, தமதுமேல் அபாண் டமாய்ப் பிராது செய்தவர்கள் அதை உரூபிக்க வேண்டுமென்று எதிர்பிராது கொடுத்தார்.

முதல்முதல் மிக்கேல் நவாரோ நியாயாசனமுன் வாக்குமூலம் கேட்கப்பட்டான். அவனேவென் றால் லொயோலா இஞ்ஞாசியார் அல்காலா, பாரீஸ், வேனீஸ் இம்மூன்று இடங்களில் வேதபிரிவினைக் காகவும், வேறு அக்கிரமங்களுக்காகவும் குற்ற வாளியாக தீர்ப்பிடப்பட்டு தப்பித்தோடி வந்தவ ரென்று சத்தியம் செய்து சொன்னான். இஞ்ஞாசி யார் எல்லாம் சாவதானமாய்க் கேட்டு, ஓர் கடிதத் தை விரித்து இது யாருடைய கையெழுத்து என்று மிக்கேலை வினவினார். தன்னுடையது தானென்று அவன் ஒப்புக்கொண்டான். இஞ்ஞாசியார் நியா யாசனம் முன் யாவருக்கும் கேட்க அக்கடிதத்தை வாசித்தார். நவாரோ முகம்விழுந்து, என்ன சொல்வதென்று தெரியாமல் மௌனமாயிருந்தான். சில காலத்துக்குமுன் மிக்கேல் நவாரோ தன் சிநேகிதன் ஒருவனுக்கு இஞ்ஞாசியாருடைய புண்

ணியங்களை வெகு உச்சிதமாய்ப் புகழ்ந்து பாராட்டி எழுதிய கடிதம் அது! இதின்பிறகு அதிசீக்கிரம் மிக்கேல் பட்டணத்தைவிட்டுத் துரத்தப்பட்டான். வெகுகாலத்துக்குப்பின் இவன் தன் நிர்ப்பாக்கியத்தில் இஞ்ஞாசியாரிடம் ஒத்தாசை கேட்டான்; இஞ்ஞாசியாரும் உதாரமாய் அவனுக்கு ஒத்தாசை செய்தார்.

அகுஸ்தினோ என்பவரும் அவரைச் சேர்ந்தவர்களும் தாங்கள் இஞ்ஞாசியார்மேல் சாட்டிச் சொன்னதெல்லாம் முற்றும் அநியாயம் என்று பிரசித்தமாய் அங்கீகரிக்க உடன்பட்டு, அதோடே வியாச்சியம் முடிந்துபோகட்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஸ்தாஞ்ஞிபதியும் நடுவர்களும் அவர்களோடு ஒருமனப்பட்டு, அதோடு நிற்கட்டுமென்று இஞ்ஞாசியாருக்குச் சொன்னார்கள். ஆனால் இஞ்ஞாசியார் அதற்குச் சற்றும் சம்மதியாமல் நீதிமுறைமைப்படி சரியாய்த் தீர்ப்பு சொல்லவேண்டுமென்று வாதாடினார். இஞ்ஞாசியார் இவ்விதம் நடந்துகொண்டது சிலருக்கு பிறர்சிநேகக் குறைவு போல் தோன்றியது; அவருடைய தோழர்களிலே முதலாய் சிலர் அதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் பிறர்சிநேகக் குறைவினாலல்ல, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்கு மேலும் மேலும் விக்கினம் நேரிடாதிருக்கும்படி, இப்பேர்ப்பட்ட தீர்ப்பு அவசியமென்று அநுபவத்தால் அறிந்திருந்தமையால்தான் இவ்வண்ணம் செய்தார்.



“ஒன்றுந் தெரியாத பேதைகள், மூடர்கள், சொல் திராணி இல்லாதவர்கள், அல்லது கெட்டவர்கள், உறுதியற்றவர்கள், வஞ்சகர்கள் என்று முதலாய் நாங்கள் சொல்லப்பட்டால், தேவகிருபையால் அதை மௌனமாய் சகித்துக்கொள்ளுவோம். ஆனால் நாங்கள் பிரசங்கிக்கும் போதனை தப்பறையென்றும், நாங்கள் அநுசரித்து வரும் ஜீவியம் தகாததென்றும் சொல்லப்பட்டதால், நாங்கள் மனம் நோகும்படியாயிற்று; ஏனெனில் இவ்விரண்டும் எங்களுக்குச் சொந்தமல்ல, கிறீஸ்துநாதருக்கும் அவருடைய திருச்சபைக்குமே சொந்தம்” என இஞ்ஞாசியார் தம் நண்பர் ஒருவருக்கு இவ்விஷயத்தைப்பற்றி 1538-ம் வருஷம் டிசம்பர்-மீ 2-உ எழுதிய கடிதத்தில் சொல்லுகிறார். ஆயினும் குற்றவாளிகளைத் தண்டிக்கும்படி அவர் கேட்கவில்லை, தன்மீது சாட்டப்பட்ட அவதூறுகள் அநியாயமென்று நீதிமுறைமைப்படி தீர்த்துச் சொல்லவேண்டுமென்று மாத்திரம் கேட்டார்.

இதுசமயம், இஞ்ஞாசியார் தாமே இசபேல் ரோசர் அம்மாளுக்கு 1538-ம் வருஷம் டிசம்பர்-மீ 19-உ எழுதின ஓர் கடிதத்தில் சொல்லுகிற பிரகாரம் அவருக்கு அநுகூலமாக ஆச்சரியமான ஓர் சந்தர்ப்பம் நேரிட்டது. அதாவது: அல்காலா, பாரீஸ், வேனீஸ் முதலிய இடங்களில் இஞ்ஞாசியாருடைய போதனையிலும், நடக்கையிலும் ஆட்சேபனைக்குரியது யாதுமில்லையென்று தீர்ப்புச்

செய்த நீதியஸ்தர்கள் தத்தம் அலுவலாய் உரோமா
புரிக்கு ஒரே சமயத்தில் வந்து கூடினார்கள்.
இவர்கள் மூவரும் நியாயாசனமுன் உண்மையைச்
சொல்லி, இஞ்ஞாசியாருக்கு நற்சாட்சி கொடுத்தார்
கள். மேலும் இஞ்ஞாசியாருடைய தோழர்களைப்
பற்றி, பாரீஸிலும், அவர்கள் பிரசங்கித்து தேவத்
திரவிய அநுமானங்கள் நிறைவேற்றிவந்த இத்
தாலியாவின் பற்பல இடங்களிலுமுள்ள மேற்
றிராணிமார்களும், பங்கு விசாரணைக் குருக்களும்,
ஒருவாய் ஒருமொழியாய் இவர்களுடைய போதனை
யையும் நடக்கையையும் புகழ்ந்து உரோமாபுரிக்கு
நற்சாட்சி பத்திரங்கள் அனுப்பிவைத்தார்கள். ஆயி
னும் திட்டமான தீர்ப்புசெய்ய கர்திநல் கோன்
வேர்சீனி இன்னும் மனமில்லாதிருந்தார். இது
சமயம் அர்ச். பாப்பானவர் உரோமைக்குத் திரும்பி
வந்தார். இஞ்ஞாசியார் அர்ச். பாப்பானவரைக்
கண்டு ஒருமணி நேரமளவாய் அவருடன் பேசி,
சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக
தாம் கொண்டிருக்கும் கருத்துகளையும், செய்து
வரும் முயற்சிகளையும், அல்காலா, சலமான்கா,
பாரீஸ் முதலிய இடங்களில் தமது போதனையை
யும் நடக்கையையும் குற்றப்படுத்த விரோதிகள்
சொன்ன அவதூறுகளால் நேர்ந்த துன்பங்களையும்,
தற்சமயம் உரோமையிலும் தமக்கும் தமது தோழ
ருக்கும் நிகழ்ந்திருக்கும் சங்கடத்தையும் தொகுப்
பாய் உள்ளதை உள்ளபடி எடுத்துரைத்து, இச்



சங்கடத்தால் பிறர் ஆத்தும இரட்சணிய அலுவ
லுக்கு வெகு விக்கினம் நேரிட்டிருப்பதால், பரி
சுத்த பிதா தாமே ஒரு நடுவரை நியமித்து, அதற்கு
ஒரு முடிவுகட்ட தயை செய்தருளவேண்டும் என்று
மன்றாடினார். பரிசுத்த தந்தையும் அவர் மன்றாட்
டை ஏற்றுக்கொண்டு, எல்லாம் நியாய முறைமைப்
படி தீர்க்க விசாரித்து, தீர்ப்பிடும்படி கட்டளை
கொடுத்தார். எட்டுமாதகாலமாய் வருந்தியபின்,
கடைசியாய் நீதிமுறைமைப்படி இஞ்ஞாசியாருக்கு
முற்றும் அநுகூலமான தீர்ப்பு கிடைத்தது.
காரிருள் நீங்கி கதிரோன் உதயமானதுபோல், அக்
கிரமிகள் கபடமாய் கட்டியுரைத்த அநீத அபாண்
டங்களால் நகரவாசிகள் இருதயத்தில் அடர்ந்
திருந்த சம்சய இருள் மேற்சொன்ன நியாய தீர்ப்
பால் கலைந்து நீங்கிற்று. இஞ்ஞாசியாரும் அவ
ருடைய தோழர்களும் செய்துவந்த பிரசங்கங்களும்
அநுசரித்துவந்த சீவியமும், அவர்களுக்கு மோட்ச
நெறியைக் காண்பிக்க உன்னத ஸ்தலத்தில் ஏற்றி
வைத்த தீபம்போல் துலங்கியது.

திவ்விய இஸ்பிரீத்துவின் அருளொளியால் இஞ்
ஞாசியார் மனத்தின்கண் மேன்மேலும் உருவாகி
வந்த சேசுசபையும் திருச்சபையின் தலைவருடைய
அங்கீகாரமும் ஆசீர்வாதமும் பெற்று, உலகின்கண்
பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்படும் காலமும் அடுத்து
வந்தது.

## 4-ம் அதிகாரம்.

சேசுசபை அர்ச். பாப்பானவருடைய அங்கீகாரம் பெற்று பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது — ரிபதனீரா — அவருடைய சுபாவ இலட்சணங்கள்—அவர் சேசுசபையில் உட்பட்டது—அர்ச். இஞ்ஞாசியாருடைய நீடிய சாந்தமும், தயை தாட்சணியமும்.

### 1539—1540.

சேசுசபை பிரசித்தமாய் ஸ்தாபகம் பெறும் காலம் அடுத்துவந்ததென்று, ஆதிமுதல் தேவ திருக்கரத்தால் இவ்விசேஷ கதியை நோக்கி நடத்தப்பட்டு வந்த அர்ச். இஞ்ஞாசியார் தம் உள்ளத்தில் உணர்ந்து, அதற்கு வேண்டிய முயற்சிகளை வெகு ஜாக்கிரதையாய் ஆரம்பித்தார். இச்சபையின் பிரதான இலட்சணங்களும், ஏற்பாடுகளும் இன்னதென திட்டமாய் தீர்மானிக்கும்படியாகத்தான், தமது தோழர்களையெல்லாம் ஒருமிக்க உரோமைக்கு வரவழைத்தார். இதற்காக "ஒவ்வொருவரும் விசேஷ ஜெபதபம் செய்து, ஒவ்வொரு நாளும் தங்களுக்குக் குறிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி தனித்தனியே தேவசன்னிதியில் தியானம் செய்து, அதற்கு அநுகூலமாகவும், பிரதிகூலமாக்வுமுள்ள நியாயங்களை சீர்தூக்கிப் பார்த்து யோசிக்கவேண்டியது; அப்படி யோசித்தபின் யாவரும் குறிக்கப்பட்ட நேரத்தில் ஒன்றுகூடி தந்தம் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி, தங்களுக்குள் கலந்துபேசி தீர்மானமும் செய்யவேண்டியது" என இஞ்ஞாசியார் அவர்களுக்கு அறிவித்தார். சேசுசபைக்குயிர்போலிருக்கும் பரிசுத்த கீழ்ப்படிதலின் அவசியத்தையும், அதன் விசேஷ குணகுணங்களையும் வரையறுத்துத் தீர்மானிப்பதற்கு மாத்திரம் பலநாள் சென்றது. கடைசியாய் யாவரும் ஒருவாய் ஒருமொழியாய் தேவதோத்திரத்துக்கு அநுகூலமாகவும், சேசுசபையைக் காப்பாற்றி வரவும் கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடொன்று அவசியமெனத் தீர்த்தார்கள். மேலும் இத்தீர்மானமடங்கிய பத்திரம் ஒன்று, பாபர் இராயப்பர் கையால் எழுதப்பட்டு, 1539-ம் ௵ ஏப்பிரல்-மீ 15-௳ செவ்வாய்க்கிழமை, திவ்விய பூசையில் ஒவ்வொருவரும் அதனை முறைமுறையே சத்தமாய் வாசித்து, தத்தம் கையொப்பமும் அதில் வைத்து, அதற்குறுதியாக திவ்விய சற்பிரசாதமும் உட்கொண்டார்கள்.

தபசுகால மத்தியில் ஆரம்பித்த ஆலோசனைகள் ஜூன்-மீ 24-௳ முடிவுபெற்றது.

எல்லாரும் கூடிச்செய்த தீர்மானங்களை, இஞ்ஞாசியார் ஐந்து அதிகாரங்களாக வகுத்தெழுதி, அப்பிரதியைத் தமது நண்பர் கர்தினல் கொந்தரினி

(Cardinal Contarini) என்பவர் மூலியமாய், மூன்றும் பவுல் (Paul III) என்னும் அர்ச். பாப்பானவர் சமுகம் அனுப்பி, பரிசுத்த பிதா அதை ஆசீர்வதித்து அங்கீகரிக்கும்படி மன்றாடினார். திருச்சபை சரித்திரத்தில் கண்டிருக்கும் பிரகாரம், அக்கால விசேஷத்தை ஆராய்ந்து பார்க்கில், புதிதாய் ஓர் சன்னியாச சபை ஏற்பாடாகி திருச்சபைத் தலைவரின் அங்கீகாரம் பெறுதற்கான சமயம் அதல்லவென்று சொல்லவேண்டும். பற்பல சன்னியாச சபைகளில், தேவபக்தி குளிர்ந்து கட்டுப்பாடு சீர்குலைந்து, நானாவித தின்மைகள் பலுகி வந்ததைப்பற்றி, புதிதாய் சன்னியாச சபைகள் ஏற்படுத்துவதற்குப் பதிலாய், ஏற்கனவே இருக்கும் சபைகளில் சிலதுகளை போதுமென்று நிறுத்தி, மற்றவைகளைச் சீர்திருத்த முயற்சி செய்வதுதான் உத்தமமென்று திருச்சபை அதிகாரிகள் அபிப்பிராயமாய் இருந்தார்கள். ஆனால் "உரோமையில் உன்னோடிருப்போம்" என்று திருவாக்கருளிய ஆண்டவர் இஞ்ஞாசியாருக்குச் சனுவாயிருந்தார். ஏற்பாட்டாகமப் பிரதியை கர்தினால் கொந்தரீனி அர்ச். பாப்பானவர்முன் வாசித்ததும், "சர்வேசுரனுடைய திருவிரல் இதிலிருக்கின்றது" என்று பரிசுத்த பிதா ஆச்சரியமுற்றுரைத்து, அப்பிரதியை நன்றாய் ஆராய்ந்து பரிசோதிக்கும்படி மூன்று கர்தினால்மார்களை நியமித்தார்: அவர்களில் பார்த்தலோமியோ குயிடிக்ஸியோனி (Bartolo-



meo Guidiccioni) என்ற பேர்போன கர்தினால், இருக்கிற சன்னியாச சபைகளிலுள்ள அலங்கோலங்களைக் கண்டு மனமடிந்து 'புதிதாய் ஓர் சன்னியாச சபை' என்கிற பேச்சைமுதலாய் சகிக்கக்கூடாதவராயிருந்தார். ஆனதால் அனுப்பப்பட்ட பிரதியைத் திறந்து வாசிக்கமுதலாய் அவருக்கு மனம் வரவில்லை. அவருடைய எண்ணத்தைக்கண்ட மற்றிரு கர்தினால்மார்களும் அவரோடு ஒருமனப்பட்டார்கள். அதனால், இஞ்ஞாசியார் அவதைரியப்படவில்லை. ஜெபத்தில் தேவ இரக்கத்தை இடைவிடாமல் பிரார்த்தித்து வந்தார். சேசுசபை அர்ச். பாப்பானவரின் அங்கீகாரம் பெற்றதும், தேவ மகத்துவத்துக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரமாகத் தாமும் தமது சபையாரும் மூவாயிரந் தடவை திவ்விய பூசைப் பலி செய்து ஒப்புக்கொடுப்பதாக சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்தார்.

மனிதனுடைய இருதயத்தில் ஆழ்ந்து வேரூன்றி ஸ்திரமாயிருக்கும் எண்ணங்களையும் சர்வ வல்லபர் நினையாநேரத்தில் மாற்றிவிடும் ஆச்சரியமான விதங்களை யாரால் அறியக்கூடும்! பிரதியைத் திறந்து வாசிக்கமுதலாய் மனமில்லாதிருந்த கர்தினால் பார்த்தலோமியோ ஓர்நாள் அதைத் தன்முன் வாசிக்கும்படி செய்தார். பின்பு தாமே அதைக் கவனமாய் வாசித்து ஆராய்ந்து பார்க்கலானார். அவர் எண்ணமும் வேறுபட்டது. இஞ்

ஞாசியார் எழுதின ஏற்பாட்டாகமத்தை முற்றும் ஒன்றுமதித்து அங்கீகரித்தார். *புது சந்நியாச சபைகளை ஏற்படுத்தும் விஷயத்தில் தாம் முன் போலவே எண்ணங்கொண்டிருந்தாலும், லொயோலா இஞ்ஞாசியார் கருத்திலிருக்கும் சபையின் தன்மை மகா சிரேஷ்டமானது, தற்கால இன்மைகளைப் பரிகரிப்பதற்கு அது தகுந்ததோர் சாதனம். ஆனதால் அர்ச். பாப்பானவர் அதை அங்கீகரிக்கும்படி அதற்குச் சலுவாய்ப் பேச நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று மற்றிரு கர்தினால் மாருக்கும் சொன்னார். 1540-ம் ஆடு செப்டெம்பர்-மீ 27-உ (Regimini militantis Ecclesiæ) "ரெஜிமினி மிலித்தாந்திஸ் எக்லேசியே" என்னும் "'ஆஜ்ஞை' பத்திரத்தால் அர்ச். பாப்பு வாகிய மூன்றாம் பவுல் என்பவர் சேசுசபையைப் பிரசித்தமாய் அங்கீகரித்து ஸ்திரப்படுத்தினார். இப்புதுசபை சேசுசபை என்றழைக்கப்பட்டதைப் பற்றி அநேகர் முறைப்பட்டார்கள். விசேஷமாய் மற்ற சந்நியாச சபைகளுக்கு இது பொருந்த வில்லை. ஆனால் இஞ்ஞாசியார் தேவதிருவுளத்தின் ஓர் விசேஷ ஏவுதலால் அப்பெயரைத் தெரிந்தெடுத்திருந்தமையால், என்ன முறைப்பாடுகள் தான் எழும்பினாலும், அப்பெயரை மாற்ற அற்பமும் சம்மதித்தவரல்ல.* தமது சபைக்கு சேசுசபை

* அர்ச். இஞ்ஞாசியார் மரணமடைந்து சுமார் முப்பது வருஷங்களுக்குப்பின், ஐந்தாவது சிக்ஸ்துஸ் (Sixtus V)



யென்ற பெயர் கொடுக்க தாம் பின்வாங்கியிருந்தால், தேவசித்தத்தை மீறி நடந்திருக்கவேண்டிய

என்னும் பாப்பானவர் 'சேசுசபை" என்ற பெயரையும், இச்சபையின் ஒழுங்குகளில் சிலதுகளையும் மாற்றிவிட வேண்டுமென்று தீர்க்கெண்ணங்கொண்டு, அப்போது சேசு சபைக்கு அதிபதி சிரேஷ்டராயிருந்த க்லௌதியுஸ் ஆக்குவாவீவா (Claudius Aquaviva) என்னும் சுவாமியாருக்கு தமது சித்தத்தை அறிவித்து, அதின்படி, 'ப்ரோவின்சியல்ஸ்' (Provincials) என்று சொல்லப்படும் அவருக்குக் கீழ்ப்பட்ட பிரதான சிரேஷ்டர்களுக்கு கட்டளை லிருபம் எழுதவேண்டுமென்று ஆக்கியாபித்தார். கர்தினால் மார்களுக்குள்ளே முதலாய் அநேகர் சேசுசபையாருக்காக வெகுவாய்ப் பரிந்துபேசியும், அர்ச். பாப்பானவர் தம் எண்ணத்தை விட்டுவிட சம்மதித்தவரல்ல. ஆக்கியாபனைப் பிரகாரம் 'ஜெனரல்' சுவாமியார் கட்டளை லிருபம் ஒன்று ஆயத்தம் செய்து, அதனை பரிசுத்த பிதா சமுகம் கொண்டு போய்க் கொடுத்தார். இவ்வுத்தம கீழ்ப்படிதலைக்கண்டு, பரிசுத்த பிதா மனம் இளகியதாகத் தோன்றுகின்றது. ஏனெனில் அந்நிருபத்தை வாங்கி வைத்துக்கொண்டாரே யன்றி, அதனை உடனே பிரசித்தமாக்கும்படி சொல்லவில்லை. அப்படி அதைப் பிரசித்தமாக்கும்படி ஒருவேளை அவர் எண்ணங்கொண்டிருந்தாலும், அதை நிறைவேற்றுமுன் னமே மரணமாய்ப்போனார். அவருக்குப்பின் திருச்சபையை ஆண்டுவந்த பதினாலாம் கிரகோரியார் (Gregory XIV) என்னும் பாப்பானவரோவென்றால், 1594-ம் ஆடு ஜூன்-மீ 28-உ அருளிய 'ஆஜ்ஞை' பத்திரத்தில் 'சேசுசபை' என்கிற பெயரையும், அச்சபையின் ஏற்பாட்டொழுங்குகள் யாவையும் சம்பூரணமாய் அங்கீகரித்து ஆசீர்வதித்தார்.

தாயிருக்குமென்று, இஞ்ஞாசியார் தாமே தமக்கு ஒத்தாசை செய்துவந்த பொலான்கோ (Polanco) சுவாமியாருக்கு ஓர் தடவை சொன்னார். "இந்தப் பெயருக்கு அதிக ஆழமான வேருண்டு. இது உலகத்துக்குத் தெரியாது. இந்தப் பெயரை மாற்ற முடியாது" என்று தீர்க்கமாய்ச் சொல்லி வந்தார்.

அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டர் என்னும் உத்தியோக முறையில் பிரயோகித்துவந்த முத்திரையில், 'சேசு' என்னும்





திருநாமத்தைக் குறிக்கும் I.H.S. (அதாவது IHESUS, இஹேசுஸ்) என்ற அட்சரங்களும், அவைகளுக்கடியில் ஓர் வளர்பிறையும், இரு நட்சத்திரங்களும், இவைகளையெல்லாம் சுற்றி "சேசு சபைத் தலைவரின் முத்திரை" என்றர்த்தமுள்ள "SIGILLUM PRÆPOSITI SOCIETATIS JESU" என்னும் வாக்குகளும் காணப்படுகின்றன. உத்தியோகமுறையின்றி சாதாரண விஷயங்களில், அவர் பிரயோகித்துவந்த முத்திரை அடையாளங்கள் மூன்று இந்நாள்வரை காப்பாற்றப்பட்டுவருகின்றன. அவைகளுள் ஒன்றில் IHS என்னும் அட்சரங்கள் மாத்திரம் பதிந்திருக்கின்றன. வேறொன்றில் இவ்வட்சரங்களுமன்றி, அவைகளுக்கடியில் மூவாணிகளும் பதிந்திருக்கின்றன. மூன்றாவதில் மேற்சொன்ன அட்சரங்களும், திருஆணிகளுமன்றி, அவைகளைச்சுற்றி ஈந்தமடல் போன்ற இரு கிளைகளும், வரையப்பட்டிருக்கின்றன. மேலும் வேறோர் முத்திரையில் IHS என்ற அட்சரங்களின் அடியில் இஸ்பானிய பாஷையில் 'Ynigo' இனிகோ என்றெழுதப்படும் தமது ஞானஸ்நானப் பெயரின் முதலெழுத்தாகிய Y என்னும் அட்சரத்தையும் அர்ச்சியசிஷ்டவர் பதித்துவந்ததாகத் தெரியவருகின்றது. சேசு என்னும் திருநாமத்தின்மீது அர்ச். இஞ்ஞாசியார் இருதயத்தில் எவ்வளவோ அத்தியந்த வணக்க நேசம் பதிந்திருந்ததென்று இவ்விஷயங்களைக்

கொண்டு ஒருவாறு உத்தேசித்துக்கொள்ளலாம். இது நிற்க:

ஓர்நாள் இரவில் யாரோ வாசல் மணியை ஆத்திரமாய் அடிக்கும் சத்தம் கேட்கப்பட்டது. இஞ்ஞாசியார் தாமேபோய் கதவைத் திறந்தார். பெரிய பிரபுக்கள் மாளிகைகளில் சேவித்துவரும் உயர்குல மாக்களுக்குரிய விலையுயர்ந்த ஆடையணிந்த பதினாறு வயது பாலியன் ஒருவன் அவர் முன் நின்றான். பேதுரோ தே ரிபதனீரா (Pedro de Ribadaneira) என்பது அப்பாலியன் பெயர். உத்தரவுகேட்டு உள்ளே வந்தபின் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். இவனுடைய எஜமான் அலேசாந்த்ரோ என்னும் கர்தினால் அன்று காலை தன்னோடு ஓரிடத்துக்கு செல்லும்படி கட்டளையிட்டிருந்தார். கர்தினாலோடு அவ்விடம் செல்லுவதைவிட நாள் முழுதும் தன்னிஷ்டம்போல் உரோமைநகரில் சுற்றித்திரிவது நமது பேதுரோவுக்கு அதிகப் பிரியமாயிருந்தது. நாள் முழுதும் கவலையின்றி சுற்றித்திரிந்தான். ஆனால் சாயுங்காலமானதும், கர்தினால் அரண்மனைக்கு திரும்பிப் போவதென்றால் நெஞ்சம் திடுக்கிட்டது. ஆகையால்தான் இஞ்ஞாசியாருடைய சலுகையைத் தேடிவந்தான். ரிபதனீரா என்ற இந்த பாலியன் யார்?

இஸ்பாஞ்ஞிய தேசத்திலுள்ள தொலிடோ (Toledo) என்னும் பட்டணத்தில் உயர்குலத்தில்



பிறந்தவர். அவர் தாய் அவரைப் பெற்றெடுக்கு முன்னமே, கர்ப்பத்தில் அவரை பரிசுத்த கன்னி மாதாவுக்கு ஒப்புக்கொடுத்திருந்தாள். சிறுபிராயமுதற்கொண்டே மிஞ்சின சுறுசுறுப்பும் துணிகரமும் அடங்காக் குணமுமுடையவராயிருந்தமையால், விதவையாயிருந்த அவர் தாய் கத்தரீனம்மாள் அவர்மீது மிகக் கவலையுற்றிருந்தாள். ஏழு வயதில், திமிறிக்கொண்டு நான்குகாற் பாய்ச்சலாய் ஓட்டம்பிடித்த ஒரு முரட்டுக் கோவேறுகழுதையைப் போய் மறித்தார். அதனால் கடினமாய் காயப்பட்டு வெகுநாள் அவஸ்தைப்பட்டார். வேறோர்நாள் அவரோடு விளையாடிக்கொண்டிருந்த ஒரு பாலியன் தற்செயலாய் அவர் காலைக் காயப்படுத்தினான். அதனாலும் நெடுநாள் அவஸ்தைப்பட்டார். அப்படி அவர் காலைக் காயப்படுத்தின பாலியன் யாரென்றால், பிற்காலத்தில் சேசுசபையில் உட்பட்ட வாஸ்கேஸ் என்னும் சுவாமியார்தான். 1540-ம் ௵, கர்தினால் அலேசாந்த்ரோ வேறு சில கர்தினால்மார், மேற்றிராணிமார்களோடு, அர்ச். பாப்பானவர் பெயரால் இஸ்பாஞ்ஞிய தேசத்தரசனைச் சந்திக்கும்படி தொலிடோ பட்டணத்தில் வந்திறங்கியபோது, அவ்வாரவாரக் காட்சியைக் காணுதல் பேதுரோவுக்கு அளவற்ற ஆனந்தமும் மட்டிக்கடங்கா உல்லாசமுமாயிருந்தது. அசனவேளையில், சுவேச்சையாய் கர்தினால் அலேசாந்த்ரோ அருகில் போய் நின்று

வெகு புத்திசாலித்தனமாய் அவருக்கு வேண்டியவைகளைப் பரிமாறி ஒத்தாசை செய்தார். முக இலட்சணமும் அதற்கிசைந்த புத்திக்கூர்மையும் அமையப்பெற்ற இப்பாலியன்மீது அப்பெரியோர்கள் மிக்கப் பிரீதிகொண்டார்கள். மேற்சொன்ன கர்தினால் பாலியனைத் தம்மோடு உரோமைக்கு அழைத்துக்கொண்டுபோகப் பிரியப்பட்டார். திருச்சபை ஞானமேய்ப்பர் கைவசம் தன் செல்வப் புதல்வனை ஒப்புவிக்க மிக்க ஆவல்கொண்டிருந்த கத்தரீனம்மாள் சந்தோஷமாய் அதற்கு உடன்பட்டாள். பாலியன் ரிபதனீராவோவென்றால் உரோமை மாநகரில் அநேக நவகாட்சிகளையும் விநோத வேடிக்கைகளையும் காணலாம், வெகு உல்லாசமாய் உலாவித்திரியலாம் என்று மனப்பால் குடித்துக்கொண்டு, ஆனந்த அக்களிப்புடன் கர்தினாலோடு உரோமைக்குப் புறப்பட்டார். அங்கு மற்ற மேன்குல மாக்களோடு இவரும் கல்விப் பயிற்சியும், குதிரை சவாரி சிலம்பம் முதலிய தேகாப்பியாசங்களும் கற்பிக்கப்பட்டு வந்தார். இவைகளையெல்லாம் வெகு கருத்தாய் கற்று தேர்ச்சியடைந்து வந்தார். ஆனால் தன் சுபாவக் குணத்தை அடக்கி ஆளுவதில் மாத்திரம் தேர்ச்சியடையவில்லை.

அர்ச். பாப்பானவர் அரண்மனையில் பெரும் விருந்து நடந்த ஒருநாள் இராத்திரி, அக்காலத்து ஆசாரப்பிரகாரம் வேறு சில பாலியர்களோடு



கையில் தீவர்த்தி ஏந்தி நின்ற பேதுரோ, இடரென்று பதஷ்டமாய் பாய்ந்தோடி தன்னைப் போன்றவேறொருபாலியன் தலைமேல் கையிலிருந்த தீவர்த்தியைப் பலமாய் ஓங்கி எறிந்து அவனோடு மல்லுக்கு நின்றார். ஏன்? ஏனென்றால் அந்தப் பையல் என்னைப்பார்த்து பல்லைக்காட்டினான் என்றார். அன்று அசனசாலை அமர்க்களமாய் முடிந்தது. மேலும் அரசர், கர்தினால்மார், மேற்றிராணிமார் முதற்கொண்டு சகலரும் அர்ச். பாப்பானவரை அண்டிப்போகும்போது, அவர் பாதத்தை முத்திசெய்வதே அந்நாள்முதல் இந்நாள்வரை அநுசரிக்கப்பட்டுவரும் ஆசாரம். தேவமாதாவின் சுத்திகரத்திருநாளன்று கர்தினால்மார்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஒருவருக்குப்பின் ஒருவராய்ப் பாப்பானவர் பாதத்தை வணக்கமாய் முத்திசெய்து, அவர் கையிலிருந்து மந்திரித்த மெழுகுவர்த்தி பெற்றுத் திரும்பினார்கள். நமது ரிபதனீரா மாத்திரம்,—அவர் புத்தியில் பட்டதென்னமோ, தெரியாமற்றான் செய்தாரோ அல்லது குறும்புக்காக வேணுமென்றுதான் அப்படிச் செய்தாரோ தெரியவில்லை—அர்ச். பாப்பானவருடைய பாதத்தை முத்திசெய்வதற்குப் பதிலாக அவருடைய கரங்களை முத்திசெய்தார். பரிசுத்த பிதா (மூன்றாம் பவுல் என்பவர்) இதைக்கண்டு சற்று ஆச்சரியமுடைத்து அப்பாலியன் யாரென்று வினவினார்; ஆனால் கடிந்துகொள்ளவில்லை. இவ்வித சுபாவ

ருள்ள பேதுரோவுக்கு கர்தினல் அரண்மனையில், கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பது சலிப்பாகவும், தன் மனம்போல் உரோமை நகரைச் சுற்றிப்பார்ப்பது ஆனந்தமாகவுமிருந்ததென்றால் ஆச்சரியமென்ன! இஞ்ஞாசியாரிடம் அடைக்கலம்புகுந்த அன்றிரவு அவர் மனதிலுண்டான கிலேசம் அரண்மனைக்குத் திரும்பினால் சிட்சை கிடைக்குமென்கிற பயத்தினாலல்ல, ஆனால் தன்மீது நெடுநாள் அன்புற்றிருந்த எஜமானுடைய கட்டளையை மீறி அவர் மனம் நோகப்பண்ணினேனே என்கிற கஸ்தியினாற்றானென்று தோன்றுகின்றது.

இஞ்ஞாசியார் தந்தையின் அன்போடு ரிபதனீராவைத் தேற்றி, அன்றிராத்திரி தமது மடத்தில் வைத்து ஆதரித்தார். மற்ற சுவாமிமார்களும் அவரை வெகு பட்சமாய் உபசரித்தார்கள். மறுநாள் காலமே இஞ்ஞாசியார் பாலியனுக்காக பரிந்துபேசும்படி கர்தினல் அரண்மனைக்குச் சென்றார். கர்தினல் சிரித்துக்கொண்டு, உடனே மன்னிப்பளித்து, பேதுரு சந்தோஷமாய் திரும்பி வரட்டும் என்றார். ஆனால் பேதுரோவுக்கு திரும்பிப்போக மனம் வரவில்லை. சேசுசபையில் உட்பட ஆசித்தார். இஞ்ஞாசியார் சொற்படி, சிலரிடத்தில் ஆலோசனை கேட்கும்படியாகமாத்திரம் கர்தினல் அரண்மனைக்கும் மற்றிடங்களுக்கும் திரும்பிப்போய், அதிசீக்கிரம் இஞ்ஞாசியாரிடம் திரும்பி வந்துவிட்டார். சிலநாள் பொறுத்து



1540-ம் வருஷம் செப்டெம்பர்-மீ இஞ்ஞாசியார் அவரை சேசுசபையில் நவசந்நியாசியாக ஏற்றுக்கொண்டார். இன்னும் பதினாறு வயது நிறைவேறாத, புதுநன்மை முதலாய் வாங்காத, அடங்காக் குணமுள்ள இப்பாலியனை இஞ்ஞாசியார் சேசுசபையில் ஏற்றுக்கொண்டது சகலருக்கும் கண்டுபிடிப்பதற்கரியதோர் ஆச்சரியமாயிருந்தது. நவசந்நியாசத்தில் சேர்ந்து சிலகாலத்துக்குப்பின் தான் ஆனமுயற்சிகளைச் செய்து, 1540-ம் வருஷம் கர்த்தர் பிறந்த திருநாளன்று புதுநன்மை வாங்கினார். நவசந்நியாசத்தில் சேர்ந்ததும், ரிபதனீரா முழுதும் வேறு மனிதனாய்ப் போய்விட்டாரென்றெண்ணவேண்டாம். அடக்கவொடுக்கம், அமைதியமர்ந்த நடை, யாதாமொரு காரியம் செய்வதில் சாவதானம் என்பது நவசந்நியாசத்தில் முதலாய் அவருக்கு மகா மகா கஷ்டமான புதுப் பாடமாகவே இருந்தது. ஓட்டம் சாட்டமாய்ப் போவதென்றாலோ, மௌன நேரமென்றும், பேச்சு நேரமென்றும், அறையென்றும், தாழ்வாரமென்றும், படியென்றும் பாராமல் தாண்டிக் குதித்தும், சிரித்து சத்தம் செய்வதென்றாலோ, அவருக்கு இயல்பான பழையபாடமாயிருந்தது. அவர் பெருக்கின அறைமுன்னிலும் அதிக குப்பையாயிருக்குமேயன்றி, குறைந்த குப்பையாயிருப்பதரிது. அவ்வளவு பலமாய் கையிற்பிடித்த துடைப்பத்தைச் சுழற்றி வீசுவார். அவர் நடமாடும் ஸ்தலங்களி

ஆன்ன கதவுகள், ஐயோ பாவம்! வாயிருந்தால் அழும். "ஆ! இதென்ன நிர்ப்பாக்கியம்! கொம்பு நீண்டும் வானர சுபாவமுடைய இப்பாலியனை நமது பிதா இஞ்ஞாசியார் சேசுசபையில் சேர்த்துக்கொண்டாரே" என்று அம்மடத்திலிருந்த சங்கைக்குரிய சுவாமிமார்கள் மனதில் எண்ணிக் கொண்டார்கள். இஞ்ஞாசியார் மாத்திரம் அவருக்கு சனுவாயிருந்து, அவருக்காக சர்வேசுரனை வெகு உருக்கமாய் மன்றாடி, அவரைச் சீர்திருத்தப் பிரயாசப்பட்டுவந்தார்.

மனுஷ சுபாவத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அதன் குணாகுணங்களை நிதானிப்பதில் இஞ்ஞாசியாருக்கிருந்த சிறந்த நுண்ணறிவும், அதைச் சீர்திருத்துவதில் அவருக்கிருந்த ஆச்சரியமான விமரிசையும், நீடிய சாந்தம் தயை தாட்சணியமும் ரிபதனீரா விஷயத்தில் வெகு துலக்கமாய் விளங்கிற்று. இப்பாலிய நவ சந்நியாசியாரால் நிகழ்ந்த உபத்திரவங்களைச் சகிக்கமாட்டாமல், இவர் நமது சபைக்கு உதவாது, மடத்தைவிட்டு இவரை அனுப்பிவிடவேண்டுமென்று சுவாமிமார்களெல்லாம் இஞ்ஞாசியாரைப் பிரார்த்தித்தார்கள். ஓர் நாள் ரிபதனீரா இஞ்ஞாசியாரறையில் அவரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, நவசந்நியாசிகளை விசாரிக்கும் குருவானவர் அறைக்குள் வந்து ரிபதனீராவைப்பற்றி வெகுவாய் முறைப்பட்டு, அவர் கட்டுக்கடங்காதவராயிருக்கிறார், என்ன



செய்வதெனத் தெரியவில்லையென்றார். இஞ்ஞாசியாரோவென்றால்: "சற்றே பொறுமையாயிருங்கள், பேதுரோவுக்கு நல்லமனதிருக்கின்றது, ஏற்கனவே பலகாரியங்களில் திருந்திவருகிறார்" என்று அவருக்கும் மற்ற குருக்களுக்கும் சமாதானம் சொன்னார். மெய்யாகவே பேதுரோவுக்கு நல்லமனதிருந்தது. படிகளிலேறி இறங்கும்போது ஓடியாடப்படாதென்று தமக்கு ஞாபகப்படுத்தும்படி, காலில் ஓர் அடையாளம் கட்டிவைத்திருந்தார். இஞ்ஞாசியார் அடிக்கடி அவரிடத்தில் கடிதம் முதலியவைகளைக் கொடுத்து, அவைகளை நகல் செய்யும்படி சொல்லுவார். அவர் எழுதியவைகளில் சில சமயங்களில் பல தப்பிதங்களிருக்கும். இஞ்ஞாசியார் வெகு பொறுமையாய் அவைகளைத் திரும்பத் திரும்ப திருத்திவருவார்; ஓர்நாள் அவர் தன் அஜாக்கிரதையை நன்றாய் உணர்ந்து கொள்ளும்படியாக, கடிதாசிகளைத் தரையில் எறிந்து "இந்தப் பேதைப்பிள்ளை ஒருபோதும் ஒன்றும் நன்றாய்ச் செய்யப்போகிறதில்லை" என்று பட்சமும் கண்டனையும் கலந்த குரலில் சொன்னார். உடனே பேதுரோ தன் கன்[illegible]றைந்து கொண்டு கண்ணீர் சொரி[illegible] சேசுசபையை வெகு உ[illegible]ய் நேசித்து, அதில் [illegible] வார்த்தைப்பாடு கொ[illegible] மிக்க ஆவல்கொண்டிருந்தார். அவர் தன் [illegible] ஜெயித்தடைப்ப[illegible] தற்கு இந்த ஆவல் [illegible] விசேஷ உதவியாயிருந்தது.

109408

## 5-ம் அதிகாரம்.

அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபைக்கு 'ஜெனரல்' (General) என்று சொல்லப்படும் அதிபதி சிரேஷ்டராகத் தெரிந்துகொள்ளப்பட்டது.—நியமச்சீட்டுகள்—கடைசி வார்த்தைப்பாடு—கொத்தூரியுஸ் சுவாமியார் மரணம்—அர்ச்சியசிஷ்டவர் செய்த ஞானோபதேசம்—அர்ச். சவேரியார் இந்துதேசத்துக்கு அப்போஸ்தலராகத் தெரிந்துகொள்ளப்பட்டது.

### 1541.

முந்தின அதிகாரத்தில் சொன்னதுபோல், சேசுசபை ஏற்கனவே பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது. என்றாலும், அதை ஆண்டுநடத்தும்படி அதிபதி சிரேஷ்டராக, முறைமைப்படி இன்னும் ஒருவரும் நியமிக்கப்படவில்லை. பாபர் இராயப்பர்முதற்கொண்டு, இஞ்ஞாசியாருடைய தோழர்களனைவரும் இஞ்ஞாசியாரைத் தங்கள் ஞானத்தந்தையாகச் சங்கித்து சேவித்து, சகலத்திலும் அவர் வாக்குத் தட்டாமல் நடந்துவந்தார்கள்,—நிசந்தான். ஆனால் இஞ்ஞாசியார், சகலத்திலும் அவர்களுடைய ஆலோசனையைக்கேட்டு, அவர்களுடைய



ஸ்தானாதிபதியைப்போல் காரியங்களை இதுகாலம் நடத்திவந்தவரேயன்றி, அவர்கள்மேல் அதிகாரமுள்ளவரைப்போல் யாதும் செய்தவருமல்ல, அப்படிச் செய்ய உடன்பட்டவருமல்ல. ஆகையால் முறைமைப்படி அதிகாரம் செலுத்தி சபையை ஆண்டுநடத்தும் அதிபர் ஒருவர் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று. இஞ்ஞாசியார்தாமே அதற்கு வேண்டிய முயற்சியெல்லாம் எடுத்தார். ஒவ்வொருவரும் தேவசமூகத்தில் தனித்தனியே தீர்க்காலோசனை செய்து, தத்தம் மனச்சாட்சிக்கேற்ற ஒருவரை நியமித்து நியமச்சீட்டு எழுத வேண்டுமென்றும், யார் அதிகம்பேரால் தெரிந்துகொள்ளப்படுகிறாரோ, அவரே மற்றெல்லாருக்கும் அதிபதி சிரேஷ்டராயிருக்க வேண்டுமென்றும் இஞ்ஞாசியார் தம் தோழர்களுக்கு அறிவித்தார். இதற்காக வரக்கூடுமானவர்களெல்லாம் உரோமையில் வந்து ஒன்றுகூடினார்கள். வரக்கூடாதவர்கள் கடிதமூலியமாய் தத்தம் சீட்டுகளை முத்திரையிட்டு அனுப்பினார்கள். சவேரியார் இதுசமயம் நமது இந்து தேசத்துக்குப் பயணமாக போர்த்துகால் தேசத்திலிருந்தார்.* ஆனால் உரோமையை விட்டுப் புறப்படுமுன் வரப்போகிறதை முன்னுணர்ந்தவராய், நியமச்சீட்டு ஒன்று எழுதி முத்திரையிட்டு, அதை லேய்னஸ் சுவாமியார் வசம் கொடுத்துவைத்தார். மூன்று நான் விசேஷ

* அவர் அங்கு சென்ற விபரம் பின் தெரியவரும்.

ஜெபதபம் செய்து தேவ உதவியை மன்றாடியபின், உரோமையிலிருந்த சபையாரெல்லாம் ஒன்றுகூடி நியமச்சீட்டுகளைத் திறந்து வாசித்தார்கள். இஞ்ஞாசியார் ஒருவரையும் விசேஷித்துக் குறிக்காமல் தானொருவன் நீங்கலாக, வேறு யார் அதிகம் பேரால் தெரிந்துகொள்ளப்படுகிறாரோ, அவரே சிரேஷ்டராயிருக்க வேண்டுமென்று பொதுவாக எழுதினார். அவர் எழுதியது:

"I. H. S. நான் ஒருவன் நீங்கலாக, வேறு யார் அதிகம்பேரால் தெரிந்துகொள்ளப்படுகிறாரோ, அவரே நமக்கு சிரேஷ்டரென்று நான் ஆண்டவரிடமாய் நியமனஞ்செய்து சொல்லுகிறேன். ஆயினும் சபையார் வேறுவிதமாய் அபிப்பிராயப்பட்டு, நான் யாதாமொருவரைக் குறித்துக் காட்டுவது அதிக நலமென்றும், நமதாண்டவராகிய சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கு அதிக அநுகூலமானதென்றும் எண்ணுவார்களேயாகில், அவ்விதமே செய்யக் காத்திருக்கிறேன். உரோமை, 1541-ம் வருஷம் எப்பிரல்-மீ 5-ம் உ.

INIGO. (இனிகோ.)"

மற்றவர்களெல்லாம் ஒருவாய் ஒரு மொழியாக, இஞ்ஞாசியாரையே அதிபதி சிரேஷ்டராகத் தெரிந்துகொண்டார்கள். நமது இந்துதேசத்து அப்போஸ்தலர் எழுதிவைத்த நியமச்சீட்டைக் கேட்பது நமது இந்துதேசத்தாருக்கு இன்பமாயிருக்கலாம். அவர் எழுதியது:



"I. H. S. நான் பிராஞ்சீஸ்து, 'மனிதருடைய
தூண்டுதல் யாதுமின்றி, என் மனச்சாட்சிக் கேற்க
நிச்சயித்து தீர்மானமாய்ச் சொல்லுவதேதெனில்:
என் அபிப்பிராயத்தில், நாமெல்லாரும் தமக்குக்
கீழ்ப்படியப் பெற்றவராய், நமது சபைக்கு சிரேஷ்
டராயிருக்கும்படி, ஆதிமுதல் நம்மெல்லாருக்கும்
உண்மையான பிதாவாயிருந்துவரும் சங்கைக்குரிய
இஞ்ஞாசியாரையே நாம் தெரிந்துகொள்ளவேண்
டும். வெகு பிரயாசை வருத்தப்பட்டு நம்மை
ஒன்றுசேர்த்த அவர், நம்மை ஆண்டு நடத்தவும்,
நன்மையில் நாம் அபிவிர்த்தி அடையும்படிச் செய்ய
வும் அதிமிகத் திறமையுடையவராயிருப்பார்;
ஏனெனில், மற்றெவரையும்விட அவரே நம்மில்
ஒவ்வொருவரையும் நன்றாய் அறிந்திருக்கிறார்.
அவருடைய மரணத்துக்குப்பின்போவெனில்,—
நான் என் உள்ளத்தில் நீதியென்றுணருகிற பிர
காரமும், இட்சணமே நான் மரணமடையப்போகி
றாப்போல் சிந்தித்துக்கொண்டும் சொல்லுகிறேன்,
—பாபர் இராயப்பர் சுவாமியார் அவருடைய ஸ்தா
னத்தில் சிரேஷ்டராக வேண்டுமென்றெண்ணு
கிறேன். நான் என் மனச்சாட்சிக் கேற்றபடி
மாத்திரம் பேசுகிறேனென்பதற்கு, சர்வேசுரனே
சாட்சி. இது உண்மை என இங்கு என் கையொப்
பம் வைக்கிறேன். உரோமை, 1540-ம் வருஷ,
மார்ச்சு-மீ 15-உ, FRANCIS (பிராஞ்சீஸ்கு.)"

யாவரும் ஒருமனப்பட்டு இஞ்ஞானியாரையே தங்களுக்கு அதிபராகத் தெரிந்துகொண்டார்களென்றாலும், இஞ்ஞானியார் அதற்கு கொஞ்சித்தும் சம்மதப்பட்டவரல்ல. அவர் இருதயத்தில் ஆழ்ந்து வேரூன்றியிருந்த அரிய தாழ்ச்சி அவருக்கு சொல்லிக்கொடுத்த பலபல நியாயங்களை எடுத்துரைத்து, சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டராயிருக்க தாம் அற்பமும் தகுந்தவரல்லவென்று வாக்குவாதம் செய்தார். முப்பது வருஷகாலம் உலக வீண் பெருமையில் உழன்றலைந்தவனோ உங்கள்மேல் அதிகாரம் செலுத்தி, உங்களை ஆளத்தகுந்தவனென்று ஆச்சரியப்பட்டார். சபையை ஆண்டு நடத்தும் இப்பாரச்சுமையை நிருவகிக்க, எனக்கு வேண்டிய தேகபலன் முதலாய் இல்லையென்று பிரலாபித்தார். யாவரும் திரும்ப நன்றாய் யோசித்து, வேறு நியமச்சீட்டுகள் எழுதவேண்டுமென்று தமது தோழர்களை வெகு வாஞ்சையாய் மன்றாடினார். சிலருக்கு இது ஏதோ நம்பக்கூடாத காரியமாகத் தோன்றலாம். அர்ச்சியசிஷ்டதனத்தின் பாதையில் சற்றுத்தூரமாகிலும் சென்றால்தான், அர்ச்சியசிஷ்டவர்களின் தாழ்ச்சியை சற்றுகிலும் கண்டுணர்ந்துகொள்ளலாம்.

தாழ்ச்சியினால் அதிபதி உத்தியோகத்துக்கு அர்ச்சியசிஷ்டவர் பின்வாங்கினாரென்று சொன்னோம். தாழ்ச்சி என்றால் சாமானியமான தாழ்ச்சியன்று,—தனது குறைகளையும் பலவீனத்தையும்



சிந்திப்பதினால் மாத்திரம் உண்டாகும் தாழ்ச்சியன்று! 'தான்' என்ற தற்சிநேகத்தையும் தற்புகழையும் பற்றற வெறுத்து, சகலத்திலும் தேவ தோத்திரம் ஒன்றையே ஆவலாய்க் கருதிய உத்தம தேவ சிநேகமே இஞ்ஞானியார் இருதயத்தில் குடிகொண்டிருந்த இவ்வுன்னத தாழ்ச்சிக்கு உரிய பெயராகும். "மணவாளியை உடையவனே மணவாளன்; மணவாளனுக்கு செவிகொடுத்து நிற்கிற அவனுடைய சிநேகிதனோ, மணவாளனுடைய குரலொலியினிமித்தம் மகிழ்ந்து சந்தோஷிக்கிறான். ஆகையால் என்னுடையதாகிய இந்த சந்தோஷம் பூர்த்தியாயிற்று. அவர் வளரவும், நான் குறுகவும் வேண்டும்"* என்றுரைத்தார். அவதரித்த நாதனுக்கு முன்னோடியாய் வந்த அர்ச். ஸ்நாபக அருளப்பர், கிறீஸ்துநாதர்மீது அளவற்ற அன்புநேசமுற்றிருந்த உத்தம இதயமான இந்த ஸ்நாபகர் சகல இருதயங்களும் கிறீஸ்துநாதரை நாடிச்செல்ல வேண்டுமென்று ஆசித்தாரேயன்றி, தம்மை நாடி வரவேண்டுமென்று விரும்பவில்லை. ஆகையால், திரள்திரளாய் ஆரணியத்தில் தம்மைத் தேடிவந்த ஜனக்கும்பல்களுக்குக் கிறீஸ்துநாதரைத் தமது விரலால் சுட்டிக் காண்பித்து: "இதோ சர்வேசுரருடைய செம்மறிப்புருவையானவர்"† என்று அவருடைய திருநாமத்தைப் பிரசித்தப்படுத்தினார்.

* அர்ச். அருள. சுவி. 3-ம் அதி. 29–30.
† அர்ச். அருள. சுவி. 1-ம் அதி. 36.

அநேகர் கிறீஸ்துநாதரிடத்தில் போகிறதையும்,
தமது சிஷர்களே தம்மை விட்டுக் கிறீஸ்துநாத
ரைப் பின்சென்று போவதையும் கண்ணுற்று அக
மகிழ்ந்து ஆனந்தித்தாரன்றோ! சேசுக்கிறீஸ்து
நாதருடைய திருநாமம் ஒன்றே சகல இருதயங்
களிலும் அழியா முத்திரையாகப்பதிந்து, மேலும்
மேலும் ஸ்துதிபெற்றிலங்கவேண்டுமென்றும்,
தமது நாமமோ உலகின்கண் முற்றும் மங்கி
மறைந்துபோகவேண்டுமென்றும் வாஞ்சையாய்
விரும்பினாரன்றோ இந்த ஸ்நாபகர்! "அவர்
வளரவும், நான் குறுகவும் வேண்டும்" என்றார்.
பொருமையினாலல்ல, மனச்சலிப்பினாலல்ல இவ்வி
தம் உரைத்தார். சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்
விய மகிமையை ஆவலாய் நாடிய உத்தம தேவ
சிநேகத்தால் இவ்விதம் ஆசித்துரைத்தார். லொ
யோலா இஞ்ஞாசியாரும் இத்தகைமையான இதயன்
தானென்று சொல்லத் தேவையில்லை. தம் உள்
ளத்தைத் தூண்டி ஏவிய தேவ திருவுளத்தின் குர
லொலியைப் பின்சென்று, அத்தேவ திருவுளமே
தம் உள்ளத்தில் வரைந்து காண்பித்த பிரகாரம்,
அவதரித்த திவ்விய சுதனுடைய அதிமிக தோத்
திரத்துக்காக, சேசு என்னும் அவர் திருநாமத்தை
நெற்றியில் தரித்து, நரக சர்ப்பத்தை எதிர்த்து யுத்
தம் செய்யும் படையணியாயிருக்கும் துறவற சபை
ஒன்று ஸ்தாபிக்க மிக்க ஆவலுடன் பல வருஷகால
மாய் அளவற்ற முயற்சிசெய்து வந்தார். கடைசி



யாய் அச்சபை அர்ச். பாப்பானவரால் அங்கீகரித்து
ஆசீர்வதிக்கப்பட்டு ஸ்தாபகம் பெற்றது. இஞ்
ஞாசியாரும் அதனால் அகமகிழ்ந்தானந்தித்து சர்
வேசுரனுக்கு ஸ்தோத்திரஞ் செய்தார். இனி தன்
பெயர் உலகின்கண் முற்றும் மறைந்து மறக்கப்
பட்டதாய், சேசு என்ற திருநாமமே அச்சபையின்
ஏக பெயராக ஸ்திரப்பட்டு பிரசித்தமாய் துலங்கும்
பொருட்டு, வேறொருவர் அச்சபைக்கு அதிபரா
யிருந்து அதனை ஆண்டு நடத்திவரவும், தாமோ
வென்றால் தமக்கென்று விசேஷ சுதந்தரம் யாது
மின்றி, அச்சபையார் மற்றவர்களில் தாமும் ஒருவ
ராய், அவ்வதிபருக்குள்ளடங்கி சகலத்திலும் அவர்
சொற்கேட்டு கீழ்ப்படிந்து நடக்க ஆசித்தார்.
சபையை ஸ்தாபிப்பதற்கு இதுகாலம் வெகு
முயற்சி செய்துவந்தபின், தாமே அச்சபைக்கு
முதல் அதிபதி சிரேஷ்டராகவுமிருக்கும்படி நேர்ந்
தால், மனிதர் தம் பெயரை ஏதோ பெரிது பாராட்
டும்படி நேரிடலாமென்றஞ்சினார். அன்றியும், சபை
யின் பரிபாலனத்துக்கும் அபிவிர்த்திக்கும் இனிமே
லாகத் தாம் அவசியமில்லையென்றும், தம் உள்ளத்
தில் அதனை உருவாக்கிவந்த திவ்விய இஸ்பிரீத்து
வின் திரு அருள், சிரேஷ்டராகத் தெரிந்துகொள்
ளப்பட்டவர் யாவராயிருந்தாலும், அவர் மூலிய
மாய் சபையை முற்றும உருவாக்கி அமைத்து
ஆண்டு நடத்திவருமென்றும், தேவ பராமரிப்பின்
திருச்செயல் விசேஷங்களை ஆழ்ந்து தியானித்த

அவர் இருதயத்தில் ஸ்திரமாய் பதிந்திருந்தது-
இதனால்தான், வேறொருவரை சிரேஷ்டராகத்
தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், ஒவ்வொருவ
ரும் வேறு நியமச்சீட்டு எழுதவேண்டுமென்றும்,
அவ்வளவுதூரம் அவர் வாக்குவாதம் செய்து மன்
றாடினதாகத் தோன்றுகின்றது.

அவர் கட்டாயப்படுத்திக் கேட்டுக்கொண்டபடி,
திரும்பவும் மூன்றுநாள் தேவசந்நிதியிலமர்ந்து
தீர்க்காலோசனைசெய்து வேறு நியமச்சீட்டெழுதி
னார்கள். ஆனால் முன்போல் யாவரும் ஒரே எண்ண
மாய் திரும்பவும் இஞ்ஞாசியாரையே சிரேஷ்ட
ராகக் குறித்தார்கள். இஞ்ஞாசியார் திரும்பவும்
சம்மதங்கொடாமல், அட்டிசொல்லி வாக்குவாதம்
செய்ய ஆரம்பித்தார்.

ஆனால் லேய்னஸ் சுவாமியார் சுறுக்கென எழுந்து
"பிதாவே, சர்வேசுரனுடைய சித்தத்துக்கு இணங்
கும்; அல்லவென்றால், நான் சம்பந்தப்பட்டமட்
டுக்கும், இச்சபையே கலைந்துபோகலாம். ஏனெ
னில் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்
கும் தலைவரையேயன்றி, வேறெவரையும் நான்
ஏற்றுக்கொள்ளப்போகிறதில்லையென்பது எனது
தீர்மானம்" என உறுதியாய்ச் சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும், இஞ்ஞாசியார்
வாக்குவாதம் செய்வதை விட்டுவிட்டார். ஆயினும்
தாம் சிரேஷ்டராயிருப்பது, தேவசித்தமென்று
தாழ்ச்சி மிகுந்திருந்த அவர் உள்ளத்தில் இன்னும்



தெளிவாய் விளங்கவில்லை. தம்மிடத்திலுள்ள
எண்ணிறந்த குறைகளை அறியாது, வெளித்தோற்
றங்களை நம்பி, தம் தோழர்கள் மோசம்போனார்க
ளென்றெண்ணினார். ஆனதால், தம் ஆத்துமத்தி
லுள்ள குறைகளை நன்றாய் அறிந்த ஒருவருடைய
அபிப்பிராயத்தைக் கேட்டு, அதன்படி செய்வ
தென்று தீர்மானித்தார். அதற்காக, தமக்கு
ஆத்தும குருவாயிருந்த தியோடோசியோ (Fra
Teodosio) என்னும் அர்ச். ஐந்துகாய பிரான்சீஸ்கு
சபைக்குரு வசித்த மடத்திற்குப் போய் அங்கு
மூன்றுநாள் தங்கியிருந்து, ஜெபத்தியானமும்
ஆத்துமசோதனையும் செய்து, தம் ஞாபகத்துக்கு
வந்த தமது குற்றங்குறைகளையெல்லாம் அவரிடத்
தில் சங்கீர்த்தனம் செய்து, சிரேஷ்டர் உத்தியோ
கத்துக்குத் தாம் தகுந்தவனல்லவென்று தம்
தோழர்களுக்கு தாராளமாய் எழுதும்படி அவரை
மன்றாடினார். அக்குருவானவரோவென்றால், இஞ்
ஞாசியார் கேட்டுக்கொண்டபடி எழுதவில்லை.
அதற்கு விரோதமாய், தம் தோழர்களுடைய விருப்
பத்துக்கிணங்கி, தம்மேல் சுமத்தப்பட்ட உத்தியோ
கத்தை ஒப்புக்கொள்ளுதல் இஞ்ஞாசியாருடைய
கடமையென்றெழுதி, அவர் தாமே அச்சீட்டை
அர்ச்சியசிஷ்டவருடைய தோழர்களுக்குக்
கொண்டுபோய்க் கொடுத்தார். இவ்வளவு பிரத்தி
யட்சமாய் அறிவிக்கப்பட்ட தேவதிருவுள நிய
மனத்தைப்பற்றி இஞ்ஞாசியார் இன்னும் சந்தேகப்

படக்கூடுவதெப்படி? அத்தேவ திருவுளநியமனத்துக்குத் தலைகுனிந்து, 1541-ம் ௵ எப்பிரல்-௴ 13-ம்௳ சேசுசபை 'ஜெனரல்' (General) அதாவது: அதிபதி சிரேஷ்டர் என்னும் உத்தியோகத்தை முறைமைப்படி ஒப்புக்கொண்டார்.

இரண்டுநாளைக்குப் பின், எப்பிரல்-௴ 15-ம் ௳ அர்ச். இஞ்ஞாசியாரும் உரோமையிலிருந்த அவர் துணைவர்கள் ஐவரும் கடைசி வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். அன்று அர்ச். சின்னப்பர் ஆலயத்தில் பெரிய பீடத்தின் வலது பக்கத்திலிருக்கும் பரிசுத்த கன்னித்தாய் பீடத்தில் இஞ்ஞாசியார் திவ்விய பூசை செய்தார். ஐவரும் அப்பூசையைக் கண்டார்கள். திருப்பலி உட்கொள்ளுமுன், இஞ்ஞாசியார் ஒரு கையில் திவ்விய சற்பிரசாதத்தையும், மறு கையில் வார்த்தைப்பாடடங்கிய பத்திரத்தையும் ஏந்தி, தமது தோழர்கள் முகமாய்த் திரும்பி, உரத்த சத்தமாய் வார்த்தைப்பாடுகளை வாசித்து திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டார். அதன்பின் அவர் துணைவர்கள் ஐவரும் (கொதூரியுஸ், ஜுஜே, பாஸ்கேஷியுஸ், லேய்னஸ், சால்மரோன் என்பவர்கள்) ஒருவர் ஒருவராய் அவர்முன் வந்து வார்த்தைப்பாடு கொடுத்து, அவர் கையினின்று திவ்விய நன்மை வாங்கினார்கள். பூசை முடிந்து யாவரும் தங்கள் நேச தந்தை இஞ்ஞாசியாரைக் கட்டி மினவி, அவர் கரத்தை முத்தி செய்து, பரிசுத்த தேவ சிநேகப் பெருக்கத்தால்



இருதயம் பற்றியெரிந்தவர்களாய் மடத்துக்குத் திரும்பினார்கள்.

விசேஷமாய் **கோதூரியுஸ்** சுவாமியார் பரவசமானவர்போல், லேய்னஸ் சுவாமியாருடன், மற்றவர்களுக்குமுன் வேகமாய் நடந்தார். வழிநெடுக அவர் நேத்திரங்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்த வண்ணமாகவே யிருந்தன. உள்ளத்தில் பொங்கியெழும்பிய பேரின்பப் பெருக்கத்தை அடக்கமாட்டாதவராய், ஓயாமல் பெருமூச்செறிந்து, உரத்த சத்தமாய் தேவ சிநேக உச்சாரணம் செய்துகொண்டே நடந்தார். சமீபித்திருந்த மோக்ஷானந்தத்தின் முன்னுணர்வா இது! ஏனெனில், சில மாதத்துக்குள் இந்த புண்ணியாத்துமா இகலோகத் துன்பங்களினின்று பரலோகபேரின்பத்துக்கழைத்துக்கொள்ளப்பட்டார். அவர் வியாதியாயிருக்கும்போது, ஓர்நாள் அர்ச். இஞ்ஞாசியார் அவருக்காகப் பூசைசெய்து ஒப்புக்கொடுக்கும்படி, ஒரு தேவாலயத்துக்குப் புறப்பட்டுப் போனார். வழியில் ஓர் பாலத்தைக் கடக்கும்போது, திடீரென்று வானத்தை ஏறெடுத்துப் பார்த்தவராய் சற்றுநேரம் நின்று, பின்பு தம்முடன் வந்த வியோலா ஸ்நாபக அருளப்பர் (John Baptist Viola) என்னும் துணைச் சகோதரரைப் பார்த்து: "நாம் திரும்பிப் போகலாம்; கொதூரியுஸ் இப்போதுதான் மரணமடைந்தார்" என்று சொல்லித் திரும்பிவிட்டார். அதே சமயத்தில்தான் கொதூரியுஸ் சுவாமியாரும்

பரலோக பிராப்தியானார். இஞ்ஞாசியார் தாம் அப்போது கண்டது இன்னதென்று ஒருவருக்கும் விவரித்துச் சொன்னவரல்ல. அர்ச். ஸ்நாபக அருளப்பர் பெயர்கொண்ட இந்த கொதூரியுஸ் சுவாமியார், இவ்வர்ச்சியசிஷ்டவர் பிறந்த திருநாளன்று பிறந்து, அவர் வேதசாட்சியாக சிறையில் தலை வெட்டுண்ட திருநாளன்று, ஸ்நாபகருக்கு அப்போது என்ன பிராயமோ, அதே பிராயத்தில் மரணமடைந்தார். இவருடைய சீவியத்தில் அர்ச். ஸ்நாபகருடைய சீவியத்தின் இலட்சணங்கள் ஒருவாறு விளங்கினதாக இவருடைய தோழர்கள் எண்ணினார்கள்.

• சிரேஷ்டர் உத்தியோகம் ஒப்புக்கொண்டபின், இஞ்ஞாசியார் சேசுநாதர்சுவாமி மாதிரியாய் தாழ்ச்சி அப்பியசிக்க விரும்பி, சமயலறையில் தாழ்மையான வேலைகளை பலநாள்பரியந்தம் செய்துவந்தார். அதன்பின் நாற்பத்தாறுநாள் தேவாலயத்தில் சிறுபிள்ளைகளுக்கு வேத சத்தியங்களைச் சொல்லிக்கொடுத்து ஞான உபதேசம் செய்தார். ஞானோபதேசம் கேட்க வந்த திரளான ஜனங்களுக்குள், சிறுவர்களைவிட பெரியவர்களுடைய தொகையே அதிகமாயிருந்தது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், எவ்விதம் ஒன்றோடொன்று உறவான பாஷைகளாயிருக்கின்றனவோ, அவ்விதமே இஞ்ஞாசியாருடைய சுயபாஷையாகிய இஸ்பானிய பாஷையும், இத்தாலிய பாஷையும் ஒன்றோ



டொன்று உறவான பாஷைகள். ஆனால் தமிழ் பாஷையை அரைகுறையாக மாத்திரம் கற்றறிந்த மலையாள இராச்சியத்தார், அல்லது தெலுங்கு இராச்சியத்தார் ஒருவர் செந்தமிழ்வாழும் நாட்டிலே வந்து தமிழ்ப்பேச எத்தனித்தால், அது என்னமாயிருக்கும்! இஞ்ஞாசியார் இத்தாலிய பாஷையை அறிந்திருந்தது அரைகுறையாகத்தான். ஆனதால் ஞானோபதேசம் செய்யும்போது அவர் பிரயோகித்த பாஷை, வாக்கிலும் நடையிலும் அநேகமாய் இஸ்பானிய பாஷையாகவேயிருந்தது. கர்தினால் அரண்மனையில் சிறுவயதிலேயே இத்தாலிய பாஷையை வெகு திருத்தமாய் கற்றறிந்திருந்த நமது ரிபதனீரா சகோதரர், அர்ச்சியசிஷ்டவர் பிரசங்கத்தில் இத்தாலிய பாஷையை வெகு பிழையாய்ப் பேசுவதைக்கேட்டு, அப்பாஷையை அதிக திருத்தமாய்ப் பேசப் படித்துக்கொள்ளுவது நலமாயிருக்குமென்று கபடின்றி அர்ச்சியசிஷ்டவருக்குச் சொன்னார். ரிபதனீரா சகோதரர் அடிக்கடி அர்ச். இஞ்ஞாசியார் அருகிலிருந்து வந்ததுமன்றி, தம் மனதிலுள்ளதையெல்லாம் அவரிடத்தில் தாராளமாய்ச் சொல்லி வார்த்தையாடுவார். நவசந்நியாசியார் சொன்ன நற்புத்தியைக் கேட்டு, இஞ்ஞாசியார் மலர்ந்த முகமாய் அவரைப் பார்த்து: "நல்லது, பேதுரோ, இனிமேலாக நான் பிரசங்கம் செய்யும்போது, அதைக் கவனமாய்க் கேட்டு, அதிலுள்ள தப்பிதங்களையெல்லாம் ஞாபகப்படுத்தி,

பிற்பாடு எனக்கு அறிவிக்கவேண்டும்" என்றார். ரிபதனீரா சகோதரர் அப்படியே ஆகட்டுமென்று, மறுநாள் அர்ச்சியசிஷ்டவர் செய்த பிரசங்கத்திலுள்ள பிழைகளையெல்லாம் வெகு ஜாக்கிரதையாய் ஓர் கடுதாசியில் குறிக்க ஆரம்பித்தார். ஆனால் அதிசீக்கிரம் அவதைரியப்பட்டு, துவக்கினதை விட்டு விட்டார். அத்தனை பிழைகள் குறிக்க வேண்டியிருந்தது.

அர்ச்சியசிஷ்டவருடைய வாய்மொழிகள் பாஷை நடையில் திருத்தக் குறைவாயிருந்தபோதிலும், அவைகள் தேவசிநேகம் பற்றியெரிந்த இருதயம் பேசின மொழிகளாயிருந்தமையால், அக்கினிக் கணைகள்போல் மற்ற இருதயங்களிலும் அத்தேவசிநேக அக்கினியை மூட்டுவிக்கும் வல்லமைகொண்டிருந்தன. உறையினின்று வாளை உருவிப் பிரயோகிப்பதுபோல், பரிசுத்த சுவிசேஷ வாக்கியங்களைப் பிரயோகித்தே, அதிலடங்கிய வேத சத்தியங்களை விள்க்கிக் காண்பிப்பார். இவ்விதம் அவர் பிரயோகிக்கும் வாக்குகள், கேட்போர் இருதயங்களில், ஓர்வகைக் கட்டாயமாய் நற்சிந்தனைகளையும் பாவத்தின்மீது மனஸ்தாபத்தையும் எழுப்பும். ஆனதால் உபதேசம் முடிந்ததும், ஜனங்கள் பாவசங்கீர்த்தனம் செய்ய ஆத்திரப்பட்டு, குருக்களைத் தேடிப் போவார்கள். மௌனமாயிருக்கும்போது முதலாய், தேவசிநேக அக்கினிச் சுவாலை வீசின்றபோல் துலங்கும் அவர் முகமே சபையோர் மனதை சர்வே-



சுரன் முகமாய்க் கவர்ந்திழுக்கும் வல்லபமுள்ள ஓர் பிரசங்கமாயிருக்கும்.

"பற்பல இடங்களுக்குப் பிரயாணம் பண்ணுவதும், சர்வேசுரனுடைய அதிமிக ஊழியத்திற்கும் ஆத்துமாக்களின் ஈடேற்றத்துக்கும் இப்பூலோகத்தின் எந்த இடங்களிலே நம்பிக்கையுண்டோ, அவ்விடங்களிலே போயிருந்து சீவிப்பதும் நமது தேவ அழைத்தலுக்கு உரிய காரியமாம்" என சேசு சபை ஏற்பாட்டாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, இச்சபைக்கு அஸ்திவாரமாயிருந்த இஞ்ஞாசியாருடைய தோழர்கள் ஏற்கனவே பற்பல இடங்களுக்கு அப்போஸ்தலர்களாய்ப் பிரிந்துபோக சர்வேசுரன் திருவுளமானார். இதன் நிமித்தமே அதிபதி சிரேஷ்டர் தெரிந்துகொள்ளுவதற்கு நியமச்சீட்டுகள் எழுதப்பட்டபோதும், கடைசி வார்த்தைப்பாடு கொடுக்கப்பட்டபோதும், இஞ்ஞாசியாருடைய தோழர்களில் ஐந்துபேர்மாத்திரம் உரோமையில் இருந்தார்கள். அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் இந்தியா தேசத்துக்கு அனுப்பப்பட்ட விசேஷத்தை மாத்திரம் இங்கெடுத்துச் சொல்வோம்.

போர்த்துகால் தேசம் தற்காலம் இருக்கும் நிலைமை வேறு, அக்காலம் அதிருந்த நிலைமை வேறு. அக்காலத்தில் இத்தேசம் ஐரோப்பா கண்டத்தின் பிரதான இராச்சியங்களுள் ஒன்றாயிருந்து, இந்தியாவில் அநேக இடங்களைக் கைக்கொண்டு அரசாட்சி செய்துவந்தது. இந்நாள்வரை அத்தேசத்-

தார் கைவசமிருக்கும் கோவை நகர்தான் அக்காலம் இந்தியாவில் அவர்களுடைய முக்கிய ஸ்தானமாயிருந்தது. தேவபக்தியில் சிறந்த மூன்றாவது ஜோவாம் (Joam III) என்னும் அத்தேசத்தரசன், நமது இந்து நாட்டில் சத்தியமறை விளங்கச்செய்வதற்கு வேத போதகர்களை அனுப்ப மிக்க ஆவலுற்றிருந்தார். புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சேசுசபைக் குருக்கள் அதற்குத் தகுந்தவர்களென்று கேள்வியுற்று, அவர்களில் சிலரை அர்ச். பாப்பானவரிடத்தில் தன் பெயரால் கேட்டனுப்பும்படி தமது ஸ்தானாதிபதி மஸ்கரேஞாஸ் என்பவருக்கு கட்டளை கொடுத்தார். மஸ்கரேஞாஸ் ஆறுபேர் வேண்டுமென்று கேட்டார். இஞ்ஞாசியாரோவென்றால்: "ஆக நாங்கள் பத்துபேர்தானுண்டு. அவர்களில் ஆறுபேர் இந்தியாவுக்குச் சென்றுவிட்டால், உலகத்தின் மற்றப் பாகங்களுக்கு எத்தனைபேர் மீந்திருப்பார்கள்?" என்று சொல்லி, இரண்டுபேர் மாத்திரம் கொடுக்க உடன்பட்டார். இந்தியாவுக்கு வரும்படி முதல்முதல் இஞ்ஞாசியாரால் குறிக்கப்பட்டவர்கள் **சீமோன் ரோதிரீகேஸ், நீக்கோலாஸ் பொபாதில்லா** என்ற இருவர்கள். இவர்களில் யாராகிலும் இந்தியாவுக்கு வர சர்வேசுரன் திருவுளமாகவில்லை. இருவரும் போர்த்துகால் தேசத்துக்குப் போய் அங்கிருந்து இந்தியாவுக்குப் புறப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரொதிரிகேஸ் சுவாமியார் 1540-ம் வருஷ



மார்ச்சு-மீ 5-உ உரோமையைவிட்டுப் புறப்பட்டார். போர்த்துகால் தேசத்தரசன் ஸ்தானாதிபதியோடு பிரயாணப்படும்படி நியமிக்கப்பட்டிருந்த பொபாதில்லா சுவாமியார் வெகு வியாதியாயிருந்தார். பயணத்தை நிறுத்திவைப்பதென்றால், அதுவும் சாத்தியப்படவில்லை. ஆனதால் அவருக்குப் பதிலாய் வேறொருவரைத் தெரிந்துகொள்ளுவதவசியமாயிற்று. அவருக்கு பதிலாய் யாரை அனுப்புவதென்று இஞ்ஞாசியார் ஜெபத்தில் சர்வேசுரனை மன்றாடி தீர்க்காலோசனை செய்தபின், பிராஞ்சீஸ்கு சவேரியார் இந்துதேசத்துக்குப் போவது தேவ திருவுளமென்று உணர்ந்து, அவரை வரவழைத்துச் சொல்லுவார்: "சகோதரர் பிராஞ்சீஸ்க், அர்ச். பாப்பானவர் கட்டளைப்படி நம்முள் இருவர் இந்தியாவுக்குப் புறப்பட்டுப் போவது அவசியமென்றும், அதற்கென்று குறிக்கப்பட்டவர்களில் பொபாதில்லா சுவாமியார் வியாதியாயிருக்கிறாரென்றும் உமக்குத் தெரியுமே. ஸ்தானாதிபதியோ பிரயாணந் துவக்க வெகு ஆத்திரப்படுகிறார். அதிகநாள் தாமதியார். ஆனால் சர்வேசுரன் உம்மை (இந்து தேசத்தில்) வேதம் போதிக்க அழைக்கிறார்" என்றுரைத்தார். அஞ்ஞான இராச்சியங்களுக்குச் சென்று, சேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த வேதத்தைப் போதித்து, வேதசாட்சியாக தமது இரத்தத்தைச் சிந்தி மரிக்கும் பாக்கியம் தமக்கு எப்போ கிடைக்குமென்று, வெகுகாலம் பரிதவித்

திருந்த சவேரியார் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சொல்லிலடங்கா ஆனந்தமடைந்து: "பிதாவே, இதோ புறப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கிறேன்"* என்று சொல்லி உடனே பயணத்துக்கு ஆயத்தம் செய்தார்.

முன்னமே சொல்லியதுபோல், லொயோலா இஞ்ஞாசியாரும், பிராஞ்சீஸ்கு சவேரியாரும் தங்கள் அக இலட்சணங்களில் ஒரே அச்சில் உருவாக்கப்பட்டவர்கள்போல், ஒரு தன்மை, ஒரு சாயலுடையவர்களாய், ஒருவர்மீது ஒருவர் மேலான எண்ணமும், ஓர் அருமைத் தந்தையும், அருமை மைந்தனும்போல் ஒருவருக்கொருவர் அன்னியோன்னிய நேசமுடையவர்களாயிருந்தார்கள். மேலும் சவேரியாருடைய புண்ணியங்களையும் திறமையையும் நன்றாய் அறிந்திருந்த இஞ்ஞாசியார், அவர் தமதருகிலிருப்பது புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சேசுசபைக்கு வெகு உதவியாயிருக்குமென்றும் எண்ணியிருந்தார். ஆதலால் அவரை இந்துதேசத்துக்கு அனுப்பத் தீர்மானித்தபோது, இஞ்ஞாசியார் மனம் என்னமாய் வருந்தியிருக்க வேண்டுமென்று உத்தேசித்துக்கொள்ளலாம். ஆனால் அவர் போவது தேவசித்தம் என்றுள்ளத்திலுணர்ந்த அக்ஷணமே, இந்துதேசத்தாரின்

* Pues, sus! heme aqui!" என்று சவேரியார் தமது தாய் பாஷையில் சொன்ன மொழிகள், இந்திய மக்களுக்கு சத்திய மறையைப் போதிக்க அவர் எவ்வளவு ஏக்க நோக்கமுற்றிருந்தாரென்டதைத் தெளிவாய்க் காட்டுகின்றன.



ஆத்தும இரட்சணியத்துக்காக அவரை சந்தோஷமாய் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். அதுபோலவே சவேரியாரும் தம் ஞானப்பிதாவையும், ஞான சகோதரர்களையும் விட்டுப்பிரிவதால் உண்டான வியாகுலத்தை சர்வேசுரனுக்கு உதாரமாய் ஒப்புக்கொடுத்தார்.

இஞ்ஞாசியார் சவேரியாரை வரவழைத்து இந்தியாவுக்குப் போகும்படி சொன்னது 1540-ம் ௵ மார்ச்சு-௴ 15-௳. மறுநாள் காலமே பூசை செய்து தமது கரத்தில் பலியான திவ்யசுதனோடு, தம்மையும் திவ்விய பிதாவுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தபின், தமது அருமைப் பிதாவுடைய கடைசி ஆசீர்வாதம் பெறும்படி அவர்முன் சென்றார். ஜெப புஸ்தகமும், பாடுபட்ட சுரூபமும், அணிந்திருந்த பழைய வஸ்திரமும் தவிர, வேறு வழித்துணை ஆதாரம் அவர் தேடவில்லை. ஆல்ப்ஸ் மலையைக் கடக்கும்பொழுது குளிர் அதிகமாய் இருக்குமேயென்று கவலையுற்ற இஞ்ஞாசியார், வியாதியினிமித்தம் தாம் அப்போது தரித்திருந்த கம்பளிப் போர்வையை எடுத்து பிரயாணிமேற் போட்டு, அதை அவர் அணிந்துகொள்ளும்படி செய்தார். பின் தம் அருமைப் புதல்வனை நோக்கி: "போய் உலகமெல்லாம் தேவசிநேக அக்கினியால் சுவாலித்தெரியச்செய்யும்" என்று உருக்கமாய்ச் சொல்லி தமது கடைசி ஆசீர்வாதம் கொடுத்தார்.

சவேரியூர் சுவாமியாரையும், ரொதிரிகேஸ் சுவாமியாரையும் போர்த்துகால் தேசத்தரசன் கண்ணுற்றதும், அவர்களை இந்தியாவுக்கு அனுப்ப அவருக்கு மனம் வரவில்லை. கல்வியிலும் அர்ச்சியசிஷ்டதனத்திலும் மிகத் தேர்ந்தவர்களான இவர்களை தன் நாட்டிலே நிறுத்திக்கொள்ளப் பிரியப்பட்டு, அதற்காக அர்ச். பாப்பானவருக்கும், இஞ்ஞாசியாருக்கும் காகிதத்துக்குமேல் காகிதம் எழுதினர். பாப்பானவரோவென்றால், அரசனும் இஞ்ஞாசியாரும் தங்களுக்குள் காரியத்தைத் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டுவிட்டார். இஞ்ஞாசியார், ரொதிரிகேஸ் சுவாமியார் போர்த்துகால் தேசத்திலிருக்கட்டும், சவேரியார் சுவாமியார் இந்தியாவுக்குப் புறப்பட்டுப் போகட்டும் என்று அரசனுக்கு எழுதினர். அரசன் அதற்கு சம்மதிக்கவே, சவேரியார் 1541-ம் வருஷம் ஏப்பிரல்-மீ 7-உ கப்பலேறி, 1542-ம் வருஷம் மே-மீ 6-உ நமது நாட்டில் வந்துசேர்ந்தார்.

"உலகசெல்வம் முற்றும் வெறுத்தாய்—
மங்கைமகீர்த்தி
உற்றார் சுற்றம் பற்றை அறுத்தாய்
நலமிறைமெய் வேதசத்யம் நாட்ட இந்த நாட்டில் வந்தாய்
நாங்கள் எல்லாம் நீ விதைத்த நல்ல வித்தின்
விளை அல்லோ."



"அந்தகாரமுள்ள நாடே—மனது தேர்ந்து
அக்களிப்போடிப்போ பாடே
தந்தை உந்தன் சவேரியார் வந்து உன்னைத்தேற்றுவர்
சிந்தைமகிழ்ந்தே கடவுள் உந்தனைக் கைவிடாதாள்வார்."*

* சங். சந்தியாகு சுவாமி அவர்களால் இயற்றப்பட்ட தேவஸ்தோத்திரக் கீர்த்தனைகள், பன்னிரண்டாம் பதிப்பு, 80-ம் பக்கம், சரணங்கள் 1 & 3.

## 6-ம் அதிகாரம்.

### அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபை ஏற்பாட்டொழுங்குகளை எழுதிய முறை.

*அர்ச்சியசிஷ்டவருடைய அனுதின சீவியம்—திவ்விய பூசை—வியாதியஸ்தர் மட்டில் அவர் அன்புற்றெடுத்துவந்த கவலை—அவரிடத்தில் விளங்கின புண்ணியங்கள்—நன்றியறிதல்—தாழ்ச்சி—தேவசிநேகம், பிறர்சிநேகம்—உன்னதமான தேவநம்பிக்கை—என்றும் மலர்ந்த முகம்.*

### 1541—1550.

சேசுசபை பிரசித்தமாய் ஸ்தாபிக்கப்பட்டது. அதை ஆண்டு நடத்தும் அதிபதி சிரேஷ்டரும் முறைமைப்படி தெரிந்துகொள்ளப்பட்டார். என்றாலும், சங்க்ஷேபமாய் அர்ச். பாப்பானவர் சமுகத்துக்கு எழுதியனுப்பப்பட்ட ஏற்பாட்டாகமம் தவிர, வேறு விரிவான ஏற்பாட்டாகமமும், சட்டதிட்டங்களும் ஒழுங்குகளும் இன்னும் எழுதப்படவில்லை. இதுகாலம் அர்ச். இஞ்ஞாசியார் தான் சபையாருக்கு உயிருள்ள ஒழுங்காயிருந்தார்;—அவருடைய சீவியமும் நடபடிகளுமே அவர்களுக்கு மேல்வரிச்சட்டம்போலிருந்தன. சேசுசபை ஸ்தா



பகம் பெறுவதற்கு வெகுகாலத்துக்கு முன்னமே,
மன்ரேசாவில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திரு
அருளால் 'ஞானமுயற்சிகள்' என்னும் அற்புதநூல்
அவர் உள்ளத்தில் உருவான அன்றுதானே, சேசு
சபையின் பிரதான கதியும், கருத்தும், கோட்பாடு
களும் அவர் உள்ளத்தில் உருவாகத் துவக்கின.
ஆதலால், அன்றுமுதல் அவர் சீவியமும் சேசுசபை
யார் சீவியத்துக்குரிய விசேஷ தன்மையும் இலட்
சணமுமுடையதாயிருந்தது. சேசுசபையின் அஸ்தி
வாரத் தூண்களாயிருந்த முத். பாபர் இராயப்பர்,
அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார், லேய்னஸ் முதலிய
அவருடைய முதற்றோழர்களுக்கும், அவர் தமது
ஞானமுயற்சிகளைப் போதித்து, அவைகளை அவர்கள்
பூரணமாய் செய்து முடிக்கும்படி செய்ததால்,
அவர்கள் உள்ளத்திலும் இத்தன்மையான சீவியம்,
தேவவரப்பிரசாதத்தின் அநுக்கிரகத்தால் மேன்
மேலும் உருவாகச் செய்தார். மேலும் இந்நாள்
மட்டும் நடந்துவருவதுபோல் சேசுசபையில் பிர
வேசிக்கும் ஒவ்வொருவரும் முதல் வார்த்தைப்பாடு
கொடுக்குமுன், இந்த ஞானமுயற்சிகளைப் பூரண
மாய் செய்துமுடித்து வந்தமையால், இவர்களும்
இது வழியாய் மேற்சொன்ன உன் சீவியத்தைக்
கற்று அநுசரித்து வந்தார்கள். அர்ச். இஞ்ஞாசி
யாரோவென்றால்: உத்தம தேவசிநேகத்தை உயி
ராகக்கொண்ட இவ்வுன் சீவியத்தையே பிர
தானமாய் மதித்து, இதுவே தம் மக்களுடைய

வெளிக்கிரியைகள் யாவுக்கும் உயிரும் தூண்டுதலும் சட்டமுமாயிருந்து, இதனாலேயே அவர்களுடைய மற்றக் கிரியைகள் யாவும் பிரபலமும் சகிர்தமும் பெறவேண்டுமென்று விரும்பிவந்தார். ஆயினும் பற்பல நியாயங்களைப்பற்றி, வெளி ஏற்பாடுகளும் ஒழுங்குகளும் அவசியமாயிருந்தமையால், அவைகளை எழுத ஆரம்பித்தார். இதனால்: "திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் மனிதருடைய இருதயத்தில் வழக்கமாய் எழுதிப் பதிப்பிக்கும் தேவசிநேகப் பற்றுதலடங்கிய சட்டதிட்டங்களே வெளி ஏற்பாடுகளைப் பார்க்கிலும் அதிகமாய்த் துணைநின்று மனிதரை நடத்துவதும் மெய்யே" என்றபின்; "அப்படியிருந்தாலும் இது விஷயத்தில் மனிதருடைய ஐக்கிய முயற்சியும் வேண்டுமென்று சர்வேசுரன் திருவுளமாயிருப்பதாலும், திவ்விய கர்த்தரின் பதிலாளியானவருடைய தீர்மானமும் அப்படியிருப்பதாலும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய சகிர்த மாதிரிகையும் சாதாரண புத்தி ஞாயமும் அப்படியே படிப்பிப்பதாலும், நாம் தெரிந்துகொண்ட தேவ ஊழியத்தில், இச்சபையின் கருத்துப்பிரகாரம் ஏற்பாட்டொழுங்குகளை எழுதித் தருவது அவசரமென்று நினைக்கலானோம்" என அவர் எழுதிய ஏற்பாட்டாகமத்தின் துவக்கத்தில் சொல்லுகிறார்.

மற்றத் துறவற சபைகளின் ஏற்பாட்டொழுங்குகளை அர்ச். இஞ்ஞாசியார் நன்றாய் அறிந்திருந்தா



ரென்றாலும், சேசுசபையின் ஏற்பாட்டாகமத்தையும் சட்டதிட்டங்களையும் எழுதுவதற்கு, அவைகளை அவர் பிரயோகித்தவரல்ல. ஏற்பாடுகளின் ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி தேவசன்னிதியில் ஆழ்ந்த சிந்தனை செய்து, குறிக்கப்பட்ட விஷயத்துக்கு அநுசரணையான நியாயங்களையும், அதற்கு விருத்தமான எதிர் நியாயங்களையும், சீர்தூக்கிப் பார்த்து, சர்வேசுரனோடு இருதயத்தில் சல்லாபம் செய்து, ஜெபத்திலும், திவ்விய பூசையிலும் அவருடைய திருத்தாயின் அநுக்கிரகத்தை இரந்து மன்றாடி வருவார். அதன்பின் தம் உள்ளத்தில் தேவசித்தமெனத் தெளிவாய்த் துலங்கியதைத் துலங்கியபடி எழுதிவந்தார். எழுதுமுன் செய்ததுபோலவே, எழுதியபின்பும் ஒவ்வொரு விஷயத்தையும் திவ்விய பூசையில் தேவ மகத்துவத்துக்கு ஒப்புக்கொடுத்து வந்தார். தந்தை நேசத்தை நாடித் தந்தை அருகிற்சென்று, தன் மனதிலுள்ளதையெல்லாம் தந்தையிடத்தில் சல்லாபம் செய்து, தந்தையின் ஆலோசனை கேட்டு நடக்கும் சற்புத்திரனைப் போல், தேவ சன்னிதியை சதா சிந்தித்துத் தன் மனதிலுள்ளதையெல்லாம், பதில் கிடைக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன், சர்வேசுரனிடத்தில் சல்லாபம் செய்து தான் யாது காரியமும் நடத்துவது லொயோலா இஞ்ஞாசியாருக்கு ஜென்மசுபாவம் போலாய்விட்டது. சிலகாலமாய் அர்ச்சியசிஷ்டவர் அருகிலிருந்து, அவர் நடபடிகளை அறிந்த கன்

கண்ட சாக்ஷி ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார். "சபைக்குரிய பிதா இஞ்ஞாசியார் ஏற்பாட்டாகமத்தை எழுதிய காலமெல்லாம், நான் அவர் அருகிலிருந்த ஏழுமாதமாய், அவர் பூசை செய்யும் நாட்களில் பூசைப் புஸ்தகம் ஒன்று தவிர வேறு புஸ்தகத்தை அவர் அறையில் நான் கண்டதேயில்லை. தம் சிந்தனையிலிருக்கும் பொருளை இரவில் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் சகாயத்தை மன்றாடி, காலையில் சர்வேசுரனுடைய ஏவுதலால் தமது உள்ளத்தில் அறிந்துகொண்டதை எழுதுவார். அதிக ஏகாந்தத்தை நாடி, ஆகாயம் தெளிவாயிருக்கும் நாட்களில், உரோமைப்பிரபு ஒருவர் அவருடைய உபயோகத்துக்காகக் கொடுத்திருந்த ஒரு தோட்டத்துக்குள் போவார். அங்கு ஒரு மேசைமேல் மையும் கடுதாசியும் தயாராயிருக்க, தம் புத்தியின்கண் துலங்கியதை துலங்கியபடியே எழுதுவார்" என அன்னிபால் கோத்ரெற்றி (Annibal Codretti) என்னும் சேசுசபைக் குருவானவர் சன்னியாச பாலத்துவத்தில் தாம் கண்ணுற் கண்டதை, 1599-ம் வருஷத்தில் எழுதி வைத்தார். மன்ரேசாவில் அவருக்கு அருளப்பட்டவைகளைப் போன்ற அற்புத வரங்களும் திவ்விய தரிசனங்களும், அதற்குப் பின்பும் அநேக சமயங்களில், விசேஷமாய் ஏற்பாட்டொழுங்குகளை அமைப்பதில் முயற்சியாயிருந்த காலத்தில், வெகுவாய் அவருக்கு அருளப்பட்டு வந்ததாகத் தெரிய



வருகின்றது. அர்ச்சியசிஷ்டவரை வினவிக்கேட்டு அவர் வாய்மொழியாலேயே அறிந்ததை அறிந்த வண்ணம் எழுதித்தந்த கொன்சாலஸ் சுவாமியார் சொல்லுவதையும் இங்கெடுத்துரைக்கலாம்.

"ஏற்பாட்டொழுங்குகளைப்பற்றி நான் கேட்ட கேள்விக்கு சாயுங்காலம் பதிலுரைப்பதாகச் சொன்னார். அன்றுதானே இராப்போசனத்துக்குமுன் என்னை அழைப்பித்தார். அது சமயம் அவர் முகம், இகலோகத்தை முற்றும் மறந்து பரவசமானவர் முகம்போல் துலங்கியது. திவ்வியபூசை செய்யும் பொழுது தரிசனங்கள் அவருக்கு அடிக்கடி அருளப்பட்டன. ஏற்பாட்டொழுங்குகளை அமைப்பதில் முயற்சியாயிருந்த காலத்தில் இன்னுமதிகமாய் அருளப்பட்டன. அனுதினம் அவர் ஆத்துமத்தில் நிகழ்ந்தவைகளை அவர் எழுதிவைத்திருந்தமையால், இதுவிஷயத்தை நிச்சயித்துச் சொல்லக்கூடுமாயிருந்தார். அப்போது முதலாய் தாம் எழுதி வைத்திருந்தவைகளை பார்வையிட்டுக்கொண்டிருந்தார். சம்பாஷித்துக்கொண்டே, அவர் எழுதினவை கண்டடங்கிய ஒரு பெரிய கத்தரிக் கட்டை என் கண்முன் திறந்து, அவைகளில் பல இடங்களை எனக்கு வாசித்துக் காண்பித்தார். அவைகளெல்லாம் அநேகமாய் ஏற்பாட்டாகமத்திலுள்ள சில சட்டதிட்டங்களை உறுதிப்படுத்தின தரிசனங்களாகவே இருந்தன. இத்தரிசனங்களில் சில சமயங்களில் பிதாவாகிய சர்வேசுரனையும், சில சமயங்களில்

திரித்துவத்தின் மூவாட்களையும் தரிசிக்கப் பெற்றார். சில சமயங்களில் பரிசுத்த கன்னிமரியாயி ஒரு சமயம் பரிந்து பேசுகிறவளாகவும், ஒரு சமயம் ஆசீர்வாதம் அளிக்கிறவளாகவும் தரிசனையாகக் கண்டார். இருவிஷயங்களைப்பற்றி விசேஷித்துப் பேசினார். இவைகளைத் திட்டப்படுத்துவதில் நாற்பது நாளாய் தினம் திவ்வியபூசை செய்து, தினம் கண்ணீர் சிந்தி வந்தார். * * * ஏற்பாட்டொழுங்குகளைச்சார்ந்த மேற்சொன்ன காகிதங்களையெல்லாம் வாசிக்க விரும்பி, ஒரு சொற்பக்காலம் அவைகளை எனக்கு இரவலாகக் கொடுக்கும்படி மன்றாடினேன். ஆனால் அதற்கு அவர் உடன்படவில்லை,'' என்றெழுதியிருக்கிறார்.

இக்காகிதங்களில், சிற்சில பாகங்கள் தவிர, மற்றெல்லாம் நெருப்புக்கிரையாய்ப் போயின. நெருப்புக்குத் தப்பித்தவைகள் ஒன்றில், நாற்பது நாளாய் அவர் ஆலோசித்துவந்த விஷயத்தை அடுத்து அவர் உள்ளத்தில் நிகழ்ந்த சில விசேஷங்கள் காணப்படுகின்றன. மகா பிரகாசமான ஓர் வடிவம் அவர் ஆத்துமத்தின் புலன்களுக்குத் துலங்கியதாகவும், சேசுநாதர் அவர் புத்தியின்கண் தரிசனமாகி தம்மைப் பின்செல்லும்படி அவரை அழைத்ததாகவும், பக்தி உருக்கத்தால் உள்ளம் பொருமி அவர் வெகுவாய்க் கண்ணீர் சிந்தியதாகவும், தாம் செய்திருந்த தீர்மானத்தை அர்ச். தமதிரித்துவமே அங்கீகரித்து உறுதிப்படுத்தியதாக அவருக்குத் தோன்றினதாகவும், பூசைவஸ்திரம் அணிந்துகொண்டபோது சேசு என்னும் திருநாமம் அதிகமதிகமாய் அவர் மனதில் பதிந்ததாகவும், இதனால் மேன்மேலும் உள்ளம்பொருமி கண்ணீர் ஏராளமாய் சிந்தினதாகவும், பூசை ஆரம்பத்தில் அவருக்கு அநேக வரப்பிரசாதங்கள் அருளப்பட்டதாகவும், திவ்விய சற்பிரசாதத்தை எழுந்தேற்றம் செய்தபொழுது அவர் உள்ளத்தில் ஆண்டவரோடு ஓர் விசேஷ ஐக்கியமும், நவமான ஓர் ஞான மனோசாரமும் உற்பத்தியானதாகவும், இதனால் தெரியவருகின்றது.



அர்ச். இஞ்ஞாசியார் இந்த ஏற்பாட்டொழுங்குகளை இஸ்பானிய பாஷையில் எழுதிவந்தார். பொலான்கோ சுவாமியார் அப்போதைக்கப்போது அவைகளை இலத்தீன் பாஷையில் திருப்பி வந்தார். ஆனால் இலத்தீன் பிரதிகளையும் அர்ச்சியசிஷ்டவர் வெகு கவனமாய் ஆராய்ந்து பரிசோதித்து வந்தார். துறவற சபைகளை ஸ்தாபித்தவர்கள் சபை ஏற்பாட்டொழுங்குகளை எழுதிக்கொடுப்பதற்கு சர்வேசுரனுடைய ஒரு விசேஷ ஒத்தாசையிருந்ததாக நீர் எண்ணுகிறீரோவென்று அர்ச்சியசிஷ்டவர் பொலான்கோ சுவாமியாரைக் கேட்டார். "ஆம்! அப்படித்தான் எண்ணுகிறேன்" என்று அவர் சொல்ல: "நானும் அப்படித்தான் எண்ணுகிறேன்" என்று அர்ச்சியசிஷ்டவர் கூறினார். அதிபதி சிரேஷ்டரானபோது இவைகளை எழுத ஆரம்பித்தவர், 1550-ம் வருஷத்தில்தான் முடித்

துக் கொடுத்தார். ஆயினும் மேன்மேலும் யோசித்து, மற்ற சுவாமிமார்களோடும் ஆலோசனை செய்து, திரும்பத்திரும்பத் தாம் எழுதியவைகளில் சிலதுகளைத் திருத்திவந்தார். முற்ற முடிவுபெற இன்னும் சில வருஷகாலம் சென்றது. அர்ச்சியசிஷ்டவருடைய மரணத்துக்குப் பின் உரோமையில் கூடிய சேசுசபை பொதுச்சங்கம் (General Congregation) இவ்வேற்பாட்டொழுங்குகளையெல்லாம் சேசுசபையின் பெயரால் பரிசோதித்து, அவைகளை மகா பூஜித வணக்கத்துடன் ஆதியோடந்தம் அங்கீகரித்து உறுதிப்படுத்தியது. அதன்பின் நாலாம் பவுல் (Paul IV) என்னும் அர்ச். பாப்பானவரும், நாலு கர்தினால்மார்களைக்கொண்டு அவைகளை நன்றாய் ஆராய்ந்து பரிசோதிக்கும்படி செய்து, ஒரு வார்த்தைமுதலாய் மாற்றாமல், அவைகளைப் பூரணமாய் அங்கீகரித்து ஆசீர்வதித்தார். அவருக்குப்பின் வேறு சில பாப்புமார்களும் அவ்விதமே அவைகளை அங்கீகரித்து ஆசீர்வதித்தார்கள். அர்ச். இஞ்ஞாசியார் எழுதித்தந்த இவ்வேற்பாட்டொழுங்குகள் இந்நாள்மட்டும் அவ்விதமே மாற்றமின்றி காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஓர் காலம், ஓர் இடத்தைமாத்திரம் சிந்தித்து அர்ச். இஞ்ஞாசியார் இவ்வேற்பாட்டொழுங்குகளை எழுதவில்லை. "அருமையான புத்தி சூட்சமமும், உன்னத தேவ அருள் ஞானமும் பெற்றிருந்த மகாத்துமாவான இவர் எக்காலத்தையும்,



எத்தேசத்தையும், எச்சந்தர்ப்பத்தையும் கண்முன் கூர்ந்து தரிசித்தவர்போல், எக்காலத்துக்கும் எத்தேசம் எத்தலத்துக்கும் எச்சந்தர்ப்பத்துக்கும் இசைந்தவைகளாக, ஆச்சரியமான பெருந்தன்மையுடன், தமது ஏற்பாட்டொழுங்குகள் சட்டதிட்டங்களை அமைத்துக்கொடுத்திருக்கிறார். உலகம் அனைத்தும் ஒரே இராஜாங்கமாக இருக்கினும், அதனை ஒழுங்குடன் ஆண்டு நடத்துவதற்கு லொயோலா இஞ்ஞாசியார் அமைத்துக்கொடுத்த ஏற்பாட்டு சட்டங்களே போதுமானவைகளென்று, பிரான்ஸ் தேசத்தரசனுடைய முதல் மந்திரியாயிருந்து இராச்சிய காரியங்களை எவரும் வியக்கத்தக்க புத்தி சாமார்த்திய திறமையுடன் நடத்திவந்த ரிஷேல்யு என்னும் பெயர்பெற்ற கர்தினால் (Cardinal Richelieu) சொல்லியிருக்கிறார். இது நிற்க:

இஞ்ஞாசியார் சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டரானபின், மரணமட்டும், உரோமை நகரே அவருக்கு உறைவிடமாயிருந்தது. மூன்றே மூன்று சமயங்களில்மாத்திரம் அவர் உரோமையைவிட்டுப் போகும்படி நேரிட்டது. 1545-ம் ௵, மோன்றேவியாய்கோன் என்னும் இடத்துக்குப் போயிருந்த அர்ச். பாப்பானவரை அவசியமான ஓர் விஷயமாய்க் கண்டு பேசவும்; 1548-ம் ௵, வெகுகாலமாய் தங்களுக்குள் குரோதப்பகையாயிருந்து, ஒருவரோடொருவர் யுத்தம் செய்து, ஒருவர் உயிரை

ஒருவர் மாய்த்து வந்த இரு ஊராரை சமாதானப்படுத்தவும்; கடைசியாய் 1552-ம் ௵, ஓர் பெரிய பிரபுக் குடும்பத்தில், பிரபுவுக்கும் அவர் மனைவிக்கும் உண்டாயிருந்த மனஸ்தாபத்தைத் தீர்த்துவிடவும் புறப்பட்டுப்போனார்.

அநுதினம் காலையில் ஒருமணிநேரம் ஜெபத்தியானம் செய்து, வியாதியின் நிமித்தம் கூடாமற்போனாலன்றி, மற்றப்படி தினம் தவறாமல் திவ்விய பூசை செய்துவருவார். திவ்விய பலி செலுத்தும்போது அவர் உள்ளத்தில் பிரவாகமாய் எழும்பும் தேவ நேசப்பெருக்கத்தின் நிமித்தம், பூசையை நிறுத்தி நிறுத்தி செய்யவேண்டியிருக்கும். ஆனதால் அவர் துவக்கும் பூசை முடிய சாதாரணமாய் ஒருமணிநேரத்துக்குக் குறையாது. பூசைக்குப்பின் இரண்டுமணி நேரந் தனியே ஜெபத்தியானத்தில் அமர்ந்திருப்பார். அவர் வசித்த அறையின் ஓர் சிறு சன்னல்வழியாய் திவ்விய சற்பிரசாதப் பெட்டியைப் பார்க்கக்கூடுமாயிருந்தது. அவ்விடத்தில் முழந்தாளிட்டு, சற்பிரசாதப் பெட்டியைக் கண்ணோக்கி ஜெபிப்பது அவருக்கு அத்தியந்த ஆனந்தமாயிருக்கும். இவ்விதம் அவர் ஜெபத்தியானமாயிருக்கும்போது முதலாய், சிற்சில சமயங்களில் அவசியமான காரியங்களில் அவர் ஆலோசனையைக் கேட்கும்படி, 'மினிஸ்ற்றர்' சுவாமியாராயிருந்த லூயிஸ் கொன்சாலஸ் என்னும் குருவானவர் அவரிடத்தில் போகும்படி நேரிடும். அச்



சமயங்களில் அர்ச்சியசிஷ்டவர் முகம், பர்வதத்தில் சர்வேசுரனோடு சம்பாஷித்த மோயீசன் முகம்போல், பிரகாசக் கதிர்வீசித் தங்குவதைத் தாம் கண்டதாக இந்தக் குருவானவர் சொல்லியிருக்கிறார்.

மத்தியான போசனத்துக்குப்பின் இளைப்பாற்றி நேரமென்று ஒருமணிநேரம் குறிக்கப்பட்டிருந்தது. அந்நேரத்தில் அர்ச். இஞ்ஞாசியார் மற்ற சுவாமிமார்களோடு கலந்து தாராளமாய் வார்த்தையாடுவார். தங்களுக்குள் விசேஷ பட்சம் முகப்பிரீதி என்பதின்றி, எல்லாரும் ஒரு குடும்பத்துப் பிள்ளைகளைப்போல் அன்னியோன்னிய நேசமாய் தங்கள் தன்மையைச் சுற்றி அம்மணிநேரத்தை உற்சாகமாய்ப் போக்குவது, காண்போர் மனம் உவந்து மகிழச்செய்யும் இன்ப காட்சியாயிருக்கும்.

இளைப்பாற்றி நேரம் முடிந்ததும் சுறுக்காய் எழுந்து தம் அறைக்குள் சென்று தினம்பற்பல பாகங்களிலுமிருந்து தமக்கு வரும் திரளான கடிதங்களை வாசிப்பதிலும், அவைகளுக்கு பதில்கொடுப்பதிலும் அலுவலாயிருப்பார். பல கடிதங்களுக்கு தமது கையாலேயே பதிலெழுதுவார். ஆனால் அத்தனை கடிதங்களுக்கு அவர் ஒருவராய் பதில் எழுதுவது சாத்தியப்படாமையால், பொலான்கோ சுவாமியார் அவருக்கு காரியதரிசியாயிருந்து உதவி செய்துவந்தார். கடிதம் எழுதும் விஷயத்தில்

இஞ்ஞாசியார் அளவற்ற ஜாக்கிரதையெடுத்துவந்தார். தப்பிதம் ஒன்றுமில்லாதிருக்கும்படி சில சமயங்களில் ஒரு கடிதத்தை மூன்று, நாலுதடவை திருப்பி திருப்பி எழுதுவார். விசேஷமாய் மேல்விலாசத்தால் குறிக்கப்பட்டவரன்றி இன்னொருவர் பார்வையிடக்கூடிய, அல்லது பார்வையிடவேண்டிய கடிதங்களில், சொல்லிலும் பொருளிலும் ஒருவருக்கும் ஆயாசம் வருத்துவிக்க ஏதுவானது யாதுமில்லாதிருக்கும்படி வெகு வெகு எச்சரிக்கையாயிருப்பார்.

இராப்போசனமானபின், மடத்துக் காரியங்களை நடத்த நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவராய் அவரிடம் சென்று தங்கள் அலுவலுக்கடுத்தவைகளைப்பற்றி விபரமாய் கணக்குக்கொடுப்பார்கள். வியாதியஸ்தரை விசாரிக்க நியமிக்கப்பட்டவரிடத்தில், வியாதியஸ்தர்களுக்கடுத்த ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி வெகு நுணுநுணுக்கமாய் வினவிக் கேட்பார்.

சேசுசபையில் தமது மக்களுக்குள் யாரேனும் வியாதியாயிருந்தால், மிக்க அன்புள்ள ஓர் தாயைப்போல் அவர்கள்மீது கவலையெடுத்து அவர்களைப் பராமரித்து வருவார். அவருக்கு வந்த கடும் வியாதிகளின் நிமித்தம், சிரேஷ்டர் அலுவலை வேறொருவர் பார்க்கும்படி நேரிட்ட சமயங்களில் முதலாய், வியாதியஸ்தரை அடிக்கடிப் போய்



பார்த்து விசாரித்துவரும் கவலையை விட்டுவிட்டவரல்ல. யாருக்காகிலும் வியாதி மும்முரமாயிருந்தால் இரவெல்லாம் அவர்களருகில் கண்விழித்திருந்து, அவர்களைத் தேற்றி வருவார். வைத்தியன் இரத்தம் குத்தியெடுத்த பிணியாளிகளுக்கு காயக்கட்டுகள் செவ்வையாயிருக்கின்றனவாவென்று பார்க்கும்படி பலமுறை போவார்; அதற்காக இரவிலே முதலாய் படுக்கையைவிட்டெழுந்திருப்பார். தமது சபையார் "தரித்திரத்தை தன் தாயைப்போல் நேசிக்கவேண்டும்" என்று அவர் விதித்திருந்தாலும், வியாதியில் அவர்களுக்கு அவசியமானது யாதேனும் குறைவுபட சம்மதியார். ஓர் சமயம் வியாதியாயிருந்த ஒருவருக்கு வைத்தியன் அவசியமென்று சொன்ன ஒருபொருளை சம்பாதிக்கவில்லையென்று 'மினிஸ்றர்' சுவாமியார் சொல்லக்கேட்டு, அவ்விரவிலேயே இரு துணைவர்களோடு வெளியே போய் அப்பொருளை வாங்கிவரும்படி கட்டளையிட்டார். வேறோர் சமயம் வியாதிக்காரரை மேற்பார்க்கிறவரும், அவர்களை விசாரிக்கிறவரும் தக்கநேரத்தில் வைத்தியனுக்கு ஆளனுப்ப மறந்துபோனார்கள். நடுச்சாமமாகியும், வைத்தியன் வரவில்லை. இஞ்ஞாசியார் அவ்விருவரையும் உடனே புறப்பட்டுப்போய் வைத்தியனைக் கையோடு கூட்டிக்கொண்டுவராமல் வீட்டுக்குத் திரும்பிவரவேண்டாம் என்று கற்பித்தார். அர்த்த இராத்திரியில் வைத்தியன் அகப்படுவதெப்படி? பொழுதுவிடியு

மட்டும் ஓர் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து, மடிந்த பின் வைத்தியனைக் கையோடு இட்டுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள். சிலசமயங்களில் வீட்டுச் செலவுக்கு முதலாய் பணம் வெகு தட்டுப்பாடா யிருக்கும். ஆயினும் அதினிமித்தம் வியாதியஸ் தருக்கு யாதேனும் குறைவுசெய்ய சம்மதியார். ஓர் சமயம் வியாதியாயிருந்த ஓர் துணைச்சகோதர ருக்கு சற்று விலைபெற்ற ஓர்வகை உணவு கொடுக் கும்படி வைத்தியர் கற்பித்தார். வீட்டுச் செலவுக்கு உத்தரவாதியானவர் இஞ்ஞாசியாரிடம் வந்து, வைத்தியர் குறித்த உணவை வாங்கவேண்டு மானால், வீட்டிலுள்ளவர்களுக்கு அன்று போசனம் கொடுக்க வகையில்லையென்றார். இஞ்ஞாசியாரோ வென்றால்: "இருக்கிற பணத்தை வியாதிக்கார ருக்காக செலவுசெய்யும், நமக்கு வெறும் அப்பம் போதும்" என்று அவருக்கு உத்தரம் சொன் னார். தாம் எழுதும் கடிதங்களிலும் தம் மக்களு டைய சுகக்ஷேமத்தைப்பற்றி வெகு கவலையாய் விசாரிப்பார். வியாதிக்காரர்களை வெகு கவலையாய் விசாரிக்கவேண்டுமென்று தமக்குக் கீழ்ப்பட்ட சிரேஷ்டர்களுக்கும் கண்டிப்பான நிபந்தனை செய் தார். மற்றவர்களுக்கு வரும் வியாதி தனக்கு வந் தாற்போல், உணர்ந்து அநுதாபப்படுவதற்காகத் தான் சர்வேசுரன் தமக்கு அத்தனை நோக்காடுகள் வரவிட்டாரென்று தாம் நினைப்பதாக சிலசமயங் களில் சொல்லுவார். கலக்கம், சலிப்பு, சோர்வு



முதலிய பற்பல மனநோக்காடுகளில் இஞ்ஞாசி யார் எவ்வளவோ உழன்று வருந்தவேண்டியிருந்த தென்று முன்னமே அறிந்திருக்கிறோமல்லவா! அவ்வேதனைகளில் நல்ல கீத இராகங்களைக் கேட்பது அவருக்கு வெகு ஆறுதலாயிருக்கும். ஆயினும் இது தமக்கு மிஞ்சின சுகமென்றெண்ணி, அபூர்வமாகத்தான் அதை தமக்குத் தேடுவார். என் றும் குரற்சத்தம், இராகத்தொனியென்பது இல் லாத பரலோக பேரின்பமடங்கிய ஓர் அற்புத இன் னிசை தம் இருதயத்தில் சப்தித்தொலிப்பதாக இஞ்ஞாசியாரே சொல்லுவார். ஓர் சமயம் ஒருவர் ஏதோ மனோவியாகுலத்தால் வெகுவாய் வருந்தி னார்; அவருக்கு ஆறுதல் வருத்துவிப்பது அருமை யாயிருந்தது. இஞ்ஞாசியார் நன்றாய்ப் பாடத் தெரிந்த சில நவசந்நியாசிகளை அவரிடம் அனுப்பி, அவருக்கு உற்சாகம் வரும்படியாகப் பாடும்படிச் செய்தார்.

வீட்டு விஷயங்களை விசாரிப்பவர்களிடத்தில் விபரங்கள் கேட்டு முடிந்தபின், தமது காரியதரி சியாயிருந்த பொலான்கோ சுவாமியாரோடு சற்று நேரம் பேசுவார். அதன்பின் நித்திரைசெய்ய உடனே போகமாட்டார். ஓர் ஊன்றுகோலை உதவிக்கொண்டு, அறையில் அங்கும் இங்கும் சத்த மாய் ஜெபம் செய்துகொண்டு உலாவுவார். நாலு மணிநேரமாத்திரம் நித்திரைசெய்வார். இச்சொற்ப நேரத்திலேமுதலாய் அநேகந்தடவை அவருக்கு

இளைப்பாற்றி கிடையாது. அடுத்த அறையில் நித்திரைசெய்துவந்த ஓர் துணைச்சகோதரர் சில சமயங்களில் அர்ச்சியசிஷ்டவர் அறையில் பெருமூச்சு சத்தமும் அடிச்சத்தமுங் கேட்பார். முதல்விசை கேட்டபோது என்னவென்றறியும்படி போனார். ஆனால் இனிமேலாக அங்கு வரவேண்டாம் என்று அர்ச்சியசிஷ்டவர் அவருக்குக் கட்டளையிட்டார். இரவில் நரகக்கூளிகள் அர்ச்சியசிஷ்டவரை அடித்து உபத்திரவப்படுத்திவந்ததாக மடத்திலுள்ளவர்கள் எண்ணினார்கள். ஆனால் அதைப் பற்றி இஞ்ஞாசியாரிடத்தில் கேட்க ஒருவரும் துணியவில்லை; இஞ்ஞாசியாரும் ஒன்றும் சொல்லவில்லை.

மற்றவர்கள்முன், அவர் கண்கள் சாதாரணமாய் பூமியை நோக்கிய கவிழ்ந்த பார்வையாகவேயிருக்கும். அக்கண்களை அவர் உயர்த்தும்போது, அவைகள் தேவ அருள் நிறைந்தொளிரும் அவர் ஆத்துமத்தின் எதிரொளிபோல் இலங்கும். ஒரு காரியத்தைச் செய்யும்படி தூண்டி ஏவவும், வேண்டாமென்று தடுக்கவும், யாரையும் தன் வசமாக்கவும், உடைந்த மனதைத் தேற்றித் தைரியப்படுத்தவும் அக்கண்களின் நோக்கமே போதுமாயிருக்கும். பம்பலூனா கோட்டைமேல் ஊனப்பட்ட கால் ஆயுள்பரியந்தம் சற்று ஊனமாகவேயிருந்ததென்றாலும், ஊன்றுகோலுதவியால் வெகுதூரம் கால்நடையாய்ப் போவார். உடையில் வெகு தப்புர



வாயிருப்பார். மன்ரேசாவில் அணிந்திருந்த சாக்குத் துணி வஸ்திரத்தையும், பரதேசி கோலத்தையும் வெகு காலத்துக்கு முன்னமே விட்டுவிட்டார்.

சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்தை முன்னிட்டு, ஆத்துமாக்களுக்கு நன்மை செய்யும்படி, யாவரிடத்திலும் வெகு பட்சமாய் வார்த்தையாடுவார். வர்த்தகனிடத்தில் வர்த்தகத்தைப்பற்றியும், போர்வீரனிடத்தில் யுத்தம் முதலியவைகளைப்பற்றியும், இவ்விதமாய் ஒவ்வொருவனிடத்திலும் அவனவன் சுபாவத்துக்கும், தொழிலுக்கும் இசைந்தவைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்து, போகப்போக வெகு சாதுரியமாய் பேச்சைத் திருப்பி, அவனவன் ஆத்தும ஈடேற்றத்துக்கும், புண்ணிய வர்த்திப்புக்கும் அடுத்தவைகளைப்பற்றிப் பேசி முடிப்பார். இவ்வழியாய் அநேகரைச் சீர்திருத்தி நன்னெறி சேர்த்தார்.

தேவசன்னிதியில் தீர்க்காலோசனைசெய்து, தேவ உதவியை இரந்து மன்றாடினபின்தான், யாதொரு விஷயத்தை முற்ற முடியத் தீர்மானிப்பார். ஆனதால் அவருடைய வாக்கிலும் கிரியையிலும் தேவஞானத்தால் தூண்டி நடத்தப்பட்ட பூரண விமரிசை விளங்கும். "சகல மனிதர்களும், உலகத்திலுள்ள சகல நியாயங்களும் ஒன்றுகூடி, யாதோர் காரியம் நல்லதென்று உனக்குப் போதித்து,

அதற்கு உன்னைத் தூண்டினாலும், ஜெபம்செய்து சர்வேசுரனிடத்தில் ஆலோசனை கேட்குமுன், அதனைக் கையேற்றுக்கொள்ளாதே. தகப்பன்மார்களிலெல்லாம் மிக்க அன்பும் ஞானமும் நிறைந்த தகப்பனென சர்வேசுரனை நம்பி, நமக்கு வழி காட்டி உதவிசெய்யும்படி அவரைப் பிரார்த்தித்து ஜெபம்செய்யாமல்,—(அது கூடாதேபோனாலும்) அவரை நோக்கி இருதயத்தை எழுப்பி அவரைச் சிந்தியாமல்,—யாதோர் பிரதான காரியத்தைச் செய்ய எத்தனிக்கப்படாது" என தாம் அநுசரித்து வந்த சுகிர்த முறைமையை மற்றவர்களுக்கும் உணர்த்தி வந்தார். யாராகிலும் நன்றாய் யோசியாமல் திடுதிப்பென்று நொடிப்பொழுதில் தங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னால், அது அவருக்கு அற்பமும் பொருந்தாது.

பிறர் கீர்த்தியைத் தன் கண்விழியைப்போல் பாதுகாத்துவந்தார். பிறருடைய குற்றங்குறைகளை வெளியிட்டுப் பேசமாட்டார்; தமது சமூகத்தில் யாராகிலும் அப்படிப்பேசவும் சம்மதியார். ஓர் சமயம் ஒரு துணைச் சகோதாரிடத்தில் தென்பட்ட ஒரு சொற்பக் குறையைப்பற்றி, இருவரிடத்தில் சொல்லி ஆலோசிப்பது போதுமாயிருக்க, மூன்றுபேரிடத்தில் சொன்னேனேயென்று வெகுவாய்க் கஸ்திப்பட்டு, பரவசங்கீர்த்தனம் பண்ணப்போனார்.



அழகிய புஷ்பங்களையும் செடிகளையும் காண்பது அவருக்கு பேரானந்தமாயிருக்கும்; ஏனெனில் அவைகள் தெய்வத்தின் சோதி சொரூப இலட்சணங்களை எடுத்துரைக்கும் தூதர்களாக அவருக்குத் தோன்றின. பரவசமானவர்போல் அவர் தோட்டத்தில் ஓர் சமயம் உட்கார்ந்துகொண்டும், ஓர் சமயம் உலாவிக்கொண்டுமிருப்பதை மற்ற சுவாமிமார்கள் சன்னல் வழியாய் வியப்புடன் கண்ணோக்கி நிற்பார்கள். சில்சமயம் இராக்காலங்களில், முன் லொயோலா மாளிகையில் நாம் கண்டதுபோல், நட்சத்திரங்கள் அடர்ந்து துலங்கும் வானத்தை ஏறெடுத்துப் பார்த்துத் தியானயோகமாயிருப்பார். ஓர் தடவை இப்படி தியானயோகமாயிருக்கும்போது, "ஆ! நான் வானத்தை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இப்பூலோகம் எவ்வளவு நீசமாகத் தோன்றுகின்றது" என அவர் பிரலாபித்துச் சொன்னது லேய்னஸ் சுவாமியார் காதில் விழுந்தது. பட்டணத்துக்கு வெளியே உலாவப் போகும்போது அவர் முகம் ஓயாமல் வானத்தை நோக்கியதாயிருக்கும். ஆனதால் அவர் பெயரை அறியாத ஒருவர் அவரைக்குறித்துப் பேசினபோது, "எப்போதும் வானத்தை ஏறெடுத்துப் பார்த்துக்கொண்டு, சர்வேசுரனோடு சம்பாஷித்துக்கொண்டுபோகிறாரே, அந்த சுவாமியார்" என்று விவரித்துச்சொன்னார். பொழுது சாய்ந்து மறையும் மாலைநேரம் அவருக்கு வெகு பிரீதமான

நேரமாயிருக்கும். அச்சமயம் ஒரு மணி நேரம் முற்றும் ஏகாந்தத்தில் சர்வேசுரனோடு ஐக்கியமாயிருப்பார்.

அதிதூதர்களிலொருவர் அவருக்கு காவற்சம்மனசாய் அருளப்பட்டிருந்ததாக அவரோடிருந்தவர்கள் நம்பிவந்தார்கள். ஓர்நாள் லேய்னஸ் சுவாமியார் அவரைப்பார்த்து, "ஓர் அதிதூதர் தேவரீருக்கு காவற்சம்மனசாயிருப்பது மெய்தானோ" என்று கேட்டார். அர்ச்சியசிஷ்டவர் உடனே தாழ்ச்சியினால் முகம் சிவந்து, மறுவார்த்தை பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

பெற்ற உபகாரங்களுக்கு நன்றியறிதல் இஞ்ஞாசியார் உள்ளத்தில் வெகு ஆழமாய்ப் பதிந்திருந்தது. உபகாரிகளுக்காகத் தினம் சர்வேசுரனை உருக்கமாய் மன்றாடிவருவார். எச்சமயத்தில் அவர்கள் தம்மைக்காண வந்தாலும், அவர்களோடு எப்போதும் பட்சமாய் வார்த்தையாடுவார். அவர் தாமே அடிக்கடி அவர்கள் இல்லிடங்களைத் தேடிப் போய், பற்பல இடங்களில் ஆத்துமாக்கள் ஈடேற்றத்துக்காக உழைத்துவரும் தமது சபையாரைப் பற்றி தாம் அறிந்த விசேஷங்களை அவர்களுக்கு அறிவிப்பார். இந்தியா தேசத்தைப்பற்றிய செய்திகள் அவர்களுக்கு வெகு பிரியமாயிருக்கும். "உபகாரம் செய்கிறவன், தன்னிடத்தில் உபகாரம் பெற்றுக்கொள்ளுகிறவனுடைய வறுமை வெளியாகி, அது



றால் அவன் நாணுதற்கிடமில்லாதிருக்கும்படி, தான்
செய்யும் உதார சகாயத்தைத் தன்னாலியன்றமட்டும்
இரகசியமாகத் தன் இருதயத்தில் வைத்திருக்க
வேண்டும். உபகாரம்பெற்றுக்கொண்டவனோ அப்
படியல்ல. தனக்கு உபகாரம் செய்தவனுக்கு மகிமை
யாகத் தான் அவனிடமிருந்து பெற்றுக்கொண்ட
சகாயங்களைத் தாராளமாய்ப் பிரசித்தப்படுத்திப்
பேசலாம். சில சமயங்களில் அப்படி பிரசித்தப்
படுத்திப் பேசுதல் அவனுக்கு கடமையாகவு
மிருக்கும்" என்னும் உத்தம முறைமைப்பிரகாரம்,
இஞ்ஞாசியார் தாம் பிறருக்கு செய்யும் உபகார
சகாயங்கள் முற்றும் இரகசியமாயிருக்கும்படி,—
அவைகளைப் பெற்றுக்கொண்டவனுக்கே அவை
கள் உபகாரங்களாகத் தோன்றாதிருக்கும்படி,—
அளவற்ற ஜாக்கிரதையெடுத்துவருவார். பிறர்
தமக்கும் தமது சபைக்கும் செய்த உபகாரங்
களையோவெனில் சமயங் கிடைக்கும்போதெல்லாம்
எடுத்துரைத்து, தமது உபகாரிகள்மட்டில் தமக்
குள்ள நன்றியறிந்த மனதை விளங்கச் செய்வார்.
அவருக்கு எக்காலமும் உற்ற நண்பரும் பேருப
காரியுமாயிருந்த கர்தினால் கொந்தரீனி என்பவ
ருடைய பெயர் அவர் காதில் விழுந்தால், எங்கள்
சபை அர்ச். பாப்பானவர் அங்கீகாரம்பெற்றது
சர்வேசுரனுக்குப்பிறகு இந்த கர்தினாலுடைய
செய்கை என்று வெகு நன்றியறிந்த பற்றுத
லுடன் சொல்லுவார். மூன்றாவது ஜான் என்

ளும் போர்த்துகால் தேசத்தரசன், கர்தினால்
ஹென்ரி, சிசிலி தீவில் இராஜ பிரதிநிதியாயிருந்த
ஜான் தே வேஹா முதலிய அநேக உபகாரிகளுக்கு
அவர் எழுதிவந்த கடிதங்களிலெல்லாம், அவர்
களால் தமது சபைக்கு நிகழ்ந்த நன்மைகளை அவர்
கள் கண்முன் எடுத்துக் காண்பித்து, அவைகளுக்
காக அவர்களுக்கு நன்றி செலுத்தத் தவறினவ
ரல்ல.

தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை எவ்வளவோ
பிரயாசப்பட்டடைந்து, அநுதினம் அதை எவ்
வளவு உத்தமமாய் அநுசரித்து வந்தாரென்று இச்
சரித்திரத்தில் ஆரம்பம் முதற் சொல்லப்பட்டுவந்த
வைகளைக்கொண்டு எவர்க்கும் கண்கூடாய் விளங்
கும். ஒரு காலத்தில் தம் உள்ளத்தில் குடிகொண்
டிருந்த வீண்பெருமையையும் கம்பீர மேட்டிமை
யையும், தேவவரப்பிரசாதத்தின் உதவியால் எவ்
வளவு தூரம் ஜெயித்தடக்கி, அவைகளுக்கு விரோ
தமான தாழ்ச்சியும் சாந்தமும் தம் இருதயத்தில்
வேரூன்றச் செய்திருந்தாரென்றால், "சகல துர்
குணங்களிலும் நான் அதிக சொற்பமாய் பயப்படும்
துர்க்குணம் வீண் பெருமைதான்" என்று அவரே
தம்மைக்குறித்துச் சொல்லியிருக்கிறார். தம்மை
யாராகிலும் புகழ்ந்துபேசுவதைக் கேட்கச்சகியார்.
சேசுசபையில் துணைச்சகோதரராயிருந்த ஒருவர்
"நமது பிதா இஞ்ஞாசியார் மெய்யாகவே ஓர்
பெரிய அர்ச்சியசிஷ்டவரென்று நான் உறுதியாய்



எண்ணியிருக்கிறேன்" என வேறொரு துணைச்சகோ
தரரோடு ஓர்நாள் சொல்லிக்கொண்டிருந்தார்.
இஞ்ஞாசியார் அதைக்கேட்டு, அந்த சகோதரரை
வரவழைத்து: "நானா ஓர் அர்ச்சியசிஷ்டவன்!
என்னைப்போலொத்த ஒரு பாவியை அர்ச்சியசிஷ்ட
வனென்று சொல்லுவதினால், அர்ச்சியசிஷ்டதனத்
துக்கு நீர் அவமரியாதை செய்கிறீர். உமது
வார்த்தைகள் ஒருவாறு சர்வேசுரனை நிந்திக்கிறாப்
போலிருக்கின்றன" என்று வெகு கடுமையாய்
அவரைக் கண்டித்தார். சேசுசபையைச் சேர்ந்த
டியேகோ (Diego d'Eguia) என்றொரு வயோ
திகக் குருவானவர் அர்ச்சியசிஷ்டவருக்கு ஆத்தும
குருவாயிருந்தார். புண்ணியத்தில் மிகத்தேர்ந்த
இக்குருவானவர்மீது யாவரும் மேலான எண்ணங்
கொண்டிருந்தார்கள். மூத். பாபர் இராயப்பர்
அவரை எப்போதும் 'அர்ச்சியசிஷ்ட டியேகோ
சுவாமியார்' என்றே அழைப்பார். அர்ச். இஞ்
ஞாசியார்தாமே, சில சமயங்களில் அவரைப்
பார்த்து "நாம் எல்லோரும் மோட்சத்திலிருக்
கும்பொழுது, டியேகோ சுவாமியார் நம்மெல்லோ
ருக்கும் மேலாய் எவ்வளவு உன்னத ஸ்தானத்தி
லிருப்பாரென்றால், அவரை அண்ணார்ந்துபார்ப்பது
முதலாய் நமக்கு அசாத்தியமாயிருக்கும்" என
சிரித்துக்கொண்டு சொல்லுவார். இந்தக் குரு
வானவரிடத்தில் அர்ச்சியசிஷ்டவர் தமது ஆத்து
மத்திலுள்ளவைகளையெல்லாம் தாராளமாய் வெளி

யிட்டு சொல்லிவருவார். டியேகோ சுவாமியாரோ
வென்றால் அர்ச்சியசிஷ்டவருடைய ஆத்துமத்தில்
பூரண சந்திரப் பிரபைபோல் நிறைந்து துலங்கிய
தேவ இஷ்டப்பிரசாதத் திரு அருளையும், திவ்
விய இஸ்பிரீத்துவானவர் அதில் மேன்மேலும்
பொழிந்துவந்த அற்புத வரங்களையுங் கண்டு அத்தி
யந்த ஆச்சரியமுற்று அகமகிழ்ந்திருந்தார். அர்ச்
சியசிஷ்டவர் உயிரோடிருக்குங்காலத்தில் அவைக
ளைப் பிரசித்தப்படுத்தாதபடி, அவர் வாயிதழ் முத்
திரையிடப்பட்டிருந்ததென்றாலும், யாரும் காணப்
பெறாத அதிசயத்தைக் கண்டு உள்ளம் உவந்து
மகிழ்ந்தவன் தன் நாவை முற்றும் அடக்கிக்கொண்
டிரான் என்பதுபோல், இவரும் தம் உள்ளத்தை
மேற்கொண்டிருந்த ஆச்சரியத்தை அடக்கமாட்டா
தவராய், ஓரோர் சமயங்களில் ஆச்சரிய உச்சார
ணம் செய்வார். இஞ்ஞாசியார் இதை அறிந்து
அவரை வெகு கோபமாய்க் கண்டித்து, தண்டனை
யாக ஒரு கடுந்தவ முயற்சியும் விதித்தார். அன்றி
யும் அதுமுதல் அவரை விட்டு வேறொருவரை
தமக்கு ஆத்துமகுருவாகத் தெரிந்துகொண்டார்.
எல்லாக் கண்டனை தண்டனைகளிலும், இதுவே
இந்தப் பரிசுத்த வயோதிகருக்கு பெருந் தண்டனை
யாயிருந்தது. இதோடு நாவை அடக்கிக்கொண்
டிருப்போமென்றிராமல்: இஞ்ஞாசியாரைப்பற்றி
தாம் அறிந்த அதிசயங்களை கீழ்ப்படிதலுக்கு
விரோதமின்றி வெளிப்படுத்தக்கூடுமாயிருக்கும்



படி, அவர் மரணத்துக்குப்பின் சிலமணி நேரமாகி
லும் உயிரோடிருக்கும் வரம் தமக்குக் கிடைக்க
வேண்டுமென்று தம் உள்ளத்திலிருந்த ஆசையை
பிரசித்தமாய் வெளியிட்டார். ஆனால் அர்ச்சிய
சிஷ்டவர் மரணமடைவதற்கு சில தினங்களுக்கு
முன், இம்மகாத்துமா பரலோக பிராப்தியானார்.
இஞ்ஞாசியாருடைய வேண்டுதலால் இவ்விதம்
சம்பவித்ததென்று அவரோடிருந்த சுவாமிமார்கள்
எண்ணினார்கள்.

ஆனால் சகல புண்ணியங்களுக்கும் இராக்கினி
யான பரிசுத்த தேவசிநேகமும், அதன் உடன்பிறப்
பாகிய பிறர்சிநேகமுமே அவராத்துமத்தின் உயி
ராய், அவர் நினைவு கிரிகைகளுக்கெல்லாம் ஆதியும்
அந்தமுமாயிருந்தது. சகல நன்மைச் சொரூபி
யாகிய நித்திய கடவுளைத் தன் முழுமனசக்தி
யோடு நாடித்தேடி நேசித்துவந்த அவர் ஆத்துமம்,
அவர் திருச்சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டு, அவ
ருடைய ஏகசுதன் திரு இரத்தத்தால் மீட்டிரட்சிக்
கப்பட்ட மனிதனையும் அவரைப்பற்றி வெகு உருக்
கமாய் நேசித்துவந்தது. பற்பல வர்ணமான
இரத்தினக் கற்கள் ஒவ்வொன்றும் தனக்கியல்பான
விசேஷ ஒளியும் துலக்கமும் குன்றாது, சூரியன்
கதிர் பெற்று அதிக சோதிமயமாய்ப் பிரகாசிப்பது
போல், இஞ்ஞாசியாரிடத்தில் விளங்கின ஒவ்வொரு
புண்ணியங்களும், அவருடைய சிந்தனை பற்றுதல்
கிரிகைகள் யாவும் உத்தம தேவசிநேகத்தால்

துன்பப்பட்டு, தேவசிநேகத்தால் போஷிக்கப்பட்டு வந்தமையால், அவைகள் ஒவ்வொன்றும் தேவசிநேகமயமாய் இலங்கிப் பிரகாசித்தன. இவ்விதம் தேவசிநேகம் நிறைந்திருந்த அவர் இருதயம் தன்னை முழுதும் மறந்து சகலத்திலும் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரம் ஒன்றையே கருதியிருந்தது. "சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக" என்னும் வார்த்தைகளை, அவர் எழுதிய சேசுசபை ஏற்பாட்டாகமத்தில் முந்நூற்று அறுபத்தாறு தரம் பிரயோகித்திருப்பதாகத் தெரியவருகின்றது. "மோட்சம் தப்பாமல் தனக்குக் கிடைக்குமென்கிற நிச்சயத்தோடு உடனே மரணமடைதல், அல்லது அவ்வித நிச்சயமின்றி இன்னும் சிலகாலம் இவ்வுலகத்திலிருந்து சர்வேசுரனுக்கு ஊழியம் செய்தல், இவ்விரண்டில் எதைத் தெரிந்துகொள்வது நாவிலை" என்று சுவாமிமார்கள் ஒர் நாள் தங்களுக்குள் நேரப்போக்காக தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். "இன்னும் சிலகாலம் இவ்வுலகிலிருந்தால் நான் ஆத்தும இரட்சணியமடைவேனென்று நிச்சயமாய் எனக்குத் தெரியாதென்பதால், உடனே மரணமடைந்து மோட்ச இராச்சியம் சேருவதையே நான் சந்தோஷமாய்த் தெரிந்துகொள்ளுவேன்" என்று லேய்னஸ் சுவாமியார் சொன்னார். "நானோவென்றால் இன்னும் சிலகாலம் இவ்வுலகத்திலிருந்து, சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக பிரயாசப்பட்டு உழைப்பதைத்



தெரிந்துகொள்ளுவேன். ஏனெனில், சர்வேசுரன் தர்மகுணமுள்ள எஜமானன்; உடனே தனக்கு மோட்சபாக்கியத்தை சுதந்தரித்துக்கொள்ளுவதிலும், அவர் தோத்திரத்தை அதிகரிப்பதே பெரிதென்று அதைத் தெரிந்துகொண்ட ஆத்துமம், இரட்சணியமிழந்துபோக அவர் சம்மதியாரென்று நான் நிச்சயமாயிருக்கிறேன்" என இஞ்ஞாசியார் உரைத்தார்.

சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தில் இஞ்ஞாசியார் அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்தார். எதுகாரியத்திலும், சுபாவ சக்திகள், சுபாவ உதவிகளை பூரணமாய் கையாடி வெகு புத்திசூட்சம விமரிசையுடன் முயற்சி செய்வார். ஆனால் அவருடைய விமரிசை சுபாவ சக்திகளை மாத்திரம் நோக்கியதாய், அவைகளின் பலவீனத்துக்கு அடிமைபோல் கட்டுப்பட்ட விமரிசையாயிராது. சுபாவத்துக்கு மேற்பட்ட ஓர் பரம சகாயத்தை ஸ்திரமாய் நோக்கியதாய், சுபாவ பலவீனத்துக்கு மேலாய் தாவியெழும்பும் பெருந்தன்மை நிறைந்த விமரிசையாயிருக்கும். ஆகையால் எதுகாரியத்திலும் தன்னாலியன்றதெல்லாம் செய்தபின், கிஞ்சித்தேனும் கலக்கமின்றி உற்சாகமாய் தெய்வ அநுக்கிரகத்தை எதிர்பார்த்திருப்பார். இதனால்: "துக்கம் சலிப்பு முதலிய பழுதுகளை பற்றுதலை யகற்றி, முகம் யாவும் மலர்ந்து களித்திருக்கவேண்டும்" என்று அவர் தாமே தம் மக்களுக்கு எழுதிக்கொடுத்திருக்கும்

ஓர் ஒழுங்குப்படி, என்ன துன்பம், என்ன விபத்து
தான் நேரிட்டபோதிலும், நெற்றியில் சுருங்கல்
சுழித்தல் யாதுமின்றி, முகம் எப்போதும் நிர்மல
மாய் மலர்ந்து தெளிந்து ஒருகண்டசிராய் களிப்
புற்றிருக்கும். சாதாரண மனிதர் எண்ணத்துக்கு
முற்றும் அசாத்தியமாய்த் தோன்றும் விஷயங்களை
முதலாய் சர்வேசுரனுடைய அதிமிக தோத்தி
ரத்தை முன்னிட்டு, அவர் அநுக்கிரகத்தை நம்பி,
தைரியமாய் கையேற்றுச் செய்வார். "சர்வேசுரன்
மேல் வைக்கவேண்டிய நம்பிக்கையில் அணுவளவும்
குறைப்பதைவிட, மனிதருடைய அபிப்பிராயத்தில்
பயித்தியக்காரனென்றெண்ணப்படுவது தாவிலை"
என்று அவரே சொல்லிவந்தார். அவர் உள்ளத்
தில் ஸ்திரமாய் வேரூன்றியிருந்த இவ்வுத்தம தேவ
நம்பிக்கைக்கு, அவர் கட்டிவைத்த "உரோமன்
காலேஜ்" என்று சொல்லப்படும் பெயர் பெற்ற
கலாசாலையே இந்நாள்மட்டும் அத்தாட்சியாயிருக்
கின்றது. இக்கலாசாலையை அவர் கட்ட ஆரம்
பித்தபொழுது, ஏற்கனவே தான் கடன் வாங்கி
யிருந்த பணத்தை உத்தரிக்கமுதலாய் ஐவேசில்லா
திருந்தார். ஆயினும் சர்வேசுரனுடைய அதிமிகத்
தோத்திரத்தை முன்னிட்டு உற்சாகமாய் வேலை
ஆரம்பித்தார். சுவாமிமார்களில் ஒருவர் இது
விவேகமாகக் காணுகில்லையே என்றாட்சேபித்தார்.
இஞ்ஞானியாரோவென்றால்; "இவ்விதந்தான் நாம்
செய்யவேண்டும்! அலையையும் புசலையும் எதிர்த்து



கப்பலை நடத்தவேண்டும். எவ்வளவுக்கு விபத்
தாக எல்லாம் தோன்றுகின்றதோ, அவ்வளவுக்
'கதிகமாக சர்வேசுரனிடத்தில் நாம் நம்பிக்கை
வைக்கவேண்டும். மனிதருடைய சகாயத்தால்
இனி ஆவதொன்றுமில்லையென்றிருக்கும் வேளையில்
தான், தேவ ஒத்தாசை தீவிரித்து நம்மை அணுகி
வரும்" என மலர்ந்தமுகமாய் அவருக்குப் பதி
லுரைத்தார்.

தமது தாசனுடைய வீரத்தன்மையான நம்பிக்
கைக்களவாக, கருணைக்கடலாகிய சர்வேசுரனும்
அநேக சமயங்களில் அற்புதமானவிதமாய் அவ
ருக்கு சகாயம் செய்துவந்தார். பலசமயங்களில்,
அசனநேரம் அடுத்துவந்ததும் சுவாமிமார்களுக்குப்
பரிமாற உணவு ஒன்றுமில்லையேயென்று வீட்டுவிசா
ரணைக்காரர்கள் மனம் வருந்திநிற்கும் வேளையில்,
திடீரென்று ஏதோ தெய்வச்செயலாய் வேண்டிய
புசிப்புகள் தர்மமாக அனுப்பப்பட்டுவந்தன. அவ்
விதமே, சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்
தை முன்னிட்டு அர்ச்சியசிஷ்டவர் துவக்கியிருந்த
நானாவிதப் பெருங் கட்டடங்களுக்கு வேண்டிய
தொகைகள் ஆபத்துவேளையில் கைகூடிவந்து உத
வின. இவ்வகை உபகாரங்கள் எவ்வழியாய் வந்
தனவென்றறிதல் அநேக சமயங்களில் அசாத்திய
மாயிருந்தது. இவையெல்லாம் புதுமையென்று
சுவாமிமார்கள் ஆச்சரியப்பட்டார்கள். இஞ்ஞாசி
யார் மாத்திரம் இவைகள் புதுமையென்றெண்ண

வில்லை; அளவற்ற கருணைநிறைந்த தேவபராமரிப்பின் வாடிக்கையான செயல்களென்றே எண்ணினார். ஓர் நாள் லூயிஸ் கொன்சாலஸ் சுவாமியார் "நமக்கு சம்ரட்சணை நடந்துவருவது மெய்யாகவே ஓர் புதுமைதான்" என்றார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால் அவர் சொன்னதை ஆட்சேபித்தாற்போல், "அப்படியல்ல! நமக்கு சம்ரட்சணை நடவாதேபோனால், அதுதான் புதுமையாயிருக்கும்; ஏனெனில் தம்மிடத்தில் மாத்திரம் நம்பிக்கைவைத்திருக்கிறவர்களுக்குச் சர்வேசுரன் ஒத்தாசை செய்யாமல், அவர்களைக் கைவிட்டுவிடுவாரேயாகில், உண்மையாகவே அது புதுமையாகத்தான் இருக்கும்" என்றார்.

## 7-ம் அதிகாரம்.

அர்ச். இஞ்ஞாசியார் சேசுசபையில் தம் மக்களை நடத்திவந்த விதம்—சோதனைப்படுகிறவர்கள்மீது அவருக்குள்ள தயை தாட்சணியம்—விமரிசை நிறைந்த கண்டனை—சில்வேஸ்தர் சுவாமியார்—அர்ச்சியசிஷ்டவர் போதித்துக் கற்பித்துவந்த புத்தி மனக்கீழ்ப்படிதல்—அவர் தாமே அதை உத்தமமாய் அநுசரித்து வந்தது—சம்பூரண சுயமன பரித்தியாகம்—லேய்னஸ் சுவாமியார்—ரிபதனீரா—அவர் செய்த முதற் பிரசங்கம்—ஞான சீவியத்தில் அவருக்கு நேர்ந்த பெரும் ஆபத்து.

யாவர்மட்டிலும் வெகுதயையும் அன்புமுடையவராயிருந்த இஞ்ஞாசியார் தமது பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்ட தமது மக்கள் மட்டில் அதிலும் அனந்த மடங்கு அதிக அன்புடையவராயிருந்தாரென்று சொல்லவும் தேவையா? ஒவ்வொருவருடைய சுபாவத்தையும் குணத்தையும் நன்றாய் அறிந்து, அதற்கிசைந்தபடி அவர்களை நடத்தி, ஞான சீவியத்தில் அவர்கள் வர்த்திப்படையச் செய்வார். சிறியோரும் பெரியோரும் தங்கள் இருதயங்களைத் தாராளமாய் அவரிடத்தில் திறந்துபேசுவார்கள். வாலசந்நியாசிகள்மீதும், சபையில்புதிதாய் உட்பட்

டவர்கள்மீதும் விசேஷ கவலையெடுத்துவருவார். கண்டிக்கவேண்டியதவசியமாயிருக்கும்போது கண்டிக்கப் பின்வாங்கார். ஆனால் எவ்வளவு தயை தாட்சண்ணியத்துடன் கண்டிப்பாரென்றால், அவர் கண்டனையால் பட்ட வடு, அவருடைய மதுரகுணத்தால் தயிலம் வார்த்த புண்போல் தழும்பு முதலாயின்றி ஆறிப் போகுமெனப் பழமொழியாய்ச் சொல்வார்கள்.

சேசுசபையின் விசேஷ கதியையும் கருத்தையும் கண்டுபிடித்து, அதன்படி நடக்க மனமில்லாதவர்களையும், திருந்த மனமின்றி பிடிவாதமாயிருக்கிறவர்களையும், சபையில் வைத்திருக்க ஒருபோதும் சம்மதியார். யாதாமொருவரை சபையைவிட்டு நீக்குமுன் தேவசந்நிதியில் வெகுவாய் யோசிப்பார். ஒருபக்கத்தில் அவரை சபையைவிட்டு நீக்குவதற்கும், இன்னொருபக்கத்தில் அப்படி நீக்காதிருப்பதற்கும் உள்ள நியாயங்களை நன்றாய் ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்ப்பார். வழக்கமாய் சில சுவாமிமார்களுடைய ஆலோசனையையும் கேட்பார். ஆனால் இன்னாரை சபையைவிட்டு நீக்குவது அவசியமென்று அவர் தேவசந்நிதியில் நிச்சயித்து தீர்மானித்த பின், அது முற்றமுடிந்த விஷயமே. பிற்பாடு யார் என்ன சொன்னாலும், 'பகலோ, இரவோ, நிச்சாமமோ, எந்நேரமாயிருந்தாலும் தாம் தீர்மானித்ததை தாமதியாமல் உடனே நிறைவேற்றுவார். மெய்னல் சுவாமியாருடைய சகோதரர்கள்



இருவர் சேசுசபையில் உட்பட்டிருந்தார்கள். அவர்களில் மார்ட்டின் என்பவர் யாவருக்கும் நன்மாதிரிகையாய் நடந்து சபையில் நிலைபெற்றார். கிறிஸ்தோபோர் என்ற மற்ற சகோதரரோவெனில் அதிசீக்கிரம் சபையைவிட்டு நீக்கப்பட்டார்.

ஏதோ சலிப்பினாலாவது, பசாசு செய்விக்கும் தந்திர மாய்கையினாலாவது அவசரியப்பட்டு சபையை விட்டுப்போக விரும்புகிறவர்களை இட நிக்க அவர் அன்புற்று செய்யும் பிரயத்தனமும், பிரயோகிக்கும் சகிர்த உபாயங்களும் இத்தனை அத்தனையென்றல்ல. இப்பேர்ப்பட்டவர்களை சில சமயங்களில் தம்மண்டை வரவழைத்து, ஒருநேரம் தாய்க்குரிய அன்போடு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்கள் மனதைத்தேற்றுவார், ஒருநேரம் அவர்களுடைய நியாயங்களுக்கு எதிர் நியாயம் சொல்லி அவர்களோடு தர்க்கம் செய்வார்.

மெய்யாகவே சேசுசபைக்கு அழைக்கப்பட்டிருந்தும், பசாசின் தந்திரத்தால் மனங்கலங்கி சபையை விட்டுப்போகும்படி நினைத்த ஒருவரை அதில் நிலைநிற்கும்படி செய்வதற்காக, மூன்றுநாளாய் ஒன்றும் புசியாமல் கசையால் வெகுநேரம் தமது சரீரத்தை உபாதித்து, கடுந்தவம்செய்து தேவ இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடினார். ஜெர்மானிய தேசத்தவராகிய ஒரு நவசந்நியாசியார் சேசுசபை ஒழுங்குகளை அநுசரிப்பது மிகக் கடினமென்

றெண்ணி, மனம் சோர்ந்து, சபையை விட்டுப்
போகும்படி அநுமதி கேட்டார். அதற்கு இஞ்
ஞாசியார் இன்னும் நாலுநாள் மாத்திரம் மடத்தில்
தங்கியிருக்கும்படி அவரை மன்றாடி, அந்த நாலு
நாளும் சபை ஒழுங்கொன்றும் அநுசரிப்பதவசிய
மின்றி, தன் மனம்போல் நடந்துகொள்ளலா
மென்று உத்தரவு கொடுத்தார். நாலுநாள் மாத்
திரமல்ல, ஜீவபரியந்தம் அந்த வாலசந்நியாசியார்
சேசுசபையில் தங்கினார். வேறோர் நவசந்நியாசி
யார் ஏதோ ஓர் விஷயமாய் மனத்தாங்கலடைந்து,
இரவில் நித்திரைகொள்ளாமல் சபையைவிட்டு நீங்
கிப்போக எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். ஒவ்
வொருவர்மீதும் கண்ணும் கவலையுமாயிருந்த இஞ்
ஞாசியார் இதைக் குறிப்பாயறிந்து, நடுச்சாமத்தில்
அவரைத் தமதறைக்கு அழைத்துக்கொண்டுபோய்,
இன்னின்ன சோதனைப்படுகிறவர்கள் உம்மிடத்தில்
ஆலோசனை கேட்டால் அவர்களுக்கு என்ன மாறுத்
தரம் சொல்லுவீரென்று வெகு சாதுரியமாய் அவ
ரை வினவி, வெகுநேரம் அவரோடு வார்த்தையாடி,
அவர்தாமே தன் ஸ்திதியை அறிந்துகொள்ளும்படி
செய்தார். நவசந்நியாசியாரும் சோதனையை ஜெயி
த்து சேசுசபையில் உற்சாகமாயிருந்தார். அநேக
சமயங்களில், சோதனைகளால் மிகவருந்தும் வால
சந்நியாசிமார்களுக்கு, தமக்குத்தாமே ஓர்காலத்
தில் நேரிட்ட பற்பல சோதனைகளையும், அவைக
ளால் தம் உள்ளத்தில் நிகழ்ந்த கொடிய கிலேசம்,



சலிப்பு முதலிய துன்பங்களையும், தேவகிருபை
யால் அவைகளைத் தாம் எதிர்த்துப்போராடி ஜெயங்
கொண்டதையும் எடுத்துச்சொல்லி அவர்கள் மன
தைத் தேற்றித் திடப்படுத்துவார்.

பால்தோயினோதே ஆஞ்செலிஸ் என்றொரு வால
சந்நியாசியார் காலஞ்சென்ற தன் தமயன் மகன்
ஒரு சிறுவனை நினைத்து நினைத்து மனம் வருந்தி,
சந்நியாசத்தை விட்டுவிட எண்ணங்கொண்டிருந்
தார். தமது பந்துக்களை விட்டுப் பிரியும்போது
தாமே அநுபவித்த மனோவாதைகளை இஞ்ஞாசி
யார் இவரிடத்தில் வெளியிட்டு சம்பாஷித்தார்.
அர்ச்சியசிஷ்டவர் முன் உபயோகித்துவந்த ஓர்
புஸ்தகத்தில் தேவதாயார் படம் ஒன்றிருந்தது.
அதில் அவர் அண்ணன் மனைவியுடைய சாயல்
சற்று தோன்றினமையால், அதைக் கண்ணோக்
கும்போதெல்லாம், அவர் சிந்தனைகள் லொயோலா
மாளிகையை நோக்கிச்செல்ல, வெகுவாய் மனங்
கனிந்து வருந்துவார். இதனால் ஜெபத்தியானத்
துக்கு விக்கினம் நேரிட்டமையால், அப்படத்தின்
மேல் ஒரு கடுதாசியை ஒட்டிவிட்டார். இவ்விஷ
யத்தையும் இஞ்ஞாசியார் மேற்சொன்னசோதனைப்
பட்ட சந்நியாசியாருக்கு எடுத்துரைத்து, சர்வே
சுரனுடைய திவ்விய பராமரிப்புக்கு அவர் ஒப்ப
ளித்து விட்டுவந்த பாலியன்மீது, சர்வேசுரன் எண்
மடங்கு அதிக கருணையுள்ளவராயிருப்பாரென்று

அவருக்கு உறுதிசொன்னார். வாலிபரும் அதனால் மனந்தேறி, தேவ ஊழியத்தில் ஸ்திரமாயிருந்து, புண்ணியத்திலும் கல்வியிலும் சிறந்த குருவானார். என்ன சொல்லியும் கேளாமல், ஆயாசமும் சலிப்பும் மிஞ்சி, தான் சேசுசபையை விட்டுப்போகத்தான் வேண்டுமென்று யாராகிலும் பிடிவாதம் செய்தால், இஞ்ஞாசியார் மடத்திலுள்ள குருக்களை சங்கமாகக் கூட்டி, அவர்கள்முன் சோதனைப்படும் சந்நியாசியார் தாம் சபையை விட்டுப்போக விரும்புவதற்குள்ள முகாந்தரங்களை சொல்லும்படிச் செய்வார். அவைகளுக்கு குருக்கள் சொல்லும் எதிர் நியாயங்களைக் கேட்டு சோதனைப்பட்டவர் மனந்தெளிந்து சபையில் ஸ்திரப்படாமற்போவது அபூர்வமாயிருக்கும். சர்வேசுரன் குருக்களுக்குள் யர்தாமொருவருடைய நாவால் சோதனைப்படுகிறவர் புத்தித்தெளிவடைவதற்குத் தகுந்த நியாயங்களை எடுத்துரைப்பார் என்னும் தாழ்ச்சி நிறைந்த தேவநம்பிக்கையால், அர்ச்சியசிஷ்டவர் மேற்சொன்ன உபாயத்தைப் பிரயோகித்துவந்தார்.

ஜியோவானி மிலானோ என்றொரு நல்ல துணைச் சகோதரர் தன்மீது மிகத்தாழ்மையான எண்ணமுடையவராய், தான் எங்கே சேசுசபையை விட்டுப் போகும்படி நேரிடுமோவென்று அஞ்சி மனங் கலங்கி யிருந்தார்.. இஞ்ஞாசியார் ஓர்நாள் அவரைப்பார்த்து : “ ஜியோவானி சகோதரரே, நான்



சேசுசபையில் நிலைத்திருப்பது நிசமானால், நீரும் அதில் நிலைத்திருப்பது நிசந்தானென்று நிச்சயமாயிரும் ” என்றார்.

ஸ்நாபக அருளப்பரென்று பெயர்கொண்ட வேறொரு துணைச்சகோதரர்,—வெகு தாழ்ச்சியும் தவப்பற்றுமுடையவர்,—ஓர்நாள் சமயல்வேலை பார்த்துக்கொண்டிருக்கும்போது, தகதகவென்று அடுப்பிலெரியும் நெருப்பைக் கண்ணுற்று, சாவான பாவத்தோடு மரித்த ஆத்துமாக்களை ஊடுருவி உபாதிக்கும் நித்திய நரகாக்கினியைச் சிந்தையில் உருக்கமாய் எண்ணித்தியானித்தவராய், தியானயோகத்தில் திடீரென்று தன் கையை நெருப்பின்மேல் நீட்டி, சற்றுநேரம் அது உபாதைப்பட விட்டுவிட்டார். இகலோக நெருப்பாலுண்டாகும் உபாதையால், நரக நெருப்பின் தன்மையை சற்றாகிலும் பரீட்சித்தறிந்துகொள்ளும்படி இவ்விதம் செய்தார். இவ்வளவு புத்தியீனமான காரியத்தைச்செய்து, இனி யாதோர் வேலைசெய்யத் திராணியற்றவரான இவரை சேசுசபையை விட்டு நீக்கவேண்டுமென்று, சுவாமிமார்களில் அநேகர் அபிப்பிராயமாயிருந்தார்கள். இஞ்ஞாசியாரோவென்றால், இச்சகோதரருடைய புத்தியீனத்தை பாராமுகம் செய்து, அவருடைய நற்கருத்தை எண்ணி அவருக்கு மன்னிப்பளித்து, வெகுநேரம் அவருக்காக தேவ இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடினார். மறுநாட்காலை அச்சகோதரருடைய கை முற்றும் சொஸ்தமடைந்

திருப்பதைப் பார்த்து யாவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

குருக்களாயிருந்த இரு சுவாமிமார்களை அர்ச்சியசிஷ்டவர் ஓர் சமயம் கண்டிக்கும்படி நேரிட்டது. கண்டிக்கப்பட்டவர்களில் ஒருவர் முன்கோபமாய் மாறுத்தரம் சொன்னார். மற்றவரோவென்றால் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார். ஆனால் அகத்தின் தன்மை முகத்தில் விளங்குமென்றபடி, அவருடைய மனக்கடுப்பும், மனக்குரோதமும் அவர் முகத்தில் வெளிப்படையாய் விளங்கியது. பதஷ்டமாய் பேசினவரை இஞ்ஞாசியார் சேசுசபையில் வைத்துக்கொண்டார். மௌனம் சாதித்தவரை சபையை விட்டு நீக்கினார்.

சேசுசபையில் தம் மக்கள் யாவரும் முகமலர்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருப்பதைக் காண்பது, அவருக்கு வெகு ஆனந்தமாயிருக்கும். "சர்வேசுரனைத் தவிர மற்றெல்லாந் தேடிவருகிற ஒருவன் சந்தோஷமாயிருப்பதைக் காண்பது புதுமையாயிருக்குமென்றால், சர்வேசுரனைத் தவிர வேறொன்றையும் தேடாத ஓர் சந்நியாசியார் கஸ்தியாயிருப்பதைக் காண்பதும் புதுமையாகத்தானிருக்கும்" என்று சொல்லிவந்தார். பிராஞ்சீஸ்கு கோஸ்தர் என்று வெகு இளம்பிராயமான ஒரு நவசந்நியாசியார் ஓயாமல் சிரிக்கும் குணமுடையவராயிருந்தார். ஓர்நாள் அவர் வெகு உல்லாசமாய் சிரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், இஞ்ஞாசியார் தற்



செயலாய் அவருக்கு எதிரே வந்து, "பிராஞ்சீஸ்கு, நீர் எப்பொழுதும் சிரித்துக்கொண்டிருக்கிறதாக சொல்லுகிறார்கள்" என்றார். உடனே நவசந்நியாசியார் முகத்தைத் தாழவிட்டு, ஏதோ தமக்குக் கண்டனை கிடைக்கப்போகிறதென்றெண்ணி வெகுவாய் அடங்கி ஒடுங்கி நின்றார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால்: "நல்லது, என் மகனே, தாராளமாய் சிரித்து ஆண்டவரிடத்தில் ஓய்வின்றி அகமகிழ்ந்திரும். இவ்விதம் நீர் செய்யும்படி நாம் விரும்புகிறோம். துறவறத்திலிருப்பவர் கஸ்தியாயிருக்க யாதொரு முகாந்தரமுமில்லை; அவர்கள் அகமகிழ்ந்திருக்கவோ அனந்த முகாந்திரங்களுண்டு. எப்பொழுதும் தாழ்ச்சியும் கீழ்ப்படிதலுமுள்ளவராயிருப்பீராகில், எப்பொழுதும் சந்தோஷமாகவேயிருப்பீர்" என மதுரமொழியுரைத்து, நவசந்நியாசியார் முன்னிலும் பதின்மடங்கு அதிக சந்தோஷமாய் சிரித்து அகமகிழ்ந்திருக்கும்படிச் செய்தார்.

சமயாசமயங்களில் தோட்டம் அல்லது வேறிடங்களில் நவசந்நியாசிகளைக் கண்டால், அவர்களை வெகு அன்புடன் தமதருகில் உட்காரச்செய்து, அவர்களோடு பட்சமாய் வார்த்தையாடுவார். சில சமயங்களில் பேரிப்பழம் கிச்சிலிப்பழம் முதலியவைகளைக் கொண்டுவந்து, தமது கையால் அவைகளை நேர்த்தியாய் உரித்து அவர்கள் புசிக்கும்படி கொடுப்பார்.

தமது பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்டவர்களுடைய சம்ரட்சணைக்கும் சௌக்கியத்துக்கும் அவசியமானவைகளில் எதுவும் குறைவில்லாதிருக்கும்படி வெகு ஜாக்கிரதையாயிருப்பார். ஆனால் யாராகிலும் சிருஷ்டிகரை மறந்து, சிருஷ்டிகளில் மிஞ்சின சுகத்தைத் தேடுவதாகக் கண்டால், அவர்களை மிகவும் கடிந்து கண்டிப்பார். வியாதியஸ்தர் மட்டில் அவர் அன்புற்று எடுத்துவந்த கவலையும், அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதிருக்கும்படி, அவர் செய்துவந்த முயற்சியும் எவ்வளவென்று முந்தின அதிகாரத்தில் கண்டிருக்கிறோமல்லவா? வியாதியாயிருக்கிறவர்களில் யாராகிலும் பொறுமை சாந்தமற்றவர்களாய், தங்கள் மனம்போல் எதையாகிலும் மிதமிஞ்சி விரும்பிப் பிடிவாதம் செய்தால், அவர்கள் சொஸ்தமடையுமட்டும் அவர்கள் குற்றங்களைப் பார்த்தும் பாராதவர்போல் தாயின் அன்போடு சகலத்தையும் சகித்து, வழக்கம்போல் மலர்ந்த முகமாய் அவர்களை அடிக்கடி சந்தித்து விசாரித்துவருவார். ஆனால் வியாதி குணமானதும், அவர்களைத் தகுந்தபடி கண்டிப்பார்.

சேசுசபையில் உட்பட்டிருந்த சில்வேஸ்தர் (Silvester) என்னும் ஓர் குருவானவர் நெடுநாள் வியாதியாயிருந்து, வியாதியில் பொறுமையின்றி தான் நினைத்தவைகள்மேல் மிஞ்சின நாட்டமாய்ப் பிடிவாதம் செய்து வந்தார். அவர் சௌக்கியமடையுமட்டும் இஞ்ஞாசியார் அவருடைய குற்றங்களைக்



கவனியாதவர் போலிருந்தார். ஆனால் சௌக்கியமடைந்ததும் அவரைத் தமது சமூகம் வரவழைத்து "உமது ஊருக்கு திரும்பிப்போகலாம்" என்று கட்டளையிட்டார். குருவானவர் நெஞ்சத்திடுக்கிட்டு இஞ்ஞாசியார் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். முகமிருந்த தன்மையைப் பார்த்து நாவெழத்துணியாமல், கஸ்தியும் கிலேசமும் மிஞ்சினவராய் உடனே அர்ச்சியசிஷ்டவர் சொன்னபடி தம் ஊருக்குப் புறப்பட்டுப்போனார். அர்ச். இஞ்ஞாசியாரையும், சேசுசபையையும் இக்குருவானவர் வெகு உருக்கமாய் நேசித்துவந்தார். ஆனதால்: "உமது ஊருக்குத் திரும்பிப்போகலாம்" என்று இஞ்ஞாசியார் சொன்னதினால், தன்னை சேசுசபையினின்று தள்ளிவிட்டாரோ என்னமோவென்னும் ஐயமானது இராப்பகலாய் சில்வேஸ்தர் சுவாமியார் மனதை உபாதித்து வந்தது. இதுமுதற்கொண்டு தன்னைத்தானே ஜெயித்து, தன்னிடத்திலுள்ள குற்றங் குறைகளைத் திருத்தி புண்ணியவர்த்திப்பு அடைவதிலும், பிறர் ஆத்தும ஈடேற்றத்துக்காகப் பிரயாசப்பட்டு முயற்சிசெய்து உழைப்பதிலும், அதிமிக சுறுசுறுப்பும் ஜாக்கிரதையுமுள்ளவராயிருந்தார். தனக்கு மன்னிப்பளிக்கும்படி மன்றாடி இஞ்ஞாசியாருக்கு வெகு வணக்கமாய் கடிதத்துக்குமேல் கடிதமெழுதினார். அப்படி அவர் ஒன்பது கடிதமெழுதியும், அவைகளில் ஒன்றுக்காகிலும் இஞ்ஞாசியார் பதில் கொடுத்தவரல்ல. ஆனால்

அவர் மனம் சோர்ந்து அவதைரியப்படாதிருக்கும்படி அவருக்குத் தேறுதல் சொல்லி வரவேண்டுமென்று, சேசுசபை சுவாமிமார் சிலருக்கு இரகசியமாய்க் கற்பித்தார். பல மாதம் சென்றபின் கடைசியாய் அர்ச்சியசிஷ்டவர் அவருக்கு ஓர் கடிதம் எழுதி, அவர் சேசுசபையைவிட்டு ஒருபோதும் தள்ளப்பட்டதில்லையென்று அறிவித்தார். இச்சுப செய்தி அடங்கிய கடிதத்தைக் கையிற்பெற்றதும், சில்வேஸ்தர் சுவாமியார் முழந்தாட்படியிட்டு, வெகு ஆவலாய் அதைத் திறந்து வாசித்தார். வாசித்து ஆனந்தசாகரத்தில் மூழ்கியவராய், அர்ச்சியசிஷ்டவருடைய கையொப்பத்தை ஓயாது முத்திசெய்தார். இக்குருவானவர் இதற்குப்பின் பலவருஷம் தேவ ஊழியத்தில் சுறுசுறுப்பாய் உழைத்து, புண்ணியத்தில் சிறந்தவராய் சேசுசபையில் காலம்பண்ணினார்.

சேசுசபையில் அர்ச். இஞ்ஞாசியார் விதித்திருக்கும் பரிசுத்த தரித்திரத்தின் தன்மையென்னவென்றால் ஒரு சொற்பப்பொருளை முதலாய் உத்தரவின்றி ஒருவரும் தனக்காகிலும், பிறருக்காகிலும் உபயோகிக்கப்படாது. ஆனதால் தோட்டத்தில் விழுந்துகிடக்கும் ஓர் சிறு கனியை முதலாய் யாராகிலும் உத்தரவின்றியெடுத்தால், அல்லது ஒரு புஷ்பத்தைக்கொய்தால், அது அர்ச்சியசிஷ்டவருக்குப் பிரியமாயிராது. "தரித்திரம் சந்



நியாசத்தைக் காக்கும் மதில்." என்று சொல்லி வந்தார்.

சிரேஷ்டராக நியமிக்கப்பட்டவர் சர்வேசுரனுடைய பிரதிநிதியாக அதிகாரம் செலுத்திவருகிறாரென்று புத்தி ஞாயத்தாலும், வேதாகமத்தாலும் சந்தேகமற விளங்கும் சத்தியத்தைத் தம் மக்கள் யாவரும் தங்கள் இருதயத்தில் ஸ்திரமாய் பதியச் செய்து, சிரேஷ்டருடைய சித்தத்தை தேவ சித்தமாக எண்ணி, அவரில் அறிதுறியாயிருக்கும் தேவ மகத்துவத்துக்கு அதிமிகப் பற்றுதலோடு பணிந்து நடந்து, கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தில் சிறந்தவர்களாயிருக்கவேண்டுமென்று அத்தியந்த ஆவலுற்றிருந்தார்.

"நீங்கள் எவ்வித ஞானவிரதங்களிலும் புண்ணியங்களிலும், உத்தமர்களாக நாம் ஆசைப்பட்டாலும், இதற்குமுன் நாம் உங்களுக்கு சொல்லியிருப்பதுபோல, கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின் மட்டில் மிகவும் கீர்த்திபெற்றவர்களாகிறதைப் பார்க்கவேண்டுமென்று நாம் விசேஷவகையாக ஆசிக்கிறோம். * * * மற்றும் சன்னியாச சபைகள் ஒருசந்தி உபவாசத்திலும், நித்திரை ஒறுத்தல், உணவு உடைகளின் குறைகளைச் சகித்தலிலும் அவரவர்களுடைய ஒழுங்குப்பிரகாரம், அவரவர்கள் பத்தியாய் அநுசரித்துவருகிற புண்ணியங்களைக் கொண்டு எளிதாய் மேன்பாடடையலாம். ஆனால்

மிகவும் பிரியமுள்ள சகோதரரே, இந்த சேசுசபையில் சர்வேசுரனுக்கு ஊழியம் பண்ணுகிறவர்கள், உண்மையான உத்தம கீழ்ப்படிதலிலும் சுயமனத் தீர்மானத்தை மறுத்தலிலும் பேர்பெற்றவர்களாக வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். மேற்படி சபையின் உத்தம பிள்ளைகளாயிருக்கப்பட்டவர்களுடைய விசேஷ அடையாளமேதென்றால், தாங்கள் யாருக்கு கீழ்ப்படிகிறோமென்று பாராமல், சுவாமியின் நேசத்தைப்பற்றி நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருக்குக் கீழ்ப்படிகிறோம் என்று நினைப்பதில் அவர்கள் பேர்பெற்றிலங்கவேண்டும். ஏனென்றால், சிரேஷ்டர் விவேகத்திலும் புண்ணியத்திலும் மற்றும் எவ்வித தேவ வரங்களிலும் சிறந்தவராயிருப்பதினாலே அவருக்கு நாம் கீழ்ப்படியக்கடவோமல்ல, ஆனால் அவர் சர்வேசுரனுடைய ஸ்தானத்திலிருக்கிறபடியினாலேயும், “உங்களுக்கு செவிகொடுக்கிறவன் நமக்கே செவிகொடுக்கிறான், உங்களைப் பிறக்கணிக்கிறவன் நம்மையே பிறக்கணிக்கிறான்” என்று திருவாக்கருளிய சுவாமியால் அவர் அதிகாரம் பெற்றிருப்பதினாலேதான் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும்” என்று, அருமையான ஞானவிவேகத்துடன் கீழ்ப்படிதலின் பேரில் அவர் எழுதியிருக்கும் நிருபத்தில் சொல்லுகிறார்.

கீழ்ப்படிதலில் ஒன்றைவிட ஒன்று அதிக மேலானதாயிருக்கும் மூன்றுபடி அல்லது மூன்று



அந்தஸ்தை பகுத்துக் காண்பித்துவந்தார். சிரேஷ்டர் கற்பிப்பதை உற்சாகமாய் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளாமல், மனதில முரணி முறுமுறுத்துக்கொண்டு, என்ன செய்கிறது! கீழ்ப்படியத்தான் வேண்டுமென்னும் ஏதோ கட்டாயத்தால், கற்பிக்கப்பட்டதை வெளிப்பார்வைக்கு மாத்திரம் செய்துமுடிக்கிறதென்கிற கீழ்ப்படிதலானது யாவற்றிலும் மிகத் தாழ்ந்ததும், பெருந்தன்மையற்ற அடிமைகளுக்குரியதுமான கீழ்ப்படிதலென்பதனால், அர்ச். இஞ்ஞாசியார் அவ்வித கீழ்ப்படிதல் மனுஷ சுபாவத்துக்கே ஈனமென்று துவேஷித்துவந்தார். கற்பனையை வெளிப்பார்வைக்கு மாத்திரம் நிறைவேற்றுவது போதுமென்றிராமல், தன்னைத்தானே ஜெயித்து, சிரேஷ்டருடைய மனதைத் தன் மனதாக்கி, அவர் கற்பிப்பதை உற்சாகமாய் மனதில் ஏற்றுச் செய்துமுடிக்கும் கீழ்ப்படிதலின் இரண்டாவது படியில் ஒவ்வொருவரும் வந்து சேரவேண்டுமென்று ஆசித்துவந்தார்.

“கற்பிக்கப்பட்டதை வெளிப்பார்வைக்கு மாத்திரம் செய்துமுடிக்கிறதென்ற கீழ்ப்படிதலானது மிகவும் குறைவுள்ளதென்றும் ஈனமுள்ளதென்றும் நீங்கள் நன்றாய்க் கண்டுபிடிக்கவும், உங்கள் மனதில் ஸ்திரமாய் பதித்துக்கொள்ளவும் வேண்டும். இப்பேர்ப்பட்ட புண்ணியமானது கற்பனையை வெளிப்பார்வைக்கு நிறைவேற்றுகிறதில் மாத்திர,

மல்ல, இன்னும் ஒரே காரியத்தை விரும்புவதிலும் வெறுப்பதிலும் இருவரும் ஒருமனதாயிருக்கும்படி, மனதையும் சிரேஷ்டருடைய மனதுக்கு முழுதும் ஒத்திருக்கப்பண்ணுவதிலேயுந்தான் அடங்கிய தென்றும், இப்படிப்பட்ட மேலான படிக்குச் செல்லாவிட்டால், அப்புண்ணியம் புண்ணிய மென்றபேருக்கு பாத்திரமல்லவென்றும் அறிக. ** ஆகையால் கீழ்ப்படிதலென்னும் புண்ணியத்தின் மேல் ஆசையுள்ளவன் செய்யவேண்டியதென்ன வென்றால், சிரேஷ்டருடைய கட்டளையை நிறை வேற்றுவதுமாத்திரம் பற்றாது. இன்னும் கீழ்ப் படிதலின் இரண்டாம் படியில் சேரத்தக்கதாக, சிரேஷ்டருடைய மனதை தன் மனதாக்கிக்கொள் ளவும், அல்லது சிரேஷ்டரால் காண்பிக்கப்படும் தேவ சித்தத்தை தன்மேல் போட்டுக்கொள்ளும் படிக்கு தன் மனதை முழுதும் வெறுத்துத் தள்ளி விடுவதும் அவசரமாம்'' என்று மேற்சொன்ன நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

மேலும், மனம் என்னும் தத்துவத்தைமாத்திர மல்ல, மனதுக்குப் பிரகாசமாயிருந்து அதைத் தூண்டி நடத்தும் புத்தி என்னும் தத்துவத்தையும், மன சக்தியின் வலிமையைக்கொண்டே சிரேஷ்ட ருக்குப் பணியச்செய்து, பர்வமில்லாத சகல விஷ யங்களிலேயும் தன் எண்ணம் அபிப்பிராயம் தீர் மானமெல்லாம் சிரேஷ்டருடைய அபிப்பிராயத்



துக்கும் தீர்மானத்துக்கும் முற்றுமிசைந்திருக்கச் செய்து, சிரேஷ்டர் நல்லதென்று நினைத்து கற்பிப் பதைத் தானும் நல்லதென்று நினைத்து அங்கீகரித் துக்கொண்டு, அவர் தகாதென்று நினைத்து விலக்கு வதைத் தானும் தகாதென்று வெறுத்து நீக்கி, கீழ்ப் படிதலின் உன்னத அந்தஸ்தான மூன்றாவது படியி லும் யாவரும் வந்துசேரப் பிரயாசப்படவேண்டு மென்று அதிமிக ஆவலாய் விரும்பிவந்தார். "ஆனால் தன்னை முழுதும் சர்வேசுரனுக்குப் பலி யாக்கிப்போடுகிறவன் தன் மனதை மாத்திரமல்ல, இன்னும் தன் புத்தியையுங்கூட அவருக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும். இதுவே உத்தம கீழ்ப்படித லின் மூன்றாம் படியாம். அதாவது: சிரேஷ்ட ருடைய சித்தம்போலவே சிந்திப்பதுமல்லாமல், அவருடைய எண்ணம்போலவே நாமும் எண்ணிக் கொள்ளவேண்டும். ஒரு பத்தியுள்ள மனமானது புத்தியை எவ்வளவு மடக்கித் திருப்பக்கூடுமோ, அவ்வளவு, நாமும் நமது தீர்மானத்தைச் சிரேஷ்ட ருடைய தீர்மானத்துக்குக் கீழ்ப்படுத்தவேண்டும். ஏனெனில் புத்தியென்னும் புலனானது மனப்புல னைப்போல சுயாதீனமுள்ளதாயிராதபோதிலும், உண்மைபோல. தனக்குக் காண்பிக்கப்படும் விஷ யங்களுக்கெல்லாம், தற்சுபாவமாய் இணங்கக் கூடியதாயிருந்தாலும், அநேக காரியங்களிலே, தான் அறிந்துகொண்ட விஷயத்தின் திருஷ்டாந்த மானது அதைக் கட்டாயப்படுத்தாவிட்டால், மன

தின் பலனைக்கொண்டு ஒரு பக்கத்தைவிட மறு பக்கத்தில் அதிகமாய் அது சாயக்கூடும்,'' என்று போதித்துவந்தார்.

சிரேஷ்டனென்னும் பட்டம் பெற்றவருக்குமாத்திரமல்ல, இன்னும் யாரார் ஏதேது விஷயத்தில் அதிகாரம் பெற்றிருக்கின்றாரோ, அவ்விஷயத்தில் அவர் அதிகாரத்துக்குட்பட்டவர்கள், மேற்சொன்ன உத்தமமானவிதமாய் அவருக்குக் கீழ்ப்படிந்து வரவேண்டுமென்று ஆசித்துவந்தார்.

இவ்வகைப் புத்தி மனக் கீழ்ப்படிதலானது, நல்லறிவுக்கும், அநுபவ ஞானத்துக்கும், தேவ திருவுளம் நியமித்து விதித்திருக்கும் ஞானம் நிறைந்த ஒழுங்குக் கிரமத்துக்கும் முற்றும் இசைந்த உத்தம ஒழுக்கமென்றும், மனுஷ சுபாவத்தை மேன்மைப்படுத்தி சிறப்பிக்கும் பெருந்தன்மையுள்ள ஞானநடத்தையென்றும் பற்பல நியாயங்களால் ஸ்திரப்படுத்தி, உன்னதமான இரண்டோர் திருஷ்டாந்தங்களால் இதனைத் துலக்கிக் காண்பித்துவந்தார். நாம் வசிக்கும் இப்பூமியும், இதைப்போன்ற,—இதினும் பெரிதும் சிறிதுமான புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன் என்று சொல்லப்படும் வேறு ஏழு கிரகங்களும், பூமியைவிட பதின்மூன்று இலட்சம் (1,300,000) மடங்கு அதிகப் பெரிதாயிருக்கும் மகா பிரமாண்டமான வானசோதி வஸ்துவாகிய சூரியனை மைய



மாக நாடி, அந்த பிரமாண்டமான வஸ்துவின் பரிமாண சக்தியால் கவர்ந்திழுக்கப்பட்டு, அதனைச் சுற்றி ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலையில் தத்தம் மண்டலம் அல்லது வான வட்டத்தில், சர்வாதி கர்த்தர் நியமித்த ஒழுங்குக்கிரமம் அணுவளவும் பிசகாமல், ஓயாது சுழன்றுகொண்டுவருகின்றன. மேலும் புதன், சுக்கிரன் அல்லது வெள்ளியென்னும் இரு கிரகங்களைத் தவிர, மற்ற ஆறு கிரகங்கள் ஒவ்வொன்றையும் சுற்றி, உபக்கிரகங்கள் என்று சொல்லப்படும் சிறு கிரகங்கள் தாய்க்கிரகத்தின் பரிமர்ண சக்தியால் கவர்ந்திழுக்கப்பட்டு, ஓர் ஒழுங்குக் கிரமப்படி அயராமல் அதனைச்சுற்றி சுழன்றுகொண்டும் வருகின்றன. இது வானசாஸ்திரத்தால் நிச்சயமாய் உரூபிக்கப்பட்ட விஷயம். சர்வாதி கர்த்தர் சிருஷ்டித்தமைத்த ஆச்சரியமான இவ்வொழுங்குக் கிரமத்தை, அர்ச். இஞ்ஞாசியார் உத்தம கீழ்ப்படிதலை விளக்கிக்காட்டும் ஓர் உவமையாக எடுத்துரைத்துவந்தார். அன்றியும் கண்ணுக்குத் தோன்றும் வானமண்டலத்துக்கு மேலாய்க் கூர்ந்து நோக்கி, பரமண்டலத்தில் சர்வாதி கர்த்தர்முன் தாழ்ந்தது அதற்கும் உயர்ந்ததென்று, பற்பல அந்தஸ்தாய் ஒன்றுக்கொன்று பணிந்து தேவ மகத்துவத்தை ஸ்துதித்துவரும் அசரீரிகளுடைய நவவிலாச சபையையும் உத்தம கீழ்ப்படிதலுக்கு ஓர் திருஷ்டாந்தமாக எடுத்துக் காண்பித்துவந்தார். ''வானசோதி வஸ்துக்கள் ஒன்றை

யொன்று ஒட்டி நடத்தத்தக்கதாக ஒருவித ஒழுங்கு இணைக்க முறையில் கீழ்த்தரமானது மேல்தரமானதுக்கு அமைந்து செல்லுவது போல, மனிதர்களுக்குள்ளும், கீழ்ப்படிதலில் நேரிடுகிறவண்ணமே, ஒருத்தருடைய அதிகாரத்தால் மற்றொருவர் நடத்தப்படுகையில், கற்பிப்பவராலே நமக்கு சுகிர்தமும் தூண்டுதலும் உண்டாகத்தக்கதாக, கீழ்த்தரமான ஸ்திதியிலிருப்பவன் மேல்தரமான அதிகாரமுள்ளவருக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டியது அவசரமாமே. * * * சகல காரியங்களையும் சீராய் ஒழுங்குபடுத்துவதில் தாழ்ந்த தரம் மத்தியதரத்துக்கும், மத்தியதரம் உயர்ந்த தரத்துக்கும், அதது தத்தம் முடிவுக்கும் இசைந்து ஒத்துவர சர்வேசுரன் உபயோகித்துக் கொள்ளும் நடபடிக்கை இதுவே. சம்மனசுகளுக்குள் ஒருவிலாச சபை மற்றொன்றுக்குப் பணியுஞ் சிரவணமும், தத்தம் இடத்திலும் ஸ்திதியிலும் சென்று அமையும் சகல சலன வஸ்துக்கள், வானசோதிகள், இவற்றினுடைய ஒழுங்குமுறையும் உண்டாவது இவ்விதமே. அந்த வஸ்துக்களின் சுழற்சி நடையும் ஓட்டமும் ஒரு பெரிய காரணத்தால் மற்றுஞ் சிறிய வஸ்துக்களுக்குப் படிப்படியாய் ஒழுங்கு முறையோடே, இறங்கிவருகிறதும் இவ்விதமே" என்று எழுதினார்.

இவைகள் யாவுக்கும் மேலாய், "வேதபுஸ்தகத்தில் சொல்லுகிறதாவது: **பலியிலும் கீழ்ப்படிதலே**



**சிறந்தது.** ஏனெனில் அர்ச்சியசிஷ்ட கிறகோரியார் படிப்பிக்கிறதாவது: **பலியில் வேறு வஸ்துவின் மாங்கிஷத்தைப் பலியிடுகிறோம், கீழ்ப்படிதலிலோ நமது சுயமனதைப் பலியிடுகிறோம்.** ஆத்துமத்தின் இந்தப் பாகமானது மிகவும் மேன்மையுடையதாய் இருப்பதினாலே, கீழ்ப்படிதலைக் கொண்டு அதை நமது சிருஷ்டிகர்த்தருக்கு நாம் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பது மிகவும் விலை பொருந்தியதாய் இருக்கின்றது. ஏனெனில் கீழ்ப்படிதல் தகனப்பலியாகையால், எவ்வளவேனும் பொருள் விலக்கமின்றி மனிதன் முழுவதும் கர்த்தருடைய பிரதிநிதியானவருடைய கரங்களைக் கொண்டு தேவசிநேக அக்கினியில் நமது சிருஷ்டிகராகிய ஆண்டவருக்கு பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறானே" எனப்போதித்து; "**மரணமட்டும், இன்னும் சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிதலுள்ளவராகி,**" கீழ்ப்படியாமையென்னும் பாவத்தால் துக்கித்து, மனுக்குலம் இழந்துபோன நன்மைகளையெல்லாம் தமது சுகிர்த கீழ்ப்படிதலைக்கொண்டு பரிகரித்த நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதரையே, தேவ மகத்துவத்துக்கு மிகவும் உகந்த ஜீவிய தகனபலியாகிய இவ்வுத்தம கீழ்ப்படிதலைப் படிப்பிக்கும் உபாத்தியாயராகவும், இந்தப் புண்ணியத்துக்கு மாதிரிகையாகவும் எடுத்துக் காண்பித்துவந்தார்.

கடைசியாய், "உங்கள் சிரேஷ்டரிடத்தில் அறிகுறியாயிருப்பவர், தப்பிதம் முதலிய நிர்ப்பாக்கியங்களுக்குள்ளான மனிதனல்லவென்றும், உன்னத ஞானமும் மட்டற்ற நன்மைத்தனமும் அளவற்ற நேசமுமாய் அமைந்திருக்கும் ஆண்டவர்தானென்றும், ஒருவரையும் ஏமாற்றாதவரும், ஏமாற்றக்கூடாதவருமாகிய சுவாமிதானென்றும், நீங்கள் எண்ணிக்கொள்ளவேண்டியது. சிரேஷ்டருடைய மனதைப் பின்செல்லுவதில் தேவசித்தத்தையே நிச்சயமாய்ப் பின்சென்று அநுசரிக்கத்தக்கதாக நீங்கள் தேவசிநேகத்தைப்பற்றி இந்தக் கீழ்ப்படிதலின் சுமையை மேற்போட்டுக்கொண்டீர்களென்றும் நன்றாய் அறிந்து உணர்ந்திருக்கிறீர்கள். அதியுத்தம உண்மை நேசமுள்ள ஆண்டவர்தாமே உங்களுக்குச் சிரேஷ்டராக நியமித்திருக்கிறவருடைய கரங்களைக்கொண்டு நேர்மையான நெறியில் உங்களை இடைவிடாமல் வழி நடத்திவருகிறாரென்பதற்கு, நீங்கள் எள்ளளவேனும் சந்தேகப்படவேண்டாம். சேசுக்கிறீஸ்துநாதருடைய குரலொலியைக் கேட்பதுபோல சிரேஷ்டர்களுடைய சத்தத்துக்குக் காதுகொடுங்கள்" என, ஒவ்வொருவரும் கற்பிக்கப்பட்டதை தீவிரமாகவும், சந்தோஷ உற்சாகமாகவும், சம்பூரணமாகவும் செய்துமுடிக்கும்படி ஏவிவந்தார்.

இவ்வித புத்தி மனக் கீழ்ப்படிதலில் தமது ஞானப்புத்திரர்கள் பயிற்சி அடைவதற்காக பற்



பல விதமாக அவர்களுக்கு கட்டளையிட்டு, அவர்களைச் சோதித்து வருவார். சில சமயங்களில் ஏற்கனவே பூசை வஸ்திரமணிந்து பூசை செய்ய ஆயத்தமாயிருக்கும் குருக்களைப்பார்த்து, அன்று பூசை செய்யவேண்டாமென்று பூசை வஸ்திரங்களையெடுத்து வைத்துவிட்டுப் போகும்படி கட்டளையிடுவார். இவ்விதமே ஓர் சமயம் ஒரு குருவானவருக்கு கட்டளையிட்டார். அவரும் மறுவார்த்தையின்றி தீவிரமாய்க் கீழ்ப்படிந்தார். பிற்பாடு அவரை அழைப்பித்து, "நாமிட்ட கட்டளையால் உமது மனதில் ஏதாகிலும் சஞ்சலம் உண்டாச்சுதோ?" என்று வினவினார். "அற்பமும் சஞ்சலம் உண்டாகவில்லை" என்று அவர் சொன்னதைக்கேட்டு, அர்ச்சியசிஷ்டவர் சந்தோஷப்பட்டு: "உம்மைக் கீழ்ப்படிதலில் ஸ்திரப்படுத்துவதற்காகத்தான் அப்படிச் செய்தோம். கீழ்ப்படிதலின் நிமித்தம் இன்று நீர் திவ்விய பூசைப்பலி செலுத்தாமல் விட்டுவிட்டதால், அதைச் செய்து ஒப்புக்கொடுத்திருந்தால் எவ்வளவு பலன் அடைந்திருப்பீரோ அதிலும் அதிக பலன் அடைந்துகொண்டீரென்று நிச்சயமாயிரும். ஏனெனில், பலியிலும் கீழ்ப்படிதலே சிறந்ததென்று வேதாகமம் படிப்பிக்கின்றது" என்றுரைத்தார்.

சுவாமிமார் மடத்துக்கருகில் வசித்த ஓர் ஸ்திரீ, தினம் சுவாமிமார் மடத்தைவிட்டு வெளியே போகும் பாதையில் வேணுமென்று தன் வீட்டுச்

சாம்பல் குப்பை முதலியவைகளை எறிந்துவந்தாள். வெகு வாலிபராகவும், சுபாவமாகவே வெகு கூச்சக் குணமுடையவராகவுமிருந்த எமேரியோ (Emerio de Bonis) என்னும் ஓர் நவசந்நியாசியாரை அர்ச்சியசிஷ்டவர் அழைப்பித்து, சுவாமிமார் போகும் வழியில் அப்படிக் குப்பைகளை எறிவது யோக்கியமல்லவென்று அந்த ஸ்திரீயிடத்தில் மரியாதையாய்க் கண்டித்துச் சொல்லிவரும்படி கற்பித்தார். வாலிப சந்நியாசியார் கூச்சத்தினால் பின்வாங்கி, தமக்குக் கற்பிக்கப்பட்டதை வேறொருவரைக்கொண்டு நிறைவேற்றினார். இஞ்ஞாசியார் அவ்வாலிபருடைய அடக்கவொடுக்கத்தைப் புகழ்ந்துகொண்டாரென்றாலும், அவருடைய கீழ்ப்படிதலிலுள்ள குறையைக் கண்டித்து, அதற்கு தண்டனையாக அசனசாலையில் யாவருக்கு முன்பாக வந்து நின்று, கைமணி அடித்து, "எனக்கு இஷ்டம், எனக்கு இஷ்டமில்லை, என்னும் மொழிகள் இவ்வீட்டில் கிடையாது" (Volo et nolo non habitant in hac domo) என்று சத்தமாய்ச் சொல்லும்படி கட்டளையிட்டார்.

ஓர் துணைச்சகோதரரை நாற்காலியில் உட்காரும்படி சொன்னார். அச்சமயம் ஒரு கனவான் அர்ச்சியசிஷ்டவரோடு சம்பாஷித்துக்கொண்டிருந்ததால், சகோதரர் உட்காரத் துணியாமல் நின்றுகொண்டேயிருந்தார். உத்தம கீழ்ப்படிதலுக்கு



இது பொருந்தாததால், நாற்காலியைத் தன் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு நிற்கும்படி அர்ச்சியசிஷ்டவர் அவருக்குக் கட்டளையிட்டார்.

தம் மக்களுக்கு தாம் கற்றுக்கொடுத்த கீழ்ப்படிதலைத் தாமே அநுசரித்துவர அத்தியந்த ஆவலுற்று, சமயம் கிடைக்கும்போதெல்லாம் அதை உத்தமமாய் அநுசரித்துவந்தார். அவரை விசாரித்துவந்த அலேசாந்தர் பேத்ரோணியோ என்னும் வைத்தியன் தபசுகாலத்தில் அவர் அநுசரித்துவந்த கடும் ஒருசந்தி உபவாசத்தால் அவர் வெகு பலவீனமாயிருக்கக்கண்டு, மாம்சம் சாப்பிடவேண்டுமென்று கற்பித்தார். அன்று பெரிய புதன்கிழமையாயிருந்தபோதிலும், அர்ச்சியசிஷ்டவர் மறுவார்த்தையின்றி வைத்தியன் சொன்னபடி செய்தார். இதைக்கண்டு பேத்ரோணியோ சற்று ஆச்சரியப்பட்டார். ஏனெனில் தபசுகாலத்தில் மாம்சம் சாப்பிட இஞ்ஞாசியார் எளிதில் உடன்படமாட்டாரென்றெண்ணியிருந்தார். இஞ்ஞாசியாரோவென்றால் "கீழ்ப்படிவது அவசியம்" என்று சுருக்கமாய் அவருக்கு உத்தரம் சொன்னார். இங்கு சொல்லப்பட்ட இந்த வைத்தியனுக்குமுன் அர்ச்சியசிஷ்டவரை விசாரித்துவந்த வேறொரு வைத்தியன், ஓர் சமயம் அவருக்கிருந்த வியாதி இன்னதென்று நன்றாய்க் கண்டுபிடியாமல், தேகத்தில் வெகு உஷ்ணம் உண்டாகும்படிச் செய்ய

வேண்டுமென்று, வெகு காங்கையான மருந்துகளும் உணவுகளும் கொடுக்கவும், அறையின் கதவுகளையெல்லாம் நன்றாய் அடைத்துவைக்கவும் கற்பித்தார். இவ்வகை சிகிச்சை மருந்துகளெல்லாம் தம் வியாதிக்கிசைந்தவைகளல்லவென்று, அர்ச். இஞ்ஞாசியார் உணர்ந்திருந்தார். என்றாலும் தாம் போதித்த புத்திமனக் கீழ்ப்படிதலைத் தாமே உத்தமமாய் அநுசரித்து, தற்சமயம் வியாதியில் தம்மீது அதிகாரமுள்ள வைத்தியனிடத்தில் அறிகுறியாயிருந்த தேவமகத்துவத்துக்கு உகந்த தகனப்பலியாக விரும்பி, ஒன்றும் ஆட்சேபியாமல் வைத்தியன் சொற்படி சகலத்திலும் உற்சாகமாய் கீழ்ப்படிந்தார். ஆனால் மடத்திலுள்ள சுவாமிமார்கள் இவ்வகை சிகிச்சை வியாதியஸ்தருடைய உயிருக்கே ஆபத்தாய் இருக்கக் கண்டு, முன்சொல்லப்பட்ட அலேசாந்த்ரோ பேத்ரோனியோ என்பவரை தீவிரமாய் அழைப்பித்தார்கள். கைதேர்ந்த பண்டிதரான இவர் அர்ச்சிஷ்டவருக்கிருந்த வியாதி ஈரற்குலை எரிவு எனக் கண்டு, முந்தின வைத்தியன் செய்ததுக்கு நேர் விரோதமாய், தேகத்தின் உஷ்ணத்தைத் தணிக்கக்கூடிய குளிர்மையான உணவுகள் கொடுக்கவும், கதவுகளையெல்லாம் திறந்து அறையில் நன்றாய் காற்றாடும்படிச் செய்யவும் வேண்டுமென்று விதித்தார். இவ்வித சிகிச்சையால் வியாதியஸ்தருக்கு ஆரோக்கியம் உண்டானது.



வயது அறுபதுக்கு மேலாகி, தேகம் மிகவும் க்ஷீணித்து பலவீனப்பட்டிருந்த காலத்திலே முதலாய், அர்ச். பாப்பானவர் ஒரு வார்த்தை சொன்னால் உடனே அவருக்குக் கீழ்ப்படிந்து நல்ல மனதோடுமாத்திரமல்ல, இன்னும் சந்தோஷத்துடன் ஊன்றுகோலைக் கையிலெடுத்துக்கொண்டு இஸ்பாஞ்ஞிய தேசத்துக்கு கால்நடையாய்ப் புறப்பட்டுப் போகவோ, அல்லது தண்டு, பாய் ஒன்றுமில்லாத ஒரு கப்பலில் வழித்துணை ஆதாரம் யாதுமின்றி யாத்திரை போகவோ, நான் ஆயத்தமாயிருக்கிறேனென்று சொல்லிக்கொண்டு வருவார். இவ்வார்த்தைகளைக் கேட்ட ஓர் கனவான் "இப்படி நீர் செய்வீராகில், இது விமரிசையாயிருக்குமா?" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டார். "விமரிசை கீழ்ப்படிகிறவர்களையல்ல, கற்பிக்கிறவர்களைப் பொறுத்த புண்ணியம்" என்று இஞ்ஞாசியார் அவருக்குப் பதிலுரைத்தார்.

தேவ தோத்திரத்துக்கும் தேவ ஊழியத்துக்கும் அடுத்த பரிசுத்த காரியங்களிலே முதலாய், யாதாம் ஒன்றின்மேல் விசேஷ பற்றுதல் வைத்து, அதை மிஞ்சின ஆவலாய் நாடுவது புண்ணிய மாட்சிமைக்கு ஓர் குறை என்றெண்ணி வந்தார். இந்தியா தேசத்துக்கு வந்து, அஞ்ஞான ஜனங்களுக்கு சத்தியவேதம் போதிக்க தமக்கிருந்த பேராவலைப்பற்றி லேய்னஸ் சுவாமியார் ஓர்

சமயம் பேசிக்கொண்டிருந்தபோது, இஞ்ஞாசியார் அவரைப்பார்த்து: "என்னுள்ளத்தில் அவ்வித ஆசை எழும்புவதாக நான் கண்டால், அதனை அறுத்து நீக்கிவிடுவேன்" என்று சொன்னார். இதைக்கேட்டு லேய்னஸ் சுவாமியார் ஆச்சரியப்பட்டார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால், "பாப்பானவர் நம்மை எங்கு அனுப்புகிறாரோ, அங்கு செல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா? அவர் கட்டளைப்படி, கிழக்கு மேற்கு என்று பாராமல், எத்தேசத்துக்குப் போகவேண்டுமோ, அத்தேசத்துக்குப் போக நான் ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் உம்மைப்போல், யாதாமொரு விசேஷ திசையை நோக்கி என் மனம் சென்றால், அது நேர்மையான நடுநிலையில் வந்துசேருமட்டும், கட்டாயமாய் அதை வேறு திசையை நோக்கி மடக்கித் திருப்புவேன்" என்று விளங்கச் சொன்னார்.

அவதரித்த சுதன் மாதிரியாய், இருதயத்தில் என்றும் தாழ்ச்சியும் சாந்தமும், யாவரிடத்திலும் அத்தியந்த மதுரகுணமுடைய திவ்விய கர்த்தரே தேவாலயத்தில் விற்பனை செய்தவர்களைக் கோபமாய்க் கண்டித்தாரன்றோ! அதுபோல இஞ்ஞாசியாரும் அபூர்வமாய் சிலசமயங்களில் யாதாமொருவரை, விசேஷமாய் என்னசொல்லியும் திருந்தாமல் பிடிவாதமாயிருக்கிறவர்களை, கடிந்துபேச ஆரம்பித்தாரானால், அவருடைய குரலொலியைக்கேட்டு



எவரும் கொஞ்சம் திடுக்கிட்டு நடுங்குவார்கள்; அறையின் சுவர்களே அதிர்ந்து நடுங்கினாற்போல் தோன்றும். அச்சமயங்களில் அவர் முகத்தை எவரும் ஏறெடுத்துப்பார்க்கத் துணியார்கள். வெகு பிடிவாதக் குணமுடையவராயிருந்த ஒரு துணைச் சகோதரரை ஓர் சமயம் அவர் இவ்விதம் கண்டித்தபொழுது, அந்த சகோதரர், ஏதோ தேவ கோபாக்கினையை தமக்கு அறிவிக்கும் வானதூதனைக் கண்டாற்போல், அடங்கி ஒடுங்கி சித்தந்தடுமாறி அவர் பாதத்தில்போய் வீழ்ந்தார். பக்கத்தில் நின்றவர்களும் மனம்பதறி, அந்த சகோதரர்மேல் இரக்கமாயிருக்கும்படி அர்ச்சியசிஷ்டவரை மன்றாடினார்கள். இவ்விசேஷத்தை தன் கண்ணாற்கண்ட மவ்வே (Maffei) என்னும் சேசுசபைக் குருவானவர் தாம் எழுதிய அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறார். கண்டிக்கும்பொழுது இப்படி மறுரூபமாய்த் தோன்றுபவர், கண்டித்து முடிந்த மறுக்ஷணத்தில் என்றும்போல் முற்றும் மலர்ந்த முகமாய் இருப்பார்.

புண்ணிய நெறியில் ஸ்திரப்பட்டு, அதில் ஏற்கனவே வெகுதூரம் சென்றவர்கள், இன்னும் அதிகமாய்த் தங்கள் சுயமனதை வென்று, தூய தேவசிநேக அக்கினியில் அதனை முற்றும் தகனபலியாக்கி, சேசுக்கிறீஸ்துநாதருடைய பரிசுத்த வீரர்களாக விளங்கும்படி, மற்றவர்களைவிட இவர்களை அர்ச்சியசிஷ்டவர் அதிகக் கண்டிப்பாய் நடத்து

வார். லேய்னஸ் சுவாமியாரை அவர் தம் உள்ளத்
தில் எவ்வளவோ மதித்து நேசித்து வந்திருந்தா
லும், சகலத்திலும் அவர்மட்டில் எவ்வளவு கண்
டிப்பாய் இருந்தாரென்றால்: சில சமயங்களில்
தமதிருதயத்தில் வெகுவாய் நொந்துவருந்தி,
"ஆண்டவரே, சேசுசபைக்கு நான் என்ன தீங்கு
செய்தேனென்று, இந்த அர்ச்சியசிஷ்டவர் என்னை
இவ்வளவு கண்டிப்புடன் நடத்துகிறார்" என்று
பிரலாபித்ததாக, லேய்னஸ் சுவாமியார் தாமே தம்
மைப்பற்றி சொல்லியிருக்கிறார். இவ்விதமே புண்
ணியத்தில் மிகச் சிறந்தவர்களாயிருந்த
பொலான்கோ சுவாமியாரையும், நாதால் (Nadal)
சுவாமியாரையும் கண்டிப்பாய் நடத்திவந்தார்.
நாதால் சுவாமியார் சில சமயங்களில் தமக்கு
கிடைத்த கண்டனைகளின் நிமித்தம் கண்ணீர் சிந்தி
அழும் தறுவாயிலிருந்தார்.

புண்ணியத்தில் பலவீனமானவர்கள்மட்டிலோ
முற்றும் வேறுவிதமாய் நடந்துவந்தார். தெருவோ
ரத்தில் மடத்தைச்சுற்றி ஓர் சுவர் கட்டவேண்டி
யிருந்தது. நவசந்நியாசிகளெல்லாம் அதற்கு உதவி
செய்யவேண்டுமென்று, இஞ்ஞாசியார் வேலை மேற்
பார்க்கும் துணைச் சகோதரருக்குக் கற்பித்திருந்
தார். அவர்களுள் உரோமையில் மேன்குலத்தில்
பிறந்த ஓர் வால சந்நியாசியார், நகரவாசிகள்
கண்முன் இவ்வித தாழ்ந்த வேலைசெய்ய நாணிய
வராய், அவர்கள் கண்களுக்கு ஒளிந்து மறைய



ஒயாமல் வழிபார்த்துக்கொண்டிருந்தார். அர்ச்
சியசிஷ்டவர் அதைக் குறிப்பாய் அறிந்து, துணைச்
சகோதரரைப்பார்த்து: "சகோதரரே, அந்த நவ
சந்நியாசியார் வெட்கத்தினால் சோதனைப்பட்டு
வருந்துகிறதை நீர் பார்க்கிறதில்லையா?" என்று
வினவினார். அதற்கு அவர், நவசந்நியாசிகள்
யாவருக்கும் வேலையிட எனக்குக் கற்பிக்கப்பட்டி
ருந்ததே என்றார். "நாம் உமக்கு ஒன்று கற்பிக்கும்
பொழுது பிறர் சிநேகமும் விவேக தாட்சணியமும்
வேண்டாமென்றா கற்பிக்கிறோமா!" என்று
சொல்லி; நவசந்நியாசியாரிடத்தில்போய்: "மடத்
துக்கு திரும்பிப்போம், இந்த வேலைசெய்ய உமக்கு
தேகபலம் போதாது. இவ்வேலைக்கு திரும்பி வர
வேண்டாம்" என்று அன்புடன் அவருக்குக் கற்
பித்தார். இந்த நவசந்நியாசியார் சேசுசபை
யிலிருந்து புண்ணியத்தில் ஸ்திரப்பட்டபின், சர்வே
சுரனுடைய தோத்திரத்துக்காக எவ்வித தாழ்ந்த
அலுவலையும் சந்தோஷமாய்ச் செய்துவந்தார்.

இதே கட்டிடத்தில் லோரென்ஸோ (Lorenzo)
என்றொரு நல்ல துணைச்சகோதரர் கொற்றுவேலை
செய்துகொண்டிருந்தார். இவரிடத்தில் விளங்கின
புண்ணியங்களைப்பற்றி, இஞ்ஞாசியாரும் மற்றவர்
களும் அவரைக் கனமாய் எண்ணியிருந்தார்கள்.
வேலைநேரத்தில் எவ்வளவு சொற்பமாகப் பேசு
வாரென்றால், லோரென்ஸோ சகோதரர் எடுத்து

வைத்து கட்டும் கற்களின் எண்ணம் அவர் பேசும்
வார்த்தைகளின் எண்ணத்தைவிட அதிகமா
யிருக்குமென்று, இஞ்ஞாசியார்தாமே சொல்லு
வார். ஓர்நாள் இவர் தமக்குக் கொடுக்கப்பட்ட
"ஆப்பிள்" என்று சொல்லப்படும் ஒரு இலந்தப்
பழத்தை தாகமாயிருக்கும்போது புசிக்கலா
மென்று உடுப்புப்பையில் பத்திரம் பண்ணி வைத்
திருந்தார். அவர் வேலை செய்வதை இஞ்ஞாசியார்
பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில், அது நழு
விக் கீழே விழுந்துவிட்டது. சகோதரர் வெட்கத்
தினால் அதைப் பாராதவர்போல் வேலையில் வெகு
கவனமாயிருந்தார். இஞ்ஞாசியாரோவென்றால்,
சகோதரர் தன் வெட்கத்தை ஜெயித்து அதை
எடுத்துப் பைக்குள் போட்டுக்கொள்ளுமட்டும்,
தமது ஊன்றுகோலால் அதை அவர்முன் உருட்டி
தள்ளிக்கொண்டேயிருந்தார்.

இவ்வதிகாரம் ஏற்கனவே விரிந்துபோயிற்றென்
றாலும், அர்ச்சியசிஷ்டவருடைய நீடிய சாந்தம்,
தயை தாட்சணியத்தையும், ஞான விவேக விமரி
சையையும் கண்கூடாய் விலக்கிக் காட்டும் ரிபத
னீரா சகோதரரைப்பற்றிய சில வரலாறுகளை இவ்
வதிகாரத்துக்கு முடிவுரையாக எடுத்துச் சொல்லு
தல் அவசியமென்றெண்ணுகிறோம்.

சாஸ்திரப்பயிற்சி செய்வதற்காக ரிபதனீரா
சகோதரர் டயஸ் (Diaz) என்னும் வேறொரு



சகோதரருடன் 1542-ம் வரு, உரோமையினின்று
பாரீஸ் நகர் கலாசாலைக்கு அனுப்பப்பட்டார்.
இதே முகாந்திரமாக, போர்த்துக்கால் தேசத்தி
லிருக்கும் கொயிம்பிரா பட்டணத்துக்கு அனுப்
பப்பட்ட அந்தோனி கிரிமிறலி சுவாமியாரும்,
வேறு நாலுபேரும் இவர்களுடன் அவிஞோன் பட்
டணமட்டும் ஒன்றாய்ப் பிரயாணம் செய்தார்கள்.
ரிபதனீரா சகோதரர் இன்னும் பாலியனாய், குறை
வான தேகபலமுடையவராயிருந்தமையால், தங்
களைப்போல் அவரும் கால்நடையாய்ப் போகாமல்,
குதிரைமேலேறிப்போவது நலமாயிருக்குமென்று
மற்ற ஆறுபேரும் இஞ்ஞாசியாரிடத்தில் சொன்
னார்கள். இஞ்ஞாசியாரோவென்றால்: "பேதுரோ
தன் இஷ்டம்போல் செய்யலாம்; ஆனால் என்
குமாரனானால் மற்றவர்களைப்போல் கால்நடை
யாய்ப் பிரயாணம் செய்வார்" என்றுரைத்தார்.
இதைக்கேட்ட ரிபதனீரா சகோதரர், உற்சாக
மூடன் கால்நடையாய் மற்றவர்களோடு புறப்பட்
டார்.

இத்தாலிய தேசத்திலிருக்கும் விற்றெர்போ
(Viterbo) என்னும் பட்டணத்தில் போய்ச்சேர்ந்த
அன்று சாயுங்காலம், பிரயாணத்தால் காலயர்ந்து
எவ்வளவோ களைத்து தவித்துப் போயிருந்தா
லும், நமது ரிபதனீரா சகோதரர் எல்லாம் சுற்றிப்
பார்க்கவேண்டுமென்று அக்கியுல்பாயுள்ள விநோ
தப் பிரியால், தங்கியிருந்த ஆஸ்பத்திரியில் அங்

கும் இங்கும்போய் சுற்றிப்பார்த்தார். அதன்பின்,
தேவாலயத்துக்குட்சென்று ஒவ்வொன்றாய் பரி
சோதித்து, பிரசங்கப்பெட்டி எப்படியிருக்கிற
தென்று பார்க்கும்படி, அதன்மேல் ஏறினார். குருக்
களைப்போல் அங்கிதரித்த ஒருவர் பிரசங்காசனத்
தில் ஏறி நிற்பதைக் கண்ணுற்ற 'சாக்றிஸ்றன்'
(Sacristan) என்று சொல்லப்படும் கோவிற்
பிள்ளை, பரமார்த்தமாகத்தானோ அல்லது
வேடிக்கை பார்க்கலாமென்னும் எண்ணங்கொண்டு
தானோ, கோவிற் பெரிய மணியை பலமாய்
அடிக்க ஆரம்பித்தார். எல்லாம் சாவதானமாய்ப்
பார்வையிட்டுத் திரும்பிவரலாமென்று மேலே
ஏறிப்போயிருந்த பேதுரோ சகோதரர், சற்றுமுன்
வெறுமையாயிருந்த கோவில் அதிசீக்கிரம் ஜனங்
கள் நிறைந்துபோயிருக்கக்கண்டு, கீழே இறங்கி
வரத் தீவிரித்தார். ஆனால், "உமது பிரசங்கத்தைக்
கேட்கத்தான் ஜனங்கள் கூடிவந்திருக்கிறார்கள்"
என்றறிவிக்கப்பட்டார். பால்யனானாலும், ஆபத்
தில் திகைப்பது நமது நிபதனீரா சகோதரருடைய
சுபாவமல்லவே! சேசுசபை நவசந்நியாசத்தில்,
குருப்பட்டத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட
நவசந்நியாசிகள் ஒவ்வொருவரும் முறைமுறையே
பிரசங்கம் ஆயத்தம்செய்து, அசனசாலையில் அதை
மற்றவர்களுக்குமுன் பிரசங்கித்து வருவது வழக்
கம். நிபதனீரா சகோதரர் ஏற்கனவே உரோமை
யில் திவ்விய நற்கருணையைப்பற்றி அப்படி ஓர் பிர



சங்கம் செய்திருந்தார். நொடிப்பொழுதுக்குள்
அதனை ஞாபகப்படுத்திக்கொண்டு, பிரசங்காசனத்
தில் திரும்ப ஏறி, சற்றுந் திகையாமல் உற்சாக
மாய்ப் பிரசங்கித்தார். பாலியன் பிரசங்கத்தைக்
கேட்டு விருத்தாப்பியர்கள் முதலாய் மனம் உருகி,
வியப்படைந்தார்கள்.

அவர் பிரசங்கம் செய்து ஆஸ்பத்திரிக்கு திரும்
பின அன்றிரவு வயதுசென்ற ஒருவர் அவரிடம்
வந்து: "சுவாமி, நான் எனக்கு இடர்செய்த ஒரு
வனை அநேக வருஷகாலமாய்ப் பகைத்து, எவ்வித
மும் அவனை உயிர் மாய்த்துப் பழிவாங்கவேண்டு
மென்று என் உள்ளத்தில் தீர்மானித்திருந்ததால்,
இவ்வளவுகாலமாய் நான் பாவசங்கீர்த்தனம் செய்
ததுமில்லை, திவ்வியநற்கருணை உட்கொண்டது
மில்லை. ஆனால் சுவாமியவர்களுடைய பிரசங்கத்
தைக்கேட்டு மனமிளகி, மனஸ்தாபப்படுகிறேன்.
என் நிஷ்டூர எண்ணங்களையெல்லாம் இதோ முழு
தும் விட்டுவிட்டேன். எனக்குப் பாவப்பொறுத்
தல் ஆசீர்வாதம் தரவேண்டும்" என்று பச்சாத்
தாபம் மிகுந்த குரலாய் விண்ணப்பஞ்செய்தார்.
பேதுரோ சகோதரருடைய ஆனந்த அக்களிப்பை
உத்தேசித்துக்கொள்ளலாம். இன்னும் குருப்பட்
டம் பெறாததால் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதங்
கொடுக்க தமக்கு அதிகாரமில்லையென்று, பிரயா
ணிகளுக்குள் குருவாயிருந்த் சாந்தாக்குரூஸ்

(Santa Cruz) என்னும் சுவாமியாரிடத்தில் விருத்தாப்பியரை அழைத்துக்கொண்டுபோய் விட்டார்.

சூரியனைக்கண்ட தாமரைபோல என்றும் மலர்ந்து களிப்புற்றிருந்த இந்த பாலியன் இருதயத்திலே முதலாய், உடலையும் உயிரையும் வாட்டும் துக்கமும் சலிப்பும் ஏக்கமும் உட்புகுந்தது. காலக்கொடுமையால், பாரீஸ் கலாசாலையில் ஏற்றுக்கொள்ளப்படாததால், பெல்ஜியம் தேசத்திலுள்ள லூவேன் பட்டணத்துக்குப் போய் அங்கு சாஸ்திரப் பயிற்சி செய்துகொண்டிருந்த ரிபதனீரா சகோதரர், என்னமோ திடீரென்று முக வாட்டமாய், ஏதோ சஞ்சல சாகரத்தில் மூழ்கியவர்போல் காணப்பட்டார். சமயத்துக்குச் சமயம் தன் சகோதரர்களை விட்டகன்று ஒளிவிடம் தேடிப் போய்க் கண்ணீர் சிந்திவந்தார். அவருக்கு சிரேஷ்டராயிருந்த தோமினிக் (Domenech) என்னும் சுவாமியார் தந்தையின் அன்புடன், அவரைத் தேற்றி ஆறுதல்படுத்த தன்னாலானதெல்லாம் செய்தார். ஒன்றும் பிரயோசனப்படவில்லை. இது சமயம் அர்ச். இஞ்ஞாசியார் தோமினிக் சுவாமியாரை உரோமைக்கு வரவழைத்தார். இஞ்ஞாசியாரைக் கண்ணுற்றால் பாலியன் மனந்தெளியக் கூடுமென்றெண்ணி, ரிபதனீரா சகோதரரையும் தம்முடன் உரோமைக்கு அழைத்துச் சென்றார். இஞ்ஞாசியாரைத் திரும்பவும் பார்க்கலா



மென்றறிந்தவுடனே, அவர் உள்ளத்தில் அடர்ந்திருந்த துக்கமும் சலிப்பும் சூரியனைக்கண்ட பனிபோல் ஒரு க்ஷணத்தில் மாயமாய்ப் பறந்துபோயிற்று. நெடுநாள் கஷ்டப்பட்டு பிரயாணஞ்செய்து கடைசியாய் உரோமையில் அவர் வந்து சேர்ந்தபொழுது, அர்ச். இஞ்ஞாசியார் அப்பொழுதான் திவ்விய பூசைக்கு ஆயத்தமாக 'சாக்கிரிஸ்தியில்' பூசை வஸ்திரம் தரித்துக்கொண்டிருந்தார். பூசைசெய்து முடியுமட்டும் ரிபதனீரா சகோதரர் காத்திருக்கவில்லை. உடனே சாக்கிரிஸ்திக்குள் புகுந்து அர்ச்சியசிஷ்டவருடைய ஆசீர்வாதம் பெறும்படி, அவர் பாதத்தில் போய் வீழ்ந்தார். அர்ச்சியசிஷ்டவர் தமது செல்வப் பாலியன் இருந்த கோலத்தைக் கண்ணுற்று மனமுருகி, அவரை வாரிச்சேர்த்து தமது மார்போடு அணைத்துக்கொண்டார்.

இஞ்ஞாசியார் அருகில் சிலநாளாய் ரிபதனீரா சகோதரர் முன்போல் முகமலர்ந்து உற்சாகமாயிருந்தார். ஆனால் அதிசீக்கிரம் முன்னிலும் அதிகக்கொடிதான துக்கமும் சலிப்பும் அவர் மனதைத் தாவி சஞ்சலப்படுத்தத் தலைப்பட்டது. ஆ! சில ஞான சீவியத்தில், தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆத்துமாக்கள் இருதயங்களில், தேவ திருவுளத்தின் ஏதோ ஓர் விசேஷ அநுமதியால் நிகழும் கண்டுபிடிப்பதற்கரிதான விபரீதங்களை என்னென்று சொல்லு! பின் நாம் சொல்லப்போகின்ற

வைகள், இதனை வாசிக்கும் நண்பர்களுக்கு, நம்புதற்கருமையான ஏதோ புதுமைபோல் தோன்றலாம். ஆயினும் இவ்விசேஷங்களெல்லாம் இவைகளைப் பட்டநுபவித்த ரிபதனீரா சகோதரர் தானே தம்மைப்பற்றி எழுதிவைத்தவைகளில் நின்றெடுக்கப்பட்டிருக்கின்றனவென்றறிக.

அர்ச். இஞ்ஞாசியாரை இதுகாலம் எவ்வளவோ வாஞ்சையுடன் நேசித்துவந்த இந்த பாலியன் இருதயத்தில் இப்பொழுது, ஆ! ஆச்சரியமே! சூரியன் அஸ்தமித்து காரிருள் அடர்ந்து மொய்த்தது போல், அவர்மீது வெறுப்பும் துவேஷமும் அடர்ந்து மொய்க்க ஆரம்பித்தது. ஏற்கனவே நித்திய கடவுளை முகமுகமாய்த் தரிசிக்கும் பேரின்ப பாக்கியம்பெற்ற ஓர் பரலோகவாசியைப்போல் இதுகாலம் அவர் கண்களுக்குத் தோன்றின அர்ச். இஞ்ஞாசியார், இப்பொழுது, (அவர்தாமே சொல்லியிருக்கும் பிரகாரம்) 'சித்திரத்தில் வரையப்பட்ட ஓர் பிசாசுபோல்' தோன்றினார். அர்ச்சியசிஷ்டவருடைய சமுகத்தை நாடி ஆவேன் பட்டணத்திலிருந்து சுமார் ஆயிரம் மைல் தூரம் ஆவலாய்ப் பிரயாணம் செய்தவர், இப்பொழுது அத்தனை தூரம் அவரை விட்டகன்றோடிப்போக ஆசித்தார்;—இஞ்ஞாசியாருடைய சமுகம் இப்பொழுது அவருக்கு அவ்வளவு சகிக்கக்கூடாத அருவருப்பாயிற்று. இவரைப் பார்க்க ஏன்தான் இத்தனை தூர



பிரயாசப்பட்டு நடந்துவந்தேன் எனத் தன்னைத் தானே நொந்துகொண்டார். முன் அர்ச்சியசிஷ்டவரிடத்தில் அத்தியந்த பூஜித வணக்கத்துடன் தாம் வியந்து பாராட்டியவைகள்,—அவருடைய வாக்கு, கிரிகை, புண்ணியங்களெல்லாம்,—இப்பொழுது ஒரு கள்ள ஞானியின் வெளிவேஷம்போல் அவருக்குத் தோன்றின. "இந்தப் பேதைப் பிள்ளை, ஒருபோதும் ஒன்றும் நன்றாய்ச் செய்யப்போகிறதில்லை"—"உன் தப்பிதங்களைத் திருத்திக்கொள்ளாதேபோனால், சேசு சபையில் நீ பிரவேசிப்பாய் என்றெண்ணாதே" என இஞ்ஞாசியார் முன் ஓரோர் சமயங்களில் அவரைக் கண்டித்துச் சொன்ன வார்த்தைகளையும், ஓரோர் சமயங்களில் அவர் விதித்த தண்டனைகளையும், அப்பொழுது உற்சாக சிரவணத்துடன் ஏற்றுக்கொண்டவர், இப்பொழுது அவைகளை மனத்தாங்கலுடன் சிந்தித்து, இஞ்ஞாசியார்மீது மேன்மேலும் அதிக மன எரிச்சல்கொண்டார். சஞ்சலமும் சலிப்பும் உள்ளத்தில் நாளுக்குநாள் மேலிட்டெழும்ப, இஞ்ஞாசியாரைமாத்திரமல்ல, சேசுசபையிலுள்ள தம் சகோதரர்களுடைய சகவாசத்தை முதலாய்ச் சகியாதவரானார். இஞ்ஞாசியாரையும் சேசுசபையையும் விட்டு நீங்கி, வேறு சந்நியாச சபை ஒன்றில் பிரவேசிக்க எண்ணங்கொண்டார். தான் இன்னும் சேசுசபையில் வார்த்தைப்பாடு கொடாதிருந்ததால், இப்படிச்செய்வது தனக்குக் குற்றமாயிரா

தென்று தமக்குத்தாமே ஞாயம் சொல்லி, தம் மனதைச் சமாதானப்படுத்தத் தேடினார்.

பதிவிரதையான ஓர் மாதைக்கெடுக்கத்தேடும் துஷ்டன், தன் நயச்சொல் வஞ்சனைகள் ஒன்றும் பதிவிரதையின் தந்தைக்காவது, அவளுடைய கணவனுக்காவது தெரியாமல் முற்றும் இரகசியமாயிருக்கும்படி அளவற்ற ஜாக்கிரதை எடுத்துவருவதுபோல், சர்வேசுரனுக்கு உகந்த ஓர் ஆத்துமத்தை வஞ்சித்துக் கெடுக்கத்தேடும் துஷ்ட அரூபியும், தன்னுடைய கபட துர்ப்போதனைகளையெல்லாம் ஆத்துமத்தை ஞானச் சீவியத்தில் கைபிடித்து நடத்திவரும் குருவானவருக்காகிலும், ஞானச் சீவியத்தில் அநுபவமுள்ள வேறு யாருக்காகிலும் அந்த ஆத்துமம் தெரிவிக்காமல் இரகசியமாய் வைத்திருக்கும்படி தன்னாலான முயற்சியெல்லாம் செய்து பிரயாசப்படும். ஏனெனில் தன்னுடைய கபட தந்திரங்கள் வெளியானால், தன் துஷ்ட எண்ணத்தை நிறைவேற்ற தனக்கு வழியிராதென்று அது அறிந்திருக்கின்றது என, இஞ்ஞாசியார்தாமே, சாத்தான் ஆத்துமாக்களை வஞ்சித்துக் கெடுப்பதற்கு பிரயோகிக்கும் உபாயங்களை விவரித்து எழுதிக் கொடுத்திருக்கிறார். ரிபதனீரா சகோதரனையும் இவ்விதமே சாத்தான் சதிசெய்து கெடுக்க வழிதேடியது. உரோமையிலிருந்த அவருடைய உறவினர், நண்பர் சிலரு



டைய துர்ப்புத்தியைப் பின்சென்று, இஞ்ஞாசியரிடத்தில் ஒன்றும் சொல்லாமல் இரகசியமாய் சேசுசபையைவிட்டு நீங்கிப்போக தீர்மானித்தார். ஆயினும் சுபாவமாய் மேன்குணமுடையவரானதால், இப்படி ஒளித்தோடுவது இழிவென்றெண்ணினாரோ என்னமோ, முன்கொண்ட எண்ணத்தை விட்டுவிட்டு இஞ்ஞாசியாரிடத்தில் நேரிற்போய், "சேசுசபையில் இருக்க எனக்கு இஷ்டமில்லை, ஞாயமான முகாந்திரங்களைப்பற்றி அதனை விட்டகன்றுபோகத் தீர்மானித்திருக்கிறேன்" என்று சுருக்கமாய்ச் சொல்லிவிட்டு, வெளியே போய்விடுகிறது என, தனக்குள் தீர்த்துக்கொண்டார். தீர்த்துக்கொண்டு சண்டின முகமாய் இஞ்ஞாசியாரிடத்திற்போய் தமது தீர்மானத்தை பரபரப்புடன் அறிவித்தார். இஞ்ஞாசியாரோவெனில் எல்லாம் சாவதானமாய்க்கேட்டு, சற்றும் முகம் மாறாமல், "இது ஆற அமர யோசித்துச் செய்ய வேண்டிய காரியம்; ஆத்திரமென்ன, — சோமிருக்குது, பார்த்துக்கொள்ளலாம்" என்று பதிலுரைத்தார். ரிபதனீரா சகோதரர் மறுவார்த்தை பேசவில்லை. தமது தீர்மானத்தைக் கேட்டதும் இஞ்ஞாசியார் ஏதோ ஆச்சரியப்பட்டு மனம் வருந்துவாரென்றெண்ணியிருந்தார். ஆனால் தாம் சொன்னதைக்கேட்டு அவர் சற்றும் அசையாமல் என்றும்போல் மலர்ந்த முகமாயிருக்கக்கண்டு, தாமே ஆச்சரியப்பட்டுக்கொண்டார்.

ஞான சீவியத்தில் தேர்ந்த ஆசிரியனானதால், இஞ்ஞாசியார் பாலியனுடைய ஆத்துமத்தை சஞ்சலப்படுத்திவந்த நோயின் தன்மையை அதிசீக்கிரம் நிதானித்தறிந்துகொண்டார். அறிந்துகொண்டு முன்னிலும் எண்மடங்கு அதிக அன்புடன் அவரை அரவணைத்து, அவ்ருக்காக சர்வேசுரனை ஓயாமல் உருக்கமாய்ப் பிரார்த்தித்துவந்தார். அவர் தமது சமுகத்தை வெறுத்து, தம்மை அகற்றி நடந்தாலும், ஒன்றும் சம்சயப்படாதவர்போல் தாமே அவரை அடிக்கடித் தேடிப்போவார்.

ரிபதனீரா சகோதரரோவென்றால், தம் எண்ணத்தில் மேன்மேலும் பிடிவாதமாய் இன்னொருதரம் இஞ்ஞாசியாரிடத்தில்போய் முன்னிலும் அதிக ஆக்கிரமாய் தமது தீர்மானத்தை எடுத்துச் சொன்னார். தாம் கேட்டதற்கு இஞ்ஞாசியார் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று இரண்டிலொன்று மறுமொழி சொல்லவேண்டுமென்று பாலியன் விரும்பினாற்போல் தோன்றுகின்றது. அப்படி அவர் இரண்டிலொன்று எதைச் சொல்லியிருந்தாலும், அது சோதனைப்பட்டவருக்கு மோசமாக முடிந்திருக்கும். ஆனால் மனுஷ சுபாவத்தை நன்றாய் அறிந்திருந்த இஞ்ஞாசியார் 'ஆம்' என்றும் சொல்லவில்லை, 'இல்லை' என்றும் சொல்லவில்லை. என்றும்போல் மலர்ந்த முகமாய்: "உமது எண்ணத்துக்கு நான் எதிர் நிற்கிறதில்லை. ஆனால்



அதை நீர் நிறைவேற்றுமுன், உமது தாய்க்கும் பந்துக்களுக்கும் அதைப்பற்றி எழுதுவதவசியம். ஒன்றும் அவர்களுக்கு அறிவியாமல் புறப்பட்டுப் போவீராகில், சந்நியாச மடத்தைவிட்டு ஒளிந்தோடிவந்த நாடோடி என்றல்லோ உம்மை எண்ணுவார்கள்" என்று உத்தரஞ்சொன்னார். இதனால் சோதனைப்பட்டவர் இன்னும் இருமாதகாலம் காத்திருக்கவேண்டி நேர்ந்தது.

உள்ளுக்குள்ளிருந்து குடியைக் கெடுக்கும் சதிகாரனைப்போல், சோதனையால் இப்படி அலைக்கழிக்கப்பட்ட இந்த பாலியனை வஞ்சித்துக் கெடுக்க சந்நியாச மடத்துக்குள்ளேயே ஒருவர் முயற்சியாயிருந்தார். வெளிவேஷத்தில் உத்தம புண்ணியவான்போலும், உள்ளத்திலோ அகங்காரமும் கபடமும் நிறைந்த ஒரு குருவானவரிருந்தார். இஞ்ஞாசியாருக்குத் தன் இருதயத்தை அடைத்துக்கொண்ட ரிபதனீரா சகோதரர், இந்தக் குருவானவருடைய வெளிக்கோலத்தைக் கண்டு, அவர்மீது மேலான எண்ணம்வைத்து, தம் இருதயத்தை அவரிடத்தில் திறந்துபேசி, அவரைத் தமக்கு ஆத்தும குருவாகத் தெரிந்துகொண்டார். இக்குருவானவர் தன்னை நம்பிவந்த கபடற்ற பாலியன் இருதயத்தில் அடர்ந்திருந்த அந்தகாரத்தை நீக்கி, அவர் மனது தெளியும்படி செய்வதற்குப் பதிலாய், அவர் கொண்டிருந்த தப்பான

எண்ணங்களில் அவரை அதிகமதிகமாய் உறுதிப்
படுத்தி, அவர் சேசுசபையைவிட்டு நீங்கி, இஸ்
பானிய தேசத்துக்குப் புறப்பட்டுப் போவதற்குத்
தகுந்த சமயத்தையும் காண்பித்துக் கொடுத்தார்.
ஆனால் நல்லவேளை,—தெய்வச் செயலென்றுதான்
சொல்லவேண்டும்,—அந்தச் சமயம் அடுத்து வருவ
தற்குள்ளாக, ரிபதனீரா சகோதரர் கடும் வியாதி
யாய் விழுந்தார். வியாதியினாலும் அவர் மனம்
தெளிந்து சாந்தப்படவில்லை. வியாதியில் இஞ்
ஞாசியார் தாயின் அன்புடன் அடிக்கடி அவரைச்
சந்தித்து விசாரித்துவந்தார். அவரோவென்றால்
அர்ச்சியசிஷ்டவரிடத்தில் முகங்கொடுத்துப்
பேசாமல், அவர் அன்புற்று விசாரிக்கும் விஷயங்
களுக்கு இறுமாப்புடன் மறுமொழி சொல்லிவந்
தார். ஜன்னியின் கொடுமையால் புத்தி பேத
லித்து பலவாறாய்ப் பிதற்றும் தன் பிள்ளையின்மீது
பெற்ற தாய் கோபங்கொள்ளுவாளோ? அப்படிப்
பிதற்றும் பிள்ளை கையை ஓங்கி தன்னை முகத்தில்
அறைந்தாலும், அக்கையை அன்புடன் முத்தமிடு
வாளேயன்றி, அதனால் மனத்தாங்கல் அடையா
ளன்றோ! அவ்விதத் தாய்போலவே இஞ்ஞாசியா
ரும் சோதனையின் கொடுமையால் அலைக்கழிக்கப்
பட்ட ரியதனீரா சகோதரர்மட்டில் நடந்துகொண்
டார்.

மேற்சொன்ன வஞ்சகக்குருவும் சோதனைசெய்
யும் துஷ்ட அரூபியின் தூதன்போல், ஒரோர் சம



யங்களில் வியாதிக்காரரைப்போய்ச் சந்தித்து வந்
தார். ஓர்நாள் அவர் வியாதிக்காரரிடத்தில் வந்து:
“என்னை மடத்தைவிட்டு விரட்டிவிட்டார்கள்;
நான் போகிறேன்” என, பரிதாபக் குரலெடுத்துச்
சொன்னார். “வீட்டைவிட்டு விரட்டிவிட்டார்
களா? ஏன் விரட்டிவிட்டார்கள்?” என்று வெகு
ஆத்திரமாய் ரிபதனீரா சகோதரர் அவரை வின
விக்கேட்டார். “ஏன்? உமக்கு நான் பாவப்
பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுத்துவந்தேனல்
லவா? அதற்காகத்தான். இதோ நான் போகி
றேன். எனது புத்தியைக்கேளும். என்னைப்
போல் மடத்தைவிட்டு துரத்தப்படுமட்டும் காத்
திருக்கவேண்டாம்” என்று அபாண்டத்துக்கு
மேல் அபாண்டம்சொல்லி வெளியேறினார். வியா
திக்காரர் இதைக்கேட்டு, இஞ்ஞாசியார்மீது முன்
னிலும் அதிகமாய் மனம் எரிந்து, “ஆ! இதென்ன
அநியாயம்! என்னைத் துன்பப்படுத்துவது போதா
தென்று, என் நிமித்தம் இந்தக் குருவானவரையும்
துன்பப்படுத்தவா ஏற்பட்டார்? ஆம்! ஆம்! என்
நிமித்தம்தான், இந்த நல்ல குருவானவரை மடத்
தைவிட்டுத் துரத்திவிட்டார்” என பலவாறாகப்
புலம்ப ஆரம்பித்தார்.

அவர் இப்படி கோபதாபமாய் இருக்கும் வேளை
யில், இஞ்ஞாசியாரும் அவரைப்பார்க்க வந்தார்.
தீய்முகத்தில் பொங்கும் பால்போல், வியாதிக்
காரர் இஞ்ஞாசியாரைக் கண்ணுற்றதும், தம் உள்

ளத்தில் பொங்கி வடிந்த கோபத்தை அடக்கமாட்டாதவராய், "என்ன! இந்த பரிசுத்தவானை மடத்தைவிட்டு துரத்திவிட்டீர். அவர் எனக்குப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் இல்லையென்று சொல்லாததினால், அவரைத் துரத்திவிட்டீர். இது நீதியல்ல; இல்லை, இல்லை, இது நீதியல்ல" என்று பதர்ஷ்டமாய்ப் பேசிப் புலம்பினார். அர்ச்சியசிஷ்டவர் எல்லாம் அமைதியாய்க்கேட்டு: "மகனே, நீர் சொல்லுகிறது ஒன்றும் எனக்கு விளங்குதில்லையே. விளங்கச்சொல்லும். யாரைப் பற்றிப் பேசுகிறீர்?" என சாதுவாய்க் கேட்டார். பொங்கிவடிந்த பால் தண்ணீரைக் கண்டது போல், இவ்வளவு அபூர்வ சாந்தகுணத்தைக் கண்டதும், ரிபதனீரா சகோதாருடைய கோபம் சற்றுத் தணிந்தது. காரியத்தை விளங்கச்சொன்னார். கபடற்ற இந்த பாலியனை ஒரு குருவானவர் இப்படி வஞ்சித்துக் கெடுக்கத் தேடினாரேயென்று இஞ்ஞாசியார் மனம்நொந்து, உண்மையை அவருக்கு வெளிப்படுத்தினார். "மகனே, நீர் மோசம் போனீர். இந்தக் குருவானவர் விஷயத்தில் உமது பெயர் அற்பமும் சம்பந்தப்பட்டதில்லை. உம்மைப்பற்றி ஒருபோதும் நான் அவரிடத்தில் பேசினதில்லை; அவரும் என்னிடத்தில் பேசினதில்லை. மேலும், நான் அவரைத் துரத்தவில்லை. அதற்கு விரோதமாய் அவரை நிறுத்திக்கொள்ள என்னாலான பிரயாசமெல்லாம் பட்டேன். அவ



ரோவென்றால் என் வார்த்தையை மீறி, என் சம்மதமின்றி, சுவேச்சையாய்ப் புறப்பட்டுப்போய் விட்டார்" என்று உள்ளதை உள்ளபடி சொன்னார். இவ்வுண்மையை அறிந்து ரிபதனீரா சகோதரர் மனந்திடுக்கிட்டு, தன் ஆத்துமம் இருந்த ஆபத்தான நிலைமையைப்பற்றி சிந்தித்து யோசிக்கலானார். யோசிக்க யோசிக்க நிஷ்காரணமாய் அவருள்ளத்தை மூடியிருந்த சம்சய இருளும் கலைந்து நீங்கத் தலைப்பட்டது. இஞ்ஞாசியார் மீது அவர் இருதயத்தில் முன்னிருந்த நம்பிக்கையும் நேசமும் திரும்ப உயிர்த்துவர ஆரம்பித்தது.

வியாதி குணமானதும், எட்டுநாள் ஒடுக்கத்திலிருந்து, ஞானமுயற்சிகளைச் செய்யும்படி இஞ்ஞாசியார் ரிபதனீரா சகோதரரைக் கேட்டார். அதற்கு அவர் அட்டிசொல்ல ஆரம்பித்ததால், சிலநாள் பொறுமையாயிருந்து திரும்பவும் தமது கருத்தை அவருக்கு அறிவித்தார். திரும்பவும் அவர் அட்டிசொல்ல ஆரம்பித்தார். உடனே இஞ்ஞாசியார் சாந்தகுரலைமாற்றி, கர்ச்சித்து முழங்கும் சிங்கம் போல் எவரையும் நடுங்கச்செய்யும் குரலில், நவசந்நியாசியாருடைய பிடிவாதத்தைக் கண்டித்து சுருக்கமாய் சிலவார்த்தைகள் சொன்னார். "இவ்வார்த்தைகளைக் கேட்டு நான் சர்வாங்கமும் ஒடுங்கி நடுங்கினேன். என்னை அறியாமலே, ஆகட்டும், பிதாவே, ஆகட்டும், அவைகளை (ஞானமுயற்சி

களைச்) செய்கிறேன் என்று அபயமிட்டுச் சொன்னேன்” என, ரிபதனீரா தாமே எழுதியிருக்கிறார். சொன்னபடியே ஞானமுயற்சிகளைச் செய்தார். செய்து சேசுசபையில் நிலைபெற்று, அர்ச். இஞ்ஞாசியாருடைய மக்களில் மிகச் சிறந்தவர்களில் ஒருவராய் விளங்கினார். தன் வாழ்நாளெல்லாம் அர்ச். இஞ்ஞாசியாரை எவ்வளவு உருக்கமாய் நேசித்து வந்தாரென்றால், விருத்தாப்பிய காலத்திலே முதலாய் அர்ச்சியசிஷ்டவர் பெயரைக் கேட்டால், உள்ளம் பொருமி கண்களில் நீர் ததும்ப பிரலாபித்து நேச உச்சாரணம் செய்வார்.

## 8-ம் அதிகாரம்.

அர்ச். இஞ்ஞாசியாருடைய முதற்றோழர்களைப் பற்றிய சில விசேஷங்கள்—சீமோன் றொர்திரிகேஸ் சுவாமியார்—சிலகாலம் அவரால் அர்ச்சியசிஷ்டவர் அடைந்த வியாகுலம்—முத். பாபர் இராயப்பர் இத்தாலியா, ஜெர்மனியா, இஸ்பாஞ்ஞியா, போர்த்துகால் முதலிய தேசங்களில் செய்த நன்மைகள்—அவருடைய பாக்கியமான மரணம்—அர்ச். பிராஞ்சீஸ்கு போர்ஜியார் சேசுசபையில் உட்பட்டது—ஐர்லாந்து தீவுக்கு அனுப்பப்பட்ட நற்றாதர்கள்—திரிதெந்து நகரில் கூடிய திருச்சபை சங்கம்—இந்துதேசத்து அப்போஸ்தலர் இருதயத்தில் அர்ச். இஞ்ஞாசியார் மீதிருந்த வணக்க நேசம்—அப்போஸ்தலருடைய மரணம்.

### 1539—1552.

அர்ச். இஞ்ஞாசியாருடைய முதற்றோழர்களில் டியேகோ ஹோசஸ், கோதூர் என்பவர்கள் கடைசி மட்டும் உறுதியாயிருந்து, பாக்கியமான மரணமடைந்த விபரத்தை ஏற்கனவே கண்டிருக்கிறோம். மற்றவர்களிலும் ஒருவராகிலும் தவறிப்போக

வில்லை. **சீமோன் ரோதிரிகேஸ்** சுவாமியார் சில காலம் கீழ்ப்படிதலில் சற்றுக் குறைவாய் நடந்து, அர்ச்சியசிஷ்டவரை வெகுவாய் மனநோகப்பண்ணினாரென்றாலும், கடைசியில் அவரும் அர்ச்சியசிஷ்டவருக்கு முற்றும் கீழ்ப்படிதலுள்ளவராகி, அந்தியகாலமட்டும் ஸ்திரமாயிருந்தார்.

அர்ச். சவேரியாருடன் நமது இந்தியா தேசத்துக்குப் புறப்பட்டு வரும்படி போர்த்துகால் தேசத்துக்கு அனுப்பப்பட்டு, மூன்றாவது ஜோவாம் (Joam III) என்னும் அத்தேசத்தரசனது விருப்பத்தால் அங்குதானே நிறுத்திக்கொள்ளப்பட்ட இந்த ரொதிரிகேஸ் சுவாமியார், அர்ச். இஞ்ஞாசியாரால் அத்தேசத்திலுள்ள சேசுசபையாருக்கெல்லாம் '**ப்ரோவின்ஸியல்**' என்று சொல்லப்படும் தேசாதிபதி சிரேஷ்டராக நியமிக்கப்பட்டு, பன்னிரண்டு வருஷகாலமாய் இவ்வுத்தியோகத்தை வகித்து வந்தார். இதுகாலமெல்லாம் அரசன் அவர் மீது பேரன்புடையவராய், அவரை வெகு மேன்மை பாராட்டிவந்தார். அவர் ஆளுகையில் ஒப்புவிக்கப்பட்ட சேசுசபையாரும் அவரை மிகவும் மதித்து நேசித்து வந்தார்கள். ஆனால் அவருடைய நடபடிகளிலும், சபையாரை அவர் ஆண்டுவந்த விதத்திலும், சில விஷயங்கள், நற்கருத்தால் தூண்டப்பட்டவைகள்தானென்றாலும், சேசுசபையின் விசேஷ கதிக்கும் தன்மைக்கும், திவ்விய இஸ்பிரீத்துவின் ஏவுதலைப் பின்சென்று அர்ச். இஞ்ஞாசி



யார் அமைத்துக்கொடுத்த ஏற்பாட்டு சட்டங்களுக்கும் பொருந்தாதிருந்தன. இதனையும் இன்னும் வேறு சில காரணங்களையும் முன்னிட்டு, அவரை அவ்விடத்தை விட்டு வேறிடத்துக்கு மாற்றுதல் அவசியமென்று இஞ்ஞாசியார் தீர்மானித்தார். முன் ஓர் சமயம் ரொதிரிகேஸ் சுவாமியார் தென் அமெரிக்கா கண்டத்திலிருக்கும் **ப்ராஸீல்** (Brazil) என்னும் நாட்டுக்குப் போக விரும்பியிருந்தார். இஞ்ஞாசியார் இதை நினைவுகூர்ந்து, அவர் இஷ்டப்படி ப்ரஸீல் நாட்டுக்காவது, அல்லது இஸ்பாஞிய தேசத்திலுள்ள **அரகோன்** (Aragon) என்னும் நாட்டுக்காவது சிரேஷ்டராகப் போகும்படி கற்பித்து, அவருக்குப் பதிலாய் போர்த்துகால் தேசத்தில் 'ப்ரோவின்ஸியல்' சிரேஷ்டராயிருக்கும்படி **மீரோன் யாகப்பர்** (Diego Miron) என்னும் சுவாமியாரை நியமித்தார். மூன்றாவது ஜோவாம் அரசனால் இதற்கு விக்கினம் நேரிடாதிருக்கும்படி, தம் கருத்தையும் அதன் முகாந்திரங்களையும் விவரித்து, 1552-ம் ௵, ஜனவரி-௴, 1-௳ இராஜ சமுகத்துக்கு ஓர் கடிதம் எழுதினார். அரசனும் அர்ச்சியசிஷ்டவர் கருத்துக்கு உடன்பட்டார். ரொதிரிகேஸ் சுவாமியார் இஞ்ஞாசியாருடைய கட்டளையை அறிந்ததும், அதற்கு உடனே கீழ்ப்படிந்தார். மீரோன் சுவாமியாரும் 1552-ம் ௵, மே-௴ அவருடைய உத்தியோகத்தைக் கையேற்றுக்கொண்டார்.

இதற்குப்பின் ரொதிரிகேஸ் சுவாமியாருடைய எண்ணங்கள் என்னமோ வேறுபட ஆரம்பித்தன. போர்த்துகால் தேசத்தை விட்டு நீங்க மனமில்லாதவராய், அங்குதானே இருப்பதற்கான வழி தேடத்தலைப்பட்டார். அரசனுடைய சம்மதமின்றி தான் ஒன்றும் செய்யப்படாதென்று இஞ்ஞாசியார் தனக்கு கற்பித்திருந்ததாகச் சொல்லி, உத்தியோகத்தையும் தேசத்தையும் விட்டு மாற்றியது அரசனுக்கு சம்மதந்தானோவென்று, இராஜ சமுகத்துக்கெழுதிக் கேட்டார். அரசனுடைய சம்மதத்தோடு தான் எல்லாம் தீர்மானிக்கப்பட்டதென்றறிந்தும், ப்ரஸீல் நாட்டுக்காகிலும் அரகோன் நாட்டுக்காகிலும் செல்லுதற்கு தனக்கு வேண்டிய தேக சௌக்கியமில்லையென்று போக்குச்சொல்லி, கீழ்ப்படிய தாமதித்தார். லிஸ்பன் நகரை விட்டு, போர்த்துகால் தேசத்திலேயே கொயிம்பரா (Coimbara) என்னும் பட்டணத்துக் கலாசாலைக்குப் போனார். கலாசாலையில் அவர் சேர்ந்ததும் அங்குள்ள சுவாமிமார்களில் பலர் அவருடன் ஏகோபித்து, அவர் மனக்குறையை தங்கள் மனக்குறையாக்கி முறுமுறுத்துப் பேச ஆரம்பித்ததால், வெகு அலங்கோலக்கிடமாயிற்று. இஞ்ஞாசியாருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவருடைய பிரதிநிதியாய் அதிகாரம் பெற்றிருந்த **மிக்கேல் தோரஸ்** (Michael Torres) என்னும் சுவாமியார் இது விஷயத்தைக் கேள்வியுற்று,



தாமதியாமல் கலாசாலைக்குச் சென்று, உடனே அரகோன் நாட்டுக்குப் புறப்பட்டுப்போகும்படி ரொதிரிகேஸ் சுவாமியாருக்குக் கற்பித்தார். அரசனும் அவ்விதமே அவருக்குக் கற்பித்தார். ரொதிரிகேஸ் சுவாமியார் கீழ்ப்படிந்து குறித்த இடத்துக்குச் சென்றார். ஆனால் அவருடைய உற்ற தோழர்களிலொருவராகிய **கோமஸ்** சுவாமியாரும், அவரைப்போல் அதிருப்தியடைந்திருந்த வேறு சிலருமாக அரசன் அரண்மனைக்கேகி, இஞ்ஞாசியாருடைய நியமனத்துக்கு விரோதமாகப் பேசி, ரொதிரிகேஸ் சுவாமியாரைப் போர்த்துகால் தேசத்துக்கு திரும்ப வரவழைக்கும்படி அரசனுடைய சலுகையைத் தேடினார்கள். நல்லவேளை அரசன் அவர்களுடைய முறைப்பாடுகளையும் வேண்டுகோளையும் பராமுகம் செய்துவிட்டார். அப்படிச் செய்யாதிருந்தால், உலகத்தின் மற்ற பாகங்களிலிருந்த சேசுசபைக்கும், போர்த்துகால் தேசத்திலிருந்த சேசுசபைக்கும் ஏதோ பிரிவினைக்கிடமாயிருந்திருக்கலாகும்.

ரொதிரிகேஸ் சுவாமியாரோவென்றால், அரகோன் இராஜ்யத்தில் சேர்ந்ததும், இஞ்ஞாசியாருக்குக் கடிதத்துக்குமேல் கடிதமெழுதி, தம்மை திரும்ப போர்த்துகால் தேசத்துக்கு அனுப்பும்படி விண்ணப்பம் செய்தார். அர்ச்சியசிஷ்டவர் அவருடைய பலவீனத்துக்கிரங்கி, அருமையான தலைய

தாட்சணியத்துடன் அவருக்கு பதிலுரைத்தெழுதிய நிருபத்தை இங்கெடுத்துச் சொல்லுதல் நன்கென்றெண்ணுகிறோம்.

“நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வரப்பிரசாதமும் அவரது நித்திய நேசமும் நம்முடன் என்றுமிருப்பதாக!”

“தற்காலம் நீர் இருக்கும் இடம் உமது சௌக்கியத்துக்கு சரிபொத்துவரவில்லையென்றும், வியாதியால் வெகு துன்பப்படுகிறீரென்றும், அதனால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தின் கடமைகளை நிறைவேற்றக்கூடாதவராயிருக்கிறீரென்றும், 26-வ நீர் எழுதிய கடிதத்தால் அறிந்துகொண்டேன். இக்காரணங்களை முன்னிட்டு, யாதொரு உத்தியோகமுமின்றி போர்த்துகால் தேசத்துக்குத் திரும்பிப் போக அனுமதி கேட்கிறீர். ஆண்டவரிடமாய் சகலத்திலும், என்னாலியன்றமட்டும், உமக்கு சந்துஷ்டியும், திருப்திகரமும் வருத்துவிக்க எனக்கிருக்கும் ஆசை இவ்வளவென்றல்ல. ஆனதால் உமக்கு மன நிறைவு தரக்கூடியதென்று எனக்குத் தோன்றுவதை உமக்களிக்க எனக்கு ஆட்சேபனையில்லை. அன்றியும் தேக சௌக்கியம் உமக்கு வெகு குறைவாயிருப்பதாலும், அதேதுவால் வெளி முயற்சியுள்ள அலுவல்கள் செய்ய உம்மாற் கூடாதென்பதாலும், உமது மனதைத் திருப்திப்படுத்துதல் இன்னும் அதிகமாய் என்மேற் சுமந்த கடமை



யென்றெண்ணுகிறேன். ஆகையால் உமது விருப்பப்படியே, பொறுப்பான உத்தியோகம் யாதுமின்றி, போர்த்துகால் தேசத்துக்குத் திரும்பிப் போக உமக்கு உத்தரவு கொடுக்கிறேன். அது உமது ஜென்மநாடாகையால், உமது சௌக்கியத்துக்கு அதிக அநுகூலமாயிருக்கும். இதுகாலம் எவ்வளவோ கவலை முயற்சியுடன் நமது சபையின் அபிவிர்த்திக்காக பிரயாசையெடுத்து உழைத்து வந்தீர். அதுபோல் இனிமேலும், இன்னும் எவ்வளவுகாலம் நீர் இவ்வுலகில் உயிர்வாழ்ந்திருக்க வேண்டுமென்று நமது கர்த்தராகிய சர்வேசுரன் திருவுளமாயிருக்கிறாரோ, அதுகாலமெல்லாம் நமது சபைமூலியமாய் தேவதோத்திரமும் ஆத்துமாக்கள் இரட்சணியமும் வர்த்திப்படைந்து வரும்படியாக நீர் சர்வேசுரனை உருக்கமாய் மன்றாடி, உமது செப வேண்டுதல்களால் சபையைப் பரிபாலித்துவருதல் உமது அன்பின் கடமையாம். இவ்வித கருத்துடன், உமதாசைப்பிரகாரம் வேறு கவலை அலுவல் யாதுமின்றி, உமது ஆத்தும இரட்சணியத்துக்கடுத்தவைகளிலே சிந்தனையாய்க் காலம்போக்க உமக்கு அனுமதி தருகிறேன். சான் பெலிக்ஸ் (San Felix) * என்னும் இடம் உமது

* போர்த்துகால் தேசத்தில், கொயிம்பிரா பட்டணத்து சேசுசபைக் கலாசாலைக்கு சொந்தமான, வில்லா (Villa) என்று சொல்லப்படும் ஓர் கிராம மாளிகைக்கு சான் பெலிக்ஸ் (San Felix) என்று பெயர் வழங்கிவந்தது.

கருத்துக்கு எவ்வகையிலும் இசைந்த ஸ்தலமென்றெண்ணுகிறேன். ஆகாயம், தண்ணீர், நாட்டுத் தோற்றமெல்லாம் உமக்கு ஏற்றவைகளாயிருக்குமென நம்புகிறேன். மேலும் உமது ஆத்துமத்துக்கு ஆறுதலாக நீர் விரும்பும் ஏகாந்தமும் நேரமும் அங்கு உமக்குக் கிடைப்பதுமன்றி, உமக்கு இஷ்டமானபோது அவ்விடத்திலுள்ள சுற்றுப் பக்கங்களில் பிறருக்கு நன்மைசெய்யவும் சமயம் கிடைக்கும். ஆகையால் நீர் அவ்விடத்துக்குப் புறப்பட்டுப் போகலாம். உமது தேக சௌக்கியத்துக்கு வேண்டியவைகள் யாதொன்றும் குறைவின்றி சித்தம் செய்துவைக்கும்படி போர்த்துகால் தேச்சத்து 'ப்ரோவின்ஸியல்' சிரேஷ்டருக்கு எழுதுகிறேன். உம்மையடுத்த விஷயங்களில் ஆண்டவர் சமுகத்தில் எது நன்மையென்று உமக்குத் தோன்றுதோ, அதைச் செய்துவரலாம். உம்மைக் கண்டிக்கவோ, ஓரிடம் விட்டு வேறிடம் மாற்றவோ ஒருவருக்கும் அதிகாரமில்லை. என்னைத் தவிர, மற்றெவருடைய ஆலோசனை தீர்மானத்துக்கும் நீர் உட்பட்டவராயிருக்கப்படாதென்று, நீர் விரும்பிக் கேட்டுக்கொண்டது இதனால் நிறைவு பெற்றதென்று நினைக்கிறேன். போர்த்துகால் தேசத்திலிருந்து உம்மைப்பற்றி அநியாயமாய் சில காரியங்கள் எழுதப்பட்டனவென்றும், அவைகளை நான் உமக்கு அறிவிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறீர். இருபக்கத்திலும் ஏதோ குறைகள் இருக்



திருக்கலாம். எனது அபிப்பிராயத்தில் அவைகளைப்பற்றி சிந்தியாதிருப்பது உத்தமம். போனது போகட்டும். ஏனெனில் தகப்பன் மக்களைப்பற்றியாகிலும், மக்கள் தகப்பனைப்பற்றியாகிலும் மனநோவுக்கேதுவானவைகளை அறிதல் சந்தோஷமாயிராது. ஆயினும் ஒரு விஷயம் ஐயமின்றி உமக்கு நான் சொல்லக்கூடும். அதாவது: போர்த்துகால் தேசத்தில் யாவரும் உம்மேல் அன்புற்றிருப்பதாக எனக்கு எழுதியிருக்கிறார்கள். இதொன்றுமாத்திரம் நீர் அறிந்திருப்பது போதும்."

உரோமை, 1552-ம் ௵ டிசம்பர்-மீ 9-உ.

இந்நிருபம் எழுதியபோது, போர்த்துகால் தேசத்தில் கோமஸ் சுவாமியார் ரொர்திரிகேஸ் சுவாமியாருக்கு சனுவாய் எடுத்திருந்த கலகக் கோலத்தையும், அதனால் விளைந்த விபத்துக்களையும், பலர் தங்கள் சிரேஷ்டர்களுக்குக் கீழ்ப்படியமனமின்றி, "எனக்கு இந்த கட்டளை கொடுக்க உமக்கு அதிகாரமில்லை" "நான் இதைச் செய்ய வேண்டுமென்பது நியாயமல்ல," என்று முதலாய் தங்கள் சிரேஷ்டர்முன் வீம்புபேசி வந்ததையும் இஞ்ஞாசியார் இன்னும் அறியாதிருந்தார். அங்கு சகலமும் திரும்ப அமைதி பெற்றிருப்பதாகவே எண்ணியிருந்தார். ஆனால் அதிசீக்கிரம் மிக்கேல் தோரஸ் சுவாமியார் வழியாய் அவைகளை அறிந்து, உடனே தம் எண்ணத்தை மாற்றி, டிசம்பர்-மீ

17-ட ரொதிரிகேஸ் சுவாமியாருக்கு வேறோர் கடிதம் எழுதினார். அதில், தமது பெயரால் போர்த்துகால் தேசத்து "ப்ரோவின்ஸியல்" சிரேஷ்டர், அவருக்குத் துணையாக தாமே நியமிக்கும் மூன்று அல்லது நாலு சுவாமிமார்களுடன் கலந்துபேசி செய்யும் தீர்மானத்துக்கு ரொதிரிகேஸ் சுவாமியார் கீழ்ப்படியவேண்டுமென்றும், அவர்கள் எந்த இடத்தைக் குறிக்கிறார்களோ அந்த இடத்துக்குப் போகவேண்டுமென்றும் கற்பித்தார். அன்றியும் 'ப்ரோவின்ஸியல்' சிரேஷ்டர் மீரோன் சுவாமியாருக்கும் ஓர் நிருபம் எழுதி, அதில் எந்த சிரேஷ்டருக்காகிலும் கீழ்ப்படிய மனமில்லாதவர்களை உடனே சபையைவிட்டு நீக்கவேண்டுமென்றும், ஏதோ ஸ்தல மாற்றத்தால் யாராகிலும் திருந்துவார்களென்கிற நம்பிக்கையிருந்தால், அவர்களை தாமதியாமல் உரோமைக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்றும், 'பரிசுத்த கீழ்ப்படிதல் பெயரால்' (In virtute sanctæ obedientiæ) கண்டிப்பாய் கற்பித்தார்.* இக்கட்டளையை, அவசியமானால் அரசனுக்கும் அவர் குடும்பத்தார் சிலருக்கும் அறிவிக்கும்படி சொன்னார். இந்நிருபத்தின்

* மேலும் புது 'ப்ரோவின்ஸியல்' மீரோன் யாகப்பர் சுவாமியார் சபையாரை பிரிந்தின கண்டிப்பாய் நடத்திவந்ததும் இவ்வித கலகத்துக்கு ஒரு காரணமென்றறிந்து, கண்டிப்பை மட்டுப்படுத்தும்படி மேற்படி சுவாமியாருக்கும் இஞ்ஞாசியார் எழுதினார்.



கடைசி பாகத்தையாகிலும் இங்கெடுத்துரைப்பது யாவருக்கும் ஓர் சுகிர்த படிப்பினையாயிருக்கும்.

"அவசியமானால் இக்கட்டளையை அரசனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் அறிவியும். கர்த்தராகிய சர்வேசுரன் அவர்களுக்கு அளித்திருக்கும் நல்லறிவு நன்மனப்படி, அவர்கள் இதனை அங்கீகரித்துக்கொள்ளுவார்களென்று நான் நிச்சயமாயிருக்கிறேன். மெய்யாகவே, கீழ்ப்படிதலின் உண்மையான பிள்ளைகளல்லாதவர்களை வைத்திருத்தல், அவர்களுடைய இராஜ்யத்துக்கே நன்மையல்ல. இப்பேர்ப்பட்ட சந்நியாசிகள், இவர்களுடைய சொந்த ஆத்துமமே அவ்வளவு மரித்துப்போயிருக்க, பிறர் ஆத்துமத்தை இரட்சிப்பார்களென்றாவது, அல்லது சர்வேசுரன் இவர்களை தமது தோத்திரத்துக்காக பிரயோகிப்பாரென்றாவது நினைக்க இடமில்லை. மத்திபமான, இன்னும் தாழ்ந்ததரமான புத்தி சாமர்த்தியமுள்ளவர்கள் முதலாய், உண்மையான கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருந்து, சகல நன்மையின் ஊற்றாகிய சர்வ வல்லபருடைய திருக்கரத்தால் ஆண்டு நடத்தப்படும்படி தங்களைக் கையளித்துவிடுவதால், அநேக சமயங்களில் சுபாவத்துக்கு மேலான ஞான நன்மைகளைத் திரளாய் பயக்குவதற்கு மிகவும் தகுந்த கருவிகளாயிருக்கிறார்களென்பது அநுபவ சித்தியால் தெரிந்த விஷயம். அதற்கு விரோதமாய், புத்தி சாமர்த்தி

யத்தில் சிறந்த அநேகர் வெகு பிரயாசப்பட்டு உழைக்கிறதைக் காண்கிறோம். ஆயினும் அவர்கள் செய்யும் நன்மை சொற்பமே. ஏனெனில், அவர்கள் தங்களாலேயே,-தத்தம் சுயபட்சத்தாலேயே தூண்டி நடத்தப்படுகிறார்கள். எவ்விதமானாலும், அவர்கள் தங்கள் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிந்து, அந்தக் கீழ்ப்படிதல் வழியாய் சர்வேசுரனால் ஆண்டு நடத்தப்படும்படி தங்களை விட்டுவிடுகிறதில்லை. ஆனதால் அவர்கள் இயற்றும் பலனும் அவர்கள் நடக்கைக்கு ஒத்ததாகவே இருக்கின்றது. அதாவது: நமதாண்டவராகிய சர்வேசுரன் இவர்களை (தமது திருவுளத்தின்) கருவிகளாகத் தெரிந்துகொள்ளார் என்பதால், இவர்கள் இயற்றும் பலன் சர்வ வல்லபமுள்ள அவருடைய திருக்கரத்தின் செயலாயிருப்பதற்குப் பதிலாய், திராணியற்றதும் பலவீனமுள்ளதுமான இவர்களுடைய சொந்தக் கரத்தின் செயலாயிருக்கின்றது" என்று 1552-ம் ௵ டிசம்பர்-௴ 8-ம் ௳ எழுதினார்.

சில காலத்துக்குப்பின் இஞ்ஞாசியார் சீமோன் ரொதிரிகேஸ் சுவாமியாரை உரோமைக்கு வரவழைப்பதவசியமென்றெண்ணி, பின்வருமாறு எழுதினார்.

"சீமோன் ரொதிரிகேஸ், நமதாண்டவரிடத்தில் எனக்கு மிகவும் பிரியமுள்ள மகனே :—நீர் பெப்ரவரி-௴ 10-ம் தெய்தியிலும், மார்ச்சு-௴ 23-ம்,



26-ம் தெய்தியிலும், எப்பிரல்-௴ 12-ம் தெய்தியிலும் எழுதிய கடிதங்களையும், இதற்குமுன் எழுதிய வேறநேகக் கடிதங்களையும் கவனமாய் வாசித்து ஆராய்ந்து பார்த்தேன். போர்த்துகால் தேசத்திலிருக்கும் நமது சபையாருடைய அமரிக்கையையும் ஞான ஆறுதலையும் முன்னிட்டு, உம்மை உரோமைக்கு வரவழைப்பதவசியமென எனக்குத் திண்ணமாய் தோன்றுகின்றது. மேலும் நமது சபையின் அபிவிர்த்திக்கடுத்த விஷயங்களைப்பற்றி உம்மை நேரில் கண்டுபேசவேண்டியிருக்கின்றது. கடிதமூலமாய் இவ்விஷயங்களைப்பற்றி ஆலோசிப்பது சாத்தியப்படாது. ஆனதால் பயணத்தால் உமக்கு நேரும் களைப்பு வருத்தங்களைப் பாராமல், உம்மை உரோமைக்கு வரும்படி கற்பிக்க நமதாண்டவர் சமூகத்தில் தீர்மானித்திருக்கிறேன். இது முக்கியமான விஷயமாகையால், நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதர் பெயராலும், பரிசுத்த கீழ்ப்படிதல் பெயராலும் உமக்குக் கட்டளையிடுகிறேன். சௌகரியம்போல், கடல்மார்க்கமாகவோ தரை மார்க்கமாகவோ, அதிசீக்கிரம் இவ்விடத்துக்குப் புறப்பட்டு வரவேண்டும். ஆகையால், இக்கடிதம் உமக்குக் கிடைத்த எட்டாம்நாள் பிரயாணப்படுவீராக. தாமதம் வேண்டாம். பிரயாணத்தில் சர்வேசுரன் உமக்கு உதவியாயிருந்து, உம்மை வழி நடத்திவரவும், சகலரும் அவர் திருச்சித்தத்தை எப்போதும் அறிந்து நிறைவேற்ற வரப்

பிரசாதம் தந்தருளவும் அவரைப் பிரார்த்திக்கிறேன்."

**உரோமை, 1553-ம் ௵ மே-௴ 20-உ.**

இக்கட்டளையால், ரொதிரிகேஸ் சுவாமியார் ஆயாசப்படாதிருக்கும்படி, அத்தியந்த மதுர குணத்துடன் அவர் மனதைத் தேற்றி அதே தினத்தில் அவருக்கு வேறோர் கடிதமும் எழுதினார். அதற்குப்பின் ஜூலை-௴ 12-ல் திரும்பவும் ஓர் கடிதம் எழுதினார். அதனை இங்கெடுத்து தருகிறோம்.

"மகனே சீமோன், என் வாக்கை நம்பும். நீர் இவ்விடம் வருதல் உமது ஆத்துமத்துக்கும் என் ஆத்துமத்துக்கும் நமதாண்டவரிடத்தில் ஆறுதலை விளைவிக்கும்; சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக நாம் ஆசிப்பதெல்லாம் நிறைவு பெறும் * * * உமதுமேல் எனக்கு அதிகாரமில்லாதிருந்த காலத்தில் முதலாய், நான் விரும்பியதை செய்துவந்தீர் என்பதை நினைத்துக்கொள்ளும். நான் உம்மை போர்த்துகால் தேசத்துக்கு அனுப்பியபோது, நீர் முறைக்காய்ச்சலால் வருந்திக்கொண்டிருந்தாலும், தாமதியாமல் சந்தோஷமாய்ப் புறப்பட்டுப் போனீரல்லவா! சர்வேசுரனும் உமக்கு ஆரோக்கியம் தந்தருளினாரல்லவா! இப்பொழுதோவெனில். உமக்கு அவ்வளவு கடினமான வியாதியில்லையே. ஆகையால் முன்னிலும் எவ்வளவோ அதிக தீவிரத்துடன் கீழ்ப்படியவேண்டும்!

"மகனே சீமோன், உடனே பிரயாணப்படும். சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக, ஆத்தும சௌக்கியமும் சரீர சௌக்கியமும் இங்கு நமக்கு அருளப்படுமென்று நிச்சயமாயிரும். நம்பிக்கையுடன் எல்லாம் என் கையில் விட்டுவிடும். அப்படிச் செய்வீரேயாகில், நமதாண்டவரிடமாய் நீர் திருப்தியடைந்திருப்பீர்."

**உரோமை, 1553-ம் ௵ ஜூலை-௴ 12-உ.**



கடைசியாய் சீமோன் ரொதிரிகேஸ் சுவாமியார் அர்ச். இஞ்ஞாசியாருக்குக் கீழ்ப்படிந்து, உரோமைக்குப் பிரயாணமாய்ப் புறப்பட்டு, 1554-ம் ௵ ஜூலை மாதம் அங்கு சேர்ந்தார். **கீழ்ப்படிதலின் பேரில்** அர்ச். இஞ்ஞாசியார் எழுதிய பேர்போன ஓர் நிருபத்தைப்பற்றி முந்தின அதிகாரத்தில் சொன்னோமே. மேற்சொல்லப்பட்ட விஷயங்கள்தான் அந்நிருபத்தை எழுதும்படி அர்ச்சியசிஷ்டவரைத் தூண்டியதாகத் தெரியவருகின்றது.

ரொதிரிகேஸ் சுவாமியாருடைய நடபடிகள் சில காலம் அர்ச்சியசிஷ்டவருடைய மனதை வெகுவாய் சோகப்பண்ணினவென்றாலும், அவருடைய மற்றத் தோழர்களுடைய நடபடிகள், விசேஷமாய் முத். பாபர் இராயப்பர், அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் முதலியவர்களுடைய நடபடிகளும் வீரத்

தன்மையான புண்ணியங்களும் அவர் என்றும் அகமகிழ்ந்தானந்தித்து சர்வேசுரனை ஸ்துதிக்கும்படிச் செய்தன.

முத். பாபர் இராயப்பர், லேய்னாஸ் சுவாமியாருடன், இத்தாலியாவிலுள்ள **பார்மா** (Parma) என்னும் மேற்றிராசனத்துக்கு அர்ச். பாப்பானவரால் 1539-ம் ௵ அனுப்பப்பட்டு, இரு வருஷகாலமாய் (1540-ம் வருஷம் செப்டெம்பர்-௴ மட்டும்) பட்ட அரும் பிரயாசத்தினால் அவ்விடத்தில் திரளான ஞான நன்மை விளைவித்து, ஜனங்கள் இருதயத்தில் சீர்திருத்தமும் தேவபக்தியும் வர்த்திப்படையச் செய்தார். தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆத்துமாக்களுக்கு அர்ச். இஞ்ஞாசியாருடைய **ஞானமுயற்சிகளைப்** போதித்து, புண்ணிய சாங்கோபாங்க நெறியில் அவர்களை ஸ்திரப்படுத்தி நடப்பித்து வந்தார். இவர்களுள், நமது இந்துதேசத்துக்கு வந்து வேதம் போதித்து, சத்தியவேதத்துக்காக தமது இரத்தத்தை சிந்தி மரித்து, **சேசுசபையின் முதல் வேதசாட்சி** என்று ஸ்துதிக்கப்பெற்ற **வணக்கத்துக்குரிய அந்தோனி கிரிமினாலி** (Ven. Antonio Criminali, S.J.) என்னும் குருவானவர் ஒருவர். 1520-ம் ௵ பெப்ரவரி-௴ 7-ம் தேதி பார்மா மேற்றிராசனத்தைச் சேர்ந்த சிஸ்சா (Scissa) என்னும் ஊரில் பிறந்த இவர், அப்பொழுது இருபது பிராயமுள்ள வாலனாய், பார்மா பட்டணத்தில் குருப்பட்டத்துக்காக வேத



சாஸ்திரம் படித்துக்கொண்டிருந்தார். புத்தி சாமார்த்தியத் திறமையிலும், மேலான புண்ணிய பயிற்சியிலும் சிறந்தவராயிருந்தமையால், பதினெட்டு வயதாகு முன்னமே 'சப்டீக்கன்' என்று சொல்லப்படும் ஐந்தாவது பட்டம்பெறப் பாத்திரவானென்று மதிக்கப்பட்டார். பாபர் இராயப்பரிடத்தில் ஒரு மாதமுழுதும் ஒடுக்கத்திலிருந்து, **ஞானமுயற்சிகளைச்** செய்து தேவசிநேகமும் பிறர் ஆத்தும ஈடேற்றத்தின்மேல் அணைகடந்த ஆவலும் மேன்மேலும் பற்றியெரியும் இதயனானார். சேசுசபையில் பிரவேசிக்க ஏற்கனவே தீர்க்கெண்ணம் கொண்டிருந்தார்.*

---

*. வணக்கத்துக்குரிய அந்தோனி கிரிமினாலி சுவாமியார் 1545-ம் ௵ செப்டெம்பர்-௴ 2-ம் ௳ நமதுநாட்டில் வேதம் போதிப்பதற்காக கோவா நகரில் வந்து சேர்ந்தார். கன்னியாகுமரி முதலிய கடற்கரைப் பக்கங்களில் வேதம் போதித்துவந்த குருக்களுக்கு அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் அவரை சிரேஷ்டராக நியமித்தார். கன்னியாகுமரி, புன்னைக்காயல், மணப்பாடு, இராமேஸ்வரம், பாம்டன் முதலிய இடங்களெல்லாம் அவர் காலடி பதிந்த இடங்களே. அர்ச். இஞ்ஞாசியாரால் சேசுசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சில காலம் அவர் அருகிலிருந்து, புண்ணிய பயிற்சியில் தேர்ந்து இத்தேசத்துக்கு வந்த இவ்வுத்தம குரு 1549-ம் ௵ பாம்பன் கால்வாய்க்கு மேற்கே வேதாளைக் கிராம எல்லையில் வேதசாட்சியாகத் தமது இரத்தத்தைச் சிந்தி மரணமடைந்தார். "சேசுசபையின் முதல் வேதசாட்சியாகிய வணக்கத்துக்குரிய அந்தோனி கிரிமினாலி என்னும் குருவானவரின் சரித்திரச் சுருக்கம்" என்று திருச்சினாப்பள்ளி,

'புரோட்டெஸ்டாண்டு' என்னும் பதித மார்க்கம் உற்பத்தியான ஜெர்மானியா தேசத்தில், விற்றன்பெர்க் (Wittenberg) என்ற பட்டணத்தில், 1539-ம் வருஷம் மாரிகாலத்தில் மகா விபரீதமான பத்திரம் ஒன்று எழுதப்பட்டு, மெலாங்த்றன், லுத்தேர், புட்ஸர் (Melanchthon, Luther, Buthzer) முதலிய பதிதமதத் தலைவர்களால் அங்கிகரிக்கப்பட்டு, அவர்களுடைய கையொப்பமும் பெற்றது. இப்பத்திரத்தால் ஹெஸ்ஸே என்னும் நாட்டின் அதிபதியாகிய பிலிப்பு (Philip, Landgrave of Hesse) என்பவன், தம் மனசாட்சியில் அமரிக்கையுற்றிருக்கும்படியாக இரண்டு மனைவிகள் வைத்துக்கொள்ளலாமென்று மேற்சொன்ன திரிகர்த்தாக்கள் கூசாமல் உத்தாரம் அளித்தார்கள். 1540-ம்௵ செப்டம்பர்-௴ பாபர் இராயப்பர் பார்மா மேற்றிராசனத்தைவிட்டுப் புறப்பட்டு, அதே வருஷம் ஒக்டோபர்-௴ 24-௳ பதித மார்க்கத்தால் இப்படி இழிவடைந்திருந்த ஜெர்மானிய தேசத்தில் வந்துசேர்ந்து, ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக அளவற்ற பிரயாசப்பட்டார். சத்திய விசுவாசம் மாட்சிமைபெற்றிலங்கிய இப்பெரும் இராஜ்ஜியம் இப்போது பதித மாய்கையில் மூழ்கிக் கிடப்பதை நினைத்து மனம்நொந்து பிர

அர்ச். சூசையப்பர் கலாசாலை அச்சுக்கூடத்தில் பிரசுரமான சிறந்த சிறு புஸ்தகத்தில் இவரைப்பற்றி அநேக விர்த்தாந்தங்களைக் காணலாம்.



லாபித்தார். 1541-ம்௵ ஜூலை-௴ 27-௳, அர்ச். இஞ்ஞாசியார் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இஸ்பாஞ்ஞியா தேசத்துக்குப் புறப்பட்டார். லூஜே, போபாதில்லா என்பவர்கள் அவருக்குப் பதிலாய் ஜெர்மானியா தேசத்துக்கு அனுப்பப்பட்டார்கள். பிரான்ஸு தேசத்தவரான லூஜே சுவாமியார் வெகு தைரியமாய் ஜெர்மானியருடைய அவிசுவாசத்தையும் ஒவ்வா நடத்தைகளையும் கண்டித்துப் பிரசங்கம் செய்துவந்தார். அன்னிய தேசத்திலிருந்து வந்த இவர் நம்மைக் கண்டித்துப் பேசத் துணிந்ததேதென்று கோபங்கொண்ட ஜெர்மானியர் அவரை ஆற்றில் எறிந்துவிடுவதாகச் சொல்லி பயமுறுத்தினார்கள். அவரோவெனில் சற்றும் அஞ்சாமல், "மோசமென்ன! பரலோகத்தில் நான் தரை மார்க்கமாய்ப் போய்ச் சேர்ந்தாலென்ன! ஜலமார்க்கமாய்ப் போய்ச்சேர்ந்தாலென்ன!" என்றார்.

ஜெர்மானிய தேசத்தைவிட்டு இஸ்பாஞ்ஞிய தேசத்துக்குச் சென்ற பாபர் சுவாமியார் போகும் இடமெல்லாம் பரலோக ஒளிவீசும் வான தூதனைப் போல் விளங்கினார். இஸபெல்லா இராக்கினியின் மரண விசேஷத்தைச் சிந்தித்து, உலக வாழ்வின் மீது நாளுக்குநாள் அதிக வெறுப்புற்று, தேவ ஊழியத்தை ஆவலுடன் நாடியிருந்த அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார், அவரைக் கண்ணுற்றதும் அவர்மேல் மிக்க அன்புடையவராய், தம் உள்

ளத்தில் நிகழ்ந்தவைகளையெல்லாம் அவரிடத்தில் தாராளமாய்ச் சொல்லி, அவருடன் அன்னியோன்னிய நண்பரானார். பாபர் சுவாமியார் இஸ்பானிய தேசத்தில் வெகுகாலமிருக்கவில்லை. அதிசீக்கிரம் அவ்விடத்தைவிட்டு ஜெர்மானிய தேசத்துக்குத் திரும்பிப்போகும்படி இஞ்ஞாசியார் அர்ச். பாப்பானவருடைய விருப்பத்தால் அவருக்குக் கட்டளையனுப்பினார். இன்னும் சிலகாலம் அங்கிருக்கும்படி அரசகுடும்பத்தார் முதலாய் அவரை மன்றாடினார்கள். என்றாலும், பாபர் சுவாமியார் கட்டளைக்கு தீவிரமாய்க்கீழ்ப்படிந்து 1542-ம் ௵ எப்பிரல்-௴ 13-௳ ஜெர்மானிய தேசம் சேர்ந்தார். 1543-ம் ௵ ஜனவரி-௴ மேய்ன்ஸ் (Mainz) என்னும் பட்டணத்தில் அவர் பிரசங்கங்களைக் கேட்கவந்தவர்களுக்குள் சுமார் இருபத்துமூன்றுபிராயமுள்ள வாலர் ஒருவரிருந்தார். இவர் தான், பிற்காலத்தில் வாக்கினாலும், எழுதின புஸ்தகங்களினாலும், செய்த எண்ணிறந்த பிரயத்தனங்களாலும், ஜெர்மானியதேசத்தின் பலவிடங்களில் பதிதமார்க்கம் தலையெடுக்கவொட்டாமல் அடக்கினதால், “ஜெர்மானிய தேசத்தின் சம்மட்டி” என்றழைக்கப்படும், அர்ச். கனிசியுஸ் இராயப்பர் (St. Peter Canisius, S.J.). தற்சமயம் தமது தந்தை மரண அவஸ்தையாயிருப்பதாகக் கேள்வியுற்று, அவரண்டை தீவிரித்துச்சென்றார். ஆனால் கடைசி தேவத்திரவிய அநுமானங்களைப் பெறுமுன் அவர் மரணமாய்ப்



போனதாலும், அவருடைய சீவியமோ யோக்கியமானதுதானென்றாலும், அநேகமாய் பரலோகத்தைச் சிந்தியாமல் இகலோகத்தை நாடியதாயிருந்ததாலும், கனிசியுஸ் இராயப்பர் அவருடைய ஆத்தும இரட்சணியத்தைப்பற்றி வெகு கிலேசமுற்று வருந்தினார். ஆனால் தமது தந்தையும், அவருக்கு முன்னமே மரணமாய்ப்போயிருந்த தமது தாயாரும் தேவகிருபையால் நித்திய ஈடேற்றம் அடைந்ததாக அன்றிரவில் அற்புதமாய் அறிந்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கியவராய் சர்வேசுரனை ஸ்துதித்து தந்தை தமக்கு விட்டுப்போன திரண்ட ஆஸ்திகளையெல்லாம் தரித்திரர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து, பாபர்சுவாமியார் கையில் தம்மை ஒப்புக்கொடுத்து சேசுசபையில் உட்பட்டார்.

ஜெர்மானிய தேசத்தில் ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக வெகு பிரயத்தனப்பட்டு எவரும் வியக்கத்தக்க அநுகூலத்துடன் உழைத்துவந்த பாபர் இராயப்பர், அர்ச். இஞ்ஞாசியாருடைய கட்டளைக்கு திரும்பவும் உற்சாகமாய்க் கீழ்ப்படிந்து போர்த்துகால் தேசத்துக்குப் புறப்பட்டு, 1544-ம் ௵ ஆகஸ்டு-௴ அத்தேசத்தில் சேர்ந்தார். மறுவருஷம் மார்ச்சுமாதத் துவக்கத்தில் திரும்பவும் இஸ்பானிய தேசத்துக்கு அனுப்பப்பட்டார். இது சமயம் அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார், தம் மனைவி லெயோனோரா அம்மாள் மரணமாய்ப் போனதால், முன் தாம் சர்வேசுரனுக்குக்கொடுத்த

வார்த்தைப்பாட்டுப்படி துறவற அந்தஸ்தில் பிரவேசிக்க ஆவலுற்றிருந்தார். ஏற்கனவே இருதரம் அர்ச். இஞ்ஞாசியாருடைய **ஞானமுயற்சிகளைச்** செய்துமுடித்திருந்தார். இப்பொழுது மூன்றாந் தரம் அவைகளை பாபர் சுவாமியாரிடத்தில் செய்து முடித்தார். செய்துமுடித்து, சர்வேசுரன் தம்மை சேசுசபைக்கழைப்பதாகத் தெளிவாய் அறிந்து, அதில் உட்படத் தீர்மானித்தார்.

வெகுகாலம் விசுவாசிகள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த **திருச்சபை பொதுச்சங்கம்** (Œcumenic Council) கடைசியாய் 1545-ம் ௵ மாரிகாலத்தில் **திரேந்து** (Trent) என்னும் பட்டணத்தில் கூட ஆரம்பித்தது. மூன்றாம் பவுல் என்னும் அர்ச். பாப்பானவர் தமது பேரால் இச்சங்கத்தில் வேதசத்தியங்களை விரித்துரை செய்யும் வேதாசிரியர்களாக **லேய்னஸ், சால்மரோன்** சுவாமிமார்களையும், அவர்களோடு பாபர் சுவாமியாரையும் நியமித்தார். அர்ச். பாப்பானவர் கருத்துப்படி உடனே இஸ்பானிய தேசத்தைவிட்டுப் புறப்பட்டு வரும்படி அர்ச். இஞ்ஞாசியார் அவருக்குக் கற்பித்தார். பாபர் இராயப்பரோவெனில், வயது இன்னும் நாற்பதுக்குமேல் ஆகவில்லையென்றாலும், ஓயாமற்செய்துவந்த எவ்வித உபத்திரவமும் துன்பமும் நிறைந்த நெடும் பிரயாணங்களாலும், சர்வேசுரனுடைய அதிமிகதோத்திரத்தையும் ஆத்துமாக்களின் இரட்சணியத்தையும் நாடிப்பட்ட அரும் பிரயாசை



வருத்தங்களாலும் உடல்மெலிந்து, காய்ச்சல்கண்டு வெகு பலவீனமுற்றிருந்தார். அவரிருந்த ஸ்திதியைப்பற்றி அர்ச். இஞ்ஞாசியார் கேள்வியுற்று, சற்று தாமதித்துப் புறப்படலாமென்றெழுதினார். வியாதியின் அகோரம் கொஞ்சம் தணிந்ததும், பிரயாணப்படத் தீவிரித்தார். இந்த ஸ்திதியில் பிரயாணம் செய்தல் உயிருக்கே ஆபத்தாயிருக்குமென்று சிலர் அவரைத் தடுக்கப் பார்த்தார்கள். அவரோவென்றால்: "**ஜீவிப்பது அவசியமில்லை, ஆனால் கீழ்ப்படிவது அவசியம்**" என்று சொல்லி உடனே கப்பலேறி, யாத்திரையில் திரும்பவும் காய்ச்சலால் மிகவருந்தி, 1546-ம் ௵ ஜூலை-மீ 17-ம் ௳ உரோமாபுரியில் சேர்ந்தார். ஆறுவருஷத்துக்குப்பின் தம் அருமைத் தந்தையையும் மற்றும் சுவாமிமார்களையும் திரும்ப கண்ணுற்றடைந்த மனமகிழ்ச்சியினால், பாபர்சுவாமியார் சிலநாள் வியாதி நீங்கி ஆரோக்கியமடைந்தவராகக் காணப்பட்டார். இஞ்ஞாசியாரும் அவரைக் கண்ணுற்று, அன்பே பிரவாகமானாற்போல், ஆனந்த பாஷ்பம் சொரிந்தார். ஆயினும் பாபர் சுவாமியார் உடலை உருக்கி வந்த காய்ச்சல் திரும்பவும் அகோரித்தெழும்ப, "**சீவியமோ மரணமோ, நான் உம்மைப் பின் செல்லுவேன்**" என்று அர்ச். இஞ்ஞாசியார் கரத்தில் சர்வேசுரனுக்கு தம்மை ஒப்புக்கொடுத்து அவர் சொற்படி சகலத்திலும் நடந்துவந்த இந்த மகாத்துமா, அவர் கரத்திலேயே சில தினத்துக்குள்,

1546-ம்௵ ஆகஸ்டு-௴ 1-ம்௳ பாக்கியமாய் மரித்தார். சர்வேசுரனுக்கு மிகவும் உகந்த அவருடைய பரிசுத்த ஆத்துமம் அநித்திய துன்பத்தினின்று நித்தியபேரின்ப தரிசனத்துக்குச் சென்றது.

அர்ச். இஞ்ஞாசியாருடைய ஞானப்புதல்வர்களில் மூத்தவராகிய இந்த பாபர் இராயப்பருடைய பரிசுத்த சீவியத்திலுள்ள விஷயங்களை விரிவாய் எடுத்துரைத்தல் அத்தியந்த மனோகரமாகவும், இவ்வளவோடு போதுமென்று நிறுத்துதல் ஏதோ சலிப்பாகவும் இருக்கின்றது. உருக்கமான தேவபக்தி தேவநேசம் நிறைந்திருந்த அவர் இருதயம் எச்சமயத்திலும் எவ்விடத்திலும் தேவசன்னிதியை ஆவலாய் நாடித்தேடும்;—பரலோகத்தை பார்த்த கண்ணாகவே இகலோகத்தில் சீவித்துவந்தார். “பரலோக பிதாவே, நல்ல இஸ்பிரீத்துவை எனக்குத் தந்தருளும்” (Pater cœlestis, da mihi Spiritum bonum) என்னும் மனவல்லய ஜெபத்தை அடிக்கடி மனதில் சொல்லிவருவார். காவற்சம்மனசுக்கள்மேல் வெகு விசேஷ பக்தியுடையவராயிருந்தார். யாதாமோர் ஊருக்குள் செல்லுமுன், அவ்வூர்க் காவற்சம்மனசுவின் உதவியை மன்றாடிய பின் தான், ஊருக்குள் காலெடுத்துவைப்பார். யாதாமொருவருடன் சம்பாஷிக்குமுன்னும், அவருடைய காவற்சம்மனசை மனதில் சிந்தித்து பிரார்த்தித்துக்கொண்ட பின்தான், சம்பாஷிக்கத் துவ



க்குவார். பிரகாசத்தின் பிதாவிடம் நின்று தம். இருதயத்துக்கு ஞானஒளி பெற்றுத்தரவேண்டுமென்று, பிதாவின் திருமுகத்தை ஓயாமல் தரிசித்துநிற்கும் காவலான இத்தேவ தூதர்களை என்றும் மன்றாடிவருவார். சர்வேசுரனுடைய அதிமிகத் தோத்திரத்தைக் கண்முன்வைத்து, எவ்வித ஆபத்துக்கும் விபத்துக்கும் அஞ்சாத் தைரியமும், எவரையும் அன்புற்றரவணைத்து, ஒருவரையும் மனநோகப்பண்ணாது யாவரையும் மனமகிழச் செய்யும் மதுரகுணமும் அமையப்பெற்றவர். இவ்வித அஞ்சாத் தைரியத்தாலும் மதுரகுணத்தாலும் ஓர் சமயம் பிரயாணத்தில் ஓர் கள்ளர் கூட்டம் அத்தனையையும் முற்றுந்திருப்பி நல்வழி சேர்த்தார்.*

“அடிக்கும் ஒருகை, அணைக்கும் ஒருகை” என்றபடி, பாபர்சுவாமியாரை இகலோகத்தினின்றழைத்து அர்ச். இஞ்ஞாசியாருடைய இருதயத்தில் வியாகுலம் மிகச்செய்த தேவதிருக்கரம் அதே சமயத்தில் பாபர் சுவாமியாருக்கிணையான ஒருவரை அவருக்கு ஞானப்புதல்வராகத்தந்து அவர் மனம் ஆறுதலடையச் செய்தது. ஏற்கனவே அர்ச். இஞ்ஞாசியாரைத் தம் உள்ளத்தில் சங்கித்து நேசித்து, பாபர் இராயப்பருடன் அன்னியோன்னிய நேசமா

* 1872-ம்௵ செப்டெம்பர்-௴ 5-௳, ஒன்பதாம் பத்திநாதர் (Pius IX) என்னும் அர்ச். பாப்பானவரால், பாபர் இராயப்பர் சுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றவர் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது.

யிருந்த அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் இதுசமயம் தம்மைச் சேசுசபையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம்செய்து, அர்ச். இஞ்ஞாசியாருக்கு கடிதம் எழுதினார். அர்ச்சியசிஷ்டவர் இக்கடிதத்தைக்கண்டு ஆச்சரியப்படவில்லை. அதிலடங்கிய சுப செய்தியை வெகுகாலத்துக்கு முன்னமே பரலோக ஏவுதலால் அறிந்திருந்தார். அதிசீக்கிரம் அர்ச்சியசிஷ்டவர் அவருக்குப் பதிலெழுதி, தாம் அவரை சேசுசபையில் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டதாக தெரிவித்தார். ஆனால் அவருடைய மக்கள் தகுந்த பிராயமடைந்து, ஓர் அந்தஸ்தில் நிலைவரம் பெறுமட்டும் அவர்களோடிருந்து அவர்களுக்காகக் குடும்ப விஷயங்களை நடத்திவருதல் போர்ஜியாருடைய கடமையென்றுணர்ந்து, அவர் இன்னும் சிலகாலம் தம்மாளிகையிலிருந்து வழக்கம்போல் குடும்பக் காரியங்களை நடத்திவரவேண்டுமென்றும், அவர் சேசுசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது இன்னும் உலகத்துக்கு பிரசித்தமாகப்படாதென்றும் எழுதினார். அர்ச். பாப்பானவருடைய விசேஷ அனுமதியால் பிரான்சீஸ்கு போர்ஜியார் தமது மாளிகைக் கோவிலில் அரவோஸ் என்னும் சுவாமியாரிடத்தில் இரகசியமாக சேசுசபை வார்த்தைப்பாடு கொடுத்து, உண்மையாகவே சேசுசபையைச் சேர்ந்தவராகவும், உலகத்தின்கண் சிலவருஷகாலம் முன்போல் காந்தியாநாட்டுப் பிரபுவாகவும் ஜீவித்துவந்தார்.



முத். பாபர் இராயப்பர் ஜெர்மானிய தேசத்தில் பதிதவிஷக் கொடுமையினின்று ஆத்துமாக்களை இரட்சிப்பதில் முயற்சியாயிருந்த காலத்தில், பாஸ்கேஷியுஸ், சால்மரோன் சுவாமிமார்கள் ஐர்லாந்து (Ireland) என்னும் தீவில், சத்தியமறை விசுவாசத்தின் நிமித்தம் எவ்வித துன்பத்துக்கும் உள்ளாயிருந்த கத்தோலிக்கு கிறீஸ்துவர்களையும், குருக்களையும் அர்ச். பாப்பானவர்பேரால் சந்தித்து திடப்படுத்தும் நற்றூதர்களாக அனுப்பப்பட்டார்கள்.

கொடுங்கோலன் எட்டாவது ஹென்றி (Henry VIII) என்னும் இங்கிலாந்து தேசத்தரசன், இரத்ததாகம் கொண்ட கொடும் வேங்கைபோல், மண்ணுயிரை எண்ணாமல் இரக்கமின்றி மாய்த்துவந்த நிஷ்டூரகாலம் அது. இலஜ்ஜைக் கேடான ஓர் நிசிதபாசத்தின் நீச அடிமையாய், அதனை நிறைவேற்றுவதற்காக, அர்ச். பாப்பானவருக்கு கீழ்ப்படியாமல் அவர் அதிகாரத்தை மீறி நடந்த இந்த காமாதுரனை திருச்சபைக்குத் தலைவராக ஏற்றுக்கொள்ளாமல் சத்திய விசுவாசத்தில் உறுதியாயிருந்ததின் நிமித்தம், தேவ திரு அருளின் சிறந்த நன்கொடையென விளங்கிய முத். பிஷர் அருளப்பரும் (Bl. John Fisher) முத். தோமாஸ் மூவர் (Bl. Sir Thomas More) என்பவரும், இவர்களைப்போன்ற வேறனேக மகாத்துமாக்களும் கழுமரத்தில் மாண்டார்கள். நாகரீகமற்ற காட்டு

மனிதர்களுக்குள்ளே முதலாய் காண்பதரிதான குரூர வாதைகளால் உயிர் வதைக்கப்பட்டார்கள். இக்கொடுங்கோலனுடைய நிஷ்டூர செயல்களின் எதிரொலி, அவன் அநீதமாய் கைப்பற்றி ஆண்டு வந்த ஐர்லாந்திலும் சப்தித்தது. அத்தீவில் நாட்டாண்மை வகித்துவந்த பிரபுக்களுள் அநேகர் பொருளாசையினால் மதிமயங்கி, தங்கள் மனச்சாட்சியை விலைமதிசெய்து சிதேவியைவிட்டு மூதேவியைக் கும்பிட்டாற்போல், திருச்சபையின் மெய்யான மேய்ப்பனை அர்ச். பாப்பானவரை மீறி, கொடுங்கோலன் ஹென்றியை திருச்சபைத் தலைவரென்று அக்கிரமமாய் அங்கீகரித்துக்கொண்டார்கள். என்றாலும் மேற்றிராணிமார்களும் குருக்களும் ஜனங்களும் ஒருங்குடன் சத்தியவிசுவாசத்தில் உறுதியாய் நின்று, அர்ச். பாப்பானவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். மூன்றாம் பவுல் என்னும் அர்ச். பாப்பானவர், இப்படி துன்பத்தின் கையில் உழன்று வருந்திய தம் மக்கள்மேல் சித்தமிரங்கி, அவர்களுக்குத் தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றி அவர்களைத் தேற்றித் திடப்படுத்தும்படியாக, தமது ஸ்தானாபதிகளாக மேற்சொன்ன பாஸ்கேஷியுஸ், சால்மரோன் என்னும் சுவாமிமார்களைத் தெரிந்தனுப்பினார்.

சுதேசக்குருக்களே ஒளிவிடங்களில் மறைந்திருந்து, தங்கள் உயிரை வெறுத்து தேவத்திரவிய அநுமானங்களை நிறைவேற்றி வந்த அக்கொடிய



காலத்தில், அர்ச். பாப்பானவருடைய ஸ்தானாபதிகளாய் அவருடைய கையொப்ப முத்திரை பதிந்த அதிகாரப் பத்திரங்களுடன் கொடுங்கோலன் இராஜ்யத்தை நோக்கிப் புறப்பட்ட அந்நியதேசத்தாராகிய இவ்விருவரும் தங்கள் உயிரை ஏற்கனவே சர்வேசுரனுடைய திருக்கரத்தில் பலியாக நேர்ந்து ஒப்புக்கொடுத்துவிட்டுத்தான் புறப்பட்டார்களென்று சொல்லவும் தேவையா! சர்வேசுரனுடைய அதிமிகத் தோத்திரத்தை முன்னிட்டு எவ்வகை ஆபத்துக்கும் அஞ்சாநெஞ்சர்களாய், ஸ்காட்லண்டு (Scotland) தேசம் வழியாய்ப் பிரயாணம் செய்து, 1542-ம் ௵, தபசுகாலத் துவக்கத்தில் ஐர்லாந்தில் சேர்ந்தார்கள். மாறுவேஷம் பூண்டு முப்பத்துநாலு நாட்களுக்குள் தீவெங்கும் சுற்றித் திரிந்து, விசுவாசிகளுக்கு அர்ச். பாப்பானவர் பேரால் தேற்றரவுசொல்லி, விசேஷ ஞான நன்மைகள் அநேகம் அவர்களுக்களித்து, சத்திய வேதாநுசாரத்தில் அவர்களை உறுதிப்படுத்தினார்கள். அர்ச். பாப்பானவருக்கு கீழ்ப்படிந்திருந்த குருக்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுக்கு தங்க இடம் கொடுத்தவர்களுக்கும் உயிர்ச் சேதமும் பொருள்சேதமும் கொடுங்கோலனால் விதிக்கப்பட்டிருந்தமையால், இவ்விருவரும் தங்களால் மற்றவர்களுக்கு மோசம் வராதபடி, ஒரே இல்லிடத்தில் இரண்டிரவு தங்கியிருக்கத் துணியவில்லை. அவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாயிருந்தாலும்,

அவர்களுடைய வரவைப்பற்றி கொடுங்கோலனுடைய தூதுவர்கள் அதிசீக்கிரம் கேள்விப்பட்டு, அவர்களைக்காட்டிக் கொடுப்பவர்களுக்கு வெகுமதியாக ஓர் பெருந்தொகையுங் குறிப்பிட்டு விளம்பரம் செய்தார்கள். அர்ச். பாப்பானவர் இதனை அறிந்து, உடனே அத்தேசத்தைவிட்டு திரும்பிவரும்படி அவர்களுக்குக் கற்பித்தார். அவர்களும் கீழ்ப்படிந்து ஸ்காட்லன்டு வழியாகவே திரும்பினார்கள்.

பிரான்ஸு தேசத்துக்கும் இஸ்பாஞிய தேசத்துக்கும் இதுசமயம் போர் ஆரம்பித்திருந்தது. ஐர்லாந்து தேசத்திலிருந்து திரும்பின இவ்விருவரும் பிரான்ஸு தேசத்திலுள்ள லயன்ஸ் (Lyons) என்னும் பட்டணத்தில் சேர்ந்ததும், வேவுகாரர்களென பிடிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்கள். ஆனால் அப்பொழுது அப்பட்டணத்திலிருந்த இரு கர்தினால்மார்கள் அவர்கள் யாரென்றறிவித்ததினால், அர்ச். பாப்பானவரின் ஸ்தானாபதிகளுக்குரிய ஆசார உபசார வழிபாடுகளுடன் விடுதலையாக்கப்பட்டார்கள்.

பாபர் சுவாமியார் மரணமாய்ப்போனார். லேய்னஸ் சுவாமியாரும், சால்மரோன் சுவாமியாரும், திரிதேந்து நகரில் கூடிய பேர்பெற்ற திருச்சங்கத்தில் ‘திருச்சபையின் வேதாசிரியர்கள்’ (Theologians of the Holy See) என்னும் உன்னத உத்தியோகக்கடமையை யாவரும் அதிசயிக்கத்தக்க புத்தி சூட்சுமத் திறமையுடன் நிறைவேற்றிவந்



தார்கள். சங்கத்தில் நடக்கும் ஆலோசனை தர்க்கங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும், ஆலோசிக்கப்படும் விஷயங்களைப்பற்றி தேவசாஸ்திர முறையாய் உபந்நியாசம் செய்வது இவர்களுடைய கடமையாயிருந்தது. அனுதினம் தர்க்கம் ஆரம்பிக்கக் குறிக்கப்பட்டிருந்தவர் சால்மரோன் சுவாமியார்; ஆலோசித்து நிதானிக்கப்பட்ட விஷயங்களை சங்க்ஷேபமாக எடுத்துரைத்து முடிவுரை செய்யக் குறிக்கப்பட்டிருந்தவர் லேய்னஸ் சுவாமியார். கர்தினால்மார் மேற்றிராணிமார்களும், பற்பல துறவற அதிபர்களும், சிறந்த சாஸ்திரிகளான பல குருக்களும் அமர்ந்திருந்த இத்திருச்சங்கத்தில், கல்விக்களஞ்சியமாக விளங்கின லேய்னஸ் சுவாமியாருடைய மெல்லிய குரற்சத்தம் எங்கும் நன்றாய்க் கேட்கும்படி, சங்கங்கூடிய திரிதேந்து நகர் மேற்றிராசனக் கோவில் நடுவில் அவருக்கென்று ஓர் ஆசனம் சித்தம் செய்யப்பட்டிருந்தது. இவ்வித அருமையான உபசாரம் இதற்குமுன் எவருக்கும் செய்யப்பட்டதில்லையெனத் தோன்றுகின்றது.

1546-ம் ௵, மே-௴ 25-௳ தேவமாதாவின் அமலோற்பவத்தைப்பற்றி தர்க்கம் ஆரம்பித்தது. “**பண்டிண்டி லேங்குதல்போலன்பும் பூசல் பாவுமேறு**”: அதாவது, வீணையைத்தொட்டால் அது உடனே ஏங்கி சப்திப்பதுபோல, அன்பும் அதனைத் தொட்ட அளவில் அதன் பேரொலி எங்கும்

தொனித்து பரவுமாம், என வீரமாமுனிவர் பாடிய வண்ணம்: லேய்னஸ் சால்மேரோன் சுவாமிமார், இவர்கள் இருதய அன்பின் உயிர்நாடிகளில் ஒன்று போலிருந்த இப்பரம சத்தியத்தைத் தொட்டதும், அத்தியந்த மனோகர மகிழ்ச்சியுடன், உசிதமான அநேக நியாயங்களை எடுத்துரைத்து, தேவதாய் மெய்யாகவே ஜென்மப்பாவமின்றி உற்பவித்தவள் என்று எண்பித்து ஸ்திரப்படுத்த பிரயாசப்பட்டார்கள். இது விசுவாச சத்தியமென்று திருச்சபை பிரசித்தமாய் அங்கீகரித்து ஸ்திரப்படுத்தும்படி முன்னூறுவருஷ காலமாய் எண்ணிறந்த பிரயத்தனம் செய்துவந்த சேசுசபையின் சிறந்த அநேக சாஸ்திரிகளுக்கு இவர்கள் முன்னோடிகளாயிருந்தார்கள். சமரச கீதம்போல் திருச்சங்கத்தில் அன்று தொனித்தொலித்த இவ்விருவருடைய வாக்குகளோ அர்ச். இஞ்ஞாசியாருடைய இருதயத்தின் எதிரொலிபோலிருந்தன. ஏனெனில் தேவதாயின் அமல உற்பவத்தின்மீது உருக்கமான பக்தி நேசம் நிறைந்த விசுவாசம் அவர் இருதயத்திலும் ஸ்திரமாய் ஆழ்ந்து பதிந்திருந்தது. தேவதாய் அமலோற்பவி என்னும் சத்தியத்தை தம் ஆயுள்காலமெல்லாம் தாம் விசுவசித்துப் பாதுகாத்துவருவதாக, பாரீஸில் சாஸ்திரப் பயிற்சி செய்துகொண்டிருக்கும்பொழுது வார்த்தைப்பாடு கொடுத்திருந்தாரென்று* தெரியவருகின்றது.

* என்னமோ எக்காலத்திலும் அர்ச். இஞ்ஞாசியாருடைய மக்கள் இப்பரம சத்தியத்தை ஓர் விசேஷ அபிமான பக்தியுடன் தங்கள் இருதயங்களில் போற்றிவந்தார்கள்.



அர்ச்சியசிஷ்டவர் கையிற் கொண்டுதிரிந்த ஊன்றுகோல் ஒன்று இஸ்பாஞ்ஞிய தேசத்திலுள்ள க்ரனடா பட்டணத்துப் பிரபுவின் மாளிகைக் கோவிலில் காப்பாற்றப்பட்டு வருகின்றது. அதில் கைபிடியிருக்கும் நுனியில் அமலோற்பவத்தை விசேஷித்துக் குறிக்கும் பரிசுத்த கன்னிகையின் சாயலான உருவம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

அர்ச். பிராஞ்சிஸ்கு சவேரியாரும், அர்ச். பிராஞ்சிஸ்கு போர்ஜியாரும் அர்ச். இஞ்ஞாசியாரைப்போல் தேவதாயின் அமலோற்பவத்துக்கு மகிமையான ஓர் வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார்கள். அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரும், இவ்விதமே திவ்விய சற்பிரசாதமுன் ஓர் வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார். மேலும், இச்சத்தியத்தை ஸ்திரப்படுத்துவதற்காக ஒரு புஸ்தகம் எழுதுவேனென்றும் வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார். இப்புஸ்தகத்தின் தன்மையும் பொருளும் ஏற்கனவே அவர் புத்தியின்கண் துலக்கமாயிருந்தது. அர்ச். பிராஞ்சிஸ்கு ஜெரோனிமோ என்பவர் நாகசர்ப்பத்தை தன் காலடியில் நசுங்க மிதித்து, ஓர் ஈட்டியால் அதனை ஊடுருவக் குத்தும் பாவனையாய் எழுதப்பட்டிருந்த அமலோற்பவ நாயகியின் படம் ஒன்றை, பிரசங்கம் செய்ய தாம் போகும் இடமெல்லாம் விருதுக்கொடிபோல் கொண்டு திரிவார். அர்ச். அல்போன்ஸ் ரொதிரிகேஸ் என்பவர் நமதாண்டவர் சேசுசபையை உண்டுபண்ணத் திருவுளமான முகாந்தரங்களுள், இச்சத்தியத்தை ஸ்தாபித்து பரம்பச்செய்தல் ஒன்று என உறுதியாய்ச் சொல்லிவந்தார். அமலோற்பவ மாதாவின் மந்திரமாலை ஜெபிக்கும் வழக்கம் அவரால்தான் பரம்பியதாக அவர் சரித்திரத்தால் தெரியவருகின்றது. அர்ச்.

திருச்சங்கத்திலுள்ள அலுவல் செய்துமுடித்து ஓய்ந்த நேரங்களில் இவ்விருவரும் இளைப்பாற்றியைத் தேடுவதற்குப் பதிலாய் ஆத்துமாக்களைத் தேடிப்போய் அவர்களுக்கு நன்மைசெய்ய எவ்வகையிலும் பிரயத்தனப்பட்டு வந்தார்கள். திருச்சங்கத்தில் அருமையான சாஸ்திரத்திறமையுடன் வேதசத்தியங்களை ஸ்திரப்படுத்தும் நியாயாதாரங்களை எடுத்துரைத்து உபந்நியாசம் செய்துவந்த இவர்கள், அது முடிந்ததும், சிறுவர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஞானோபதேசம் சொல்லிக்கொடுப்பதிலும் சாமானிய ஜனங்களுக்கு நற்புத்தி சொல்லி அவர்களுடைய பாவசங்கீர்த்தனங்களைக்

---

அல்போன்ஸுடன் அந்நியோந்நிய நேசமாயிருந்த அர்ச். கிளாவர் இராயப்பர் தேவதாயின் அமலோற்பவத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாரானால், அவர் முகம் ஏதோ பேரின்ப தரிசனம் கண்டவர் முகம்போல் பிரகாசித்துத் துலங்கும். முத். ரியாலினோ என்பவர் "உமது திருக்கன்னிமையையும், மாசில்லா உற்பவத்தையும் குறித்து, ஓ! மகா பரிசுத்தமான கன்னிகையே, என் இருதயத்தையும் சரீரத்தையும் தூய்மையாக்கியருளும்" (Per sanctam et immaculatam conceptionem tuam, O purissima Virgo emunda Cor et carnem meam) என்று தினம் பலமுறை ஜெபித்துவந்தார். இவர்களெல்லாம் தேவதாயின் அமலோற்பவம் விசுவாச சத்தியமென்று அர்ச். பாப்பானவரால் திருச்சபைக்கு பிரசித்தமாய் அறிவிக்கப்படுமுன் ஜீவித்து மரித்தவர்கள்.—1606-ம் ஆண்டு கோவை நகரில் வந்திறங்கி, மதுரை நாட்டில் வேதம் போதித்த



கேட்பதிலும் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் ஒத்தாசை செய்வதிலும் அதிமிக உற்சாகமாய் வருந்தி உழைத்து வந்தார்கள். திருச்சங்கத்தில் கூடியிருந்த பெரியோர்கள் இதைக்கண்டு அத்தியந்த ஆச்சரியமடைந்தார்கள். மேற்றிராணிமார்களுக்குள் அநேகர் இவர்களைத் தங்களுக்கு ஆத்துமகுருக்களாகத் தெரிந்து கொண்டு, வருத்தமான காரியங்களில் இவர்களுடைய ஆலோசனையைத்தேடிவந்தார்கள்.

---

தத்துவபோதகர் என்ற சேசுசபைக் குருவானவர் (De Nobili, S. J.) தமிழில் எழுதித்தந்த ஞானோபதேச காண்டம் எனும் பிரபந்தத்தில் இச்சத்தியத்தைத் தெளிவாய்ப் போதித்திருக்கிறார்.—அவரைப் பின்சென்று அதே மதுரை நாட்டில் சுமார் இருநூறு வருஷங்களுக்குமுன் சத்திய மறையை செந்தமிழில் சிறந்து விளங்கச்செய்த வீரமாமுனிவர் எனும் சேசுசபைக் குருவானவர்:—

"சேயாக மனுக்குலத்தைச் சேர்ந்துதித்து வையத்தார் [சிதைவை நீக்க
"தாயாக வளர்கன்னித் தாய்வயிற்றிற் பழம்பழிசேர் [தவறில்லாது
"தூயாகமறிவாண்மை சுடர்காட்சி வலிபருள் மாண் [டுணிவு சூட்சி
"வீயாத வரங்கொடு பெற்றெவ்வுலகும் வியப்பெய்த [வேய்ந்தானன்றே!"

என்று தேவதாயின் அமலோற்பவ மகிமையைத் தேம்பாவணியில் பாடியிருக்கின்றார்.

(திருமணப்படலம், 27-ம் வச.)

நமது இந்து தேசத்து அப்போஸ்தலருடைய நடபடிகளைப்பற்றி இங்கு சொல்லத்தேவையில்லை! இத்தேசத்தில், விசேஷமாய் இந்தத் தென் இந்தியாவிலும், கோவைமா நகரிலும் அவருடைய பெயரைக் கேட்டதும் உள்ளம் உவந்து அவரை ஸ்துதியாதவர் எவர்! அவர் போதித்த ஏக சத்தியத்தின் மறையை இன்னும் கைக்கொள்ளாத அஞ்ஞானிகள் முதலாய் இந்நாள்வரை அவர் நாமத்துக்குப் புகழ் சாற்றி வருகின்றார்களல்லோ! உரோமையிலிருந்து அர்ச். இஞ்ஞாசியாருடைய குரலொலிபோலும், அவருடைய உயிருள்ள உருவம்போலும், அர்ச். சவேரியார் இந்துதேசத்தில் துலங்கினார் என்னலாம். அநேக இராஜ்யம் பட்டணம் ஊர்களில் சுற்றித்திரிந்து வேதம் போதித்துவந்ததோடு, இந்தியாவிலுள்ள சேசுசபைக்கு அதிசிரேஷ்டராகவுமிருந்து அதனை நடத்திவந்த சவேரியாருடைய சிந்தனை பற்றுதல்களெல்லாம் அவ்வளவு உஜிதமாய் இஞ்ஞாசியாருடைய சிந்தனை பற்றுதல்களுக்கு இசைந்திருந்தன. அவ்வளவு உஜிதமாய் இந்தப் பரிசுத்த அப்போஸ்தலருடைய நடபடிகள் புண்ணியங்களிலெல்லாம் அவருடைய ஞானத்தந்தையுடைய நடபடிகள் புண்ணியங்களின் மாட்சிமை விளங்கி வந்தது.

உத்தம புதல்வன் தன்னைப்பெற்ற மாதாவை எவ்வளவு அன்பு வாஞ்சையாய் நேசித்து வருவானோ, அவ்வளவு அன்பு வாஞ்சையாய் சேசுசபையை



நேசித்து வந்தார். "சேசுசபையே, என்றாகிலும் நான் உன்னை மறந்துபோகும்படி நேருமானால், என்னுடைய வலதுகரமும் மறக்கப்பட்டுப்போவதாக" "Si oblitus unquam fuero tui, Societas Jesu, oblivioni detur dentera mea" என்றெழுதியிருக்கிறார். அர்ச். இஞ்ஞாசியார்மீது நமது அப்போஸ்தலர் இருதயத்தில் எவ்வளவு சங்கைநேச வணக்கம் குடிகொண்டிருந்ததென்றால், அவருக்குக் கடிதம் எழுதும்பொழுது முழந்தாளிட்டு எழுதிவந்ததாகத் தெரிகின்றது. "கடைசியாய், நான் என் முழு இருதயத்துடன் சங்கித்துவரும் எனதாத்துமத்தின் பிதாவே, நான் என் உடலில் உயிருள்ளவரையும், சர்வேசுரனுடைய மகா பரிசுத்த திருவுளத்தைத் தெளிவாய் அறிந்து, அதைச் சம்பூரணமாய் நிறைவேற்றிவர, அவர் எனக்கு அநுக்கிரகம் தந்தருளும்படி, தேவரீர் உமது திவ்வியபூசைப்பலிகளிலும் ஜெபங்களிலும், எனக்காக சர்வேசுரனைப் பிரார்த்திக்க ஒருபோதும் மறந்துபோகப்படாதென்று, முழந்தாளிலிருந்து தாழ்மையாய்த் தங்களை மன்றாடுகிறேன். ஏனெனில் தேவரீரை நான் இப்பொழுது என் கண்முன் இங்கு தரிசித்தாற்போல் முழந்தாளிலிருந்தே இக்கடிதத்தை எழுதுகிறேன்" என, கொச்சியிலிருந்து, 1549-ம் ௵ ஜனவரி-௴ 14-ம் ௳ அர்ச். இஞ்ஞாசியாருக்கு தாம் எழுதிய ஓர் கடிதத்தை முடிக்கிறார். இதே கடிதத்தையும், இதே தினத்தில் இதே இடத்தினின்று

எழுதியதாகக் காணப்படுகிற வேறொரு கடிதத்தையும், "சேசுக்கிறீஸ்துநாதருடைய இருதயத்தில் எனக்கு சொந்தமான ஏகதந்தையே" என்று ஆரம்பிக்கிறார்.

உயிர் பிரியுமுன் ஒருதரமாகிலும் தம் அருமைத் தந்தையை இவ்வுலகில் கண்ணுற்று, அவருடன் முகமுகமாய் சம்பாஷிக்கக் கிடைக்கவேண்டுமென்னும் ஆவல் நமது அப்போஸ்தலர் இருதயத்தில் பொங்கிக்கொண்டிருந்தது. இஞ்ஞாசியாருக்கு அவர் எழுதிய கடிதங்களில் இந்த ஆவலை வெளியிட்டுப்பேசுகிறார். பரிசுத்த கீழ்ப்படிதலின் பலனால் தமது ஆசை நிறைவேறக்கூடுமென்று குறிப்பாய் சொல்லுகிறார். "எனக்கு மிகவும் பிரியமுள்ள என் தந்தையே, மறுமையில் மாத்திரமல்ல, இம்மையிலும் தேவரீரைக்கண்டு தேவரீருடைய உதவியும் ஒத்தாசையும் அவசியமாய் வேண்டிய அநேக விஷயங்களைப்பற்றி தங்களிடத்தில் பேச நான் எவ்வளவோ ஆவலாயிருக்கிறேனென்று சர்வேசுரன் அறிவார். எவ்வளவு தொலையானாலும், கீழ்ப்படிதல்முன் அது ஓர் தடையாயிராது" என கொச்சியிலிருந்து 1548-ம் ௵ ஜனவரி-௴ 20-௳ எழுதிய கடிதத்தில் சொல்லுகிறார். அர்ச். இஞ்ஞாசியாரிடத்திலிருந்து அவருக்கு வந்த ஓர் கடிதத்துக்குத் திரும்பவும் கொச்சியிலிருந்து, 1552-ம் ௵ ஜனவரி-௴ 29-ம் ௳, (அதாவது, அவர் மரணமடைகிறதற்கு பத்து மாதத்துக்குமுன்) எழுதிய பதில் கடிதத்திலிருந்து சில பாகத்தை இங்கெடுத்துரைக்கலாம். அவர் எழுதுவது:



"ஆ! எனது உண்மையான பிதாவே! ஜப்பானிலிருந்து திரும்பி வரும்பொழுது, மலாக்காவில் தேவரீருடைய பரிசுத்த அன்பு நிறைந்த கடிதம் எனக்குக் கிடைத்தது. நான் ஆவலாய் எதிர்பார்த்திருந்த செய்தி அதனால் எனக்குத் தெரியவந்தது. அதாவது: என்னால் மிகவும் வந்தித்து நேசிக்கப்படும் என் பிதா நல்ல சௌக்கியமாய் உயிர் வாழ்ந்திருக்கிறாரென்றறிந்து என்னுள்ளத்தில் நான் அநுபவிக்கும் ஆனந்த சந்தோஷம் எவ்வளவென்று சர்வேசுரனுக்குமாத்திரந்தான் தெரியும். தேவரீருடைய மதுரகுணமும் பக்தியும் பூரணமாய் விளங்குகின்ற அநேக வார்த்தைகளை அதில் வாசிக்கப்பெற்றேன். என் ஆத்துமத்துக்கு ஆறுதலாகவும், நன்மையாகவும், அவைகளை அநேகந்தரம் திரும்பத் திரும்ப வாசித்தேன். அவைகள், விசேஷமாய் 'எவ்வளவுகாலம் சென்றாலும், அதுவெல்லாம் நான் உம்மை மறந்துபோதற்படி செய்யக்கூடுமானதல்ல; ஆகையால் முற்றும் உமக்கு சொந்தமான இஞ்ஞாசியுஸ் (Ignatius)' என்று கடிதத்தின் அடியிலிருக்கும், அன்பின் முத்திரை போன்ற அந்தக் கடைசி வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப நினைவில் சிந்தித்து வருகிறேன்;—ஒருவகையில், அவைகள் என் ஆத்துமத்துக்குப் போசனம் போலிருக்கின்றன. இவ்வார்த்தைகளை வாசிக்க,

ஆனந்த கண்ணீர் சொரிந்தேன். அவைகளை இங்கு எடுத்தெழுதும் இச்சமயத்தில், கடந்துபோன பாக்கியமான நாட்களையும், எக்காலமும் என்னை அரவணைத்து இன்னும் அரவணைத்துவரும் தேவரீருடைய உண்மையும் பரிசுத்தமுமான சிநேகத்தையும் சிந்தித்து கண்கலங்கி பிரலாபிக்கிறேன்." * * *

"ஆவி பிரியுமுன் திரும்ப ஓர்தரம் என்னைக் காணத் தேவரீர் வெகு ஆவலாயிருப்பதாக பரிசுத்த அன்புற்று சொல்லுகிறீர்கள். தேவரீரது விலைமதிக்கப்படா சிநேகத்தின் பட்சம் நிறைந்த இவ்வாக்கு என்னிருதயத்தை ஆழமாய் ஊடுருவிச் சென்று, அதில் பிரவாகமாய் எழும்பச்செய்த இன்பகரமான உருக்க நேசப்பெருக்கம், என் இருதயத்தைச் சம்பூரணமாய் அறிந்திருக்கும் ஆண்டவருக்குத் தெரியும். இவ்வார்த்தைகளை என் உள்ளத்தில் நினைத்து சிந்திக்கும்பொழுதெல்லாம், (அடிக்கடி இவ்விதம் சிந்திக்கும்படி நேர்கின்றது), என் கண்களில், என்னை அறியாமல், நீர் ததும்புகின்றது. தேவரீரை ஓர்நாள் திரும்பக் கண்ணுற்று கட்டித் தழுவிக்கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைக்கக்கூடுமென்று, என் இருதயத்தில் குடிகொண்டிருக்கும் மனோகரமிகுந்த இவ்வொரு நினைவினால், என் கண்களினின்று தானாகவே மெல்லென ஓடிவரும் கண்ணீரை என்னால் அடக்கக்கூடுதில்லை. (திரும்ப நான் தங்களைப் பார்க்கக்கூடுமாயிருப்பது) அருமையான காரியந்தான், ஆயினும் பரிசுத்த கீழ்ப்படித



லால் ஆகாததொன்றுமில்லை" என்றெழுதியிருக்கிறார். இக்கடிதத்தின் அடியில்: "உமது மக்களிலெல்லாம் மிகச் சிறியனும், உமது சமுகத்தினின்று யாவரிலும் அதிகத் தொலையில் பரதேசியாயிருப்பவனுமாகிய, பிரான்சீஸ்கு" என்று கையொப்பம் வைத்திருக்கிறார்.

இவைகளை இங்கு மொழிபெயர்த்துக் கொடுத்ததில், அர்ச். சவேரியார் பிரயோகித்த வார்த்தைகளின் சுய சக்தியும் பொருளும் பூரணமாய் விளங்கச்செய்தல் அசாத்தியமாயிருக்கின்றதே என்னும் ஆயாசமேயன்றி, அவைகளில், எதையாகிலும் கூட்டிச் சொல்லிவிட்டோம் என்கிற ஐயம் நம் உள்ளத்தில் இல்லை. தங்களைப் பெற்ற தந்தைமார்களை முதலாய் இவ்வளவு உருக்கமாய் நேசிக்கும் மக்கள் ஆயிரத்துக்கொன்று இவ்வுலகில் கிடைத்தல் அரிதென்று சொன்னால், அது உண்மைக்கு விருத்தமாயிருக்குமா? இராதென்றெண்ணுகிறோம்.

உரோமையிலிருந்த அர்ச். இஞ்ஞாசியாரும் தமது அருமைப் புதல்வனைத் திரும்பக் கண்ணுற்று, அவருடன் வார்த்தையாடி, பத்து வருஷத்துக்கு மேலாய் தாம் வகித்துவந்த அதிபதி சிரேஷ்டர் உத்தியோகத்தை அவர் கையில் ஒப்புவிக்க ஆவலுற்றிருந்தார். இக்கருத்தை வெளியிடாமல், உடனே உரோமைக்குப் புறப்பட்டு வரும்படி சவேரியாருக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதம் அவர் கைக்குச் சேருமுன், சர்வேசுரன்

அவரை இகலோகத்தினின்று நித்திய பேரின்ப தரிசனத்துக்கு அழைத்துக்கொண்டார். இந்தியா



விலும் ஜப்பானிலும் எண்ணிறந்த ஆத்துமாக்களை பரகதி சேர்த்து, சீன தேசத்தாருக்கும் பரலோக



வாசலைத் திறந்துவிடும்படி அத்தேசத்தை நாடிச் சென்ற இந்தப் பெரிய அப்போஸ்தலர், சீன தேசத் தருகிலிருக்கும் சான்சியான் (Sanchian) என்னும் தீவில், இரு சிறுவர்கள் தவிர வேறு மனிதர் உதவியின்றி, தேவசிநேகம் சுவாலித்தெரியும் இருதயராய், "ஓ! அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமே" (O Sanctissima Trinitas), சுவாமி, உன்னை நம்பியிருக்கிறேன், ஒருபொழுதும் கைவிடப்படமாட்டேன்" (In te Domine speravi, non Confundar in æternum), "தாய் என்றும்மைக் காண்பித்தருளும்" (Monstra te esse matrem) என ஓயாமல் மனவல்லப ஜெபம் செய்து, ஓர் வேதசாட்சியைப்போல், 1552-ம் வருடம், நவம்பர்-மீ 27-ட, வெள்ளிக்கிழமை, பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்த பார்வையாய் பாக்கியமாய் மரித்தார். அவர் திரு உடல் இன்னும் கோவை நகரில் தேவ வல்லமையின் ஓர் அற்புதத்தால் அழியாதிருப்பதை அறியாதவர் எவர்!

"முற்காலத்தெங்கள் முன்னோர்—முதுமறை
[ஒளிபெற
நற்போதம் உரைத்தவ—ருடன் இருந்தாய்
இக்காலத்தில் எங்கட்கும்-இல்லை என்று போகாமல்
இடருறுதுன்னுடைய—உடலை எங்களுக்கொரு
அடைவு வைத்தாயே எங்கள்—மடமை ஒழிக்க
[மெத்த." *.

* 1882-ம் வருஷம் புதவையில் பிரசுரமான 'தேவ ஸ்தோத்திர சங்கீத கீர்த்தனம்' என்னும் ஓர் பழைய பிரதியினின்றெடுக்கப்பட்டது.

## 9-ம் அதிகாரம்.

தமது கையில் ஒப்புவிக்கப்பட்டவர்களை புண்ணிய சீவியத்தில் நடத்துவதில், அர்ச்சிய சிஷ்டவரிடம் விளங்கின அருமையான ஞான விவேகப் பெருந்தன்மை—சேசுசபையில் சிலுவை என்றும் உயர்த்தப்பட்டிருப்பது—பிரான்ஸ் தேசத்திலும் இஸ்பாஞிய தேசத்திலும் சேசுசபைக்கு நேர்ந்த துன்பங்கள்—மெல்க்கியோர் கானோ—சோர்போன் சாஸ்திரிகள்—ரிபதனீரா சுவாமியார் பெல்ஜிய தேசத்துக்கு அனுப்பப்பட்டது—சேசுசபையாரில் சிலருக்கு திருச்சபையில் ஞான பிரபுத்வம் அளிக்கும்படி செய்யப்பட்ட பிரயத்தனங்கள்—அர்ச்சிய சிஷ்டவர் இது விஷயத்தில் செய்துவந்த எதிர் பிரயத்தனங்கள்.

சொற்பக் காலத்துக்குள், சேசுசபை அடைந்த ஆச்சரியமான அபிவிர்த்தியும், அதனால் திருச்சபையில் விளைந்த எண்ணிறந்த நன்மைகளும் எத்தன்மையானவைகளென்று, முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டவைகளைக்கொண்டு ஒருவாறு உத்தேசித்துக்கொள்ளலாம். ஜெர்மானியா, பிரான்ஸ், இஸ்பாஞியா, போர்த்துகால், இத்தாலியா முதலிய



தேசங்களின் பற்பல பாகங்களில், சேசுசபை மடங்களும் கலாசாலைகளும் ஏற்கனவே ஐம்பதுக்குமேல் ஸ்தாபகம் பெற்றிருந்தன. வேறு மடங்களும் கலாசாலைகளும் ஸ்தாபிப்பதற்கு பல இடங்களிலிருந்து சேசுசபைப் சிரேஷ்டர்களுக்கு விண்ணப்பத்துக்குமேல் விண்ணப்பம் வந்துகொண்டிருந்தது. ஐரோப்பாவில்மாத்திரமல்ல, இந்தியா, இலங்கை, ஜப்பான், அபிஸ்ஸினியா (Abyssinia), எதியோப்பியா (Ethiopia), அமெரிக்காவிலுள்ள ப்ரஸீல் (Brazil) முதலிய தூரதேசங்களிலும் அஞ்ஞான இருள் அடர்ந்த இராஜ்யங்களிலும் அர்ச். இஞ்ஞாசியாருடைய மக்கள் அநேகர் சென்று சேசுக்கிறீஸ்துநாதருடைய திருநாமத்தைப் பிரசங்கிக்கும் குரலொலி கேட்கப்பட்டது.

அர்ச்சியசிஷ்டவரோவென்றால் உரோமையில் தம்து சிற்றறையிலிருந்து, அருகிலிருந்த மக்கள் மீதுமாத்திரமல்ல, உலகத்தின் எத்திசையிலுமிருந்த மக்கள்மீதும் கவலையாய், ஒவ்வொருவருடைய சுகக்ஷேமங்களையும், புண்ணிய வர்த்திப்பையும்பற்றி அந்தந்த இடங்களிலுள்ள சிரேஷ்டர்கள் வழியாய் விசாரித்தறிந்து, அனைவரையும் அத்தியந்த அன்பும் பெருந்தன்மையும் வாய்ந்த விவேக விமரிசையுடன் நடத்திவந்தார். ஒரு சொற்பக் காலமாகிலும் அவர் அருகிலிருந்து, உன்னத தேவ அருள் ஞானமும் பெருந்தன்மையும் நிறைந்து இலங்கும் அவரது பரிசுத்த நடபடிக்கைகளை கண்

முன் தரிசித்து சேசுசபையில் புண்ணிய பயிற்சி அடையப்பெற்றவர்கள், பிற்பாடு அவர்கள் எத்திசை எத்துலைச் சென்றாலும், அர்ச்சிய சிஷ்டவர் தங்கள் கண்முன் உயிருடன் பிரசன்னராயிருந்தாற்போல் எண்ணி, அவர் சீவியத்தை தங்கள் சீவியத்துக்கு மேல்வரிச்சட்டமாகக்கொண்டு நடப்பார்கள். யாதாமோர் பிரதான விஷயத்தில் எது உத்தமமென்று தெளிவாய் விளங்காதிருக்கும் சமயங்களிலும்,—தங்களுக்கு ஒன்று கற்பிக்கப்பட்டிருக்க, தற்சமய சந்தர்ப்பங்களோ அதற்கு முற்றும் விரோதமாயிருக்கவும், அவைகளை மேலாவில் தெரிவித்து பதில் உத்தரவு வருமட்டும் காத்திருப்பதென்றால், அதற்கும் சந்தர்ப்பங்கள் இசைந்து வராதிருக்கவும்கண்டு, மனங்குழம்பி நிற்கும் சமயங்களிலும்,—அர்ச்சியசிஷ்டவர் இப்பொழுது இங்கிருந்தால் இவ்விஷயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளுவார், எவ்வித தீர்மானம் செய்வார் என்று தங்களைத் தானே வினவிக் கேட்டு தங்களுக்குள் யோசிப்பார்கள்.. யோசித்து, அவர் இவ்விதம்தான் செய்வாரென்று தேவ சமுகத்தில் தங்களுக்குத் தோன்றுகிறபடி, மனக்கலக்கமின்றி உற்சாகமாய் செய்வார்கள்.

மெய்யாகவே, எவ்வளவு பெருந்தன்மை ஞான விவேகமுடன் அர்ச். இஞ்ஞாசியார் தமது பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்டவர்களை நடத்தி வந்தாரென்றால், தமது சுபாவத்துக்கும் மனதுக்கும்



இசைந்த வழியில் அவர்களைக் கட்டாயமாய் நடத்தவேண்டுமென்று ஆசியாமல், அவர்களைச் சர்வேசுரன் கையில் முற்றும் ஒப்புவித்து, சர்வேசுரனுடைய திவ்விய இஸ்பிரீத்துவே அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்து, தமது திருவுளத்துக்கு இசைந்த மார்க்கத்தில் அவர்களைத் தூண்டி நடத்தட்டுமென்று விட்டுவிடுவார். தாமோவென்றால், அத்தேவ திருவுளத்தின் ஏவலாள்போல்மாத்திரமிருந்து, சுயபட்சத்தாலும் பசாசின் தந்திர மாய்கைகளாலும் அவர்கள் மதிமயங்கி, தேவ ஏவுதலைப் பின்சென்று நடப்பதற்குப் பதிலாய், தங்கள் சுயபட்சத்தைப் பின்சென்று, வழிதவறி மோசம்போகாதபடி, அவர்கள் நடபடிகள், அவர்கள் உள்ளத்தில் நிகழ்பவைகள், அவர்களுடைய புண்ணியங்கள், குறைகள், அவர்கள் படும் தந்திர சோதனைகளையெல்லாம் நன்றாய் அறிந்து, காவற்றூதனைப்போல் வெகு கவலையுடன் அவர்களைப் பின்றொடர்ந்து பாதுகாத்து வருவார். தேவ சித்தம் நியமித்த பாதையில் அவர்கள் ஸ்திரமாய் நடந்து சென்று உத்தம தேவ சிநேகத்தில் அதிகரித்து வருவதாகக் கண்டால், அகமகிழ்ந்து ஆண்டவரை ஸ்துதிப்பார். ஏதோ தவறி நடக்கிறதாகக் கண்டால், ஆபத்து வரும் முன்னமே தாயின் அன்புடன் அவர்களை எச்சரித்து, தேவ சித்தத்தை நோக்கிச் செல்லும் நேர்நெறியில் அவர்களைத் திருப்பி நடத்துவார். அவர்கள் ஞானத்தெளிவடைந்து, தங்கள்

சுயபட்சத்தை வென்று பரிசுத்த தேவசிநேகம் நிறைந்த இதயர்களாகும்படி ஓயாமல் தேவ மகத்துவத்தைக் கெஞ்சி மன்றாடுவார்.

திருச்சபைத் தலைவராலும், போர்த்துகால் தேசத்தரசன் மூன்றாவது ஜோவாம் என்பவராலும், அநேக கர்தினால்மார், மேற்றிராணிமார்கள், தர்மப்பிரபுக்கள் பெருமாட்டிகளாலும் அபிமானித்தாதரிக்கப்பெற்ற சேசுசபை, தேவகிருபையால் அதிசீக்கிரம் எங்கும் அபிவிர்த்தியடைந்து வந்தது. என்றாலும், தேவ கிருபையால், இரட்சணியந்தரும் சிலுவையாகிய துன்பமும் உபத்திரவமும் எக்காலத்திலாகிலும் சேசுசபைக்கு குறைவுபட்டுப்போகவில்லை. சேசுசபை பிரசித்தமாய் ஸ்தாபகம் பெறும் நாள் அடுத்துவரும் சமயத்தில், ஸ்தோர்த்தா ஊரில் அர்ச்சியசிஷ்டவருக்கு அநுக்கிரகிக்கப்பட்ட அற்புத தரிசனத்தில், "உரோமையில் உன்னுடனிருப்போம்" என்று உறுதி வாக்கருளிய திவ்விய சுதன் கரத்தில் உயர்த்தப்பட்டிருந்ததென்ன? திருச்சிலுவை அல்லவா! தமது தாசன் லொயோலா இஞ்ஞாசியாரைக்கொண்டு தாம் ஸ்தாபிக்கத் திருவுளமாயிருக்கும் சேசுசபையில், தமது திருச்சிலுவை என்றும் உயர்த்தப்பட்டிருக்குமென்றும், அத்திருச்சிலுவையை என்றும் கண்ணோக்கியே அச்சபையார் ஞான யுத்தம் செய்து தங்கள் கதியை நோக்கி ஸ்திரமாய் செல்லவேண்டுமென்றும்



தெளிவான ஓர் அடையாளமாகவல்லவா, கர்த்தர் இவ்விதம் அநுக்கிரகித்தார்! "துன்ப துரிதங்கள் அனுப்பி வருகின்றாரோ, அப்படியானால் அவர் உன்னை பெரிய அர்ச்சியசிஷ்டவனாக்க திருவுளமாயிருக்கிறாரென்று நிச்சயமாயிரு. ஆகையால், நீ பெரிய அர்ச்சியசிஷ்டவனாக ஆசைப்பட்டால், ஆண்டவர் உனக்கு வெகு துன்ப துரிதங்களை அனுப்பத்தயை இரங்கவேண்டுமென்று பிரார்த்தனை செய். இரட்சகர் தாம் செலுத்தின அளவற்ற அன்பின் தகன பலியில் பிரயோகித்த திருச்சிலுவைமாவிறகினால் போஷிக்கப்பட்டாலன்றி, தேவ சிநேகாக்கினி இருதயத்தில் பிரகாசமாய் சுடர்விட்டெரிதல் அரிது. உலக இன்ப சுகங்கள் யாவையும், பூமிமீதுள்ள புஷ்பங்களினின்று சேகரிக்கப்படும் தேனாமிர்தங்கள் யாவையும் ஒன்று சேர்த்தாலும், அதுவெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதர் சுவை பார்த்த கசப்பான காடியின் மதுரத்தின் முன், அதாவது: சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி, சேசுக்கிறீஸ்துநாதரோடு நேச ஐக்கியமாய் ஏற்றுக்கொள்ளப்படும் துன்ப துரிதங்களின்முன், ஒன்றுமேயில்லை" என்றும் போதித்துவந்த அர்ச். இஞ்ஞாசியாரோவெனில், தமது சபைமீது சிலுவை என்றென்றைக்கும் உயர்த்தப்பட்டிருக்கவேண்டுமென்று அத்தியந்த ஆவலுற்று, அதற்காக தேவ மகத்துவத்தை உருக்கமாய் மன்றாடி வந்தார். என்றும் ஒரு கண்டசீராய் முகமலர்ந்து களிப்புற்றிருப்பவர் "எல்லாம் க்ஷேம

மாயிருக்கின்றது. பிரபுக்களும் ஜனங்களும் சபை
யை நன்கு மதித்து எவ்வித உதவி சகாயமும் சந்
தோஷமாய் செய்து வருகிறார்கள். ஒன்றும் குறை
வில்லை. ஒரு விக்கினமுமில்லை" என்று எல்லாம்
சுப செய்தியாக வந்தால், முகம் சற்றே வாடி பெரு
மூச்செறிந்து ஏதோ கவலையுற்றவராகக் காணப்படு
வார். அதற்கு விரோதமாய், யாதாகிலும் பெருந்
துன்பம், நெருக்கிடை நேர்ந்ததாகக் கேள்விப்பட்
டால் வழக்கத்துக்கு மேலான சந்தோஷக்குறியும்
களையும் அவர் முகத்தில் துலங்கும். ஏனெனில்,
தேவ தோத்திரத்துக்கும், ஆத்துமாக்கள் இரட்
சணியத்துக்கும் மெய்யாகவே அநுகூலமான
யாதோர் காரியம் செய்ய ஏற்பட்டால், மனுக்குலத்
தின் தீய சத்துரு அதனைச் சகியாது, உடனே எவ்
வித இடைஞ்சல் இடையூறுகளையும் எழுப்பிவிடப்
பிரயாசப்படும் என்பதால், விக்கினமின்றி எல்லாம்
அமரிக்கையாயிருக்கின்றதென்று கேள்விப்படும்
பொழுதெல்லாம், "சாத்தான் சும்மாயிருப்
பானேன்? செய்யப்படுகிற விஷயங்கள் ஒருவேளை
தேவ மகத்துவத்துக்கு அவ்வளவாக உகந்தவை
களல்லவாக்கும்" என்று தனக்குள்ளே ஐயப்படு
வார். இடையூறுகள் வெகுவாய் நேரிட்டிருக்
கின்றனவென்று கேள்விப்பட்டாலோ, "ஆ! சாத்
தானுக்கு இவ்விஷயம் கசப்பாயிருக்கின்றது. ஆன
றடையாளம்" என சந்துஷ்டி கொள்வார்.



பிரான்ஸ் தேசத்தில் சேசுசபை ஆதிமுதல்
விரோதிக்கப்பட்டு வந்தது. அக்காலத்தில்
பிரான்ஸ் தேசத்தாருக்கும், இஸ்பாஞ்ஞிய தேசத்
தாருக்கும் ஓயாமல் யுத்தம் நடந்துவந்தமையா
லும், இஸ்பாஞ்ஞிய நாமமோ சேசுசபையோடு பல
வகையில் சம்பந்தப்பட்டிருந்தமையாலும், சேசு
சபை என்ற நாமமும் பிரான்ஸ் தேசத்தில் சில
காலம் அவ்வளவாய் அபிமானிக்கப்படவில்லை.
அன்றியும் பாரீஸ் நகர் அதிமேற்றிராணியார், அவ
ருடைய உடன் பிறந்தார் மக்களில் ஒருவர் அவ
ருடைய சம்மதமின்றி சேசுசபையில் ஏற்றுக்கொள்
ளப்பட்டதின் நிமித்தமும், தேவத்திரவிய அநு
மானங்களை நிறைவேற்றி பிறர் ஆத்தும இரட்சணி
யத்துக்காக உழைத்துவரும் விஷயத்தில், மற்றக்
குருக்களுக்கில்லாத விசேஷ சுதந்தரங்கள் சேசு
சபைக்குருக்கள் அர்ச். பாப்பானவரிடமிருந்து
பெற்றுக்கொண்டார்கள் என்றதின் நிமித்தமும்
மனத்தாங்கலுற்று, சேசுசபையை விரோதித்து
வந்தார். மேலும், சேசுசபையார் இலவசமாய்
கல்வி கற்பித்துவந்ததும், கல்வி கற்றுக்கொடுப்ப
தில் வெகு செல்வாக்குடையவர்களாய் விளங்கின
தும், ஆங்காங்கு கல்லூரிகள் வைத்து நடத்திவந்த
தும், விசேஷமாய் பாரீஸ் நகரில் "சோர்
போன்" (Sorbonne) என்னும் பிரபலியப்பட்
டக் கலாசங்க சாஸ்திரிகளுக்குப் பொருந்த
வில்லை.

இஸ்பாஞ்ய தேசத்தில் சலமான்கா பட்டணத்தில் அர்ச். சாமிநாதர் சபையைச் சேர்ந்த மெல்க்கியோர் காநோ (Melchior Cano) என்பவர்,—சாஸ்திரப் பயிற்சியிலும் பிரசங்க வல்லமையிலும் பிரக்யாதிபெற்றிருந்தவர்,—1548-ம் ௵ துவக்கி சேசுசபையை முற்றும் குற்றப்படுத்திப் பேசத் தலைப்பட்டார். சேசுசபையார் "அந்திக்கிறீஸ்துவின்" முன்னோடிகளென்றும், வீண்தோற்றங்களால் பித்தலாட்டம் கொண்டு அலையும் 'இல்லுமிநாத்தி' (Illuminati) என்போரைச் சேர்ந்தவர்களென்றும், பிரிவினைக்காரர்களென்றும், யூத்தேர் மதப் பதிதர்களிலும் கேடுகெட்டவர்களென்றும், பிரசங்காசனத்திநின்றே பகிரங்கமாய்த் தீர்த்துப் பேசினார். 'புத்தியிலும் பக்தியிலும் சிறந்த சற்குணர் அநேகர் இவரைத் தடுத்து சேசுசபைக்குப் பரிவாகப் பேசினார்கள். அர்ச். சாமிநாதர் சபை 'ஜெனரல்' சுவாமியார் ரோமே தே ஷாந்திலோன் (Romée de Chattilon) என்பவர்தாமே, இவரைக் கண்டித்து, இவ்விதம் அநீதமாய்ப் பேசுவதை விட்டுவிடும்படி கட்டளையிட்டார். . என்றாலும், மெல்க்கியோர் காநோ தம் ஆயுள்காலமெல்லாம் சேசுசபைக்கு விரோதமாகவே பேசிவந்தார். அர்ச். இஞ்ஞாசியார் மரணமடைவதற்கு சில மாதங்களுக்குமுன், லூயிஸ் தே க்ரானடா (Luis de Granada) என்னும் மகா புண்ணியாத்துமா, இந்த மெல்க்கியோர் காநோ



என்பவருடைய சிரமையால் உபத்திரவப்பட்டு வந்த சேசுசபைக்குப் பரிவாகப்பேசி ஒரு சுவாமியாருக்கு எழுதிய கடிதத்தில்: "உப்பிட்டு தண்ணீரை மதுரமாக்குதலும், களிமண்ணைப்பூசி கண்பார்வை அநுக்கிரகித்தலும், பரவோனுடைய நெருக்கிடையால் இஸ்ரவேலர் மக்களும், கொடுங்கோலர்களுடைய ஆக்கினைகளால் கிறீஸ்துவர்களும் அதிகரித்துப் பலுகும்படி செய்தலும், நமதாண்டவருடைய திவ்விய பராமரிப்பின் சாதாரணச் செயலென்று நன்றாய் அறிந்திருக்கிறேன். சேசுசபையை நிர்மூலமாக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் இந்த தற்கால எதிரிடையும், அச்சபை தாழ்ச்சியில் வர்த்தித்து, தெய்வ பக்தியிலும், நன்மாதிரிகையிலும், விமரிசையிலும், நன்மை பயக்கும் ஊக்க முயற்சியிலும் மேன்மேலும் சிறந்து துலங்கி, யாவராலும் அதிகமதிகமாய் நன்கு மதித்து அபிமானிக்கப்படுவதற்கே, ஏதுகரமாயிருப்பதாகக் காணப்படுகின்றது. ஆகையால் உங்களைக் கெடுப்பதற்காக இந்தத் துறவறக் குரு எடுத்த உபாயங்களைக்கொண்டே, சர்வேசுரன் உங்களுக்கு நன்மை விளைவிப்பார்" என்று சொல்லியிருக்கிறார்.

மெல்க்கியோர் காநோ என்பவரால் நிகழ்ந்த இவ்வுபத்திரவங்களையெல்லாம், சலமான்காவில் கல்விசாலை ஏற்படுத்த அர்ச். இஞ்ஞாசியாரால் அனுப்பப்பட்டிருந்த மிக்கேல் தோரஸ் என்னும்

சுவாமியார் அத்தியந்த தாழ்ச்சி பிறர் சிநேகமுடன் சகித்துவந்தார். அதுபோலவே தொலிடோ (Toledo) நகர் அதிமேற்றிராணியாரால் நேர்ந்த துன்பங்களையும் பொறுமையாய்ச் சகித்துவந்தார்.

1551-ம் வருஷம் தோலிடோ நகர் அதிமேற்றிராணியாராயிருந்த கர்தினல் ஜூவாம் சிலிஸியோ (Cardinal Juam Siliceo) என்பவர், இன்ன காரணமாகவென்று சொல்லாமல், தமது மேற்றிராசனத்தில் சேசுசபையார் ஒருவரும் பிரசங்கம் செய்யப்படாதென்றும், தேவத்திரவிய அநுமானங்கள் ஒன்றும் நிறைவேற்றப்படாதென்றும், திவ்விய பூசைமுதலாய் செய்யப்படாதென்றும் திடீரென கண்டிப்பான கட்டளை ஒன்று எங்கும் பிரசித்தப்படுத்தினார். இக்கட்டளை அர்ச். பாப்பானவரால் சேசுசபைக் குருக்களுக்கு அளிக்கப்பட்ட விசேஷ அனுமதிகளுக்கு விரோதமானதென்று, இராஜாங்க ஆலோசனை சங்கத்தாரும் உன்னத ஸ்தானங்களிலிருந்த அநேக மகான்களும் அதிமேற்றிராணியாருடன் எவ்வளவுதான் சொல்லியும், அதற்கெல்லாம் அவர் இணங்கவில்லை. மேன்மேலும் அதிக மனத்தாங்கலுற்றவரானார். இவ்விஷயங்களையெல்லாம் அர்ச். இஞ்ஞாசியார் கேள்வியுற்று, வேறு வழியில்லையென்று கண்டு மூன்றாம் ஜூலியுஸ் என்னும் அர்ச். பாப்பானவர் சமுகம் விண்ணப்பம் செய்தார். பரிசுத்த பிதாவுடைய



கோரிக்கையால், இஸ்பானிய தேசத்தில் அவருடைய ஸ்தானாபதியாயிருந்த கர்தினல் (Cardinal Poggio) அதிமேற்றிராணியாரை நேரில் கண்டு கண்டிப்பாய் பேசியதின்மேல் தான், தம் தீர்மானத்தைமாற்ற அவர் உடன்பட்டார்.

இவ்வுபத்திரவங்களைப்பற்றி கேள்விப்பட்டதும், அர்ச். இஞ்ஞாசியார் ரிபதனீரா சுவாமியாரைப் பார்த்து "இந்த எதிரிடை நமக்கு ஓர் பெரும் பாக்கியம்" என்றார்.

பாரீஸ் நகரில் ஏற்கனவே சேசுசபையை விரோதித்துவந்த 'சோர்போன்' சாஸ்திரிகள் 1554-ம் வருஷம் முன்சொன்ன பாரீஸ் அதிமேற்றிராணியாராலும், சேசுசபை விரோதிகள் வேறநேகராலும் தூண்டப்பட்டு சேசுசபை சத்திய விசுவாசத்துக்கு இடரலான கோட்பாடுகளுள்ளதென்றும், திருச்சபையின் சமாதான அமரிக்கைக்கு விக்கினமானதென்றும், பூர்வீகமாய் ஸ்தாபகம் பெற்றிருக்கும் மற்ற சந்நியாச சபைகளுக்கு கெடுதியானதென்றும், நன்மை செய்வதிலும் தின்மை செய்யவே பிறந்ததென்றும் தீர்த்துப் பிரசித்தப்படுத்தி, தாங்கள் செய்த தீர்ப்பை உரோமைக்கு அனுப்பி வைத்தார்கள். ஐரோப்பாவெங்கும் அக்காலம் தேவசாஸ்திர அபிவிர்த்தியில் இந்த 'சோர்போன்' கலாசங்கமே முதல்தரமானதென்று பிரக்கியாதி பெற்றிருந்தது. தேவசாஸ்திரத்தில் வெகு நிபுணர்

களென்று விளங்கினவர்கள்தான் இக்கலாசங்கத்தில் ஆசிரியர்களாகத் தெரிந்துகொள்ளப்பட்டு வந்தார்கள். இவர்களுடைய அபிப்பிராயங்கள் ஐரோப்பாவெங்கும் கனமாய் மதிக்கப்பட்டு வந்தன. இராஜாங்க. விஷயங்கள் ஆலோசித்து நிரூபிக்கப்படும் மஹா சபைகளிலே முதலாய் இவர்களுடைய சித்தாந்தங்கள் கனமாய் மதிக்கப்பட்டு வந்தன. ஆகையால் சேசுசபையை இவர்கள் குற்றப்படுத்திச் செய்த மேற்சொன்ன தீர்மானமானது அச்சபைக்கு எவ்வளவோ விபத்தாயிருந்திருக்க வேண்டுமென்று உத்தேசித்துக்கொள்ளலாம். சாஸ்திரிகள் செய்த இத்தீர்ப்பு வெளியானதும், "மெய்யாகவே (வானம் கம்மி கறுத்தாற்போல்) சேசுசபைக்கு விரோதமாய் எங்கும் பெரும்புசல் எழும்பியது. பிரசங்காசனங்களினின்று பிரசங்கிகள் இச்சபைக்கு விரோதமாய்ப் பேரொலி செய்தனர். பாரீஸ் நகர் பங்கு விசாரணைக் குருக்கள் தங்கள் ஜனங்களுக்கு செய்து வந்த ஞானோபதேசங்களில் சேசுசபையாருக்கு விரோதமாகவும் உபதேசம் செய்துவந்தனர். சர்வகலாசாலை உபாத்திமார்களும் தத்தம் வகுப்பு மாணாக்கர் முன் சேசுசபையாரை நடுத்தீர்த்து, அவர்கள் குற்றவாளிகளென்று உரூபித்தனர்" என சேசுசபை சரித்திராசிரியர்களில் ஒருவராகிய கிரேத்தீநோ ஜாலி (Cretineau-Joly) என்பவர் எழுதியிருக்கிறார்.



இச்சந்தர்ப்பத்தில், புத்தி தீட்சணியத்திலும் சாஸ்திரத் திறமையிலும் சிறந்தவர்களாய்த் துலங்கிய சேசுசபை சுவாமிமார்கள் சிலர் இவ்வநீத தீர்ப்பை மறுத்து எழுத ஆசித்தனரென்றால், ஆச்சரியமென்ன! இஞ்ஞாசியாரோவென்றால் அதற்குச் சம்மதித்தவரல்ல. "என் சகோதரர்களே, கிறீஸ்துநாதர் பூலோகத்தைவிட்டு நீங்குந் தருணத்தில் தமது சீஷர்களைநோக்கி சொன்னதை,—'சமாதானத்தை உங்களுக்கு வைத்துவிட்டுப்போகிறேன்; என் சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன்' என்று அவர்களுக்கு திருவாக்கருளினதை—நினைத்துக்கொள்ளுங்கள். இது உங்களுக்கே சொல்லப்பட்டதாக இப்பொழுது எண்ணிக்கொள்ளுங்கள். மனக்கடுப்புக்கேதுவான எதுவாகிலும் நாம் எழுதவும்படாது, செய்யவும்படாது. சில சந்தர்ப்பங்கள் உண்டு; அச்சந்தர்ப்பங்களில் வாக்கு செலவு செய்வதிலும், மௌனமாயிருப்பது உத்தமம். நம்மீது சொல்லப்படும் அவதூறுகளை நிராகரித்து வெல்லுதற்கு கையில் எழுதுகோலை எடுக்க அவசியமில்லை. உண்மை தன் சுயசக்தியாலேயே தன்னைப்பாதுகாத்து நமக்குப் பரிவாய் எழுந்து நிற்கும். பாரீஸ் நகர் வேதசாஸ்திரிகளுடைய வாக்கு வெகு கனமுடையதுதான், நாமும் அதைக் கனமாய் மதிக்கவேண்டியதுதான்; என்றாலும் அதனால் நாம் மனங்கலங்கவேண்டுவதில்லை. இத்தின்மையைப் பரிகரிப்பதற்கு, அவசியமானால்,

—அவ்வித அவசியம் நேரிடாதென்றெண்ணுகிறேன்,—நீங்கள் விரும்புவதிலும் அதிக சாந்தமும் அவ்வளவு ஆபத்துக்கு இடமில்லாததுமான வேறு வழிகள் நாம் தேடிக்கொள்ளலாம்.” என்று, பொங்கும் பாலுக்கு தண்ணீர் தெளித்தாற்போல் அன்பமொழி உரைத்து சுவாமிமார்களுடைய ஆத்திரத்தை அமர்த்திவந்தார். எவ்வளவுதான் கொடிய நிந்தை அவமானங்கள் நமக்கு செய்யப்பட்டபோதிலும், அதனால் இருதயத்தில் கிஞ்சித்தேனும் ஆக்கிரஹம் எரிச்சல் முதலியவைகளுக்கு இடங்கொடுத்தல், சுடுசொல் கடுஞ்சொல் பிரயோகித்து வாதாடுதல், தேவநேசப் பெருந்தன்மைக்கும் சேசுக்கிறீஸ்துநாதர் கற்றுக்கொடுத்த தாழ்ச்சியும் சாந்தமும் அமைந்த உத்தமதனத்துக்கும் பொருந்தாததென்றும்; அநேக சமயங்களில் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் எனும் பற்றுதலைப் போர்வையாகக்கொண்டு மாறுவேஷம் தரித்து, பழிவாங்கவேண்டுமென்னும் பற்றுதல் உள்ளத்தைக் கவர்ந்திருப்பதுமுண்டு என்றும் அவர்களுக்கு தெளிவாய் விளக்கிக் காண்பித்துவந்தார்.

ஆயினும் இந்த ஆபத்துவேளையில் இஞ்ஞாசியார் முயற்சி ஒன்றுமின்றி சும்மாயிருக்கவில்லை. 1555-ம் வருஷம், பிரான்ஸு தேசத்தில் சேசுசபைக்கு அநுசரணையாயிருந்த ஒரு கர்தினாலுடன் (Cardinal of Lorraine) ‘**சோர்போன்**’ கலாசங்கத்தவரான நாலு சாஸ்திரிகள் உரோமைக்கு வந்தார்கள்.



அவர்களுள் பெனுவா (Benoit) என்பவர் ஒருவர். இவர்தான் சேசுசபைமீது குற்றம் சாட்டியவர். இந்நால்வரும் லேய்னஸ், ஓலாவ், பொலான்கோ, ஆந்த்ரே (Andre des Freeux) என்னும் சேசுசபை சுவாமிமார்களுடன் கர்தினால் மாளிகையிற்றானே கலந்துபேச வேண்டுமென்று அர்ச்சியசிஷ்டவர் மன்றாடினார். ஓலாவ் (Olave) என்ற சுவாமியார் சேசுசபையில் சேர்வதற்குமுன், **சோர்போன்** கலாசங்கத்திலிருந்தவர். இவர் அன்று எடுத்துரைத்த நியாயங்கள் இந்நாள்மட்டும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவர் சொன்ன நியாயங்களால் **பெனுவா** சாஸ்திரியும் மற்றவர்களும் மனந்தெளிந்து, காரியங்களை நன்றாய் ஆராய்ந்து பாராமலும் கேள்விப் பேச்சுகளை நம்பியும் தீர்மானஞ் செய்யப்போய், மோசம் வந்து நேர்ந்தது என்றார்கள். மேலும் இதுகாலம் தங்களுக்கு விரோதமாய் அர்ச். பாப்பானவர் சமுகம் விண்ணப்பம் செய்யாமலும் சேசுசபைக்கு அநுசரணையாயிருந்த கர்தினால்மார்களுடைய சலுகையைத் தேடாமலும், ஒருவருக்கும் மனவருத்தமின்றி விவகாரத்தை முடித்துக்கொள்ளும்படி இச்சந்தர்ப்பத்துக்கு எதிர்பார்த்திருந்த அர்ச். இஞ்ஞாசியாருடைய நீடிய சாந்தம் பொறுமையை வியந்து பாராட்டினார்கள்.

இதுவுமன்றி அர்ச்சியசிஷ்டவர் தம் மக்கள் தேவ தோத்திரத்துக்காக உழைத்துவந்த ஐரோப்

பாவின் பற்பல பாகங்களிலுமுள்ள ஞானமேய்ப்பர்களுக்கும், இராஜாங்கத்தில் மேலான அதிகாரம் வகித்தவர்களுக்கும் மற்றும் பெரியோருக்கும், ஆங்காங்குள்ள சிரேஷ்டர்கள் மூலியமாய் எழுதி, அவ்விடங்களிலிருக்கும் சேசுசபையாருடைய நடபடிகள், போதனை கோட்பாடுகளைப் பற்றி தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று மன்றாடினார். சேசுசபைக்கு முற்றும் அநுசரணையும் புகழ்ச்சியுமான நற்சாட்சிப் பத்திரங்கள் அதிசீக்கிரம் நாலாபக்கங்களிலுமிருந்து திரளாய் வந்தன. இத்தாலியாவிலிருக்கும் பெரார (Ferrara) நகரிலிருந்து வந்த இரு நற்சாட்சி பத்திரங்களில் ஒன்று அந்நகர் சர்வ கலாசாலை அதிபராலும் முப்பத்திரண்டு ஆசிரியர்களாலும் எழுதப்பட்டு. பாரீஸ்நகர் சர்வ கலாசாலைக்கும் முக்கியமாய் 'சோர்போன்' கலாசங்கத்தலைவர்களுக்கும் நேராய் அனுப்பப்பட்டது. போர்த்துகால் தேசத்தரசர் சேசுசபைக்குப் பரிவாக அர்ச். பாப்பானவர் சமூகம் இரு கடிதம் எழுதினார். ஒரே வார்த்தையில், ஐரோப்பாவில் எங்கெங்கு சேசுசபை ஸ்தாபகம் பெற்றிருந்ததோ, அங்குள்ள ஞான அதிகாரிகள், நகராதிகாரிகள், பிரபுக்கள், கலாசாலை அதிபர்களெல்லாம் ஒருவாய் ஒருமொழியாய் சேசுசபையை ஸ்துதித்து நற்சாட்சி பத்திரம் அளித்தனர். இப்படி உலகமெல்லாம் ஒருங்குடன் உண்மைக்குச் சாட்சிசொல்ல



எழுந்துவந்ததும், 'சோர்போன்' கலாசங்கம் செய்த தீர்ப்பினால் இரைந்தெழும்பிய பெரும் புசல் தானாக மாய்ந்துபோயிற்று. எது விவகாரத்திலும் இடர்செய்தவர்கள்மேல் ஜெயங்கொண்டு அவர்களை சிட்சித்துத் தலைநாணச் செய்யவேண்டுமென்பதையல்ல, தேவதோத்திரத்தை முன்னிட்டுத் தமது சபையார் நடத்திவந்த ஆத்தும இரட்சணிய அலுவலுக்கு நேர்ந்த பெரும் விக்கினங்களை நீக்குதல் ஒன்றைமாத்திரம் கருதிவந்த அர்ச்சியசிஷ்டவர், இது ஒன்று கைகூடியதும், மற்றவைகளையெல்லாம் அருமையான பிறர்சிநேகப் பெருந்தன்மையுடன் பாராமுகம் செய்து, இதோடு காரியம் நிற்கட்டுமென்று சும்மாயிருந்துவிட்டார்.

அர்ச்சியசிஷ்டவர் சும்மாயிருந்துவிட்டாரென்றாலும், இஸ்பானிய தேசத்தில் சரகோஸா (Saragossa) பட்டணத்து வேத விசாரணை சங்கக் கர்த்தாக்கள் சும்மாயிருக்கவில்லை. பாரீஸ் நகரில் சேசுசபைக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்டவைகள் உண்மைக்கு ஒவ்வாதவைகளென்றும், அர்ச். பாப்பானவருடைய ஞான அதிகாரத்துக்கு அவமரியாதையானவைகளென்றும், இவர்கள் எதிர்த் தீர்ப்பு செய்ததுமன்றி, மேற்சொன்ன அவதூறுகளடங்கிய எழுத்துகள் யாவும் கிழித்து நீக்கப்படவேண்டுமென்றும், அவைகளைத் தூற்றிவருகிறவர்களைப்பற்றி மூன்று நாட்களுக்குள் வேதவிசாரணை சங்கத்துக்கு அறிவிக்கவேண்டுமென்றும்,

இந்நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியாதவர்கள் திருச் சபைக்கு புறம்பாகத் தள்ளப்பட்டவர்களென்றும் ஓர் கட்டளையும் பிரசித்தப்படுத்தினர்.

இப்பெருந் துன்பத்தின் நற்பலனாக பிரான்ஸ் தேசத்தில் சேசுசபைக் கலாசாலைகள் இன்னும் இரண்டு அதிசீக்கிரம் ஸ்தாபகம் பெற்றன. அத் தேசத்திற்றானே இரு கர்தினால்மார்கள் சேசு சபைக்கு சகாயிகளாக ஏற்பட்டனர்.

ஜெர்மானிய தேசத்திலும், பெல்ஜிய தேசத்தி லும் துன்பமில்லாமற் போகவில்லை. ஜெர்மானிய தேசத்தில், உரோமையில் அர்ச். இஞ்ஞாசியார் ஏற்படுத்தியிருந்த ஜெர்மன் காலேஜினின்று நன் னடக்கைக் குறைவின் நிமித்தம் தள்ளப்பட்ட ஒரு மாணாக்கன், அக்கலாசாலையில் மாணாக்கர்களுக்கு போதுமான போசனம் கிடைக்கிறதில்லையென் றும், சுவாமிமார்கள் மாணாக்கரை வெகு கடுமையாய் நடத்தி வருகிறார்களென்றும், பலவாறாய் கட்டுக் கதைகள்கூற ஆரம்பித்தான். சேசுசபை விரோதி கள் இக்கட்டுக்கதைகளை பாராமுகமாய் விட்டுவிட வில்லை.

பெல்ஜிய தேசத்தில் சேசுசபைக் கலாசாலைகள் ஸ்தாபிக்க அர்ச். இஞ்ஞாசியார் வெகு விருப்பமுற் றிருந்தார். அரசன் அதற்கு அநுசரணையாயிருந்தா ரென்றாலும், அரசனுடைய மந்திராலோசனை சபைத்தலைவராயிருந்த ஸ்வீக்கன் (Zwichen) என்பவரும், சில மேற்றிராணிமார்களும் அதற்கு



தடை செய்துவந்தார்கள். இதுசமயம் 1555-ம் வூ, ஒக்டோபர்-மீ ரிபதனீரா சுவாமியாரை அர்ச்சியசிஷ்டவர் பெல்ஜிய தேசத்துக்கு அனுப்பி வைத்தார். இருபத்தேழுவயது இன்னும் முற்ற முடியாத வாலிபர்தானென்றாலும், ஏற்கனவே இலத்தீன் பாஷையில் எழுதுவதிலும் பேசுவதிலும் வெகு திருத்தமும் சாதுரியமும் அமையப்பெற்றவ ராகவும், கல்வியில் தேர்ந்த விற்பன்னராகவும், எவரும் மனம் உவந்துகேட்டு மனம் பணியும்படி யான விதமாய் பிரசங்கம்செய்யும் ஓர் விசேஷ அருள்வரம் உடையவராகவும் விளங்கினார் நமது ரிப தனீரா சுவாமியார். மேற்சொன்ன இராஜ்யத்தில் சேசுசபை ஸ்தாபகம் பெறுதற்கு, இவருடைய கல் வித் திறமையும் பிரசங்க வல்லமையும் உதவியா யிருக்குமென்றெண்ணித்தான், அர்ச். இஞ்ஞாசியார் இவரை அவ்விடத்துக்கு அனுப்பினார். அர்ச்சிய சிஷ்டவர் யூகித்ததுபோலவே எல்லாம் சம்ப வித்தது.

அவர் இலத்தீன் பாஷையில் செய்த முதல் பிரசங் கத்தைக் கேட்பதற்கே திரளானபேர் கூடிவந்தன ரென்றும்; இரண்டாவது மூன்றாவதுவிசை அதி லும் அதிகமானபேர் வந்தனரென்றும்; தேர்ந்த பிரசங்கிகள் முதலாய் அவர் பிரசங்கங்களைக் கேட்க ஆவல்கொண்டு வந்தனரென்றும்; இலத் தீன் பாஷையில் நன்றாய்ப் பிரசங்கம் செய்துவந்த அமேரோ (Ameroh) என்றொரு சாஸ்திரியார்

தமது மாணாக்கர்களுடன் வரத்தவறினதில்லையென்றும்; ஓர்நாள் ரிபதனீரா சுவாமியார் பிரசங்கம் துவக்குவதற்கு ஒருமணி நேரத்துக்குமுன் வேறோர் தேவாலயத்தில் பிரசங்கம்செய்துகொண்டிருந்த அர்ச். சாமிநாதர்சபை சந்நியாசக் குரு ஒருவர் பிரசங்கமுடிவில் ரிபதனீரா சுவாமியாருடைய பிரசங்கங்களை ஸ்துதித்துப்பேசி, அவர் செய்யப்போகும் பிரசங்கத்தைக்கேட்க ஆலயத்திலிருந்தவர்களையெல்லாம் தம்முடன் அழைத்துக்கொண்டு வந்தனரென்றும்; சிலர் அவருடைய பிரசங்கங்களை அச்சிட்டுப் பிரசுரமாக்க ஆசிக்கின்றனரென்றும்; அவரைப்போல் நன்றாய்ப் பிரசங்கம் செய்யக் கற்றுக்கொள்ளும்படி அநேகர், அவர் பிரசங்கம் செய்யும்பொழுது ஒவ்வொன்றும் எவ்விதம் செய்கின்றாரென்று வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்து வருகின்றனரென்றும் ரிபதனீரா சுவாமியாருடனிருந்த பொர்நார்து ஒலிவியர் சுவாமியார் அர்ச். இஞ்ஞாசியாருக்கு எழுதின ஒரு கடிதத்தில் சொல்லுகிறார். ப்ரஸல்ஸ் (Brussels) பட்டணத்தில் மூன்று இராஜாக்கள் திருநாளன்று அவர் செய்த பிரசங்கத்துக்கு அரண்மனையிலுள்ள பெரிய பிரபுக்களும் அரசனுடைய மந்திராலோசனை சபையோர் அனைவரும் வந்தனரென்றும், பிரசங்கத்தின் பொருள், நடை, பிரசங்கியின் வாய்மொழிகளில் விளங்கிய அருள், முக அமைதி, கண்ணோக்கம், கைமெய்யசைவு எல்லாம் வெகு உசிதம்,—



வெகு சிரேஷ்டம் என்று யாவரும் புகழ்ந்துகொண்டனரென்றும், மேற்சொன்ன பொர்நார்து சுவாமியார் தாமே 1556-ம் ௵ ஜனவரி-௴ 11-௳, அர்ச்சியசிஷ்டவருக்கு எழுதிய வேறோர் கடிதத்தில் சொல்லுகிறார். "தேவ சாஸ்திரப் பயிற்சி செய்து வருகிறவர்களுக்குப் பிரசங்கம் செய்யும் வகை நான் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றும், என் பிரசங்கங்களை அச்சுப்பதித்து பிரசுரமாக்க வேண்டுமென்றும் என்னைக் கேட்கிறார்கள்" என்று ரிபதனீரா சுவாமியார் தாமே அர்ச்சியசிஷ்டவருக்கு எழுதினார். அவர் பிரசங்கத்தைக் கேட்ட அநேகர் வாரந்தோறும் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்வியநன்மை உட்கொண்டுவர பிரதிக்கினை செய்துகொண்டதாக அவர் கடிதத்தாலேயே தெரியவருகின்றது. அரசனும் மந்திராலோசனைசபையில் அநேகரும் அநேக பிரபுக்களும் பெரியோர்களும் ரிபதனீரா சுவாமியார்மீதும் சேசுசபைமீதும் பேரன்புடையவர்களானார்கள். அர்ச். இஞ்ஞாசியார் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காக ஆவலாய் விரும்பியிருந்த காரியமும் நிறைவு பெற்றது. 1556-ம் ௵, ஆகஸ்டு-௴ 20-ம் ௳ அரசன் அளித்த அநுமதிப் பத்திரத்தால் சேசுசபை பெல்ஜிய இராஜ்யத்தில் ஸ்தாபகம் பெற்றது. ஆனால் இச்சுபசெய்தி அறிவதற்குமுன், அர்ச்சியசிஷ்டவர் இகலோக சீவியம் முடிவு பெற்று, பரலோக பேரின்ப சீவியத்துக்கு அழைத்

துக்கொள்ளப்பட்டார். ரிபதனீரா சுவாமியாரோ
வென்றால் பரலோகத்தில் அர்ச்சியசிஷ்டவருடைய
மன்றாட்டினாற்றான் இது கைகூடியதென்று நம்பி
வந்தார்.

மலைபோல் எதிர்நிற்கும் எப்பெருந் துன்பதுரி
தங்களிலும் சிந்தையில் அற்பமும் நடுங்காது, அத்
துன்பங்கள் துன்பங்களல்ல, பெரும்பாக்கியமென்
றெண்ணி உற்சாகமுற்றிருப்பவர், ஒருவிஷயத்தில்
மெய்யாகவே சிந்தாகுலம் மிகுந்தவராய், தேவ
உதவியை மாத்திரமல்ல, மனுஷர் உதவியைத்
தேடுவதிலும், சாவதானம் என்பதை மறந்தவர்
போல வெகு துரிதமும் ஆத்திரமுமுள்ளவராகக்
காணப்பட்டார்.

முதலாவது பெர்தினாந்து (Ferdinand I) என்
னும் ஜெர்மானிய தேசத்தரசன் பொபாதில்லா
சுவாமியாரை த்ரிஸ்த் (Trieste) என்ற நகரத்
துக்கு மேற்றிராணியாராக்கக் கருதினார். பொபா
தில்லா சுவாமியார் அதற்கு உடன்படாமல் தப்
பித்துக்கொண்டார். அதற்குப்பின் அரசன் லூஜே
சுவாமியாரை லேபாக் (Laybach) நகரத்து
மேற்றிராசனத்தில் அமர்த்த விரும்பினார். சுவாமி
யார் அதற்கு கிஞ்சித்தும் சம்மதியாததால், அரசன்
உரோமையில் தமது ஸ்தானாபதிக்கு எழுதி, லூஜே
சுவாமியாரை மேற்றிராணியாராக்க அர்ச். பாப்
பானவரிடம் சர்வ பிரயத்தனமும் செய்யவேண்டு
மென்று கற்பித்தார். சுவாமியாரோவென்றால்



அரசன் தம் எண்ணத்தை விட்டுவிடும்படி இராஜ
சமூகம் இருவிண்ணப்பம் எழுதியதுமன்றி, இது
விஷயத்தைப்பற்றி அர்ச். இஞ்ஞாசியாருக்கும்
எழுதினார். அர்ச்சியசிஷ்டவர் அரசனுடைய
ஸ்தானாபதியிடம் தீவிரித்துசென்று, அவர் மனதை
மாற்ற பிரயாசப்பட்டார். பிரயோசனப்பட
வில்லை. அதன்பின் தாமதியாமல், மூன்றாம் பவுல்
என்ற அர்ச். பாப்பானவர் சமூகம் சென்று, புதி
தாய் ஸ்தாபகம்பெற்ற தமது சிறு சபைமீது பரி
சுத்த பிதா இரக்கமாயிருக்கவேண்டுமென்று வெகு
கஸ்திப் பிரலாபமுடன் மன்றாடினார். பாப்பானவர்
அரசன் கருத்துக்கு இசைந்திருக்கக் கண்டு, தமக்கு
உற்ற நண்பர்களாயிருந்த சில கர்தினால்மார்
களுடைய சலுகையைத் தேடினார். அவர்களுள்
'சேசுசபையின் காவலன்' என்று பட்டம் வகித்த
ஓர் கர்தினால் (Cardinal Carpi) அர்ச்சிய
சிஷ்டவருக்குப் பரிவாக பெர்தினாந்தரசனுக்கு
ஓர் கடிதம் எழுதினார். அதாலும் அநுகூலம்
கிடைக்கவில்லை. கடைசித்தீர்மானம் சொல்லக்
குறிக்கப்பட்ட தினமும் நெருங்கிவந்தது. ஆஸ்த்
திரியா தேசத்து இராக்கினி மார்கரீத் அரசிக்கு
அர்ச்சியசிஷ்டவர் ஆத்தும குருவாயிருந்தார்.
தற்சமயம் இந்த அரசிக்கு எழுதினார். அவர்
கேட்டுக்கொண்டபடி மார்கரீத் அரசி அர்ச். பாப்
பானவருக்கு எழுதி, உரோமையிலிருந்து பெர்தி
னாந்தரசனுக்கு எழுதி பதில் வருமட்டும், தீர்மானம்

சொல்லாமல் காத்திருக்கவேண்டுமென்று மன்
றாடினாள். அர்ச்சியசிஷ்டவரோவென்றால், தாமதி
யாமல் பெர்திணந்தரசனுக்கு நேரில் ஒரு கடிதம்
எழுதினார். அக்கடிதத்தை வாசித்ததும் அரசன்
வேறுமனப்பட்டு, அர்ச்சியசிஷ்டவருடைய கருத்
துக்கு விரோதமாய் ஒன்றும் செய்யவேண்டா
மென்று உரோமையில் தமது ஸ்தானபதிக்கு எழுதி
னார். இலேஜ சுவாமியாரும் மேற்றிராணியார் பட்
டத்துக்குத் தப்பித்துக்கொண்டார். பெரும் ஆபத்
தினின்று ஆண்டவர் சேசுசபையைக் காப்பாற்றினா
ரென்று, சுவாமிமார்கள் தேவமகத்துவத்துக்கு
நன்றியறிந்த ஸ்தோத்திரமாக திவ்விய பூசை
செய்து ஒப்புக்கொடுக்கவும், 'தே தேயும்' (Te
Deum) என்ற ஸ்தோத்திரக் கீதம் பாடவும் அர்ச்
சியசிஷ்டவர் கற்பித்தார்.

அன்றியும் தமது மக்கள் மேற்றிராணியார் கர்தி
னால் முதலிய மகிமைப்பட்டம் வகித்து, திருச்சபை
யில் ஞான பிரபுத்துவம் நடத்துதல் சேசுசபை
ஸ்தாபிக்கப்பட்ட விசேஷ கதிக்கும் கருத்துக்கும்
பொருந்தாததென்று அர்ச். பாப்பானவர் நன்றாய்க்
கண்டுகொள்ளும்படியாய் பரிசுத்த பிதா சமுகம்
சென்று, பற்பல நியாயங்களை யெடுத்துரைத்து
வார்த்தையாடினார். இது விஷயத்தில் மற்றத்
துறவறச் சபைகளுக்கும், சேசுசபைக்குமுள்ள
வித்தியாசம் துலக்கமாய் விளங்கும்படி, அர்ச்சிய
சிஷ்டவர் பரிசுத்த பிதாவை நோக்கிச் சொல்லு



வார்: "பரிசுத்த பிதாவே, யுத்தசபையாகிய திருச்
சபையின் இராணுவத்தில், மற்ற சந்நியாச சபைகள்
நின்ற நிலை பெயராது அணி அணியாய் சத்துருக்
களை ஸ்திரமாய் எதிர்த்துநின்று, எப்பொழுதும்
ஒரே கிரமமாய் போர் பொருதும் பெரிய படைஞர்
வகுப்புகளைப் போன்றவர்களென்றெண்ணுகிறேன்.
நாங்களோவென்றால், ஆபத்துகாலத்தில் இரா
வென்றும் பகலென்றும் பாராது, எத்திசைக்கும்
ஏகி, சமயத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் இசைந்த
வாறு சத்துருக்களை அங்கும் இங்கும் எவ்விடத்தி
லும் தாக்கி யுத்தம் செய்யவும், தம்மவர்களுக்கு
ஒத்தாசையாய்த் தீவிரிக்கவும் சதா ஆயத்தமா
யிருக்கும்படி, இலேசாக மாத்திரம் ஆயுதம் தரித்து
துரகமேறிய வீரர்களைப்போலிருக்கிறோம். ஆகை
யால் கிறீஸ்துநாதருடைய ஸ்தானத்திலிருக்கிறவர்
ஓர் சொற்ப வார்த்தை சொன்னதும் உடனே கீழ்ப்
படிந்து, ஒரு பட்டணத்திலிருந்து வேறோர் பட்ட
ணத்துக்கும், ஓர் நாட்டிலிருந்து வேறோர் நாட்டுக்
கும், இன்னும் உலகத்தின் ஓர் முனையிலிருந்து
வேறோர் முனைக்கும் செல்ல இச்சபையார் கடமைப்
பட்டவர்களாயிருப்பதால், இவர்கள் ஓரிடத்துக்குக்
கட்டுப்பட்டவர்களாயிருத்தல் சரியல்ல" என்று
உரைத்தார்.

அர்ச். பாப்பானவர் இஞ்ஞாசியார் எடுத்துக்
கூறிய ஞாயங்களையெல்லாம் அங்கீகரித்துக்
கொண்டு ஆச்சரியப்பட்டார். பொபாதில்லா,

ஊஜே சுவாமிமார்கள் மாத்திரமல்ல, வேறு சுவாமிமார்களும், திருச்சபையில் தங்களுக்கு வரவிருந்த மகிமைப் பட்டங்களை அகற்றிவிடும்படி போராடவேண்டி நேர்ந்தது.

ஏற்கனவே சேசுசபையில் இரகசியமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வெளிக்கோலத்தில் இன்னும் காந்தியாநாட்டுப் பிரபுவாக விளங்கிய அர்ச்சிய**சிஷ்ட பிரான்சீஸ்கு போர்ஜியார்,** 1551-ம் வருஷக் கடைசியில், உரோமைக்குச் சென்றார். இத்தருணம் ஐந்தாவது கார்லூஸ் என்னும் இஸ்பாஞ்ஞிய தேசத்தரசன் போர்ஜியாரை கர்தினாலாக்க விரும்பி, அதற்காக அர்ச். பாப்பானவரிடம் விண்ணப்பம் செய்தார். ஏதோ கொடிய தண்டனைக்குத் தப்பிப் பிழைக்க ஒளிந்தோடுபவர்போல், இச்செய்தி கேட்ட அன்றிரவே போர்ஜியார் உரோமையைவிட்டு இஸ்பாஞ்ஞிய தேசத்துக்கு தீவிரமாய் பிரயாணப்பட்டார். அங்கு சேர்ந்ததும் குடும்ப சொத்துக்களையெல்லாம் தம் மக்கள் கையில் ஒப்பித்துவிட்டு, தாமதியாமல் குருப்பட்டம் பெற்று, லொயோலா மாளிகையில் அர்ச். இஞ்ஞாசியார் பிறந்த அறையில் முதற்பூசையும் செய்து* உடனே பிறர் ஆத்தும இரட்சணிய அலுவலை ஆரம்பித்தார். உரோமையில் அர்ச். இஞ்ஞாசியார் வெகு விமரிசையுடன் முயற்சிசெய்து போர்ஜியாருக்கு

* சில சரித்திராசிரியர் முதற்பூசையல்ல, இரண்டாவது பூசை என்கிறார்கள்.



நியமிக்கப்பட்டிருந்த கர்தினால் பட்டத்தை அகற்றிவிட்டார்.

ஆனால் நாலு வருஷத்துக்குப்பின், 1555-ம் ௵ கார்லூஸ் அரசனது சிரேஷ்ட குமாரன் பிலிப்பரசன் (Philip II) தன் தந்தை ஓர் காலத்தில் கருதியிருந்ததை தாமும் கருதி, போர்ஜியாரைக் கர்தினாலாக்க பிரயத்தனம் பண்ணினார். இதுசமயம் பிலிப்பரசன், எட்டாவது ஹென்ரீ என்னும் கொடுங்கோலனுடைய நிஷ்டூரத்தால் துன்புற்று மரித்த கத்தரீன் இராக்கினியின் குமாரத்தி மேரி (Mary) என்ற இங்கிலாந்து தேசத்தரசியை விவாஹம் செய்து, பாரியாளுடன் அத்தேசத்தில் சில காலம் போக்கிவந்தார். அவருக்குப் பதிலாய் அவர் சகோதரி ஜுவானா என்ற அரசி தற்காலம் இஸ்பாஞ்ஞிய தேசத்தில் இராஜ்யபாரம் வகித்துவந்தாள். இவ்வரசி சேசுசபையை வெகுவாய் அபிமானித்து ஆதரித்துவந்தாள். வரவிருந்த கர்தினால் பட்டத்துக்குத் தடைசெய்யும்படி அர்ச். இஞ்ஞாசியாரும், அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியாரும், இவ்வரசியை மன்றாடினார்கள். தன் சகோதரி வார்த்தைக்கிணங்கி, பிலிப்பு அரசனும் தம் எண்ணத்தை விட்டுவிட்டார்.

திருச்சபையின் ஞான பிரபுத்துவங்கள் தமது சபையில் உட்பிரவேசியாதிருக்கும்படி இஞ்ஞாசியார் என்றும் வெகு ஜாக்கிரதையாயிருந்ததை

இவ்வாசி புகழ்ந்துகொண்டு, அவருக்கு ஓர் கடித மெழுதினாள். அதில், "சர்வேசுரன் ஒவ்வொரு சந்நியாச சபைக்கும [illegible] இலட்சணமும் கதியும் கொடுக்கிறார்; அதனை மீறிநடத்தல் பெருந் தீங்கு விளைவதற்கேதுவாயிருக்கும்" என்றாள்.

போர்ஜியார் தனக்கு வேண்டாமென்று அகற்றி விட்ட கர்தினால் பட்டம், பிலிப்பரசனுடைய கோரிக்கையால், போர்ஜியாருக்கு இனபந்துவாயிருந்த அந்தோனியோ தே கோர்டோவா (Antonio de Cordova) என்ற ஓர் வாலிபருக்கு அருளப்பட்டது. சிறந்த புத்திக்கூர்மையும் நற்குணமும் அமையப்பெற்ற இவ்வாலிபர், அந்தப் பாரம் தனக்கும் வேண்டாமென்று, அர்ச். இஞ்ஞாசியாருக்கு விண்ணப்பம் செய்து சேசுசபையில் சேர்ந்து கொண்டார்.

முன் பொபாதில்லா, லெஜே சுவாமிமார்களை மேற்றிராணத்துக்கு உயர்த்த பிரயத்தனம்செய்த பெர்டினந்தரசன் 1553-ம் வருடம், ஜெர்மானிய தேசத்தில் சத்திய மறைக்காக உழைத்துவந்த அர்ச். கனிஸியுஸ் சுவாமியாரை மேற்றிராணியாராக்க வாஞ்சையுற்று அதற்கான முயற்சியெடுத்தார். மேற்றிராணியார் பட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி பரிசுத்த கீழ்ப்படிதல்பேரால் கனிஸியுஸ் சுவாமியாருக்கு கட்டளையிடவேண்டுமென்று உரோமையில் அரசனுடைய ஸ்தானாபதி அர்ச்.



பாப்பானவரை வருந்தி மன்றாடிவந்தார். ஆனால் அர்ச். இஞ்ஞாசியாரை வெகு கனமாய் மதித்திருந்த பரிசுத்த பிதா மூன்றாவது ஜூலியுஸ் என்பவர் அவ்விதம் கட்டளையிட உடன்படவில்லை. கனிஸியுஸ் சுவாமியாரும் மேற்றிராணியாராகவில்லை.

இதற்கு சில காலத்துக்குப்பின் நாலாவது பவுல் என்னும் அர்ச். பாப்பானவர் லேய்னஸ் சுவாமியாரை கர்தினாலாக்க விரும்பினார். அதுவும் நிறைவேறாதபடி அர்ச்சியசிஷ்டவர் பல ஆக்ஷேபனைகளைச் சொல்லித் தடுத்துவிட்டார்.

முன்னொருநாள் ஓர் பயித்தியக்காரனைப்போல் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு ஜெருசலேம் தெருவீதிகளில் ஆகடியம் செய்யப்பட்டு, சிரசில் முள்முடியும், தோளில் பாரச்சிலுவையும் வகித்தவராய் கபால மலைக்கேகிய திவ்விய சுதன் உருவத்தை அத்தியந்த நேசப் பற்றுதலுடன் தங்கள் இருதயத்தில் பதியச்செய்து, அத்திவ்விய சுதன்மீதுள்ள நேசவாஞ்சையினால் அவர் மாதிரியாய் மகிமை பெருமை, சுகசெல்வங்களை பற்றற வெறுத்துநீக்கி, நிந்தை அவமான நிர்ப்பந்தங்களை மனப்பிரியமாய்ப் பேராவலுடன் தேடி, சகலத்திலும் அவரை அன்னியோன்னியமாய்ப் பின்சென்று நடக்கும்படி தங்களை முழுதும் தேவமகத்துவத்துக்கு நேர்ந்து ஒப்புக்கொடுத்த தமது ஞான புத்திரர்கள் திருச்-

சபையில் முதலாய மகிமைப் பட்டங்கள் வகித்திருத்தல், சேசுசபையின விசேஷ சுகிக்கும் கருத்துக்கும் பொருந்தாததென்று எவ்வளவு ஸ்திரமாய் அர்ச். இஞ்ஞாசியார் எண்ணியிருந்தாரென்றால், 'ஜெனரல்' சுவாமியாருடைய அநுமதியின்றி சேசுசபையார் அவ்வித பட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படாதென்றும், 'ஜெனரல்' சுவாமியாரோவென்றால் அர்ச். பாப்பானவரால் கண்டிப்பாய் கட்டளையிடப்பட்டாலன்றி மற்றப்படி ஒருபோதும் அவ்வித அனுமதி கொடுக்கப்படாதென்றும், தமது ஏற்பாட்டாகமத்தில் அர்ச். பாப்பானவருடைய சம்மதி பெற்று, சேர்த்தெழுதினார்.

ஆயினும் ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள அபிஸ்ஸினியா, எதியோப்பியா என்ற தூரப்பிரதேசங்களுக்குப் 'பிதாப்பிதா' (Patriarch) என்று சொல்லப்படும் விசேஷ அதிமேற்றிராணியாராக ஒருவரும், அவருக்கு ஒத்தாசையாக இரு துணை மேற்றிராணிமார்களும் சேசுசபையினின்று தெரிந்தனுப்பவேண்டுமென்று, மூன்றாவது ஜோவாம் என்னும் போர்த்துகால் தேசத்தரசன் அர்ச். இஞ்ஞாசியாரை விரும்பிக் கேட்டபோது, அதற்கு அர்ச்சியசிஷ்டவர் அட்டியின்றி உடன்பட்டார். மேலும், அரசன் தாம் கருதியதை நிறைவேற்ற காலதாமதம் செய்தபொழுது, அர்ச்சியசிஷ்டவர் தாமே அவரைத் துரிதப்படுத்திவந்தார். கடைசி



யாய் 1553-ம் ௵ சேசுசபையிலிருந்து ஜுவான் நூநஸ் (Juan Nunez) என்ற சுவாமியார் பிதாப்பிதாவாகவும், ஓவியேடோ, கார்னெய்ரோ (Oviedo, Carneiro) என்ற சுவாமிமார்கள் துணைமேற்றிராணிமார்களாகவும் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

மேற்சொன்னபடி தமது சபையார் திருச்சபையில் உன்னத ஸ்தானங்களை கையேற்றுக்கொள்ளப்படாதென்று ஏற்பாட்டாகமத்தில் விதித்தெழுதிய இடத்தில் எதியோப்பியாவுக்கு பிதாப்பிதாவும் மேற்றிராணிமார்களும் தெரிந்துகொள்ளப்பட்ட விஷயத்தில் "தடை செய்தல் கூடாததாயிருந்தது" என்றும், "ஆட்சேபிக்க இடமில்லாமற்போயிற்றென்றும்" தமது கையாலேயே எழுதிவைத்திருக்கிறார். அதாவது: அஞ்ஞான இருளடர்ந்த இத்தூரப் பிரதேசங்களில் பரதேசிகளாயிருந்து இவ்வித உத்தியோகங்கள் வகித்திருப்பவர்கள் எவ்வித அல்லல் தொல்லையும், துன்பதுரிதங்களும் பட ஆயத்தமாயிருக்கவேண்டுமேயன்றி, செல்வ சுகங்களுக்கும் வரிசை வெகுமானங்களுக்கும் ஆசைப்பட வழியிராதென்றும், இவ்வஞ்ஞானப் பிரதேசங்களில் சத்தியவேதம் பரம்புதற்கு இது அவசியமென்றும் அறிந்திருந்ததால், இதுவிஷயத்தில் ஆட்சேபிக்க அர்ச்சியசிஷ்டவர் துணியவில்லையென்று தோன்றுகின்றது.

---

## 10-ம் அதிகாரம்.

தேவதோத்திரத்தை நாடி அர்ச்சியசிஷ்டவர் செய்த பரோபகாரப் பேருபகாரங்கள்—'உரோமன் காலேஜ்'—'ஜெர்மன் காலேஜ்'—கலாசாலைகள் விஷயமாய் நேர்ந்த துன்பங்கள் — பெர்நார்து ஒலிவியர் — பால்பர் பிரயோகிக்கும் புஸ்தகங்கள் விஷயத்தில் அர்ச்சியசிஷ்டவர் செய்துவந்த எச்சரிக்கை —அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலம்—மனந் திரும்பின யூதர்களுக்காக ஏற்படுத்திய தர்மசாலை—ஜெருசலேம்—பலஸ்தீன்.

சேசுசபையை ஆண்டு நடத்திவருவதும், ஏற்பாட்டு ஒழுங்குகளை அமைத்துக்கொடுப்பதுமே ஓய்வு ஒழிவு என்பதற்கிடமின்றி, பெரும்பாரக் கடமையாய் அர்ச்சியசிஷ்டவர்மேல் பொறுத்திருந்தாலும், தேவசிநேகம் பற்றியெரிந்த அவர் இருதயம் உலகமனைத்தும் சிந்தித்து, உலகமெங்கும் தேவதோத்திரத்தை அதிகரிப்பதற்கேற்ற வழியாதென்று யூகிப்பதிலும், அதனைப் பிரயத்தனப்பட்டுச் செய்து முடிப்பதிலும் என்றும் விடா முயற்சியாயிருந்தது.

நுண்ணிய விஷம்போல் பதித துர்ப்போதனை எங்கும் பரவி, சத்திய விசுவாசத்துக்கு சதிசெய்து வந்த அக்காலத்தில், கிறீஸ்துவ வாலிபர்கள், விசேஷமாய்க் குருப்பட்டத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தத்துவசாஸ்திரத்திலும் தேவசாஸ்திரத்திலும் மற்ற கல்வி நூற்களிலும் தேர்ச்சி அடையும்படி, தேவபராமரிப்பில் தமக்குள்ள அணைகடந்த நம்பிக்கையைத் தவிர, வேறு ஆதாரமின்றி, 1550-ம் ௵ உரோமாபுரியில், 'உரோமன் காலேஜ்' (Roman College) என்னும் ஒரு பெரிய கலாசாலை ஸ்தாபித்து, மேன்மேலும் அதை விருத்தியாக்கிக்கொண்டு வந்தார். ஐரோப்பாவின் எப்பக்கங்களிலுமிருந்து வாலிபர்கள் அங்கு வந்து சாஸ்திரம் பயின்றுவந்தார்கள். ஐந்து வருஷத்துக்குள் இக்கலாசாலை மாணவர்களில் நூறு பேர் ஏற்கனவே குருப்பட்டம் பெற்று ஐரோப்பாவின் பற்பல பாகங்களில் பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காக உழைக்கும்படி அனுப்பப்பட்டார்கள். இன்னும் இருநூறுபேர் குருப்பட்டத்துக்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

பதித மார்க்கத்தின் கொடுமை அதிக மும்முரமாயிருந்த ஜெர்மானியா தேசத்தை நினைத்து, அத்தேசத்து வாலிபர்களுக்காக உரோமாபுரியிற்றானே 1552-ம் ௵ 'ஜெர்மன் காலேஜ்' (German College) என்னும் வேறோர் பெரிய கலாசாலையை ஸ்தாபித்தார். ஜெர்மானியா தேசத்து வாலிபர் அநேகர் இக்கலாசாலையில் சாஸ்திரம் பயின்று குருப்பட்டம் பெற்று, தங்கள் ஜென்மதேசத்துக்

குத் திரும்பிப்போய் அங்கு பதித இருளை நீக்கி, சத்தியமறை திரும்ப விளங்கச் செய்வதற்காகப் பிரயத்தனப்பட்டுவந்தார்கள். ஜெர்மானியா தேசத்தை மாத்திரமல்ல, இங்கிலாந்து, ஐர்லாந்து முதலிய சீமைகளையும் நினைவுகூர்ந்து, அவ்விடங்களிலிருந்து வரும் வாலிபர்களையும் இக்கலாசாலைகளில் ஏற்றுக்கொள்ளத் தாம் ஆயத்தமாயிருப்பதாக, இங்கிலாந்திலிருந்த 'ரெஜினல்ட் போல்' (Cardinal Reginald Pole) என்னும் கர்தினாலுக்கு 1555-ம் ௵ ஜூன்-௴ 2-ம் ௳ எழுதின ஒரு கடிதத்தில் சொல்லுகிறார்.

கலாசாலைகள் விஷயமாய், இஞ்ஞாசியாருக்கும் அவர் சபையாருக்கும்நேர்ந்த துன்பங்கள் இத்தனை அத்தனையென்றல்ல. மேற்சொன்ன இரு கலாசாலைகளும், அர்ச். பாப்பானவராலும் கர்தினால்மார்கள் அநேகராலும் அபிமானிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பொருளுதவியும் பெற்று, அதிசீக்கிரம் மேன்மை அடைந்தன. அதுபோலவே மற்றவிடங்களிலும், தர்மிஷ்டர் அநேகருடைய உதார சகாயத்தாலும், அர்ச். இஞ்ஞாசியார் அமைத்துக் கொடுத்த சிரேஷ்டமான ஒழுங்குகளைப் பின்சென்று கல்வி புகட்டிவந்த சுவாமிமார்களுடைய ஊக்கமுயற்சியினாலும், சேசுசபைக் கலாசாலைகள் அதிசீக்கிரம் பேரும் பிரக்கியாதியும் அடைந்தன. இதனால் பொறாமை மேற்கொண்ட பலர் பலவிதமாய் இக்கலாசாலைகளின் நற்பெயருக்குத் தீங்



கிழைக்க முயன்றார்கள். சேசுசபையார் போதனையில் பதிதவிஷம் கலந்திருக்கின்றதென்று எங்கும் தூற்ற எத்தனித்தார்கள். இவ்வபாண்டத்தை நம்புவார் ஒருவருமில்லையென்று கண்டு, அதைவிட்டு, சேசுசபையார் படிப்பில்லாதவர்கள், ஒன்றுந் தெரியாதவர்கள் என்று சொல்லத் தலைப்பட்டார்கள். இவ்விதம் அவதூறு சொல்லுபவர்களோடு வாதுக்கு நிற்காமல், எங்களுக்குத் தெரிந்தது சொற்பமே, ஆயினும் அந்த சொற்பத்தைக்கொண்டு சர்வேசுரனுக்கும் மனிதர்களுக்கும் ஊழியம் செய்யப் பிரயாசப்பட்டு வருகிறோம் என்று சாதுவாய் பதிலுரைத்து அமரிக்கையாயிருக்கும்படி அர்ச்சியசிஷ்டவர் தம் மக்களுக்குக் கற்பித்தார்.

கலாசாலை மாணாக்கர்களில் அநேகர் சேசுசபையில் உட்பட்டுவந்தார்கள். இப்படி உட்பட்டவர்களுடைய தாய்தந்தை உறவினர்களாலும் சில சமயங்களில் பெரும் உபத்திரவம் நேர்ந்தது. சிஸிலி (Sicily) என்ற தீவில் ஒக்தாவியுஸ் சேசார் (Octavius Cæsar) என்றொரு வாலிபர், தன் தந்தையின் சம்மதமின்றிச் சேசுசபையில் பிரவேசித்தார். உபத்திரவத்துக்கேதுவில்லாதிருக்குமாறு, இஞ்ஞாசியார் இவ்வாலிபரை உரோமைக்குத் தருவித்துக்கொண்டார். வாலிபருடைய தந்தையும் தாயும் உடனே மகனைப் பின்சென்று அங்கு வந்து சேர்ந்தார்கள். தந்தை, மூன்றாவது ஜூலியுஸ்

(Julius III) என்னும் அர்ச். பாப்பானவர்முன், அர்ச்சியசிஷ்டவருக்கு விரோதமாய் விண்ணப்பம் செய்தார். தாயோவென்றால், உரோமை நகரில் வீடு வீடாய்ப் போய் ஒரு ஸ்திரீ பெற்று வளர்த்த பிள்ளையை அவளிடம் நின்று வஞ்சித்துப் பிடுங்கிக் கொள்ளுவாருண்டோ? ஆ! இதென்ன கொடுமை! என்ன அநியாயம்! என்று கண்ணீர் சிந்தி முறையிட்டு, மற்றவர்கள் மனமும் கொதிக்கச்செய்தாள். இந்தம்மாளுடைய கண்ணீரையும், பிரலாபத்தையுங் கண்டு மனதுருகிய கர்தினால் காரவ்வா * (Cardinal Caraffa) என்பவர், வாலிபரைப்

* சேசுசபையை முதல்முதல் அங்கீகரித்து ஆசீர்வதித்த மூன்றாம் பவுல் என்னும் அர்ச். பாப்பானவர் 1549-ம் வரு நவம்பர்-மீ 10-உ காலமாய்ப்போனார். இவர் அர்ச். இஞ்ஞாசியார்மீதும் அவர் ஸ்தாபித்த சேசுசபைமீதும் என்றும் மாறாப்பேரன்புடையவராயிருந்தார். அர்ச். இஞ்ஞாசியார் சர்வேசுரனுடைய இஸ்பிரீத்துவினால் நிறைந்த மகாத்துமாவென்று அவரை வெகு கனமாய் மதித்திருந்தார். அவருக்குப்பின் திருச்சபையை ஆண்டுவந்த, மூன்றாம் ஜூலியுஸ் என்ற பாப்பானவர் 1555-ம் வரு மார்ச்சு-மீ 23-உ காலஞ்சென்றார். இவரும் அர்ச். இஞ்ஞாசியார்மீதும் அவர் சபைமீதும் பேரன்பு பாராட்டிவந்தார். ஓர் சமயம் ஏதோ காரணமாக அர்ச்சியசிஷ்டவர்மீது சற்றே வெறுப்புற்றிருந்தாரென்றாலும் ஒருதடவை அவரைத் தமதுசமுகத்திற் கண்டு பேசினபின், அவர்மீது முன்னிலும் எண்மடங்கு அதிகபட்சமுடையவரானார். பேசிமுடிந்து அர்ச்சியசிஷ்டவர் விடைபெற்றுக்கொண்டு சமுகம் விட்டுப் போனதும், பரிசுத்த



பெற்றோர் கையில் திரும்ப ஒப்புவித்துவிடவேண்டுமென்று இஞ்ஞாசியாருக்குக் கண்டிப்பாய்க் கற்பித்தார். ஆனால் வாலிபர் சுவாமிமார்களால் கட்டாயம் யாதுமின்றி, தம் உள்ளத்தில் தொனித்த தேவ ஏவுதலைப் பின்சென்று மாத்திரம் சேசுசபையில் உட்பட்டாரென்று அறிந்திருந்ததாலும், கர்தினாலோ காரியத்தை நன்றாய் ஆராய்ந்து விசாரியாமல் இடுதிப்பென்று தீர்ப்பிட்டதாலும், இஞ்ஞாசியார் இத்தீர்ப்பை அங்கீகரியாமல், அர்ச். பாப்பானவ்

பிதா தமது அரண்மனையின் அகவிஷபங்களை விசாரித்துவரும் கர்தினாலை அழைப்பித்து: "இஞ்ஞாசியார் சுவாமியார் எந்தச்சமயத்தில் வந்தாலும், நமது சமுகம் பிரவேசிக்க அவருக்கு உடனே உத்தரவளிக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம்; அச்சமயத்தில் யார் நம்மோடிருந்தபோதிலும், தாமதியாமல் அவர் வரவைப்பற்றி நமக்கு அறிவிக்க வேண்டும்" என்று கற்பித்தார். மறுநாள் சேசுசபை மடத்துக்கு தானமாக ஐநூறு பொன்நாணயங்கள் அனுப்பிவைத்தார். மேலும் கஷ்டகாலங்களில் தம்மிடத்தில் உதவிகேட்கத் தவறப்படாதென்று அர்ச்சியசிஷ்டவருக்குக் கண்டிப்பாய்க் கற்பித்து, அதை அவருக்கு ஞாபகப்படுத்திவரும்படி அவர்கூட வந்த சுவாமியாருக்கும் சொன்னார்.

இவருக்குப்பின் வந்த மார்செல்லுஸ் (Marcellus) என்னும் பாப்பானவரோவென்றால் அர்ச்சியசிஷ்டவரைத் தமது உற்ற நண்பராகப் பாவித்து, அவருடன் திருச்சபையின் நன்மைக்கடுத்த விஷயங்களைப்பற்றி ஆலோசித்து அன்னியோன்னிய நேசமாய் வார்த்தையாடிவந்தார். ஆனால் பாப்பாசனம் ஏறிய இருபத்திரண்டாம் நாள் இவர் மர

ருக்கு மனுச் செய்தார். பரிசுத்த பிதா எல்லாம் விசாரித்து, அர்ச்சியசிஷ்டவர் பக்கம் நீதியிருப்பதாக உணர்ந்து, கர்தினால் காரவ்வா செய்த தீர்ப்பை ரத்து செய்துவிட்டார். வாலிபரும் சேசுசபையில் நிலைபெற்றார்.

இப்படி சேசுசபையில் பிரவேசித்தவர்களுக்குள் சிலருடைய வரலாறு ஏதோ விநோதக் கதைபோலிருக்கும். லூவேன் நகரத்துக் கலாசாலையில்

---

ண்மாய்ப்போக, இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரவ்வா (Caraffa) என்ற கர்தினால் நாலாம் பவுல் (Paul IV) என்று பெயர் தரித்து, 1555-ம் வருஷம் ஜூன்-மீ 5-உ பாப்பானவராக முடிசூட்டப்பட்டார்.

கர்தினாலாயிருந்தகாலத்தில் இவர் சேசுசபைமீது வெறுப்புற்றவராகக் காணப்பட்டதால், பாப்பானவராக வந்ததும் சேசுசபை சுவாமிமார்களெல்லாம் சற்று கிலேசப்பட்டார்கள். அர்ச். இஞ்ஞாசியாரும் இதுசெய்தி கேட்டவுடன் சற்றே கவலையுற்றவராகக் காணப்பட்டார். ஆனால் சிந்து நேரம் தேவசந்நிதியில் அமர்ந்து ஜெபித்தபின், என்றும்போல் மலர்ந்து களித்தமுகமாய், பாப்பாசனத்தில் இப்பொழுதிருக்கிறவரும் நமக்கு பாதுகாவலராயிருப்பார், ஆயினும் துன்பமில்லாமற் போகாதென்றார். அவ்விதமே சம்பவித்தது. இந்தப் பாப்பானவரும் அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் வெகு விசுவாசமுடையவராய், அவர்மீதும் சேசுசபைமீதும் வெகு பட்சமாயிருந்தார். என்றாலும் அர்ச். இஞ்ஞாசியார் உயிரோடிருந்த காலத்திலும், அவருடைய மரணத்துக்குப் பின்பும் சேசுசபைமட்டில் இவருக்கிருந்த அன்பு சமயத்துக்குச்சமயம் தளர்ந்ததாகக் காணப்பட்டது.



கல்வித்திறமையில் பேர்பெற்ற **பேர்நார்து ஒலிவியர்** (Bernard Olivier) என்றொரு வாலிபரிருந்தார். இவருடைய தாய் தந்தையர் இவரைக் குருப்பட்டத்துக்கென்று நேர்ந்திருந்தார்கள். இவரோவென்றால் தேசாந்திரம் போய் பல விநோதங்களைக் கண்டு களிக்க ஆசித்தார். இதனால் தந்தை மனம் நொந்து, நீ உன் இஷ்டப்படி செய்வாயேயாகில், ஒரு காசு முதலாய் நான் உனக்கு உதவி செய்யேன் என்று கோபித்தார். பொர்நார்து என்பவர் இதனால் சற்றும் சஞ்சலப்படாமல் "அது பாரமல்ல, உமது வாசலில் வந்து பிச்சை கேட்காதபடி பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு தேசாந்திரம் புறப்பட்டார். ஆயினும் அவர் தாய் மனதிரங்கி அவருக்குக் கொஞ்சம் பணம் இரகசியமாய் உதவி செய்தாள். அதைக்கொண்டு உரோமை போய்ச் சேர்ந்து, அங்கு ஒரு கனவானுக்குக் காரியதரிசியாக உத்தியோகம் அமர்ந்தார். வாலிபரிடத்தில் விளங்கின சாதுரிய சாமார்த்தியத்தைக் கண்டு வியப்புற்ற எஜமான் அவர்மீது வெகு பிரீதி வைத்து, தனக்கு ஏக பிள்ளையாயிருந்த தன் புத்திரியை அவருக்கு மணமுடித்துக் கொடுப்பதாகவும், தனது சம்பத்துகளுக்கெல்லாம் அவரையே பாத்தியஸ்தனுக்குவதாகவும் வாக்களித்தார். வாலிபரும் அவ்வாக்கில் மகிழ்வுற்று தமது அதிர்ஷ்டம் நிறைவுபெறும் காலத்தை ஆவலாய் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அதற்குமுன் கடும்வியாதி

யாய் விழுந்து, மரண அவஸ்தையானார். வியாதியில் அர்ச். இஞ்ஞாசியார் அவரைப் போய்ச் சந்தித்து வந்தார். தேவ கிருபையால் வியாதி நீங்கி, பூரண சௌக்கியமடைந்தார். ஆனால் இதுகாலம் அவர் மனதைக் கவர்ந்திருந்த எண்ணங்கள் எவ்விதமோ மாய்ந்துபோக, சேசுசபையில் தன்னைச் சர்வேசுரனுக்கு முற்றும் ஒப்புக்கொடுக்க ஆசித்தார். இஞ்ஞாசியார் அவரை உடனே ஏற்றுக்கொள்ள சம்மதிக்கவில்லை. வாலிபரோவென்றால் ஓர்நாள் சுவாமிமார் மடத்துக்குப் போய், அவ்விடத்தைவிட்டுத் திரும்பிப் போகிறதில்லையென்று ஒரே சாதனையாய்ச் சாதித்தார். மனவூக்கத்தை என்றும் பெரிதுபாராட்டிவந்த இஞ்ஞாசியார் இதனால் சந்தோஷமடைந்து, வாலிபரைத் தாமதியாமல் நவசந்நியாசத்தில் ஏற்றுக்கொண்டார். சிலகாலத்துக்குள் குருப்பட்டம் பெற்று 'உரோமன் காலேஜுக்கு' சிரேஷ்டராக நியமிக்கப்பட்டார். ஆனால் அசௌக்கியத்தினிமித்தம் தன் ஜென்மஊருக்கு அனுப்பப்பட்டார். அங்கு சென்றதும், தன் தந்தை வாசலிற்போய் பிச்சை கேட்டார். தந்தை பிச்சை ஒன்றும் கொடாமல் சற்று எரிச்சலாய்ப் பேசினார்;—தன்முன் நின்றவர் தன் மகன்தானென்று அவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. பரதேசியோவென்றால், வயோதிகரைப் பார்த்து "வெகுகாலத்துக்குமுன் தேசாந்திரம் சென்ற உமது குமாரன் பெர்நார்துவை நான் அறிவேன்.



அவரைப்பற்றி சமாச்சாரங்கள் எனக்குத் தெரியும்" என்றவுடனே வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோகப்பட்டார். உட்சென்றதும், தன் பெயரை மறைத்துத் தன் கதையை எடுத்துரைத்தார். எல்லாம் கவனமாய்க் கேட்டு ஆச்சரியப்பிரமை அடைந்த வயோதிகர் என் குமாரன் பெர்நார்து நீரல்லாது வேறு யார் என்று ஆனந்தக்கண்ணீர் வடித்தார். ஊதாரிப்பிள்ளை தந்தைவீட்டுக்குத் திரும்பிவந்த சுபநாள்போல், அன்று அக்குடும்பத்தில் எல்லாம் மங்களமாயிருந்தது. ஊரார் திருநாள் கூட்டம்போல் குருவானவருக்கு நல்வரவு கூறி அவரை உபசரிக்க விரைந்து வந்தார்கள்.

இது நிற்க:

கல்வி புகட்டும் விஷயத்தில், சத்தியவேத விசுவாசமும் நல்லொழுக்கமும் மற்றைப் பயிற்சிகள் யாவற்றுக்கும் சுக்கான்போல் முன்னின்று, அவைகளை நேர்நெறியில் ஸ்திரமாய் நடத்திவரவேண்டுமென்று அர்ச். இஞ்ஞாசியார் கற்பித்துவந்தார். ஆகையால் கல்விப்பொருளில் ஆத்துமத்தை மாசுபடுத்தக்கூடியவைகளையும், சத்திய விசுவாசத்துக்குக் கேடு செய்யக்கூடியவைகளையும், தமது சபையைச்சேர்ந்த பாடசாலைகளினின்று கண்டிப்பாய் விலக்கி நீக்கி வந்தார். பாலியப் பிராயத்தில் புத்தியென்னும் தத்துவமானது எவ்வகை அட்சரமும் பதிவதற்கு எளிதில் இசைந்துகொடுக்கும் மெல்லிய மெழுகுபோலிருக்கின்றதெனவும், மனமோவெனில்

புத்தியில் பட்டதை இயல்பாய்ப் பின்சென்று நடக்கும் தத்துவமாயிருக்கின்றதெனவும் அர்ச்சிய சிஷ்டவர் திண்ணமாய் அறிந்திருந்தமையால், இது விஷயத்தில் அளவற்ற ஜாக்கிரதை யெடுத்துவந்தார். பாலியர் மனதில் உற்பத்தியாகி வேரூன்றும் நினைவு சிந்தனைகள் ஆதிமுதற்கொண்டே நல்லவைகளாயிருக்கவேண்டுமென்று விரும்பி, அதற்கான முயற்சிகள் செய்துவந்தார். ஏனெனில் மனதை ஆட்கொண்டிருக்கும் சிந்தனைகள் ஆரம்பத்திலேயே நல்லவைகளாயிருந்தால், அவைகள் ஜீவியகாலமெல்லாம் நற்பற்றுதல் நற்கிரியைகளுக்குத் தூண்டுதலாயிருந்து, நல்லொழுக்கத்துக்கு ஆதாரமாயிருக்குமென்றும்; தீயவைகளாயிருந்தால் ஜீவியகாலமெல்லாம் தீயபற்றுதல் தீவினைகளுக்குத் தூண்டுதலாயிருந்து, இன்மைக்குமேல் இன்மை விளைய ஏதுவாயிருக்குமென்றும் நன்குணர்ந்திருந்தார். நமது தேசத்தில் வழங்கிவரும் பூர்வீக நூற்கள் பலவற்றில் எப்படியோ, அப்படியே, இலத்தீன், கிரீக்கு பாஷைகளில் அஞ்ஞான சாஸ்திரிகள் வித்துவான்களால் எழுதப்பட்ட நூற்கள் பலவற்றிலும், ஸ்ரீதேவியையும் மூதேவியையும் ஓராசனத்தில் ஏற்றிவைத்ததுபோலவும், ஒரே பாத்திரத்தில் நல்லுணவையும் நஞ்சையும் கலந்து பரிமாறினதுபோலவும், மேன்மையான தூயசிந்தனை பற்றுதல்களடங்கிய விர்த்தாந்தங்களோடு, நிசிதமான, கூச்சநாச்சமற்ற, தீயசிந்தனை பற்றுதல்க



ளடங்கிய விர்த்தாந்தங்களும், நல்லறிவுக்கும் நல்லொழுக்கத்துக்கும் பொருந்திய சுகிர்த விஷயங்களோடு, மோசமான அபத்தங்களும் கோட்பாடுகளும் சேர்த்தமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகைப் புஸ்தகங்களைப் படிப்பதால் பாலியருக்கு மோசம் வருமென்றஞ்சி, வெகுவாய் ஆலோசனை செய்து இந்நூற்களில் ஆட்சேபனைக்கிடமான விஷயங்களை முற்றும் திருத்தி மறுரூபமாக்கவேண்டும், அல்லது அப்பேர்ப்பட்டவைகளை முற்றுமே ஒழித்து, ஆட்சேபனைக்கிடமில்லாதவைகளை மாத்திரம் பிரதிசெய்து மாணாக்கர் கையிற் கொடுக்க வேண்டுமென்று விதித்தார்.

"புத்தியில் முதல்முதல் படுகின்றவைகள், நல்லவைகளானாலும் தீயவைகளானாலும், அவைகளை எளிதில் ஏற்றுக்கொண்டு மனதில் தரித்துக்கொள்ளுதல், சிறுவர்களுக்கு இயல்பு. அப்படி அவர்கள் மனதில் பதிகின்ற முதற் சிந்தனைகளும், மனோபாவனை உருவங்களும் அவர்களுடைய ஆயுள்காலமெல்லாம் தழுவி நிற்கின்றமையால், இவைகள் மட்டில் வெகு எச்சரிக்கை அவசியம். கல்வி புகட்டுவதற்குச் சாதாரணமாய்ப் பிரயோகிக்கப்பட்டுவரும் புஸ்தகங்களோவெனில், விசேஷமாய் 'தெரன்ஸ்' (Terence) 'விர்ஜில்' (Virgil) முதலிய பல கிரந்தகர்த்தாக்களால் இயற்றப்பட்ட 'க்லாசிக்ஸ்' (Classics) என்று சொல்லப்படும் பூர்வீக நூற்கள், வாழ்நாளுக்கெல்லாம் மெய்

யாகவே பிரயோசனமான அநேக கல்விப்பொருட்களுடன், வெகு இலௌகீகமும் அயோக்கியமும், இன்னும் தற்செயலாய்க் கேட்டாலே தீதுசெய்யக் கூடியவைகளுமான பல விஷயங்களையும் கற்பித்து வருகின்றன. அப்படியிருக்க, இவ்விஷயங்களைச் சிறுவர் கண்முன் வைத்து, அவர்கள் ஓயாமல் கையாடி வாசித்துப் படித்துவரும் புஸ்தகங்களிலேயே இவைகள் கற்பிக்கப்பட்டு வருவதனால் விளையும் தீங்கு எவ்வளவென்று சொல்லவும் வேண்டுமா! ஆகையால், இவ்வித பூர்வீக நூற்களில் அயோக்கியமானவைகள் மோசமானவைகளையெல்லாம் நீக்கி, அவைகளுக்குப் பதிலாய் நல்லதான வேறு விஷயங்களைச் சேர்த்தெழுதுதல், அல்லது ஒன்றுமே சேர்க்காமல், பிரயோசனமானவைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, மற்றவைகளை முற்றுமே ஒழித்துவிடுதல், வெகு நன்மையாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகின்றது. வாலிபர்களைக் கிறீஸ்துவர்களுக்குரிய நல்லொழுக்கத்தில் பயிற்சி செய்து படிப்பிப்பதற்கு இது அத்தியாவசியமென்று இதுவரையில் எண்ணிவருகிறேன்" என, மேற்றிராணியாராகவோ அல்லது கர்தினாலாகவோ இருந்த தமது நண்பர் ஒருவருக்கு 1550-ம் ௵ எழுதிய ஒரு கடிதத்தில் சொல்லுகிறார்.

ஓர் சமயம் யாரோ ஒரு பரோபகாரியின் நன்கொடைபோல், உரோமையில் சேசுசபை மடத்துப்



புஸ்தகசாலைக்கென்று இரு பெட்டிகள் நிறைய புஸ்தகங்கள் அனுப்பப்பட்டன. பெட்டிகளின் மேலடுக்கிலிருந்த பிரபந்தங்களெல்லாம் சற்றும் ஆட்சேபனைக்கிடமில்லாத மெய்மறை நூற்களாகவே இருந்தன. மற்றவைகளோவெனில், லுத்தேர், மெலாங்க்றன் முதலியவர்களால் ஏற்பட்ட பதித துர்ப்போதனைகள் நிறைந்த காப்பியங்களாயிருந்தன. இது சில பதிதர்கள் செய்த சதியென்றுணர்ந்த இஞ்ஞாசியார், அப்புஸ்தகங்கள் அத்தனையும் மேல் அடுக்கிலிருந்தவைகளை முதலாய் தவிர்க்காமல், சுட்டெரித்து, சாம்பலை காற்றில் தூவிவிடும்படி கற்பித்தார்.

சாதாரண கல்வி சாஸ்திரங்களில் மாத்திரமல்ல; சங்கீதம், பாடல் முதலியவைகளிலும், பெருந்தன்மை வீரத்தன்மையான செயல்களுக்கு தூண்டுதலாகிய மேலான சிந்தனை பற்றுதல்களை இருதயத்தில் பிறப்பிக்கும் சிறந்த விர்த்தாந்தங்களை அநேகர் கூடிய சபைமுன் கவியாகவோ, சல்லாபமாகவோ, அல்லது நாடகமுறையாகவோ வர்ணித்துக்கொண்டாடுவதிலும், தத்துவசாஸ்திரம், வேதசாஸ்திரத்துக்கடுத்த சத்தியங்கள் அல்லது சித்தாந்தங்களைப் பற்றி உபந்நியாசம் செய்து, ஆட்சேபனைகளை மறுத்து தர்க்கம் செய்வதிலும் மாணாக்கர்கள் தேர்ச்சியடையும்படி அர்ச்சியசிஷ்டவர் தாமே முயற்சிசெய்துவந்தார். உரோமையில் இவ்வித

பயிற்சிகளை தங்கள் சமூகத்தால் கௌரவப்படுத்தும்படி, கர்தினால் மேற்றிராணிமார்களையும் மற்றும் பெரியோர்களையும் உபசரித்தழைப்பார்.

சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்தையும், ஆத்துமாக்கள் இரட்சணியத்தையும் முன்னிட்டு வித்தியாசாலைகள் மாத்திரமல்ல, வேறு தர்மசாலைகளும் மடங்களும் சிரமமெடுத்து ஸ்தாபித்துவைத்தார்.

நெறிதவறி சீர்குலைந்தலையும் மதலேனாள்போன்ற மாதர்களை நன்னெறி சேர்த்து சீர்திருத்துதற்காக, **அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலம்** என்றொரு ஸ்தானம் ஏற்படுத்தினார். கட்டிடத்துக்கு வேண்டிய பணம் துவக்கத்தில் குறைவாயிருந்தது. ஆனால் தேவதோத்திரத்துக்காக தாம் கருதியதைச் செய்துமுடிக்க, தேவசகாயத்தை ஸ்திரமாய் எதிர்பார்த்து உற்சாகமாய் முயற்சியெடுத்துவந்தார். சேசுசபை மடத்தைச் சேர்ந்த ஓர் நிலத்தில் ஏதோ சில கட்டிடங்கள் கட்டுவதற்காக அஸ்திவாரம் இறக்கியபோது, பல நூற்றாண்டுகளுக்கு முன் யாரோ எவரால் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான கட்டிடம் ஒன்று இடிந்து தகர்ந்து பூமியில் புதைபட்டிருக்கக் கண்டார்கள். இந்த ஆதிகாலத்துக் கட்டிடத்தின் கற்கள் முதலியவைகளை விற்பனை செய்து வந்த வரும்படியைக்கொண்டு, மேற்சொன்ன அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலத்துக்கு



வேண்டிய நிலம் வாங்கப்பட்டது. தர்மிஷ்ட பிரபுக்கள் சீமாட்டிகள் அநேகர் பெரிய மனசு வைத்து உதாரமாய் ஒத்தாசை செய்யவே, கட்டிடம் அதிசீக்கிரம் முடிவுபெற்றது. இத்தலத்தை அடைக்கலமென்று வரும் நிர்ப்பாக்கிய ஸ்திரீகளின் சம்ரட்சணைக்கும், மற்றும் செலவுகளுக்கும் வேண்டிய பொருளுதவி செய்வதற்காக, அநேக சீமாட்டிகள் ஒரு சபையாக ஒன்றுசேர்ந்தார்கள். நாலு வருஷத்துக்குள் முன்னூறு பேர் அடைக்கலம் புகுந்தார்கள். தவறிப்போன நிர்ப்பாக்கிய ஸ்திரீகள் மனஸ்தாபப்பட்டு பாவ மார்க்கத்தை விட்டுத் திரும்பி நல்வழி சேரும்படி அர்ச்சியசிஷ்டவர் எவ்வித பிரயத்தனமும் செய்துவந்தார். சீர்குலைந்த இந்நிர்ப்பாக்கிய ஸ்திரீகளை அவர்கள் வசிக்கும் பாபக் குகைகளில் தாமே தேடிப்போய் புத்தி சொல்லி, அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார். நீர் படும் பிரயாசையெல்லாம் வீண்; இந்த ஸ்திரீகளுடைய மனஸ்தாபமும் பிரதிக்கினையும் உறுதியாயிருக்கப்போகிறதில்லையென்று ஒருவர் அர்ச்சியசிஷ்டவரை எச்சரித்தார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால்: "சர்வேசுரனுக்குத் துரோகமாய் ஒரே ஒரு பாவமாகிலும் நேரிடாதபடி தடுக்கக்கூடுமானால், நான் படும் பிரயாசைகளுக்கெல்லாம் அதுவே போதுமான கைம்மாறென்றெண்ணுகிறேன்" என்று சொல்லி, சற்றும் மனம் சோராமல், தாம் துவக்கிய தர்ம

சிரமத்தை உற்சாகமாய்த் தொடர்ந்து நடத்தி வந்தார். இத்தலத்தில் அடைக்கலம் புகுந்த மாதர்கள், ஏற்கனவே மெய்விவாகம் செய்து கொண்டவர்களாயிருந்தால், தத்தம் கணவன் வீட்டுக்கன்றி, வேறெவ்விடத்திற்கும் திரும்பிப்போகப் படாதென்றும்; இன்னும் மெய்விவாகம் செய்யாதவர்கள், அப்படி விவாகம் செய்துகொள்ளுவதற்கு, அல்லது யாதாமொரு துறவிகள் மடத்தில் உட்படுவதற்கன்றி, மற்றப்படி அடைக்கலத்தை விட்டுத் திரும்பிப் போகப்படாதென்றும் கண்டிப்பான ஓர் ஒழுங்கு ஏற்படுத்தியிருந்தார். இவ்விதம் அர்ச்சியசிஷ்டவர் இவர்களைச் சீர்திருத்தி பாவ வழியை அடைக்கப் பிரயத்தனப்பட்டு வந்தது, நகரிலிருந்த கேடுகெட்ட துர்ஜனர் அநேகருக்குப் பொருந்தவில்லை. பலமாத காலமாய் சாயுங்கால வேளைகளில், இந்தக் கசடர்கள் அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலமுன் கூட்டமாய் வந்து, சந்தடி செய்து, கா கூ என்று கத்தி, வாயில் வந்தபடி அயோக்கியமாய்ப் பேசி, வீட்டுச் சன்னல்களை உடைத்துச் சேதப்படுத்தித் துன்பம் விளைவிக்கத் தலைப்பட்டார்கள்.

விசேஷமாய், உரோமையில் சான் காஸியானோ (San Cassiano) என்ற இடத்தில் 'போஸ்ற்று மாஸ்ற்றராய்' இருந்த மத்தியாஸ் (Mattias) என்றொருவனால் பெரும் உபத்திரவம் நேர்ந்தது. தன் கணவனை விட்டு இவனோடு தேவதுரோகமாய்



ஜீவித்துவந்த ஒரு ஸ்திரீ, அர்ச். இஞ்ஞாசியாருடைய நற்போதகங்களைக் கேட்டு மனந்திரும்பி அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலத்தில் போய்ச் சேர்ந்துகொண்டாள். சுபாவமாகவே வெகு மூர்க்கனான இந்த மத்தியாஸ் இதனால் கடுங்கோபங் கொண்டு, இரவில் பலவந்தமாய் அடைக்கலத்துக்குள் நுழையப் பிரயத்தனப்பட்டான். அது சாத்தியப்படாமற்போனதால், சேசுசபையாருக்கு விரோதமாய் அநேக அபாண்டங்களை உற்பத்தி பண்ணி, வாக்கினாலும் எழுத்தினாலும் அவைகளை எங்கும் தூற்றிவந்தான். என்ன சொல்லியும் அவன் கேளாததால், ஆத்துமாக்களுக்குக் கேடாக நிகழ்ந்த இடறலை நீக்கும்படி இஞ்ஞாசியார் அர்ச். பாப்பானவரிடத்தில் விண்ணப்பம் செய்தார். நியாயாசனம்முன் மத்தியாஸ் தானே தான் செய்தது அனைத்தும் அநீதமென்று ஒப்புக்கொண்டு, சமாதானம் கோரி, அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் பொறுத்தல் கேட்டான். நீதிஸ்தர்களும், "அவன் குற்றஞ் சாட்டி சொன்னதெல்லாம் அபாண்டம், அநியாயம், சதிமானம், அக்கிரமம்" என்று தீர்த்தார்கள். அர்ச்சியசிஷ்டவர் அவன்மீது இரக்கமுற்று அவனுக்காக நீதிஸ்தர்களை மன்றாடினதினால், நீதிஸ்தர்கள் அவனைத் தண்டியாமல் விட்டுவிட்டார்கள். இதனால் மத்தியாஸ் மனமிளகி நன்றியறிதலுள்ளவனாய், சேசுசபைக்குப் பலவகையில் உதவிசெய்துவந்தான்.

இஸ்பாஞிய தேசத்தவரான பார்பரான் (Barbaran) என்றொரு துறவறக் குருவும், அர்ச். மார்த்தம்மாள் அடைக்கல விஷயமாய், அர்ச். இஞ்ஞாசியார்மீது அநேக முறைப்பாடுகள் சொல்லி, அர்ச். பாப்பானவர் சமூகம் பிராது எழுதிவிட்டார். இவ்விஷயத்தை விசாரித்து முடிவு செய்யும்படி நியமிக்கப்பட்ட கர்தினல் கிரெஸ்ஸென்ஸி (Cardinal Crescenzi) என்பவர், சொல்லப்பட்ட முறைப்பாடுகள் அத்தனையும்—"தலைவாலின்றி" ஒன்றோடொன்று ஒவ்வாத வம்புச் சொற்களென்றுணர்ந்து, அவைகளை உபேட்சித்துத் தள்ளிவிட்டார். வேறோர் சமயம், இதே குரு அர்ச்சியசிஷ்டவரை ஏகமாய் நிந்தித்து, 'பெர்ப்பிஞ்ஞான் (Perpignan) முதல், செவில் (Seville) மட்டுமுள்ள அவருடைய சபையாரனைவரும் அக்கினியில் சுட்டெரிக்கப்படவேண்டும்' என்று ஆசீர்வசனம் கூறி ஓர் கடிதம் எழுதி, ஒரு ஆள்வசம் அதை அர்ச்சியசிஷ்டவருக்கு அனுப்பிவைத்தார். அர்ச்சியசிஷ்டவரோவென்றால் :

"ஐயா, சங். பார்பரான் சுவாமியாருக்கு தயவு செய்து சொல்லுங்கள் : பெர்ப்பிஞ்ஞான் முதல் செவில் மட்டுமுள்ள எனது சபையாரனைவரும் அக்கினியில் சுட்டெரிக்கப்படவேண்டுமென்று அவர் ஆசிக்கிறார் ; நானோவெனில் அவருடைய நண்பர்கள் சிநேகிதர்கள் அனைவரும், பெர்ப்பிஞ்ஞான் முதல் செவில் மட்டுமுள்ளவர்கள் மாத்திரமல்ல,



இன்னும் பூலோகமெங்குமுள்ள சகல மனிதர்களும், திவ்விய இஸ்பிரீத்துவின் சிநேக அக்கினியினால் இருதயம் பற்றியெரிந்து, உன்னத அர்ச்சியசிஷ்டதனமடைந்து, தேவ மகத்துவத்தின் தோத்திர வர்த்திப்புக்காக சர்வ சக்தியுடன் முயன்று உழைத்துவரும் சிறந்த தாசர்களாகவேண்டுமென்று ஆசிக்கிறேன், என்பதாகச் சொல்லுங்கள்" என, முன்சொன்ன கடிதம் யார் வழியாய் அனுப்பப்பட்டதோ அவர் வழியாகவே உத்தம தேவ சிநேகத்துக்கு இயல்பான பெருந்தன்மையுடன் பதிலுரைத்தெழுதினார்.

மேற்சொன்ன அர்ச். மார்த்தம்மாள் அடைக்கலமுமன்றி, 'ஆபத்துவருமுன்னே காவல்செய்' என்றபடி, தகுந்த பாதுகாப்பில்லாததால் தவறிப்போகும் ஆபத்திலிருக்கும் இளம்பெண்களுக்கு அடைக்கலமாக ஓர் ஸ்தானமும், அநாதப்பிள்ளைகளான சிறுவர்களையும் சிறுமிகளையும் பரிபாலிப்பதற்கென்று வெவ்வேறு புகலிடங்களும், உரோமையிலிருந்த தம் நண்பர்களுடைய உதார ஒத்தாசையால் ஸ்தாபித்து ஸ்திரப்படுத்தி வைத்தார்.

மேலும், புதிதாய் கத்தோலிக்கு மார்க்கத்தைக் கைக்கொண்ட யூதர்குலத்தாரான சில வாலிபர் தங்கள் பந்து ஜனங்களால் கைநெகிழப்பட்டு, யாதும் உதவியின்றி தத்தளித்துத் தவிப்பதைக் கண்டு மனஞ் சகியாதவராய், அவர்களைத் தாம்

வசித்த சேசுசபை மடத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், சம்ரட்சணை செய்து பாதுகாத்து வந்தார். மேலும் சேசுசபை சுவாமிமார்களுடைய போதனை பிரசங்கங்களைக் கேட்டு அநேக யூதர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவர்களாக ஆசித்தார்கள். ஆனால் தங்கள் இனத்தாரால் நேரும் உபத்திரவத்துக்கும், தரித்திரத்துக்கும் அஞ்சிப் பின்வாங்கிகின்றார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கும் இஞ்ஞாசியார் தமது மடத்தில் அடைக்கலம் கொடுத்து வந்தார். ஆனால் நாளுக்கு நாள் இவர்களுடைய தொகை அதிகரித்து வந்தமையால், இவர்களையெல்லாம் சுவாமிமார் மடத்தில் வைத்து பாதுகாத்து வருதல் அசாத்தியமெனக் கண்டு, இந்த யூதர்களுக்கென்று பிரயத்தனப்பட்டு ஒரு தர்மசாலை ஸ்தாபித்து, அதன் பரிபாலனத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்துவைத்தார். இந்தத் தர்மசாலை விஷயமாகவும் அர்ச்சியசிஷ்டவருக்கு துன்பமில்லாமற்போகவில்லை.

பம்பலூனா கோட்டையில் பட்ட காயத்தால் நெடுநாள் தம் கோத்திரத்து மாளிகையில் துன்புற்று வருந்திய லோயோலா வீரர் இருதயம், அவதரித்த சுதன் திருப்பலியான ஜெருசலேமா நகரை நோக்கி எவ்வளவோ உருக்க நேச வாஞ்சையுடன் தாவிச் சென்றதென்று ஏற்கனவே கண்டிருக்கிறோமல்லவா? அன்று அவர் இருதயத்தில் உதயமான அந்த நேச வாஞ்சை என்றும் குறையாது அதில்



குடிகொண்டிருந்தது. தமது சபையை ஜெருசலேமிலேயே ஸ்தாபிக்கத் தாம் கொண்டிருந்த ஆசை நிறைவேற சர்வேசுரன் திருவுளமாகவில்லை என்றாலும், தமது மக்களில் சிலரையாகிலும் அவதரித்த நாதன் திருப்பாதம் பட்ட பிரதேசங்களுக்கு வேதபோதகர்களாக அனுப்பவும், அவ்விடங்களில் பாடசாலை முதலியவைகள் ஏற்படுத்தவும் வெகு ஆவலுற்றிருந்தார்.

1554-ம் ௵ மூன்றாவது ஜூலியுஸ் (Julius III) என்னும் அர்ச். பாப்பாணவர், கீழ்த்திசையில் மூன்று சேசுசபைக் கல்விசாலைகள் ஸ்தாபிக்க உத்தாரம் அளித்தார். அவைகளுள் தலைமைக் கலாசாலை ஜெருசலேம் நகரில் ஸ்தாபகம் பெற வேண்டுமென்றும் விதித்தார். மலைபோல் எதிர்த்து நின்ற எவ்வித இடையூறு விக்கினங்களையும் ஜெயித்து, எத்தனையோ கலாசாலைகளும் தர்மசாலைகளும் ஸ்திரமாய் ஸ்தாபித்துவைத்தவர், யூதேயா நாட்டில் நாதன் பாடுபட்ட மாநகரில் ஓர் கலாசாலை எவ்விதமும் ஏற்படுத்தவேண்டுமென்று பட்ட அரும் பிரயாசை பிரயத்தனங்களெல்லாம் வியர்த்தமாய் முடிந்தன.

அதுபோலவே, ஆப்பிரிக்காக் கண்டத்தில் வெகு காலமாய் சத்திய திருச்சபையை விட்டுப்பிரிந்து, நாகரீகத்திலும் நல்லொழுக்கத்திலும் வெகுவாய் தாழ்ந்து சிறுமை அடைந்திருந்த அபிஸ்ஸினியா, எதியோப்பியா முதலிய இராஜ்யங்களைத் திரும்ப

திருச்சபையோடு ஒன்றுசேர்க்க அவர் பட்ட பல பிரயத்தனங்களும் ஒருவாறு வியர்த்தமாகவே முடிந்தன.

வடதிசையில் இஸ்பாஞ்ஞியா, பிரான்ஸு, இத்தாலியா முதலிய தேசங்களடங்கிய ஐரோப்பாவின் ஒரு பாகமும், கீழ்த்திசையில் அவதரித்த சுதன் பாடுபட்ட ஜெருசலேம் நகரிருக்கும் பலஸ்தீன் நாடும், தென்றிசையில் ஆப்பிரிக்காக் கண்டத்தின் ஓர் பாகமும் எல்லைகளாகக் கொண்ட மத்தியதரைக் கடலில் (The Mediterranean Sea), அநேக வருஷகாலமாய் துலுக்கர்கள் கடற்கொள்ளையடித்து, கிறீஸ்துவர்களுக்கு உயிர்ச்சேதமும் பொருட்சேதமுமன்றி, அவர்களுடைய நித்திய ஈடேற்றத்துக்கும் இடர் செய்துவந்தார்கள். தற்சமயம் இரண்டாவது ஹென்றீ (Henry II) என்னும் பிரான்ஸு தேசத்தரசன், ஐந்தாவது கார்லூஸ் (Charles V) என்னும் இஸ்பாஞ்ஞிய தேசத்தரசனுக்கு விரோதமாய், துலுக்க அரசன் சுலிமான் (Suleiman) என்பவனோடு நிர்ப்பாக்கியமாய் நட்பு பாராட்டி, அவனுடைய சலுகையைத் தேடினர். இதனால் துலுக்கர்கள் இஸ்பாஞ்ஞிய தேசத்தின் கடற்கரைப் பக்கங்களில் பாளையம் இறங்கி, திரளாய்க் கொள்ளையடித்து, அநேக கிறீஸ்துவர்களையும் அடிமைகளாகச் சிறைப்படுத்திக் கொண்டு போயினர். இப்படி அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்டவர்களில் அநேகர் உபத்திர



வத்துக்கஞ்சி வேதத்தை மறுதலித்தார்கள். இஸ்பாஞ்ஞியாவில் மாத்திரமல்ல, இத்தாலியாவிலும், மற்றிடங்களிலும் துலுக்கர் இவ்வித நிஷ்டூர செயல்கள் அடிக்கடி செய்துவந்தனர்.

ஐரோப்பாவில் இவ்விதம் செய்யத் துணிந்தவர்கள், அவர்கள் கைப்பற்றி ஆண்டுவந்த பலஸ்தீன் முதலிய கீழ்த்திசை நாடுகளில் எவ்விதம் செய்திருப்பார்களென்று சொல்லவும் தேவையா? மன்னுயிர்க்கும், சத்திய விசுவாசத்துக்கும் பெரும் மோசமாக நேர்ந்த இப்பாதகச் செயல்களை இஞ்ஞாசியார் சகியாதவராய், இவைகளுக்கு முடிவு கட்டுவதற்கான வழி யாதென்று ஆலோசனை செய்து, அருமையான விவேக விமரிசையடங்கிய ஏற்பாடொன்று யூகித்தெழுதினார். அதைக் கார்லூஸ் அரசனுக்கும் மற்ற அரசர்களுக்கும் அனுப்பு முன், நாதால் சுவாமியாருடைய அபிப்பிராயத்தை அறியும்படி, 1552-ம் ௵ அவருக்கு அனுப்பிவைத்தார். என்ன காரணத்தினாலேயோ அர்ச்சியசிஷ்டவர் தாம் யூகித்தெழுதியதை மேற்சொன்ன அரசர்களுக்குக் கடைசியாய் அனுப்பிவைக்கவில்லையென்று தோன்றுகின்றது. அர்ச்சியசிஷ்டவர் யுக்திப் பிரகாரம் இஸ்பாஞ்ஞியா, போர்த்துகால், இத்தாலியா தேசத்தரசர்கள் அப்பொழுதே ஒன்றுசேர்ந்து, அவர் எடுத்துக் கூறிய ஆதார உதவி உபாயங்களைப் பிரயோகித்து, சத்துருக்களை எதிர்த்துப் போயிருப்பார்களேயாகில், நிச்சயமாகவே வெற்றியடைந்து

துலுக்கர்களுடைய அக்கிரமத்தை அடக்கியிருந்திருப்பார்களென்று அர்ச். இஞ்ஞாசியாருடைய சரித்திராசிரியர் சிலர் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள்.

எப்படியிருந்தாலும், லொயோலா இஞ்ஞாசியார் யுக்திப்பிரகாரம் அத்தியாவசியமாய் நடந்துகொள்ளவேண்டிய காலம் நேரிட்டது. துலுக்கர் தங்கள் நிஷ்டூரச் செயல்களை மேன்மேலும் அதிகத் துணிகரமாய் செய்துவந்தார்கள். திருச்சபையில் அர்ச்சியசிஷ்டவராக வணங்கப்பட்டுவரும் ஐந்தாவது பத்திநாதர் (St. Pius V) என்னும் பாப்பானவர், அவிசுவாசிகளால் விசுவாசிகளுக்கு நேர்ந்த இக்கொடிய துன்பங்களைப் பரிகரிப்பதற்கு வேறு வழியில்லையென்று கண்டு முன் அர்ச். இஞ்ஞாசியார் யூகித்திருந்தபடி, இஸ்பானியா, வெனீஸ் முதலிய இராஜ்யங்களோடு தாமும் ஒன்றுசேர்ந்து துலுக்கரை எதிர்த்துப் போகும்படி ஓர் உடன்படிக்கை செய்தார். மத்தியதரைக் கடலிலும், கடலோரங்களிலும் துலுக்கர் பயம் நீங்கியது. ஆயினும், ஜெருசலேமா நகரிலிருக்கும் பலஸ்தீன் நாடு மாத்திரம் அவர்கள் கையினின்று விடுவித்தல்கூடாமற் போயிற்று. ஆ! தேவசுதனை உயிர்வதைத்து, அவருடைய மாசற்ற திரு இரத்தத்தை சிந்தினதால், யூதர் குலத்துக்கும், அவர்கள் நாட்டுக்கும் நிகழ்ந்த கொடிய சாபத்தின் ஓர் தோஷமா இது! தேவ தோத்திரத்தையும், ஆத்துமாக்கள்



இரட்சணியத்தையும் கருதி மற்ற இராஜ்யங்களில் அர்ச். இஞ்ஞாசியார் எடுத்த பிரயத்தனங்களெல்லாம் சித்திபெற்று நற்பலன் தந்திருக்க, நாதன் பலியான ஜெருசலேமா நகரை எவ்வளவோ ஏக்க நோக்கமுடன் நாடி, அவர் பட்ட பிரயாசை பிரயத்தனங்கள் மாத்திரம் பயன்படாமற் போயிற்றே! "ஆ! தெய்வ ஞானம், அறிவு இவைகளின் திரவிய பொக்கிஷம் எவ்வளவோ ஆழமானது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் எவ்வளவோ புத்திக்கெட்டாதவைகளுமாய், அவருடைய வழிகள் எவ்வளவோ ஆராய்ந்தறியக்கூடாதவைகளுமாயிருக்கின்றன! ஆண்டவருடைய கருத்தை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காராயிருந்தவன் யார்?" (உரோமர். 12-33, 34.)

யூதேயா நாட்டை துலுக்கர் கையிலிருந்து மீட்கும்படி தாம் யூகித்தெடுத்த நோக்கம், தேவ திருவுளம் அந்நாட்டின்மட்டில் நிரூபித்திருக்கும் அபிரகசியமான நித்திய நியாயத் தீர்ப்புக்கு இசைந்ததல்லவென்று அநுபவ ஞானத்தினாலோ, அல்லது ஏதோ ஓர் விசேஷ தேவ ஏவுதலினாலோ அறிந்துகொண்டதினால்தான், அர்ச். இஞ்ஞாசியார் துவக்கியதை முடிக்காமல் விட்டுவிட்டாரென்று, அவருடைய சரித்திராசிரியர்களுள் மிகச் சிறந்தவர்களில் ஒருவரான கெனல்லி (Genelli) என்னும் சேசுசபைக் குருவானவர் சொல்லியிருக்கிறார்.

---

## 11-ம் அதிகாரம்.

அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் விளங்கின மகா
ஆச்சரியமான தேவநேச ஒன்றிப்பு—ஆத்
தும சோதனை—என்றும் தேவ சந்நிதி
யைச் சிந்தித்த ஜீவியம்—உத்தம தேவசிநே
கம் அடையும்படி அவர் உண்டுபண்ணி
ஜெபித்துவந்த உன்னத ஜெபம்—முகத்தில்
துலங்கிய அற்புத காந்தி—தேவநேச ஒன்
றிப்பின் மகா ஆச்சரியமான ஓர் அந்தஸ்து
—நேசக் கண்ணீர்—நாற்பதுநாள் ஞாபகக்
குறிப்புகள்—அர்ச். தமதிரித்துவம்—தேவ
சிநேகமும் பிறர் சிநேகமும் ஒன்றுக்
கொன்று உதவியாயிருத்தல்—பரலோக ஏக்
கம்.

லொயோலா மாளிகையில் கன்னித்தாய் திருக்
கரத்தில் சர்வேசுரனுக்குத் தன்னை பரிபூரணமாய்
ஒப்புக்கொடுத்த லொயோலா இஞ்ஞாசியார்,
அன்றே, தேவசிநேகத்துக்கு ஜென்ம சத்துருவா
கிய சுயபட்சத்தோடு அயராப் போர்தொடுத்த
தும்,—தூய்மையான உத்தம தேவ சிநேகத்தை
யும் தேவ நேச ஐக்கியத்தையும் அடைய அருமை
யான ஆவல் ஊக்கமுடன் அவர் பிரயத்தனப்
பட்டு வந்ததும்,—நேர்மையான சிந்தை ஆவலு



டன் தம்மை நாடிவரும் ஆத்துமாவை ஒருபோதும்
கைவிடாத நித்திய நேசமாகிய சர்வேசுரன் அனை
கடந்த அன்புடன் தமது தாசனை ஞான ஜீவியத்
தில் கைபிடித்து நடத்திவந்ததும்,—அருமையான
உன்னத மனோஜெப வரத்தையும் வேறநேக அற்
புத வரங்களையும்பெற்று, தேவசிநேகத்தில் ஒரு
பக்திசுவாலகர்போல் அவர் விளங்கினதும்,—
இச்சரித்திரத்தில் ஆதிமுதல் இதுவரை வரையப்
பட்டவைகளால் இனிது விளங்கும். ஆயினும் அவ
ருடைய அந்தியகாலத்தையும், அவரது தூய ஆத்
துமா உடலைவிட்டுப் பிரிந்து, பரலோகத்தில் தன்
திருஷ்டிகரோடு நித்திய நேச ஐக்கியம்பெற்ற
விசேஷத்தையும்பற்றிப் பேசுமுன், அவர் ஜீவியத்
திலுள்ள மற்ற விஷயங்களைச் சற்றுப்பொழுது
சிந்தையினின்றகற்றி, இகலோகத்திலேயே அவர்
ஆத்துமாவில் நாளுக்குநாள் அபிவிருத்தியாகிவந்த
ஆச்சரியமான தேவ நேச ஐக்கிய ஒன்றிப்பைமாத்
திரம் பிரதானமாகச் சிந்தையில் நிறுத்தி, அதைச்
சார்ந்த விஷயங்களை சங்க்ஷேபமாய் எடுத்துரைத்
தல், நன்கென்றெண்ணுகின்றோம்.

தேவநேச ஐக்கிய ஒன்றிப்புக்கு அத்தியாவசிய
மான தேவ இஷ்டப்பிரசாதத் திருவிளக்கு தம்
உள்ளத்தில் மேன்மேலும் சுடர்விட்டெரியும்படி,
தமதாத்துமத்தை அடிக்கடி நுணுநுணுக்கமாய்
ஆராய்ந்து பரிசோதித்துவந்தார். ஒவ்வொருவ
னும் தன்னை ஆட்கொண்டிருக்கும் பிரதான துர்க்

குணம், அல்லது கிரமந்தப்பின பற்றுதலை ஜெயித்து, அதற்கு எதிரான புண்ணியத்தை கைக்கொண்டு, ஞான ஜீவியத்தில் உத்தமதனம் அடைவதற்கு மகா உசிதமான ஓர் சாதனமாக, அவர் தாமே தமது ஞானமுயற்சிகளில் படிப்பித்துக் கொடுத்திருக்கும் தனி ஆத்துமசோதனையை அநுதினம் விடாமுயற்சியாக வெகு ஜாக்கிரதையுடன் செய்துவந்தார்;—ஆவி பிரியுமட்டும் இம்முயற்சியை விட்டுவிட்டவரல்ல. இதுவுமன்றி, ஒவ்வொரு மணிநேரமும், அம்மணிநேரத்தில் தமது நினைவு வாக்குக்கிரிகைகள் யாவையும்பற்றிச் சுருக்கமாய் இரண்டோர் நிமிஷம் தம்மிடத்தில் கணக்குக் கேட்பார். ஏதாகிலும் குறைகளிருந்தால் அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு சர்வேசுரனை நோக்கிக் கண்களை உயர்த்தி, இருதயத்தில் உருக்கமாய் நேச உச்சாரணம் செய்வார். அடுத்தமணிநேரத்தை முந்தினமணி நேரத்தைப்பார்க்கிலும் தேவ மகத்துவத்துக்கு அதிக உகந்தவிதமாய்ச் செலவழிப்பேனென்று பிரதிக்கினை செய்துகொள்ளுவார். மேலும், அவர் தாமே தம்மக்கள் யாவருக்கும் விதித்திருக்கும்பிரகாரம், தாமும் நித்தம் இருபொழுது,-மத்தியானம் கால்மணிப்பொழுது, இரவில் நித்திரைபோகுமுன் கால்மணிப்பொழுது,—மற்றக்கவலை காரியங்களையெல்லாம் விட்டொழித்து, தேவசமுகத்தில் அமர்ந்து, ஆத்துமசோதனை செய்துவருவார்.



ஜீவியத்தில் எவ்வளவோ பரிசுத்தராக விளங்கின இவர் இவ்விதம் அடிக்கடி ஆத்துமசோதனை செய்வதற்கு அத்தனை குற்றங்குறைகள் அவரிடத்தில் ஏது? என, இதனை வாசிக்கும் நண்பர்கள் மனதில் ஒருவேளை ஐயம் தோன்றலாம். தேவசிநேகம் ஒளிரும் தூய ஆத்துமாவின் கண்களுக்கு துலக்கமும் கூர்மையும் அதிகமன்றோ! சாதாரண கண்களுக்குத் திவ்வியமான சுத்த ஜலமென்று தோன்றுவதை, பூதக்கண்ணாடியினால் பரிசோதித்துப் பார்க்கில், அதில் அனந்தம் இதர வஸ்துக்கள் கலந்திருக்கக்காணலாம். அதுபோலவே தேவசிநேகம் நிறைந்தொளிரும் தூய ஆத்துமாக்கள், மற்றவர்கள் கண்ணுக்கு முற்றும் பரிசுத்தமென்றுதோன்றும் நினைவு, வாக்கு கிரியைகளிலேமுதலாய், தேவ மகத்துவத்துக்குப் பொருந்தாத அற்பசொற்ப மாசுகள் இருப்பதாகக் கண்டு, அவைகளுக்காகவும் மனஸ்தாபப்பட்டு, வெகு ஜாக்கிரதையாய் அவைகளை யகற்றி, மேன்மேலும் அதிக நிர்மலமான இருதய தூய்மை அடைய பிரயாசப்படுவார்கள். மற்றவர்கள் எவ்வளவுதான் ஆராய்ந்து பார்க்கிலும் அவர்களுக்குத் தென்படாத நுட்பமான மாசுகள், சகல பரிசுத்ததனத்துக்கும் ஊற்றும் ஊறணியுமாகிய நித்திய கடவுளின் திவ்விய இலட்சணங்களை நேச வாஞ்சையுடன் நோக்கிய இத்தூயாத்துமாக்களின் கண்களுக்கு தக்ஷணமே புலப்படும். அன்பனுக்கு எது பிரியம், எது பிரியமல்லவென்று, அவனுடைய

உள்ளத்தை அன்னியோன்னியமாய் அறிந்த அன்பனையன்றி, அன்னியன் நன்றாய் அறிந்துகொள்ளானல்லோ!

இவ்விதம் அடிக்கடி தனக்குள் புகுந்து, தன் ஆத்துமத்தைப் பரிசோதித்து, அப்போதைக்கப்போது உண்டாகும் அற்பசொற்ப மாசுகளையும், கண்ணிற் கசடென, அப்பொழுதே அகற்றி நீக்கி, நற்பிரதிக்கினை செய்துவருதல், “நீதிமான் இன்னும் நீதிமானாகட்டும்; பரிசுத்தவான் இன்னும் பரிசுத்தவானாகட்டும்” * என்றபடி, ஞானசீவியத்தில் அபிவிர்த்தியடைந்து, சர்வேசுரனோடு மேன்மேலும் நெருங்கிய நேசபுந்தனமாவதற்கு வெகு அவசியமென்று அர்ச். இஞ்ஞாசியார் எண்ணியிருந்தார். ஓர் சமயம் அவர் ஒரு சுவாமியாரைப் பார்த்து, “இன்று எத்தனைவிசை உள்ளத்தில் சிந்தித்து, ஆத்துமத்தை சோதித்துப் பார்த்தீர்?” என்று வினவினார். “ஏழுவிசை” என்று சுவாமியார் சொன்னார். அதைக்கேட்டு அர்ச்சியசிஷ்டவர் ஆச்சரியப்பட்டு “என்ன! ஏழுவிசைமாத்திரம்; ஆயினும் சர்யுங்காலம் உமக்கு ஒழிந்தநேரம் வெகுவாயிருந்ததே!” என்றார்.

தன்வசம் ஒப்பிக்கப்பட்ட இம்மை மானிடன்மீது சதா கண்ணுங் கருத்துமாயிருக்கும் தேவதூதன், திரியேகக்கடவுளை சதா முகமுகமாகத் தரிசித்துய்

* அர்ச். அருளப்பர், காட்சியாகமம், 22-ம் அதி., 11-ம் வசனம்.



யும் நித்திய தேவதரிசனஜீவியன்றோ! அஃது போல், தம்வசம் ஒப்பிக்கப்பட்ட சேசுசபையையும் அச்சபையின் மக்களையும் அயராது கண்ணுங் கருத்துமாய்ப் பரிபாலித்து நடத்திவந்த அர்ச். இஞ்ஞாசியாரும், சதா ஒரு தேவ சன்னிதான ஜீவியாக விளங்கினார் என்னலாம். அனந்தம் கவலை காரியங்களிலெல்லாம், ஒவ்வொன்றிலும், உள்ளன்பு நோக்கமுடன் தேவ சித்தத்தையும் தேவ ஸ்தோத்திரத்தையும் கருதி நாடிய தெய்வச்சிந்தை அவ்வளவு ஸ்தாபரமாக அவர் ஆத்துமாவில் ஆழ்ந்து ஊன்றி நிலைபெற்றிருந்தது! எந்நேரத்திலும், எச்சமயத்திலும், எவ்விடத்திலும், எங்கும் பிரசன்னராயிருக்கும் நித்திய கடவுளின் திருச்சன்னிதியை உள்ளத்தில் உருக்கமாய் உணர்ந்து, அவரோடு நேச சல்லாபம் செய்வது அவருக்கு இயல்பாய்ப் போயிற்று. மரணமடைவதற்குச் சுமார் பத்து மாதத்துக்குமுன் கொன்சாலஸ் சுவாமியாருடன் தனிமையாய் சம்பாஷித்துக்கொண்டிருந்த ஓர் சமயத்தில், சர்வேசுரனுடைய ஊழியத்துக்குத் தம்மைக் கையளித்த நாள்முதல் அதுகாலமட்டும் தேவபக்தியும் தேவசன்னிதான சிந்தனையும் தம்முள்ளத்தில் நாளுக்குநாள் ஸ்திரமாய் அதிகரித்து வந்ததென்றும், தமது ஜீவியகாலத்தில் எக்காலத்தையும்விட இப்பொழுது அந்தத் தேவசன்னிதான சிந்தனை தம் ஆத்துமாவில் அதிக ஸ்திரமாக ஊன்றி நிற்பதாகவும், தமக்கு இஷ்டமான எந்நேரத்திலும்

சர்வேசுரனைத் தம் உள்ளத்தில் கண்டடைவது தமக்கு இப்பொழுது அதிசுலபமென்றும் அறிவித்தார்.

இவ்விதம் என்றும் தேவசன்னிதானத்தை நாடி, தன் தேவனோடு நேச ஐக்கியமாய் ஜீவித்துவந்த அவர் ஆத்துமா, அந்தத் தூய தேவ சிநேகத்தில் தன்னை முற்றும் மறந்ததாய், சகலத்திலும் அவருடைய அதிமிகத் தோத்திரம் ஒன்றையே வாஞ்சையாய்க் கருதியிருந்தது. அவர் நினைவு கிரியைகள் ஒவ்வொன்றையும் தூண்டி நடத்தியது தேவ சிநேகமே. தேவசிநேகமே அவர் ஆத்துமத்துக்கு உயிர்போலவும், அவருடைய ஞான சீவியத்துக்குச் சீவன்போலவுமிருந்தது. "நமது ஆத்துமத்துக்கு உயிர்போலவும், நமது ஞான சீவியத்துக்கு ஜீவன் போலவும் இருக்கின்ற தேவசிநேகத்தை நம்மாலான ஜாக்கிரதையுடன் நம்முள்ளத்தில் காப்பாற்றி அதிகரிக்கச் செய்வோமாக!" என்று அவர் தாமே சொல்லியிருக்கிறார். தன்னையும் தனக்குள்ளயாவையும் தேவமகத்துவத்துக்குத் தகனபலியாக ஒப்புக்கொடுத்துவிட்டு, ஓயாமல் அவர் கேட்டுவந்த மன்றாட்டென்ன? சர்வேசுரனை இன்னும் அதிகமதிகமாய்ச் சிநேகிக்கவேண்டுமென்பதே. "ஆண்டவரே, எனக்கிருக்கும் சுவாதீனம் அனைத்தும், என் ஞாபகம், என் புத்தி, என் மனம் யாவும், என்னிடத்தில் ஏதேது உண்டோ, எனக்கு ஏதேது சொந்தமோ அவைகளையெல்லாம் தேவரீரே எடுத்



துக்கொள்ளும், இதோ கையேற்றுக்கொள்ளும். நீரல்லோ, ஆண்டவரே, சகலமும் எனக்குத் தந்தவர்; உமக்கே, அவைகளைத் திரும்பவும் கொடுத்துவிடுகிறேன்; சகலமும் உமக்கே சொந்தம். உமது பூரண சித்தப்பிரகாரம் அவைகளை நடத்தியருளும். எனக்கு உமது சிநேகத்தையும், வரப்பிரசாதத்தையும் தந்தருளும்; இவைகளே எனக்குப் போதும்"* என்று அவர் தாமே உண்டுபண்ணி ஜெபித்துவந்த உன்னத சிறு ஜெபமே இதற்குப் போதுமான திருஷ்டாந்தம்.

---

* ஞான முயற்சிகள் என்ற அற்புத நூலின் முடிவில் தேவ சிநேகத்தின்பேரில் அர்ச்சியசிஷ்டவர் இயற்றித் தந்திருக்கும் மகா உன்னத தியானத்தின், நாலு பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவின் கடைசியில், தியானிக்கும் ஆத்துமா தன்னை சர்வேசுரனுக்குப் பாதகாணிக்கையாக ஒப்புக்கொடுத்து நேச சல்லாபம் செய்யும்படி இச்சிறு ஜெபத்தை எழுதிக்கொடுத்திருக்கிறார். இதனை அர்ச்சியசிஷ்டவர் இஸ்பானிய பாஷையில் எழுதியபடி, சங். ருத்தான் சுவாமியார் இலத்தீன் பாஷையில் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்து தந்ததை, நாம் தமிழில் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம். இதே ஜெபத்தை 'ஞானப்பொக்கிஷம்,' 'உத்தமதனத்தின் ஏணி' முதலிய புஸ்தகங்களில் காணலாம். ஆனால் இப்புத்தகங்களில் இச்செபம் பாஷாலங்காரத்தைக்கருதி சற்றே தாராளமாய் மொழி பெயர்த்தெழுதப்பட்ட பூர்வீக இலத்தீன் பிரதியில் இருக்கிறபடி தமிழ்ப்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

அவர் தூயாத்துமாவில் நிறைந்தொளிர்ந்த இவ்வுத்தம தேவ சிநேகாக்கினியின் புனித அருட்சுவாலை வெளியில் தாவி வீசினாற்போல், பல சமயங்களில் அவர் முகம் ஆச்சரியமான ஒரு காந்திப் பிரபைபோல் துலங்கினதென்றும், இத்தேவ சிநேகம் ஒழுங்கற்ற பற்றுதல்களை நிக்கிரகம்செய்து, இருதயத்தில் இயற்றிய உஜித சமாதான சாந்த மன நிலையால், எவ்வித விபத்து எவ்வித துன்பந்தான் நேர்ந்தபோதிலும், என்றும் மாறா முகரூப அமைதியுள்ளவராயிருந்தாரென்றும் ஏற்கனவே பலதரம் சொல்லியிருக்கிறோம். அவர் மரணத்துக்குப்பின் அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டும்படி, அவருடைய சீவியத்தை ஆராய்ந்து பரிசோதித்த ஞானகர்த்தாக்கள் இதுவிஷயத்தில் உறுதிப்படுத்தி எழுதியதை இங்கெடுத்துச் சொல்லலாம். “இஞ்ஞாசியாருடைய நினைவு, வாக்குக் கிரியைகள் யாவும் சர்வேசுரனையே தங்களுக்கு ஏக கதியாக நோக்கினவைகளாய், அவருடைய ஸ்தோத்திரத்தையும் மகிமையையும் மாத்திரம் கருதினவைகளாயிருந்தன. ‘Ad Majorem Dei Gloriam’ ‘சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்திற்காக’—இதுவே அவருடைய விருதுமொழி,—இவ்வார்த்தைகள் அவர் நாவில் என்றும் இருந்தன. அவருடைய நடபடிகளுக்கெல்லாம் சுக்கான்போலிருந்தது இதுதான். தமது மக்களும் தங்கள் கிரியைகள் யாவற்றிலும்



இதைத் தங்கள் கண்முன் வைத்து நடக்க வேண்டுமென்று விரும்பினார். இதனாற்றான், முத்திப்பேறுபெற்ற இந்த மகாத்துமாவின் இருதயத்தில் மனோரம்மிய ஞானசந்தோஷம் மேலிட்டிருந்தது. அவர் ஆத்துமத்தில் குடிகொண்டிருந்த சமாதான அமைதியை அறிக்கையிடும் இந்த ஞானசந்தோஷம், என்றும் ஒருகண்டசீராய் மலர்ந்து தெளிந்து களிப்புற்றிருந்த அவர் முகத்திலும் துலங்கியது. எவ்வளவுக்கதிகமாய்த் துன்பதுரிதங்கள் அவரை நெருங்கி வந்தனவோ, அவ்வளவுக்கதிகமாய் முகமலர்ந்து மனமகிழ்ந்தவராகக் காணப்பட்டார். இதே காரணத்தினாற்றான், தம்மிடத்திலுள்ள பாசம் பற்றுதல்களில் எதாகிலும் சலனம்செய்து மேலெழவொட்டாமல், அவைகளையெல்லாம் நேர்நிலையில் தமக்குள் ஸ்திரமாய் அடக்கி ஆளுவதில் பூரண வல்லமையுடையவராக விளங்கினார். அவரைக் கண்ணுற்ற யாவருக்கும் இது ஓர் ஆச்சரியமாயிருந்தது. எவ்வித விபத்து நேர்ந்தாலும், ஒருபோதும் குறையாத இந்த மனோரம்மிய அமரிக்கைக்குக் காரணம் அவர் இருதயத்தின் உள்ளாந்தரங்கத்தில் சுவாலித்தெரிந்த தேவ சிநேகமே” என்று மேற்சொன்ன ஞான கர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள். “தமது தாசனுடைய ஆச்சரியமான அர்ச்சியசிஷ்டதனத்தை மகிமைப்படுத்தும்படி அவர் முகத்தில் சுபாவத்துக்கு மேற்பட்ட ஓர் பிரகாச ஒளி துலங்கும்படி அதி உன்னத

கர்த்தர் திருவுளமானார்" என்று எட்டாவது உர்பானுஸ் (Urbanus VIII) என்னும் பாப்பானவரும் அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்து எழுதிய "ஆஜ்ஞை" பத்திரத்தில் சொல்லுகிறார்.

இருதயத்தில் பற்றியெரிந்த தேவசிநேக அக்கினியினால், அவர் முகம்மாத்திரமல்ல, அவருடைய வாக்குக் கிரியைகளும் தேவ சிநேகமயமாகவே துலங்கின. அவருடைய வாய்மொழிகள் கிரியைகள் அத்தனையும், அத்தனை தேவநேச உச்சாரணங்களாயிருந்தனவென்னலாம். சர்வேசுரன் தமக்களித்த சுபாவ சக்திகளையும், சுபாவத்துக்கு மேலான வரங்களையும் தேவதோத்திர வர்த்திப்புக்காக ஒவ்வொரு க்ஷணமும் சம்பூரணமாய்ப் பிரயோகித்து, ஒவ்வொரு க்ஷணமும் அதிமிக சுறுசுறுப்புடன் பிரவிர்த்திசெய்து உழைத்துவருவார். தேவ ஊழியத்துக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் அசட்டை, அஜாக்கிரதை என்பதை அற்பமும் சகியார். ஓர் சமயம் தனக்குக் குறிக்கப்பட்ட அலுவலின் கடமைகளை சற்று அஜாக்கிரதையாய்ச் செய்துகொண்டிருந்த ஒரு சகோதரரைப்பார்த்து, யாருக்கு ஊழியம் செய்வதற்காக நீர் சபையில் உட்பட்டிருக்கிறீரென்று கேட்டார். சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதற்காகவென்று சகோதரர் சொன்னார். உடனே அர்ச்சியசிஷ்டவர் முகமாறி,



"என்ன! சர்வேசுரனுக்கு ஊழியம் செய்வதற்காகவென்கிறீர், ஆயினும் இவ்வளவு அஜாக்கிரதையாய் அவருக்கு ஊழியம் செய்துவருகிறீர். இனிமேலாக இதனை நாம் சகியோம். மனிதனுக்குமாத்திரம் ஊழியம் செய்தல் உமது கருத்தாயிருந்தால், உமது அசட்டைத்தனத்துக்கு ஏதோ மாப்பு மன்னிப்பிருக்கலாம். நீர் சொல்லுகிற தேவ மகத்துவத்துக்கு ஊழியம் செய்வதிலோவென்றால், நமது சர்வ சக்தியுடன் அயராமல் முயற்சிசெய்து தண்டித்துழைத்துவந்தாலும், அதுவெல்லாம் அவர் மட்டில் நமக்கிருக்கும் கடமையில் ஆயிரத்திலொரு பங்குமுதலாய் நிறைவேற்றுவதற்கு ஐவேசாகாதே; அப்படியிருக்க உமக்குக் குறிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவதிலேமுதலாய் அஜாக்கிரதையாயிருக்கிறீரே, இது எவ்வளவோ பெரிய குற்றம்" என்று கடிந்து அவருக்குப் புத்தி சொன்னார்.

"இஞ்ஞாசியாருடைய இருதயத்தை தகனபலியாக்கி எரிந்துகொண்டிருந்த தேவ சிநேகத்தின் மாட்சிமையையும், அதன் உருக்கப் பெருக்கத்தையும் விபரித்துரைத்தல் போகப்போகப் பிரயாசையாக இருக்கின்றது. ஏனெனில் அர்ச். பெர்நார்து சொல்லுவதுபோல், 'இருதயம் பேசும் மொழிகள், சிநேகமில்லாருக்கு அர்த்தம் விளங்காத அன்னிய பாஷையாகவிருக்குமென்றால், இதுவிஷயத்தில் நான் இங்கு பிரயோகித்தெழுதும் வார்த்தைகளும்

அர்த்தம் தாற்பரியமற்றவைகளாய், பொருளைத் துலக்கிக்காட்ட சக்தியற்றவைகளாயிருக்குமென்றஞ்ச எவ்வளவோ இடமுண்டு! தேவசிநேகம் சுவாலித்தெரிந்து அதன் மனோகரத்தைத் தங்கள் உள்ளாந்தரங்கத்தில் சுகித்தநுபவிக்கும் இதயர்களே தாங்கள் அநுபவிப்பதை வாக்கினால் விவரிக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்களே! ஏனெனில், சுபாவத்துக்குமேலாய் எழும்பிய பரலோக சம்பந்தமான நேசப்பற்றுதல்களை வருணிக்க இகலோக பாஷைகளில் வார்த்தை கிடையாது. அர்ச். இஞ்ஞாசியார் தம் ஆத்துமாவில் நிகழ்ந்த வெவ்வேறு பக்தி பற்றுதல்களை எழுதிவந்த தமது ஞாபகக் குறிப்புகளில் சர்வேசுரனோடு அன்னியோன்னிய நேச ஐக்கியமாய்த் தாம் செய்துவந்த சல்லாபங்களின் தன்மையை விவரிக்க எத்தனித்து:— குரற் சத்தமின்றி அமைக்கப்பட்ட ஓர் கீதம், காதால் உணர்ந்துகொள்ளக்கூடாத மனோகரமிருந்த ஓர் இன்னிசை தம்இருதயத்தின் உள்ளாந்தரங்கத்தில் தொனித்து ஒலித்தாற்போலிருந்ததென்றும், பூலோகத்திலுள்ள இன்னிசை எதுவும் அதற்கிணையல்லவென்றும் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க என் புத்திக்கே துலக்கமில்லாத இவ்விஷயத்தை வாக்கினால் நான் எடுத்துரைப்பதெவ்விதம்? அர்ச். இஞ்ஞாசியார் தாமே தம் உள்ளத்தில் நிகழ்ந்ததை வருணிக்க, முற்றும் பொருத்தமற்றவைகளல்லவென்றாலும், வெகு பழுதுள்ள



உவமைகளைப் பிரயோகிக்கும்படி நேர்ந்ததே!" என்று பேர்போன பார்த்தொலி சுவாமியார் தாம் எழுதிய அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரத்தில் சொல்லுகிறார்.

"என் ஜீவன் நிலைத்திருப்பதற்கு, சுபாவ சக்திகளையன்றி வேறு ஆதாரமில்லாமற்போனால், நிச்சயமாகவே, இதற்குள்ளாக நான் மரித்துப் போயிருக்கவேண்டும்" என்று அர்ச்சியசிஷ்டவர் தமக்கு உற்ற நண்பர் ஒருவரிடத்தில் தாராளமாய் வார்த்தையாடிக்கொண்டிருந்த ஓர் சமயம் வாய்விட்டுச் சொன்னார். இவ்விசேஷத்தை மேற்சொன்ன பார்த்தொலி சுவாமியார் எடுத்துக்கூறி, "மனிதனை சர்வேசுரனிடத்தில் மறுரூபமாக்கினாற்போல் தன் சுபாவ சக்திகளின் ஆதாரத்தால் ஜீவிப்பதைவிட, தெய்வத்துவத்தின் ஆதாரத்தாலேயே ஜீவிக்கும்படிச் செய்யும் உத்தம தேவசிநேக ஐக்கிய ஒன்றிப்பின் இறுதியான அந்த உன்னத அந்தஸ்தில் வந்து சேர்ந்துவிட்டனரோ? சில சிறு செடிகளுண்டு! அவைகள் ஒரு விருக்ஷத்தை நன்றாய்ப் பற்றிப் பிடித்துக்கொண்டு, அந்த மரத்தோடு மரமாய் ஒரே பூண்டுபோல் வளர்ந்து வருகின்றன. அவைகள் தங்களுக்கு இயல்பாயுள்ள சுபாவத்தையும், தாங்கள் வளர்கிறதற்கு ஏதுவாயுள்ள ஜீவ தாதுவையும் இழந்துபோகிறதில்லையென்றாலும், தங்கள் சுபாவ சத்துவைவிட, விருக்ஷத்தின் சத்துவினாலேயே பிழைத்திருக்கின்றன

இந்த அன்னிய விருக்ஷத்தோடு அவைகள் எவ்வளவு ஐக்கியமாய் ஒன்றித்திருக்கின்றனவென்றால், விருக்ஷத்தின் சாரத்தை விருக்ஷத்தின் வேரினின்று தாங்களும் உண்டு வளர்ந்து கனிகொடுக்கின்றன. இவ்விரு பூண்டுகளும் வெவ்வேறு ஜாதி வர்க்கங்கள் தானென்றாலும், ஒன்றோடொன்று ஒன்றித்திருக்கும் ஒன்றிப்பின் பலனால் ஒரேஜாதி வர்க்கம்போல் காணப்படுகின்றன. உன்னத அர்ச்சியசிஷ்டதனமடைந்திருக்கும் ஆத்துமாக்கள் விஷயத்திலும் இவ்விதமே சொல்லலாம்'' என்றாச்சரியமுற்றுரைக்கிறார்.

மேலும், ''நான் ஜீவிக்கிறேன்; ஆனாலும் நானல்ல; கிறீஸ்துநாதர்தான் என்னில் ஜீவிக்கிறார்'' என்று அர்ச். சின்னப்பர் * சொன்ன வாக்கியத்தையும் எடுத்துக்கூறி, ''அர்ச். சின்னப்பர் தமது சுய ஜீவனால் ஜீவித்தார்; என்றாலும், தேவ சிநேகம் அவர் ஜீவித்திருப்பதற்கு எவ்வளவு இன்றியமையாததாயிருந்ததென்றால், வாக்குக்கெட்டாத ஓர் பரம இரகசியத்தால், தன் சுய ஜீவனிலும் இந்தச் சிநேகத்தின் பலனாலேயே பிரதானமாய்

* ''நான் ஜீவிக்கிறேன்; ஆனாலும் நானல்ல, கிறீஸ்துநாதர்தான் என்னில் ஜீவிக்கிறார். ஏனெனில் நான் இப்பொழுது என் சரீரத்தில் ஜீவிக்கிறதோ, இது என்னை சிநேகித்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவசுதனைப்பற்றும் விசுவாசத்தினாலே ஜீவிக்கிறேன்'' (கலாத். 2-ம் அதி. 20-ம் வச.)



ஜீவித்துவந்தார். வாள் அவர் ஆத்துமத்தை உடலினின்று பிரித்துப்போடலாம்; ஆனால் தேவ சிநேகத்தை அவர் ஆத்துமத்தினின்று பிரிக்க அதால் கூடாது. அவரே சொல்லிருப்பதுபோல்,* பரலோக பூலோக பாதாள வல்லமைகளெல்லாம் ஒன்றுகூடி பிரயத்தனப்பட்டாலும் அவைகளாலும் இது இயலாது. இஞ்ஞாசியாருடைய ஜீவியமும் அத்தன்மையதாகவே இருந்தது. அதாவது: அவருடைய ஜீவியம் சர்வேசுரன் ஒருவருக்குத்தவிர, மற்றனைத்துக்கும் மரித்து, தேவ சிநேகத்தால் தூண்டி நடத்தப்பட்ட பற்றுதல்களுக்கன்றி, வேறெவ்வித பற்றுதல்களுக்கும் உணர்ச்சியற்றவரான ஒருவருடைய ஜீவியமாயிருந்தது'' என்றெழுதியிருக்கிறார்.

வெகுவாய் மெலிந்து சோர்ந்து, பலவீனம் மேலிட்டிருந்த அவர் உடலில் அதுகாலம் உயிர் நிலைத்திருந்தது சுபாவ சக்திகளின் பலனுக்கு மேற்பட்ட ஒரு புதுமையே என்று அவரை விசாரித்து வந்த வைத்தியர்களும் அபிப்பிராயப்பட்டார்கள்.

''சூரியனுடைய கதிர்கள் சூரியனைவிட்டு வெகு தொலையில் இப்பூவுலகமெங்கும் பரவிப் பிரகாசித்தாலும், தங்கள் பிறப்பிடமாகிய சூரியகிரகத்தை விட்டுப் பிரியாமல், அதிலேயே தங்கி வாழ்ந்திருப்பதுபோல், சிநேகமானது நாம் பூலோகத்தில்

* உரோமர், 8-ம் அதி. 35, 38, 39-ம் வச, காண்க.

நம்மோடு நாமே ஜீவிப்பதைவிட, பரலோகத்தில் சர்வேசுரனோடு ஐக்கியமாய் ஜீவிக்கும்படிச் செய்கின்றது" என அர்ச்சியசிஷ்டவர் தாமே தேவ நேச ஐக்கியத்தின் தன்மையை வருணித்துச் சொல்லியிருக்கிறார். தேவ தோத்திரத்துக்காக என்ன பிரயாசம், என்ன பிரயத்தனத்தில் முயற்சியாயிருந்தாலும், சூரியனைவிட்டுப் பிரியாத கதிரைப்போல், சதா தன் சிருஷ்டிகரிடத்தில் ஜீவித்து வந்த அவர் ஆத்துமாவில் வாடா விளக்கென எரிந்துகொண்டிருந்த தேவசிநேகம் குபீரென்று பெரும் நெருப்பாய் எரியச் செய்வதற்கு, ஒரு அற்ப சொற்பக் காரியம் போதுமாயிருந்தது. ஏதோ ஞான சிந்தனையடங்கிய வாக்கியம், மனவல்லய ஜெபம், தெய்வம், சேசு என்ற திருநாமங்கள் ஏதாகிலும் அவர் காதில் விழுந்தாலே போதும். தக்கணமே தீ முகத்தில் மெழுகென, தேவ நேசப் பெருக்கத்தால் உள்ளம் உருகி, கண்களில் நீர் ததும்பும். தேவ மகத்துவத்தைத் ஸ்துதிக்கும் நல்ல கீத இராகங்கள், பாடல்களைக் கேட்டால், அவர் சிந்தனை பற்றுதல்களெல்லாம் சிநேகமயமாய்ச் சர்வேசுரனை நோக்கி தாவிச்செல்ல, பிணிகளால் தன் சரீரம் படும் கொடிய வாதைகளைமுதலாய் முற்றுமே மறந்தவராய், பரவசமானவர்போலிருப்பார். பிரமாண்டமான வானசோதி வஸ்துக்கள், வானத்திற்றோன்றும் நவகாட்சிகள், பூவுலகிலுள்ள சிறந்த ஜீவகோடி ஜெந்துக்கள், அழகிய விருக்ஷ-



கள், செடிகள், புஷ்பங்கள்மாத்திரமல்ல, ஓர் அற்பப் புல்லிதழ்முதலாய், சர்வாதி கர்த்தருடைய அளவற்ற ஞானம், விமரிசை, வல்லபம் முதலிய திவ்விய இலட்சணங்களையும், கருணாகரக் கிருபை அன்பமைந்த அவரது திவ்விய பராமரிக்கையையும் அவர் புத்தியின்கண் துலக்கிக் காண்பிக்கப் போதுமாயிருந்தது. அவைகளை நோக்கிய கண்களால் சகல நன்மை சொரூபியாகிய நித்திய கடவுளையே தரிசித்தவர்போல், பெருமூச்செறிந்து இருதயத்தில் நேச சல்லாபம் செய்வார். அநேக சமயங்களில் அவர் கண்களினின்று கண்ணீர் அருவிகள்போல் வழிந்தோடும்.

சாதாரணமாய் இவ்வித நிலைமையிலிருந்த அவர் ஆத்துமா, மற்றக் கவலை காரியங்களையெல்லாம் ஒழித்து, ஏகாந்தத்தில் ஜெபத்தியானம் செய்து தன் சிருஷ்டி கர்த்தரோடு சம்பாஷித்து அவரை ஸ்துதிக்கும்படி அமர்ந்ததும், அதிருந்த நிலைமையை என்னென்று சொல்லலாம்! "அதன் (அதாவது: சிநேகத்தின்) சுடர்கள் அக்கினிச் சுவாலைகளாம்" என்ற வேதாகம வாக்கியத்தை அவரைக் குறித்து சொல்லலாம். இச்சமயங்களில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர் உள்ளாந்தரங்கத்தில் பொழியவிட்ட மனோகரமிகுந்த ஞானப்பிரகாசக் கதிரொளியையும், அற்புத வரங்களையும் சற்றாகிலும் அறிந்துகொள்ள விரும்பினால், நமது சிந்தனைகளை மன்ரேசாவை நோக்கி திருப்பச்-

செய்து, அங்கு நிகழ்ந்தவைகளை நினைவுகூர்ந்து கொள்ளவேண்டும்.

குருக்களுக்கு அநுதினம் கடமையான மந்திரமாலை ஜெபிக்கும்பொழுது தேவபக்தி மிகுதியால் மனம் பொருமி, இடைவிடாமல் பேரின்பக் கண்ணீர் ஏராளமாய்ச் சொரிந்து வந்ததினால், அவர் கண்கள் வீங்கி, கண் பார்வைக்கே மோசம் வருகிறதாயிருந்தது. மூன்றாம் பவுல் என்னும் அர்ச். பாப்பானவர் இதை அறிந்து, மந்திரமாலைக்குப் பதிலாய் சுருக்கமான சில ஜெபங்கள் சொல்லி வந்தால் போதுமென்று அநுமதி கொடுத்தார்.*

* தேவ நேசப் பெருக்கத்தினால் ஓயாமல் அவர் கண்களினின்று பிரவாகமாய் வழிந்தோடிய கண்ணீரேதுவால், அவர் கண் பார்வைக்கு ஆபத்தாயிருந்ததாக பார்த்தொலி சுவாமியார் தமது புஸ்தகத்தில் அநேக இடங்களில் சொல்லுகிறார். "தமது பிதா மந்திரமாலை ஜெபித்ததில்லை; ஏனெனில் அவர் நித்திய கண்ணீர்கள் அதற்குத் தடையாயிருந்தன; இதனாற்றான், அவருடைய சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, அவர் மந்திரமாலை ஜெபிக்கக் கடனில்லையென்று அர்ச். பாப்பானவர் உத்தாரமளித்தார்," என்று ரிபதெனீரா சுவாமியாரும் லான்சீசியுஸ் என்னும் சுவாமியாருக்கு எழுதின ஓர் கடிதத்தில் சொல்லுகிறார். அர்ச்சியசிஷ்டவருடைய வாக்குகளே இதற்குத் தாட்சியாயிருப்பதாக, அது[illegible] இவ்விஷயத்தில் விளங்கும்

மரணமடைவதற்கு சில காலத்துக்குமுன் சர்வேசுரனுடைய ஓர் விசேஷ அநுக்கிரகத்தால் இஷ்டம்போல் கண்ணீரை அடக்கிக்கொள்ளவும், அல்லது தாராளமாய் வரச் செய்ய விட்டுவிடவும் வல்லவராயிருந்தார்.



மற்றெந்த சமயத்தையும்விட திவ்விய பூசைப் பலி செலுத்தும் நேரத்தில் முற்றும் பக்தி சுவாலகராக விளங்கினார். அந்நேரத்தில் அவருக்கு அநுக்கிரகிக்கப்பட்ட தெய்வீக தரிசனங்களுக்கும், மற்றும் அற்புத வரங்களுக்கும் கணக்கில்லை. ஓர்நாள் திவ்விய பூசைநேரத்தில், நிக்கோலாஸ் லானுவா (Nicolas Lanoy) என்ற சுவாமியார், அர்ச்சியசிஷ்டவர் தலையைச்சுற்றி ஏதோ நெருப்புப்பற்றி எரிகிறதாகக்கண்டு, திடுக்கிட்டு நெருப்பை அவிக்கும்படி பீடத்தண்டை தீவிரித்துச் சென்றார். ஆனால் அர்ச்சியசிஷ்டவர் பரவசமாயிருப்பதையும், அவர் கண்களினின்று கண்ணீர் வடிவதையும் கண்டு அத்தியந்த ஆச்சரியமடைந்தார். வானத்தில் மின்னலும் இடியும் கெம்பீரமாய் வர்த்திக்கச்செய்யும் பெரும் மேகங்கள், தாமே தண்ணீராய்க் குளிர்ந்துருகி பூமியில் வருஷிப்பதுபோல், சிங்கத் தகைமையான வீரசூர நெஞ்சுள்ள இந்த லொயோலா இஞ்ஞாசியார் திவ்விய பலிபீடமுன் கண்ணீராய்க் கரைந்துருகி, விம்மித் தேம்பி பிரலாபிப்பவரானார். இதனால், தேவநேசப் பெருக்கத்தின் அருமையை அறியாத ஒருவன், பூசைமுடிவில், அர்ச்சியசிஷ்டவருக்குப் பூசைக்குதவி செய்த பிரான்சிஸ்கு ஸ்த்ராதா (Francis Strada) என்பவரைப் பார்த்து சொல்லுவான்: "இந்தக் குருவானவர் மெய்யாகவே கொடும் பாதகம் செய்த பெரும் பாவியாயிருக்கவேண்டும்; பூசை ஆரம்ப

முதல் முடிவுமட்டும் அழுது பிரலாபித்தவண்ணமாகவே இருந்தார்” என்றான், அந்த பரமாத்துமா. அர்ச்சியசிஷ்டவர் பூசை செய்யும்பொழுது அவர் இருதயத்தில் அதிமிக வேகமாய்ப் பற்றியெரிந்த தேவ சிநேகத்தின் உக்கிரமத்தால் பல சமயங்களில் தேகபலன் முற்றும் தளர்ந்து சோர்ந்து போக, கோவிலை அடுத்திருந்த தமது அறைக்கு முதலாய் திரும்பிப்போக சக்தியற்றவராயிருந்தார். பிறர் அவரைத் தூக்கிக்கொண்டு போகவேண்டி நேர்ந்தது. அநேக சமயங்களில் முதல்நாள் பூசையில் தேவ சிநேக மிகுதியால் தேகத்திலுண்டான பலவீனத்தால், மறுநாள் பூசை செய்யக்கூடாதவராயிருந்தார்.

அநுதினம் அர்ச்சியசிஷ்டவர் தம் ஆத்துமத்தில் நிகழ்ந்துவந்த விசேஷங்களை எழுதிவைத்து, தாழ்ச்சியினால் மரணத்துக்குமுன் நெருப்பிலிட்டு எரித்துப்போட்ட ஞாபகக் குறிப்புகளில், நாற்பது நாள் தொடர்ச்சியாய் எழுதிவந்திருந்த ஓர் பாகம், ஏற்கனவே சொன்னதுபோல், எவ்விதமோ நெருப்பில் அகப்படாது காப்பாற்றப்படும்படி சர்வேசுரன் திருவுளமானார். அர்ச். தமதிரித்துவத்தோடும், அவதரித்த வார்த்தையானவரோடும் அவருக்கு அருளப்பட்ட மகா மகா ஆச்சரியமான நேச ஒன்றிப்பும், வாக்குக்கும் புத்திக்குமெட்டா திரித்துவப் பரம இரகசியத்தைப்பற்றி சுபாவத்துக்கு மேலான



அநேக உன்னத தரிசனங்களும் இதில் ஆதிமுதல் அந்தமட்டும் காணப்படுகின்றன. சில பக்கங்கள் மாத்திரமுள்ள இந்தப் பிரதியில், ‘மூவாட்கள், பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து’ என்ற வாக்குகளை நீக்கி, ‘தமதிரித்துவம்’ என்ற வாக்குமாத்திரம் சுமார் நூறுதரம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரதியிலுள்ளவைகளையெல்லாம் இங்கு மொழிபெயர்த்து தருதல் நம்மால் இயன்ற கர்மமன்று. ஆங்காங்கு அற்பசொற்பமாய் இரண்டோர் விஷயங்களைமாத்திரம், அவர் உள்ளத்தை ஊடுருவி சுவாலித்தெரிந்த தேவ சிநேகத்துக்கு ஓர் திருஷ்டாந்தமாக மொழிபெயர்த்து தருகின்றோம்.

“26-ம் நாள், புதன்கிழமை.—...ஜெபம் செய்வதற்காக கோவிலுக்குள் பிரவேசித்தபொழுது, சுபாவத்துக்கு மேற்பட்ட ஓர் வரப்பிரசாதத்தால், அர்ச். தமதிரித்துவத்தையும் சேசுநாதரையும் உணர்ந்துகொண்டேன்,—சரியாய்ச் சொல்லவேண்டுமானால், தரிசித்தேன். புத்தியின்கண் துலங்கிய இத்தரிசனத்தை நன்றாய்ச் சுகித்தநுபவிக்கும்படி அர்ச். தமதிரித்துவத்தை முற்றும் அணுகிப்போனேன், அல்லது அப்படி அணுகிப் போனதாக எனக்குத் தோன்றினது. கண்ணீர் ஆறாக என் கண்களினின்று ஓடிவந்தன; சேசுநாதர் மீதும், அர்ச். தமதிரித்துவத்தின்மீதும், வெகு உருக்கமான சிநேகம் என் இருதயத்தை அக்கினி

மயமாய்ப் பற்றியெரியச்செய்தது...கண்ணீர் சிந்திக்கொண்டே பூசை ஆரம்பித்தேன்; பூசை நேரமெல்லாம் கண்ணீர் நிற்கவில்லை; பத்தி உருக்கமும் மிகுதியாகவே இருந்தது. திரும்பவும் ஓர் விசை அர்ச். தமதிரித்துவத்தைப்பற்றி நவமாய் ஓர் தரிசனம் கண்டேன்; தமதிரித்துவத்தின்மீது நேசப்பெருக்கமும் இருமடங்கு அதிகரித்தது;—எவ்வளவாகவென்றால், அநேக சமயங்களில், (பூசை ஜெபங்களின்) வார்த்தைகளை உச்சரிக்க என்னால் கூடாமற்போயிற்று. பூசைக்குப்பின் ஜெபம் செய்துகொண்டிருந்தபொழுதும், அதற்குப்பின் குளிர்காய நெருப்பண்டை போனபொழுதும், சேசுநாதர்மீது அத்தியந்த வாஞ்சை நிறைந்த நேசப் பற்றுதல்கள் அநேகம் நவமாய் என் உள்ளத்தில் பற்றியெழும்பின. இந்த ஞாபகக் குறிப்புகளை எழுதும்போது முதலாய் அர்ச். தமதிரித்துவத்தைப்பற்றி புத்தி சம்பந்தமான ஓர் தரிசனம் எனக்கு அநுக்கிரகிக்கப்பட்டது......முந்தின தரிசனத்தில் சேசுநாதர் முற்றும் வெண்மையான பிரகாசக் கதிர்களால் சூழப்பட்டவராய் காணப்பட்டதாக எனக்குத் தோன்றினது; இப்பொழுதோவெனில், வேறோர் வகையாய், அவருடைய மனுஷீகம் என் ஆத்துமத்தில் முற்றும் என் தேவனாக இருப்பதாக உணர்ந்துகொண்டேன். இதனால் திரும்பவும் நேசப் பெருக்கமுடன் கண்ணீர்ப் பெருக்குமுண்டானது. மற்றதும்...”



“28, வெள்ளிக்கிழமை.—மடத்துக்கு வெளியிலும், கோவிலிலும் பூசைக்குமுன் சமயத்துக்குச் சமயம் மோட்ச இராஜ்யத்தை அதாவது மூவாட்களாகிய பரலோக கர்த்தரையும், பிதாவில் இரண்டாம் ஆளையும், மூன்றாம் ஆளையும் புத்தியில் துலங்கிய ஓர் தரிசனத்தால் தரிசிக்கப்பெற்றேன்...... பூசைக்குப்பின். மோட்ச இராஜ்யத்தையும், பிதாவாகிய சர்வேசுரனையும் தெளிவான ஓர்விதமாய் தரிசித்துக் கண்ணீர் சொரிந்தேன்......”

“31, திங்கட்கிழமை.—கோவிலுக்குள் பிரவேசித்தபொழுது, என் இருதயம் அர்ச். தமதிரித்துவத்தைநோக்கி மட்டிலடங்கா சிநேகமுடன் வேகமாய் தாவிச்செல்ல, ஏராளமாய்க் கண்ணீர் சிந்தினேன். முன்போல் அர்ச். தமதிரித்துவத்தின் மூவாட்களை நான் தனித்தனியாய் பார்க்கவில்லை; ஆனால் சோதிமயமான ஓர் பிரகாசத்தால், தெய்வத்துவம் நான் என் சிநேகத்தைத் தனக்குக் கொடுக்கும்படி என்னை ஆதியோடந்தம் முற்றும் கவர்ந்திழுத்ததாக உணர்ந்துகொண்டேன்...பூசைநேரமெல்லாம் முன்போலவே பக்தி உருக்கம், கண்ணீர்ப்பிரவாகம்; முன்போலவே, அர்ச். தமதிரித்துவத்தோடு என்னை ஒன்றித்து ஐக்கியப்படுத்திய மட்டிலடங்கா சிநேகம்......”

“32, செவ்வாய்க்கிழமை.—பூசை ஆயத்தஜெபம் சொல்லக்கருதி, யாரை நோக்கி ஜெபிப்பதென்று

யோசித்துக்கொண்டிருக்கையில், என் மனம் சேசு
நாதர் பாரிசமாய்த் திரும்பியது; தெளிவாகவல்ல,
சற்றே மறைவாக 'அவரைத் தரிசித்தாற்போல்
எனக்குத் தோன்றினது; அர்ச். தமதிரித்துவத்தை
யோவென்றால் பிரகாசமான ஓர் ஒளியில் உள்ளத்
தில் உணர்ந்து தரிசிக்கலானேன். விம்மல் தேம்ப
லுடன் அபரிமிதமாய்க் கண்ணீர் வடித்துக்
கொண்டு, தமதிரித்துவத்தை நோக்கி மகா உருக்க
மும் பேரின்ப மனோகரமும் நிறைந்த சிநேகவாஞ்
சையுடன் ஜெபிக்க ஆரம்பித்தேன்......பூசை வஸ்
திரம் தரித்துக்கொண்டு, பீடத்தடியில் சேர்ந்த
பொழுது, பக்தி உருக்கமும் விம்மல் தேம்பலுடன்
கண்ணீர்ப் பிரவாகமும் முன்னிலும் அதிகரித்தது;
அதிகரிக்க, நான் சிந்தின கண்ணீரேதுவால் ஒரு
கண்ணில் எவ்வளவு நோவு உண்டானதென்றால்,
பூசையைத் தொடர்ந்து செய்தேனானால், கண் இழந்து
போவேனென்று என் நினைவிற் பட்டது......"

"35, வெள்ளிக்கிழமை.—'சர்வேசுரன் என்னை
நரகத்தில் தள்ளிவிட்டாரேயானால்' என்ற நினைவு
திடீரென்று என் மனதில் உதித்தது. இரு காரி
யங்களை என் சிந்தையில் வருணித்துக்கொண்டேன்;
முதலாவது. அங்கு நான் அநுபவிக்கவேண்டியிருக்
கும் ஆக்கினை; இரண்டாவது. அந்த நிர்ப்பாக்கிய
ஸ்தலத்தில் சர்வேசுரனுடைய நாமத்துக்கு விரோ
தமாய்க் கேட்கப்படும் தேவதூஷணங்கள். இவை



களில் சர்வேசுரனுடைய மகா பரிசுத்த நாமம் நிந்
திக்கப்படுவதைக் கேட்பதே எனக்குப் பெரும்
வாதையாயிருக்குமென்று எனக்குத் தோன்றிற்று
........."

சர்வேசுரன் தமக்கு அநுக்கிரகம் செய்துவந்த
இவ்வற்புத வரங்களை அர்ச். இஞ்ஞாசியார் வெகு
பூஜித்மாய் எண்ணி, அவைகளுக்காக தேவமகத்து
வத்துக்கு இடைவிடாமல் நன்றியறிந்த ஸ்தோத்தி
ரம் செய்துவந்தார். என்றாலும், ஞான ஆறுதல்
அதிகமாயிருந்தாலுஞ் சரி முழுதுமில்லாவிட்டாலுஞ்
சரி, சகலத்திலும் தன் சுய பட்சத்தைத் தேவ
சித்தத்துக்கு முற்றும் பரித்தியாகம்செய்து, சர்வே
சுரனுடைய அதிமிகத் தோத்திரம் ஒன்றையே தன்
சர்வ சக்தியுடன் நாடித்தேடும் தூய இருதயமும்,—
அவதரித்த வார்த்தையானவரோடு நெருங்கிய பந்
தனமாய்ச் சகலத்திலும் அவரைக் கண்டுபாவித்த
லும்,—கிறீஸ்துநாதர்மேலுள்ள வணக்க நேசத்தி
னிமித்தம், நிந்தையவமான நிர்ப்பந்தங்களை மனப்
பிரியமாய்க் கையேற்றுக்கொள்ளுதலும்,—அன்றி
யும், கிறீஸ்துநாதரைப்போல் உடுபாவனை அணிந்
திருக்கவும், தாங்கள் ஏதேனும் காரணத்துக்கிடங்
கொடாமலே கிறிஸ்துநாதரைப்போல் பயித்தியக்
காரனாக எண்ணவும் நடத்தவும்படவும் விரும்பி
மனவூக்க முயற்சி செய்தலும்,—புத்திமனக் கீழ்ப்
படிதலைச் சம்பூரணமாய் அநுசரித்துவருதலும்,—
இது முதலியவைகளே உத்தம தேவ சிநேகத்தின்

உண்மையான அடையாளங்களென்று மதித்து, இவைகளையே தம் மக்களுக்கு மேன்மேலும் புகட்டி வந்தார். 'இவைகளில்லாமல் ஞான சீவியத்தில் வர்த்திப்படைவது கூடாத காரியம்; இவைகளிருந்தால், மற்றவைகளிருந்தாலும் இல்லாதேபோனாலும், புண்ணிய வர்த்திப்புக்கும் தேவ நேச ஒன்றிப்புக்கும் குறைவில்லையென்று அர்ச்சியசிஷ்டவர் திண்ணமாய் அறிந்திருந்தார். ஆனால் அருட்கொடையோனாகிய நித்திய கடவுள், இவைகளில் அதிமிக ஜாக்கிரதையாயிருக்கும் தூயாத்துமாக்களுக்கு, இகலோகத்திற்றானே,—தரிசனம் பரவசம் முதலிய வரங்களை அருளாதேபோனாலும்,—பரலோக பேரின்பம் பொழியும் வேறுவகையான உள்ளாந்தரங்க ஞான வரங்கள் அநேகம் ஓரோர் சமயத்திலேயாகிலும் அநுக்கிரகியாமற் போகுதல் அபூர்வம்.

1553-ம் ௵, மே-௴ 23-ம் ௳ அர்ச். சாமிநாதர் சபையைச் சேர்ந்த ரெஜினால்டு என்னும் ஒரு குருவானவர் அர்ச்சியசிஷ்டவரைக் கண்டு வார்த்தையாடி, பொலோஞா பட்டணத்தில் தமது சபைக் கன்னியர் மடத்தில் ஓர் கன்னியாஸ்திரியைப்பற்றி ஆச்சரியமான சில விஷயங்களையெடுத்துரைத்தார். அவள் வெகு அர்ச்சியசிஷ்டதனமும், உன்னத ஜெபத்தியான வரமும் உடையவளாகக் காணப்பட்டாளென்றும்; ஜெபம் செய்யும்பொழுது, சிரேஷ்ட தாயார் யாதேனும் கற்பிக்கும் குரற்சத்



தத்துக்கன்றி, மற்றெதுவுக்கும் முற்றும் உணர்வற்று பரவசமானவள்போல் இருந்தாளென்றும்; அநேக சமயங்களில் அவள் பாதங்களிலும், கரங்களிலும் விலாவிலும் ஐந்துகாயங்களின் அடையாளங்களும், சிரசைச் சுற்றி இரத்தம் ஒழுக முண்முடி ஊடுருவிப் பதித்த அடையாளங்களும் காணப்பட்டனவென்றும் அறிவித்தார். அறிவித்து, இவ்விஷயத்தில் இஞ்ஞாசியாருடைய அபிப்பிராயம் என்னவென்று விரும்பிக் கேட்டார். இஞ்ஞாசியாரோவென்றால்: "சுவாமி, தாங்கள் சொன்ன விசேஷங்களில் அவளுடைய கீழ்ப்படிதலைப்பற்றி ஓர் விசேஷம் சொன்னீர்களே, அதொன்றுதான் அவ்வளவு அதிகமாய் சமுசயத்துக்கு இடமில்லாததென்று தோன்றுகின்றது" எனப் பதிலுரைத்தார். குருவானவர் விடைபெற்றுக்கொண்டு போனபின், ரிபதனீரா சுவாமியார் இவ்விஷயத்தைப்பற்றி தமது அபிப்பிராயத்தை அதிகத் தெளிவாய் சொல்லும்படி அர்ச்சியசிஷ்டவரை மன்றாடினார். அதற்கு அர்ச்சியசிஷ்டவர் சொல்லுவார்: "சர்வேசுரன் சாதாரணமாய் ஆத்துமத்தின் உள்ளாந்தரங்கத்திற்றான் தமது திவ்விய செயல்களை நிறைவேற்றுவார். ஆயினும் ஆத்துமத்தில் அவர் பொழியவிடும் வரங்கள் சிலசமயங்களில் சரீரத்திலும் ஆச்சரியமான சில அடையாளங்களால் வெளித்தோன்றும்படி செய்வார். ஆனால் அபூர்வமாகவும், அவருக்கு மிகவும் உகந்த தாசர்கள் மட்டிலும்தான் இவ்விதம்

சம்பவிப்பதுண்டு. சாத்தானோவென்றால், ஆத்துமத்துக்குள் நேராய் பிரவேசிக்க அதற்கு வல்லமையில்லாததால், மாய்கையால் ஆச்சரியமான பல தோற்றங்களைச் சரீரத்தில் இயற்றி, அவைகளால் மதிகேடர்கள் வீண் கர்வங்கொண்டு கெட்டுப்போகும்படி வழி தேடும்'' என்று விளங்கச்சொன்னார். சொல்லப்பட்ட கன்னியாஸ்திரியையும் சாத்தான் இவ்விதமே ஏய்த்து வந்ததாக அதிசீக்கிரம் உருசுவாயிற்று.

ஏகாந்தத்தில் தன் சிருஷ்டி கர்த்தரோடு நேசபந்தனமாய் மனோஜெபத்தில் அமர்ந்திருப்பது, அர்ச்சியசிஷ்டவருக்கு எவ்வளவு பேரானந்தமாயிருந்ததென்று இதுமட்டும் சொன்னதற்குமேல் அதிகமாய்ச் சொல்லத் தேவையில்லை. ஆயினும் மனோஜெபத்தின் பேரின்ப மனோகரத்தை மிதமிஞ்சி நாடி, பிறர் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக பிரயத்தனம் செய்து உழைப்பதில் கிஞ்சித்தும் அஜாக்கிரதை செய்தவரல்ல. அதற்கு விரோதமாய், தேவ சிநேகம் எவ்வளவுக்கு அதிவேகமாய் அவர் இருதயத்தில் பற்றியெரிந்ததோ, அவ்வளவுக்கு அதிவேகமாய் தேவ சிநேகத்தால் ஜெனிக்கப்படும் பிறர் சிநேகமும் அவர் இருதயத்தில் பற்றியெரிந்ததென்று, இச்சரித்திரத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும், விசேஷமாய் முந்தின அதிகாரத்திலும் கண்கூடாய் விளங்கும். தமது சபையாரனைவரும் ஜெபத்தியானத்தை



யும், மற்றும் பக்தி முயற்சிகளையும் வெகு கனமாய் மதித்து, அவைகளில் மிக ஆவலுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். என்றாலும், தங்கள் சொந்த ஆத்தும இரட்சணியத்துக்காகவும் உத்தமதனத்துக்காகவுமாத்திரமல்ல, பிறர் ஆத்தும இரட்சணியத்துக்காகவும் உத்தமதனத்துக்காகவும் வருந்தி உழைப்பது சேசுசபையின் கதியாகையால், இந்தக் கதிக்கு இடையூறாயிருக்கக்கூடிய பக்தி முயற்சிகளை அவர்கள் கையேற்று செய்துவர அவர் ஒருபோதும் சம்மதித்தவரல்ல. இதனாற்றான் மற்ற சந்நியாச சபையார் தத்தம் சபை ஒழுங்குப்படி தேவாலயத்தில் ஒன்றுகூடி ஜெபித்துவரும் நெடுஞ்செபங்கள் ஞானப்பாடல்கள் முதலியவைகளைத் தமது சபையாருக்கு அவர் விதிக்கவில்லை.

இஸ்பாஞிய தேசத்தில் காந்தியா பட்டணத்துக் கலாசாலை சிரேஷ்டராயிருந்த ஒவியடோ (Oviedo) என்ற சுவாமியாரும், அக்கலாசாலையிற்றானே ஆசிரியராயிருந்த ஒனுவ்ரியுஸ் (Onufrius) என்ற வேறொரு சுவாமியாரும், இருவரும் தங்கள் அலுவல்களையும் கலாசாலையையும் விட்டு நீங்கி, ஓர் வனத்துக்குள் ஏகாந்தம் புகுந்து, அங்கு வசித்துவந்த ஓர் பரிசுத்த முனிவரருகிலிருந்து ஏழு வருஷகாலம் ஜெபத்தியானத்திலும் தபமுயற்சிகளிலும் மனதை ஊன்றி வனவாசம் செய்தல் தாங்கள் அர்ச்சியசிஷ்டதனத்தில் வர்த்திப்படைவதற்கு

உஜிதமான வழியென்றெண்ணி, அப்படிச் செய்ய
தங்களுக்கு உத்தரவு தரவேண்டுமென்று, 1549-ம்
வருஷம் அர்ச். இஞ்ஞாசியாருக்கு எழுதிக் கேட்
டார்கள். அர்ச்சியசிஷ்டவரோவென்றால் அவர்
கள் விரும்பிய உத்தரவையல்ல, அவர்கள் கொண்
டிருந்த விபரீத எண்ணம் அவர்கள் சிந்தையில்
அரை நிமிஷ முதலாய் நிலைத்திராமல் பதறி ஓடும்
படி, அர்ச். பிரான்சீஸ்கு போர்ஜியார் வழியாய்
அவர்களுக்குத் தகுந்த கண்டனை கொடுத்து பதி
லெழுதினார். அவர்கள் ஒவ்வொருவரும் விபரீத
மான தங்கள் எண்ணத்தை விட்டுவிட்டு, சேசுசபை
யின் கதிக்கும் கருத்துக்கும் இசைந்த பிரகாரம்
நடத்தப்பட உடன்படாமற்போனால், அவர்கள்
அபேட்சிக்கும் வனத்திலும் அதிக விசாலமான
வனத்துக்குள் அகன்றுபோகிறதாயிருக்குமென்று
அவர்களை எச்சரித்தபின் சொல்லுகிறார்: "என்
மனச்சாட்சி இது விஷயத்தில் எனக்கு கற்பிக்கின்ற
தென்னவென்று எனக்குத் தெரியும். யாதேனும்
சந்தேகத்தின் நிழல் முதலாயின்றி, நான் என்
உள்ளத்தில் உறுதியாய் நம்பியிருப்பதை, ஓர்நாள்
நம்மை நித்திய காலத்துக்கும் நடுத்தீர்க்கும் நமது
சிருஷ்டிகரும் ஆண்டவருமாகிய கிறீஸ்துநாதரு
டைய நீதியாசனமுன் பூஜித வணக்கத்துடன் திர்
மானமாய்ச் சொல்லுகிறேன்: இவ்விருவரும் நேர்
நெறிதவறி நடக்கிறார்கள்; நன்மையும் தின்மையும்
சரியாய்ப் பகுத்தறியாது, ஓர் சமயம் நேரான மார்க்



கத்தில் நடக்கிறார்கள், ஓர் சமயம் மார்க்கத்தை
விட்டகன்றலைகிறார்கள். உண்மையான இரண்
டொரு விஷயங்களை உள்ளத்தில் ஓதி, பின் பல
அபத்தங்களைப் போதித்து மனதை மயக்கிக் கெடுக்
கும் பொய்யின் பிதாவாகிய சாத்தானால் ஏய்க்கப்
பட்டு மோசம் போகிறார்கள்" என்று 1549-ம்௵
ஜூலை-௴ 27-௳ எழுதினார்.

இந்தக் கண்டனையால் ஒவியடோ சுவாமியார்
மனந்தெளிந்து, அர்ச்சியசிஷ்டவருக்கு எவ்வளவு
திருப்திகரமாக நடந்துவந்தாரென்றால், முன்
சொன்னதுபோல், சில வருஷங்களுக்குப்பின் எதி
யோப்பியா நாட்டுக்கு பிதாப்பிதாவாக தெரிந்து
கொள்ளப்பட்டார்.

"சர்வேசுரனுக்காக சர்வேசுரனை விட்டுப்பிரி
தல், அதாவது: பாவிகளை நல்வழி சேர்க்கும்படிப்
பிரயாசப்பட்டு உழைப்பதற்காக ஜெபத்தியான
த்தை விட்டுவிட்டுப் போகுதல் ஓர் நஷ்டமென
றால், அது கைகண்ட இலாபம் விளைவிக்கும் ஓர்
நஷ்டமாம். ஏனெனில் ஓர் ஆத்துமத்தை இரட்
சிக்கும் அதிர்ஷ்டம்பெற்ற பாக்கியசாலியின் இருத
யத்தில், ஜெபத்தியான வேளையில், சர்வேசுரன்
தமது வரப்பிரசாதங்களை அதிகத் தாராளமாய்ப்
பொழியவிட்டு, அதிக அன்னியோன்னிய நேச பந்
தனமாய் அது தம்முடன் ஒன்றித்திருக்கச் செய்
வார். ஜெபத்தியானம் இருதயத்தில் தேவ சிநே

த்தைப் பற்றவைத்து, மற்றவர்களும் சர்வேசுரனை நேசிக்கவேண்டுமென்று ஆசித்து பிறர்நேசக் கிரியைகள் செய்யும்படி தூண்டிவிடுகின்றது. சர்வேசுரனை விட்டகன்றிருக்கிறவர்கள் அவரை அறிந்து நேசிக்கும்படி செய்வதனால், நாம் சர்வேசுரனுக்கு அதிக உகந்தவர்களாய் அவருடைய வரப்பிரசாதங்களை அதிகமதிகமாய் அடைந்துகொள்ளுகிறோம்" என்று போதித்து வந்தார். அன்றியும் எவ்வித அலுவலில் முயற்சியாயிருந்தாலும் சகல சிருஷ்டிகளிலும் வீற்றிருக்கும் சிருஷ்டிகருடைய திருச்சன்னிதானத்தை ஓயாமல் உள்ளத்தில் சிந்தித்து, தன் சிருஷ்டிகரோடு நேச பந்தனமாய் அவ்வலுவல்களைச் செய்துவர ஒவ்வொருவரும் பிரயாசப்படவேண்டுமென்றும் விரும்பினார்.

சர்வேசுரனுடைய திருமுகத்தை என்றும் ஆவலாய் நாடி, எண்ணிறந்த அற்புத தரிசனங்களாலும் ஞான வரங்களாலும் ஏற்கனவே முத்தி அடைந்த ஓர் பரலோகவாசியைப்போல் அர்ச். தமதிரித்துவத்தைத் தரிசிக்கப்பெற்று, அர்ச். தமதிரித்துவத்தோடு ஏக நேசபந்தனமாய், அத்தேவ நேச ஒன்றிப்பின் ஏதோ ஓர் அற்புத சக்தியினாலேயே ஜீவித்துவந்த அர்ச். இஞ்ஞாசியாருடைய ஆத்துமா கூட்டில் அடைபட்ட அழகிய பறவை ஆகாயத்தை நாடிப் பரிதவிப்பதுபோல், பரலோக ஏக்கங்கொண்டு பரிதவித்ததென்றால் ஆச்சரியமென்ன! "கிறீஸ்துநாதர் என் ஜீவன், மரணம் எனக்கு ஆதா



யம்.....என் தேக கட்டவிழ்ந்து, கிறீஸ்துவுடனே கூட இருக்க ஆசிக்கிறேன்" * என்ற அர்ச். சின்னப்பரைப்போல், அர்ச். இஞ்ஞாசியாரும் ஏற்கனவே பல வருஷ காலமாய் மரணத்தை ஆவலாய் எதிர்பார்த்திருந்தார். ஆயினும் சகலத்திலும் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்தை நாடி தேவ திருவுளத்துக்குத் தமது மனதை முற்றும் பரித்தியாகம் செய்திருந்தாராகையால், தமக்கு சீக்கிரம் மரணம் கிடைக்கவேண்டுமென்று சர்வேசுரனை நோக்கி விசேஷ ஜெபம் செய்து பிரார்த்திக்கவில்லை. என்றாலும் இடைவிடாத அவருடைய ஏக்க நோக்கங்களே தேவ சன்னிதியில் வல்லமையுள்ள ஜெபமாயிருந்தன.

---

* பிலிப்பியர், I-ம் அதி., 21, 23 வச.

# 12-ம் அதிகாரம்.

## அந்தியகாலம்—முடிசூட்டல்.

## 1556.

"சேசுசபையை ஆண்டு நடத்த நான் திராணியுள்ளவனல்ல, என்னிலும் வேறொருவரை அதிபராகத் தெரிந்துகொள்ளுதலே சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்கும், சேசுசபையின் அபிவிர்த்திக்கும் அதிக அநுகூலமாயிருக்கும்" என, மகா உன்னதமான ஓர் தேவ அருள் ஞானத்தால் ஜெனிக்கப்பட்ட அருந்தாழ்ச்சியினால், ஆதிமுதல் எவ்வளவோ ஆட்சேபனைசெய்து, கடைசியாய்த் தமது தோழர்கள் விடாமுயற்சியாய்ச் செய்து வந்த கட்டாயத்தால்மாத்திரம் அதிபதி சிரேஷ்டராயிருக்க உடன்பட்ட அர்ச். இஞ்ஞாசியார், தம் ஆயுள்காலமெல்லாம் மேற்சொன்ன அருந்தாழ்ச்சி நிறைந்த எண்ணத்தை விட்டுவிட்டவரல்ல. தாம் வகித்துவந்த சிரேஷ்டத்துவத்தை இன்னொருவர் கையில் ஒப்புவித்துவிட்டு, அவருக்குத் தாழ்மையாய் கீழ்ப்படிந்து தேவமகத்துவத்துக்கு ஊழியம் செய்துவர வெகு ஆவலுற்றிருந்தார். 1547-ம் வருஷ, அப்பொழுது பொலோஞா பட்டணத்திலிருந்த லேய்னஸ் சுவாமியாரிடத்தில் தம் உள்ளத்தில் குடிகொண்டிருந்த மேற்சொன்ன ஆவலை வெளி



யிட்டு எழுதினார். உமது கையிலேயாகிலும், அல்லது நீராவது மற்ற சுவாமிமார்களாவது குறிக்கும் வேறெவர் கையிலேயாகிலும், நான் வகித்துவரும் சிரேஷ்டருத்தியோகத்தை முழுமன சந்தோஷமுடன் ஒப்புவித்துவிடுகிறேன். இவ்விதம் செய்தல் சர்வேசுரனுடைய அதிமிக ஸ்துதி தோத்திர மகிமைக்கும், எனதாத்துமத்தின் அதிமிக ஞான ஆறுதலுக்கும் அநுகூலமாயிருக்குமென்று எண்ணுகிறேன். நான் சுமந்துவரும் இவ்வுத்தியோக பாரத்தை இறக்கி வைத்துவிட்டு, பணிவான அந்தஸ்தில் ஜீவித்துவர நான் மெய்யாகவே ஆவலுற்றிருக்கிறேன். ஆயினும் என் எண்ணத்தை முற்றும் பரித்தியாகம்செய்து, நீராகிலும் அல்லது சபையிலுள்ளவர்களில் யாதிப்பேராகிலும் செய்யும் தீர்மானத்துக்கு உடன்பட ஆயத்தமாயிருக்கிறேனென்று அவருக்கு எழுதினார். சுமார் ஆறு வருஷங்களுக்குமுன் அர்ச்சியசிஷ்டவர் இவ்விதம் அட்டி சொல்லியபொழுது, சுருக்கென்றெழுந்து மறுமொழி பகர்ந்த லேய்னஸ் சுவாமியார், தற்சமயமும் எதிர்நியாயம் சொல்லி பதிலெழுதியிருந்திருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. அதனாற்றானோ என்னமோ, இதற்குப்பின் நாலுவருஷகாலம் இவ்விஷயத்தில் மௌனமாயிருந்தார்.

1550-ம் வருஷக் கடைசியில் கர்த்தர் பிறந்த திருநாளன்று, இரண்டாவது பூசை செய்தபின், ஆத்துமத்தில் அதி உக்கிரமமாய்ப் பற்றியெரிந்த

தேவ சிநேக மிகுதியால் தேகபலன் சோர்ந்து கடும் வியாதியாய் விழுந்தார். இதுசமயம் தாம் எழுதிமுடித்த சேசுசபை ஏற்பாட்டொழுங்குகளை ஆராய்ந்து பரிசோதிக்கும்படி சங்கத்துக்கு அவர் அழைத்திருந்த சுவாமிமார்களும் உரோமையில் வந்து கூடினார்கள். வியாதியாயிருந்த அர்ச்சியசிஷ்டவர், தாம் சதா ஆவலாய் நாடிவந்த காரியம் சித்திபெறுவதற்கு இதுதான் நல்ல சமயமென்று, சங்கமாய் கூடியிருந்த சுவாமிமார்களுக்கு 1551-ம் வருஷம் ஜனவரி-௴ 30-௳ பின்வருமாறு ஒரு கடிதம் எழுதி, அதிபதி சிரேஷ்டர் உத்தியோகத்தைத் தம்மைவிட்டு நீக்கி, இன்னொருவருக்களிக்க வேண்டுமென்று மன்றாடினார். அவர் எழுதிய கடிதம் :

“ஆண்டவரிடமாய் சேசுசபையிலுள்ள என் அருமைச் சகோதரர்களுக்கு எழுதிக்கொள்ளுவது,

சேசு

“பல மாதம் பல வருஷகாலமாய், யாதாம் உட்காரணத்தினாலாகிலும் புறக்காரணத்தினாலாகிலும் மனம் சலனப்படாது, ஆற அமர சாவதானமாய்ச் சிந்தனைசெய்து, தேவ மகத்துவத்தின் அதிமிக ஸ்துதிதோத்திரத்துக்கு அதிக உசிதமானதென்று என் புத்தியில் நான் உணர்ந்து தீர்க்கமாய் எண்ணியிருப்பதை, ஓர்நாள் என்னை நித்தியத்துக்கும் நடுத்தீர்ப்பவராகிய என் சிருஷ்டிகர்த்தர் சன்னிதியில்,



உண்மைக்கு இரண்டகமின்றி மனதில் சமாதான அமரிக்கையுடன் உங்களுக்கு அறிவிக்கிறேன். என்னிடத்திலுள்ள எத்தனையோ பாவங்களையும் குறைகளையும், எனதாத்தும சரீர நோக்காடுகளையும் எனக்குள் ஆராய்ந்துபார்க்கும்பொழுது, நீங்கள் என்மேல் சுமத்தியிருக்கும் உத்தியோகத்தின் பாரத்தை வகித்து, சேசுசபையை ஆண்டு நடத்துவதற்கு வேண்டிய திராணியும் தத்துவமும் என்னிடத்தில் மிகமிகக் குறைவாயிருக்கின்றதென்று அனந்தம்விசை தெளிவாய்க் கண்டுகொண்டேன். ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் ஆண்டவர் சமூகத்தில் நன்றாய் ஆலோசனைசெய்து, சேசுசபையை ஆண்டுவருவதற்கு, என்னிலும் அதிகத் தகுதியான ஒருவரை, அதல்லாவிட்டால், என்னைப்போல் அத்தனை குறைகளில்லாத ஒருவரையாகிலும் தெரிந்துகொண்டு, அவர் கையில் நான் இந்த உத்தியோகத்தை ஒப்புவித்துவிடும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அன்றியும், என்னைவிட அதிகத் தகுதியான, அல்லது என்னைப்போல அத்தனை குறைகளில்லாத ஒருவர் அகத்தியம் வேண்டுமென்றவசியமில்லை. எனக்கிருக்கும் திராணிமாத்திரம் அமைந்தவரான ஒருவர் கையிலே முதலாய் இவ்வுத்தியோகத்தை ஒப்புவித்துவிடுவதவசியமென்றெண்ண எனக்குப் போதுமான நியாயமுண்டு. இவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்து, நான் வகித்துவரும் இந்த உத்தி

யோகத்தை எனது ஏகக் கடவுளும் சிருஷ்டிகருமாகிய பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்தினால், இதோ இப்பொழுதே உங்கள் கையில் பூரணமாய் ஒப்புவித்துவிடுகிறேன்...'' என்றெழுதினார்.

இக்கடிதத்தைப் பார்த்து, சுவாமிமார்களெல்லாம் மனதுருகி சிந்தாகுலப்பட்டார்கள். என்றாலும், அர்ச்சியசிஷ்டவர் உயிரோடிருக்கும் காலமெல்லாம், அவரையன்றி வேறெவராகிலும் சபைக்கு அதிபராயிருக்க ஒருக்காலும் சம்மதியோமென்று ஒரே உறுதியாய்ப் பதிலுரைத்தார்கள்.

பம்பலூனு கோட்டை மதில்மேல் பட்ட காயத்தால் நிகழ்ந்த பற்பல கொடிய உபாதைகளாலும், மன்ரேசாவில் செய்துவந்த பயங்கரமான கடுந்தவசினாலும், உருமாறி பலவீனப்பட்டு பல பிணிகளுக்கு உறைவிடமான அவர் சரீரத்தில், அதுமுதல் நல்ல சௌக்கியமென்பது இருந்ததேயில்லை. சரீரப் பலம் நாளுக்குநாள் தளர்வுற்று குறைந்துவந்ததென்றாலும், அச்சரீரத்துடன் பந்தனமாயிருந்து அதனை நடத்திவந்த அவருடைய ஜீவாத்துமாவின் ஆச்சரியமான ஊக்கமும் உற்சாகமும் எப்பொழுதாகிலும் எவ்வளவேனும் தளர்ந்ததுமில்லை, சோர்ந்ததுமில்லை. உன்னத தேவ சிநேகத்தை உயிராகக்கொண்டு, அர்ச். தமதிரித்துவத்துடன் அத்தியந்த நேச பந்தனமாய் ஒன்றித்திருந்த இந்த ஜீவாத்துமாவின் மனோவலிமையினால் தேக பலவீ



னத்தையே வென்று ஜெயித்தவராய், தேவ மகத்துவத்தின் அதிமிக தோத்திரத்துக்காக, பூரண சௌக்கியமும் தேகப் பலமுமுள்ளவர்களாலே முதலாய் தாளாத, அரும்பிரயாசை பிரயத்தனங்களுக்கெல்லாம் பின்வாங்காது, கடைசிமட்டும் உற்சாகமாய் முயற்சிசெய்து உழைத்துவந்தார். இத்தனை பிரயாசை வருத்தங்களாலும், கடுந்தவசினாலும், இடைவிடாத வியாதியினாலும் நித்தம் தகனப்பலியானாற்போலிருந்த அவர் உடலில் இது காலம் உயிர்நிலை நின்றது யாவருக்கும் ஆச்சரியமாகவேயிருந்தது, — அர்ச்சியசிஷ்டவரை விசாரித்துவந்த வைத்தியருக்கே அது ஆச்சரியமாயிருந்தது.

1554-ம் ௵, வேனிற்காலம் அடுத்துவர, வியாதியினால் அர்ச்சியசிஷ்டவர் இரு மாதகாலம் படுத்த படுக்கையானார். பலவீனம் மிகுந்திருந்தமையால் அதிபதி சிரேஷ்டரைப் பொறுத்த கடமைகளையெல்லாம் அவர் தனிமையாய் நிறைவேற்றுதல் கூடாதென்று கண்டு, மேற்படி ௵ நவம்பர்-௴ நாதால் சுவாமியாரை அவருக்கு ஒத்தாசையாக நியமித்தார்கள். ஆயினும் சில மாதங்களுக்குள் பலவீனம் சற்று நீங்கி, கொஞ்சம் நல்ல ஆரோக்கியம் வந்தமையால், நாதால் சுவாமியாரை இஸ்பாஞிய தேசத்துக்கு அனுப்பிவிட்டு, தமது அலுவலின் கடமைகளையெல்லாம் வழக்கம்போல் தாமே நிறைவேற்றிவந்தார். அவருடைய மக்களெல்லாம்

தங்கள் நேச தந்தைக்கு நல்ல ஆரோக்கியம் வந்தது, இன்னும் சிலகாலம் தங்களுடன் உயிர் வாழ்ந்திருப்பாரென்றெண்ணி அகமகிழ்ந்து ஆண்டவரை ஸ்துதித்தார்கள். ஆயினும் அர்ச்சியசிஷ்டவருக்கு இகலோக சீவியம் முடிவுபெற்று, பரலோக பேரின்ப சீவியம் துவக்கும் காலம் விரைவாய் அணுகிவந்தது.

தொலையில் பிரகாசிக்கும் திவ்வியமான ஓர் சோதி ஒளியை ஸ்திரமாய் கண்ணோக்கி நடந்து செல்லுபவன், அதனை சமீபித்துப் போகப்போக அவன் முகமும் அத்திவ்விய ஒளியின் பிரகாசக் கதிர்களை அதிகமதிகமாகப்பெற்று, அதிகாதிகச் சோதிமயமாய் இலங்கித் துலங்குமல்லவா? அத்தன்மையாய், ஏற்கனவே மண்ணுலகின் எல்லையைக் கடந்து விண்ணுலகின் வரம்பிற் சேர்ந்து பரஞ்சோதிப் பிரகாசமாகிய திரியேகக் கடவுளின் நித்திய பேரின்ப தரிசனத்தை சமீபத்தில் கண்ணுற்று தரிசித்தவர்போலிருந்த அர்ச்சியசிஷ்டவர் முகமும், நாளுக்குநாள் அதிக காந்தியாய்ப் பிரகாசித்துத் துலங்கியது. இதனால் அவரைக் கண்ணுற்றவர்கள், ஏதோ ஓர் பரலோகவாசியைக் கண்ணுற்றாற்போல், அவர்மீது தங்களை அறியாமலே தங்கள் உள்ளத்தில் ஓர் பூஜித வணக்கமுடையவர்களானார்கள். அநேக கர்தினால்மார்களும் பெரியோர்களும் ஓர் அர்ச்சியசிஷ்டவருடைய முகதரிசனை அடையவேண்டுமென்னும் ஆசை ஒன்றைத்

544A



*Alonso Sanchez de Coello.*

அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருடைய மெய்யான சாயல்.

தவிர வேறு விசேஷ காரணமின்றி, அவரைத் தேடிப்போய் அவருடன் வெகுநேரம் வார்த்தை யாடுவார்கள்.

"மறுலோக காட்சிகளைக்கண்ட ஓர் தீர்க்கதரிசி முகம்போல், அவர் முகமும் ஓர் விசேஷ தேஜசு பெற்று பிரகாசமாய்த் துலங்கியதால், நான் எத்தனை தடவை அம்முகத்தைக் கூர்ந்து நோக்கினும், என் ஆசை ஒருபோதும் தீர்ந்ததில்லை" என, அர்ச்சியசிஷ்டவருக்கு உற்ற நண்பராயிருந்த குவிரோகா (Quiroga) என்னும் கர்தினல் சொன்னார். அர்ச். இஞ்ஞாசியாருடன் அன்னியோன்னிய நேசமாய், அடிக்கடி அவருடன் சம்பாஷித்து அவர் ஆலோசனையைத் தேடிவந்த அர்ச். பிலிப்பு நேரியார் என்பவரும், அகத்தின் அழகு முகத்தில் துலங்குமெனு. இஞ்ஞாசியாருடைய முகம் சாதாரணமாய் ஓர் காந்திப் பிரபைபோல் பிரகாசமாய்த் துலங்குவதைத் தாம் கண்டதாக அநேகம் விசை சொல்லியிருக்கிறார். "சுபாவத்துக்கு மேற்பட்ட ஓர் ஒளி அவர் முகத்தில் பிரகாசித்தது. அவருடைய முகரூப இலட்சணங்களில் சிலவற்றை படத்தில் வரைந்து காட்டக்கூடுமென்றாலும், அவர் முகத்தில் துலங்கிய சோதிப்பிரகாசத்தின் தேஜசை பூரணமாய் வரைந்துகாட்ட எந்த சித்திரக்காரனாலும் இயலாத கர்மம்" என்று இந்த அர்ச்சியசிஷ்டவர் ஓர்நாள் ஒலிவியர்மானுர் என்ற சுவாமியாரிடத்தில் சொன்னார். ரிபதெனீரா சுவாமி

யார் சொன்னதும் இதற்கிசைந்திருக்கின்றது. "படங்களில் அவர் முகச்சாயல் சரியாய் விளங்கக் காண்பதரிது. ஏனெனில் அவர் முகத்தில் துலங்கிய பரலோக சம்பந்தமான அருள் அழகை மனிதனுடைய சாமர்த்தியத்தால் சித்திரத்தில் வரைந்து காட்டல் கூடாத காரியம்" என்று இவரும் சொல்லி வந்தார். பஸ்ஸானோ (Giacomo Bassano) என்றொரு சித்திரக்காரன் அர்ச்சியசிஷ்டவர் உயிரோடிருந்த காலத்திலேயே அவருடைய முகரூப இலட்சணங்களை மாதிரியாகச் சிந்தையில் நிறுத்திக்கொண்டு, மோயீசனுடைய படம் ஒன்று எழுதினதாகச் சொல்லுகிறார்கள். லேய்னஸ் சுவாமியாரும் அர்ச்சியசிஷ்டவரைக் கண்ணோக்கும் பொழுது, மோயீசனுடைய நினைவு தம் உள்ளத்தில் உண்டாவதாகச் சொல்லி வந்தார். அலேசாந்திரோ என்ற வைத்தியர் வியாதியாயிருந்த ஓர் சமயம், அர்ச்சியசிஷ்டவர் அவரைப் பார்க்கும்படி அவர் இல்லிடத்துக்குப் போனார். வியாதிஸ்தர் அயர்ந்து நித்திரை செய்வதாகக் கண்டு, அவர் விழிக்காதிருக்கும்படி அற்பமும் சத்தம் செய்யாமல் மெல்லென படுக்கையருகிற் சென்று, வியாதிஸ்தரைக் கண்ணோக்கி ஒரு நிமிஷத்துக்குள் வெளியே வந்துவிட்டார். மறுநிமிஷம் வியாதிஸ்தர் கண்விழித்து தம் மனைவியைக் கூப்பிட்டு: "சற்றுமுன் அறையெங்கும் ஏதோ வெகு பிரகாசமாயிருந்ததே! என்ன விசேஷம் சம்பவித்தது?"



என்று வினவினார். "விசேஷம் ஒன்றுமில்லை. இஞ்ஞாசியார் தான் சற்றுமுன் அறைக்குள் வந்திருந்தார்" என்று அவள் சொல்லக்கேட்டு, ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்.

லொயோலா இஞ்ஞாசியாரைக்கண்டு பழகினவர்களும் அவருடைய சரித்திரத்தை ஆராய்ச்சி செய்தவர்களும் அர்ச்சியசிஷ்டவருடைய முகத்தில் துலங்கின சோதிப்பிரகாசத்தையும், விசேஷமாய் அவருடைய கண்களின் அருள் ஒளியையும், அடுத்தோரை வசீகரப்படுத்த அக்கண்களின் நோக்கத்தில் விளங்கின அபூர்வ வல்லப சக்தியையும் வெகுவாய் வியந்து பாராட்டியிருக்கின்றனர். **பிரான்சீஸ்து தாம்சன்** (Francis Thompson) எனும் ஒரு சரித்திராசிரியர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—"நன்றாய் உயர்ந்து விரிந்து வளைந்த [illegible]நெற்றி; நாசி செவ்வையாய் அமைந்த கிளிமூக்குச் சாயல்; கண்கள் குழிக்குள் புதைந்தவைகள்போல் காணப்பட்டாலும், சுடர்தீபம்போல் பிரகாசிக்கும்....அவர் முகத்தில் சதா கண்ணியமான ஒரு அன்பு நோக்கம் காணப்படும். ஆனால் குனிந்த தலையை நிமிர்த்தி தம்முடன் சம்பாஷிப்பவரை ஏறெடுத்துப் பார்த்தாராகில், இவர் எல்லாம் மறந்து ஆச்சரியமான அந்தக் கண்களையே பார்த்த பார்வையாயிருப்பார்....வெல்லமுடியாது அக்கண்ணோக்கத்தின் வசீகர வல்லமையை!—அவருடைய ஜீவாத்துமாவே 'அக்கண்களின் வழியாக ஊடுரு

விப் பார்த்து, அக்கண்களிலேயே வந்து நின்று, வார்த்தையாடுகிறாப்போல் தோன்றும். சாதாரணமாய் மானிடருக்குக் கண்கள் வெளிப்பொருட்களை எட்டிப்பார்ப்பதற்கு அமைக்கப்பட்ட சாளர வாசல்கள்போலிருக்கின்றன; இவருடைய கண்களோவெனில் தமது விருப்பத்துக்குப் பிறர் உடன்படவும் தமது கட்டளைக்குப் பிறர் பணியவும் செய்வதற்கு ஜீவசக்தியும் வல்லமையும் பொருந்திய ஆயுதங்கள்போலிருந்தன."

1556-ம் ௵ வேனிற்காலம் ஆரம்பிக்க, அர்ச்சியசிஷ்டவருடைய வியாதிகளும் பலவீனமும் வெகுவாய் அதிகரித்தன. தங்கள் அருமைத் தந்தை தங்களைவிட்டுப் பிரிந்துபோகுங்காலம் அடுத்துவந்துவிட்டதோவென்று, அவருடைய மக்களெல்லாம் கிலேசப்பட்டார்கள். ஆயினும் சேசுசபையின் நன்மைக்காக இன்னும் சிலகாலம் அவர் உயிர்வாழ்ந்திருக்க சர்வேசுரன் கிருபைசெய்வார் என்ற நம்பிக்கையில் அவர்கள் ஆறுதலடைந்திருந்தார்கள். அர்ச்சியசிஷ்டவரோவென்றால் தமது அந்தியகாலம் அணுகிவந்ததென்று நன்குணர்ந்தவராய், பொலான்கோ, கிறீஸ்தோபோர் மதரீத், நாதால் என்ற சுவாமிமார் மூவரையும் சபையை ஆண்டு நடத்தும்படி நியமித்து, அவர்கள் கையில் தாம் வகித்துவந்த அதிபதி சிரேஷ்டர் உத்தியோகத்தை ஒப்புவித்துவிட்டு, ஏகாந்தத்தில் சர்வே



சுரனோடு அதிக ஒன்றிப்பாய், மரணத்துக்கு ஆயத்தம் செய்யும்படி, பால்பினா (Balbina) என்னும் ஒதுங்கிய ஓர் ஸ்தலத்துக்கருகில் ஒரு திராட்சத் தோட்டத்தில் சுவாமிமார்களுக்கு இளைப்பாற்றிக்காகவென்று அவரே கட்டிவைத்த விடுதிக்குச் சென்றார்.

"மூன்று காரியங்கள், அதாவது: சேசுசபை அர்ச். பாப்பானவருடைய ஆசீர்வாதம் பெற்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும்; 'ஞான முயற்சிகள்' என்னும் புஸ்தகமும் திருச்சபையால் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும்; ஏற்பாட்டொழுங்குகள் முடிவுபெற்று சபையெங்கும் அநுசரிக்கப்பட்டு வரவேண்டுமென்றும் ஆவலாய் நாடியிருந்தேன். இம்மூன்று காரியங்களும் சர்வேசுரனுடைய கிருபையால் நிறைவுபெற்றன; அவருக்கு தோத்திரமுண்டாகக்கடவது" என்று அர்ச்சியசிஷ்டவர் ஓர்நாள் தமதருகிலிருந்த சுவாமிமார்களைப் பார்த்துச் சொன்னார். தேவமகத்துவத்துக்கு அநுதினம் ஓர் இஷ்டப்பலிபோல் ஜீவித்துவந்த இந்த மகாத்துமா உயிர் உடலைவிட்டுப் பிரியும் காலத்தை எதிர்பார்த்து சொன்ன இவ்வார்த்தைகளைக் கேட்கும்பொழுது, "நானே, இதோ பலியாகப்போகிறேன். என் தேகக்கட்டு அவிழும் காலம் கிட்டியிருக்கிறது. நல்ல யுத்தம் செய்தேன். என் அயனத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்தேன். கடைசியாய் நீதியின் கிரீடம் எனக்காக

வைக்கப்பட்டிருக்கிறது. இதை நீதியுள்ள நடுவராகிய கர்த்தர் அந்த மகா நாளில் எனக்குக் கொடுப்பார் * " என, பெரிய அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் தமது அந்திய காலத்தை எதிர்நோக்கி உரைத்த வாக்கியம் நினைவில் வருகின்றது.

யால்பிறு என்ற ஸ்தலத்தில் சேர்ந்ததும் சற்றே காய்ச்சல் கண்டு பலவீனம் மேலிட்டமையால், சில தினத்துக்குள் அவ்விடத்தைவிட்டு மடத்துக்கு தம்மைத் திரும்பக் கொண்டுபோகும்படிச் செய்தார். பலவீனம் மிஞ்சியிருந்ததென்றாலும், தற்சமயம் மரண ஆபத்தைக் குறிக்கும் அடையாளங்கள் வைத்தியர்களுக்குமுதலாய் புலப்படாததால், சுவாமிமார்கள் கவலைதெளிந்து, அவருடைய அந்தியகாலத்தைப்பற்றி அவ்வளவாய் சிந்தியாதிருந்தார்கள். ஆனால் மடத்தில் அப்பொழுது வியாதியாயிருந்தவர்களுள் லேய்னஸ் சுவாமியாரும் வேறு சிலரும் மரண ஆபத்திலிருப்பதாக எண்ணி, அவர்களைப்பற்றி வெகுவாய் கவலையுற்றிருந்தார்கள். அர்ச்சியசிஷ்டவரோவென்றால் தம் மக்கள் தமது படுக்கையைச் சூழ்ந்துவந்து நிற்கவும், சிந்தை வாடி கண்கலங்கிப் பிரலாபிக்கவும் இடமின்றி, நினையாத நேரத்தில் அவர்களை விட்டுப்பிரிந்து பரம பதவி அடைந்தார். திறந்த வாசல்வழியாய் மெல்லெனப்பறந்து ஆகாயத்தில் மறைந்துபோன

* 2-திமோத்தேயு, 4-ம் அதி., 6-8 வச.



பறவைபோல், அவரது தூயாத்துமா சமாதான அமரிக்கையாய் உடலைவிட்டுப் பிரிந்து, பரகதியில் தன் சிருஷ்டிகரோடு நித்தியநேச ஐக்கியமாய்ப் போயிற்று. அர்ச். லோயோலா இஞ்ஞாசியார் மரணமடைந்தது 1556-ம் வருடம் ஜூலை-மீ 31-உ வெள்ளிக்கிழமை காலை ஆறு மணி. அப்பொழுது அவருக்கு வயது அறுபத்தைந்து.

அர்ச்சியசிஷ்டவர் பரலோக பிராப்தியான ஏழாம் நாள், 'ப்ரோவின்ஸியல்ஸ்' (Provincials). என்று சொல்லப்படும் தேசாதிபதி சிரேஷ்டர்களுக்கு பொலான்கோ சுவாமியார் எழுதிய மரண அறிக்கை நிருபத்தில், அர்ச்சியசிஷ்டவருடைய அந்தியகாலத்தை அடுத்த அநேக விசேஷங்கள் காணப்படுகின்றன.

" கிறீஸ்துநாதருடைய சமாதானம் யாவருக்கும் கிடைப்பதாக ! "

" சங்கைக்குரிய சுவாமியவர்களே, ஜூலை மாதக் கடைசிநாள், வெள்ளிக்கிழமை காலையில் சர்வேசுரன் நமது பரிசுத்த தந்தை இஞ்ஞாசியாரைத் தம்மிடத்தில் அழைத்துக்கொள்ளச் சித்தமானார். இச்செய்தியை சுவாமியவர்களுக்கும், உங்கள் பராமரிப்பிலிருக்கும் சகோதரர்கள் யாவருக்கும், அறிவிப்பதற்காகவே இந்நிருபம் எழுதுகிறேன். அர்ச். இராயப்பர் சங்கிலித் திருநாளன்று, மாம்சமான உடலில் இதுகாலம் அவரை கைதியாகக் கட்டி

வைத்திருந்த சங்கிலிகள் முறிபட்டு வீழ்ந்துபோக, இரட்சிக்கப்பட்ட முத்தர்களுடைய சுவாதீனம் பெற்றுக்கொண்டார்.

“தமது பரிசுத்த தாசனுடைய ஏக்க நோக்கத்துக்கு சர்வேசுரன் கடைசியாய் சித்தமிரங்கினார். ஏனெனில் பரதேசமாகிய இப்பூவுலக வாழ்வின் பிரயாசை வருத்தங்கள் துன்பதுரிதங்களையெல்லாம் மகா பொறுமை திடாரிக்கமுடன் சகித்து வந்தாரென்றாலும், தன் சிருஷ்டிகராகிய ஆண்டவரை மோட்ச இராச்சியத்தில் தரிசித்து ஸ்துதிக்கும்படி, சென்ற அநேக வருஷ காலமாய் ஆவலுற்றிருந்தார். ஆனால் அவர் மூலமாய் ஸ்தாபகம் பெற்ற நமது சிறுசபை அவரது சீவியத்தின் சுகிர்த மாதிரியினாலும், அவருடைய விவேக விமரிசை, செல்வாக்கு, ஜெபங்களினாலும் அபிவிர்த்தியடையும்படியாய், அவர் இதுகாலமட்டும் நம்மோடிருக்க ஆண்டவர் திருவுளமானார்.

“பரகதியடைந்த நமது பிதாவின் அந்தியகாலத்தைப்பற்றி, அதிக விபரமாய் அறிய தங்களுக்கு ஆசையாயிருக்கலாம். அவருடைய அந்தியகாலம் வெகு அமைதி அமரிக்கையாயிருந்தது. அவருடைய மரணாவஸ்தை ஒருமணி நேரமுதலாய் நீடித்திருக்கவில்லை. அச்சமயம் மடத்தில் அநேகர் வியாதியாயிருந்தார்கள்; அவர்களுள் சங். லேய்னஸ், ஜூவான் தே மென்டோஸா (Juan de



Mendoza) என்ற சுவாமிமார்களும்; வேறு சிலரும் அபாயகரமான ஸ்திதியிலிருந்தார்கள். நமது பிதாவும் கிஞ்சித்து அசௌக்கியமாயிருந்தார்; நாலைந்து நாளாய் வெகு இலேசாய் காய்ச்சலிருந்தது. இதற்கு முன் அநேக சமயங்களில் நேர்ந்ததுபோல், தற்சமயமும் தேக பலவீனம் மிஞ்சியிருந்ததென்றாலும, காய்ச்சல் இன்னும் இருந்ததென்பது சந்தேகமாகத்தானிருந்தது. இவ்வித ஸ்திதியிலிருந்தவர் புதன்கிழமையன்று என்னை வரவழைத்து, மற்ற வியாதியஸ்தர்களை விசாரிப்பதுபோல் தம்மையும் வந்து விசாரித்துப்போகும்படி தோரஸ் (Dr. Torres) என்ற வைத்தியருக்கு சொல்லவேண்டுமென்றுகேட்டார். ஏனெனில், அவருக்கிருந்த சுகக்கேடு அவ்வளவு ஆபத்தானதல்லவென்று எண்ணியிருந்தோமாகையால், அது மட்டும் மற்ற வியாதியஸ்தர்களைப்பற்றிக் கவலையெடுத்து வந்ததுபோல், அவரைப்பற்றிக் கவலையெடுக்கவில்லை. அவர் கேட்டுக்கொண்டபடி, தோரஸ் என்ற வைத்தியரும், நமது நண்பரான அலேசாந்த்ரோ என்ற வேறொரு கைதேர்ந்த வைத்தியரும் தினம் நமது பிதாவை சந்தித்து விசாரித்து வந்தார்கள். மறுநாள் (வியாழக்கிழமை) சுமார் இருபதாம் * மணிவேளையில், என்னை அழைப்பித்தார். அறையில் அவருக்குத் துணையாயிருந்த

* தற்கால கணிதப்படி, சாயுங்காலம் சுமார் நாலுமணி வேளை.

சகோதரரை சற்றுநேரம் வெளியே போகும்படிச்
சொல்லியபின், என்னைப்பார்த்து, அர்ச். பாப்பான
வரிடத்திற்கு நீர் சென்று, எனக்கு அந்தியகாலம்
அடுத்து வந்திருக்கின்றதென்றும், இனி அதிகநாள்
உயிரோடிருப்பேனென்கிற நம்பிக்கை எனக்கில்லை
யென்றும்; எனக்கும், கடின வியாதியாயிருக்கும்
வேறொருவருக்கும், பரிசுத்த பிதா தமது ஆசீர்வா
தம் தரவேண்டுமென்று நான் மன்றாடுவதாகவும்,
எங்களை மோட்சத்துக்கழைத்துக்கொள்ள கர்த்த
ராகிய சர்வேசுரன் சித்தமிரங்கினால், இவ்வுலகில்
அநுதினம் செய்துவந்ததுபோல், அவ்வுலகிலும்
பரிசுத்த பிதாவுக்காக வேண்டுதல் செய்துவருவோ
மென்றும் அறிவித்துவருதல் நலமாயிருக்குமென்
றார். "பிதாவே, இந்த வியாதியில் அபாயத்துக்
கேதுவானது ஒன்றுமில்லையென்று வைத்தியர்
கள் சொல்லுகிறார்கள்; சர்வேசுரன் தமது திவ்
விய ஊழியத்துக்காக இன்னும் சில வருஷகாலம்
தங்களுயிரைக் காப்பாற்றிவரக் கிருபை செய்வா
ரென்று நானும் நம்பிக்கையாயிருக்கிறேன். அப்
படியிருக்க, தாங்கள் அவ்வளவு அசௌக்கியமா
யிருக்கின்றீர்களா? சொல்லுங்கள்" என்றேன்.
"வெகு அசௌக்கியமாயிருக்கின்றேன். எவ்வ
ளவு அசௌக்கியமாகவென்றால், (ஆண்டவர்
கையில்) என் ஆத்துமாவை ஒப்புக்கொடுத்துவிடுவ
தொன்றையேயன்றி வேறொன்றும் இவ்வுலகில்
இனி எனக்கு இல்லை," என்று பதிலுரைத்தார்.



ஆயினும் அவர் இன்னுஞ் சில்காலம் ஜீவித்திருப்பா
ரென்று உண்மையாகவே என் உள்ளத்திலிருந்த
நம்பிக்கையை நான் விட்டுவிடவில்லை. அவர்
ஆசித்தபடி செய்ய வாக்குக்கொடுத்தேன்.

"ஆனால் வியாழக்கிழமை தபால் புறப்படும்
நாளாயிருந்ததாலும், அன்று சாயுங்காலம்
ஜினோவா வழியாய் இஸ்பானிய தேசத்துக்குச் சில
கடிதங்கள் அனுப்பவேண்டியிருந்ததாலும், வெள்
ளிக்கிழமைமட்டும் காத்திருக்கக்கூடுமாவென்று
கேட்டேன். அவரோவென்றால்: "நாளைமட்டும்
காத்திருப்பதைவிட இன்றே செய்வது தாவிளை;
எவ்வளவு துரிதமாகச் செய்கிறீரோ, அவ்வளவுக்கு
உத்தமம். ஆயினும் எது அதிக நல்லதென்று
உமக்குத் தோன்றுகின்றதோ அதைச் செய்யும்;
உமது கையில் என்னைப் பூரணமாய் விட்டுவிடுகி
றேன்" என்று உத்தாரம் சொன்னார். அவரு
டைய வியாதியின் நிலைமையைப்பற்றி வைத்தியர்
களுடைய எண்ணம் யாதென்று அறியும்படி அன்று
சாயுங்காலமே, அலேசாந்த்ரோ பெத்ரோனியோ
என்ற பிரதான வைத்தியரைக்கண்டு, நமது பிதா
வின் ஸ்திதி அபாயகரமானதா? உள்ளதை உள்ள
படி சொல்லவேண்டும். ஏனெனில் அர்ச். பாப்
பானவருக்கு இதை அறிவிக்கும்படி அவர் எனக்
குக் கற்பித்திருக்கிறார் என்றேன். "ஆபத்துண்டு
ஆபத்தில்லையென்று இன்றைக்குச் சொல்லமுடி

யாது; நானேக்குத்தான் சொல்லக்கூடும்" என்று வைத்தியரும் சொல்லிவிட்டார்.

"காரியம் இப்படியிருக்க, நமது பிதாவும் எல்லாம் என் கையில் விட்டுவிட்டமையால், வெள்ளிக்கிழமைமட்டும் காத்திருந்து, வைத்தியருடைய அபிப்பிராயத்தை அறிந்ததின்மேல் அர்ச். பாப்பானவரிடம் ஏகுதல் உத்தமமென்றெண்ணி, அவ்விதமே செய்யத் தீர்மானித்தேன். அதே வியாழக்கிழமை, சாயுங்காலம் ஒருமணி * வேளையில் நமது பிதா இரவு போசனம் செய்யும் பொழுது மத்தீத் சுவாமியாரும் நானும் அவரோடிருந்தோம். வழக்கம்போலவே வித்தியாசமின்றி போசனம்செய்து, எங்களோடு வார்த்தையாடி சம்பாஷித்தார். ஆகையால் அவருடைய வியாதியைப்பற்றி கிஞ்சித்தும் கிலேசமின்றி நான் நித்திரை செய்யப்போனேன். ஆனால் மறுநாள் அருணோதயநேரத்தில், நமது பிதா மரணத்தறுவாயிலிருப்பதாகக் கண்டு, அக்ஷணமே அர்ச். பாப்பானவரிடம் தீவிரித்துச்சென்றேன். அர்ச். பாப்பானவர் வெகு துக்கப்பட்டு, அளவற்ற அன்புடன் தம்மால் எவ்வளவு சம்பூரணமான ஆசீர்வாதம் அளிக்கக்கூடுமோ, அவ்வளவு சம்பூரணமான ஆசீர்வாதம் அளித்தார்.

* தற்கால கணிதப்படி, சாயுங்காலம் ஒன்பதுமணி.



"அருணோதயமான இரண்டாம் * மணிவேளையில் மத்தீத், ஆந்த்ரே (Andre des .Freux) என்ற சுவாமிமார்கள் முன் நமது பிதா தமது ஆத்துமத்தை தன் சிருஷ்டி கர்த்தர் கையில் அத்தியந்த சமாதான அமரிக்கையுடன் ஒப்புக்கொடுத்தார்.

"இந்தப் பரிசுத்த ஆத்துமாவிடத்தில் விளங்கின தாழ்ச்சியைக்கண்டு நாங்கள் எல்லோரும் ஆச்சரியமடைந்தோம். முந்தினநாள் அவர் சொன்னவைகளால் தெளிவாய் விளங்குகிறபடி, தாம் மரணமடையப்போகிறதாக அவர் நிச்சயமாய் அறிந்திருந்தார்.... ஆயினும் மற்ற தேவதாசர்கள் சிலர் இவ்வித சந்தர்ப்பங்களில் செய்ததுபோல், தமது கடைசி ஆசீர்வாதம் கொடுக்கவாவது, தமக்குப் பின் அதிபதி சிரேஷ்டராயிருக்கும்படி ஒருவரை நியமிக்கவாவது, ஏற்பாட்டொழுங்குகளுக்குத் தமது முத்திரையிடுவதற்காவது, அல்லது ஏதாகிலும் கடைசிப் புத்திமதி சொல்லுவதற்காவது, எங்களைத் தமது அருகில் அழைக்கவேண்டுமென்று அவர் விரும்பவில்லை. அவர் தம்மைப்பற்றி மிகத் தாழ்மையாய் எண்ணியிருந்தமையாலும், தமது சபை சர்வேசுரன் ஒருவரைத் தவிர வேறெவரையும் ஆதாரமாகத் தேடப்படாதென்று ஆசித்திருந்தமையாலும், சாதாரண மார்க்கமாய் இகலோகத்தைவிட்டு நீங்கிப்போனார். சர்வேசுரனுடைய

* காலை ஆறுமணி.

தோத்திரம் ஒன்றைமாத்திரம் தமது கண்முன் வைத்திருந்தவர், தமது மரண சமயத்தில் அற்புதங்கள் ஒன்றும் சம்பவிக்கப்படாதென்று ஒருவேளை ஆண்டவரிடத்தில் பிரார்த்தனை செய்து பெற்றுக்கொண்டாராக்கும். அவருடைய ஆயுள் காலத்திலும், நன்மாதிரிக்கு அவசியமாயிருந்த சிற்சில சமயங்களிலன்றி, மற்றப்படி சர்வேசுரன் தமக்கு இரகசியமாய் அளித்துவந்த வரப்பிரசாதங்களை ஒருபோதும் வெளியிட்டவரல்ல,...இது நிற்க:

“நமது பிதா பரலோக பிராப்தியானபின், அவருடைய சடலத்தைக் காப்பாற்ற விரும்பி, வாசனைத் திரவியங்கள் உட்செலுத்தும்படி அதைத் திறந்தோம். ஆ! ஆச்சரியமே! அவருடைய இரைக்குடலும், வயிறும் முற்றும் வெறுமையாய் நன்றாய்க் காய்ந்து சுருங்கிப்போயிருக்கக் கண்டோம். இவ்விசேஷத்தைப் பரிசோதித்த வைத்தியர்கள் ஜீவிய காலத்தில் அர்ச்சியசிஷ்டவர் அநுசரித்துவந்த உபவாசம் வெகு கடுமையானதாயிருந்திருக்க வேண்டுமென்றும், இவ்வளவு தேகபலவீனத்தைத் தாங்கிக்கொண்டு, என்றும் மாறாமுகமலர்ச்சியுடன் உற்சாகமாய் அரும் பிரயத்தனம் செய்து உழைத்துவந்த அவரது மனவலிமை மனோதிடாரிக்கம் அதிசயத்துக்குரியதென்றுங் கூறினார்கள். அவருடைய ஈரற்குலையையும் பரிசோதித்துப் பார்த்தார்கள். அதில் மூன்று சிறிய கற்கள் இருந்தன;



இடைவிடாமல் அவர் அநுசரித்துவந்த உபவாசத்துக்கு இதுவும் ஓர் திருஷ்டாந்தமாயிற்று. “மெய்யாகவே நமது பரிசுத்த பிதா வெகுகாலமாய் ஏதோ ஓர் புதுமையினாற்றான் ஜீவித்துவருகிறார்” என்று, இப்பொழுது பரலோகத்தில் பேரின்ப பாக்கியம் அநுபவிக்கும் அந்த உத்தம வயோதிகர் டியேகோ சுவாமியார் முன் சொன்னது எவ்வளவோ உண்மை! அவர் ஈரற்குலை இவ்வளவு தூரம் சேதப்பட்டுப்போயிருக்க, அவர் சேசுசபைக்கு அவசியமென்றறிந்த நமதாண்டவராகிய சர்வேசுரன் தமது வல்லமையின் ஓர் விசேஷ வரத்தால் சரீர உறுப்பின் குறையைப் பரிகரித்து அவர் உயிரைக் காப்பாற்றி வந்ததினாலன்றி, வேறெவ்விதமாக இதுகாலம் அவர் ஜீவித்து வந்திருக்கக் கூடுமென்று என்னாற் கண்டுபிடிக்கக்கூடுதில்லை.

“சனிக்கிழமை அந்தகாலஜெபமட்டும் அவருடைய சடலத்தை அடக்கம் செய்யாமல் வைத்திருந்தோம். நமது பிதா உயிர்பிரிந்த அறையிலேயே அவருடைய சரீரமும் இருந்தது. விசுவாசிகள் வெகு பக்தி உருக்கமுடன் திரளாய்க்கூடிவந்தார்கள். சிலர் அவருடைய கரங்களையும், சிலர் அவருடைய பாதங்களையும் முத்திசெய்தார்கள்; வேறு சிலரோவென்றால் தங்கள் ஜெபமாலையை அவர் சரீரத்தின்மேல் வைத்தெடுத்தார்கள். அவருடைய தொப்பி வஸ்திர முதலியவைகளை (அர்ச்

சியசிஷ்ட பண்டங்களாக) கிழித்துக்கொண்டு போகப் பிரயத்தனம்பண்ணிக்கொண்டிருந்தவர்களைத் தடுப்பது வெகு பிரயாசையாயிருந்தது. அவருடைய பாதரக்ஷைக் கயிறுகள், பணிக்குல்லா முதலியவைகளையும், அவர் உபயோகித்து வந்திருந்த வேறு சில வஸ்துக்களையும், நாங்கள் கொடுக்க உடன்படாதிருந்தும், எங்களுக்குத் தெரியாமலே எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். அவர் உயிரோடிருந்த காலத்தில் அவரைச் சித்திரத்தில் எழுத அநேகர் ஆசித்தும், அதற்கு அவர் ஒருபோதும் சம்மதித்தவரல்ல. இப்பொழுதோவெனில், சில சித்திரக்காரர்கள் அவரைப் படத்தில் எழுதவும், அல்லது மெழுகில் அவருடைய முகச்சாயலைப் பதித்துக்கொள்ளவும் ஏற்பட்டார்கள்.

“நம்மைச்சேர்ந்த தேவாலயத்தின் பெரிய பீடத்தில் சுவிசேஷம் வாசிக்கும் பக்கத்தில் ஒரு சிறு கல்லறைசெய்து, திருச்சபை ஆசாரப்படியுள்ள ஜெபங்கள் ஜெபித்தபின், சடலத்தை அடக்கம் செய்தோம். கல்லறைவாசலை ஓர் பெருங்கல்லால் மூடியிருக்கிறோம். அவசியமானபொழுது இக்கல்லை எடுத்துவிடலாம். வேறு ஏற்பாடு செய்யுமட்டும், தற்காலம் அவருடைய சடலம் இந்தக் கல்லறையிலேயேயிருக்கும்”......

உரோமை 1556-ம் ௵ ஆகஸ்டு-௴ 6-௳.



தங்கள் நேச தந்தையின் மரணத்தைச் சார்ந்த விசேஷங்களை இன்னும் அதிக விபரமாய் அறிய விரும்பி, நிக்கோலாஸ் லான்ஸீஷியுஸ் (Nicolas Lancisius), லூயிஸ் மாஸெல்லி (Louis Maselli) என்ற சுவாமிமார்கள், அர்ச்சியசிஷ்டவருடைய அந்திய காலத்தில் இராப்பகலாய் ஓயாமல் அவர் அருகிலிருந்து அவருக்கு ஒத்தாசை செய்து வந்த தோமாஸோ கந்நிகாரி (Tommaso Cannicari) என்ற துணைச் சகோதரரை எழுத்து மூலம் வினவிக் கேட்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகள் ஒவ்வொன்றுக்கும், ஓர் பாட்சாலை மாணாக்கனைப்போல் இந்த சகோதரர் கொடுத்த விடைகளில் சிலவற்றை இங்கெடுத்துச் சொல்லலாம்.

“5. நமது பிதா சூரியன் உதயமான இரண்டாம் மணி வேளையில் (அதாவது, காலை ஆறுமணி) உயிர்விட்டார்.—6. பட்டணத்துக்குத் திரும்பி வருமுன் கிராமத்து வீட்டில் இரண்டு அல்லது மூன்று நாள் வியாதியாயிருந்தார்.—7. வியாதியாயிருக்கும்பொழுது ரீயேரா (Riera) சுவாமியாரிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்துகொண்டார்.—10. இரவெல்லாம் நான் அவர் அருகிலேயே இருந்தேன். நடுச்சாமமட்டும் வியாதியாயிருந்த மற்ற நாட்களில் பெரும்பாலும் எப்படியோ, அப்படியே, சுறுசுறுப்பு குறையாமல் சல்லாபம் செய்துகொண்டிருந்தார். நடுச்சாமத்துக்குப்பின்

பேச்சமர்ந்து மௌனமாயிருந்தார்; முன்போல்
அவ்வளவு அடிக்கடி என்னைத் தமதண்டை கூப்
பிடவுமில்லை. ஆயினும் ஓயாது "என் சர்வேசுரா!"
(Ay Dios, ஆய் தியோஸ்) என்று பரலோகத்தை
நோக்கி உச்சாரணம் செய்துகொண்டிருந்தார்.—
11. அவஸ்தைப்பூசுதல் பெறவில்லை.—12. அவஸ்
தை நன்மை பெற்றுக்கொள்ளவில்லையென்பது
எனக்கு நிச்சயமாயில்லை. சில தினங்களுக்குமுன்
தான் ஜூலை-மீ 28-உ செவ்வாய்க்கிழமை திவ்
விய நன்மை உட்கொண்டிருந்தார். அவஸ்தை
நன்மை அவருக்குக் கொடுக்கும்படி நினைப்பதற்கு
அவருடைய ஸ்திதி அவ்வளவு ஆபத்துக்கேதுவான
தாகக் காணப்படவில்லை. வியாதிஸ்தர் ஆவி
பிரிவதற்கு சில நிமிஷங்களுக்குமுன், மூன்று
வைத்தியர்களும், நமது சபையார்களுள் வைத்தி
யம் தெரிந்த மூன்றுபேரும் வந்து, வியாதிஸ்த
ருடைய நாடியைப் பரிசோதித்து, நாடியோட்
டம் வெகுவாய் விழுந்து, பலவீனம் மிஞ்சியிருக்
கின்றதென்றார்கள். ஆனால் மரணம் அடுத்துவிட்ட
தென்று அவர்கள் எண்ணவில்லை. சற்று
பலன் உண்டாகும்படி அவர் புசிப்பதற்காக
இரண்டுமுட்டை சமைத்துக்கொடுக்கச் சொன்னார்
கள். நான் சமையல் அறைக்குப்போய் அவைகளை
ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில்,
நமது பரிசுத்த பிதாவின் அறைக்குட்சென்று,
அவருடைய நாடியை சோதித்த மத்ரீத் சுவாமி



யார், அவர் மரணத்தறுவாயிலிருப்பதாகக் கண்டு,
தீவிரமாய் என்னிடம் வந்து, எல்லாம் அப்படியே
விட்டுவிட்டு கோவில் விசாரிக்கும் ரீயேரா சுவாமி
யாரை தக்ஷணமே தேடிப்பார்த்து கூட்டிக்
கொண்டுவாரும் என்றார். தேடிப்பார்த்தும் அவ
ரைக் காணாததால், வியாதிஸ்தர் அருகில் திரும்பி
வந்தேன்; அதற்குள்ளாக நமது பிதா மரித்துப்
போனார். ரீயேரா சுவாமியாரைப் போய்க் கூட்
டிக்கொண்டு வரச்சொன்னது, வியாதிஸ்தருக்கு
அவஸ்தைப்பூசுதல் கொடுக்கும்படியாகத்
தானென்று அப்பொழுதுதான் எனக்குப் புலப்பட்
டது.—14. அவர் உயிர் விடுவதற்கு கால் மணி
நேரத்துக்குமுன்தான், அவர் மரணமடையப்
போகிறதாக சுவாமிமார்கள் கண்டுகொண்டார்கள்.
—15. வெளி ஜனங்களும், நமது சபையாரும்:
'அர்ச்சியசிஷ்டவர் மரித்துப்போனார், அர்ச்சிய
சிஷ்டவர் மரித்துப்போனார்' என்று சொல்லக்
கேட்டேன்."

சர்வேசுரனுடைய திருச்சித்தத்துக்குத் தம்
மைப் பரிபூரணமாய்க் கையளித்து, அவருடைய
அதிமிகத் தோத்திரத்தை நாடி லொயோலா மாளி
கையைவிட்டுப் புறப்பட்ட நாள்முதல் தமது
ஜீவிய காலமெல்லாம் தாமே, அதி ஆவலாய் அநு
சரித்து, சேசுசபையில் தமது மக்களுக்கும் வெகு
கவலையுடன் கற்றுக்கொடுத்த புத்தி மனக்கீழ்ப்படி
தலின் உத்தம மாட்சிமை அர்ச்சியசிஷ்டவருடைய,

மரண விசேஷத்தில் வெகு துலக்கமாய் விளங்குகிறதை எவரும் எளிதில் கண்டுகொள்ளலாம். சேசுசபையாரோ, தங்கள் ஜீவிய காலத்திலும் அந்திய காலத்திலும் இவ்விசேஷத்தை மறவாதிருப்பது இவர்களுக்கே வெகு சுகிர்தமாம்! தமது ஆத்துமா உடலைவிட்டு நீங்கும்வேளை அடுத்துவிட்டதென்று இஞ்ஞாசியார் நிச்சயமாய் அறிந்திருந்தாரென்று அவருடைய வாக்காலேயே தெளிவாய் விளங்குகின்றது. தம்மனதில் உள்ளதைத் தற்சமயம் தமக்கு சிரேஷ்டர்போலிருந்த பொலான்கோ சுவாமியாரிடம் சுருக்கமாய்த் தெரிவித்தார். தெரிவித்து, அதற்குமேல் அவர் யுக்திப்படி சகலமும் நடத்தட்டும், அதுவே தேவ சித்தமென்று, மனதில் கலக்கம் கவலை சலன சஞ்சலம் யாதுமின்றி முற்றும் அமைதியாயிருந்துவிட்டார். ஒரு வார்த்தை அதட்டிச் சொல்லியிருந்தாராகில் பொலான்கோ சுவாமியார் மிதமாயிருந்திருக்கமாட்டார். அப்படியில்லாது, "உமது யுக்திபோல் செய்யும்" என்று அத்தியந்த அமைதியுடன் அர்ச்சியசிஷ்டவர் சொன்னதால், பொலான்கோ சுவாமியார் தமது ஞானப் பிதா இன்னும் சிலகாலம் உயிரோடிருப்பாரென்று தமது மனதிலிருந்த ஆவல் சித்தாந்தத்தையும் அதற்கு இசைந்திருந்த வைத்தியர்களின் அபிப்பிராயத்தையும் நம்பி ஆக்கிரப்படாதிருந்துவிட்டார். அர்ச்சியசிஷ்டவரோ, மலர்ந்து தெளிந்த முகம் சற்றும் வாடாது, எவரும் எதிர்



பாராதவிதம் திடீரென்று பரலோக பிராப்தியானார். "பிதாவே, உமது சித்தத்தின்படியே ஆகட்டும், என் மனதின்படியல்ல" என்று பூங்காவில் பிதாவின் திருவுளத்துக்குத் தம்மைக் கையளித்து, "பிதாவே, உமது கரத்தில் என் ஆத்துமாவை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சிரம் வணங்கி சிலுவையில் உயிர்விட்டு, "மரணமட்டும், —சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்த" தேவ திருச்சுதனை அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் தமது ஜீவிய காலத்தில் எப்படியோ அப்படியே தமது அந்திய காலத்திலும் உத்தம மேரையாய்க் கண்டுபாவிக்கும் வரம் பெற்றார்.

அர்ச்சியசிஷ்டவர் உயிர்பிரிந்த அக்ஷணமே அவர் மோக்ஷ மகிமையடைந்துகொண்டதாக ஓர் அற்புத தரிசனத்தால் தெளிவாயிற்று. பொலோஞாவென்னும் பட்டணத்தில் மார்கரீத் (Marguerite Gigli) என்றொரு புண்ணியவதி இருந்தாள்; —சேசுசபைமீது வெகு அபிமானமுள்ளவள். 1556-ம் ஸு, ஜுலை-மீ 31-உ காலை, இந்தம்மாள் தன் அறையில் ஏதோ பெருங்காற்றடித்தாற்போல் சத்தங்கேட்டு, நித்திரை தெளிந்து கண்விழித்துப் பார்க்கையில், அர்ச். இஞ்ஞாசியார் மகா சோதிப்பிரகாச சொரூபமாய் தன்முன் நிற்கக்கண்டாள். தரிசனமானவர் அவளைப்பார்த்து: "மார்கரீத், நீயே பார்க்கிறதுபோல், இதோ நான்

பூலோகத்தை விட்டுப்போகிறேன். என் மக்களை மறந்துபோகாதே" என்று வாக்கருளி மறைந்து போனார். ஆச்சரியமும் ஆனந்தமும் உள்ளத்தை மேற்கொண்டவளாய், தீவிரமாய் எழுந்து, தன் ஆத்தும குரு பிராஞ்சீஸ்கு பால்மியோ (Francis Palmio) என்ற சுவாமியாரைத்தேடி, தான்கண்ட விசேஷத்தை அவருக்கு அறிவித்தாள். இதற்குமுன் எப்பொழுதாகிலும் அர்ச். இஞ்ஞாசியாரைக் கண்ணுற் கண்டவளல்லவென்றாலும், பல வருஷகாலம் அவரோடு அறிமுகமாயிருந்தவள்போல் அவருடைய உருவம் சாயலெல்லாம் விவரமாய் வருணித்தாள். துவக்கத்தில் சுவாமிமார்கள் இத்தரிசனத்தை ஒருபொருட்டாய் எண்ணவில்லை. ஆனால், சிலதினத்துக்குள் உரோமையிலிருந்து அர்ச்சியசிஷ்டவர் மரணமாய்ப்போன செய்தியறிந்து, தரிசனம் சம்பவித்தநேரமும், அர்ச்சியசிஷ்டவர் உயிர்பிரிந்தநேரமும் சரியொத்திருக்கக் கண்டு, வியப்புற்று ஆண்டவரை ஸ்துதித்தார்கள்.

பார்சலோனா நகரிலிருந்த ஜான் பாஸ்கால் என்னொருவர்மீது எக்காலமும் அர்ச்சியசிஷ்டவர் இருதயத்திலிருந்த அன்பு பட்சத்தையும், அவர் தீர்க்கதரிசனமாய் அறிவித்த பிரகாரம் பாஸ்கால் என்பவருக்கு நேர்ந்த பெருந்துன்பதுரிதங்களையும்பற்றி முதற் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறோமல்லவா? துன்பத்தின் கையில் வெகுவாய் உழன்று வருந்



திய இந்த நண்பனை இகலோகத்தில் கடிதமூலியமாய் இன்சொல்லுரைத்துத் தேற்றிவந்த அர்ச். இஞ்ஞாசியார், பரலோகத்திலிருந்து ஓர் அற்புத காட்சியால் அவருக்கு ஆறுதல் ஊட்டினார்.

நாற்பது வருஷகாலமாய் அநுதினம் திவ்விய பூசை துவக்குமுன்னமே தேவாலயத்திற் சென்று, அதிகாலை ஜெபம் செய்துவந்த ஜான் பாஸ்கால், ஓர்நாள் ஜெபம் ஆரம்பிக்கும் முன்னமே தேவாலயத்திற்குச் செல்லும்படி நேரிட்டது. ஒன்றின்மேலொன்றாய் தனக்கு நேரிட்டுவரும் துன்பங்களை நினைத்து மனமுடைந்து, அவைகளை சர்வேசுரனிடத்திலும், பரலோகம் சென்ற தன் பரிசுத்த பாதுகாவலர் இஞ்ஞாசியாரிடத்திலும் அறிக்கையிட்டு பிரலாபித்துக்கொண்டிருந்தார். "ஆ! என் தந்தையே, நீர் முன்னறிவித்ததெல்லாம் மெய்யாகவே நிறைவேறிற்று" என்று புலம்பி அவர் சலுகையை மன்றாடிக்கொண்டிருந்தார். அவ்வேளை, வெகு அழகு சோபனம் பொருந்திய அநேக சம்மனசுக்களும், குருக்கள் உடையணிந்த வேறநேக பரலோகவாசிகளும் ஆரவாரமாய் கோவிலுக்குள் பிரவேசித்து பெரிய பீடமுன் வரிசையாய் நிற்க, வெகு மகத்துவந்தங்கிய சோதி முகமுடைய ஒரு பெரிய குரு (Stola, Copa) ஸ்தோலா, கோப்பா, முதலிய திரு வஸ்திரங்களணிந்தவராய், அவர்கள் நடுவில் வந்து நின்றார்.

நின்றதும் தேவாலயமெங்கும் ஆச்சரியமான ஓர் பிரகாசம் உண்டாயிற்று. பெரிய குரு அத்தியந்த வணக்க பக்தியுடன் திவ்விய சற்பிரசாதத்தை ஆராதித்து, கையில் தூபக்கலசமெடுத்து, பலதரம் பீடத்துக்கு தூபமிட்டபின், யாவரும் ஒழுங்காய் ஜாண் பாஸ்கால் இருந்த பக்கமாய் தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். போகிற வழியில் பெரிய குரு சற்றே நின்று, "என்னே! நம்மை உனக்குத் தெரியாதா" என்று சொன்னாற்போல், மனம் உருகச்செய்யும் அன்புடன் பாஸ்காலை நோக்கிப்பார்த்தார். அவர் **இஞ்ஞாசியார்**தானென்று அப்பொழுது அறிந்துகொண்ட ஜாண் வேகமாய் எழுந்து, அர்ச்சியசிஷ்டவரண்டை சென்றார். இஞ்ஞாசியாரும் அவருக்கு ஆறுதல் சொல்லி ஆசீர்வதித்து மறைந்துபோனார். பாஸ்காலோவென்றால் இத்தரிசனத்தால் பரவசமானவர்போல்: "**ஆ! என் தந்தையே, என் தந்தை இஞ்ஞாசியாரே**" என்று சத்தமாய் உச்சாரணம் செய்துகொண்டிருந்தார். அதுகேட்டு சில குருக்கள் அவரிட்ட வந்து, அவர் வெகுவாய் கண்ணீர் சொரிந்து வேற்றுருவாயிருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்று, என்ன விசேஷமென்று வினவினார்கள். ஜாண் நடந்ததையெல்லாம் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

அர்ச். இஞ்ஞாசியாருடைய ஜீவிய காலத்திலும், அவருடைய மரணத்துக்குப் பின்பும், அவருடைய



மக்கள்மாத்திரமன்று, வேறு சந்நியாச சபையைச் சேர்ந்தவர்களும், சாமானிய ஜனங்களும், உன்னதஸ்தானங்களிலிருந்த அநேக பிரபுக்களும் பெரியோர்களும், அரசர்களும், அர்ச். பாப்புமார்களும் அவரை ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டவராக மதித்து, அவர்மீது எவ்வளவோ பூஜித வணக்கமுற்றிருந்தார்களென்பதற்கு இச்சரித்திரத்தில் ஆங்காங்கு பல திருஷ்டாந்தங்கள் காணலாம். எல்லாம் எடுத்துரைப்பது நம்மால் இயலும் கருமமன்று. முன் சொன்னவைகளன்றி, இன்னும் வேறு சில திருஷ்டாந்தங்கள் மாத்திரம் இங்கெடுத்துத் தருதல் நமது கருத்து.

நமது **இந்துதேசத்து அப்போஸ்தலர்** இருதயத்தில் அர்ச். இஞ்ஞாசியார்மீதிருந்த சங்கை நேசத்தைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். தமது ஞானத்தந்தை மெய்யாகவே சர்வேசுரனுக்கு உகந்த ஓர் பெரிய அர்ச்சியசிஷ்டவரென்று இவர் எவ்வளவு ஸ்திரமாய் எண்ணியிருந்தாரென்றால், அவரிடமிருந்து தமக்கு வரும் கடிதங்களினின்று அவருடைய கையொப்பத்தை கத்தரித்து, அதைத் தம் கழுத்தில் அர்ச்சியசிஷ்ட பண்டமாக அணிந்திருந்தார். தாமே போகக்கூடாத சமயங்களில் சில சிறுவர்களை அனுப்பி, அவர்கள்வழியாக வியாதிஸ்தர்களுக்குப் புதுமையாய் ஆரோக்கியம் அளித்துவந்தாரென்று அர்ச். சவேரியார் சரித்

திரத்தில் காணலாம். இச்சிறுவர்கள் வியாதிக்காரர்கள்மேல் வைக்கும்படி அவர் கொடுத்தனுப்பிய அர்ச்சியசிஷ்ட பண்டங்களுள் மேற்சொன்ன கையொப்பமும் ஒன்று எனத் தெரியவருகின்றது. தரைமார்க்கமாகவும் கடல்மார்க்கமாகவும் அவர் செய்துவந்த பயணங்களில் அடிக்கடி நேர்ந்த பெரும் ஆபத்துக்களில், உரோமையிலிருக்கும் தமது ஞானத் தந்தையைச் சிந்தித்து, அவருடைய பேறுபலன்களை தேவ ம்கத்துவத்துக்கு ஒப்புக் கொடுத்து தேவ உதவியை மன்றாடுவார்.

அர்ச். **பிராஞ்சீஸ்கு போர்ஜியார்** லொயோலா மாளிகையில் அர்ச்சியசிஷ்டவர் பிறந்த அறையைச் சந்தித்தபொழுது, பூஜித வணக்கமுடன் சாஷ்டாங்கமாக விழுந்து, உருக்க நேசத்தால் கண்கள் நீர் சொரிய தரையை முத்தம் செய்தார்.

முத். **பாபர் இராயப்பர்** அர்ச்சியசிஷ்டதனத்தில் எவ்வளவோ சிறந்தவராக விளங்கினார். என்றாலும் அர்ச். இஞ்ஞாசியார் முன் அர்ச்சியசிஷ்டதனத்தில் அவரை ஒரு சிறுபிள்ளையென்னலாம் என்று லேய்னஸ் சுவாமியார் சொல்லிவந்தார். லேய்னஸ் சுவாமியார் மாத்திரமல்ல, இவ்விரு பரிசுத்த ஆத்துமாக்களை அறிந்த யாவரும் சாதாரணமாய் அவ்விதமே அபிப்பிராயப்பட்டிருந்தார்கள். **லூயிஸ் கொன்சாலஸ்** சுவாமியார் சொல்லுவது: "மத்ரீத் பட்டணத்தில் பாபர் சுவாமியாரோடு



அறிமுகமாய், ஞானக்காரியங்களைப்பற்றி அவருடன் வெகுகாலம் சம்பாஷித்து வந்தேன். அவர் மட்டில் அத்தியந்த ஆச்சரியமுற்றிருந்தேன். இவரிலும் அதிக நிறைவாய் சர்வேசுரனுடைய இஸ்பிரீத்துவை உள்ளத்தில் பெற்ற ஒருவர் கிடைப்பதரிதென்றெண்ணியிருந்தேன்..... ஆனால் உரோமையில் இஞ்ஞாசியாரோடு பழகி, அவரோடு வார்த்தையாடி வந்தபின், பாபர் சுவாமியார் என் நினைவை விட்டகன்றுபோனார்; இஞ்ஞாசியார் முன் அவர் ஒரு சிறுபிள்ளைபோல் தோன்றினார்" என்றுரைத்தார்.

இஞ்ஞாசியார் தேகவியோகமான சமயம் லேய்னஸ் சுவாமியார், இனி பிழைப்பார் என்ற நம்பிக்கையற்று, கடின வியாதியாயிருந்தார். ஒவ்வொருவர் முகத்திலும் குரலிலும் விளங்கின துக்கக்குறிகளைக் கண்டு: "என்ன? அர்ச்சியசிஷ்டவர் மரணமாய் விட்டாரோ?" என்று அங்கலாய்த்துக் கேட்டார். "ஆம்! நமது பிதா பரகதியடைந்தார்" என்று பக்கத்திலிருந்தவர்கள் சொல்லக்கேட்டதும், பெருமூச்செறிந்து, கண்களையும் கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தித் தம்மையும் அக்ஷணமே பரலோகத்துக்கு அழைத்துக்கொள்ள வேண்டுமென்று இஞ்ஞாசியாரை வெகு ஆவலாய்ப் பிரார்த்தித்தார். அவருடைய மன்றாட்டு அவர் விருப்பப்படி பலிக்கவில்லை. அதற்கு நேர்விரோதமாய், பூரண சௌக்கியமடைந்து அர்ச். இஞ்ஞாசியாருடைய ஸ்தானத்

தில் சேசுசபைக்கு அதிபதி சிரேஷ்டராகத் தெரிந்துகொள்ளப்பட்டார்.

அநேக சுவாமிமார்கள் அவர் விரலினின்று வெட்டப்படும் நகங்களை அர்ச்சியசிஷ்ட பண்டங்களாகக் காப்பாற்றி கழுத்தில் அணிந்திருந்தார்கள். அவைகளை சம்பாதித்துக்கொள்ளுவதற்காக அர்ச்சியசிஷ்டவருக்கு உதவி செய்துவந்த சகோதரருக்குப் பிரியப்படும்படி ஒவ்வொருவரும் பிரயத்தனம் பண்ணி வந்தார்கள். அநேக நாளாய் அர்ச்சியசிஷ்டவர் பல்வலியால் வெகு உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்தார். அதைக்கண்டு நாதால் சுவாமியார் வெகு அநுதாபப்பட்டு, ஒரு பல் வைத்தியனை வரவழைத்து, உபத்திரவத்துக்கேதுவாயிருந்த பல் ஒன்றைப் பிடுங்கிவிடும்படி சொன்னார். பல்லின் வேர் வெகு ஆழமாயிருந்ததால் அதைப் பிடுங்குவதற்கு வைத்தியன் செய்த பிரயத்தனங்கள் கொடிய வாதை உண்டுபண்ணின. அர்ச்சியசிஷ்டவரோவென்றால் ஒரு சுரூபம்போல் சற்றும் அசையாமல் அத்தியந்த பொறுமையுடன் அதைச் சகித்துக்கொண்டார். பிடுங்கின பல்லை நாதால் சுவாமியார் அர்ச்சியசிஷ்ட பண்டமாக வெகு பூஜிதமாய் கைவசப்படுத்திக்கொண்டார். ஆனால் எல்லாம் கவனமாய்ப் பார்த்திருந்த அர்ச்சியசிஷ்டவர் அதை அவர் கையினின்று வாங்கி அப்பால் எறிந்துவிட்டார். நாதால் சுவாமியார் எவ்வளவு



தான் தேடிப்பார்த்தும் அது அகப்படாமற் போயிற்று.

ஜப்பான் தீவில் வேதசாட்சியாக நெருப்பில் சுட்டெரிக்கப்பட்ட சேசுசபை முத். ஸ்பிநோலா (Bl. Spinola) என்பவர், அர்ச்சியசிஷ்டவர் முன் மன்ரேசாவில் தரித்திருந்த சாக்குத்துணியினின்று கத்தரிக்கப்பட்ட ஒரு சிறு துண்டை வெகு பூஜித வணக்கமாய் மார்பில் அணிந்திருந்தார். வேத சாட்சி முடி பெறுவதற்கு சில தினங்களுக்குமுன் தமக்கு 'ப்ரோவின்ஸியல்' சிரேஷ்டராயிருந்த பாஸ்ஸெக்கோ (Paceco) சுவாமியாருக்கு இந்த சிறு துண்டை, அவர்மீது தமக்குள்ள சங்கை நேசத்தின் அடையாளமாக அனுப்பிவைத்து, "இதன் மூலமாய்ச் சர்வேசுரன் ஜப்பான் தீவில் அநேக புதுமைகள் செய்யத் திருவுளமானார்" என்றறிவித்தார். இந்த பாஸ்ஸெக்கோ சுவாமியாரும் அதிசீக்கிரம் ஜப்பான் தீவில் வேதசாட்சி முடி பெற்றார்.

அர்ச். பிலிப்பு நேரியார் அர்ச். இஞ்ஞாசியாரை எவ்வளவு கனமாய் மதித்திருந்தாரென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். உன்னத மனோஜெபத்தில் எவ்வளவோ மேலான வரங்கள் அடைந்திருந்த இந்த மகாத்துமா, மனோதியானஜெபம் செய்யும் வகை அர்ச். இஞ்ஞாசியாரிடத்திலிருந்து தாம் கற்றுக்கொண்டதாகச் சொல்லியிருக்கிறார். கபிரியேல் வெநுஸ்தோ (Gabriel Venusto)

என்ற சுவாமியாரையும், வேறு சில சுவாமிமார்களை யும் அர்ச். பிலிப்பு நேரியார் ஓர்நாள் தற்செயலாய் சந்தித்து, நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்களென்று அவர்களை வினவினார். நாங்கள் சேசு சபையைச் சேர்ந்தவர்களென்று அவர்கள் சொல்ல, "நீங்கள் மகா சிறந்த ஒரு தந்தையின் மக்கள்; அவர்மட்டில் எனக்கு வெகு நேசம்; மனோதியானம் செய்யும் வகை எனக்குக் கற்றுக்கொடுத்தது சங். இஞ்ஞாசியார்தான்" என்றார். மேலும், அர்ச். பிலிப்பு நேரியார் சேசுசபையில் உட்பட விரும்பி, அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் ஒருசமயம் விண்ணப்பஞ்செய்தது நிச்சயமாய்த் தெரிந்த விஷயம். ஆனால் அவர்மீது தேவதிருவுளத்தின் நியமனம் வேறென்று அறிந்திருந்த அர்ச். இஞ்ஞாசியார் அதற்குச் சம்மதிக்கவில்லை.

சர்வேசுரனும் எண்ணிறந்த புதுமைகளால் தமது தாசனுடைய அர்ச்சியசிஷ்டதனத்தை உறுதிப்படுத்தி, உலகமெங்கும் பிரசித்தமாக்கத் திருவுளமானார். ஐந்தாம் பவுல் (Paul V) என்னும் அர்ச். பாப்பானவர் இத்தனை புதுமைகளைப்பற்றிக் கேள்விப்பட்டு ஆச்சரியமுற்று, லொயோலா இஞ்ஞாசியாருடைய ஜீவியத்தையும், புண்ணியங்களையும், அவர் மூலமாய்ச் சம்பவித்த அற்புதங்களையும் திருச்சபை முறைமைப்படி பரிசோதிக்க 1605-ம் வருஷம் உத்தாரமளித்தார். அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தை எண்பிப்பதற்கு இருநூற்



றுச் சில்வானம் புதுமைகள் ஞான அதிகாரிகள் முன் கொண்டுவரப்பட்டன. அறுநூற்று அறுபத்தைந்து பேருக்கதிகம் வேதாகமத்தில் சத்தியம் செய்து, அவருடைய அர்ச்சியசிஷ்டதனத்துக்குச் சாக்ஷி சொன்னார்கள். எல்லாம் தீர்க்க ஆராய்ந்து பரிசோதித்து, 1609-ம் வருஷம் ஜூலை-மீ 27-உ மேற்சொன்ன ஐந்தாம் பவுல் என்னும் பாப்பானவரே அவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டினார். திருச்சபையெங்கும், பிரதானமாய் உரோமையிலும், இஸ்பானிய தேசத்திலும், இவ்விசேஷம் வெகு ஆனந்த அக்களிப்பு ஆரவார சிறப்புடன் விசுவாசிகளால் கொண்டாடப்பட்டது.

என்றாலும், விசுவாசிகளுடைய ஆவல் இன்னும் பூரண நிறைவுபெறவில்லை. முத். இஞ்ஞாசியாருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்படும் நாள் எப்பொழுது வருமென்று ஆவலாய் எதிர்பார்த்திருந்தார்கள். இதற்காக அநேக அரசர்களும், அரசிகளும், மேற்றிராணிமார்களும் நாலாபக்கங்களிலுமிருந்து வெகு வாஞ்சையாய் திருச்சபைத் தலைவருக்கு விண்ணப்பம் செய்தார்கள். பதினைந்தாம் கிரகோரியார் (Gregory XV) என்னும் அர்ச். பாப்பானவர் விசுவாசிகளுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து, 1622-ம் வருஷம், மார்ச்சு-மீ 12-ம் உ சகல இருதயங்களும் சம்பூரண சந்துஷ்டியடைந்து சர்வேசுரனை ஸ்துதிக்க, உரோமையில் அர்ச். இராயப்பர் கோவிலில், மகா ஆரவாரச்

சிறப்புடன் சேசுசபையின் ஆதியர் லொயோலா இஞ்ஞாசியாருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டினார். அர்ச். இஞ்ஞாசியாருடன் அன்றுதானே அவருடைய அருமைப் புதல்வன் அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியாருக்கும், அவரது உற்ற நண்பர் அர்ச். பிலிப்பு நேரியார் என்பவருக்கும், அர்ச். இஸிதோர் (St. Isidore) அர்ச். தெரேசம்மாள் என்பவர்களுக்கும் அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டப்பட்டது.

1623-ம் ௵, ஆகஸ்டு-௴ 6-ம் ௳ எட்டாம் உர்பானுஸ் என்னும் பாப்பானவர் மேற்சொன்ன பாப்பானவர் செய்தவைகளை உறுதிப்படுத்தி, திருச்சபைக்கு 'ஆஜ்ஞை' பத்திரம் ஒன்று அளித்து, அதில் தமது கையொப்பம் வைத்தார். அர்ச்சியசிஷ்டவர் மரணமானது ஜூலை-௴ 31-ம் தெய்தியாகையால், வருஷந்தோறும் அத்தெய்தியில் அவருடைய திருநாளைக் கொண்டாட அநுமதி கொடுத்தார்.

அர்ச்சியசிஷ்டவருடைய மரணத்துக்குப்பின் அவருடைய முதற்றுணைவர்களில் ஐந்துபேர் இன்னும் உயிரோடிருந்தார்கள். அவர்களுள் லேய்னஸ் சுவாமியார் அர்ச். இஞ்ஞாசியாருடைய ஸ்தானத்தில் அதிபதி சிரேஷ்டராகத் தெரிந்துகொள்ளப்பட்டு, சேசுசபையை வெகு விமரிசையாய் ஆண்டு நடத்தி, கல்வித் திறமையிலும் புண்ணிய சீவியத்திலும் மிகச் சிறந்தவராக 1565-ம் ௵ ஜனவரி-௴



19-ம் ௳ காலம்பண்ணினார். பாஸ்கேஷியுஸ் சுவாமியார் பாரீஸ் நகரில் ஓர்வகைக் கொள்ளைநோய் பரம்பியிருந்தகாலத்தில், தம் உள்ளத்தை ஆட்கொண்டிருந்த தேவநேசப் பிறர்சிநேகத்தில் தன்னை மறந்தவராய், பிணியாளிகளுக்கு உற்சாகமாய் ஒத்தாசை செய்துவந்து, கடைசியாய் அவரும் அக்கொடிய நோயினால் வருந்தி 1562-ம் ௵ செப்டெம்பர்-௴ 14-ம் ௳ பிறர்சிநேகத்துக்காக உயிர்ப்பலியானார். சால்மரோன் சுவாமியார் இத்தாலியாவிலிருக்கும் நேயாப்போலி என்ற பட்டணத்தில் துஷ்டர்களுடைய அநீத கொடுமையால் அநேக துன்பதுரிதங்கள் அநுபவித்து, 1583-ம் ௵ பெப்ரவரி-௴ 13-ம் ௳ பரலோக பிராப்தியானார். சீமோன் ரோத்ரீகேஸ் சுவாமியார் 1579-ம் ௵ ஜூலை-௴ 15-ம் ௳ மரணமானார். யாவரிலும் வயதில் இளைஞராயிருந்த 'போபாதில்லா சுவாமியார் தேவ ஊழியத்தில் கடைசிமட்டும் வெகு சுறுசுறுப்பாய் உழைத்து, மற்ற துணைவர்களெல்லாம் மரித்தபின், 1590-ம் ௵ செப்டெம்பர்-௴ 23-ம் ௳ பரமபதவி அடைந்தார்.

அர்ச். இஞ்ஞாசியாருடைய 'பிரிய சிஷன்' போலிருந்த ரிபதனீரா சுவாமியாரைப்பற்றி சில வார்த்தைகளாவது சொல்லாமல் போகுதல், இச்சரித்திரத்துக்கு ஓர் குறையாயிருக்குமென்று எண்ணுகிறோம். அர்ச்சியசிஷ்டவர் சொன்னபடி, மெய்யாகவே ரிபதனீரா சுவாமியார் சேசுசபைக்கு

ஸ்திரமான ஓர் தூண்போல் விளங்கினார் பெல்ஜிய தேசத்தில் சேசுசபை ஸ்தாபகம் பெறுவதற்காக அவர் பட்ட பிரயத்தனங்களையும், அடைந்த அனுகூலத்தையும்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இங்கிலாந்து தேசத்திலும் அவ்விதப் பிரயத்தனங்கள் செய்தார்; ஆனால் அனுகூலப்படவில்லை. இதற்குப்பின் ஐரோப்பாவின் பற்பல இடங்களில் பற்பல சமயங்களில், சேசுசபையில் வெகு பொறுப்பான உத்தியோகங்கள் வகித்து, சர்வேசுரனுடைய அதிமிகத் தோத்திரத்துக்காகவும், சேசுசபையின் அபிவிர்த்திக்காகவும் மகா சுறுசுறுப்பாய் உழைத்துவந்தார். தமது நடபடிகளிலெல்லாம் தேவசிநேகம் பிறர்சிநேக மிகுந்த தம் அருமைத் தந்தையைக் கண்முன்வைத்து, அவரைக் கண்டுபாவித்துவந்தார். சிஸிலி (Sicily) என்ற தீவில், 'ஜெனரல்' சுவாமியார் பேரால் சேசுசபையை விசாரிக்கும்படி அனுப்பப்பட்டார். பாலெர்மோ என்னும் பட்டணத்தில் அவர் தங்கியிருந்தபொழுது, அப்பட்டணத்தில் ஆத்துமாக்களின் இரட்சணியத்துக்காக அத்தியந்த தேவசிநேக வாஞ்சையுடன் உழைத்துவந்த வெநூஸ்தி (Venusti) என்னும் சேசுசபை சுவாமியார், அவர் கையிலேயே ஒருகாலத்தில் வெகு உபகாரம்பெற்ற ரூக்ஜியேரோ (Ruggiero) என்றொரு பாதகக் குருவால் சதிமானமாய் உயிர்மாய்க்கப்பட்டார். வெநூஸ்தி சுவாமியார்மீது வெகு வணக்க தேசு



மூற்றிருந்த நகர்வாசிகளும், தேசாதிபதியும் அந்தப் பாதகக் குருவை எவ்விதமும் தேடிப்பிடித்து சிக்ஷிக்கவேண்டுமென்று ஆத்திரமிஞ்சியிருந்தார்கள். ரிபதனீரா சுவாமியாரும், வேறு சில சுவாமிமார்களுமோவெனில், தேசாதிபதியிடம் சென்று, கொலைபுரிந்தவருக்கு மன்னிப்பளிக்கவேண்டுமென்று மன்றாடினார்கள். "ஆ! வெகு நேர்த்தி! இப்பாதகத்தைச் சிக்ஷியாமல் என் கண்ணை மூடிக்கொள்வேனேயாகில், நீதிமான் ஆபேலுடைய இரத்தம் நீதி ஆசனமுன் இடைவிடாமல் அபயசத்தமிடாதா?" என்று தேசாதிபதி சொன்னதற்கு, ரிபதனீரா சுவாமியார்: "மெய்தான், பிரபு, ஆயினும், சேசுக்கிறீஸ்துநாதருடைய இரத்தம் இரக்கத்தையும் மன்னிப்பையும் விரும்பி அயராமல் அபயசத்தமிடுகின்றதல்லவா!" என்றார். என்றாலும் தேசாதிபதி மன்னிப்பளிக்க உடன்படவில்லை. கொலைபாதகக் குருவோவென்றால் பல இடங்களில் பதுங்கி ஒளிந்திருந்து, கடைசியாய் தப்பிக்க வேறுவழியில்லையென்று கண்டு, சேசுசபை சுவாமிமார் வாசஸ்தலத்திலேயேபோய் அடைக்கலம் புகுந்தார். கொலை செய்தவர் நீதியஸ்தர்கையில் அகப்படாதபடி புகலிடம் கொடுத்து உதவி செய்பவர்களுக்கு தேசாதிபதி கடுந்தண்டனைகள் விதித்திருந்தாலும், சுவாமிமார் அவரை இருநாள் தங்கள் மடத்தில் மறைத்துவைத்து, இரகசியமாய் ஓர் அந்நியநாட்டுக்கு அனுப்பினார்கள். அங்கு அவர் தன்

பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தபசு செய்ததாகத் தெரியவருகின்றது.

அநேக வருஷகாலம் ரிபதனீரா சுவாமியார் தேவ ஊழியத்தில் அரும்பிரயாசப்பட்டு உழைத்த பின், அசௌக்கியத்தினிமித்தம் 1574-ம் வருடம் ஜூன்-மீ இஸ்பாஞ்ஞிய தேசத்துக்கு அனுப்பப்பட்டார். இளைப்பாற்றிக்கென்று அனுப்பப்பட்டாலும், அங்கு அவர் சும்மாயிருக்கவில்லை. பலவகையாய் அத்தேசத்தில் சேசுசபைக்கு நேர்ந்த பெருந் துன்ப துரிதங்களினின்று அதைத் தற்காக்க தன்னாலான பிரயத்தனமெல்லாம் செய்துவந்தார்.

தம் அருமைத் தந்தைக்கு திருச்சபையெங்கும் பிரசித்தமான வணக்கம் கிடைக்கவேண்டுமென்று அவர் பட்ட பிரயாசை இவ்வளவு அவ்வளவென்றல்ல. 1609-ம் வருடம் இஞ்ஞாசியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அளிக்கப்பட்டபொழுது ரிபதனீரா சுவாமியார் இன்னும் உயிரோடிருந்தார். அப்பொழுது அவர் அநுபவித்த ஆனந்த அகமகிழ்ச்சியை என்னென்று சொல்ல! தம் அருமைத் தந்தையின் அற்புத ஜீவியம் எக்காலத்திலும் அவர் ஞானப்புதல்வர்கள் இருதயங்களில் சொரூபமாய் பதிந்திருக்கும்படி, வெகு புத்தி தீட்சணிய திறமையுடன் உண்மைக்கு இஞ்சித்தும் பழுதின்றி அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரம் ஒன்று பெரிய பிரபந்தமாக அமைத்துக்கொடுத்தார்.



மேலும், தேவ அருள் நிறைந்து காந்திப்பிரபை போல் துலங்கிய தம் நேச தந்தையின் முகச்சாயல் சாதாரணமாய் வழங்கிவந்த படங்களில் மகா விகாரமாய் வரையப்பட்டிருக்கக் கண்டு, மனம் சகியாதவராய், இரண்டாம் பிலிப்பரசன் அரண்மனையிலிருந்த அலோன்சோ சாஞ்சேஸ் தே கோயெல்யோ (Alonso Sanchez de Coelho) என்னும் பிரக்கியாதிபெற்ற சித்திரக்காரனை வரவழைத்து, அர்ச்சியசிஷ்டவர் மரணமானதும் அவர் முகச்சாயலைப் பதித்தெடுத்த மெழுகு உருவத்தையும், கைதேர்ந்த சிற்பாசிரியான ஒரு துணைச் சகோதரரால் மண்ணிற் செய்யப்பட்ட பிரதிமை ஒன்றையும் அவர் கையிற்கொடுத்து, அவைகளை உதவிக்கொண்டு, அர்ச். இஞ்ஞாசியாருடைய படம் ஒன்று எழுதித்தர வேண்டுமென்று அவனைக் கேட்டார். அர்ச். இஞ்ஞாசியார்மீது வெகு பக்தியுற்றிருந்த அலோன்சோ அதி உற்சாகமாய் வேலை ஆரம்பித்து, "ஆசீர்வதிக்கப்பெற்ற அர்ச்சியசிஷ்டவரே, இதைச் செய்துமுடிப்பதில் எனக்கு ஒத்தாசையாயிரும்; சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கும், உமது மகிமைக்கும் இது அநுகூலமாயிருக்கும்" என்று அடிக்கடி உச்சாரணம் செய்துகொண்டே வேலையைத் தொடர்ந்து செய்தார். ரிபதனீரா சுவாமியாரோவென்றால், தினம் ஆறுமணி நேரம்,—காலை மூன்றுமணி நேரம், சாயுங்காலம் மூன்றுமணி நேரம்,—

அலோன்ஸோ அருகிலிருந்து, வேலையை வெகு ஜாக்கிரதையாய்க் கவனித்து வேண்டிய ஆலோசனை கொடுத்துவந்தார். அன்றியும் துவக்கிய வேலை நன்றாய் முடியும்படி அநேகம்விசை திவ்விய பூசை செய்து ஒப்புக்கொடுத்தார். கடைசியாய்ப் படம் எழுதிமுடிந்ததும் ரிபதனீரா சுவாமியாருக்குண்டான ஆனந்தம் இவ்வளவு அவ்வளவென்றல்ல. அடிக்கடி கண்களில் நீர்ததும்ப, இப்படத்தைக் கண்ணோக்கி, அர்ச்சியசிஷ்டவரோடு நேசசல்லாபம் செய்வார். "என் மனதில் அமைதி அமரிக்கையடைந்து உற்சாகமாயிருப்பதற்கு, நமது பிதாவின் படத்தை கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைவிட, வேறு உஜித வழி நானறியேன். ஆ! என்ன ஆச்சரியம்! அவரை நீ பார்க்கும்பொழுது, அவர் உன்னைப்பார்த்து, அவரிடத்தில் விளங்கின மதுரகுணமுடன் உன்னோடு சம்பாஷித்து, உனக்கு. நல்லாலோசனை கொடுக்கிறதாகவோ; அல்லது, அவருக்கு இயல்பாயுள்ள பெருந்தன்மை பேரமைதியுடன் உன்னைக் கண்டிக்கிறதாகவோ தோன்றுகின்றது" என அவர் சொல்லியிருக்கிறார். ஆயினும் அர்ச்சியசிஷ்டவரை அநேகவருஷகாலமாய் உயிருடன் தரிசிக்கப்பெற்ற அவர் கண்களுக்கு இந்தப்படம். முதலாய் பூரண திருப்திகரம் தரவில்லை. அருமையான இந்தப்படம் இந்நாள்வரை மத்ரீத் பட்டணத்தில் சேசுசபை சுவாமிமார் வாசஸ்தலத்தில் காப்பாற்றப்பட்டுவரு



கின்றது. இவ்வதிகாரத்தில் சேர்த்திருக்கும் அர்ச். இஞ்ஞாசியார் படம் மேற்சொன்ன படத்தினின்றெடுக்கப்பட்டதென்றறிக.

கடைசியாய், அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரமுமன்றி, வேறநேக சிறந்த புஸ்தகங்களும் இயற்றிக் கொடுத்தார். ரிபதனீரா சுவாமியார் வயதிலும், கல்வியிலும், புண்ணியத்திலும் முதிர்ந்த மகாத்துமாவாய் 1611-ம் வருஷம், செப்டெம்பர்-மீ 22-ம்உ ஆண்டவர் கரத்தில் தம் உயிரை ஒப்புக் கொடுத்தார். மரணசமயத்தில் அவருக்கு வயது எண்பத்துநாலு. அதில் எழுபது வருஷம் சேசு சபையில் ஜீவித்தார்.

# 13-ம் அதிகாரம்.

## அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் வழியாய்ச் சர்வேசுரன் செய்தருளிய அநேக புதுமைகளில் சில புதுமைகள்.

புதுமைசெய்யும் வரம் ஜீவியகாலத்திலேயே அர்ச்சியசிஷ்டவருக்கு அருளப்பட்டிருந்ததென்று இச்சரித்திரத்தில் சிற்சில இடங்களில் சொல்லப்பட்டவைகளைக்கொண்டு விளங்கும். முன்னமே சொல்லப்பட்டவைகளுமன்றி, பார்ஸலோனாவில் கன்னியர்கள் மடம் ஒன்றைச் சீர்திருத்துவதில் அவர் முயற்சியாயிருந்தகாலத்தில், தற்கொலை புரிந்து அவலமாய் மாண்ட லீஸானி (Lisani) என்றொரு நிற்பாக்கியனுடைய பிரேதத்தைக் கண்டு, அவனுடைய ஆத்துமத்தை நினைத்து பரிதாபமுற்று அவனுக்காக தேவ இரக்கத்தை மன்றாட, அக்ஷணமே போன உயிர் சற்றுப்பொழுது திரும்பிவர, அவன் தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு பாவசங்கீர்த்தனம் செய்து திரும்ப மரித்தானென்றும் சொல்லுகிறார்கள்.

அன்றியும் அர்ச்சியசிஷ்டவர் உரோமையில் அதிபதி சிரேஷ்டராயிருந்தபொழுது, 'பைலொகேஷன்' (Bilocation, அதாவது: ஒரே சமயத்தில் ஈரிடத்தில் பிரசன்னமாயிருத்தல்) என்று சொல்லப்படும் மகா ஆச்சரியமான ஓர் அற்புத



வரத்தால், ஜெர்மானிய தேசத்தில் கொலோஞ் என்னும் பட்டணத்திலிருந்த லெயோனார்டு கெஸ்ஸல் (Leonard Kessel) என்ற சேசுசபை சுவாமியார்க்குத் தரிசனையானதாகவும் தெரியவருகின்றது. முத். பாபர் இராயப்பரால் சேசுசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்சொன்ன கெஸ்ஸல் சுவாமியார் அர்ச்சியசிஷ்டதனத்தில் மிக்குயர்ந்த மகாத்துமாவாய் ஆத்துமாக்கள் இரட்சணியத்துக்காக அயராச் சுறுசுறுப்புடன் உழைத்துவந்தார். அர்ச். இஞ்ஞாசியாரிடத்தில் விளங்கின அரும் புண்ணியங்களைப்பற்றிக் கேள்வியுற்று, அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவலால், உரோமைக்குப் போக விரும்பி, தம் கருத்தைக் கடிதமூலம் அர்ச்சியசிஷ்டவருக்கு அறிவித்து அநுமதி கேட்டார். அக்காலத்தில் கொலோஞ் பட்டணத்திலிருந்து உரோமைக்குப் போகிறதென்றால், வெகு பிரயாசை வருத்தமுடன் நெடுநாள் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. லெயோனார்டு சுவாமியாரோவென்றால் ஏற்கனவே விருத்தாப்பிய திசை அடைந்து, தேகபலன் தளர்ந்துபோயிருந்தார். மேலும் கொலோஞ் பட்டணத்தில் பிறருக்கு அவர் வெகு ஞான நன்மை செய்துவந்தமையால், அவ்விடத்தைவிட்டு அவர் நெடுநாள் அகன்றிருத்தல் யுக்தியாகத் தோன்றவில்லை. இவைகளையெல்லாம் அர்ச். இஞ்ஞாசியார் ஆராய்ந்துபார்த்து, தேவசமுகத்தில் ஆலோசனை செய்து, தம்மைப்பார்க்க

கெஸ்ஸல் சுவாமியார் அவ்வளவு நெடும்பயணஞ் செய்யத் தேவையில்லையென்றும், அவர் ஆசையை தீர்க்கச் சர்வேசுரனுக்கு வேறு வழியுண்டென்றும், கொலோஞ் பட்டணத்திலேயே ஒருவேளை தம்மை அவர் பார்க்கும்படி நேரிடலாமென்றும் பதிலெழுதினார். கெஸ்ஸல் சுவாமியார் இதை வாசித்து அர்ச்சியசிஷ்டவர் தமது வாக்கை எவ்விதம் நிறைவேற்றப்போகிறாரென்று ஆச்சரியமுற்றிருந்தார்.

ஆனால் ஒருநாள் நினையாத சமயத்தில், நன்றாய் மலர்ந்து தெளிந்து, தூய்மையும் அருளொளியும் துலங்கிய வதனமுடைய ஒரு பெரியவர் திடீரென்று அவர்முன் தரிசனையாகி, அத்தியந்த அன்பு வாஞ்சையுடன் கிஞ்சுத்துநேரம் அவரைக் கண்ணோக்கி நின்றார். தன்முன் நிற்பவர் அர்ச். இஞ்ஞாசியார்தானென்று கெஸ்ஸல் சுவாமியார் உள்ளத்தில் தெளிவாயுணர்ந்துகொண்டு, அளவற்ற ஆனந்தமடைந்தார்.*

* சர்வேசுரனுக்கு உகந்த தாசனான இந்த லெயோனார்டு கெஸ்ஸல் சுவாமியாருடைய மரணம் மனதில் திகில் உண்டாகச்செய்யும். ஓர் நாள் அவர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் பயித்தியக்காரனொருவன் திடீரென்று அவரைத் தாக்கி, ஓர் மேஜைக் கத்தியைக்கொண்டு அவர் விலாவில் குத்திக் கொன்றுபோட்டான். கொலையுண்டவர் 'சேசு' 'மரி' என்னும் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டே உயிர்விட்டார். அவருக்கு ஒத்தாசையாய் ஓடி வந்த 'மினிக்றர்' சுவாமியாரும், வேறொரு சுவாமியாரும் அவ்விதமே அந்த பித்தன் கையால் உயிரிழந்தார்கள்



அர்ச்சியசிஷ்டவருடைய மரணத்துக்குப்பின் அவர் மன்றாட்டால் சம்பவித்த புதுமைகளுக்கோ கணக்கில்லை. அவைகளில் சிலவற்றைமாத்திரம் இங்கெடுத்து தருகின்றோம்.

1618-ம் ௵ திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் முதல் திங்கட்கிழமையன்று, இத்தாலியா தேசத்தில், **நாத்தேரி மரியம்மாள்** (Mary Nateri) என்றொரு சிறுபெண் லொவானோ (Loano) என்னும் தன் ஊரைவிட்டுப் பன்னிரண்டு மைலுக்கப்பால் அராஸியோ (Arasio) என்னும் ஊரிலிருந்த கார்மேல் உத்தரிய மாதாக் கோவிலுக்குத் தன் தாயுடன் திருயாத்திரையாகச் சென்றாள். அங்கு சேர்ந்ததும், இராப் பகலாய் ஓயாமல் பெருமழை பெய்ததால், செவ்வாய்க்கிழமை அவ்வூரில் தங்கி, புதன்கிழமை காலமே இருவரும் தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். மழை மிகுதியால் எங்கும் ஜலப்பிரளயம் போல் வெள்ளக்காடாய் பாதைகளெல்லாம் சேதப்பட்டுப் போயிருந்தமையால், கடற்கரையோரமாக நடந்துபோகவேண்டி நேர்ந்தது. தாயை விட்டு சற்றுத்தூரம் முன்னே நடந்துசென்ற மரியம்மாள் வழியிலிருந்த ஒரு பெரும் நீரோடையில் கால் தவறி விழுந்துவிட்டாள். நெஞ்சம் திடுக்கிட்டு, மகளை சத்தமாய்க் கூப்பிட்டுக்கொண்டே தாய் அவளுக்கு ஒத்தாசை செய்ய ஓடினாள். ஆனால்

அவள் வந்து சேருவதற்குள்ளாக, சிறு மாது அதி வேகமாய்ப் புரண்டோடிய நீரோட்டத்தில் அகப்பட்டு, சமுத்திரத்துக்குள் இழுத்துக்கொண்டு போகப்பட்டாள். தன் கண்முன்னேயே தன் செல்வ புத்திரி சமுத்திரத்தில் தத்தளித்து உயிர் மாளும் தருணத்திலிருப்பதைக் கண்ணுற்ற அந்த ஏழைத்தாய், பெற்ற குலை பதறித் துடிக்க, கார்மேல் மாதாவை நோக்கி அலறி அபயசத்தமிட்டாள். தேவதாய்மீது உருக்க நேச பக்தியுடையவளாயிருந்த மரியம்மாளும் அவ்விதமே உத்தரீயமாதாவின் உதவியை இரந்து மன்றாடினாள்.

அவள் மன்றாட்டு வீண் போகவில்லை. அலைகளின் கொடுமையால் அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்பட்டு வருந்தியவள், பரிசுத்த கன்னிகையைத் தனக்கு சகாயமாய் அழைத்தவுடன், கரங்கள் நெஞ்சின்மேல் குவிந்திருக்க, கால்களை நன்றாய் நீட்டி, வானத்தை நோக்கிய முகமாய், வெகு அடக்க வொடுக்கமுடன், ஏதோ உயிரற்ற இலேசான வஸ்துபோல் தண்ணீர்மேல் மிதந்துகொண்டிருந்தாள். அவள் முன் உட்கொண்டிருந்த ஜலமெல்லாம் வருத்தமின்றி வாய்வழியாய் வடிந்துவிட்டது. ஆயினும் அவள் இன்னும் கரை சேரவில்லை. அதற்கு விரோதமாய் மேற்சொன்ன நிலைமையிலேயே அதிகாதிகத் தூரமாய் அலைகளால் சமுத்திரத்தில் இழுத்துக்கொண்டு போகப்பட்டாள்.



இந்நிலைமையில், தேவதாயாரையுமின்றி, அர்ச். இஞ்ஞாசியாரையும் வெகு பக்தியுடன் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய சகோதரர்களில் இருவர் சேசுசபையில் உட்பட்டிருந்தார்கள். அன்றியும் சில தினங்களுக்குமுன், தான் சமுத்திரத்தில் விழுந்துவிட்டதாகவும், அர்ச். இஞ்ஞாசியார் கார்மேல் மாதாவுடன் தனக்கு தரிசனமாகி, தன்னைக் காப்பாற்றிக் கரைசேர்த்ததாகவும் கனவு கண்டிருந்தாள். இதனால் அர்ச். இஞ்ஞாசியார்மீது இதுசமயம் அவள் இருதயத்தில் ஓர் விசேஷ நம்பிக்கையும் நேசமும் உதயமாக, "முத்திப்பேறு பெற்ற இஞ்ஞாசியாரே, என்னை இரட்சியும். என் சகோதரர்கள் இருவர் உமது புத்திரர்களல்லவா!" என்று பிரார்த்தித்தாள். இவ்வார்த்தைகளை அவள் உச்சரித்ததும், சமுத்திரம் பூமியெல்லாம் அவள் கண்களுக்கு திடீரென்று மறைந்துபோக, அற்புதமான ஓர் தரிசனத்தைக் கண்டு பரவசமானாள். தன்னைச் சுற்றிலும் வானமட்டும் மகா ஆச்சரியமான ஓர் வெண்மேகத்தையும், அதில் பிரகாச சொரூபமாய் அநேக சம்மனசுக்கள் புடைசூழ்ந்து நிற்பதையும் கண்டாள். அச்சம்மனசுக்களில் ஒருவர் கார்மேல் சபையார் தரித்திருக்கும் பிங்கலநிற வஸ்திரத்தையும், வேறொருவர் தூய வெண்மையான ஓர் வஸ்திரத்தையும் கையில் ஏந்திக்கொண்டு அவளருகில் வந்தார்கள்.

சம்மனசுக்களுக்கெல்லாம் மேலாய் வெகு தலையில் அத்தியந்த சோபன சோதிமயமாய் ஓர் இராக்கினி வீற்றிருக்க, அவள் இருதயத்தினின்று வெகு காந்தி நிறைந்த பிரகாசக் கதிர்கள் புறப்படக் கண்டாள் அக்கதிர்களின் பிரகாசத்தை அவள் தாங்கமாட்டாததால், இராக்கினியின் முகத்தை கூர்ந்து தரிசிக்கக் கூடாமற்போயிற்று. இதனால் சற்று சஞ்சலமுற்று அர்ச். இஞ்ஞாசியாருடைய உதவியை மன்றாடினாள். அனந்த அருள் அன்பு பொழியும் முகமுடன் அர்ச். இஞ்ஞாசியாரும் அவளுக்கு தரிசனையாக, பரலோக இராக்கினி அவரை அவளுக்குச் சுட்டிக் காண்பித்தாள். இதனால் அர்ச். இஞ்ஞாசியாருடைய உதவியை தான் கேட்கவேண்டுமென்று தேவதாயார் விரும்பியதாக அவள் உணர்ந்துகொண்டாள். அர்ச். இஞ்ஞாசியாருடைய அர்ச்சியசிஷ்டதனத்தைப்பற்றி முன்னொரு சமயம் சந்தேகப்பட்டு, இன்னும் அர்ச்சியசிஷ்டபட்டம் பெறாத ஒருவர் ஏற்படுத்திய சபையில் தன் சகோதரன் அந்தோனி உட்பட்டதைப் பற்றி தான் ஆட்சேபித்துப் பேசியது, இப்பொழுது அவள் ஞாபகத்துக்கு வர, மனஸ்தாபமுற்று : "முத்திப்பேறுபெற்ற இஞ்ஞாசியாரே, என்னை மன்னித்தருளும்" என்று அவரை நோக்கி பொறுத்தல் கேட்டாள். அப்பொழுது பரிசுத்த கன்னிகை அவளை நோக்கி : "அவர் மெய்யாகவே ஓர் அர்ச்சியசிஷ்டவர்தானென்று இப்போது கண்டுகொள்



ளுகிறாயா? நீ அவரை மன்றாடினதினால், உனக்கு உதவியாக வந்திருக்கிறார். அவர் வழியாகத்தான் நீ இரட்சிக்கப்படுவாய்" என்றருளினாள். தான் கடலில் வீழ்ந்திருந்ததை பரவசத்தில் முற்றும் மறந்துபோயிருந்த மரியம்மாள், 'இரட்சிக்கப்படுவாய்' என்ற வார்த்தையை செவியுற்றதும், மோட்ச இராஜ்யத்தை நினைத்து, அர்ச். இஞ்ஞாசியார் வழியாய் தான் சீக்கிரம் பரகதி அடையப் போகிறதாக எண்ணி, முன்னிலும் அதிக பக்தி உருக்கமுடன் அவரை நோக்கி பிரார்த்திக்க ஆரம்பித்தாள். இத்தரிசனம் சுமார் நாலு மணி நேரம் நீடித்திருந்தது. இந்நேரமெல்லாம், அவள் தாய் என்ன செய்தாள்?

உதவிசெய்ய யாரும் மனிதர் அருகிலில்லையென்று கண்டு, சிந்தாகுல மிகுதியால் ஓர் பயித்தியக்காரிபோல் அடுத்த கிராமத்தை நோக்கி கரைநெடுக ஒரே ஓட்டமாய் ஓடினாள். நன்றாய் நீந்தத் தெரிந்த தோமாஸ் மொரேனோ (Thomas Moreno) என்ற பராக்கிரமசாலி ஒருவன் அவள் கண்ணீருக்கிரங்கி, உடனே அவளைப் பின்சென்று வந்தான். வந்து, தேவதாயாரை உருக்கமாய்ப் பிரார்த்தித்துக்கொண்டு, தன் உயிரை எண்ணாது தைரியமாய் தண்ணீரில் பாய்ந்து, அலைகளை எதிர்த்து சிறு மாது அற்புதமாய் மிதந்துகொண்டிருந்த ஸ்தலத்தை நோக்கி நீந்தினான். இதற்குள் [illegible]க வதந்தி கேட்டு திரளான ஜனங்கள் அவ்

விடத்துக்கு வந்து கரையில் மொய்த்து நின்றார்கள். அவர்களில் பீற்றர் தே ஆல்பெங்கா (Peter Torre d' Albenga) என்றொரு பெரியவர் இந்நேரமட்டும் அற்புதமாய் உயிர் காப்பாற்றப்பட்டிருந்த அச்சிறு பெண் முகத்தைச் சுற்றி நட்சத்திரங்கள் வடிவாய் ஓர் திவ்விய பிரகாசம் துலங்கக் கண்டு. சர்வேசுரன் எவ்விதமும் அவளை ஆபத்தினின்று காத்திரட்சிப்பாரென்று உறுதியாய் நம்பியிருந்தார்.

அலைகளை எதிர்த்து நீந்தின தர்மிஷ்டனோவென்றால், வெகு பிரயாசை வருத்தப்பட்டு கடைசியாய் மரியம்மாள் அருகிற் சேர்ந்து, அவளை கரைக்குக் கொண்டுவரும்படியாய் அவள் கரங்களைப் பற்றிப் பிடித்திழுத்தான். இழுத்த அக்ஷணமே தரிசனம் மறைந்து பரவசம் நீங்கிப்போக, அப்பொழுதுதான் தண்ணீரில் வீழ்ந்தவள்போல் குளிரினாலும் பயத்தினாலும் உடல் நடுங்கிப் பதறினாள். அதுமட்டும் அலைகள்மேல் மிதந்துகொண்டிருந்தவள் அவன் கைபட்டதும். தண்ணீருக்குள் அமிழ்ந்தினாள்; அவன் கையை விட்டுவிட்டதும், முன்போல் வானத்தை நோக்கிய பார்வையாய் தண்ணீர்மேல் மிதக்க ஆரம்பித்தாள். அவள் கையைப் பற்றி இழுத்த அந்த ஆபத்சகாயன் தன்னை மோட்சத்துக்குப் போகவிடாமல் இழுத்துக்கொண்டுபோக வந்த ஓர் துஷ்ட அரூபியென்றெண்ணி, அத்துஷ்ட அரூபியின் கையினின்று தன்னை இரட்சிக்கும்படி



சர்வேசுரனையும், பரிசுத்த கன்னிகையையும், அர்ச். இஞ்ஞாசியாரையும் நோக்கி அபயசத்தமிட்டு மன்றாடினாள். தண்ணீர்மேல் அவள் அவ்விதம் மிதந்துகொண்டிருந்தது சுபாவமாய் சம்பவிக்கக்கூடியதல்ல, ஏதோ புதுமைதானென்றுணர்ந்துகொண்ட அந்த நல்லிதயன், என்செய்வதென்று சற்று யோசித்து, இலேசான ஓர் மரக்கட்டையை தன்முன் தண்ணீரில் தள்ளிக்கொண்டுபோவதுபோல் அவளையும் கரையை நோக்கி மெதுவாய் தள்ள ஆரம்பித்தான். தள்ளவே, யாவரும் ஆச்சரியப்பட, சொற்ப நேரத்துக்குள் இருவரும் வருத்தமின்றி கரை சேர்ந்தார்கள்.

கரை சேர்ந்ததும் அச்சிறு பெண் முழந்தாட்படியிட்டு தேவதாயாருக்கும், அர்ச். இஞ்ஞாசியாருக்கும் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்தாள்; தன்னைச் சுற்றி நின்றவர்களும் அவ்விதமே செய்ய மன்றாடினாள். உன் முகத்தைச் சுற்றி ஏதோ ஓர் பிரகாசம் துலங்கியதே! அதென்ன? என்று கூட்டத்திலிருந்து யாரோ ஒருவர் அவளை வினவிக் கேட்டதற்கு, அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. வஸ்திரம் மாற்றி சமீபத்திலிருந்த ஓர் தேவாலயத்துக்குட் சென்று, சர்வேசுரனையும், கார்மேல்மாதாவையும், அர்ச். இஞ்ஞாசியாரையும் திரும்பவும் ஸ்துதித்தாள்.

சில தினங்களுக்குமுன் தான் கண்ட கனவை ஏற்கனவே தன் தாய்க்கு அறிவித்திருந்தாள். இப்

பொழுது அவளை நோக்கி: "அம்மா, நான் கண்ட கனவு முற்றும் நிறைவேறிற்று, பாருங்கள். நான் கண்ட கனவுப்படி கார்மேல் மாதாவும், அர்ச். இஞ்ஞாசியாரும் மரணத்தினின்று என்னைக் காப்பாற்றினார்கள்" என்றாள்.

லொவாரே ஊரிலிருந்த கார்மேல்சபை சுவாமிமார்கள் நடந்த விசேஷத்தைப்பற்றி கேள்வியுற்று, மரியம்மாளை அழைப்பித்து, நடந்ததெல்லாம் தங்களுக்கு அறிவிக்கும்படி, ஞான அதிகார முறைமைப்படி அவளை வினவி விசாரித்தார்கள். பரிசுத்த கன்னிகையும் அர்ச். இஞ்ஞாசியாரும் ஆபத்தில் தனக்கு சகாயமாய் வந்து தன்னைக் காப்பாற்றின வகையை அச்சிறு பெண் அவர்களுக்கு விபரமாய் எடுத்துரைத்தாள். ஆனால், மனதிலுதித்த ஏதோ சந்தேகத்தினாற்றானோ, அல்லது வீண் பெருமையாயிருக்குமென்ற ஐயத்தினாற்றானோ, தேவதாயாரை தான் தரிசனத்திற்கண்ட விசேஷத்தைப்பற்றி மௌனமாயிருந்துவிட்டாள்.

ஆயினும் சிலதினங்கள் சென்றபின், ஓர்நாள் இரவு அவள் ஜெபம் ஆரம்பித்து, சர்வேசுரனுக்கும் தனக்கு சகாயமாய் வந்த பரலோகவாசிகள் இருவருக்கும் நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்த வேளை, முன் சமுத்திரத்தில் வெண்மேகத்தின்மேல் தரிசனமான அதே இராக்கினி இப்பொழுதும் அவளுக்கு திடீரென்று தரிசனமானாள்.



ஆனால் தரிசனமான இராக்கினியின் முகம் இத்தடவை சினந்திருக்கக் கண்டு, அவ்வேழைப் பெண் திகிலடைந்து கண்ணீராய்க் கரைந்துருகினாள். தேவதாய் இவ்விதம் என்மீது கோபமாயிருக்க, நான் என்ன குற்றம் செய்தேனோ, தெரியவில்லையேயென்று மனங்கலங்கி சிந்தாகுலப்பட்டாள். கோபத்தின் காரணம் யாதென்று தனக்கு அறிவிக்கும்படி பரிசுத்த கன்னிகையை வெகுவாய் கெஞ்சிமன்றாடியும், பரிசுத்த கன்னிகை மறுமொழி ஒன்றும் சொல்லாமல் கோபமுகமாகவே மறைந்து போய்விட்டாள். இதனால் சிந்தாகுலம் மிகுந்தவளாய், சேசுக்கிறீஸ்துநாதர் பாரிசமாய்த் திரும்பி, அவரைநோக்கி வெகுநேரம் அழுது பிரலாபித்து ஜெபம்செய்தாள். மூன்றுமணிநேரம் இப்படி அழுது பிரலாபித்து சோர்வுற்றிருக்கும்பொழுது, "மகளே, என் தாய் உனக்குச்செய்தவைகளையும், நீ திருஷ்டித்தவைகளையும் ஆதியோடந்தம் உண்மையுடன் வெளிப்படுத்து" என்றோர் குரலொலி மூன்றுதரம் அவள் காதில் சப்தித்தது.

காரிருள் நீங்கி கதிரோன் உதயமானதுபோல், மரியம்மாள் இவ்வார்த்தைகளைக் கேட்டு மனந்தெளிந்து, உற்சாகமுற்று சம்பவித்தவைகள் யாவையும் முழுவதும் வெளிப்படுத்தினாள். இவள் வெளிப்படுத்தியதையும், இவளுடைய தாயும், சமுத்திரத்தில் தைரியமாய்ப் பாய்ந்த அந்த ஆபத்சகாயனும், வேறு சில கண்கண்ட

சாக்ஷிகளும் சத்தியம்செய்து அறிவித்ததையும் தான் பார்த்தொலி சுவாமியாரைப் பின்சென்று இங்கெடுத்துரைத்திருக்கின்றோம்.

* * *

1629-ம் ௵, அர்ச். இஞ்ஞாசியார் திருநாளுக்கு முந்தினநாளன்று சாயுங்காலவேளை பவோலா ஷார்பாக்லி (Paola Sharbagli) என்றொருவள் தன் புருஷனுடைய சகோதரன் மகன் லூயிஸ் என்ற ஏழு மாதக் குழந்தையைக் கையிலேந்திக் கொண்டிருந்தாள். திடீரென்று பெருங் காற்றும் மழையும் உண்டானதால் மேல்மாடியில் ஜன்னல்களைச் சாற்றும்படி குழந்தையைக் கையிலேந்திக் கொண்டே தீவிரமாய்ப் படிகளை ஏறிச் சென்றாள். ஒரு கையால் பிள்ளையை மார்போடு அணைத்துக் கொண்டு, மறுகையால் கதவை இழுத்துச் சாற்றும்படி குனிந்தபொழுது, குழந்தை திடுதிப்பென்று அவள் கையினின்று தள்ளி ஜன்னல் வழியாய்க் கீழே வீதியில் விழுந்துவிட்டது. அர்ச். இஞ்ஞாசியார்மேல் விசேஷ பக்தியுடையவளாயிருந்த அந்தப் பெண்பிள்ளை, உடனே அபய சத்தமாய் சர்வேசுரனையும், அர்ச். இஞ்ஞாசியாரையும் பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளத்தை ஊடுருவிய சிந்தாகுல மிகுதியால் பிரக்ஞை தப்பி மூர்ச்சையாய் வீழ்ந்துவிட்டாள். கொஞ்ச நேரத்துக்குள் மூர்ச்சை தெளிந்து, குழந்தை தன் கையில் சுக



மாயிருக்கக்கண்டு அத்தியந்த ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தாள். "மோட்ச மகிமை நிறைந்து துலங்கிய அர்ச். இஞ்ஞாசியார் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு என் அருகில் நின்றதையும், தன் கையிலிருந்த குழந்தையை என் கையில் வைத்ததையும் நானே என் கண்ணால் கண்டேன். நான் சித்தந்தடுமாறி இருந்த ஸ்திதியில், குழந்தையை நெஞ்சோடு அணைத்துக்கொள்ள சக்தியற்றவளாயிருந்தமையால், எனக்குப்பலமும் புத்தித் தெளிவும் திரும்பி வருமட்டும் அவர்தாமே குழந்தையை என் கையில்வைத்து தாங்கிப்பிடித்துக்கொண்டிருந்தார்" என்று அறிவித்தாள்.

அர்ச்சியசிஷ்டவர் சேசுசபையார் சாதாரணமாய் அணிந்திருக்கும் உடையே அணிந்திருந்ததாகவும், அவரது முகம் மகா சோதிமயமாய் பிரகாசித்துத் துலங்கியதாகவும், அவருடைய முகரூப இலட்சணங்கள் அவ்வூரில் அவள் பார்த்துள்ள படங்களில் இல்லையென்றும் சொன்னாள். குழந்தைமேல் சுற்றியிருந்த சிறு வஸ்திரம் தெருவில் கண்டெடுக்கப்பட்டது.

* * *

ஸ்காட்லந்து தேசத்தவரான ஜேம்ஸ் (James Tyrrel) என்றொரு வாலிபர்,—வெகு புத்தி தீட்சணியத் திறமையுடையவர்,—தேவ ஊழியத்தை நாடி சேசுசபையில் பிரவேசித்தார். நவசந்நியாசம்

முடிந்து, உரோமன் காலேஜில் கல்வி சாஸ்திரம்
படிக்க ஆரம்பித்ததும், சாஸ்திரப் பயிற்சியில்
மிஞ்சின பிரீதி வைத்து, தெய்வ பக்திக்கடுத்த
விஷயங்களில் வரவா அஜாக்கிரதையாய் நடக்க
லானார். ஜெபத்தியானம், ஆத்துமசோதனை, ஞான
வாசகம் முதலிய முயற்சிகளுக்குக் குறிக்கப்பட்ட
நேரத்தில், அவைகளைவிட்டு சாஸ்திரம் படிப்பதில்
முயற்சியாயிருந்தார். இதனால் அவர் இருதயத்தில்
தெய்வ பக்தி நாளுக்குநாள் குறைந்துபோக, அவர்
ஆத்துமத்தின் ஞான உயிரும் நாளுக்குநாள்
தளர்ந்து மெலிந்து வந்தது. சாத்தான் சிலகாலம்
சும்மாயிருந்து, அவர் ஆத்துமத்தின் ஞான சத்து
வம் வெகுவாய்ச் சோர்ந்து பலவீனப்பட்டிருக்கும்
சமயம்பார்த்து, ஓர் பலத்த சோதனையால் அவரை
வஞ்சித்துக் கெடுக்க வழி தேடிற்று.

தெய்வ பக்தியில் வர்த்திக்க அளவற்ற வாஞ்சை
யுடன் வெக்க முயற்சி செய்துவரும் புண்ணியாத்து
மாக்களே சோதனைகாலத்தில் சில சமயங்களில்
தயங்கி மயங்குகின்றார்களென்றால்; தெய்வ பக்தி
யில் நெடுநாள் அஜாக்கிரதையாயிருந்து, தேவாநுக்
கிரகத்தின் சகாய உதவியை வெகுவாய் இழந்து
வந்த இவ்வாலிபர் சோதனையில் மனந்தத்தளித்து
மிக வருந்தினாரென்றால் ஆச்சரியமென்ன? ஆயினும்
அவருடைய கருத்து இதுகாலம் நேர்மையாயிருந்த
மையால், தேவ உதவியை இரந்து மன்றாடிக்



கொண்டு, தன்னால் கூடியமட்டும் சோதனையை
ஜெயிக்கப் பிரயாசப்பட்டார். என்றாலும், அவரு
டைய ஸ்திதி வெகு ஆபத்தாகவேயிருந்தது. ஓர்
விசேஷ தேவாநுக்கிரகத்தின் உதவியின்றி,
சோதனையை ஜெயித்தல் அசாத்தியமாயிருந்தது.
ஆனால் சர்வேசுரன் அவர்மேல் விசேஷ கிருபை
வைத்து, தமது தாசன் அர்ச். இஞ்ஞாசியார் வழி
யாய் அவரை இரட்சிக்கத் திருவுளமானார்.
சோதனை வெகு அகோரமாய் எழும்பி அவர் மன
தைத் தாக்க, அதை ஜெயிக்க சக்தியற்று அதற்கு
அவர் இடங்கொடுக்க முற்றும் கிட்டின தறுவாயி
லிருந்த ஓர்நாள், அர்ச். இஞ்ஞாசியார் அவருக்குத்
தரிசனையாகி, அத்தியந்த மதுரகுணம் வாய்ந்த ஓர்
தந்தையின் அன்பு தயையுடன் அவரைக் கடிந்து
கொண்டு, "கல்வியறிவு குறைவாயிருந்தாலும்,
தெய்வபக்தி அதிகமாயிருக்கட்டும்" என்று
சொல்லி மறைந்துபோனார். இத்தரிசனத்துக்குப்
பின் வாலியர் இருதயத்தில் முன்னில்லாத் தைரிய
மும் திடனும் உண்டாக, சோதனையை ஜெயித்து,
அன்றுமுதல் தெய்வபக்தியில் மிகச்சிறந்த புண்ணி
யாத்துமாவாய் விளங்கி, 'ஜெனரல்' சுவாமியார்
அருகிலிருந்து, ஜெர்மானிய தேசத்தில் சேசுசபைக்
கடுத்த விஷயங்களில் அவருக்கு ஒத்தாசைசெய்து
வரும் பொறுப்பான உத்தியோகமும் வகித்து,
1597-ம் வரு பாக்கியமான மரணமடைந்தார்.
மரணமடைவதற்கு மூன்று தினங்களுக்குமுன்

அந்தோனி மெஞ்ஜியோ (Anthony Menageo) என்ற சுவாமியாரிடத்தில் மேற்சொன்ன விசேஷங்களையெல்லாம் அறிவித்தார்.

* * *

அர்ச். சாமிநாதர் சபையில் கல்வியிலும் புண்ணியத்திலும் சிறந்தவராய் விளங்கின அல்வாரோ தே மொலினு (Alvaro de Molina) என்ற குருவானவர் அமேரிக்கா கண்டத்தில் பெரு (Peru) என்னும் நாட்டின் இராஜதானியாகிய லீமா (Lima) என்ற பட்டணத்தில் திமிர்வாதக் கொடுமையால் எட்டு வருஷகாலமாய் வெகு உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்தார். கை கால் அசைக்கவாகிலும், ஒரு வார்த்தைமுதலாய் உச்சரிக்கவாகிலும் கூடாதவராயிருந்தார்; தினம் கட்டிலிலிருந்து ஓர் நாற்காலியில் தூக்கிவைக்கப்பட்டு, பகல் முழுதும் அப்படியே அந்நாற்காலியில் ஒரு பிரேதம்போல் அவர் அசைவற்றிருக்கும் கோலத்தைக் கண்ணுற்ற யாவரும் வெகு பரிதாபப்படுவார்கள் அவரை சொஸ்தமாக்க வைத்தியர்கள் செய்த பிரயத்தனங்களெல்லாம் வியர்த்தமாய்ப்போயின. தேவசித்தத்துக்கு அமைந்து பொறுமையாயிருப்பதும், ஞான புஸ்தகங்களை வாசிப்பதுமே அவருக்கு ஆறுதலாயிருந்தது. அப்படிப் புஸ்தகங்களை வாசிக்கும் பொழுது ஏடுகளைத் திருப்புவதற்கு பக்கத்தில் ஒருவரிருக்கவேண்டியிருந்தது.



எட்டு வருஷகாலமாய் இவ்வித ஸ்திதியிலிருந்தவர் அர்ச். இஞ்ஞாசியார்மீது வெகு பக்தியுடையவராயிருந்த தமது சபைக் குருவானவர் ஒருவருடைய ஆலோசனையைப் பின்சென்று, ரிபதனீரா சுவாமியார் எழுதிய அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரச் சுருக்கத்தை * கருத்தாய் வாசிக்க ஆரம்பித்தார். வாசிக்க வாசிக்க அவர் உள்ளத்தில் ஓர் திவ்விய ஆறுதலும், அர்ச். இஞ்ஞாசியார்மட்டில் பக்தி நம்பிக்கையும் உற்பத்தியாகி மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டுவர, இந்த அர்ச்சியசிஷ்டவருடைய பேறுபலன்களைப் பார்த்து தனக்கு ஆரோக்கியம் அநுக்கிரகிக்கவேண்டுமென்று சர்வேசுரனை இருதயத்தில் உருக்கமாய்ப் பிரார்த்தித்தார். அன்றியும் தமக்கு ஆரோக்கியம் கிடைக்கும்பட்சம், தம் ஆயுள்காலமெல்லாம் வருஷா வருஷம் அர்ச்சியசிஷ்டவருடைய திருநாளுக்கு முந்தினநாள் ஒருசந்தியாயிருக்கவும், திருச்சபையில் அவருக்கென்று குறிக்கப்பட்டிருக்கும் பிரார்த்தனை ஜெபத்தை காலை மாலை ஜெபித்துவரவும் நேர்ந்துகொண்டார். எட்டுநாள் பரியந்தம் நம்பிக்கை தளராமல் மேற்சொன்னபடி சர்வேசுரனைப் பிரார்த்தித்துவந்தார். எட்டாம் நாள், "எழுந்து நட"

* ரிபதனீரா சுவாமியார் அர்ச். இஞ்ஞாசியார் சரித்திரம் இரண்டு எழுதினார்; ஒன்று விரிவாகவும், மற்றொன்று வெகு சுருக்கமாகவும் எழுதினார்.

என்றொரு அசரீரி வாக்கியம் அவர் உள்ளத்தில் தொனிக்க, நாற்காலியை விட்டெழுந்திருக்கும்படி யாரோ அவரைக் கட்டாயப்படுத்தினாற்போல் தோன்றிற்று. உடனே அற்ப வருத்தமுமின்றி எழுந்து நடந்து தம் சகோதரர்கள் கூடியிருந்த ஸ்தலத்தைநோக்கித் தீவிரித்துச் சென்றார். அவர்கள் அவரைக் கண்ணுற்றதும் தங்கள் கண்களை நம்ப மாட்டாமல், ஏதோ விநோத காட்சியைக் கண்டாற்போல் சற்றுநேரம் அவரைப் பார்த்த பார்வையாய்ப் பிரமிப்படைந்து நின்றார்கள். எட்டு வருஷகாலமாய் பேச்சற்றிருந்தவர், இப்பொழுது சற்றும் பிரயாசையின்றி வார்த்தையாடி, அர்ச். இஞ்ஞாசியார் தமக்குச் செய்த அற்புத சகாயத்தை வெகு நன்றியறிந்த பற்றுதலுடன் அவர்களுக்கு விவரித்துரைத்தார். எல்லாரும் ஒன்றுசேர்ந்து சர்வேசுரனை ஸ்துதித்து 'தே தேயும் லௌதாமுஸ்' (Te Deum Laudamus: சர்வேசுரா, உம்மை ஸ்துதிக்கின்றோம்) என்னும் ஸ்தோத்திர ஸ்துத்தியம் பாடினார்கள். அன்றியும் இப்புதுமையை அப்பட்டணத்திலிருந்த சேசுசபை சுவாமிமார்களுக்கு உடனே விபரமாய் அறிவித்தார்கள். சுவாமிமார்களும் சர்வேசுரனை ஸ்துதித்து 'தே தேயும்' பாடினார்கள்.

* * *

இதே தினத்தில் சேசுசபையில் நவசந்நியாசத்திலிருந்த கிறீஸ்தோபர் மேஸா (Christopher



Mesa) என்பவர் கடும் வியாதியாய் கடைசித் தேவத்திரவிய அநுமானங்கள் பெற்று, மரணத்துக்கெதிர்பார்த்திருந்தார். இவர் மேற்கூறிய புதுமையைப்பற்றிக் கேள்வியுற்று, சுவாமிமார்களோடு தானும் 'தே தேயும்' பாடி சர்வேசுரனை ஸ்துதிக்கும்படி, தன்னைத் தேவாலயத்துக்குத் தூக்கிக்கொண்டுபோகும்படி மன்றாடினார். தேவாலயத்திலிருந்து பூரண சௌக்கியமடைந்தவராய்த் திரும்பிவந்தார்.

* * *

1594-ம் ௵, வில்லியம் (Willam Guard-ford) என்று பெயர்கொண்ட ஒரு குருவானவர் சேசுசபையில் உட்பட மிக்காவலுற்று, அதற்காகத் தன் ஜென்ம நாடாகிய இங்கிலாந்து தேசத்தை விட்டு உரோமைக்குப் பிரயாணம்செய்து, இங்கிலாந்து தேசத்து அப்போஸ்தலராகிய அர்ச். அகுஸ்தீன் திருநாளன்று சபையில் பிரவேசித்தார். அன்றுதானே அவருக்குக் காய்ச்சல் கண்டு, மறுநாள் வியாதி அதிகரித்து மரண ஆபத்திலிருந்தார். தான் அளவற்ற ஆவலுடன் தேடிவந்த ஞானசீவியத்தை சுவைபார்க்குமுன்னமே, மரணம் அடுத்துவந்ததேயென்று உள்ளத்தில் அங்கலாய்த்து, தமது ஞானப்பிதா அர்ச். இஞ்ஞாசியாரை நோக்கிப் பிரலாபித்து, அவர் உதவியை மன்றாடினார்.

அவர் மன்றாடின மறுநாள் இரவில் அர்ச்சியசிஷ்டவர் ஏற்கனவே பரலோக பிராப்தியான வேறுசில சுவாமிமார்களோடு அவருக்கு தரிசனையானார். ஜீவிய காலத்தில் அணிந்திருந்த உடைதான் இப்பொழுதும் அணிந்திருந்தார். அவருடைய ஊன்றுகோலும் அவர் கையிலிருந்தது. கையிலிருந்த ஊன்றுகோலை ஓங்கி ஏதோ மிருகங்களை வியாதிஸ்தர் அருகிலின்று விரட்டுகிறவர் போல் காணப்பட்டார். அதன்பின் அத்தியந்த அன்பு பட்சமுடன் வியாதிஸ்தரைக் கடாக்ஷித்து மறைந்துபோனார். அக்ஷணமே வியாதிஸ்தர் தமக்கு நற்சுகம் கிடைத்ததாக உணர்ந்துகொண்டார். அர்ச்சியசிஷ்டவரோடு தரிசனமான சுவாமிமார்களில் ஒருவர் மற்றவர்களை விட்டு அவர் படுக்கை அருகிற்போக, இப்படி புதுமைசெய்யும் வரம் உமக்கும் உண்டோவென்று வியாதிஸ்தர் அவரைப்பார்த்துக் கேட்டார். அதற்கு சுவாமியார் பதிலொன்றும் சொல்லாமல், புன்னகைகொட்டி, வெகு அன்புடன் போர்வையை அவர்மேல் விரித்து, அவரை நன்றாய்ப் போர்த்தி, அமரிக்கையாய் நித்திரைசெய்யும்படி அடையாளம் செய்துவிட்டு மறைந்து போனார். குருவானவர் நன்றாய் அயர்ந்து நித்திரை செய்து, பூரண* சௌக்கியமடைந்தவராய் படுக்கையை விட்டெழுந்தார்.

* * *



பிரான்ஸ் தேசத்தில் காஸ்கோஞ் (Gascogne) என்னும் நாட்டில் ஒருவன் சேசுசபையை மூர்க்கமாய் விரோதித்து, அச்சபையை ஸ்தாபித்த அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரையும் தூஷித்து இகழ்ந்து வந்தான். ஏற்கனவே அர்ச். பாப்பானவர் அவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டமளித்து, திருச்சபையெங்கும் விசுவாசிகள் அவருக்கு பிரசித்தமாய் வணக்கம் செலுத்திவந்தாலும், அதையெல்லாம் இவன் ஒரு பொருட்டாய் எண்ணாமல், லொயோலா இஞ்ஞாசியார் வஞ்சகனென்றும், கள்ள ஞானியென்றும் அவமதித்துவந்தான். அவருடைய ஜீவியத்தில் ஏதாகிலும் குற்றம் குறைகள் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் கருத்துடன் அவருடைய சரித்திரத்தை யெடுத்து வாசித்தான். அதில் சொல்லப்பட்ட அற்புத வரலாறுகளெல்லாம் வெறுங் கட்டுக்கதைகளென்று நகைத்துப் பரிகாசம்செய்யத் தலைப்பட்டான்.

ஆனால் ஓர்நாள் இரவில் அர்ச்சியசிஷ்டவர், அநேக சம்மனசுக்கள் புடைசூழ, பரலோக மகிமைப்பிரகாசம் நிறைந்து துலங்கிய முகமுடன் அவனுக்கு தரிசனமாகி, ஒரு வார்த்தை முதலாய் பேசாமல், மகா அன்பு பட்சமுடன் சற்றுநேரம் அவனைக் கண்ணுற்று மறைந்துபோனார். தரிசனம் கண்டவனோவென்றால், மனந்தடுமாறி சற்றுநேரம் மூர்ச்சையாயிருந்தான். மூர்ச்சை தெளிந்து, கட்டிலை விட்டெழுந்து, முகம் தரையில்பட சாஷ்

டாங்கமாய் விழுந்து, கண்ணீர் சொரிந்து அர்ச்சியசிஷ்டவரிடத்தில் பொறுத்தல் கேட்டான். அதன்பின் அர்ச்சியசிஷ்டவருடைய சரித்திரத்தை கையிலெடுத்து வெகு பூஜித வணக்கமுடன் முத்தி செய்தான்.

* * *

மனுக்குலத்தின் கொடிய சத்துருக்களாகிய துஷ்ட அரூபிகளின் கையினின்று எண்ணிறந்த ஆத்துமாக்களை இரட்சித்துவந்த தமது தாசனுக்கு, சர்வேசுரன் அத்துஷ்ட அரூபிகளின்மேல் ஓர் விசேஷ வல்லமை அளிக்கத் திருவுளமானார்.

அவர் ஜீவிய காலத்திலேயே சிலர்மேல் ஆவேசமாயிருந்த துஷ்ட அரூபிகளை அவர் துரத்தினதாகத் தெரியவருகின்றது. லொரேத்தோ என்ற இடத்தில் அவர் ஸ்தாபித்த கலாசாலையில் பசாசுகளால் துவக்கத்தில் நேர்ந்த உபத்திரவங்கள் இத்தனை அத்தனை யென்றல்ல. நரகக்கூளிகளால் நிகழ்ந்த பயங்கரமான தோற்றங்கள் பேரிரைச்சல்களேதுவால், சுவாமிமார் இராவிளைப்பாற்றியின்றி வெகு துன்பப்பட்டார்கள். அநேக சமயங்களில் வீடு அஸ்திவாரமட்டும் அதிர்ந்து நடுங்கினாற்போலிருக்கும்; வேறு சமயங்களில் அநேக துஷ்ட மிருகங்கள் நித்திரை செய்கிறவர்கள்மேல் பாய்ந்தோடினாற்போல் தோன்றும். அச்சமயம் கலாசாலையில் சிரேஷ்டராயிருந்த ஒலிவியர் மனூர்



என்ற சுவாமியார் மற்ற சுவாமிமார்கள் சற்றாகிலும் நித்திரை செய்து இளைப்பாறும்படி, அவர்களுக்கு தைரியமாக இரவெல்லாம் கண்விழித்திருந்து சுவாமிமார் அறைகளுக்குமுன் உலாவிக்கொண்டிருப்பார். பலநாள் கண்விழித்திருந்து பட்ட வருத்தங்களால், இந்த மனூர் சுவாமியார் வியாதியாய் விழுந்துவிட்டார். வியாதியில் துஷ்ட அரூபிகள் அவரை வெகுவாய் உபத்திரவப்படுத்தின.

திருச்சபை ஆசாரப்படியுள்ள சடங்குகள்செய்து வீட்டை மந்திரித்தும், விசேஷ ஜெபங்களும் திவ்விய பூசைப்பலிகளும் ஒப்புக்கொடுத்தும் இவ்வுபத்திரவங்கள் நீங்கவில்லை. கடைசியாய் சிரேஷ்ட சுவாமியார் உரோமையிலிருந்த அர்ச். இஞ்ஞாசியாருக்கு கடிதம் எழுதி எல்லாம் அறிவித்தார். அர்ச்சியசிஷ்டவர் செய்தியறிந்து வெகு அநுதாபப்பட்டு, சர்வேசுரனை உருக்கமாய்ப் பிரார்த்தித்தார். மேலும் லொரேத்தோவிலிருந்த தம் மக்களுக்கு ஆறுதலாக அவர்களுக்கு ஒரு கடிதமும் எழுதினார். இக்கடிதத்தை மனூர்சுவாமியார் யாவருக்கும் முன்பாக வாசித்தார். அன்றுமுதல் துஷ்ட அரூபிகளால் நேர்ந்த உபத்திரவங்கள் முற்றும் ஒழிந்துபோயின.

சர்வேசுரனுடைய திருவருளால் நரகப்பேயினங்கள்மீது அர்ச்சியசிஷ்டவருக்கு அளிக்கப்பட்ட இந்த வல்லமை, அவருடைய மரணத்துக்குப்பின்

இன்னும் அதிக துலக்கமாய் விளங்கியது. அநேக
திருஷ்டாந்தங்களுள் ஒன்றுமாத்திரம் இங்கெடுத்து
தருகின்றோம்.

ஜெர்மானியா தேசத்தில் உயர்குலத்தில் பிறந்த
மிக்கேல் லுட்விக் (Michael Ludwig) என்
றொரு இளைஞன் பிரான்ஸிய பாஷை கற்றுக்கொள்
ளும்படியாக லொரேன் பட்டணத்துக்கு அனுப்
பப்பட்டான். அங்கு சில கெட்ட தோழர்களோடு
கூடி தானும் கெட்டு, சூதாட்டத்தில் நாள்போக்கி
வந்தான். ஓர் நாள் தன் கையிலிருந்த பணமெல்
லாம் சூதாட்டத்தில் இழந்துவிட்டு, சஞ்சல சாக
ரத்தில் மூழ்கியவனாய், தன் தோழர்களை விட்
டகன்று தனிமையாய் உலாவிக்கொண்டிருக்கும்
பொழுது, திடீரென்று அவனுக்கு ஓர் நினைவு வந்
தது. அதாவது: பசாசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து
கொண்டு, அவ்வழியாய் வேண்டிய பணம் பெற்
றுக்கொள்ளக்கூடாதா? என்ற நினைவு எவ்விதமோ
அவன் சிந்தையில் உதித்தது. அக்கிரமமான இந்
நினைவில் அவன் பிரியங்கொண்ட அக்ஷணமே,
உயர்குலமாக்களுக்குரிய உடுபாவனை யணிந்து அழ
கிய முக இலக்ஷணங்கள் அமைந்த வாலிபன் ஒரு
வன் மாயமாய் அவன் அருகில் வந்து நின்றான்.
வந்து நின்ற வாலிபனுடைய முகம் மேற்சொன்ன
படி சௌந்தரியமாயிருந்ததென்றாலும், மிக்கேல்
அவனைக் கண்ணுற்றதும் என்னமோ நெஞ்சந்திடுக்
கிட்டு நடுங்கினான். துஷ்ட அரூபிதான் இவ்விதம்



மாறுவேஷம்பூண்டு, தன் அருகில் வந்து நிற்கின்ற
தென்று எவ்விதமோ, தன் உள்ளாந்தரங்கத்தில்
உணர்ந்துகொண்டான்போலும். மாயமாய் தோன்
றின வாலிபனோவென்றால், புன்னகையுடன் அவ
னைக் கண்ணோக்கி, "ஏனப்பா, பயப்படுகின்றாய்?
நானென்ன, அவ்வளவு அவலட்சணமாகவா இருக்
கின்றேன்! பயப்படாதே. உனக்கென்ன வேண்
டும்? பணமா வேண்டும்?" என மாதுரிய சாதுரிய
மாய் இச்சக வார்த்தை மொழியக்கேட்டு, நிர்ப்
பாக்கியன் மிக்கேல் லுட்விக் தைரியமடைந்து,
"என்ன பணம் நீ எனக்குக் கொடுக்கப்போகின்
றாய்? வீண் தோற்றங்களைப் பணமாகத்தந்து,
என்னை ஏய்க்கப்போகின்றாயோ?" என்று சாத்தா
னுக்குப் பதிலுரைத்தான். "இல்லை, இல்லை. மெய்
யான பணம், அபரிமிதமாய், உன் ஆசைக்களவாய்த்
தருகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே, வாலி
பன் ரூபமாய் வந்து நின்ற அந்தப்பசாசு பாலியன்
கைநிரம்பப் பொன் நாணயங்களைக்கொட்டி, அவை
களை அவன் இஷ்டம்போல் பிரயோகித்துவிட்டு,
தன்னிடம் திரும்பிவந்து ஒப்பந்தம் செய்துகொள்
ளும்படி கேட்டது.

மதிகேடன் மிக்கேல் இவ்விதம் கிடைத்த பணத்
தைக்கொண்டுபோய், வெகு ஆவலுடன் சூதாட
ஆரம்பித்தான். சொற்ப நேரத்துக்குள் யாவரை
யும் வென்று, அவர்கள் பணமெல்லாம் தன் வச
மாக்கிக்கொண்டான். ஆனந்தக்கடலில் ஆழ்ந்த

வனாய், அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்த வாலி
பனிடம் திரும்பிவந்தான். பண ஆசையினால் மதி
மயங்கி, தன் ஆத்துமத்தை மனுரூபமாய் நின்ற
அந்த சாத்தானுக்கு விற்பனைசெய்ய உடன்பட்
டான். சாத்தான் அவன் கரத்தை நீட்டச்சொல்லி,
அவனுக்கு அற்பமும் நோவு வருத்துவியாமல்,
அதில் ஒரு சிறு காயம் செய்து சில துளி இரத்த
மெடுத்து, அந்த இரத்தத்தைக்கொண்டு ஒரு சீட்
டில் சில அட்சரங்கள் அவன் எழுதும்படிச் செய்
தது. இவ்விசேஷத்தை எடுத்துக்கூறியிருக்கின்ற
பார்த்தொலி சுவாமியார் மேற்சொன்ன அட்சரங்
களை பிற்காலத்தில் தாமே தமது கண்ணால் கண்டு
பரிசோதித்ததாகச் சொல்லுகிறார். அவைகளெல்
லாம் கிரீக் (Greek) பாஷையின் அட்சரங்களென்
றும், என்றாலும் அவைகளின் பொருள் இன்ன
தென்று விளங்கவில்லையென்றும் சொல்லுகிறார்.
முதற்சீட்டு எழுதிமுடிந்ததும், சாத்தான் வேறொரு
சீட்டை அவன் கையிற்கொடுத்து அதிலும் முன்
போலவே, ஆனால் முன்னிலும் அதிகமாய் சில
அட்சரங்கள் அவன் வரையும்படிச் செய்தது. அதற்
குப்பின் முதல்விசை யெழுதிய சீட்டையெடுத்து,
மாணாக்கனைப் பார்த்து "இது உனக்கு" என்று
சொல்லி அவனுடைய கரத்தில் இரத்தமெடுத்த
காயத்தில் அது மாயமாய் மறைந்துபோகும்படிச்
செய்தது. காயமும் ஒரு க்ஷணத்தில் மாயமாய்
முற்றும் ஆறிப்போயிற்று. இது முடிந்ததும் சாத்



தான் பாலியனை நோக்கி, "இதோ இச்சீட்டில் கண்
டிருக்கிறபடி, எழு வருஷகாலம் நீ ஏதேது விரும்பு
வையோ, அதெல்லாம் நான் உனக்குச் செய்ய
உடன்படுகிறேன். ஆனால் அந்தக் கெடு முடிந்த
தும், இந்த இரண்டாவது சீட்டில் கண்டிருக்கிறபிர
காரம், நீ எனக்கு சொந்தமாவாய். உனக்கு இது
சம்மதம்தானா?" என்று வினவினது. அந்த நிர்ப்
பாக்கியன் உள்ளத்தில் கிலேசமுற்று, பெருமூச்
செறிந்தானென்றாலும், சாத்தான் செய்த உடன்
படிக்கைக்கு சம்மதப்பட்டான். சாத்தானும்
மறைந்துபோயிற்று.

அன்றுமுதல் அந்தத் துஷ்ட அரூபி இராப்
பகலாய், அவன் நினைத்தபொழுதெல்லாம் அவன்
அருகில் வந்துநின்று, அவன் இஷ்டப்படி சகல
மும் செய்துவந்தது. அநேக தீவினைகளையும்,
இதற்குமுன் அவன் அறியாத அநேக நூதன
பாவங்களையும் அவனுக்குக் கற்றுக்கொடுத்து,
பாவப்படுகுழியில் அவன் நாளுக்கு நாள் அதிக
ஆழமாய் விழுந்து கெட்டுப்போகும்படிச் செய்
தது. கல்விப்பயிற்சியிலல்ல, பாவப்பழக்கத்தில்
தான் மிக்கேல் அதிவிரைவாய் தேர்ச்சியடைந்து
வந்தான். சில வருஷங்களுக்குப்பின், தன் ஜென்ம
தேசத்துக்கு அவன் திரும்பினபொழுது, அரு
ளற்று இருளடர்ந்திருந்த அவன் முகத்தின் விகார
வேற்றுருவையும், அவனுடைய துஷ்ட நடபடிகளை

யும் கண்ட அவனுடைய தாய்தந்தையர் மனம் உடைந்து மிக வருந்தினார்கள்.

சாத்தான் குறித்த கெடுவும் முடிவாகும் காலம் அணுகிவந்தது. இன்னும் சில மாதகாலம்தான். அது முடிந்ததும், சாத்தான்கையில் அவன் தன்னை முற்றும் ஒப்புவித்துவிடவேண்டும். இந்நினைவினால் மனதிலுண்டான திகிலினாலும், துஷ்ட அரூபியின் ஏவுதலினாலும், எண்ணிறந்த அவலட்சண பாவங்களையும் பெரும் பாதகங்களையும் செய்த அவன் நெஞ்சத்தை இடைவிடாமல் உபாதித்துக்கொண்டிருந்த மனச்சாக்ஷியின் கொடிய கண்டனையாலும் அவநம்பிக்கைப்பட்டு, புத்திகலங்கி பயித்தியம் பிடித்தவன்போல் திரிந்தான். ஓர் நாள் தன்னைப் பெற்றோரை நஞ்சிட்டுக்கொல்ல எத்தனித்தான். வேறோர்நாள் வீட்டில் நெருப்புவைக்க வழிதேடினான். தேவகிருபையால் இவைகளில் ஒன்றும் சித்திக்கவில்லை. அவநம்பிக்கை அதிமிக அகோரமாய் அவன் உள்ளத்தை உபாதித்த ஓர் நாள், துப்பாக்கியால் தற்கொலைசெய்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளும்படி இருதரம் பிரயத்தனப்பட்டான். இருதரமும் எவ்விதமோ அவன் பிரயத்தனம் பலியாமற் போயிற்று. மூன்றாந்தரமும் அவன் அவ்விதமே பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்ததை அவன் சகோதரிகளில் இருவர்கண்டு, ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துத் தடுத்தார்கள். இச்சகோதரிகளில் ஒருவள் தன் சகோதர



னுடைய பாவநடக்கைகளுக்கும், அவன் தற்கொலை புரிய எத்தனித்ததற்கும் காரணம் யாதாயிருக்கலாமென்று கவலைமிகுந்தவளாய், அதைத் தனக்கு அறிவிக்கும்படி கண்ணீர் சிந்திக்கொண்டு அவனைக் கெஞ்சிக்கேட்டாள். அவனோவென்றால், தற்சமயம் அவள் பலவந்தமாய் தடுத்தது அதிசீக்கிரம் அகத்தியமாய் நேரிடுமென்றும், அதைத் தடுத்தலும் தன் பாவநடக்கைகளை விட்டுவிடுதலும் தன்னால் கூடாத காரியமென்றும் சொன்னான்.

இவ்வார்த்தைகளை அவன் தன் தாயிடத்திற் சொல்ல, தாய் தன் மகனுடைய நிர்ப்பாக்கிய நிலைமையின் காரணத்தையறிய ஆவலுற்று, அதனை வெளியிடும்படி அவனை வெகுவாய் வற்புறுத்திக் கேட்டாள். இதுகாலம் மட்டுக் தன் நெஞ்சில் மறைத்துவைத்திருந்த கொடிய இரகசியத்தை கடைசியாய் அவளுக்கு வெளியிட்டான். பயங்கரமான அந்த இரகசியத்தைச் செவியுற்றதும், தன் தலைமேல் கோடை இடி குமுறி விழுந்ததுபோல் நெஞ்சம்பதறி, அக்கினிக்கணைபோல் சிந்தாகுலம் மனதை ஊடுருவி உபாதிக்க, உயிரற்ற உடலென தரையில் சோர்ந்து வீழ்ந்துவிட்டாள் அந்த நிர்ப்பாக்கியனைப் பெற்ற அந்த மாதா! ஐயோ! பரிதாபம்! நல்ல யௌவனப் பருவத்தில் ஈனப் பசாசுக்குப் பலியிடவோ, பிள்ளையைப் பெற்று வளர்த்தாள்! என் செய்வாள் அவள்? எங்கு

ஆறுதல் தேடுவாள்? தாஅனும் பதிதமார்க்கத்தில்
சேர்ந்து, தன் மகனையும் அதில் சேரும்படிச் செய்த
அவளுக்கு இந்த நிர்ப்பந்தவேளையில் பதிதமார்க்
கம் என்ன ஆறுதலைத் தரக்கூடும்? ஓயாமல் கண்
ணீர்சொரிந்து பிரலாபித்துப் புலம்புவதே அவ
ளுக்குக் கிடைத்த ஆறுதல். ஆயினும் ஓர் நாள்
பசாசு தன் மகனை பலவந்தமாய்த் தரையில் விழத்
தாட்டி, அவனைக் கொல்லத் தேடியதைக்கண்டு
மனஞ்சகியாதவளாய், சத்தியமறைத் துறவறக்
குருக்கள் சிலர் அடைக்கலத்தில் அவனை 'ஒப்பு
விக்கத் தீர்மானித்தாள். அவனோவென்றால் அவ்
விடத்தைவிட்டு தப்பித்து வேறோரிடத்துக்கு ஓடிப்
போய், அங்கு முன்னிலும் அதிக துர்ஜனனாய்
நடந்துவந்தான். அவனுடைய இனபந்துக்களில்
ஒருவர் அவனைத் தேடிப்பிடித்து, நன்றாய் கட்டிக்
காபந்துசெய்து, மோல்ஷீம் (Molsheim) என்ற
பட்டணத்திலிருந்த சேசுசபை சுவாமிமார்கள்
கையில் ஒப்புவித்தார். அவர்கள் கையினின்றும்
அவன் தப்பித்து ஓடிப்போகும்படி, சாத்தான்
செய்த தந்திர உபாயங்கள் இத்தனை அத்தனை
யென்றல்ல. சில சமயங்களில் சிங்கம், அல்லது
வேறு துஷ்ட மிருகங்கள் ரூபமாய், அவனுக்குத்
தோன்றி, அவன்மேல் பாய்ந்து அவனைத் துண்டு
துண்டாய் கிழித்துவிடப் போகிறாப்போல் கர்ச்
சித்து முழங்கும். அச்சமயங்களில் அட்விக் பயத்
தால் சர்வாங்கமும் நடுநடுங்க, சுவாமிமார்களிடத்



தில் ஓடிப்போய், அவர்கள் கையை எட்டிப் பிடித்
துக்கொள்ளுவான். அவனைப் பயமுறுத்திய மாயா
ரூபங்கள் அவன் கண்ணுக்குமாத்திரம் புலப்பட்ட
தென்றாலும், சாத்தான் கர்ச்சித்து முழங்கின மிரு
கத்தொனி யாவருக்கும் கேட்டது.

துஷ்ட அரூபியின் கையினின்று அவனை இரட்
சிப்பதற்காக, சுவாமிமார்கள் அவன் தன் சீவிய
காலத்தின் பொதுப் பாவசங்கீர்த்தனம் செய்ய
வேண்டுமென்று விரும்பினார்கள். இதற்காயத்த
மாக அர்ச். இஞ்ஞாசியாருடைய 'ஞான முயற்சி
களில்' ஒரு பாகத்தை அவனுக்குப் போதித்து
வந்தார்கள். ஞான முயற்சிகளைச் செய்வதென்றால்,
அவனுக்கு மகா கக்ஷமாயிருந்தது. அவன்
அவைகளைச் செய்யாதிருக்கும்படி பசாசும் பல
தந்திரங்கள் செய்துவந்தது. சுவாமிமார்கள்மீது
அவன் உள்ளத்தில் வெறுப்பும் துவேஷமும் உண்
டாகும்படி பிரயாசப்பட்டது. பயங்கரமான
தோற்றங்களால் அவன் மனதைக் கலக்கி, அநேக
சமயங்களில் அவன் பிரக்கினை தப்பி மூர்ச்சையாய்
விழும்படிச் செய்தது. ஆயினும் சுவாமிமார்கள்
அவனுக்காக வெகு ஜெபதபம்செய்து, தேவ இரக்
கத்தை மன்றாடி, விடாமுயற்சியாய்ச் செய்துவந்த
பிரயத்தனங்களால், கடைசியாய் அவன் பொதுப்
பாவசங்கீர்த்தனம் செய்தான். அதுமுதல் அவன்
இருதயத்தில் என்றுமில்லாத் தைரியமும், பாவச்

சோதனைகளை எதிர்த்துப் போராட திடாரிக்கமும் உண்டாயிற்று.

பசாசுக்கு அவன் எழுதிக்கொடுத்திருந்த ஒப்பந்த சீட்டுகளைக் கைப்பற்றி, அதன் கையினின்று, வாலிபனை முற்றும் விடுவிக்கும்படி, 'எக்ஸோர்ஸிஸம்' (Exorcism) என்னும் திருச்சபைச் சடங்குகள் பூரணமாய்ச் செய்து அவனை மந்திரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இதற்காக அவர்கள் குறித்த தினம் ஒக்டோபர்-மீ 12-ம் தெய்தி. இந்நாளை எதிர்பார்த்து மிக்கேல் ஒரு சந்தியாயிருந்து, தன் சரீரத்தைக் கசையால் அடித்து தபசுசெய்து, தேவ இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடிவந்தான். குறித்ததினத்தில் சிரேஷ்டர் சுவாமியார் தேவாலயத்தில் அர்ச். இஞ்ஞாசியார் பீடத்தில், அர்ச்சியசிஷ்டவருக்கு ஸ்தோத்திரமாக திருச்சபையர்ல் நியமிக்கப்பட்டிருக்கும் பூசை ஜெபங்களைச்சொல்லி, சர்வேசுரனுக்குத் திவ்விய பலி ஒப்புக்கொடுத்தார். தேவாலயத்தில் கூடியிருந்த சுவாமிமார்கள், ஜனங்கள்முன், மிக்கேல் தான் பதித மார்க்கத்தைவிட்டு, சத்திய திருச்சபையின் விசுவாசத்தை கையேற்றுக்கொண்டதாகவும், சாத்தானுடன் தான் செய்த உடன்படிக்கையையும் முற்றும் அவேஷித்துவிட்டதாகவும் பிரசித்தமாய்க்கூறி, திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டான்.



அப்பொழுது, வாலிபன் பயத்தால் சர்வாங்கமும் நடுநடுங்கி, இதோ இரண்டு பசாசுகள் என் பக்கத்தில் வந்து நிற்கின்றனவென்று அலறினான். அருகிலிருந்தவர்கள் அவனைத் தேற்றி தைரியப்படுத்த, சிரேஷ்டர் சுவாமியார் திரும்பவும் திருச்சபைச் சடங்குகள் செய்து அவனை மந்திரித்து, அர்ச். இஞ்ஞாசியாரைநோக்கி அவனுக்காக வேண்டுதல் செய்தார். வேண்டுதல் செய்யவே துஷ்ட அரூபிகள் மறைந்துபோயின. வாலிபன் சாத்தானுக்கு தன் இரத்தத்தால் எழுதிக்கொடுத்திருந்த ஒப்பந்த சீட்டுகளில் சிறியது அவனுக்குச் சமீபத்தில் தரையில் கிடக்கக் கண்டார்கள். சாத்தான் அவன் கையில் மாயமாய் மறைத்து வைத்திருந்த சீட்டு அதுதான். அதனைக் கண்ணுற்றதும், வாலிபன் கண்களில் நீர் ததும்பிற்று.

இரண்டாவது சீட்டையும் கைப்பற்றும்படி சிரேஷ்டர் சுவாமியார் முன்போலவே மறுநாள் அர்ச். இஞ்ஞாசியார் பீடத்தில் பூசைசெய்து, திருச்சபைச் சடங்குகள் செய்து வாலிபனை மந்திரித்து, அவனுக்காக அர்ச்சியசிஷ்டவரைநோக்கி வேண்டுதல் செய்தார். இத்தடவை துஷ்ட அரூபி பிரமாண்டமான ஓர் நாரை ரூபமாகத்தோன்றி, மேற்சொன்ன சீட்டை வாயில் கௌவிக்கொண்டிருந்தது. வாலிபன்மாத்திரமல்ல சிரேஷ்டர் சுவாமியாரும் அதைக் கண்ணுற்று சற்று அஞ்சி, அர்ச்சிய

கிஷ்டவரை நோக்கி அதிக உருக்கமாய் மன்றாடினார். உடனே அந்த மாயாரூபம் சீட்டை நழுவவிட்டுவிட்டு மாய்ந்துபோயிற்று. வெகுநேரம் எங்கும் தேடிப் பார்த்தபின், கடைசியாய் பீடத்தின்மேல் அச்சீட்டு கண்டெடுக்கப்பட்டது. இதற்குப்பின் ஓட்லிக் சர்வேசுரனுக்கும் அவருக்கு உகந்த தாசன் அர்ச். இஞ்ஞாசியாருக்கும் நன்றியறிதலுள்ளவனாய், பாவ வழியைவிட்டு நல்வழியில் ஸ்திரமாய் நடந்துவந்தான்.

# முடிவுரை.

தேவ ஞானே கிருபையின் திரு அருட் செயலால், அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் மனத்தின்கண் உதித்து உலகின்கண் உருவான சேசுசபையை, அந்நாள்முதல் இந்நாள்வரை, புகழ்வாரும் பலர், இகழ்வாரும் பலர்,—போற்றுவாரும் பலர், தூற்றுவாரும் பலர். இஃதில் ஆஸ்ச்சரியமென்! நீதிமான் ஆபேல் காலம்முதல், நீதிமான் எவனும் இவ்வுலகின்கண், சிலராலாகிலும், விரோதித்துப் பகைக்கப்படாதிருந்ததுண்டோ? "நீதிமானைத் தந்திரமாகக்கெடுக்க வழிதேடுவோமாக! ஏனெனில், அவன் நமக்கு உதவாதவன்; நமது செய்கைகளுக்கு அவன் எதிரிடையாயிருக்கிறான்; (தேவ) கற்பனைகளை மீறின நமது பாவங்களை அவன் கண்டிக்கிறான், நமது நடத்தையின் அக்கிரமங்களால் நாம் அவமானப்பட அவன் காரணமாயிருக்கிறான்.........நமது நினைவுகளிலேயே அவன் நம்மைக் குற்றஞ்சாட்டுகிறவனாயிருக்கிறான்" என்ற ஞானாகம* வாக்கியப்படி, நீதிமானைக் "காணவே சகியாத" துன்மன மானிடர்கள் எக்காலமும் இவ்வையகத்தில் உண்டன்றோ! இடர் இடையூறின்றி,

* ஞானாகமம் 2: 12-15.

நன்மையான காரியம் எதுவும் இகத்தில் சித்தி பெற்றதுண்டோ? எவ்வளவுக்கு மகத்தான நன்மையோ, அவ்வளவுக்கு விபத்தான விரோத விக்கினங்கள் விரைந்தோடி வருமென்பது உலகானுபவமன்றோ! நன்மையும் நன்மையைப் பகைத்தத் தின்மையும், நீதியும் நீதியைப் பகைத்த அநீதியும், பகலும் இரவும்போல் ஒன்றுக்கொன்று சத்துருவாக அடுத்து வாழ்தல் இவ்வுலகின்கண் சகஜமன்றோ!

சகல மன்னுயிருக்கும் நித்திய ஜீவன் அளிக்கத் தன்னுயிரையே பலியிட மனுமகனாய் அவதரித்தத் தேவசுதனை உலகம் ஏற்றுக்கொண்ட தன்மை என்ன? அந்தோ! "அவர் தமது ஆதீனத்தில் வந்தார். அவருடையவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.........அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளில் பிரகாசிக்கின்றது. ஆயினும் இருளானது அவரை ஒப்புக்கொள்ளவில்லை" என்று பிரலாபித்தார், அவருடைய நேச சீஷன் அருளப்பர்! * வில்வல்லோன் ஒன்றைக் குறிபார்த்து அம்புகளை எய்கிறான் பாருங்கள்! அஃதுபோல், கூரிய அம்பாம் மானிடன் நாவால் "விரோதித்துப் பேசப்படும் ஒரு குறியாக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" என்று தீர்க்கதரிசனமாக வசனித்தார், திவ்விய குழந்தையைக் கரத்

* அருள. 1-ம் அதி. 11-ம் வச., 4-5-ம் வச.



திலேந்திய நீதிமான் சிமியோன்! கிறீஸ்துநாதரையும் அவருடைய பரிசுத்தத் திருச்சபையையும் பகைத்துப் பழிக்காதவர்கள் உலகில் இல்லாதிருந்த காலம் உண்டோ?

கிறீஸ்துநாதருடைய திவ்விய ஜீவியத்தை
யன்றோ தம் சிந்தையிலும் மனதிலும் ஜீவித்து,
ஒவ்வொரு விஷயத்திலும், கிறீஸ்துநாதரின் நினைவு
வாக்குக்கிரியைகளையன்றோ, பிரமாணமாகவும் உத்
தம மாதிரியாகவும், கண்முன் வைத்து சேசு சபை
யைக் கிறீஸ்துநாதருடைய திருச்சபையில், திருச்
சபைக்காக அபாரத யுத்தம் செய்யும் ஒரு படை
யணியாக உருவாக்கினார், அர்ச். லொயோலா
இஞ்ஞாசியார். ஆயின் எக்காலமும் சேசுசபையை
இகழ்வார் தூற்றுவார் துன்புறுத்துவார் பலர் உண்
டென்றால், அஃதில் ஆச்சரியமென்ன? இல்லை
என்றாலன்றோ, ஆச்சரியமாகும்!

* * *

பரிசேயர் சதுசேயர் என்ற சொற்பப்பேர், அவிசுவாசம், அகந்தை, அகங்காரம், காய்மகாரம், பேராசை, நிசிதமான அந்தரங்கத் துர்ப்பாசப் பற்றுதல்களால் மதிமயங்கி, மனநேர்மைகெட்டு, மனோசாட்சி மழுங்கி, இருதயம் கடினப்பட்டு, அநீதமாய்க் கிறீஸ்துநாதரை விரோதித்துப் பகைத்தனர். பழிபாதகத்துக்கு அஞ்சாமல், கிறீஸ்துநாதருடைய தெய்வீகக் கிரியைகளையே விபரீதப்

படுத்தி, அவர் பில்லி சூனிய மாந்திரிகன் என்றும், பேய்களைக்கொண்டே பேய்களை ஓட்டுகிறவரென்றும், ஓய்வு நாளை அவமதிக்கிறவரென்றும், கலகக்காரனென்றும் பலவாறாக வாய்சலியாமல் அவதூறுகள் சொல்லி, கபட வஞ்சக வார்த்தைகளால் சாமானிய ஜனங்களை ஏய்த்தனர்; அவர்கள் நெஞ்சிலும் துரோக விதைகளை விதைத்துப் பயிராக்கி வந்தனர். சொல்வல்லமை சொற்சாதுரியம் வாய்ந்த நயவஞ்சகன் ஒருவன் ஒன்று சொன்னால், அதிலுள்ள பொய் மெய்யைப் பகுத்தறியும் மதியை மறந்து, 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளைகள்' போல், தாங்களும் அதையேசொல்லி, நயவஞ்சகனுடைய கபட மொழிகளை எங்கும் பரவச்செய்து, அறிந்தும் அறியாமலுமே அவனுடைய துர்க்கருத்து சித்திபெற உடந்தையாகுதல் சாமானிய மானிடரின் சுபாவமன்றோ! கிறீஸ்துநாதரை எவ்விதமும் சிலுவையில் அறைந்து உயிர் வதைத்து விடுவதென்று, தங்கள் கொடிய சிந்தையில் கருதித் துணிந்து தீர்த்தனர் பரிசேயர் சதுசேயர்! "அவனைக் கொன்றுபோடும், கொன்றுபோடும், சிலுவையில் அறையும்....அவனுடைய இரத்தம் எங்கள்மேலும் எங்கள் மக்கள்மேலும் இருக்கட்டும்" * என்று ஆர்ப்பரித்தனர் சாமானிய யூதஜனங்கள்! தாங்கள் செய்தது இன்னதென்று அறிந்தனரோ?

* அரு. 19-15; மத். 27-25.



"பிதாவே! இவர்களுக்கு மன்னித்தருளும்; ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள்," என்று மன்றாடினார், உயிர்வாதையுற்று சிலுவையில் தொங்கின நாதன்! இவ்விதமே எக்காலமும் சில மானிடருடைய துன்மன வஞ்சக முயற்சியால், அனந்தம் மானிடர்கள், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமலே, கிறீஸ்துநாதரையும் அவர் ஸ்தாபித்த சத்தியத் திருமறையையும் பழித்துப் பகைத்துப் பாதகங்கள் புரிகின்றனர். இவ்வாறன்றோ, தற்போது மெக்ஸிக்கோ என்ற நாட்டில் கத்தோலிக்குத் திருச்சபை நிஷ்டூர
உயிர்வாதையுற்றுத் தவிக்கின்றது! கிறீஸ்துநாதருடைய ஞான சரீரமாகிய கத்தோலிக்குத் திருச்சபையில், கிறீஸ்துநாதர் பாவனையாகப் பழித்துப் பகைக்கப்படுதல், சேசுசபைக்குக் கிடைத்த ஒரு அதிர்ஷ்ட பாக்கியமே! சில மானிடர் நெஞ்சத்தில் நிகழ்ந்த கொடிய சிந்தைகளால், நெடுகலும் சேசுசபைக்கு விரோதமாய் நிகழ்ந்த நிந்தை நிர்ப்பந்
தங்கள் நிஷ்டூரச் செயல்களுக்குக் கணக்கில்லை! ஆயினும், சேசுசபை புகழ்ச்சிக்குரியதோ இகழ்ச்சிக்குரியதோ, நன்மை செய்யப்பிறந்ததோ தின்மை செய்யப்பிறந்ததோ, சேசுசபை உலகின்கண் ஸ்தாபகம் பெற்றதற்காக நாம் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்யவேண்டுமோ அல்லது மனதில் நொந்து வருந்தவேண்டுமோ,— எது உண்மை எது நீதி என்று அர்ச். லோயோலா

இஞ்ஞாசியார் ஜீவிய சரித்திரம் இதை நன்கு கவனித்து வாசித்த நண்பர்களுக்குத் தானாகவே விளங்கும்.

" *Laudate Dominum in Sanctis Ejus!* "

" சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்டவர்களிடத்தில் சர்வேசுரனை ஸ்துதியுங்கள்!" (தா. சங். 150)

### அர்ச். லொயோலா இஞ்ஞாசியாருக்கு ஸ்தோத்திரமாக திருச்சபையால் நியமிக்கப்பட்ட பிரார்த்தனை ஜெபம்.

Deus, qui ad majorem tui nominis gloriam propagandam, novo per beatum Ignatium subsidio militantem Ecclesiam roborasti: concede, ut ejus auxilio et imitatione certantes in terris, coronari cum ipso mereamur in cœlis. Per Dominum nostrum Jesum Christum Filium tuum qui tecum vivit et regnat in unitate Spiritus Sancti Deus per omnia sæcula sæculorum. Amen.

சர்வேசுரசுவாமி, தேவரீருடைய திருநாமத்தின் மகிமையை மேன்மேலும் பிரபல்லியப்படுத்துவதற்காக, முத்திப்பேறுபெற்ற இஞ்ஞாசியாரைக் கொண்டு யுத்த சபையாகிய திருச்சபைக்குத் திடனாக, நவமான ஓர் படையணியைத் தந்தருளினீரே; அவருடைய சகாய உதவியினாலும், சுகிர்த மாதிரிகையினாலும் நாங்கள் திடனடைந்து, இப்பூவுலகில் யுத்தம் செய்து, மோக்ஷத்தில் அவருடன் முடிபெற்று வாழும்படி யோக்கியமுள்ளவர்களாகக் கிருபை செய்வீராக! இந்த மன்றாட்டை தேவரீரோடும், இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலமும் சுயஞ்ஜீவியராய் அரசாளும் உமது திருச்சுதன் எங்கள் ஆண்டவர் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும். ஆமென் சேசு.

## அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி வேறு ஜெபம்.

தேவ ஸ்தோத்திரத்தை இப்பூவுலகில் பரம்பச் செய்வதற்கும், எண்ணிக்கையில்லாத ஆத்துமங்களைப் பாக்கியில் சேர்ப்பதற்கும் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்ட அர்ச். இஞ்ஞாசியாரே, அடியேன் எவ்வளவு அபாத்திரவானாயினும், தேவரீர் பேரிலுள்ள நம்பிக்கையாலும், உமது பேறுபலன்களின் மேன்மையாலும் உமது செல்வாக்கு வல்லபத்தாலும் ஏவப்பட்டு, உம்மை சரணமாய் ஓடிவந்தேன். தேவரீர் என் பரிபாலனைக் காவலனாயிருந்து, என் ஆத்துமத்தைப் பாதுகாத்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறேன். எனெனில் என் ஜீவியகாலத்தை உமது பாதுகாவலில் ஒப்புவிக்கிறேன்: என் அந்தியகாலத்தையும் உமது அடைக்கலத்தில் விடுகிறேன். சோதனைவேளையில் எனக்கு ஆதரவாயிரும். தேவ சன்னிதியில் எனக்காக மனுப்பேசி என் குறைகளைப் போக்கியருளும். விசேஷமாய் என் கிரியைகளையெல்லாம் அர்ச்சித்துப் பேறுபலனுள்ளதாக்கி, நித்திய மோக்ஷ சம்பாவனையை நிச்சயப்படுத்தும் சக்தியுடையதாகிய உத்தம தேவ சிநேகத்தை எனக்காகக் கேட்டுத் தந்தருளும். ஆமென் சேசு.

---



## விஷபேதியகல அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை நோக்கி ஜெபம்.

மாட்சிமைதங்கிய பிதாப்பிதாவாகிய அர்ச். இஞ்ஞாசியாரே! பாவத்துக்கு ஆக்கினையாகச் சர்வேசுரன் மனிதருக்கு விதிக்கிற தண்டனைகளில் ஒன்றாகிய மரண அபாய விஷபேதியினின்றும், விசேஷமாய் ஆத்துமத்துக்குக் கொடிய பொல்லாப்பான பாவத்தினின்றும் எங்களை மீட்டிரட்சிக்கத் தேவ சன்னிதியில் மனுப்பேசக் கிருபைபுரிந்தருளும். நாங்கள் உமது புண்ணிய மாதிரிகையைப் பின்சென்று சர்வேசுரனுடைய அதிமிக ஸ்தோத்திரத்துக்காகவும், பிறருடைய ஆத்தும இரட்சணியத்துக்காகவும், வருந்தி உழைக்க ஸ்திரமான ஆசைப் பற்றுதலை எங்களுக்குத் தந்தருளும். கடைசியாய் நேச சேசுக்கிறீஸ்துவின் திரு இருதயமானது எங்கள்பேரில் இரங்கி, சகலத்துக்கும் சுபமுடியாபரணமான சுகிர்த நிலைமை வரத்தையும், மோக்ஷானந்தத்தையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளத் தேவரீர் தாமே பிரார்த்திக்கவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென் சேசு.

(200-நாட் பலன்.)

---

### இந்துதேசத்திலிருந்து அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் உரோமையிலிருந்த தம் அருமைத் தந்தை அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரை உள்ளத்தில் சிந்தித்துச் செய்த ஜெபம்.

நான் என் முழு இருதயத்துடன் வந்தித்துவரும் ஞானாத்துமத்தின் பிதாவே, நான் என் உடலில் உயிருள்ளவரையும், சர்வேசுரனுடைய மகா பரிசுத்த திருவுளத்தைத் தெளிவாய் அறிந்து, அதைச் சம்பூரணமாய் நிறைவேற்றிவர, அவர் எனக்கு அநுக்கிரகம் செய்தருளும்படி, தேவரீர் எனக்காக சர்வேசுரனைப் பிரார்த்திக்க ஒருபோதும் மறந்து போகப்படாதென்று, தேவரீரை நான் இப்பொழுது என் கண்முன் இங்கு தரிசித்தாற்போல், முழந்தாட்படியிட்டு மன்றாடுகிறேன். ஆமென்சேசு.

---

### அர்ச். இஞ்ஞாசியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமி கிருபையாயிரும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—எங்களுக்குத்...

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,—எங்க...



அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,—எங்களுக்குத்...

அர்ச். இஞ்ஞாசியாரே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிதாவாகிய சர்வேசுரனுடைய ஞான புத்திரனே,—எங்...

அவதரித்த சுதனாகிய சர்வேசுரனைப் பின்சென்றவரே,—எங்...

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய ஏவுதலை அநுசரித்தவரே,—எங்...

தேவமாதாவுக்கு எப்போதும் உகந்த தாசனானவரே,—எங்...

அப்போஸ்தல ஸ்தானத்துக்கு மிகவும் பிரியமானவரே,—எங்...

சேசுசபையை உண்டாக்கினவரே,—எங்...

அர்ச்சியசிஷ்டவர்களுக்குள்ளே உத்தம ஞானியே,—எங்...

அதிசிரேஷ்ட முனிவர்களுக்குள்ளே உத்தம அர்ச்சியசிஷ்டவரே,—எங்...

தேவ தோத்திரத்துக்காக மிகவும் பிரயாசப்பட்டவரே,—எங்...

ஆத்துமாக்களுடைய ஈடேற்றத்துக்காக உத்தம அபேட்சையுள்ளவரே,—எங்...

அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்தின் வாசிப்பினால் அர்ச்சியசிஷ்டவராக ஏற்பட்டவரே,—எங்...

அநேகமுறை திவ்விய தரிசனங்களைக் கண்டவரே,—எங்...

ஞான யுத்தத்தின் அரசானவரே,—எங்...

சேசுநாதருடைய திருச்சபைக்கு அழியாத சலாக்கியமே,—எங்...

சேசுநாதருடைய திருச்சபையை விளங்கப் பண்ணுகிறவரே,—எங்...

தேவ ஆராதனையை வர்த்திக்கப்பண்ணுகிறவரே,—எங்...

ஞான ஒடுக்க முறையை உண்டுபண்ணினவரே,—எங்...

ஆத்துமங்களை இரட்சிக்கிறதிலே உத்தம சற்குணமுள்ளவரே,—எங்...

குணுகுணங்களை நன்றாய்க் கண்டுபிடிப்பவரே,—

பரலோக நன்மைகளைக் கொண்டிருக்கிற பொக்கிஷமே,—எங்...

இவ்வியாற்கருணைக்குப் பூச்சியமான பாத்திரமே,—எங்...

சுவிசேஷத்தின் புத்திமதிகளைக் குறையற அநுசரித்தவரே,—எங்...

குறையற்ற தருமத்தின் உத்தம மாதிரிகையே,—

மெய்யான பத்தியின் சுரூபியானவரே,—எங்...

தேவ ஊழியத்துக்கு அத்தியந்த பத்தி பற்றுதலுள்ளவரே,—எங்...

பூலோகத்தை நிந்தித்தவரே,—எங்...

குருத்துவத்தின் பூச்சியமான அலங்காரமே,—

மெய்யான செபத்தின் அடையாளமே,—எங்...

மாசில்லாத நடக்கையின் மாதிரிகையே,—எங்.

மாசில்லாத சத்தியத்தின் பிரமாணிக்கமே,-எங்.

வாலர்களை தரும வழியில் நடப்பிக்கப் படிப்பித்தவரே,—எங்...

மிகவும் உத்தம இடத்தின் பதனமே,—எங்...



உபவாசத்தின் சூத்திரமே,—எங்...
உலக வெகுமானத்தை ஜெயித்தவரே,—எங்...
மனதினுள் பட்சத்தை இடைவிடாமல் அர்ச்சிக்
கப் பார்த்துக்கொண்டிருந்தவரே,—எங்...
சகல இச்சைகளை நிக்கிரகம் பண்ணினவரே,-எங்.
குற்றங்களைப் பொறுக்கிறவரே,—எங்...
தப்புள்ள கிரிகைகளையும், சிந்தைகளையும் கண்
டிப்பாய் நீக்கி விலக்கினவரே,—எங்...
கடின தபசின் கண்ணாடியே,—எங்...
சந்நியாசத்தைச் சிநேகித்தவரே,—எங்...
தாழ்ச்சியினுடைய சிகரமே,—எங்...
பொறுமையின் நிலையே,—எங்...
மனதாரித்திரத்தில் அத்தியந்த சந்தோஷங்
கொண்டவரே,—எங்...
சிரவணத்தை ஸ்திரமாக ஸ்தாபித்தவரே,—எங்.
சம்மனசுகளுக்குரிய கற்பை மகா தாற்பரியமாய்
அநுசரித்தவரே,—எங்...
உம்மை நம்பினவர்களை உத்தம விதமாய்ப் பாது
காக்கிறவரே,—எங்... வேரைப் பிடுங்குகிற
பாவங்களுடைய
வரே,—எங்...
பதிதத்தனங்களை ஜாக்கிரதையாய் மறுத்து
அகற்றினவரே,—எங்...
பசாசுகளை பயங்கரப்படுத்தி ஓட்டுகிற
வரே,—எங்...
ஏழைகளுக்குச் சகாயமே,—எங்...
தரித்திரருடைய காரிய கர்த்தாவே,—எங்...
பசித்தவர்களைப் போஷித்தவரே,—எங்...
சேசுக்கிறீஸ்துவை மிகவும் நேசித்தவரே,—எங.

சர்வேசுரனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைச் சகிக்காதவரே,—எங்...

திரளான பாவிகளை நன்னெறியில் திருப்பினவரே,—எங்...

பாவிகளுக்கு அடைக்கலமே,—எங்...

ஆபத்திலுள்ள ஸ்திரீகளுக்கு அநேக மடங்களை ஸ்தாபித்தவரே,—எங்...

தபசிகளுக்குத் தலையானவரே,—எங்...

ஒத்திராத விரோதிகளுக்குச் சமாதானமே,-எங்.

யாவர்க்கும் விவேக வித்தியாபாரகரே,—எங்...

விசுவாசிகளை ஆதரிக்கிறவரே,—எங்...

அக்கியானிகளைத் திருப்புகிறவரே,—எங்...

சம்மனசுகளுடைய பத்தரானவரே,—எங்...

தீர்க்கதரிசிகளுடைய ஞானத்தைக் கொண்டிருக்கிறவரே,—எங்...

அப்போஸ்தலருடைய பத்தி பற்றுதலின் சுவாலையானவரே,—எங்...

திரளான வேதசாட்சிகளின் பிதாப்பிதாவானவரே,—எங்..

வேதசாஸ்திரிகளுக்கு உத்தம வழி ஏற்படுத்தினவரே,—எங்...

உத்தம ஸ்துதியர்களுடைய படிப்பினையே,-எங்.

எண்ணிறந்த ஸ்துதியர்களுடைய தாதாவே,—எங்...

உத்தமமாய் ஸ்துதிக்கிறவர்களுடைய பிரதிப்பாலையே,—எங்...

கன்னியாஸ்திரிகளுடைய துணையே,—எங்...

சகல அர்ச்சியஷ்டவர்களுடைய பேரின்ப பாக்கியத்துக்குப் பங்காளியாக பாத்திரமானவரே,—எங்...



உலகத்தின் பாவங்களை...மற்றதும்.

(பரமண்டல மந்திரம்)

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமி! தேவரீருடைய திருநாமத்
தின் தோத்திரம் உத்தம மேரையாய் பரம்பத்தக்க
தாக முத்திப்பேறுபெற்ற அர்ச். இஞ்ஞாசியாரைக்
கொண்டு யுத்தம் பண்ணுகிற உமது திருச்சபையை
நவமான படையினாலே திடப்படுத்தினீரே, அவரு
டைய மன்றாட்டின் ஒத்தாசையினாலேயும் சுகிர்த
மாதிரிகையினாலேயும் நாங்கள் பரலோகத்திலே
பேறுபெற்று நித்திய ஆனந்த பாக்கியத்தை அனு
பவிக்கத்தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகம்பண்ணி
யருளும். சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய
பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே.
ஆமென் சேசு.

## அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் பேரில் கீர்த்தனை.

இராகம்-பரசு-ஆதிதாளம்.

பல்லவி.

படை அணி வீரா—வெற்றி
பாலராம் எம்மையே காராய்.

அநுபல்லவி.

பாரெல்லாம் உன் கொடி நாட்டி
பதியினிற் சேர்த்தாள்—வெற்றி.

### சரணங்கள்.

1. வினை அடர் பேயே—கொடும்—விரட்டியே
ஜெயித்திடுவாயே
வேதமே எத்திசை ஓங்க வேண்டினோம்
உம்மையே—வெற்றி. (படை.)

2. உடலதை வாட்டி—நிதம்—ஊக்கம் நல்அருள்
மிகக் கூட்டி
உத்தம நற்பலன் ஈட்டி உயர்ந்திடும் வரத்
தோய்—வெற்றி. (படை)

3. திருமறை மாட்சி—சத்திய—ஜெகமெல்லாம்
விளக்கிடும் சாட்சி
சேசுசபைக்கதிபதி நீ ஜெயம் அருள் நிதி
நீ—வெற்றி. (படை.)

4. தந்தை நீ பார்ப்பாய்—எம்மை—தாபரித்த
மழை வார்ப்பாய் [ருள்
தாசரை உன்பதஞ் சேர்ப்பாய் தஞ்சமாய
ஏற்பாய்—வெற்றி. (படை.)

---

சங். சந்தியாகு சுவாமியவர்களால் இயற்றப்பட்ட தேவ ஸ்தோத்திரக் கீர்த்தனைகள், 12-ம் பதிப்பு, 79-ம் பக்கம்.

## அநுபந்தம்.

### அர்ச். லோயோலா இஞ்ஞாசியாருடைய சரித்திரத்தின் பிரதான விஷயங்களின் தேய்திகள்.

| | | |
|---|---|---|
| 1491 | (டிசம்பர்) | அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் பிறந்தது. |
| 1521 | மே 20 | பம்பலூனா கோட்டை மதில்மேல் காயப்பட்டது. |
| 1522 | மார்ச்சு 25 | மோன்செராத்மலை தேவாலயத்தில், பரிசுத்த கன்னிகையின் திருக்கரத்தில் தன்னை சர்வேசுரனுக்கு முற்றும் ஒப்புக்கொடுத்துவிட்டு, மன்ரேசாவுக்குப் பயணப்பட்டது. |
| 1523 | பெப்ரவரி | ஜெருசலேம் மாநகருக்கு திருயாத்திரையாக, பார்சலோனா துறைமுகத்துக்கு ஏகியது. |
| ,, | மார்ச்சு 29 | முதற்றடவை உரோமாபுரியைக் கண்ணோக்கியது. |
| ,, | செப்டெம்பர் 4 | ஜெருசலேம் மாநகரில் சேர்ந்தது. |
| 1524 | ஜனவரி | இஸ்பானிய தேசத்துக்குத் திரும்பி, பார்சலோனாவில் இலத்தீன் படிக்க ஆரம்பித்தது. |

| | | |
|---|---|---|
| 1526 | ஆகஸ்ட் | தத்துவ சாஸ்திரம் படிக்க அல்காலா நகருக்குச் சென்றது. |
| 1527 | ஜூன் 1 | நாற்பத்திரண்டுநாள் அநீதமாய் சிறையில் வைக்கப்பட்டு, பின்பு மாசற்றவரென விடுதலையாக்கப்பட்டு, சலமான்கா நகருக்கேகியது. |
| 1528 | பெப்ரவரி 2 | பாரீஸ் நகரிற் சேர்ந்தது. |
| 1584 | ஆகஸ்ட் 15 | வேதசாட்சிகள் மலைமேல் அர்ச்சியசிஷ்டவரும் அவர் துணைவர்களும் கொடுத்த முதல் வார்த்தைப்பாடு. |
| 1585 | மார்ச்சு | பாரீஸ் நகரைவிட்டு தமது ஜென்மதேசத்துக்கு பிரயாணப்பட்டது. |
| " | டிசம்பர் 31 | வேனீஸ் நகரிற் சேர்ந்து, தமது தோழர்கள் வரவை எதிர்பார்த்திருந்தது. |
| 1537 | ஜனவரி 6 | அவருடைய தோழர்களும் வேனீஸூக்கு வந்து சேர்ந்தது. |
| " | ஜூன் 24 | குருப்பட்டம். |
| " | நவம்பர் | லாஸ்தோர்த்தா என்னும் ஊரில் அருளப்பட்ட மகா விசேஷித்த அற்புத தரிசனம் |
| 1538 | டிசம்பர் 25 | அர்ச்சியசிஷ்டவர் முதற் பூசை செய்தது. |



| | | |
|---|---|---|
| 1539 | செப்டெம்பர் 3 | மூன்றும் பவுல் என்னும் பாப்பானவர் வாய்மொழியால் சேசுசபையை அங்கிகரித்தது. |
| 1540 | செப்டெம்பர் 27 | மேற்சொன்ன பாப்பானவர் 'ரெஜிமினி மிலித்தாந்திஸ் எக்லேஸியே' என்னும் ஆஜ்ஞை பத்திரத்தால் சேசுசபையை பிரசித்தமாய் அங்கிகரித்தது. |
| 1541 | ஏப்பிரல் 7 | அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் நமது இந்தியா தேசத்துக்குப் பிரயாணமாக, லிஸ்போன் துறைமுகத்தில் கப்பலேறியது. |
| " | ஏப்பிரல் 13 | அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் அதிபதி சிரேஷ்டராகத் தெரிந்துகொள்ளப்பட்டது. |
| " | ஏப்பிரல் 22 | கடைசி வார்த்தைப்பாடு. |
| 1542 | மே 6 | அர்ச். சவேரியார் கோவை நகரில் இறங்கியது. |
| 1546 | ஆகஸ்ட் 1 | முத். பாபர் இராயப்பர் மரணம். |
| 1548 | ஜூலை 31 | 1528-ம் ௵ அல்காலா, சலமான்கா என்ற இடங்களிலும், 1535-ம் ௵ பாரீஸிலும், 1536-ம் ௵ வேனீஸிலும், 1538-ம் ௵ உரோ |

இ6:458 I91
N27



| | | |
|---|---|---|
| | | மையிலும், 1543-ம் ௵ பார்மாவிலும், 1544-ம் ௵ கொயிம்பிராவிலும், 1547-ம் ௵ தொலிடோவிலும், 1548-ம் ௵ திரும்ப அல்காலாவிலும், வேத விசாரணை கர்த்தாக்களால் பரிசோதித்து அங்கீகரிக்கப்பட்ட 'ஞானமுயற்சிகள்' எனும் அற்புத நூல், கடைசியாய் மூன்றாம் பவுல் என்ற பாப்பானவரால் பிரசித்தமாய் ஆசீர்வதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 1549 | பெப்ரவரி | வணக்கத்துக்குரிய அந்தோணி கிரிமினலி என்ற சுவாமியார் வேதாளையில் சேசுசபையின் முதல் வேத சாட்சியாக இரத்தம் சிந்தி மரித்தது. |
| 1550 | பெப்ரவரி 21 | 'உரோமன் காலேஜ்' ஸ்தாபகம்பெற்றது. |
| 1551 | ஜனவரி 30 | அர்ச். இஞ்ஞாசியார் தாம் வகித்துவந்த அதிபதி சிரேஷ்டர் உத்தியோகத்தைச் சங்கமாய் கூடியிருந்த சுவாமியார் கையில் ஒப்புவித்துவிட எத்தனித்தது. |



| | | |
|---|---|---|
| 1552 | ஒக்டோபர் 28 | 'ஜெர்மன் காலேஜ்' ஸ்தாபகம்பெற்றது. |
| ,, | நவம்பர் 27 | நமது இந்துதேசத்து அப்போஸ்தலர் சான்ஷியான் தீவில் மரித்தது. |
| 1553 | மார்ச்சு 26 | அர்ச். இஞ்ஞாசியார் கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தின்பேரில் எழுதிய பெயர்பெற்ற நிருபம். |
| ,, | ஜூன் 28 | அர்ச். சவேரியார் மரித்த செய்தி இன்னும் தெரியாது, அர்ச். இஞ்ஞாசியார் அவரை உரோமைக்கு வரவழைத்து கடிதம் எழுதியது. |
| 1556 | ஜூலை 31 | அர்ச். இஞ்ஞாசியார் மரணம். |
| 1609 | ஜூலை 27 | முத்திப்பேறுபெற்ற பட்டம். |
| 1622 | மார்ச்சு 12 | அர்ச்சியசிஷ்ட பட்டம். |

109408